[illegible]
[illegible]

# கிறிஸ்துவின் வாழ்வு. 1

[illegible]

[illegible]

# கிறிஸ்துவின் வாழ்வு, 1

டேவிட் ரோப்பர்

## ஒரு இசைவு அணுகுமுறை


1. நான்கு சுவிசேஷங்களின் விவரங்கள்
2. மத்தேயு சுவிசேஷம்
3. மாற்கு சுவிசேஷம்
4. லூக்கா சுவிசேஷம்
5. யோவான் சுவிசேஷம்
6. கிறிஸ்து வந்த வேளையில் இருந்த உலகம்
7. கிறிஸ்துவின் வாழ்வின் இசைவைக் கற்றுக்கொள்ளுதல்
8. கிறிஸ்து வருகின்றார்! (மத். 1:1-17; லூக். 1:1-80; 3:23-28; யோவா. 1:1-18)
9. தேவன் மரியாளைத் தேர்ந்து கொண்டது ஏன்? (லூக். 1 & 2)
10. நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்? (மத். 1:18-25; 2:1-23; லூக். 2:1-52)
11. இரட்சகரைத் தேடுதல் (மத். 2:1-13)
12. சமீபத்து இருக்கிறது!? (மத். 3:1-17; 4:1-11; மாற். 1:1-13; லூக். 3:1-18, 21, 22; 4:1-13; யோவா. 1:19-34)
13. இயேசு சோதிக்கப்படுதல் (மத். 4:1-11)
14. ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல்வேளை (யோவா. 1:35-51; 2:1-35; 3:1-36)

படிப்பு உதவிகள்
பதிலளிக்கும் படிவம்

# ஒரு இசைவு அணுகுமுறை

சுவிசேஷத்தின் இசைவு என்பது மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்களின் கருத்துக்களை நாள் வரிசை முறையில் இடுவதற்கு முயற்சி செய்கின்றன. ஜான் கார்ட்டர் அவர்கள், "இசைவு என்பது சுவிசேஷங்களில் உள்ள விவரங்கள் நமது அறிவுக்கு எட்டிய வகையிலும் படிக்கப்பட்ட ஆய்வு முடிவுகளின்படியும் மிகச் சிறப்பாக அடுக்கப்பட்டு, இயேசுவின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகள் அவை நடந்த வரிசையின்படி தொகுக்கப்பட்டு, அவைகள் ஒன்றாகப் படிக்கப்படும்படி இணையாக வைக்கப்பட்டுள்ள பணியாக உள்ளது" என்று விளக்கப் படுத்தினார்.[1] "இசைவு" என்ற வார்த்தை ஆலோசனை தெரிவிக்கிறபடி, இது நான்கு சுவிசேஷ விவரங்களையும் இசைவிக்கச் செய்யப்படுகிற ஒரு முயற்சியாக உள்ளது.

இது ஒரு சுலபமான பணியல்ல. நான் இதை, 1950களில், J.W. இராபர்ட்ஸ் அவர்களால், போதிக்கப்பட்ட "கிறிஸ்துவின் வாழ்வு" என்ற கல்லூரிப் பாடத்தைப் படித்தபோது கற்றுக் கொண்டேன். ஒவ்வொரு மாணவருக்கும் புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களின் இரு பிரதிகள் வழங்கப்பட்டன, அத்துடன் இயேசுவின் வாழ்வு பற்றிய வேத வசன வரைக்குறிப்பு/இசைவுக் குறிப்பு தரப்பட்டது. எங்களுக்குத் தரப்பட்ட புத்தகங்களை சரியானபடி கத்தரித்து அந்தப் பிரிவுகளைத் தாள்களின்மீது ஒட்டி, எங்கள் சொந்த இசைவுக் குறிப்பைத் தயாரித்தல் என்பதே எங்களுக்குத் தரப்பட்ட பயிற்சியாக இருந்தது. வேத வசனத்தின் அந்தச் சின்னஞ்சிறு துணுக்குகளை வரிசைப் படுத்திக் காத்துக் கொள்ளுதல் என்பது என்ன ஒரு கடின பயிற்சியாக இருந்தது!

இயேசுவைப் பற்றிய ஒரு நாள் வரிசை முறையிலான வரலாற்றை உண்டாக்குவது என்பது ஏவுதல் பெற்ற எழுத்தாளர்களின் நோக்கமாக இருந்ததில்லை என்பதே, ஒரு இசைவுக்குறிப்பை கட்டியெழுப்புவதென்பது கடினமாயிருப்பதற்கான அடிப்படைக் காரணமாகும். இதற்கு மாறாக, இயேசு தேவனுடைய குமாரன் என்பதையும் இரட்சிப்புக்கு அவர் மட்டுமே ஒரே நம்பிக்கையாக இருக்கின்றார் என்பதையும் வாசகர்கள் நம்பி ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும் என்பதே இயேசுவின் வாழ்வு பற்றிய பாடக்கருத்துக்களை அவர்கள் அமைத்ததன் நோக்கமாக இருந்தது.[2]

கிறிஸ்துவின் வாழ்வில் பல பிரிவுகள் தெளிவானவைகளாக இருக்கின்றன: அவரது பிறப்பும் தொடக்க கால வாழ்வும், அவரது ஊழியம், அவரது மரணத்தில் உச்சக்காட்சியை அடைந்த எருசலேமில் கடைசி வாரம், மற்றும் அவரது உயிர்த்தெழுதலும், பரத்துக்கேறுதலும். ஆயினும் இந்தப் பிரிவுகளுக்குள்ளாக நாம் நிகழ்வுகளின் வரிசை பற்றி எப்போதுமே நிச்சயமாய்க் கூற இயலாது. விசேஷமாக, "அவரது ஊழியத்தின்" அகன்ற

பிரிவுக்குள் இது உண்மையாக உள்ளது.

ஒரு சுவிசேஷத்தில் உள்ள ஒரு விவரமானது இன்னொரு சுவிசேஷத்தில் உள்ள அதே விவரமா அல்லது அதைப் போல இன்னொரு வேளையில் இன்னொரு இடத்தில் நடந்ததா என்பதை நாம் எப்போதுமே நிச்சயமாய்க் கூற இயலாது.[3]

ஒரு இசைவுக் குறிப்பைக் கட்டமைப்பதில் உள்ளடங்கியிருக்கிற சிரமங்களின் காரணமாக, இதைச் செய்ய முயற்சிக்கவும் கூடாது என்று சிலர் நினைக்கின்றார்கள். அந்த முடிவின்மீது கருத்து வேறுபடும் பல கல்வியாளர்கள், குறைந்தபட்சம் இரு காரணங்களுக்காக, சுவிசேஷ இசைவுக் குறிப்பில் மதிப்பைக் காண்கின்றார்கள். முதலாவது, ஒரு சுவிசேஷ விவரத்தில் உள்ள ஒரு பதிவானது அடிக்கடி, இன்னொரு சுவிசேஷ விவரத்தில் உள்ள பதிவை "இனிதே ஈர்த்து" விவரங்களைக் கூட்டுகிறது. இரண்டாவது, நான்கு பதிவுகளையும் தொகுத்தல் என்பது நமக்கு வேறு எவ்வழியிலும் பெற முடியாத வகையில் இயேசுவைப் பற்றிய தெளிவான தோற்றத்தைத் தருகிறது. F. லாகார்டு ஸ்மித் அவர்கள், "ஒவ்வொரு தனிப்பட்ட நிகழ்ச்சியும் தனது சந்தர்ப்பப் பொருளுக்குள்ளா கவே, அதன் புதிய கருத்துணர்வு மற்றும் அந்த நிகழ்ச்சியின் தனிச்சிறப்பினுடைய கூடுதல் மதிப்பு ஆகியவற்றினால் … நான்கு தனித்தனி விவரங் களையும் தொகுக்க முயற்சிப்பதில் இழந்து போகப்படக் கூடிய எந்த ஒரு தனி தோற்றக் காட்சியும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது" என்று எடுத்துரைத்தார்.[4] A. T. இராபர்ட்ஸ்ன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இசைவுக் குறிப்பு என்பது … இயேசுவின் வாழ்வை மனப்பூர்வமாய் படிப்பதற்கு இன்றியமையாத ஒரு புத்தகமாக உள்ளது … இசைவுக் குறிப்பை ஒருக்காலும் வாசித்திராதவர், இயேசு கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய இணை மற்றும் வளர்நிலைப் பதிவேடுகளில் இருந்து பாய்ந்தோடி வருகிற ஒளி வெள்ளத்தினால் திகைப்பு அடைவார்.[5]

## முடிவுரை

நான் முன்பு ஒருமுறை, "நாம் ஒவ்வொருவரும் இன்னும் அதிகமாய் இயேசுவைப் போல் ஆவதே, சபையின் மாபெரும் தேவைகளில் ஒன்றாகும். அவரது வாழ்க்கையைப் பற்றிய இந்த ஓராண்டு படிப்பானது குறைந்தபட்சம் இதற்கு ஒரு தொடக்கமாக இருக்கிறது" என்று எழுதியிருந்தேன். இந்தப் பாடத்தொடர், வேதாகம வகுப்புகளில் பல மாணவர்களுக்கும் ஆராதனை ஊழியங்களில் பிரசங்கத்தைக் கவனிக்கும் பலருக்கும் உதவியாயிருக்கும் என்று நான் நம்புகின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக, இது உங்களுடைய வாழ்வை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன்.

டேவிட் ரோப்பர், இணை ஆசிரியர்,
*இன்றைக்கான சத்தியம்*

குறிப்புகள்

[1]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), vii. [2]*இந்த சத்தியம் பற்றி "நான்கு சுவிசேஷங்களின் விவரங்கள்" என்ற அடுத்த பாடத்தில் அதிகம் விவரமாக குறிப்பிடப்படுகிறது.* [3]*விவரங்கள் எப்போதுமே ஒத்த விவரங்களாகப் பதிவு செய்யப்படுவதில்லை என்ற உண்மை இந்த அறைகூவலுடன் தொடர்புடையதாக உள்ளது. இந்தப் "பிரச்சனையானது" அடுத்த பாடமாகிய "நான்கு சுவிசேஷங்களின் விவரங்கள்" என்பதில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.* [4]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1351. [5]A. T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* (New York: Harper & Row, 1950), viii.

# 1

# நான்கு சுவிசேஷங்களின் விவரங்கள்

## மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்

புதிய ஏற்பாட்டில் எழுத்தாளர்களின் பெயர்களினாலேயே வழங்கப் படும் முதல் நான்கு புத்தகங்களுடன் ஒரு படிப்பை நாம் தொடங்கு கின்றோம்:

மத்தேயு - ஒரு முன்னாள் ஆயக்காரரர் மற்றும் இயேசுவின் அப்போஸ்தலர்.

மாற்கு - அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் வருகின்ற யோவான் மாற்கு, அப்போஸ்தலர்களின் காலத்தில் ஒரு இளம் பிரசங்கியார்.

லூக்கா - மருத்துவர். லூக்கா, ரோமாபுரிப் பயணம் உட்பட, பவுலின் சுவிசேஷப் பயணங்கள் பலவற்றில் அவருடன் இணைந்து சென்றவர்.

யோவான் - ஒரு முன்னாள் மீனவர் மற்றும் ‘‘அன்பார்ந்த’’ அப்போஸ்தலர்.

இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் நாம், மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷப் புத்தகங்களைத் தனித்தனியே கண்ணோக்குவோம், ஆனால் முதலில் நாம் இவற்றை மொத்தமாகச் சிந்தித்துப் பார்க்க விரும்புகின்றோம்.

### ஒரே வரலாற்றின் நான்கு விவரங்கள்

மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய புத்தகங்கள் “நான்கு சுவிசேஷங்கள்” என்று அடிக்கடி அழைக்கப்படுகின்றன, ஆனால் உண்மை யில் அவை ஒரே சுவிசேஷத்தின் நான்கு விவரங்களாவே உள்ளன.[1]

இவற்றில் முதல் மூன்று புத்தகங்கள் “ஒப்பீட்டு சுவிசேஷ நூல்கள்” என்று பொதுவாக அழைக்கப்படுகின்றன. “ஒப்பீட்டு” என்பது [synoptic] “ஒன்று சேர்த்து” என்பதற்கான கிரேக்க வார்த்தையுடன், “காணுதல் அல்லது கண்ணோக்குதல்’’ என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையை இணைத்துப் பெற்ற ஒரு கூட்டுச் சொல்லாக உள்ளது. “ஒப்பீட்டு நூல்” என்பது இவ்விதமாக “ஒன்றாகக் காணுதல்” என்று அர்த்தப்படுகின்றது. முதல் மூன்று புத்தகங்கள் இயேசுவைப் பற்றிய ஒத்த கண்ணோக்குகளை முன்னிறுத்துவதால் அவைகள் ‘‘ஒப்பீட்டு சுவிசேஷ நூல்கள்’’ என்று

குறிப்பிடப்படுகின்றன. இவை மூன்றும் அநேகமாக, கி.பி. 70ல் எருசலேமின் அழிவுக்கு முன்னதாகவே எழுதப்பட்டிருக்க வேண்டும்.

யோவான் சுவிசேஷமானது மற்ற மூன்று சுவிசேஷப் புத்தகங்களி லிருந்து சற்று மாறுபட்ட அணுகுமுறையை மேற்கொள்வதால், இது சில வேளைகளில் "சுவிசேஷத்தின் தற்கண்ணோக்கு [சுய கண்ணோட்டம்]"[2] என்று அழைக்கப்படுகிறது. யோவானின் சுவிசேஷமானது அநேகமாக முதல் மூன்று சுவிசேஷங்களுக்கும் பிற்பாடு, முதல் நூற்றாண்டின் முடிவின் போது, கி.பி. 90களில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

## நான்கு விவரங்கள் எதற்காக?

ஒரே கால வேளையையும் ஒரே வரலாற்றையும் உள்ளடக்குகிற நான்கு புத்தகங்களைத் தேவன் நமக்கு ஏன் கொடுத்தார்? வேத வசனங்களில், மற்ற சில காலங்களும் ஒன்றுக்கு மேற்பட்ட புத்தகங்களினால் எடுத்துரைக்கப் படுகின்றன (1 சாமுவேல் முதல் 2 இராஜாக்கள் வரையுள்ளவற்றில் பல நிகழ்ச்சிகள் மீண்டும் 1 மற்றும் 2 நாளாகமங்களில் தரப்படுகின்றன), ஆனால் ஒரே வரலாற்றைப் பற்றி நான்கு விவரங்கள் தருவதென்பது வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது.

சபையின் தொடக்க கால வரலாற்றில், நான்கு [சுவிசேஷ] விவரங்கள் இருந்தது ஏன் என்பதைப் பற்றி மனிதர்கள் யூகம் செய்தார்கள். "நான்கு என்பது மனிதனின் அடையாள எண்ணாக உள்ளது" என்பது ஒரு யூகமாக இருந்தது. இந்தக் குறிப்பிட்ட எண்ணில் தேவன் முடிவு செய்தது ஏன் என்று நாம் அறிவது இல்லை, ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட விவரங்களை அவர் ஏவினார் என்ற உண்மையானது, பல விஷயங்களைச் சுட்டிக்காண்பிக்கிறது.

(1) இயேசுவின் வரலாறு எவ்வளவு முக்கியமானது என்பதை நான்கு [சுவிசேஷ] விவரங்கள் காண்பிக்கின்றன.

(2) நான்கு [சுவிசேஷ] விவரங்களும் இயேசுவின் வரலாற்றை அதிகாரத்துவப்படுத்துதலின் அவசியத்தை மனதில் பதியச் செய்கின்றன. மோசே, "இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலை வரப்பட வேண்டும்" (உபா. 19:15ஆ) என்று கூறினார். நான்கு சாட்சிகள் என்பது இன்னும் சிறப்பானதாக உள்ளது.

(3) நான்கு [சுவிசேஷ] விவரங்கள் இயேசுவின் பன்முக இயல்பை வெளிப்படுத்துகிறது. ஒரே எழுத்தாளர் அநேகமாக ஒருபோதும் அவருக்கு [இயேசுவுக்கு] நியாயம் செய்கின்றவராக இருப்பதில்லை.

> இலண்டனில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில், ஒரு கேன்வாஸ் திரையில் முதலாம் சார்லஸின் மூன்று உருவச் சித்திரங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றில் அவரது தலை வலது புறம் திரும்பியுள்ளது; இன்னொன்றில் இடதுபுறம் திரும்பியுள்ளது; மற்றும் நடுவில், நாம் அவரது முழுமுகத்தின் கண்ணோட்டத்தைக் காண்கின்றோம். இந்தப் படைப்பின் வரலாறு பின்வருமாறு: வான் டைக் என்பவர், ரோமச் சிற்பியான பெர்னினீ என்பவர் அரசரின் மார்பளவு உருவச் சிலையை உருவாக்க உதவுவதற்காக அவற்றை வரைந்தார். இவ்விதமாகப்

பெற்றுக்கொண்ட உருவப் பதிவுகளை ஒன்றிணைத்ததின் மூலம் பெர்னினீ, "பேசுவது" போன்ற ஒரு உருவகத்தை உண்டாக்க முடிந்தது. ஒரே கண்ணோட்டம் என்பது போதுமானதாக இல்லாதிருந்தது.

இந்தச் சித்தரிப்புகளின் நோக்கத்திற்குப் பயன்படுதல் என்பதையே சுவிசேஷங்கள் தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன என்பது உண்மையாக இருக்கலாம். ஒவ்வொன்றும் இந்தப் பூமியில் நமது கர்த்தருடைய வாழ்வின் மாறுபட்ட அம்சம் ஒன்றை முன்னிறுத்துகின்றன. இவைகளை ஒன்றுகூட்டிக் காணும்போது, நாம் ஒரு முழுமையான சித்தரிப்பைப் பெறுகின்றோம். அவர் ஒரு ராஜாவாயிருந்தார், ஆனால் அவர் ஒரு பூரணமான ஊழியக்காரராக வும் இருந்தார். அவர் மனித குமாரனாக இருந்தார், ஆனாலும் அவர் தேவகுமாரனாகவும் இருந்தார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.[3]

## நான்கு விவரங்களையும் ஒப்பிடுதல்

இந்த நான்கு விவரங்களுமே - இயேசுவை வெளிப்படுத்துதல் என்ற - ஒரே அடிப்படை நோக்கத்தைக் கொண்டிருந்தன, ஆனால் இவை ஒவ்வொன்றும் சற்றே மாறுபட்ட கண்ணோட்டத்தில் இருந்து எழுதப் பட்டன, இது சற்றே மாறுபட்ட மக்கள் கூட்டத்தினருக்கு ஏற்புடையதாக இருக்கும்படி இவ்வாறு எழுதப்பட்டன என்பது உறுதி.[4] கீழே உள்ள அட்டவணையானது இந்த நான்கு விவரங்களையும் ஒப்பிடுகிறது.

மத்தேயு அடிப்படையில் யூதர்களுக்காக எழுதினார் என்பது உறுதி. அவர் நூற்றுக்கும் மேற்பட்ட பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளை மேற்கோள் காண்பித்து, "தாவீதின் குமாரன்" (மத். 1:1) என்பது போன்ற யூதர்களுக்குப் பழக்கமான சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். அவர் இயேசுவை, தமது இராஜ்யத்தை அமைக்க வந்த ஒரு ராஜாவாக முன்னிறுத்தினார்; "இராஜ்யம்" என்ற வார்த்தை இந்தப் புத்தகத்தில் ஐம்பத்து ஐந்து முறைகள் காணப்படுகின்றன. அவர் இயேசுவை மேசியா என்ற வகையில் விசேஷமாக வலியுறுத்தி, அவரது போதனைகள், அவரது இராஜ்யம் மற்றும் அவரது அதிகாரத்துவம் ஆகியவற்றைப் பற்றி எழுதினார்.[5]

மத்தேயுவைப் போலின்றி, யூதரல்லாத மக்கள் கூட்டத்திற்கு மாற்கு எழுதியுள்ளதாகக் காணப்படுகிறது. இவர், வம்ச வரலாறு போன்ற, புறஜாதியாருக்குச் சிறிதளவே ஆர்வமுள்ள விஷயங்களை நீக்கிவிட்டார். இவர் யூதப் பாரம்பரியத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, வழக்கமாக அவற்றை இவர் விளக்கப்படுத்தினார். மாற்கு ரோம மக்கள் கூட்டத்திற்கு எழுதினார் என்றே பல எழுத்தாளர்கள் நினைக்கின்றார்கள்;[6] இவர் சிலவேளைகளில், மற்ற எழுத்தாளர்கள் கிரேக்கச் சொற்றொடர்களைப் பயன்படுத்தி இருக்கும் இடங்களில் இலத்தீன் சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். அலெக்சந்திரியாவின் கிளெமெண்ட் (c. கி.பி. 150-215) அவர்களின் கூற்றுப்படி, மாற்கு, கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிப் பேதுருவின் மூலம் அவர் கேள்விப்பட்ட விதமாகவே பதிவு செய்யும்படி ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களிடமிருந்து ஒரு வேண்டுகோளைப் பெற்றிருந்தார்.[7] இயேசு போதித்தவற்றைக்காட்டிலும் அவர் செய்தவற்றின் மீது மாற்கு அதிகம் அக்கறையுள்ளவராக இருந்தார் என்று காணப்படுகிறது.

இவர் இயேசுவை ஒரு ஊழியக்காரராக, பிறருக்கு உதவி செய்பவராக (மாற். 10:45) முன்னிறுத்தினார். இயேசுவின் அற்புதங்களில், மக்கள்மீது கர்த்தருடைய அன்பும் அக்கறையும் காணப்பட முடிவதால் அவர் அவற்றையே வலியுறுத்தினார்.

மாற்குவைப் போலவே லூக்காவும் யூதரல்லாத மக்கள் கூட்டத்திற்கே எழுதினார் என்பது உறுதி. ஆயினும், மாற்குவின் விவரமானது செயல்களில் பழக்கப்பட்ட ரோமர்களுக்கு எழுதப்பட்டு இருக்கையில், லூக்காவின் விவரமானது மதிநுட்பம் வாய்ந்த மாணவர்களுக்கு எழுதப்பட்டதாகக் காணப்படுகிறது. லூக்கா, கிரேக்க மக்கள் கூட்டத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று பலர் முடிவு செய்கின்றார்கள். இவரது விவரமானது இயேசுவை "மனித குமாரனாக" (லூக். 19:10) முன்னிறுத்தி, அவரது பரிபூரணமான மனிதத்துவத்தின்மீது விசேஷித்த வலியுறுத்தத்தை வைக்கிறது.

யோவானின் விவரமானது ஒருவேளை மற்ற மூவரின் பிந்திய நாட்களில் எழுதப்பட்டிருக்கலாம், மற்றும் அது தன் தனிப்பட்ட சிறப்பு வலியுறுத்தங்களைக் கொண்டதாயிருக்கிறது. இயேசுவின் இயல்பு பற்றி எழுந்திருந்த தவறான கருத்துக்கள் விசுவாசிகளின் மத்தியில் குழப்பம் உண்டாகக் காரணமாக இருந்தன. யோவான், இயேசுவை "தேவ குமாரனாக" (யோவா. 20:31) முன்னிறுத்தி, அவரது தெய்வீகத்துவத்தை வலியுறுத்தினார்.

இன்றைய நாட்களில், மத்தேயு சுவிசேஷம் வேதாகம மாணவர்களுக்கு விசேஷமாக வேண்டுகோளாக உள்ளது, மற்றும் மாற்கு சுவிசேஷம் வியாபாரிகள் உட்பட சராசரி நபருக்கு விசேஷமான வேண்டுகோளாக உள்ளது, அதே வேளையில் லூக்கா விசேஷமாகக் கல்வியாளர்களுக்கும், சிந்தனையாளர்களுக்கும், உயர்நோக்குடையவர்களுக்கும் மற்றும் சத்தியத்தை நாடுபவர்களுக்கும் வேண்டுகோளாக உள்ளது என்று கூற முடியும். இதற்கு மறுபுறத்தில், யோவான் சுவிசேஷம் "உலகளாவிய சுவிசேஷம்" என்று அழைக்கப்படுகிறது, இது எல்லாக் காலத்திலும் எல்லா மக்களுக்கும் வேண்டுகோளாக உள்ளது.

மற்றும் மத்தேயு, இயேசுவை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகராகவும்; மாற்கு, இயேசுவை வல்லமையுள்ள இரட்சகராகவும், லூக்கா இயேசுவை பரிபூரண இரட்சகராகவும்; யோவான், இயேசுவை ஒருவருக்கு சொந்தமான இரட்சகராகவும் அறிமுகப்படுத்துதல் நோக்கமாயிருந்தது என்று நாம் கூற முடியும். ஆயினும் இந்தத் தனித்தன்மைகளை நாம் ஏற்படுத்துகையில், இந்த புத்தகங்கள் ஒவ்வொன்றின் நிறைவான நோக்கம் ஒரே மாதிரியாகவே இருக்கிறது என்ற உண்மையைக் காணுவதை நாம் இழந்துவிடக் கூடாது: இயேசுவைப் பற்றிய இரட்சிக்கப்படும் ஒரு அறிவினிடத்தில் எல்லா மனிதர்களையும் கொண்டுவருதல்!

## நான்கு விவரங்களும் எவற்றை எடுத்துரைக்கின்றன

"மனித வரலாறு" [ஒரு நபரின் வரலாறு] என்ற சொற்றொடர் சில வேளைகளில் சுவிசேஷ விவரங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது, ஆனால்

*இந்த வார்த்தையின் கண்டிப்பான கருத்தில், இந்த நான்கு புத்தகங்களும் [இயேசு என்ற] ஒரு நபரின் வரலாறுகளாய் [மாத்திரம்] இருப்பதில்லை. மாறாக இவைகள் "போதனை எடுத்துரைப்புகளாக" உள்ள. ("போதனை" என்பதற்கான ஆங்கில வார்த்தையானது "போதித்தல்" என்று அடிப்படையாக அர்த்தப்படுகிற "Didactic" என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது.) இந்த சுவிசேஷங்களின் விவரங்கள் ஏன் உண்மையில் வரலாறுகளாய் [மாத்திரம்] இருப்பது இல்லை என்பதற்கு இங்கு ஒரு சில காரணங்கள் தரப்படுகின்றன:*

*(1) இவைகள் இயேசுவின் வாழ்வு முழுவதையும் எடுத்துரைப்பதற்கு முயற்சி செய்வதில்லை. அவரது வாழ்வின் முதல் முப்பது ஆண்டுகள் பற்றிய விவரங்கள் ஏறக்குறைய கூறப்படவில்லை, அதே வேளையில், நான்கு விவரங்களிலும் சேர்த்து ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு வேத வசனப் பகுதிகள் (இயேசுவின் மரணம் என்ற) ஒரே நிகழ்ச்சிக்கு சம்பந்தப்பட்டவைகளாக உள்ளன. இயேசுவின் பன்னிரெண்டு வயது முதல் முப்பது வயது வரையிலும் நடந்த எந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றியும் பதிவு எதையும் நாம் கொண்டிருப்பதில்லை. எனது வாழ்வைப் பற்றி எழுதும் யாரேனும் ஒருவர், எனது பன்னிரெண்டு வயது முதல் முப்பது வயது வரை நடந்த நிகழ்ச்சிகளை விட்டுவிட்டிருந்தால், நான் எவ்வாறு எனது மனைவியைச் சந்தித்தேன் என்பதற்கோ அல்லது நான் பிரசங்கிக்க முடிவுசெய்தது ஏன் என்பதற்கோ சுட்டிக் காண்பித்தல் எதுவும் இருக்காது, மற்றும் எனது திருமணம், நான் ஊழியம் செய்யத் தொடங்கியது அல்லது எனது பிள்ளைகளின் பிறப்பு ஆகியவை பற்றிய பதிவு எதுவும் இருக்காது. அது ஒரு வினோதமான வரலாற்றுக் குறிப்பாகவே இருக்கும்!*

*(2) இந்த விவரங்கள், அடிப்படையில் ஒரு நாள் வரிசை அணுகுமுறையை - பிறப்பு, பிள்ளைப் பருவம், ஞானஸ்நானம், ஊழியம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவைகளை - பயன்படுத்தினாலும், நாள் வரிசை அமைவு முறை என்பது எழுத்தாளர்களுக்கு எப்போதுமே முக்கியமானதாக இருந்திருக்கவில்லை. அவர்கள் குறிப்பிட்ட சத்தியங்களை வலியுறுத்துகின்ற நிகழ்ச்சிகளை ஒன்றாக அடிக்கடிச் சேர்த்துக் கொடுத்தார்கள்.*

*(3) இந்த எழுத்தாளர்களில் எவரும் இயேசுவின் உடல் தோற்றத்தைப் பற்றி விவரிக்கவில்லை. எந்த வரலாற்று ஆசிரியராவது அதைச் செய்வதற்கு எப்போதாவது தவறியிருக்கின்றாரா?*

*இந்த நான்கு புத்தகங்களும் போதனை முறை எடுத்துரைப்புக்களாக இருப்பதால், இவைகள் நாள் வரிசை அமைவுமுறையைப் பற்றி அதிகம் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை, இந்த நான்கு விவரங்களையும் ஒரே ஒரு எடுத்துரைப்பாக(ஒரு "இசைவாக")ப் பொருத்துதல் என்பது சுலபமானது அல்ல. ஆயினும், முன்பே குறிப்பிட்டபடி, இதை முயற்சி செய்வதில் பலன் இருக்கக் கூடும். "சுவிசேஷ விவரங்களில் எடுத்துரைக்கப் பட்ட பாடக் கருத்துக்கள்" என்ற அட்டவணையானது இயேசுவின் ஒன்றுகூட்டப்பட்ட வரலாற்றிற்கு இந்த நான்கு புத்தகங்கள் ஒவ்வொன்றும் பங்களித்துள்ளமை பற்றிய ஒரு கருத்தை உங்களுக்குக் கொடுக்கும்.*

ஒப்பீட்டு சுவிசேஷங்களின் விவரங்கள் அடிப்படையில் ஒரே பாடப் பொருளை முன்னிறுத்துகையில் யோவானின் விவரமானது கூடுதல் பாடப்பொருளை முக்கியமாக முன்னிறுத்துகிறது என்பதைக் கவனியுங்கள். ஒரே காலகட்டத்தில் நடந்தவற்றை எடுத்துரைக்கையிலும் கூட, மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோரின் தகவல்களில் இருந்து மாறுபட்ட தகவலையே யோவான் பொதுவாக முன் வைக்கின்றார். யோவானின் விவரமானது, இயேசுவின் பிறப்பு, இயேசுவின் ஞானஸ்நானம் மற்றும் சோதிக்கப்படுதல், மலைப்பிரசங்கம், எல்லா உவமைகள், மறுரூபமடைதல், கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்துதல் மற்றும் கெத்செமனேயில் பெருந்துக்கம் ஆகியவற்றை தவிர்த்து விடுகிறது - இவை யாவும் ஒப்பீட்டு சுவிசேஷங்களில் கூறி முடிக்கப்பட்டுள்ளன.

இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் தவிர, ஒரு சில நிகழ்ச்சிகளே நான்கு விவரங்களிலும் [ஒரு சேரக்] குறிப்பிடப்படுகின்றன. நான்கு புத்தகங்களும் ஒரு நிகழ்ச்சியைப் பற்றிக் கூறும்போது, அது கவனிக்கத் தக்கதாக உள்ளது; அந்த நிகழ்ச்சி ஒரு விசேஷித்த தனிச்சிறப்பைக் கொண்டதாயிருக்க வேண்டும்.

## நான்கு விவரங்களிலும் உள்ள மாறுபாடுகள்

ஒருவர், சுவிசேஷத்தின் இசைவை வடிவமைக்கத் தொடங்கும்போது, ஒரே நிகழ்ச்சியைப் பற்றிய விவரங்கள் சுவிசேஷப் புத்தகங்களுக்கிடையில் மாறுதல்களைக் கொண்டிருப்பதைக் காண்பது உறுதி. இந்த மாறுபாடுகள் எவ்விதமாய் விளக்கம் தரப்படக்கூடும்?[8]

பெரும்பலான நிகழ்ச்சிகளில், ஒரு விவரமானது இன்னொரு விவரத்திற்குத் துணைத் தகவல் அளிக்கின்றது. பெத்தானியில் இயேசு அபிஷேகம் பெற்ற வரலாற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள். மத்தேயுவின் விவரத்தில் (மத். 26:6-13), பெயர் அறியப்படாத ஒரு பெண் விலையுயர்ந்த தைலத்துடன் வந்து, இயேசுவை அபிஷேகம் செய்தபோது, அவர் சீமோன் என்ற தொழுநோயாளியின் வீட்டில் இருந்தார், இது இயேசுவின் சீஷர்கள் தங்களின் அங்கீகரியாமையை வெளிப்படுத்தியதை விளைவித்தது. மாற்குவின் விவரத்தில் (மாற். 14:3-9) இதே போன்றுதான் பெரும்பாலும் உள்ளன, ஆனால் சில விவரங்கள் கூடுதலாகத் தரப்பட்டுள்ளன: அந்தத் தைலம் சுத்தமான நளதம் என்பதாயிருந்தது, அந்தப்பெண் தைலப் புட்டியை உடைத்தாள், மற்றும் அந்தத் தைலம் முந்நூறு தினேரியம்[9] விலைமதிப்பு உடையதாக இருந்தது. யோவானின் விவரம் (யோவா. 12:1-8) பின்வருபவை உட்பட மற்ற விவரங்களைத் தருகிறது: இயேசு தமக்கு மதிப்பளிக்கப்பட்ட விருந்து ஒன்றில் கலந்து கொண்டிருந்தார்; மார்த்தாள் உணவைப் பரிமாறிக் கொண்டிருந்தாள்; லாசருவும் மதிப்பளிக்கப்பட்ட ஒரு விருந்தினராய் இருந்தார்; மார்த்தாளின் சகோதரியான மரியாள் என்பவள் இயேசுவை அபிஷேகம் பண்ணினாள்; யூதா ஸ்காரியோத்துதான் விமர்சனத்தைத் தொடங்கினவனாயிருந்தான். இந்த விவரங்கள் ஒன்றுக் கொன்று முரண்பாடாக இருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக ஒன்றுக் கொன்று துணைக்கருத்துக்களை அளிப்பவைகளாக உள்ளன என்பது தெளிவு.

*சாட்சியங்கள் துணை விவரங்களைக் கொடுக்கும்போது, இது அவர்களின் சாட்சியை மதிப்புக் குறையச் செய்வதாக இல்லமால், அவர்களின் உண்மைத் தன்மையை நிலைநாட்டுகின்றன.*

> டாக்டர். [ஹென்றி] வான் டைக் அவர்கள், *"ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிய விவரத்தைத் தருவதற்கு ஒரு நீதிபதியின் முன்பாக நான்கு சாட்சிகள் வந்து நின்று, அவர்கள் ஒவ்வொருவரும் ஒரே வரலாற்றை ஒரே விதமான வார்த்தைகளில் கூறுவார்களென்றால், அந்த நீதிபதி, அநேகமாக, அவர்களின் சாட்சியானது விதிவிலக்கான வகையில் மதிப்புமிக்கது என்று முடிவு செய்ய மாட்டார், ஆனால் அது அவர்கள் ஒரே கதையைக் கூறுவதற்கு ஒப்புக் கொண்டிருந்தார்கள் என்று சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் முடிவு செய்வார். ஆனால், ஒவ்வொரு மனிதரும் தான் கண்டதை கண்டதின்படியே கூறவேண்டியிருந்தால், பின்பு ஆதாரமானது நம்பத் தக்கதாக இருக்கும். மற்றும் நாம் நான்கு சுவிசேஷங்களை வாசிக்கும் போது, இதையெல்லவா மிகச் சரியாகக் கண்டறிகின்றோம்? ஒரே வரலாற்றை நான்கு மனிதர்கள் தங்கள் தங்கள் சொந்த வழிமுறைகளில் கூறுகின்றார்கள்."*[10]

*ஆயினும் சில விஷயங்களில், விவரங்கள் துணைக் கருத்துக்களாக மட்டும் இருப்பதில்லை; அதற்குப் பதிலாக, அவைகள் மாறுபட்டவைகளாக உள்ளன. நிகழ்ச்சிகளின் முறைமை ஒரே மாதிரி இல்லாது இருக்கலாம், வேறுபட்ட நபர்கள் குறிப்பிடப்பட்டிருக்கலாம், அல்லது எண்ணிக்கை வித்தியாசமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பார்வையிழந்த மனிதர்களை இயேசு எரிகோ நகருக்கு அருகில் குணமாக்கும் வரலாற்றைக் கவனியுங்கள். மத்தேயுவின் விவரத்தில் (மத். 20:29-34), இயேசு எரிகோவை விட்டுப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தார், மற்றும் இரண்டு மனிதர்கள் குணமாக்கப் பட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. லூக்காவின் விவரத்தில் (லூக். 18:35-43), இயேசு எரிகோவுக்குச் சமீபமாய் வந்து கொண்டிருந்தார், மற்றும் பார்வையற்ற ஒரே ஒரு மனிதர் மட்டுமே குறிப்பிடப்படுகின்றார்.*[11] *இப்படிப்பட்ட வேறுபாடுகளை நாம் எவ்வாறு விளக்கப்படுத்துகின்றோம்? இங்கு சில சாத்தியக்கூறுகள் தரப்படுகின்றன:*

*(1) எழுத்தாளர்களின் வலியுறுத்தங்களில் உள்ள வேறுபாடுகளின் காரணத்தினால், விவரங்களில் சில மாறுபாடுகள் நிலவுகின்றன. மேற்கூறிய உதாரணத்தில், லூக்கா பார்வையற்ற ஒரே ஒரு மனிதரின்மீது அடையாள வெளிச்சத்தை வீசினார், ஆனால் இது அங்கு பார்வையற்ற இரு மனிதர்கள் இருந்தார்கள் மற்றும் குணமாக்கப்பட்டார்கள் என்ற சாத்தியக்கூற்றைக் குறைப்பதில்லை.*

*(2) எழுத்தாளர்கள் ஒன்றுபோலுள்ள, ஆனால் ஒரே நிகழ்வாயிராத நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தார்கள் என்பதால் விவரங்களில் மாறுபாடுகள் நிலவலாம். F. லாகார்டு ஸ்மித் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்:*

> *சில வேளைகளில், ... மிகவும் ஒரே மாதிரி காணப்படும் நிகழ்ச்சிகள்*

> *இருமுறை நடைபெற்றனவா அல்லது ஒரே நிகழ்ச்சியானது மாறுபட்ட எழுத்தாளரால் மாறுபட்ட சந்தர்ப்பப் பொருளில் பதிவு செய்யப்பட்டதா என்பதை முடிவு செய்வது கடினமாக உள்ளது. தேவாலயத்தைச் சுத்திகரித்தல், மற்றும் எருசலேமுக்காகப் புலம்புதல் போன்றவை இந்தப் பிரச்சனைக்கு உதாரணங்களாக இருக்கின்றன.*[12]

*(3) ஒரு நிகழ்ச்சியின் எல்லா உண்மைகளையும் நாம் கொண்டிராத போது முரண்பாடுகள் நிலவுவதாகக் காணப்படுவதுபோல் தோன்றலாம். மேற்கூறிய உதாரணத்தைப் பொறுத்தமட்டில், எரிகோ நகரின் பழைய இடம் ஒன்றும் எரிகோவின் புதிய நகர் ஒன்றும் இருந்ததாகக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. ஆகையால், இயேசு அவற்றில் ஒரு இடத்தை விட்டுப் புறப்பட்டு இன்னொரு இடத்திற்குள் நுழைகையில் அந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கக்கூடும். முரண்பாடுகள் நிலவுகிறதாக உறுதிப்படுத்து கின்றவர்கள் தங்களிடம் அறிவுக்குறைவு உள்ளதென்று ஒப்புக்கொள்ளு கின்றவர்களாய் இருக்கின்றார்கள்.*

*(4) மூல வசனத்தைப் பற்றிய சிலவற்றை நாம் புரிந்துகொள்ளாதிருப் பதால் முரண்பாடுகள் நிலவுவதாகக் காணப்படுவதுபோல் தோன்றலாம். தேவ நம்பிக்கையற்றவர்கள், பழைய ஏற்பாட்டில் பணம் செலுத்துதல் பற்றிக் குறிப்பிடும் இடங்களில் முரண்பாடு நிலவிற்று என்று பல ஆண்டுகளாக உரிமைகோரி வந்தார்கள்: ஒரு விவரத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை தரப்பட்டதாகக் குறிப்பிடப்படுகையில், இன்னொரு விவரத்தில் ஒரு மாறுபட்ட தொகை தரப்பட்டதாகக் குறிப்பிட்டது என்று அவர்கள் கூறினார்கள். வரலாற்றின் அந்தக் காலகட்டத்தில் விலையுயர்ந்த உலோகங்களை மதிப்பிடுவதற்கு இருவித முறைமைகள் பயன்படுத்தப் பட்டிருந்ததை, பின்னாட்களில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தார்கள்; அநேகமாக, ஒரு எழுத்தாளர் மதிப்பிடுதலின் ஒரு முறைமையைக் குறிப்பிட்டு இருக்கையில், இன்னொருவர் இரண்டாவது முறைமையைக் குறிப்பிட்டு இருக்கலாம். காலத்திற்குக் காலம் புதைபொருள் ஆராய்ச்சியானது வேத வசனத்தின்மீது புதுப்புது வெளிச்சங்களை வீசுகிறது.*

*இயேசுவின் வரலாற்றிற்கு நாம் கடந்து செல்லுகையில், விவரங்களுக் கிடையில் உள்ளதாக அதிகம் பிரபலப்படுத்தப்பட்டுள்ள "மாறுபாடுகள்" சிலவற்றை நான் குறிப்பிட்டு, அந்த மாறுபாடுகளை ஒப்புரவாக்குவதற் குரிய சாத்தியமான வழிமுறைகளைப் பற்றிக் கருத்துத் தெரிவிப்பேன்.*

## நான்கு விவரங்களிலும் உள்ள ஒற்றுமைத்தன்மைகள்

*வேத வசனங்களின் ஏவுதல் பெற்ற தன்மையில் நான் நம்பிக்கை கொண்டுள்ளதால் (2 தீமோ. 3:16, 17), சுவிசேஷ விவரங்களில் உள்ள மாறுபாடுகளைப் பற்றி நான் மிகவும் அக்கறையுடையவனாக இருக்கின் றேன். ஆயினும், பல கல்வியாளர்கள் சுவிசேஷ விவரங்களுக்கிடையில் - சிறப்பாக மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியவற்றிற்கிடையில் - உள்ள ஒற்றுமைத் தன்மை பற்றி அக்கறையுடைவர்களாய் இருக்கின்றார்கள். இந்த*

*மனிதர்கள் "ஒப்பீட்டுப் பிரச்சனை"யைக் குறிப்பிட்டு, இந்த மூன்று புத்தகங்களும் ஏன் இவ்வளவு ஒற்றுமைத் தன்மை உடையவனாக உள்ளன என்பது பற்றி வாதிடுகின்றார்கள்: எழுத்தாளர்கள் ஏன் சில வேளைகளில் ஒரே அல்லது ஒத்த தன்மைகொண்ட மொழிநடையைப் பயன்படுத்து கின்றார்கள். இவர்கள் பின்வருவன போன்ற கேள்விகளுடன் போராடு கின்றார்கள்: "ஒரு எழுத்தாளர் இன்னொரு எழுத்தாளர் எழுதியதை அப்படியே பார்த்து எழுதினாரா?"; "எழுத்தாளர்கள் பொதுவான ஒரு ஆதாரமூலத்தில் இருந்து அப்படியே பார்த்து எழுதினார்களா?"*

*கற்றறிந்த இந்த மனிதர்களின் கலக்கத்தினிமித்தம் நான் அவர்களுக் காகக் கொஞ்சமே பரிவிரக்கம் கொண்டுள்ளேன் என்பதை அறிக்கை யிடுகின்றேன். பரிசுத்த ஆவியானவர் என்ற பொதுவான எழுத்தாளரால் எல்லாப் புத்தகங்களும் ஏவப்பட்டுள்ளதால் இப்படிப்பட்ட ஒற்றுமைத் தன்மைகள் இயல்பாக விளைந்ததாயிருக்கும். பழைய ஏற்பாட்டின் காலத்தில், "... மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார் கள்" (2 பேது. 1:21). வேத வசனங்களின் ஏவுதலின்மீது ஒருவர் விசுவாசம் கொண்டிருந்தால்,[13] "ஒப்பீட்டுப் பிரச்சனை" என்பதாக அழைக்கப்படுகிற விஷயமானது நான்கு புத்தகங்களுக்கும் ஒரு பொதுவான எழுத்தாளர் உள்ளார் என்ற கருத்தினால் என்றென்றைக்குமாகத் தீர்க்கப்படுகிறது.*

## நான்கு விவரங்களுமே நம்பத்தக்கவை

*சபையின் தொடக்க காலங்களில் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவானின் விவரங்கள் - இவை நான்கு மட்டுமே புதிய ஏற்பாட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததால், இவை இயேசுவின் வாழ்வு பற்றிய புதிய ஏற்பாட்டின் ஏவுதல் பெற்ற பகுதிகளாகக் கருதப்பட்டுள்ளன.*

> [*புதிய ஏற்பாட்டில் பிற புத்தகங்களில் காணப்படுகிற*] *ஒரு சில துணுக்குக் கூற்றுக்களைத் தவிர,* [*இயேசுவின்*] *வாழ்வு பற்றிய ஆதாரப்பூர்வமான பதிவுகள் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்களில் மட்டுமே அடங்கியுள்ளன, இவை கிறிஸ்துவின் சபையின் வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே சபையினால் அதிகாரப்பூர்வமான நூல்களாக மதிக்கப்பட்டுள்ளன. இயேசுவின் வாழ்வு பற்றிய உண்மைகளாக, புகழ்பெற்ற இந்த நான்கு புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டிராத பல விஷயங்களை மற்ற பல சுவிசேஷ விவரங்கள் கொண்டிருப்பினும், கட்டுக் கதையான சுவிசேஷங்கள்* (apocryphal Gospels)[14] *என்று அழைக்கப்படுகின்ற இந்தப் புத்தகங்கள் பொதுவாக பின்னாட்களில் எழுதப்பட்டவை யாகவும், சந்தேகம் நிறைந்த விடுதலையியலை உடையவைகளாகவும் உள்ளன. இவைகள் அதிகாரப்பூர்வமான நூல்களாக ஏற்கப்பட்ட சுவிசேஷங்களில் தரப்படும் விஷயங்களின் பிரதிகளாயிராமல் வினோதமான புராணக் கதைகளைக் கூட்டியுள்ளன என்பது தெளிவு. மேலும், சில குறிப்பிட்ட பிரிவினரின் கண்ணோக்கங்களை ஆதரிப்பதற்காகவே எழுதப்பட்டுள்ளன என்பதை இவைகளின் மொழிநடையே காட்டிக் கொடுக்கிறது ...*[15]

*கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய நமது படிப்பை நாம் தொடங்குகையில், நான்கு சுவிசேஷ விவரங்களை நாம் சார்ந்திருக்க முடியும் என்பதை நாம் உணர்ந்து அறிவது நமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.*

> *சீமோன் கிரீன்லீஃப் என்பவர் அமெரிக்காவில் கடந்த காலத்தில் இருந்த வழக்கறிஞர்களில் ஒரு மாபெரும் வழக்கறிஞராக இருந்தார், இவர் சட்டம் பற்றி ஆங்கில மொழியில் எழுதப்பட்டவற்றிலேயே மிகவும் முக்கியமான எழுத்தாக்கம் என்ற வகையில் சான்றின் சட்டம் பற்றி எழுதினார். இவரது புத்தகமான, சான்றின் சட்டம் பற்றிய ஒரு ஆய்வு என்பது ஒரு நூறு ஆண்டுகள் அளவாக அந்தப் பாடக் கருத்தைப் பொறுத்தமட்டில் வெற்றி கொள்ளப்பட முடியாத புத்தகமாக இருந்தது. அது பதினாறு பதிப்புகளைக் கடந்து சென்றது. சீமோன் கிரீன்லீஃப் தமது அறுபத்து மூன்று வயதில் பக்குவமான வழக்கறிஞராக இருந்தபோது, தாம் மரிப்பதற்கு ஏழு ஆண்டுகள் முன்னதாக, அவர் ஒரு தொகுதியை வெளியிட்டார், அதில் அவர் இயேசுகிறிஸ்துவுக்கு நான்கு சுவிசேஷகர்களின் சாட்சியை ஆராய்ந்திருந்தார். அவர் நாகரீக உலகின் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் சான்றின் அதே சட்டங்களை இதற்கும் பயன்படுத்தினார். அவர் பின்வருமாறு கூறினார்: "நமது தொழில் நம்மை தவறின் சிக்கல்களை ஆராய்ந்து பார்க்க, அதன் செயற்கைத் தன்மையைக் கண்டு பிடிக்க, அதன் மிகத் தடிமனான முகத்திரைகளைக் குத்தி ஊடுருவ, அதன் அறிவுத் திறமைகளைப் பின்பற்றின்யேதி அதை வெளிப்படுத்த, மாறுபட்ட சாட்சியங்களின் கூற்றுக்களைக் கடுமையாக ஒப்பிட்டுப் பார்க்க, சத்தியத்தைக் கண்டறிய மற்றும் அதைத் தவறிலிருந்து பிரிக்க வழிநடத்துகிறது." 543 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தில், சீமோன் கிரீன்லீஃப் அவர்கள், சுவிசேஷப் புத்தகங்கள் முற்றிலும் நம்பிக்கைக்குத் தகுதியானவையாக உள்ளன என்றும், நான்கு சுவிசேஷகர்களும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிப் பொய்யுரைத்திருக்கச் சாத்தியக்கூறு இல்லை, ஏனெனில் அவர்களின் சாட்சியம் உண்மையை ஒலிக்கிறது என்றும் முடிவுக்கு வந்தார்.[16]*

*மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷங்கள் தங்கள் உரிமைகோருதலின்படியே மிகச் சரியாக உள்ளன: வாழப்பட்டவற்றிலேயே மாபெரும் வாழ்வின் உண்மையான விவரங்கள்! நீங்கள் இந்தப் புத்தகங்களுக்கு உங்கள் வாழ்வை - மற்றும் உங்கள் நித்தியத்தை - ஒப்புவிக்க முடியும். பவுல் இதை பின்வருமாறு இடுகின்றார்: "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது" (1 தீமோ. 1:15அ).*

---

## போதகர்களுக்கும் பிரசங்கியார்களுக்கும் ஒரு குறிப்பு

*நீங்கள், "சுவிசேஷ விவரங்களில் எடுத்துரைக்கப்பட்ட பாடக் கருத்துக்கள்" என்ற அட்டவணையின் இடது புறத்தில் காணப்படக்கூடிய*

*கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய அடிப்படை வரைக்குறிப்புக்கு நன்கு பழகிக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் வாழ்வை வரைக்குறிப்பிடுவதற்குப் பல வழிகள் உள்ளன, ஆனால் இது மிக எளிய மற்றும் மிகச் சிறந்த வழிமுறையாக உள்ளது. நீங்கள் இந்த வரைக்குறிப்பைப் பெரிய அளவில் பிரதி எடுத்து அதை ஒரு பலகையில் ஒட்டி உங்கள் வகுப்பறையில் காட்சிப்படுத்தி வைக்க விரும்பலாம். உங்கள் மாணவர்கள் இந்த வரைக் குறிப்பை மனப்பாடம் செய்யும்படி அவர்களை உற்சாகப்படுத்தவும் நீங்கள் விரும்பலாம்.*

---

*குறிப்புகள்*

[1]*இரண்டு மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் இருந்தே, புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களைக் குறிப்பிடுவதற்கு ''சுவிசேஷங்கள்'' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. நான் "சுவிசேஷ விவரங்கள்" என்ற சொற்றொடரையே விரும்பித் தேர்ந்து கொள்கின்றேன், ஆனால் மற்றவர்கள் "சுவிசேஷங்கள்" என்பதை ஒரு நுணுக்கச் சொற்றொடராகப் பயன்படுத்துவதைக் குறித்து எனக்கு மறுப்பு எதுவும் இல்லை.* [2]"Autoptic" *என்ற வார்த்தையானது கண்ணால் கண்ட சாட்சி என்ற கருத்தையும் தர முடியும்ம.* [3]Henrietta C. Mears, *What the Bible Is All About* (Glendale, Calif.: Gospel Light Publications, 1966), 348. [4]*வெவ்வேறு கூட்ட மக்களுக்கு ஏற்றபடி ஒரு விவரத்தைத் தொகுத்திணைப் பதற்கான எடுத்துக்காட்டு ஒன்றுக்கு, அப். நடபடிகள் புத்தகத்தில் உள்ள பவுலின் மனம் மாறுதல் பற்றிய மூன்று விவரங்களைக் காணவும்: அப். 9ல் உள்ள விவரமானது லூக்காவின் வாசகர்களுக்காக எழுதப்பட்டது; அப். 22ல் அது எருசலேமில் இருந்த யூதர்களுக்கு முன்பாகப் பவுல் செய்த தற்காப்புவாதத்தின் ஒரு பகுதியாக இருந்தது; அப். 26ல் அது செசரியாவில் அகிப்பா அரசரை நோக்கி இயக்கப்பட்ட பவுலின் பிரசங்கத்தின் பாகமாக இருந்தது. இவற்றில் இரு விவரங்களைப் பற்றி, சைமன் கிஸ்ட்மேக்கர் அவர்கள் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்: ''பவுல் தமது மனமாற்றம் என்ற ஒரே நிகழ்ச்சியில் இருந்து, ஒவ்வொரு சாராருக்கும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்லும் தமது முயற்சியில் வெவ்வேறு வார்த்தைகளை ஞானமாகத் தேர்ந்தெடுத்து, வெவ்வேறு அம்சங்களை வலியுறுத்தினார் ..."* (Simon Kistemaker, *New Testament Commentary: Exposition of the Acts of the Apostles* [Grand Rapids, Mich.: Baker Book House, 1990], 899). [5]*நான்கு விவரங்கள் பற்றிய கூடுதல் தகவல் இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் ஒவ்வொரு புத்தகத்திற்குமான வரைக்குறிப்பில் தரப்படும்.* [6]*"மாற்கு சுவிசேஷம்" என்ற பாடத்தில் காணவும்.* [7]Referred to in John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 25. [8]*சவுலின் மனமாற்றம் பற்றி அப். நடபடிகள் புத்தகத்தில் லூக்கா மூன்று விவரங்களைக் கொடுத்தார் என்று நான் முன்பே குறிப்பிட்டேன் (அப். 9; 22; 26). இதைப் பற்றி ஜான் ஸ்டாட் அவர்கள் பின்வருமாறு விளக்கம் கொடுத்தார்: "ஒரே எழுத்தாளர் (லூக்கா), ஒரே வரலாற்றை வேறு வகைகளில் கூறுகின்றது எப்படி என்ற நமது படிப்பானது, ஒப்பீட்டு சுவிசேஷகர்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா) தாங்கள் கூறிய ஒரே வரலாற்றை வேறு வகையில் கூறமுடிவது எப்படி என்பது பற்றி நாம் புரிந்துகொள்ள உதவும்"* (John R. W. Stott, *The Message of Acts: The Spirit, the Church & the World,* The Bible Speaks Today Series, ed. John R. W. Stott [Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1990], 380). [9]*ஒரு தினேரியம் என்பது சாதாரணத் தொழிலாளியின் ஒரு நாள் கூலிக்குச் சமமான தொகையாகும்.* "Denarii" *என்பது*

"denarius" *என்பதன் பன்மைச் சொல் ஆகும்.* [10]Mears, 345.

[11]*மாற்கு சுவிசேஷ விவரத்தில் (மாற். 10:46-52), பார்வையற்ற ஒரே ஒரு மனிதரே (பர்த்திமேயு) குணமாக்கப்பட்டார்.* [12]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1351. [13]*இந்தப் பாடத்தொடர் முழுவதிலும், மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் எழுதியவற்றைப் பரிசுத்த ஆவியானவரே அவர்களுக்கு ஏவினார் என்ற கருத்து யூகிக்கப்பட்டிருக்கும். சில வேளைகளில் இது எடுத்துரைக்கப்படும்; சில வேளைகளில் இது எடுத்துரைக்கப்படாது. சுவிசேஷ எழுத்தாளர் இதை அல்லது அதைக் ''கூறினார்'' என்று குறிப்பிடப்படும் போதெல்லாம், அவர் அதை ஏவுதலினால் கூறினார் என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.* [14]"Apocrypha" *என்றால் ''மறைந்துள்ள'' என்று அர்த்தப்படுகிறது. இன்றைய நாட்களில் பயன்படுத்துகிறபடியாக இது, "எழுத்தாளரத்துவம் அல்லது அங்கிகரித்துவம் பற்றி கேள்வியெழுப்பப்படக் கூடியது" என்று மறைமுகமாக உணர்த்துகிறது.* [15]Merrill C. Tenney, *New Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 131. [16]John Phillips, *Exploring the Scriptures* (London: Victory Press, 1965), 189-90.

# *சுவிசேஷ எழுத்தாளர்களின் விசேஷித்த உறவுமுறைகள்*

*சுவிசேஷ எழுத்தாளர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் எல்லாத் தகவல்களையும் எவ்வாறு அளித்தார் என்பதை நாம் அறிதல் என்பது அவசியமும் அல்ல, அதை எல்லாவற்றையும் நாம் அறியவும் இயலாது என்றிருக்கையில், கல்வியாளர்களும் விமர்சகர்களும் இந்த நான்கு எழுத்தாளர்களுக்கும் இடையில் நிலவிய உறவுமுறைகள் பற்றியும், மற்றவர்களுடன் இவர்களுக்கிருந்த உறவுமுறைகள் பற்றியும் மனம் ஈர்க்கப்பட்டுள்ளார்கள்.*

*மத்தேயு ஒரு அப்போஸ்தலராயிருந்ததினால் கிறிஸ்வுடன் ஒரு நேரடியான தொடர்பு உடையவராக இருந்தார் (மத். 9:9; 10:3; மாற். 2:14). இவர் தாம் எழுதிய பெரும்பாலான நிகழ்ச்சிகளைக் கண்களால் கண்ட சாட்சியாக இருந்தார்.*

*மாற்கு சுவிசேஷத்தின் பெரும்பாலான விவரங்கள் பேதுருவின் தகவலாக இருந்தன என்று பொதுவாக நம்பப்படுகிறது.*[1] *மாற்குவும் பேதுருவும் உடன் ஊழியர்களாக இருந்தார்கள் என்று நாம் அறிகின்றோம் (1 பேது. 5:13). மாற்கு, பவுலுடனும் ஊழியம் செய்திருந்தார் (அப். 13:5; கொலோ. 4:10), மற்றும் இவர் இயேசுவுடன் எல்லைக்குட்பட்ட அளவே சொந்தத் தொடர்பு கொண்டிருந்திருப்பார்.*[2]

*லூக்காவின் புத்தகமானது ஆராய்ச்சியின் விளைவாகும் என்று அவரே குறிப்பிட்டார் (லூக். 1:1-4),*[3] *இது, கிறிஸ்துவை இவர் நேரடியாக அறிந்திருந்தது இல்லை என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது. கண்ணால் கண்ட சாட்சிகளுடன் இவர் ஆலோசனை செய்தார் என்று கல்வியாளர்கள் யூகித்துள்ளனர். பவுலின் உடன் ஊழியர் மற்றும் நெருங்கிய நண்பர் என்ற வகையில் (கொலோ. 4:14; 2 தீமோ. 4:11*[4]*), லூக்கா, கிறிஸ்துவின் வாழ்வு பற்றி அந்த அப்போஸ்தலருக்குத் தனிப்பட்ட வகையில் வெளிப்படுத்தப்*

*பட்டவைகளை அறியும் வழிபெற்றிருந்தார் (1 கொரி. 11:23). சுவிசேஷத்தின் ஏவுதல் பெற்ற மற்ற வாய்மொழி விவரங்களையும் லூக்கா பயன்படுத்தியிருக்கக் கூடும்.[5] எந்த ஒரு விவரமும் எழுதப்படுவதற்கு முன், ஏவுதல் பெற்ற மனிதர்கள் இயேசுவைப் பற்றிக் குறைந்தது முப்பது ஆண்டுகள் அளவாகப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார்கள். இயேசுவின் வாழ்வு பற்றிய அடிப்படை வரலாறு சபைக்கு நன்கு அறியப்பட்டதாக இருந்தது.*

*யோவானும் மத்தேயுவும் இயேசுவின் அப்போஸ்தலர்களாக ஒன்றாய் ஊழியம் செய்தார்கள் (மத். 10:2; மற்றும் யோவா. 13:23; 19:26; 20:2; லூக். 5:1-11 ஆகியவற்றையும் காணவும்). மாற்குவும் லூக்காவும் ஒரே வேளையில் ரோமாபுரியில் இருந்தார்கள் (கொலோ. 4:10, 14). எருசலேமிலிருந்த மாற்குவின் வீட்டில் சபையார் சில வேளைகளில் கூடி வந்ததால் (அப். 12:12), மாற்கு அநேகமாக - மத்தேயு மற்றும் யோவான் உட்பட - அப்போஸ்தலர்கள் எல்லாரையும் நன்கு அறிந்திருப்பார். எருசலேம் பகுதியில் லூக்கா தன் சமயத்தைக் கடத்தியிருந்ததால் (அப். 21:15; 27:1), பணித்தளமாக எருசலேமை உபயோகித்திருந்த அப்போஸ்தலர்களுடன் - ஒருவேளை மத்தேயு மற்றும் யோவான் உட்பட - அவர் பழகியிருக்க வாய்ப்பு உண்டு. மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோர் எழுதி, பல பத்தாண்டுகளுக்குப் பின்பு யோவான் எழுதியிருக்கக் கூடும் என்பதால், அவர்களின் விவரங்கள் பற்றி இவர் [யோவான்] அறிந்திருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. பதிவு செய்வதற்கு, இவர் வேண்டுமென்றே துணைக் கருத்துக்களைத் தேர்ந்து கொண்டதாகக் காணப்படுகிறது.*

*கருத்துக்களைத் தேர்ந்துகொள்ளுதல், எழுத்துப் பாணி அல்லது வார்த்தையமைப்பு இவற்றில் காணப்படுகின்ற ஒத்த தன்மைகள் வியப்புக்குரியவையல்ல. இந்த எழுத்தாளர்கள் யாவரும் மிக முக்கியமான ஒரு உறவுமுறையைப் பகிர்ந்து கொண்டார்கள்: இவர்கள் யாவரும் இயேசுவின் வாழ்வைப் பற்றிக் கூறுவதற்குப் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டிருந்தார்கள்.*

---

குறிப்புகள்

*[1]விஷயம் இவ்வாறு இருந்தாக, சபையின் தொடக்க கால (ஏவுதல் பெற்றிராத) எழுத்தாளர்கள் உறுதிப்படுத்தினார்கள். இந்தப் புத்தகத்தில் உள்ள "மாற்கு எழுதிய சுவிசேஷம்" என்ற பாடத்தில் காணவும். [2]மாற்கு 14:51, 52ல் குறிப்பிடப்படுகிற இளைஞர் மாற்குவேதாம் என்று பலர் நம்புகின்றார்கள். [3]லூக்காவின் ஆராய்ச்சியைப் பரிசுத்த ஆவியானவரே வழிநடத்தியிருக்கலாம். ஆராய்ச்சியிலிருந்து லூக்கா பெற்றுக்கொண்ட விஷயங்களைப் பயன்படுத்துவதில் அவரைப் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தினார் என்பது உறுதி. [4]அப். நடபடிகள் புத்தகத்தில் உள்ள ''நாங்கள்'' என்ற வார்த்தை உள்ள வசனப்பகுதிகளும் (உதாரணமாக அப். 16:10) பவுலுடன் லூக்கா கொண்டிருந்த நெருங்கிய தொடர்பைச் சுட்டிக்காண்பிக்கின்றன. [5]பவுலும் பிற அப்போஸ்தலர்களும் மக்களின்மீது தங்கள் கைகளை வைத்து அற்புத வரங்களைக் கொடுத்தார்கள் (அப். 8:17). இயல்புக்கு அப்பாற்பட்ட அறிவு [அறிவை உணர்த்தும் வரம்] என்பது (1 கொரி. 12:8) அவ்வரங்களில் ஒன்றாக இருந்தது, இது பிறருடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியதாக இருந்தது.*

## சுவிசேஷ விவரங்களின் சுருக்கமான ஒப்பீடு

| புத்தகத்தின் பெயர் | ஆரம்பத்தில் யாருக்கு எழுதப்பட்டது | இயேசுவை எடுத்துரைத்த விதம் | புத்தகத்தின் விசேஷித்த வலியுறுத்தம் | இன்றைய நாட்களுக்கு சிறப்பான வேண்டுகோள் | நிறைவான நோக்கம் | |
|---|---|---|---|---|---|---|
| மத்தேயு | யூதர்களுக்கு | ராஜாவாக | மேசியாவாக இயேசு: அவரது போதனை, அவரது இராஜ்யம், அவரது அதிகாரம் | வேதாகம மாணவர்களுக்கு | வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகர் | மக்கள் இரட்சகரைப் பற்றிய அறிவிற்குள் கொண்டுவர |
| மாற்கு | ரோமர்களுக்கு | ஊழியராக | மக்களுக்கு உதவுதற்கு இயேசுவின் செயல்கள் அற்புதங்கள் | சராசரி நபருக்கு, வியாபாரிகளுக்கு | வல்லமையுள்ள இரட்சகர் | |
| லூக்கா | கிரேக்கர்களுக்கு | மனித குமாரனாக | இயேசுவின் பூரணப்பட்ட மனித்துவம் | கல்வியாளர், சிந்தனையாளர், உயர்நோக்கம் கொண்டவர், சத்தியத்தை நாடுபவர் ஆகியோர்களுக்கு | பரிபூரணமான இரட்சகர் | |
| யோவான் | விசுவாசிகளுக்கு | தேவ குமாரனாக | இயேசுவின் தெய்வீகத்துவம் | எல்லா மக்களுக்கும் | ஒருவருக்கு சொந்தமான இரட்சகர் | |

| சுவிசேஷ விவரங்களில் எடுத்துரைக்கப்பட்ட பாடக்கருத்துக்கள் | | | | |
|---|---|---|---|---|
| **கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய முக்கியமான வரைக்குறிப்பு** | **ஒப்பீட்டு நூல்கள்** | | | **யோவான்** |
| | **மத்தேயு** | **மாற்கு** | **லூக்கா** | |
| I. **பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம்**<br>அ. முன்பே இருந்த நிலை | | | | √ |
| ஆ. வம்ச வரலாறு, பிறப்பு & குழந்தைப் பருவம் | √ | | √ | |
| II. **ஆயத்த காலவேளை**<br>அ. பிள்ளைப் பருவம் | | | √ | |
| ஆ. யோவான் ஸ்நானனின் ஊழியம் | √ | √ | √ | √ |
| இ. ஞானஸ்நானம் மற்றும் சோதிக்கப்படுதல் | √ | √ | √ | |
| III. **மறைவாயிருந்த காலவேளை**<br>அ. தொடக்க கால கலிலேய ஊழியம்<br>ஆ. தொடக்க கால யூதேயா ஊழியம் | √ | √ | √ | √<br>√ |
| IV. **மாபெரும் கலிலேய ஊழியத்தின் காலம்**<br>அ. ஐந்து துணைக் காலவேளைகள் | *14 அதிகாரங்களும் மேல்* | *ஏறக்குறைய 9 அதிகாரங்கள்* | *சுமார் 5 அதிகாரங்கள்* | *1 அதிகாரத்திற்கும் சற்று அதிகமாக* |
| ஆ. பெரேயாவில் ஊழியம் | | | | √ |
| V. **பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் முடிவு ஊழியம்**<br>அ. யூதேயாவில் பின்னாட்களில் ஊழியம் | | | √ | √<br>எருசலேம் |
| ஆ. பெரேயாவில் ஊழியம் | ? | ? | √ | குறிப்பிடப்படுதல் |
| இ. எருசலேமுக்குப் பயணம் | √ | √ | √ | குறிப்பிடப்படுதல் |
| VI. **கடைசி வாரத்தின் காலவேளை**<br>சிலுவையில் அறையப்படுதல் உட்பட | √<br>*7 அதிகாரங்கள்* | √<br>*5 அதிகாரங்கள்* | √<br>*4 1/2 அதிகாரங்கள்* | √<br>*8 அதிகாரங்கள்* |
| VII. **நாற்பது நாட்களின் காலவேளை**<br>உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் | √ | √ | √ | √ |

## 2

# மத்தேயு சுவிசேஷம்

## ராஜாவாகி கிறிஸ்து

*மத்தேயு சுவிசேஷம், சுவிசேஷம் விவரங்களில் முதலாவதாகவும் புதிய ஏற்பாட்டில் முதலாவது புத்தகமாவும் உள்ளது. புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் எல்லா தொடக்க காலப் பட்டியல்களிலும் செயல்முறையில் இதுவே முதல் புத்தகமாக உள்ளது. (ஏவுதல் பெற்றிராத) ஒரு பாரம்பரிய வரலாற்றின்படி, இது இயேசுகிறிஸ்துவின் வாழ்வு பற்றி எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டின் மற்ற மூன்று விவரங்களுக்கு முன்னதாக எழுதப்பட்டதால், இது முதலிடத்தில் வைக்கப்பட்டு இருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது. இது நான்கு சுவிசேஷ விவங்களிலும் மிகப் பிரபலமானதாக இருந்தது என்பது, இது முதலிடத்தில் வைக்கப்பட்டதற்கான சாத்தியக் கூறுள்ள இன்னொரு காரணமாக உள்ளது: இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவ எழுத்தாளர்கள், மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களைக் காட்டிலும் மத்தேயு சுவிசேஷத்தில் இருந்து அதிகமாக மேற்கோள் காண்பித்தார்கள்.*

*மத்தேயு சுவிசேஷம் முதலிடத்தில் வைக்கப்படுவதற்கான காரணம் எதுவாயிருப்பினும், இதன் தகுதிநிலையும் வலியுறுத்தமும், இதனைப் பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் ஒரு பூரணமான தொடர்புக் கண்ணியாக ஏற்படுத்துகின்றன. பழைய ஏற்பாடானது, யூதர்கள் தங்களுக்கு நீண்ட காலமாகவே வாக்குத்தத்தம் பண்ணப் பட்டுள்ள ராஜாவாகிய தங்களின் மேசியாவை எதிர்நோக்கி இருத்தலுடன் முடிந்தது. அந்த ராஜாவாக இருப்பவர் இயேசுவே என்று மத்தேயுவின் சுவிசேஷத்தில் அறிவிக்கப்படுதலுடன் புதிய ஏற்பாடு தொடங்குகிறது!*

## மத்தேயு சுவிசேஷத்திற்கு ஒரு அறிமுகம்

**புத்தகத்தை எழுதியவர்**

*மத்தேயு சுவிசேஷப் புத்தகத்தின் (“according to Matthew” தமிழில் இது, “மத்தேயு எழுதின” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) என்று தலைப்புக் குறிப்பானது மூலத்தொகுதியின் பாகமாயிருந்திருக்காது.[1] இருந்த போதிலும், தொடக்க கால எழுத்தாளர்கள், மத்தேயுவின் பெயர்கொண்டு இன்று அறியப்படுகிற இந்தப் புத்தகத்தை மத்தேயுதான் எழுதினார் என்பதை ஒரு சேர நம்பினார்கள்.[2] இந்தப் புத்தகத்தின் இயல்பு, மத்தேயுவின்[3] இயல்பென்று கொஞ்சமாக அறியப்பட்டவற்றுடன் ஒத்துப் போகிறது.*

“தேவனுடைய கொடை” என்று அர்த்தப்படுகிற பெயரான மத்தேயு என்னப்பட்டவர், லேவி என்றும் அறியப்பட்டார், இது “இசைவில் இணைந்தவர்” என்றும் அர்த்தப்படுகிறது. (மத். 9:9ஐ மாற். 2:14உடன் ஒப்பிட்டுக் காணவும்.)[4] இவர் கப்பர்நகூம் ஊரைச் சேர்ந்தவர் (மாற். 2:1, 14), இது கலிலேயாக் கடற்கரையின் வடமேற்குப் பகுதியில் இருந்த ஒரு பெரிய நகரம் ஆகும், மற்றும் இவரது தந்தை அல்பேயு என்னும் பெயருடையவராய் இருந்தார் (மாற். 2:14). மத்தேயு ரோம அரசில் ஒரு வரிவசூலிப்பவராகப்[5] பணியாற்றி வந்தார் (மத். 10:3). யூதர்களில் பெரும்பான்மையானோர் இவரைக் காட்டிக் கொடுப்பவர் என்று கருதி னார்கள். “ஆயக்காரன்” மற்றும் “பாவி” என்ற வார்த்தைகள் அவர்களின் சிந்தையில் ஒரு பொருட் பல சொற்களாக இருந்தன (மத். 9:10, 11; 11:19 ஆகியவற்றைக் காணவும்).

ஒரு நாள் இயேசு, மத்தேயுவை கப்பர்நகூமில் இருந்த வரிவசூலிப்பு அலுவலகத்தில் கண்டு, அவரிடத்தில், “என்னைப் பின்செல்” என்று கூறினார். அந்த வரிவசூலிப்பவர் “எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின் சென்றார்” (லூக். 5:27, 28). இந்த அழைப்புக்குச் சற்றுப் பின்பு, மத்தேயு இயேசுவுக்கு ஒரு வரவேற்பை அளித்து, தமது சக ஆயக்காரர்களையும் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டிருந்தவர்களையும் அந்த விருந்திற்கு அழைத்தார் (மத். 9:9-17; லூக். 5:29-39).

மத்தேயுவின் பெயர் பன்னிரு அப்போஸ்தலர்களின் எல்லாப் பெயர்ப்பட்டியலிலும் காணப்படுகிறது (மத். 10:3; மாற். 3:18; லூக். 6:15; அப். 1:13). இவர் அப். நடபடிகள் 1 முதல் 7 அதிகாரங்கள் வரையில் எருசலேமில் அப்போஸ்தலர்கள் செய்த ஊழியத்தில் ஈடுபட்டிருந் திருப்பார், ஆனால் அந்த இடத்திற்கு அப்பால் இவரது ஊழியம் பற்றி நம்பத் தகுந்த தகவல் எதையும் நாம் கொண்டிருப்பதில்லை. ஏவுதல் பெற்றிராத தொடக்க காலப் பாரம்பரிய வரலாறானது, இவர் பதினைந்து ஆண்டுகள் அளவாக யூதேயாவில் பிரசங்கித்ததாகவும் பின்பு தொலைதூரக் களங்களுக்குச் சென்றதாகவும் கூறுகிறது. அதே பாரம்பரிய வரலாறானது, இவர் “தமது சொந்தப் பிரசன்னத்தின் குறைவினால், எழுதியதன் மூலம்” விவரம் அளிக்க, தம் சுவிசேஷ விவரத்தை எழுதினார் எனறு கூறுகிறது.[6]

### இந்தப் புத்தகத்தைப் பற்றி ஒரு கேள்வி

தொடக்க கால எழுத்தாளர்களில் பலர், மத்தேயு முதலில் இந்தப் புத்தகத்தை அரமாயிக் (எபிரெய மொழியின் வட்டார வழக்கு) மொழியில் எழுதினார் என்றும் பிற்பாடு இது மத்தேயுவினாலோ அல்லது வேறு யாரோ ஒருவரினாலோ கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது என்றும் கருத்து தெரிவித்தார்கள். மெரில் டென்னீ அவர்கள், இந்தப் பாரம்பரிய மானது “அரமாயிக் மூலப் பிரதியொன்று இருப்பதாகக் கண்டு பிடிக்கப் படாததாலும், இந்த சுவிசேஷப் புத்தகமானது கிரேக்க மொழிபெயர்ப்பின் அடையாளங்கள் எதையும் கொண்டிராததாலும் அடிக்கடி மறுக்கப் பட்டுள்ளது” என்று எழுதினார்.[7] ஜேக் லூயிஸ் அவர்கள், “பெரும்பாலான கல்விமான்கள், ‘நமது புத்தகமானது கிரேக்க மொழியில் எழுதப்பட்ட

*மாபெரும் கிரேக்க நூலாக உள்ளது' என்று வலியுறுத்துகின்றார்கள்'' என்று கூறுவதுடன், "இந்த சுவிசேஷத்தின் தொடக்க கால அரமாயிக் மொழிக் குறிப்புகளோ அல்லது கையெழுத்துப் பிரதிகளோ இருப்பதில்லை" என்றும் கூறினார்.[8] மத்தேயு சுவிசேஷம் பற்றிய நமது படிப்பில், நாம் அரமாயிக் மொழியிலான இதன் தொடக்க கால பதிப்பு ஒன்று இருந்தது என்ற கருதுகோளின்மீது கவனம் செலுத்த மாட்டோம். அதற்கு மாறாக, தேவன் நமக்காகப் பாதுகாத்து அளித்துள்ள (கிரேக்க மொழியில் எழுதப்பட்ட) இந்தப் புத்தகத்தின் மீதே கவனம் செலுத்துவோம்.*

**இந்தப் புத்தகத்தின் நோக்கம்**

*மத்தேயு இந்தப் புத்தகத்தை எழுதும்போது, தமது சக யூதர்களையே தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது உறுதி: இவர் யூத வம்ச வரலாறு ஒன்றுடன் தொடங்கினார் (1:1-17). இவர் பழைய ஏற்பாட்டில் இருந்து நாற்பதுக்கும் மேற்பட்ட நேரடியான மேற்கோள்கள் அடங்கிய ஏறக்குறைய ஒரு நூறு மறைவான குறிப்பிடுதல்களை உள்ளடக்கினார்.[9] இயேசு பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார் என்பதை இவர் தொடர்ந்து வலியுறுத்தினார் (1:23; 2:6, 15, 23 ஆகியவற்றைக் காணவும்). இவர் யூதர்களுக்கு நன்கு பழக்கமான, "தாவீதின் குமாரன்" (1:1, 20; 9:27) போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். இவர், இயேசு "காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு" அனுப்பப் பட்டார் என்பதை வலியுறுத்தினார் (15:24; 10:6ஐயும் காணவும்).*

*இஸ்ரவேலர்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்த மேசியா/ராஜா வந்துவிட்டார் என்று காண்பிப்பதே மத்தேயுவின் நோக்கமாக இருந்தது. இந்தப் புத்தகத்தின் ஆய்வுக் கருத் தானது தொடக்க வசனத்திலேயே அறிவிக்கப்பட்டிருந்தது: "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசுகிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" (1:1).*

> *இந்தக் கூற்று கிறிஸ்துவை, தேவன் தாவீதுடனும் ஆபிரகாமுடனும் ஏற்படுத்தியிருந்த மாபெரும் உடன்படிக்கைகள் இரண்டுடன் ஒன்று சேர்க்கிறது. தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கையில் தாவீதின் அரியணையில் அமர்ந்து என்றென்றும் ஆட்சி செய்ய ஒரு ராஜா வருவார் என்ற வாக்குத்தத்தம் அடங்கியிருந்தது (2 சாமு. 7:8-13). ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையில் ஆபிரகாமின் மூலமாகப் பூமியில் உள்ள எல்லாக் குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தார் (ஆதி. 12:3).[10]*

*''மேசியா'' என்பது அபிஷேகம் பண்ணப்பட்ட[ஒரு]வர் என்று அர்த்தப்படும் எபிரெய மொழிச் சொல்லிலிருந்து ஒலியாக்கமாக உள்ளது. ''கிறிஸ்து'' (யோவா. 1:41) என்பது இதற்கு இணையான கிரேக்கச் சொல்லாக உள்ளது. ஆசாரியங்களையும் (யாத். 28:41; 29:7) பிறரையும்[11] நியமிப்பதில் அபிஷேகம் செய்வித்தல் பயன்படுத்தப்பட்டது; ஆனால் ஒரு யூதர், "தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்ற சொற்றொடரைக்*

கேள்விப்படும்போது, அவர் ஒரு ராஜாவைப் பற்றியே நினைத்தார் (1 சாமு. 10:1; 24:6; சங். 2:2, 6 ஆகியவற்றைக் காணவும்). இயேசுவின் ராஜத்துவம் என்பதே மத்தேயு சுவிசேஷத்தில் வலியுறுத்தமாக உள்ளது: "யூதர்களின் ராஜாவை" ஆராதிப்பதற்காக ஞானிகள் வந்தார்கள் (2:2). இயேசுவில் ஒரு போட்டி ராஜாவை ஏரோது உய்த்துணர்ந்தார் (2:3-9). அவர் இயேசு தாவீதின் குமாரன் என்பதை மக்கள் ஒப்புக்கொண்டார்கள் (9:27; 15:22; 20:30). கிறிஸ்து ஒரு ராஜாவாக எருசலேமுக்குள் நுழைந்தார் (21:1-11; வ. 5ஐயும் காணவும்). அவரது சிலவையின்மீது, "யூதர்களின் ராஜா" என்று எழுதப்பட்டு இருந்தது (27:37). இயேசு, ஒரு நாளலே தாம் ஒரு நியாயாதிபதியாக தமது அரியணையில் அமரப் போவதாக உறுதிப் படுத்தினார் (25:31-33).

எரிக் ஹைடன் அவர்கள், மத்தேயு புத்தகத்தில், "நாம் ஒரு ராஜாவின் தூதுவருக்கு (யோவான் ஸ்நானன்[12]), ராஜாவின் சோதனை வேளைகளுக்கு (அவர் சோதிக்கப்படுதல்), ராஜாவின் கொள்கை விளக்க அறிவிப்புக்கு (மலைப் பிரசங்கம்), ராஜாவின் ஊழியத்துக்கு (அவரது போதனைகள் மற்றும் அற்புதங்கள்), ராஜாவின் புறக்கணிக்கப்படுதலுக்கு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுக்கு அறிமுகப்படுத்தப் படுகின்றோம்" என்று கருத்துத் தெரிவித்தார்.[13] "இந்தப் புத்தகத்தைக் கண்ணோக்குங்கள்" என்ற புத்தகத்தின் ஆசிரியர்கள், "இயேசு ஒரு ராஜாவைப் பிறந்தார், ஒரு ராஜாவைப்போல் வாழ்ந்தார், ஒரு ராஜாவைப் போல் பேசினார், ஒரு ராஜாவைப்போல் மரித்தார், அவர் மரித்தோரில் இருந்து எழுந்து ராஜாதி ராஜாவாக மீண்டும் வருவதாக வாக்குத்தத்தம் செய்தார்" என்று எழுதினார்.[14]

ராஜாவின் இராஜ்யத்தின்மீதும் மத்தேயு கவனம்செலுத்துகின்றார். "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது" (3:2; 4:17; 10:7) என்பதே யோவான் ஸ்நானன், இயேசு, இயேசுவின் சீஷர்கள் ஆகியோரின் அடிப்படைச் செய்தியாக இருந்தது. "இராஜ்யம்" என்ற வார்த்தையானது மத்தேயு சுவிசேஷத்தில் ஐம்பதுக்கும் அதிகமான முறைகள் காணப் படுகிறது.[15] ("பரலோக இராஜ்யம்" என்ற சொற்றொடர் மட்டும் முப்பதுக்கும் அதிகமான முறைகள் காணப்படுகிறது.[16]) இந்தப் புத்தகத்தில் பெரும்பாலான உவமைகள் "அன்றியும் பரலோக இராஜ்யம் ... போன்றதாக உள்ளது" என்றே தொடங்குகின்றன (அதிகாரம் 13ல் உள்ள உவமைகளைக் காணவும்).

மத்தேயு யூத வாசகர்களுக்கு எழுதியிருக்கலாம், ஆனால் அவர் யூதர்களுக்கு மட்டுமே எழுதவில்லை. இந்த அப்போஸ்தலர், ஏவுதலினால் எல்லா மக்களுக்கும் எழுதினார். இவருடைய விவரத்தில் முதல் வசனம், இயேசு "தாவீதின் குமாரன்" என்று கூறுவதுடன், அவர் "ஆபிரகாமின் குமாரன்" என்றும் கூறிற்று. இயேசு, பூமியின் எல்லா இனங்களும் ஆசீர் வதிக்கப்படும் என்று ஆபிரகாமிடம் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமாக இருந்தார் (ஆதி. 12:3; 22:18; கலா. 3:8). மத்தேயு யூதரல்லாதவர்களை (புறஜாதிகளை)ப் பற்றி அடிக்கடி குறிப்பிட்டார் (4:14-16; 8:11, 12; 12:18, 21; 13:38; 15:22-28; 24:14). இந்தப் புத்தகத்தின்

*தொடக்கப் பகுதியில், புறஜாதியைச் சேர்ந்த முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் இயேசுவை ஆராதிக்க வந்தார்கள் (மத். 2:2-12); இதன் முடிவில் இயேசு, "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி" (28:19அ) என்று கட்டளையிட்டார். மத்தேயு சுவிசேஷம் இயேசுவை, உலகளாவிய இரட்சகராக எடுத்துரைக்கிறது.*

**இந்தப் புத்தகத்தின் பண்புகள்**

*மத்தேயு சுவிசேஷப் புத்தகத்தின் பெரும்பாலான பண்புகள் அதன் நோக்கத்திற்கு தொடர்புடையவைகளாக உள்ளன.*

*முன்னரே குறிப்பிட்டபடி, இந்த சுவிசேஷ விவரம் நிறைவேற்றப் பட்ட தீர்க்கதரிசனத்தை வலியுறுத்துகிறது. மீண்டும் மீண்டும் ஏதாவதொரு நிகழ்வு "தீர்க்கதரிசியால் [அல்லது தீர்க்கதரிசிகளால்] உரைக்கப்பட்டபடி இவ்வாறு நடந்தது" (மத். 1:22; 2:15, 17, 23; 8:17ஐக் காணவும்) என்று இது எடுத்துரைக்கிறது. சிலுவையில் அறையப்படுதல் (இது யூதர்களுக்கும் இடறுதலாக இருந்தது, 1 கொரி. 1:23) என்பது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாயிருந்தது (26:54, 56; 27:9) என்ற உண்மையை மத்தேயு விசேஷக் கருத்தாக ஏற்படுத்தினார். இவ்விதமாக இந்தப் புத்தகம், "கிறிஸ்தவம் என்பது ஒரு மதவெறிக் குழுவினரின் 'புதிய' மதக்குழுவா யிராமல், தீர்க்கதரிசிகள் யாவரும் முன்னுரைத்தவற்றின் முழுமையான நிறைவேற்றமாக இருந்தது" என்பதைத் தெளிவாக்கிற்று.*[17]

*மேலும், குறிப்பிடப்பட்டபடி, இந்தப் புத்தகமானது ஒரு பலத்த யூதப் பின்னணியைக் கொண்டுள்ளது. பழைய ஏற்பாடு மற்றும் இஸ்ரவேலின் மேசியா/ராஜா என்பவற்றின்மீதான இதன் வலியுருத்தத்துடன் கூடுதலாக, இது மத்தேயுவின் நாட்களில் இருந்த யூதத்துவத்தை அதன் மாறுபட்ட சிந்தனைத்துறைகள், பயபக்திக்கான அதன் வெளிப்படையான செயல்கள், அங்கீகாரத்தின்மீது அதன் அன்பு, மற்றும் அதன் யூத மார்க்கத்து அமைவிக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றை விரிவாகப் பிரதிபலிக்கிறது.*[18]

*இயேசுவின் ராஜத்துவம் பற்றிய மத்தேயுவின் வலியுறுத்தத்தின் காரணமாக, இவரது புத்தகத்தில் உள்ள சில விஷயங்கள் மற்ற மூன்று புத்தகங்களிலும் இடம்பெறுவதில்லை. இவர் பதிவு செய்துள்ள பதினைந்து உவமைகளில், பதினோறு உவமைகள் இவருக்கே உரியவைகளாக இருக்கின்றன. இவரது புத்தகத்தில் உள்ள அற்புதங்களில் மூன்று வேறு எவ்விடத்திலும் காணப்படுவதில்லை. எல்லாம் ஒன்றுகூட்டிக் காண்கையில், மத்தேயு சுவிசேஷத்திற்கு மட்டுமே உரித்தான முப்பது பிரிவுப் பகுதிகள் உள்ளன, இவற்றில் பெரும்பாலானவை ராஜா மற்றும் அவரது இராஜ்யம் என்ற பாடக் கருத்தைக் கொண்டுள்ளன.*

*இந்தப் புத்தகமானது இயேசுவின் போதனையின்மீது பலத்த வலியுறுத்தத்தைக் கொண்டுள்ளது. இயேசு ராஜாவாக இருக்கின்றார். என்றால், அவர் சட்டங்களை ஏற்படுத்த உரிமை கொண்டுள்ளார். ஒப்புயர்வற்ற மலைப்பிரசங்கம் உட்பட (5-7) இயேசுவின் ஐந்து மாபெரும் உரையாடல்களை மத்தேயு பதிவு செய்தார்.*[19]

*மத்தேயுவில் பதிவு செய்யப்பட்டபடி, இயேசுவின் போதனையில்*

உள்ள ஒரு தனிச் சிறந்த அம்சம் கவனிக்கப்பட வேண்டும்: நான்கு சுவிசேஷ விவரங்களிலும், இது ஒன்றுதான் "சபை" என்ற வார்த்தையைக் குறிப்பிடுகிறது (16:18; 18:17). கர்த்தருடைய சபை கூடுதல் அல்லது சபை என்பது யூதர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட விஷயமாயிருந்தது (யாத். 12:3, 6, 19, 47).[20] மற்றும், "ஜெப ஆலயம்" என்பது "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையான ekklesia என்பதற்கு ஒத்ததாக இருந்தது.[21] மேசியாவின் இராஜ்யம் பற்றிய தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவின் சபையில் நிறைவேற்றப்படும் என்று மத்தேயு கூறினார்.

இந்தப் புத்தகத்தில் தனிச்சிறப்பான, கிறிஸ்தவத்தை சார்ந்துபேசும் கூறு ஒன்றுள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டும். இயேசு சட்ட விரோதமான குழந்தையாகப் பிறந்தார் என்று யூதர்களிடையே வதந்திகள் பரவுவதைத் தடை செய்வது என்பதே கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய விவரங்களைக் கொடுத்ததற்கான ஒரு காரணமாக இருக்கலாம். வெறுமையான கல்லறைக்கு யூதர்கள் அளித்த பிரபலமான ஒரு விளக்கம் வெளியாக்கப்பட்ட இடமான மத்தேயு 28:11-15ஐக் கவனியுங்கள். மத்தேயு உண்மைகளை எடுத்து உரைத்து, பின்னர், தமது வாசகர்கள், விசுவாசத்தின் பக்கமா அல்லது அவிசுவாசத்தின் பக்கமா, எந்தப் பக்கம் இருக்கின்றார்கள் என்பதை அவர்களே முடிவு செய்யும்படி அறைகூவல் விடுத்தார்.

மற்ற சுவிசேஷ விவரங்களில் உள்ளபடி, நமது பாவங்களுக்காக இயேசு மரித்தார் என்பதே மத்தேயு புத்தகத்தின் முன்னணிக் கருத்தாக உள்ளது. இந்தப் புத்தகத்தின் மொத்தப் பாடக் கருத்துக்களில் 25 சதவிகிதமானது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை மையங்கொண்டுள்ளது.

### இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலம்

"இந்நாள் வரைக்கும்" (27:8; 28:15) என்ற சொற்றொடரை மத்தேயு பயன்படுத்துதலானது இவர் எழுதிய நிகழ்ச்சிகளுக்குப் பிறகு காலம் கடந்து சென்றிருந்ததைச் சுட்டிக்காண்பிக்கிறது. இதற்கு மறுபுறத்தில், அதிகாரம் 24ல் மிகவும் விரிவாக முன்னுரைக்கப்பட்ட எருசலேமின் அழிவுக்கு முன்பாக (கி.பி. 70) இந்தப் புத்தகம் கி.பி. 50க்கும் கி.பி. 70க்கும் இடையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். பழமைவாத எழுத்தாளர்கள் பலர், இந்தப் புத்தகம் கி.பி. 60ல் எழுதப்பட்டிருக்கும் என்று நினைக்கின்றார்கள்.

### இந்தப் புத்தகத்தின் பிரிவுகள்

மத்தேயு சுவிசேஷப் புத்தகமானது பல இயற்கையான பிரிவுகளைக் கொண்டுள்ளது. 4:17 மற்றும் 16:21 வசனங்களில் உள்ள "அதுமுதல்" என்ற வார்த்தைகளினால் மனித வரலாற்றுப் பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன. அதிகாரம் 4ன் வசனம் 17 இயேசுவின் ஊழியத்தின் தொடக்கமாக இருக்கையில், 16:21 முடிவின் தொடக்கமாக உள்ளது. இயேசுவின் மாபெரும் உரையாடல்களில் காணப்படுகிற "இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது" (7:28; 11:1; 13:53; 19:1; 26:1) என்ற வார்த்தைகளினால் தலைப்பு ரீதியான பிரிவுகள் குறிப்பிடப்படுகின்றன.

*இயல்பான இந்த பிரிக்கும் கருத்துக்களை முழுமையாகப் புரிந்து கொள்ளப்படக்கூடிய வரைக்குறிப்புக்குள் ஒன்றிணைத்தல் என்பது ஒரு அறைகூவலாக உள்ளது. பல வரைக்குறிப்புகள் பின்வரும் இரு வார்த்தைகளில் ஒன்றைப் பயன்படுத்துகின்றன: "மேசியா" அல்லது "ராஜா." டென்னீ அவர்கள் தமது பிரிவுகளில் "மேசியா" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்: (1) மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் உணர்ந்தறியப்பட்டன, (2) மேசியாவின் கொள்கைகள் அறிவிக்கப் பட்டன, மற்றும் (3) மேசியாவின் வல்லமை வெளிப்படுத்தப்பட்டது.[22] மேயர்ஸ் அவர்கள் "ராஜா" மற்றும் "இராஜ்யம்" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தினார்: (1) ராஜாவின் வருகை, (2) இராஜ்யம் பற்றிய அறிவித்தல், (3) ராஜாவைப் புறக்கணித்தல், மற்றும் (4) ராஜாவின் வெற்றி.[23] ஜான் பிலிப்ஸ் அவர்களும் தமது தலைப்புக்களில் "ராஜா"[24] என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். அவரது பிரதான பிரிவுகள் பின்வரும் வரைக்குறிப்பில் தழுவிக் கொள்ளப்பட்டுள்ளன.*

---

## மத்தேயு சுவிசேஷப் புத்தகத்தின் வரைக்குறிப்பு

I. *ராஜா வெளிப்படுத்தப்படுதல் (1:1-9:38).*
   A. *இயேசுவின் ஊழியத்திற்கான தயாரிப்பு.*
      1. *இயேசுவின் வம்ச வரலாறு (1:1-17).*
      2. *இயேசுவின் பிறப்பும் குழந்தைப் பருவமும் (1:18-2:23).*
         a. *ஞானிகள் வருதல்.*
         b. *எகிப்துக்கு ஓடிப்போகுதல்*
         c. *பிள்ளைகள் கொலை செய்யப்படுதல்.*
         d. *நாசரேத்தூருக்குத் திரும்புதல்.*
      3. *இயேசுவின் ஞானஸ்நானம் (3:1-17).*
         a. *யோவான் ஸ்நானனின் (மேசியாவின் அறிவிப்பாளர்) ஊழியம்.*
         b. *அந்த ஊழியத்தின் உச்சக்கட்டம்: இயேசுவின் ஞானஸ்நானம்.*
      4. *இயேசு சோதிக்கப்படுதல் (4:1-11).*
   B. *இயேசுவின் ஊழியத்தின் வல்லமை.*
      1. *கலிலேயாவில் அவரது ஊழியத்தின் தொடக்கம் (4:12-17; அந்த ஊழியத்தின் தொகுப்புக்கூற்றை 4:23-25; 9:35-38 ஆகியவற்றில் காணவும்).*
      2. *அவரது முதல் சீஷர்கள் (4:18-22).*
      3. *மலைப் பிரசங்கம் (5:1-7:29).*
      4. *வல்லமை நிறைந்த அற்புதங்கள் (மற்றும் பொது மக்களிடையே மதிப்பு வளருதல்; 8:1ஐக் காணவும்) -*

*மற்றும் இடையிடையே நடைபெற்ற நிகழ்ச்சிகள்.*

a. *ஒரு தொழுநோயாளி குணமாக்கப்படுதல் (8:2-4).*
b. *ஒரு நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரர் குணமாக்கப் படுதல் (8:5-13).*
c. *பேதுருவின் மாமி மற்றும் பிறர் குணமாக்கப்படுதல் (8:14-17).*
d. *சீஷராகப் போகின்றவர்கள் (8:18-22).*
e. *அலைகள் அமைதிப்படுத்தப்படுதல் (8:23-27).*
f. *அசுத்த ஆவிபிடித்த இருவர் குணமாக்கப்படுதல் (8:28-34).*
g. *திமிர்வாதக்காரர் ஒருவர் குணமாக்கப்படுதல் (9:1-8).*
h. *மத்தேயு அழைக்கப்படுதல் மற்றும் மத்தேயு விருந்தளித்தல் (9:9-13).*
i. *உபவாசம் பற்றிய ஒரு கேள்வி (9:14-17).*
j. *ஒரு வியாதிப்பட்ட பெண் குணமாக்கப்படுதலும் மரித்த ஒரு சிறுபெண் உயிரோடு எழுப்பப்படுதலும் (9:18-26).*
k. *பார்வையற்ற இரு மனிதர்கள் குணமாக்கப்படுதல் (9:27-31).*
l. *பிசாசு பிடித்த ஒரு மனிதர் குணமாக்கப்படுதல் - மற்றும் இது பிசாசுகளின் தலைவன் மூலமாகவே செய்யப் பட்டதென்று ஒரு குற்றச்சாட்டு (9:32-34).*

II. *ராஜா எதிர்த்து நிற்கப்படுதல் (10:1-16:12).*
  A. *எதிர்ப்பு முன் எதிர்பார்க்கப்படுதல்.*
    1. *விசேஷித்த ஊழியத்திற்காக பன்னிருவர் ஒதுக்கி வைக்கப் படுதல் (10:1-4).*
    2. *"இழந்துபோன ஆடுகளாகிய இஸ்ரவேல் குடும்பத்தினருக் கான" அளவிற்கு உட்பட்ட கட்டளை - அத்துடன் சீஷத்துவத்திற்கான பொதுவான சில அறிவுறுத்தல்கள் (10:5-42). (எதிர்ப்பை முன் எதிர்பார்த்தல் பற்றியது. வ. 14, 16-18, 21-25, 28, 34-36, 39 ஆகியவற்றைக் காணவும்).*
  B. *விசுவாசமும் உண்மைத்தன்மையும் புகழப்படுதல். (இந்தக் காலகட்டத்தின்போது இயேசுவின் ஊழியத்தின்மீதான ஒரு பொதுவான கூற்றுக்கு, 11:1ஐக் காணவும்.)*
    1. *யோவானின் விசாரிப்பு - மற்றும் இயேசுவின் பதில் (11:2-19).*
    2. *இயேசுவை ஏற்றுக்கொள்ளாதவர்களை அவர் கடிந்து கொள்ளுதல், மற்றும் அவரை*

*ஏற்றுக்கொண்டவர்களை அவர் புகழுதல் (11:20-27). (வ. 28-30ல் உள்ள மாபெரும் அழைப்பைக் கவனிக்கவும்.)*

C. *பகைமை தீவிரப்படுதல். (இந்தக் காலகட்டத்தின்போது, இயேசுவின் ஊழியத்தின்மீதான ஒரு பொதுவான கூற்றுக்கு, 14:34-36 மற்றும் 15:29-31ஐக் காணவும்.)*

1. *ஓய்வுநாள் பற்றிய விமர்சனம் (12:1-13).*
2. *அவரைக் கொலை செய்யத் திட்டமிடுதல் (12:14).*
3. *எதிர்ப்பைத் தவிர்க்க முயற்சி செய்தல் (12:15-21).*
4. *அவர் பிசாசுகளின் தலைவன் மூலமாகக் குணமாக்குகின்றார் என்ற குற்றச்சாட்டு மீண்டும் கூறப்படுதல் (12:22-37).*
5. *ஒரு அடையாளம் தரும்படி அவரிடம் அறைகூவல் விடப்படுதல் (12:38-45).*
6. *தேவனுக்குக் கீழ்ப்படிதல் என்பது இயேசுவுடனான உறவுக்கு ஒரு திறவுகோலாக உள்ளது (12:46-50).*
7. *இராஜ்யத்தின் உண்மை இயல்பைப் பற்றிய உவமைகள் (13:1-52).*
8. *நாசரேத்தூரில் இயேசு புறக்கணிக்கப்படுதல் (13:53-58).*
9. *யோவான் ஸ்நானனின் மரணம் (14:1-12).*
10. *ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (14:13-21).*
11. *பேதுருவின் விசுவாசம் அலைவுபடுதல் (14:22-33).*
12. *கெனேசரேத்தில் குணமாக்குதல் (14:34-36).*
13. *கைகளைக் கழுவாதிருத்தல் பற்றிய விமர்சனம் (15:1-20).*
14. *கானானியப் பெண்ணொருத்தியின் மகளும் மற்றும் சிலரும் குணமாக்கப்படுதல் (15:21-31).*
15. *நான்காயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (15:32-39).*
16. *ஒரு அடையாளம் தரும்படி இயேசுவுக்கு மீண்டும் அறைகூவல் விடப்படுதல் (16:1-4).*
17. *பரிசேயர் மற்றும் சதுசேயர் ஆகியோரின் செல்வாக்குப் பற்றிய எச்சரிக்கை (16:5-12).*

III. *ராஜா புறக்கணிக்கப்படுதல் (16:13-27:66).*

A. *இயேசுவின் மரணம் முன்னுரைக்கப்படுதல்.*

1. *நல்ல அறிக்கை - மற்றும் இயேசுவின் மரணம் பற்றிய அவரது முன்னுரைத்தல் (16:13-28).*
2. *மறுரூபமாகுதல் - மற்றும் இயேசுவின் மரணம் பற்றிய முன்னுரைத்தல் (17:1-13).*
3. *பிசாசு பிடித்திருந்த ஒரு பையனைக் குணமாக்குதல் - மற்றும் இயேசுவுக்கு வரவிருந்த மரணம் பற்றிய அதிகமான செய்திகள் (17:14-23).*

B. *தேவைப்பட்ட அறிவுறுத்தல்கள் முன் எதிர்பார்க்கப்படுதல்.*
   1. *வரிசெலுத்துதல் பற்றிய ஒரு கேள்வி (மற்றும் மீனுக்குள் நாணயம் என்ற அற்புதம்) (17:24-27).*
   2. *பிள்ளைகள் மற்றும் தாழ்மை பற்றிய அறிவுறுத்தல் (18:1-14; 19:13-15ஐயும் காணவும்).*
   3. *உறவுமுறைகள் பற்றிய அறிவுறுத்தல் (18:15-20).*
   4. *மன்னிப்பு பற்றிய அறிவுறுத்தல் (18:21-35).*
   5. *விவாகரத்துப் பற்றிய ஒரு கேள்வி (19:1-12).*

C. *எருசலேமை நெருங்குதல் (19:1, 2ஐக் காணவும்).*
   1. *செல்வந்தராயிருந்த ஒரு வாலிப அதிகாரி - மற்றும் இயேசுவைப் பின்பற்றுவதால் கிடைக்கும் பலன்கள் (19:16-30).*
   2. *திராட்சத் தோட்டத்தில் வேலைக்காரர்களின் உவமை - மற்றும் இயேசுவின் மரணம் பற்றிய இன்னுமொரு முன்னுரைத்தல் (20:1-19).*
   3. *ஊழியக்காரராக இருக்க வேண்டியதின் அவசியம் - மற்றும் பிறருக்காக மரிப்பதற்கு இயேசுவின் விருப்பம் (20:20-28).*
   4. *பார்வையற்ற இரு மனிதர்கள் எரிகோவில் குணமாக்கப் படுதல் (20:29-34).*

D. *கடைசி வாரம் தொடங்குதல்.*
   1. *எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசம் மற்றும் தேவாலயத்தைச் சுத்திகரித்தல், அதைத் தொடர்ந்து இயேசுவின் விரோதிகளால் விமர்சிக்கப்படுதல் (21:1-17).*
   2. *காய்க்காத அத்திமரத்தைச் சபித்தல் (21:18-22).*
   3. *கேள்விகளின் நாள் (செவ்வாய்க்கிழமை):*
      a. *இயேசுவின் செயல்களுக்கான அதிகாரம் பற்றிய கேள்வி (21:23-27).*
      b. *பிரதான ஆசாரியர்களையும் பரிசேயர்களையும் சுட்டிக் காட்டிய உவமைகள் (21:28-22:14).*
      c. *இராயனுக்கு வரிசெலுத்துதல் பற்றிய கேள்வி (22:15-22).*
      d. *உயிர்த்தெழுதல் பற்றிய கேள்வி (22:23-33).*
      e. *பிரதானமான கற்பனை பற்றிய கேள்வி (22:34-40).*
      f. *இயேசுவின் விரோதிகள் ஒரு கேள்வியினால் வாயடைக்கப்படுதல் (22:41-46).*
      g. *வேதபாரகர், பரிசேயர் (மற்றும் எருசலேம்) மீதும் சாபங்கள் அறிவிக்கப்படுதல் (23:1-39).*
      h. *எருசலேமின் அழிவு மற்றும் இரண்டாம் வருகை ஆகியவற்றைப் பற்றிய போதனை.*

(1) ஒரு வெளிப்படையான செய்தி (24:1-51).
(2) பத்து கன்னிகைகளின் உவமை (25:1-13).
(3) தாலந்துகளின் உவமை (25:14-30).
(4) இரண்டாம் வருகை மற்றும் நியாயத்தீர்ப்பு பற்றிய போதனை (25:31-46).

E. முடிவு துரிதப்படுதல்.
1. இயேசுவின் மரணம் பற்றிய இன்னொரு முன்னு ரைத்தல் (26:1, 2).
2. இயேசுவைக் கொல்வதற்கான சதித் திட்டம் வலுப்பெறுதல் (26:3-5).
3. இயேசு பெத்தானியில் (அவரது மரணத்தின் முன் எதிர்பார்ப்பாக) அபிஷேகிக்கப்படுதல் (26:6-13).
4. இயேசுவின் விரோதிகளுடன் (யூதாஸ்) சூழ்ச்சி செய்தல் (26:14-16).

F. பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்படுதல்.
1. பஸ்கா பண்டிகைக்கான ஆயத்தம் (26:17-20).
2. யூதாஸ் காட்டிக் கொடுப்பது முன்னுரைக்கப்படுதல் (26:21-25).
3. கர்த்தருடைய பந்தி ஏற்படுத்தப்படுதல் (26:26-29).
4. சீஷர்கள் கைவிடுதலும் பேதுருவின் மறுதலிப்பும் முன்னுரைக்கப்படுதல் (26:30-35).
5. கெத்செமனே தோட்டத்திற்குள் (26:36-46).
6. இயேசு காட்டிக் கொடுக்கப்படுதலும் கைது செய்யப்படுதலும் (26:47-56).

G. இயேசுவின் விசாரணைகள் சகிக்கப்படுதல்.
1. காய்பாவுக்கு முன்பாக (மற்றும் பேதுருவின் மறுதலிப்பு) (26:57-75).
2. பிலாத்துவுக்கு முன்பாக (மற்றும் யூதாஸின் தற்கொலை) (27:1-26).

H. இயேசுவின் மரணமும் அடக்கமும் விவரிக்கப்படுதல்.
1. இயேசு அடிக்கப்பட்டு கொல்கொதாவுக்குக் கொண்டு செல்லப்படுதல் (27:27-32).
2. இயேசு சிலுவையில் அறையப்படுதலும் அவரது மரணமும் (27:33-54).
3. இயேசுவின் அடக்கம் - மற்றும் கல்லறை “பாதுகாக்கப் படுதல்” (27:55-66).

IV. ராஜா உயிர்த்தெழுந்தார் (28:1-20)!

A. உயிர்த்தெழுதலின் அறிவிப்பும் பெண்களுக்கு இயேசு தரிசனமாகுதலும் (28:1-10).
B. வெறுமையான கல்லறைக்கான பொய்யான “விளக்கம்” (28:11-15).

C. *இயேசு தமது சீஷர்களுக்குத் தரிசனமாகுதல் - மற்றும் பிரதான கட்டளை (28:16-20).*[25]

---

*குறிப்புகள்*

[1]*ஆயினும், அந்தப் புத்தகம் இந்தத் தலைப்பின்றி எப்பொழுதாவது சுற்றுக்கு விடப்பட்டது என்பதற்கு நேர்மறையான ஆதாரம் எதுவும் இல்லை.* [2]Eusebius *Ecclesiastical History* 3.34.16; Irenaeus *Against Heresies* 3.1.1. [3]*மத்தேயு ஒரு யூதராயிருந்தார்; வரிவசூலிக்கும் அலுவலகத்தில் பணியாற்றிய வர் என்ற வகையில் (மத். 9:9), இவர் அறிக்கைகளை எழுதுவதில் பழக்கமானவராக இருந்திருப்பார்.* [4]*சிலர், இவரது பிறப்புப் பெயர் லேவி என்றும், இயேசு சீமோனுக்குப் "பேதுரு" என்று பெயர் கொடுத்தவாறே இவருக்கு "மத்தேயு" என்ற பெயரைக் கொடுத்தார் என்றும் நினைக்கின்றார்கள்.* [5]*வரிவசூலிப்பவருக்கு* KJV *மற்றும் தமிழ் வேதாகமங்களில்* "publican" *அதாவது, "ஆயக்காரன்" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.* [6]Eusebius *Ecclesiastical History* 4.24.6. [7]Merrill C. Tenney, *New Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 142. [8]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary Series, ed. Everett Ferguson (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 9. [9]*பழைய ஏற்பாட்டுக் குறிப்புரைகளின் எண்ணிக்கை எழுத்தாளருக்கு எழுத்தாளர் மாறுபடுகிறது, ஆனால் மத்தேயு சுவிசேஷத்தில் மிக ஏராளமான பழைய ஏற்பாட்டுக் குறிப்புரைகள் உள்ளன என்று எல்லாரும் ஒப்புக் கொள்ளுகின்றார்கள்.* [10]Henrietta C. Mears, *What the Bible Is All About* (Glendale, Calif.: Gospel Light Publications, 1966), 355.

[11]*1 இராஜாக்கள் 19:16 வசனம், தீர்க்கதரிசிகள் அபிஷேகம் பண்ணப்பட்டதைச் சுட்டிக் காண்பிக்கலாம்.* [12]*இந்த யோவானை* "Baptist" *("ஸ்நானன்") என்றே பல மொழிபெயர்ப்புகள் குறிப்பிடுகின்றன. "ஸ்நானன்" என்ற வார்த்தை வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த நாட்களில் இருந்ததில் இருந்து மாறுபட்ட சொல்லர்த்தம் ஒன்றை இன்றைய நாட்களில் கொண்டுள்ளது.* (Baptist) *"ஸ்நானன்" என்பது, "ஞானஸ்நானம் கொடுக்கின்ற ஒருவர்" என்று நேரடியான அர்த்தம் தருகிற கிரேக்க வார்த்தை யிலிருந்து ஒலி பெயர்க்கப்பட்டுள்ளது.* The Revised Standard Version\the New Revised Standard Version *ஆகிய மொழிபெயர்ப்புகள், The New Testament in the Language of Today என்ற புத்தகத்தில் வில்லியம் எஃப். பெக் அவர்கள் செய்கின்றது போலவே, "ஸ்நானன்"* (Baptizer) *என்றே மொழிபெயர்க்கின்றன. இது* J. B. *ரோத்தர் ஹாம் அவர்களின் The Emphasized New Testament: A New Translation என்ற புத்தகத்தில்,* "Immerser" *(முழுக்காட்டுபவர்) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்தொடரில் நான், யோவானை* "the Baptizer" *(ஸ்நானன்) என்றே குறிப்பிடுவேன்.* [13]Eric W. Hayden, *Preaching Through the Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1964), 180. [14]Glen Gray and Tim Woodroof, *Look at the Book* (Lincoln, Neb.: Lincoln church of Christ, 1988), 169. [15]*சில எழுத்தாளர்கள், மத்தயு சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் இராஜ்யம் பற்றிய குறிப்புகள் ஒரு நூறு எண்ணிக்கைக்கு நெருங்கிய அளவில் இருப்பதாகக் கண்டறிந்துள்ளார்கள்.* [16]*சுவிசேஷ எழுத்தாளர்களில் மத்தேயு மாத்திரமே "பரலோக இராஜ்யம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்.* [17]Gray and Woodroof, 169. [18]*நமது [பிந்திய] பாடங்களில் நாம் இவைகளைக் கலந்துரையாடுவோம். யூதர்களின்மீது மத்தேயுவின் எதிர்மறை வலியுறுத்துதல்களையும் நாம் கவனிக்க முடியும். இயேசு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜாவாயிருந்தார், ஆனால் அவர்*

*யூதர்கள் எதிர்பார்த்த வகையிலான ராஜாவாயிருக்கவில்லை, எனவே அவர்கள் அவரை புறக்கணித்து விட்டார்கள். இதன் விளைவாக மத்தேயு, யூதர்களுக்கு எதிராகப் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிற மிகவும் கடுமையான கூற்றுக்களைப் பதிவு செய்தார் (மத். 23ஐக் காணவும்).* [19]*பின்வரும் அதிகாரங்களில் ஐந்து மாபெரும் உரையாடல்கள் காணப் படுகின்றன: (1) 5-7; (2) 10; (3) 13; (4) 18; (5) 24; 25.* [20]*நீங்கள் ''சபை''* (congregation) *என்ற வார்த்தையை ஒரு ஒத்த வாக்கிய அட்டவணைப் புத்தகத்தில் காண விரும்பலாம்.*

[21]*"ஜெப ஆலயம்"* (synagogue) *என்பது "ஒன்றுகூடி வழிநடத்துதல்" என்று அர்த்தம் தருகிற கிரேக்கக் கூட்டு வார்த்தை ஒன்றின் ஒலிபெயர்ப்பாக உள்ளது, அதே வேளையில்* ekklesia *என்றால் "வெளியே அழைக்கப்பட்டவர்கள்" என்று அர்த்தப்படுகிறது (வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இவர்கள் ஒன்றுகூட அழைக்கப்பட்டவர்கள்).* [22]Tenney, 145. [23]Mears, 358-69. [24]John Phillips, *Exploring the Scriptures* (London: Victory Press, 1965), 194-95. [25]*மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய புத்தகங்களின் மீதான பாடங்களுக்கு அவற்றில் இயல்பின் காரணமாக நான் வழக்கமான "முடிவுரையை" தருவதில்லை. நீங்கள் ஒவ்வொரு முறையும் வரைக்குறிப்பை முன்னிறுத்திய பின்பு, நீங்கள் இந்தப் புத்தகத்தைச் சுருக்கமாக மறுகண்ணோட்டமிடவும் பின்பு அடுத்த பாடத்திற்கான பாடக்கருத்தை அறிவிக்கவும் விரும்பலாம்.*

# ३

# மாற்கு சுவிசேஷம்

## சேவகராகிய கிறிஸ்து

*சுவிசேஷ விவரங்களில் இரண்டாவதாக உள்ளதான மாற்கு சுவிசேஷம் என்பது, ஒருவேளை மிகவும் குறைவாக வாசிக்கப்படுவதாகவும் மற்றும் இவை நான்கிலும் மிகவும் குறைவாக பாராட்டப்படுவதாகவும் இருக்கலாம். ஆயினும் இது கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய வல்லமை நிறைந்த எடுத்துரைப்பாக உள்ளது.*

## மாற்கு சுவிசேஷத்திற்கு அறிமுகம்

**இந்தப் புத்தகத்தின் எழுத்தாளர்**

*மாற்கு சுவிசேஷப் புத்தகத்தில் இதன் எழுத்தாளரின் பெயர் குறிப்பிடப்படுவதில்லை, ஆனால் (ஏவுதல் பெற்றிராத) பழங்காலப் பாரம்பரிய வரலாறு, இந்தப் புத்தகம் யோவான் மாற்குவினால் எழுதப்பட்டதென்று குறிப்பிடுகிறது. சபை வரலாற்றாளரான ஈசூபியஸ் (c. கி.பி. 260-340) அவர்கள், மாற்குதான் இப்புத்தகத்தை எழுதினார் என்று குறிப்பிட்ட பாப்பியஸ் (c. கி.பி. 60-150) என்பவரை மேற்கோள் காண்பித்தார். மேலும் அலெக்சந்திரியாவின் கிளமென்ட் அவர்களும் ஓரிகன் என்பவரும் (c. கி.பி. 185-254). மாற்குதான் இந்தப் புத்தகத்தை எழுதினார் என்று நம்பியதாகவும் ஈசூபியஸ் அவர்கள் குறிப்பிட்டார்.[1] இந்தப் பாரம்பரியக் கூற்றை இரேனியுஸ் அவர்கள் (c. கி.பி. 140-195) தமது எழுத்துக்களில் ஆதரித்தார்.[2]*

*யோவான் (“யெகோவா கிருபைமிக்கவராக இருந்துள்ளார்”) என்பதே யோவான் மாற்குவின் எபிரெயப் பெயராக இருந்தது, ஆனால் நாம் அவரது ரோமப் பெயரான மாற்குஸ் (“யுத்தம் விரும்பி”) என்பதைக் கொண்டே நன்கு அறிகின்றோம். இவர் அநேகமாக, எருசலேமில் தமது தாயான மரியாளின் வீட்டில் வாழ்ந்திருக்க வேண்டும் (அப். 12:12). கிறிஸ்துவின் வாழ்வில், எருசலேமில் நடந்த சில நிகழ்ச்சிகளை இவர் கண்ணால் கண்ட சாட்சியாக இருந்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. மாற்கு 14:51, 52ல் யோவான் மாற்கு, தம்மையே குறிப்பிட்டுக் கொள்ளுகின்றார் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றார்கள். மாற்கு, பேதுருவின் பிரசங்கத்தினால் மனம் மாற்றப்பட்டார் என்பது தெளிவு (1 பேது. 5:13). பிற்பாடு, இவரது தாயாரின் வீடு கிறிஸ்தவர்கள் கூடிவரும் ஒரு இடம் ஆயிற்று (அப். 12:12).[3]*

*மாற்குவை பர்னபாவின் இனத்தாராக கொலோசெயர் 4:10 அடையாளப்படுத்துகிறது. இவர் இளைஞராயிருந்தபோது, பவுலுடனும்*

*பர்னபாவுடனும் ஊழியப் பயணத்திற்குப் புறப்பட்டுச் சென்றார், ஆனால் பயணம் முடியும் முன்பாகவே இவர் அதை விட்டுச் சென்றார் (அப். 12:25; 13:5, 13), இது பவுலை மிகவும் அதிருப்தியடைச் செய்தது (அப். 15:37-39). பர்னபாவோ, மாற்குவின் திறமைமீது இன்னமும் நம்பிக்கை கொண்டவ ராக இவரை, சீப்புருத் தீவுக்குப் பிரசங்கப் பயணமாக அழைத்துச் சென்றார் (அப். 15:39). பிற்பாடு மாற்கு, சுவிசேஷத்தைப் பரப்புவதில் பேதுருவுடன் இணைந்து உழைத்தார் (1 பேது. 5:13). கடைசியில் மாற்கு பவுலுடன் ஊழியம் செய்தார் மற்றும் அந்த அப்போஸ்தலர் இவரை ஒரு மதிப்புமிக்க உடைமையாக எண்ணினார் (கொலோ. 4:10, 11; பிலே. 24; 2 தீமோ. 4:11).*

*இயேசு மற்றும் பெரும்பாலான அப்போஸ்தலர்கள்[4] ஆகியோரை விடப் பொதுவாக இளையவராகக் கருதப்படும் மாற்கு சுமார் பத்து வயதுகள் இளையவராய் இருந்திருப்பார் என்று சிலரால் மதிப்பிடப் படுகின்றார். இவர், தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகியோருடன் அப்போஸ் தலர்களின் காலத்தில் ஒரு "இளைய பிரசங்கியாராக" கருதப்பட்டிருப்பார். இவர் எகிப்து நாட்டின் அலெக்சந்திரியா நகரில் சபை ஒன்றைத் தோற்றுவித்தலாக ஏவுதல் பெற்றிராத பாரம்பரிய வரலாறு கூறுகிறது.*

*பவுல் உட்பட ஏவுதல் பெற்ற பல மனிதர்களிடம் இருந்து கற்றறியக் கூடிய வாய்ப்பை மாற்கு கொண்டிருந்தார். ஆயினும், பழங்கால (ஏவுதல் பெற்றிராத) பாரம்பரியமானது பேதுருவுடன் இவருக்கு இருந்த உறவைப் பற்றி மட்டுமே வெகுவாக வலியுறுத்துகிறது. மாற்கு சுவிசேஷத்தை யோவான் மாற்கு எழுதியதாகக் குறிப்பிடுகிற அதை ஆதாரமூலமானது, இவரது இந்த விவரம் பேதுருவிடம் இருந்து வந்ததாக வலியுறுத்துகிறது. எடுத்துக்காட்டாக, மாற்குவை "பேதுருவின் மொழிபெயர்ப்பாளர்" என்று பாப்பியஸ் என்பவர் குறிப்பிட்டார். அவர் பின்வருமாறு கூறினார்:*

> *... இவர் பதிவுசெய்தது எதுவாக இருப்பினும், இவர் மிகவும் சரியாக அவற்றை எழுதினார், ஆயினும் இவர் நமது கர்த்தரை கேட்டதோ அல்லது பின்பற்றியதோ இல்லை என்ற காரணத்தினால், அவற்றை நமது கர்த்தர் பேசிய அல்லது செய்த வரிசைமுறைப்படி இவர் பதிவு செய்யவில்லை, ஆனால் ... இவர் பேதுருவுடன் இணைந்திருந்தார், அவரே இவருக்குத் தேவையான அறிவுறுத்துதல்களைக் கொடுத்தார், ஆனால் நமது கர்த்தருடைய உரைகளின் வரலாற்றை கொடுக்க வில்லை; எனவே மாற்கு சிலவற்றைத் தாம் பதிவு செய்தபடி எழுதியதில் தவறு எதுவும் செய்யவில்லை; ஏனெனில் இவர் ஒரு விஷயத்தை மிகவும் எச்சரிக்கையாகக் கவனித்தார், தாம் கேட்ட எதையும் கடந்து செல்லாமலும் அல்லது இந்த விவரங்களில் எதையாவது தவறாகக் குறிப்பிடாமலும் இருந்தார்.[5]*

*பேதுருவின் உரையைக் கேட்டவர்கள், பேதுரு வாய்மொழியாக உரையாற்றியிருந்து உபதேசத்தின் பதிவு ஒன்றை வைத்துச் செல்லும்படி மாற்குவை வற்புறுத்தினார்கள் என்றும் இந்த விரமானது சபைகளில் வாசிக்கப்படுவதைப் பேதுரு அங்கீகரித்தார் என்றும் அலெக்சந்திரியா நகரத்து கிளமென்ட் அவர்கள் கூறினார்.[6] இரேனியுஸ் அவர்கள்,*

*"பேதுருவால் பிரசங்கிக்கப்பட்டவற்றை பேதுரு மற்றும் பவுல் ஆகியோரின் இறப்பிற்குப் பின்பு மாற்கு எழுதியதின் மூலம் நமக்குக் கொடுத்தார்" என்று எழுதினார்.*[7]

*இந்தப் பழங்காலப் பாரம்பரியத்தை, பல உண்மைகள் உறுதிப்படுத்து வதாகக் காணப்படுகிறது: அப். 10:36-42ல் பேதுருவின் பிரசங்கமானது மாற்கு சுவிசேஷத்திற்கு ஒரு வரைக்குறிப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடும். பேதுருவைக் குறிப்பிடுகின்ற வசனமான மாற்கு 16:7ல் உள்ள வார்த்தைகளை எழுதிய ஒரே சுவிசேஷ எழுத்தாளராக மாற்கு இருக்கின் றார். இந்தப் புத்தகத்தின் பாணியானது, கண்ணால் கண்ட சாட்சியின் வாய்மொழி சாட்சியைப் போன்றதாக உள்ளது. (மாற்கு சுவிசேஷமானது "ஒரு பேச்சாளரின் கரடுமுரடான கிரேக்க மொழியுரையை" கொண்டிருப் பதாகச் சில எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.)*

**இந்தப் புத்தகத்தின நோக்கம்**

*ரோமாபுரி மக்கள் கூட்டத்தாருக்காக மாற்கு இதை எழுதினார் என்று பெரும்பான்மையானோர் நம்புகின்றார்கள்.*[8] *வம்சா வழி வரலாறு உட்பட, அப்படிப்பட்ட ஒரு கூட்டத்தாருக்கு ஆர்வமற்ற விஷயங்களை இவர் நீக்கி விட்டார். இவர் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களைப் பற்றி ஒரு சிறிதே கூறினார். இவர் கிறிஸ்துவின் வாழ்வில் யூதப் பின்னணியெதையும் வலியுறுத்தவில்லை. யூத வார்த்தைகளையோ அல்லது வழக்கங்களையோ அறிமுகப்படுத்தியபோது, இவர் அவற்றை வழக்கமாக விளக்கப் படுத்தினார். மற்ற சுவிசேஷ எழுத்தாளர்கள் கிரேக்க மொழியைப் பயன்படுத்திய இடங்களில் இவர் இலத்தீன் சொற்றொடர்களைப் பயன்படுத்தினார் (உதாரணத்திற்கு,* "basket" *என்பதற்கு modius* [*மாற். 4:21*], "poll tax" *என்பதற்கு census* [*12:14*], "executioner" *என்பதற்கு Speculator* [*6:27*], *மற்றும்* "centurion" *என்பதற்கு centurio* [*15:39, 44, 45*]*). சுவிசேஷ எழுத்தாளர்களில் இவர் ஒருவர் மாத்திரமே ரூபஸ் பற்றிக் குறிப்பிட்டார் (15:21), இந்த ரூபஸ் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு அறிமுகமானவராக இருந்தார் (ரோமர் 16:13). "மாற்கு*[*வின் புத்தகமானது*] *நடைமுறையில் ரோ மனநிலை கொண்டுள்ள, சுவிசேஷம் அறிவிக்கப் படாத சாதாரண மனிதருக்கு* [*சுவிசேஷத்தை அறிவிக்கும்*] *நோக்கம் கொண்டுள்ளது" என்று மெரில் டென்னீ அவர்கள் முடிவு செய்தார்.*[9]

*இப்படிப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்திற்கு ஏற்புடையதாக இருப்ப தற்கு, மாற்கு இயேசுவை செயல்பாட்டின் மனிதராக முன்னிறுத்தினார். இந்தப் புத்தகம் சிறியதாகவும் சுருக்கமாகவும், நான்கு சுவிசேஷ புத்தகங்களில் மிகவும் சிறியதாகவும் உள்ளது. போதனைகள் கொஞ்சமே பதிவு செய்யப்பட்டுள்ளன: விரித்துரைக்கப்பட்டவைகளாக நான்கு உவமைகள் மட்டுமே உள்ளன, விரிவான உரையாடல்கள் எதுவுமே இல்லை. மாற்கு, இயேசுவின் அற்புதங்களை வலியுறுத்தினார், இவை மனிதரின் தேவைகளைச் சந்தித்தன: இதன் அளவை ஆழ்ந்து சிந்திக்கையில், இந்த விவரமானது வேறு எந்த சுவிசேஷ விவரத்தைக் காட்டிலும் அதிகமாக அற்புதங்களுக்கு இடம் அளிக்கிறது.*

*மாற்குவின் புத்தகம் இயங்குகின்றதாக உள்ளது. இதன் பதினாறில் பதிமூன்று அதிகாரங்கள், [ஆங்கில மொழியில்] "and" என்ற வார்த்தையுடன் தொடங்குகின்றன. இந்தப் புத்தகத்தின் ஆசிரியருக்கு [மாற்குவுக்கு] பிரியமான கிரேக்க வார்த்தையாக இருந்தது euthus (அல்லது eutheos) என்பதாகும், இது "நேராக," "உடனடியாக," "நேரடியாக," அல்லது "உடனே" என்று மொழிபெயர்க்கப்பட்டது. மாற்கு இந்த வார்த்தையை நாற்பத்து இரண்டு முறைகள் பயன்படுத்தினார். இயேசு எப்போதும் அதிகரிக்கும் வேகத்துடன் தமது ஊழியத்தின் நிறைவேற்றத்தை நோக்கி முன்னதாக நகருகின்றவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார்.*

*மாற்கு 10:45 வசனம் இந்தப் புத்தகத்தின் திறவுகோலாக உள்ளது: "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்." "ஊழியங்கொள்ளுதல்" மற்றும் "ஊழியஞ் செய்தல்" என்ற வார்த்தைகளுக்குச் சிறப்புக் கவனம் கொடுங்கள். மத்தேயுவின் புத்தகத்தில் இயேசு ஒரு ராஜாவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார்; ஆனால் மாற்குவின் புத்தகத்தில் இயேசு ஒரு சேவகராக இருப்பதாகக் காண்பிக்கப் பட்டுள்ளார். மாற்கு, இயேசுவுக்குத் தெய்வீக இயற்பெயர் எதையும் பயன்படுத்தவில்லை, மற்றும் அதிகாரத்துவம் இங்கு வலியுறுத்தப்பட வில்லை.[10] இயேசு ஊழியம் செய்தார்.[11]*

*ஏவுதல் பெற்ற இந்த விவரத்தின் நோக்கமானது மற்ற எல்லா சுவிசேஷங்களின் நோக்கத்தைப் போன்றதாகவே உள்ளது: இயேசுவை தேவனுடைய குமாரனாகவும் நமது இரட்சகராகவும் காண்பித்தல். இந்தப் புத்தகம், "தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்" (மாற். 1:1) என்று தொடங்குகிறது. நான்கு சுவிசேஷ விவரங்களிலும் சேர்த்து, "சுவிசேஷம்" என்ற வார்த்தையானது பன்னிரெண்டு முறைகள் வருகிறது; இந்தப் பன்னிரெண்டில் எட்டு முறைகள் மாற்கு சுவிசேஷத்தில் உள்ளன. மாற்கு சுவிசேஷமானது அணுகு முறையில் மட்டுமே மற்ற சுவிசேஷப் புத்தகங்களில் இருந்து மாறுபடுகிறது: இவர் இயேசுவைப் பற்றி ஒரு சுருக்கமான சித்தரத்தை வரைந்து விட்டு, பின்பு அந்தச் சித்திரமே தனக்காகப் பேசும்படிக்கு விட்டுவிட்டார்.*

### இந்தப் புத்தகத்தின் பண்புகள்

*இந்தப் புத்தகத்தின் பண்பு, சாத்தியக்கூறுள்ள இதன் ஆதார மூலத்திற்கும் (பேதுருவுக்கும்) மற்றும் இதன் நோக்கத்திற்கும் (இயேசுவை ஒரு சேவகராக எடுத்துரைத்தல்) அதிகம் உறவுபடுவதாக உள்ளது.*

*ஏற்கனவே குறிப்பிட்டபடி, மாற்கு சுவிசேஷம் செயல்பாட்டின் சுவிசேஷமாக உள்ளது.*

*மேலும், மாற்கு சுவிசேஷம் உணர்வின் சுவிசேஷமாக உள்ளது. இந்தப் புத்தகம், இயேசுவைக் கண்டு கேட்டவர்களின் உணர்வுகளையும் பதில்செயல்களையும் பதிவு செய்கிறது: "எல்லாரும் ஆச்சரியப்பட்டு" (1:27); "அவர்கள் இருதயங்களில் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்" (2:7); "அவர்கள் மிகவும் பயந்து" (4:41); "அவர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள்"*

*(6:14-16); "அவர்கள் மேன்மேலும் ஆச்சரியப்பட்டார்கள்" (7:37); "அவர்கள் எரிச்சலானார்கள்" (14:1). இப்படிப்பட்ட இருபத்து மூன்று பதில்செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் புத்தகம் இயேசுவின் உணர்வுகளையும் பதிவு செய்கிறது: அவர் "மனதுருகி" (1:41; 6:34; 8:2); அவர் கோபமடைந்தார் (3:5); அவர் "விசனமடைந்தார்" (10:14); அவர் பெருமூச்சு விட்டார் (7:34; 8:12); அவர் "திகிலடையவும் மிகவும் வியாகுலப்படவும் தொடங்கினார்" (14:33, 34).*

*மாற்கு சுவிசேஷம் அக்கறையின் சுவிசேஷமாகவும் இருக்கிறது. இயேசு, மக்களின் மகிழ்ச்சி, பசி, துன்பங்கள், ஆரோக்கியம் மற்றும் மாய்மாலம் ஆகியவை பற்றி அக்கறை உள்ளவராயிருந்தார்.*

*இத்துடன் கூடுதலாக, மாற்குவின் சுவிசேஷமானது ஊழியத்தின் சுவிசேஷமாக உள்ளது. இயேசு அந்நியருக்கு உதவி செய்தார், ஊமைகளை விடுவித்தார், பெரும்பசியுற்றோருக்கு உணவளித்தார் மற்றும் அடிப்படைவாதிகளைக் கடிந்து கொண்டார்.*

*மற்ற சுவிசேஷ விவரங்களைப் போலவே, மாற்கு சுவிசேஷமும் சிலுவையின் சுவிசேஷமாக உள்ளது சிலுவையில் கிறிஸ்துவின் மரணம் என்பதே அவரது மாபெரும் ஊழியமாக உள்ளது. மாற்கு சுவிசேஷத்தின் நாற்பது சதவிகிதப் பகுதியானது, எருசலேமுக்குக் கடைசிப் பயணத்தையும் அதைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளையும் எடுத்துரைக்கிறது. இந்த நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடுத்துள்ள வகையில் மாற்கு சுவிசேஷம் யோவான் சுவிசேஷத்திற்கு இரண்டாம் இடத்தில் நிற்கிறது.*

*கடைசியாக, மாற்கு சுவிசேஷம் விரித்துரைக்கும் தன்மையின் சுவிசேஷமாக உள்ளது. இந்தப் புத்தகமானது இயேசுவின் தனிப்பட்ட உடல் அமைவுகளைக் கூட அறிக்கையிடுகிறது. இதன் பாணி புத்தம் புதியதாகவும் இயங்குவதாகவும் உள்ளது. சிலர் இதை "தெருப் பிரசங்கியாரின் பாணி" என்றும் அழைத்துள்ளார்கள்.*

**இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலம்**

*மாற்கு சுவிசேஷம் முதல் நூற்றாண்டின் இரண்டாம் பாதியின் முற்பகுதியில் எழுதப்பட்டது என்பது தெளிவு. அலெக்சந்தரும் ரூப்புவும் மாற்குவின் வாசகர்களுக்கு நன்கு பழக்கமானவர்களாய் இருந்த காரணத்தினால்தான் அவர்களைப் பற்றி அவர் குறிப்பிட்டார் (மாற். 15:21). இது இந்தப் புத்தகத்தை சிலுவையிலிருந்து ஒரு தலைமுறைக்குள்ளாக ன்எழுதப்பட்டதாகதி வைக்கும். பாரம்பரியமானது இப்புத்தகத்தைப் பேதுருவுடன் தொடர்புபடுத்திற்று என்று நான் முன்பே குறிப்பிட்டு இருந்தேன். பழங்கால எழுத்தாளர்கள் பலர், மாற்குவின் சுவிசேஷம் சுற்றுக்கு விடப்படும் முன்பு அதைப் பேதுரு சரி பார்த்தார் என்று கருத்துத் தெரிவித்தார்கள். பேதுருவின் மரணம் கி.பி. 65க்கும் 68க்கும் இடையில் நிகழ்ந்திருக்கலாம் என்று நினைக்கப்படுகிறது.[12]*

*மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷங்கள் மாற்குவின் சுவிசேஷத்தைப் பார்த்து எழுதப்பட்டன என்று இன்றைய நாட்களில் பலர் நம்புகின்றார்கள், ஆனால் மிகத் தொடக்க கால (ஏவுதல் பெற்றிராத) பாரம்பரியங்கள்*

*மத்தேயு சுவிசேஷத்தையே முதலிடத்தில் வைக்கின்றன. டென்னீயின் விளக்கம் இங்கு கருத்திற்குரியதாக உள்ளது:*

> *இந்த சுவிசேஷங்கள் என்பவை பரிசுத்த ஆவியானவரால் ஏவப் பட்டதினால் எழுதப்பட்ட கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலிக்க செய்தியினுடைய மூன்று எடுத்துரைப்புகளாய் இருக்கின்றன என்றால் [அவை இவ்வாறே இருக்கின்றன] ... இவை அப்போஸ்தலர்களும் அவர்களின் துணையாளர்களும் பிரசங்கித்த வற்றிலிருந்து எடுக்கப்பட்டவைகளா இருந்தன என்றால், இவை யாவும் ஒரே காலகட்டத்தில் உண்டாக்கப்பட்டிருப்பதற்குச் சாத்தியக் கூறு உள்ளது.*[13]

*மாற்கு சுவிசேஷம் எழுதப்பட்ட காலம் என்று யூகித்துக் கொடுக்கப் பட்டவைகளில் பின்வரும் மூன்று காலங்களும் அடங்கியுள்ளன: கி.பி. 50-60, 58-65 மற்றும் 60-70. இந்தப் புத்தகம் கி.பி. 70க்கு முன்பாகவே எழுதப்பட்டது என்று கூறுவது நமக்குப் பாதுகாப்பானதாக இருக்கும்.*

***இந்தப் புத்தகத்தின் பிரிவுகள்***

*மாற்கு சுவிசேஷப் புத்தகம் வரைக் குறிப்பிடுவதற்குச் சுலபமான புத்தகம் அல்ல. மாற்கு, சிந்தனையில் இறையியல் வரிசைக் கிரமம் எதையும் பின்பற்றவில்லை. இவரது விவரமானது ஒரு முற்றான வகையில் முழுமையான செயல்தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.*

*இந்தப் புத்தகத்தைப் புறக்குறிப்பிடுவதற்கு மாறுபட்ட பல அணுகு முறைகள் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளன: ஜான் பிலிப்ஸ் அவர்கள் தமது பிரிவுகளுக்கு, மாற்கு 10:45ன் திறவுகோல் சிந்தனைகளை பயன்படுத்தினார்: (1) சேவகர் தமது வாழ்வை ஊழியத்தில் அளிக்கின்றார் (அதி. 1-10); (2) சேவகர் தமது வாழ்வைப் பலியாக அளிக்கின்றார் (அதி. 11-16).*[14] *ஹென்ரிட்டா மெயர்ஸ் அவர்கள் அந்தக் கருத்தை விரிவாக்கி, "சேவகர்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி ஏழு மடங்கு பிரிவு ஒன்றை கருத்துத் தெரிவித்தார்: (1) சேவகரின் வருகையும் அவர் சோதிக்கப்படுதலும் (அதி. 1); (2) சேவகர் ஊழியம் செய்தல் (அதி. 2 மற்றும் 3); மற்றும் இதுபோல் இன்னும் பிற.*[15] *சிலர் இந்தப் புத்தகத்தை இயேசு ஊழியம் செய்த இரு பிரதான பகுதிகளான கலிலேயா மற்றும் யூதேயா என்பவைகளைக் கொண்டு இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றார்கள். டென்னீயின் ஏழு பாகமான பிரிவானது இயேசு பயணம் செய்த பகுதிகளைப் பற்றிய அதிகம் விரிவான இடைநிறுத்தலைப் பயன்படுத்துகிறது.*[16]

*பின்வரும் வரைக்குறிப்பில் நாம் இந்தக் கருத்துக்கள் மற்றும் பிறவற்றின் இணைவொன்றைப் பயன்படுத்துவோம். ஆயினும் மாற்கு சுவிசேஷம் முழுமையான ஒன்றாகவே கருதப்பட வேண்டும் என்பதை மனதில் வையுங்கள்.*

# மாற்குவின் சுவிசேஷப் புத்தகத்தின் வரைக்குறிப்பு

I. *சேவகர் ஊழியம் செய்யத் தயாரிக்கப்படுதல் (1:1-13).*
   A. *பட்டமும் நோக்கமும் (1:1).*
   B. *யோவானால் தயாரிக்கப்பட்ட வழி (1:2-8).*
   C. *இயேசுவின் ஞானஸ்நானத்தினால் அவர் தயார் செய்யப்படுதல் (1:9-11).*
   D. *இயேசு சோதிக்கப்படுதலினால் தயார் செய்யப்படுதல் (1:12, 13).*
   E. *இவை எல்லாவற்றிலும் இயேசு தமது ஆதாரச் சான்றுகளைப் பெற்றுக் கொண்டார். அவர் ...*
      1. *யோவானால் சுட்டிக்காண்பிக்கப்பட்டார்.*
      2. *பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் செய்விக்கபப்ட்டார்.*
      3. *பிசாசானவனால் சோதிக்கப்பட்டார்.*

II. *ஊழியத்திற்கு சேவகரின் உறுதிப்பாடு (1:14-8:30).*
   A. *ஊழியத்தின் தொடக்கம் (1:14-2:12).*
      1. *இந்தக் காலகட்டம் அடிப்படையில் கலிலேயாவில் நடந்தது, யோவான் கொல்லப்பட்ட பின்பு இயேசு அங்கு சென்றார் (1:14, 15).*
      2. *இயேசு நான்கு மீனவர்களை அழைத்தல் (1:16-20).*
      3. *கப்பர்நகூமில் ஒரு மாபெரும் நாள் (1:21-34).*
      4. *தொழுநோயாளி ஒருவரைக் குணமாக்கியது உட்பட கலிலேயாவில் ஒரு பொதுப் பயணம் (1:35-45).*
      5. *மேற்கூரை வழியே இறக்கி விடப்பட்ட மனிதர் ஒருவரைக் குணமாக்கியது உட்பட, கப்பர்நகூமில் இன்னொரு மாபெரும் நாள் (2:1-12). பாவங்களை மன்னிப்பதற்கான இயேசுவின் வல்லமையினால் குணமாக்குதல்களின் பட்டியல் உச்சகட்டத்தை அடைதல்.*
   B. *விமர்சனம் தொடங்குகிறது (2:13-3:35).*
      1. *கடலோரம் போதித்தல் (2:13).*
      2. *லேவியை அழைத்தலும் பாவிகளுடன் உண்ணுதலும் (மற்றும் விமர்சனமும்) (2:14-17).*
      3. *உபவாசம் பற்றிய விமர்சனம் (2:18-22).*
      4. *ஓய்வுநாள் பற்றிய விமர்சனங்கள் (2:23-3:5).*
      5. *பரிசேயர்கள் மற்றும் ஏரோதியர்கள் ஆகியோரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சூழ்ச்சி (3:6).*
      6. *இயேசுவின் ஊழியம் அதிகமாய் மாறுபடுதல்:*

பன்னிருவரைத் தேர்ந்து கொள்ளுதலும், அவரது நண்பர் களும்கூட, “அவர் மதிமயங்கியிருக்கிறார்” (3:7-21) என்று நினைக்கும் அளவுக்குப் பணியில் மும்முரமாகுதல்.

7. பெயல்செபூலின் அதிகாரத்தினாலேயே இயேசு தமது அற்புதங்களைச் செய்தார் என்ற குற்றச்சாட்டு; பரிசுத்த ஆவியானவருக்கு எதிரான பாவம் பற்றிய போதனை (3:22-30).
8. இயேசுவின் தாயும் சகோதர சகோதரிகளுமே தேவனுடைய சித்தத்தின்படி செய்கின்றவர்கள் என்று அடையாளப் படுத்துப்படுதல் (3:31-35).

C. ஊழியத்தின் அறைகூவல். (தொடர்ந்த எதிர்ப்புக்களுடன், அவ்வப்போது கூட்டத்தில் இருந்து விலகிச் சென்று - கடலுக்கு அப்பாலிருந்த தெக்கப்போலிக்கு, பெனிக்கியாவுக்கு, பிலிப்பி செசரியாவுக்கு, மற்றும் பிற இடங்களுக்குச் செல்லுதல்.)

1. ஒரு கப்பலில் ன்படவில்தி இருந்துகொண்டு உவமைகளில் போதித்தல்: விதைப்பவன், விளக்கு, வளர்ச்சி, மற்றும் கடுகு விதை ஆகியவற்றின் உவமைகள் (4:1-34).
2. கலிலேயாக் கடலைக் கடந்து (மற்றும் புயலை அமர்த்தி) - தெக்கப்போலி செல்லுதல் (4:35-41).
3. கதரேனருடைய நாட்டில் அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதனைக் குணமாக்குதல் (மற்றும் இரண்டாயிரம் பன்றிகள் இறந்துபோன வரலாறு) (5:1-20).
4. மீண்டும் கடலைக் கடந்து யவீருவின் மகளைக் குணமாக்குதல் (அத்துடன் “அதே வேளையில் நடைபெற்ற இன்னொரு அற்புதம்”) (5:21-43).
5. நாசரேத்தூர் செல்லுதலும் அங்கு புறக்கணிக்கப்படுதலும் (இயேசு ஒரு தச்சர் என்று அழைக்கப்படுதல்) (6:1-6).
6. வரையறைக்குட்பட்ட ஊழியத்திற்குப் பன்னிருவரை அனுப்புதல் (ஏரோதின் கவனத்தைக் கவருதல் - அந்த அரசன் யோவானுக்குச் செய்ததைச் சிந்தித்துப் பார்க்கையில் இது ஒரு அபாயமிக்க நடவடிக்கையாக இருந்தது) (6:7-32).
7. தமது சீஷர்களுடன் வனாந்தரமான இடத்திற்குச் செல்லுதல், திரளான மக்கட்கூட்டம் பின்தொடருதல்; ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி) (6:33-44).
8. கடலானது இயேசு நடப்பதற்கு ஒரு ஓதுக்காகப் பணியாற்றுதல் (6:45-52) - இதைத் தொடர்ந்து

கெனசெரேத் பகுதியில் பொதுவான போதனையும் குணமாக்குதலும் (6:53-56).

9. கழுவாத கைகளினால் உண்ணுதல் பற்றி விமர்சிக்கப்படுதல் - மற்றும் பாரம்பரியத்துவம் பற்றிய ஒரு உரை (7:1-23).
10. தீரு சீதோன் ஊர்களுக்குப் பின்வாங்கிச் செல்லுதல் - மற்றும் சீரோபெனிக்கியா நாட்டுப் பெண்ணொருத்தியின் மகளைக் குணமாக்கிய வரலாறு (7:24-30).
11. தெக்கப்போலிக்குப் பின்வாங்கிச் செல்லுதல்:
    a. பொதுவான போதனையும் குணமாக்குதலும் (7:31-37).
    b. நாலாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (8:1-9).
12. கலிலேயாவுக்குத் திரும்புதல் (தல்மனூத்தா என்பது கலிலேயாக் கடலின் மேற்குக் கரையில் உள்ள பகுதியாகும்) - ஒரு அடையாளம் தேடப்படுதல், "பரிசேயர்களின் புளித்த மா" பற்றிய எச்சரிக்கை (8:10-21).
13. பெத்சாயிதாவுக்குப் பின்வாங்கிச் செல்லுதல் - பார்வையற்ற ஒரு மனிதர் குணமாக்கப்படுதல் (8:22-26).
14. பிலிப்பி செசரியாவுக்குப் பின்வாங்கிச் செல்லுதல் - மற்றும் மாபெரும் அறிக்கை (8:27-30) (இயேசுவின் ஊழியத்தின் உச்சக்கட்டம்).

III. சேவகர் ஊழியத்தின் மாபெரும் செயல்பாட்டிற்கு கடந்து செல்லுதல்: சிலுவையில் மரித்தல் (8:31-15:47).
  A. அவரது முடிவு ஊழியம் (8:31-10:52).
    1. தமது மரணத்திற்காகத் தமது சீஷர்களைத் தயார் செய்ய முயற்சித்தல்.
        a. தாம் மரிக்கப் போவதாகத் தமது சீஷர்களிடம் கூறி, தமது சீஷர்கள் தங்கள் சிலுவைகளை எடுத்துக்கொள்ளும்படி ஊக்கப்படுத்துதல் (8:31-9:1). (9:1ஐக் காணவும்.)
        b. மறுரூபத்தில் இயேசுவின் உண்மையான மகிமை காணப்படுதல்; உயிர்த்தெழுதல் முன் ரைக்கப்படுதல் (9:2-13).
        c. தமது சீஷர்கள் குணமாக்க முடியாத ஒரு பையனைக் குணமாக்குதல் (9:14-29).
        d. தமது மரணத்தைப் பற்றிக் கூடுதலான போதனை (9:30-32).
        e. சீஷர்களின் முற்றிலும் தவறான

புரிந்துகொள்ளுதல்; யார் பெரியவன் என்றும் யார் கர்த்தருக்கு அருகில் அமருவது என்றும் சண்டையிட்டுக் கொள்ளுதல் (9:33-50).

2. எருசலேமுக்குப் பயணத்தைத் தொடங்குதல்.
   a. யூதேயாவிலும் யோர்தானுக்கு அப்பாலும் (பெரேயாவில்) (10:1).
      (1) திருமணம் மற்றும் விவாக ரத்துக் குறித்து இயேசுவின் அறைகூவல் (10:2-12).
      (2) பிள்ளைகளை ஆசீர்வதித்தல் (10:13-16).
      (3) ஐசுவரியம் உள்ள வாலிப அதிகாரியின் வரலாறு - எல்லாவற்றையும் கைவிடுதலின் பலன்கள் (10:17-31).
   b. எருசலேமுக்குச் செல்லும் வழியில்.
      (1) நடக்க இருந்தது பற்றித் தமது சீஷர்களுக்கு விளக்கப்படுத்துதல் (10:32-34). அவர்களில் இருவர் அவரது வலம் மற்றும் இடது புறங்களில் அமர விரும்பும் அளவுக்கு அவர்களின் தவறான புரிந்து கொள்ளுதல் அதிகமாய் இருத்தல் (10:35-45). (ஒரு திறவுகோல் வசனம்: 10:45.)
      (2) எரிகோவின் வழியாகக் கடந்து செல்லுதல்; பார்வையற்ற பர்திமேயு குணமாக்கப்படுதல் (10:46-52).

B. ஒரு இடர்ப்பாடுமிக்க வேளை: அவரது ஊழியத்தின் கடைசி வாரம் (11:1-14:42).
   1. ஞாயிற்றுக்கிழமை: வெற்றிப் பிரவேசத்தின் நாள் (11:1-11).
   2. திங்கட்கிழமை: அத்திமரத்தை சபித்து ஆலயத்தைச் சுத்திகரித்த நாள் (11:12-19).
   3. செவ்வாய்க்கிழமை ஊழியம் மும்முரமான நாள்.
      a. அத்திமரம் பட்டுப் போகுதல் (11:20-26).
      b. கேள்விகளின் நாள்.
         (1) “எந்த அதிகாரத்தினால்” என்ற கேள்வி (11:27-33).
         (2) பொல்லாத தோட்ட வேலைக்காரர்களைப் பற்றிய உவமையின் இடைச் செருகல் (12:1-12).
         (3) இராயனுக்கு வரிசெலுத்துதல் பற்றிய ஒரு கேள்வி (12:13-17).
         (4) உயிர்த்தெழுதல் பற்றிய ஒரு கேள்வி (12:18-27).
         (5) பிரதான கற்பனை பற்றிய ஒரு கேள்வியும்,

*ராஜ்யத்திற்குத் தூரமானவராய் இராதவரும் (12:28-34).*

*(6) இயேசுவின் விரோதிகள் வாயடைக்கப்படுதல்; இயேசுவிடமிருந்து ஒரு கேள்வி (12:35-37).*

c. *வேதபாரகர்களைக் குறித்து ஜாக்கிரதையாய் இருக்கும்படி ஒரு எச்சரிக்கை (12:38-40).*

d. *விதவையின் காணிக்கை (12:41-44).*

e. *ஆலயத்தை விட்டு வெளியேறுதல், இயேசுவிடமிருந்து அருள்வெளிப்பாடான ஒரு செய்தி (13:1-37).*

4. *புதன் கிழமை: இயேசுவுக்கு ஒரு அமைதியான நாள்.*

   a. *அவரது விரோதிகளுக்கு மும்முரமான பணி நாள் (14:1, 2), ஆனால் இயேசுவுக்கு ஒரு அமைதியான நாள்.*

   b. *பெத்தானியில் உணவு மற்றும் இயேசு அபிஷேகிக்கப் படுதல் (14:3-9).*

   c. *இயேசுவைக் கொல்லுகிற திட்டத்தில் யூதாஸின் பங்கு (14:10, 11).*

5. *வியாழக்கிழமை: தயாரிப்பின் நாள்.*

   a. *பஸ்காவுக்குத் தயார் செய்தல் (14:12-16).*

   b. *பஸ்கா உணவும் கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்துதலும் (14:17-26).*

   c. *எல்லாரும் இயேசுவைக் கை விடுவார்கள் மற்றும் பேதுரு அவரை மறுத்தலிப்பார் என்ற முன்னு ரைத்தல் (14:27-31).*

   d. *கெத்செமனே தோட்டத்திற்குள் (14:32-42).*

C. *(வெள்ளிக்கிழமையன்று) அவர் சிலுவையில் அறையப்படுதலும் அடக்கம் பண்ணப்படுதலும் (14:43-15:47).*

1. *இயேசு காட்டிக் கொடுக்கப்படுதலும் சீஷர்கள் ஓடிப்போகுதலும் (14:43-52).*
2. *காய்பாவுக்கு முன்பாக விசாரணை, பேதுரு நெருப்பினருகில் குளிர்காய்தல் (14:53-65).*
3. *பேதுருவின் மறுதலிப்பு (14:66-72).*
4. *சனதெரீன் சங்கத்தினரால் உறுதிப்படுத்தப்படுதல், பிலாத்துவின் முன்பாக விசாரணை; பரபாஸ் விடுவிக்கப்பட்டு, இயேசு ஏளனம் செய்யப்படுதல் (15:1-20).*
5. *எனது பாவங்களுக்காக இயேசுவின் மரணம் (15:21-41).*
6. *இயேசுவின் உடல் அடக்கம் (15:42-47).*

IV. *உயிர்த்தெழுதலினால் சேவகர் உயர்த்தப்படுதல் (16:1-20).*

A. *கல்லறைக்குப் பெண்களின் பயணம் மற்றும் தூதனின் அறிவிப்பு (16:1-8).*[17]

B. *உயிர்த்தெழுதலின் சில தரிசனங்கள்:*

1. *மகதலேனா மரியாளுக்கு (16:9-11).*
2. *இரண்டு சீஷர்களுக்கு (16:12, 13).*
3. *பதினொருவருக்கு (16:14-18). (சீஷர்களுக்குத் தேவைப்பட்ட விசுவாசமும் பிரதான கட்டளையும்: 16:15, 16).*

C. *இயேசு பரத்திற்கு ஏறிச் செல்லுதல், அத்துடன் இயேசுவின் உறுதிப்படுத்துதலுடன் சீஷர்களின் பின்னாளைய ஊழியம் (16:19, 20).*

---

*குறிப்புகள்*

[1]Eusebius *Ecclesiastical History* 3.39; 2.15; 6.25. *பாப்பியஸ் என்பவர் "அப்போஸ்தலிக்கப் பிதாக்களில்" ஒருவராக இருந்தார். அவரது எழுத்துக்களில் அப்போஸ்தலிக்க காலங்களின் வாய்மொழிப் பாரம்பரியங்கள் மற்றும் வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் வாய்ந்த உட்கண்ணோட்டங்கள் அடங்கியிருந்தன, ஆனால் அவைகள் பின்னாளைய வரலாற்றாளர்களான ஈசூபியஸ் மற்றும் இரேனியுஸ் ஆகியோரால் பாதுகாக்கப்ப்டிருந்த துணுக்குகளுக்குள்ளாக மட்டுமே தப்பியிருந்தன. மாபெரும் கற்றல் மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றைக் கொண்டிருந்த எழுத்தாளரான ஈசூபியஸ் அவர்கள், சபையின் வளர்ச்சி பற்றி விவரித்தல் முதல் வரலாற்றளராக இருந்தார். கிரேக்க இறையியலாளரான அலெக்சந்திரியாவின் கிளமென்ட் அவர்கள், "சபைப் பிதாக்களில்" ஒருவராக கருதப்படுகின்றார். "விரிவுரைப் பிரசங்கித்தலின் பிதா" என்று அழைக்கப்படுகின்ற ஓரிகன் அவர்கள், மூன்றாம் நூற்றாண்டில் மிகவும் முக்கியமான பிரசங்கியாராகக் கண்ணோட்டமிடப்பட்டார்.* [2]Irenaeus *Against Heresies* 3.1.1. *இரேனியுஸ் அவர்கள் போலிகார்ப்பின் மாணவராயிருந்தார், இந்த போலிகார்ப் அவர்கள் சிமிர்னா சபையின் "மூப்பராக" இருந்தார், மற்றும் இவர் இரண்டாம் நூற்றாண்டின் மிக முக்கியமான இறையிய லாளராகக் கருதப்படுகின்றார்.* [3]*இந்த வீடு கடைசி இராப்போஜனம் நடைபெற்ற (மாற். 14:12-17) மற்றும்/அல்லது இயேசு வாக்குத்தத்தம் செய்திருந்த பரிசுத்த ஆவியானவர் வருவதற்காக அப்போஸ்தலர்கள் காத்திருந்த இடமாக இருந்திருக்க(அப். 1:4-8, 12)ச் சாத்தியக்கூறு உள்ளது.* [4]*மாற்கு 14:51, 52 வசனப்பகுதி யோவான் மாற்குவைக் குறிப்பிடுகிறது என்றால், இது இவர் அப்போஸ்தலர்களை விட இளையவராயிருந்தார் என்று சுட்டிக் காண்பிக்கும்.* [5]Eusebius *Ecclesiastical History* 2.16. [6]Ibid., 3.39. [7]Irenaeus *Against Heresies* 3.1.1. [8]*இந்தப் புத்தகத்தில் உள்ள "நான்கு சுவிசேஷ விவரங்கள்" என்ற பாடத்தில் காணவும்.* [9]Merrill C. Tenney, *New Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 157. [10]*பிரதான கட்டளை பற்றி மத்தேயு கொடுக்கும் விவரங்களை (மத். 28:18-20) மாற்கு கொடுக்கும் விவரங்களுடன் ஒப்பிடவும் (மாற். 16:15, 16).*

[11]*இவ்விடத்தில் ஆர்மிக்கதொரு பக்கக் குறிப்பு உள்ளது: மாற்கு, முதலில் ஒரு சேவகராயிருக்கத் தவறினார்.* [*ஆனால் இவரே*] *இயேசுவை ஒரு பரிபூரணமான*

*சேவகராக எடுத்துரைத்தார்.* [12]*பேதுருவின் மரணத்திற்குப் பின்பு மாற்கு இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்று தொடக்க கால எழுத்தாளர்கள் சிலர் இது எழுதப்பட்ட காலத்தைக் கணிக்கின்றார்கள், ஆனால் இது இந்தப் புத்தகம் "வெளியிடப்பட்டதை" (பிரதிகள் எடுத்து, சுற்றுக்கு விடப்பட்டதை)க் குறிப்பதாக இருக்கலாம்.* [13]Tenney, 157. [14]John Phillips, *Exploring the Scriptures* (London: Victory Press, 1965), 200. [15]Henrietta C. Mears, *What the Bible Is All About* (Glendale, Calif.: Gospel Light Publications, 1966), 390. [16]Tenney, 159-60. [17]*வசனம் 8ஐ தொடர்ந்து வருகிற பன்னிரெண்டு வசனங்களின் அதிகாரத் துவத்தன்மை பற்றிக் கேள்வி கேட்கப்பட்டுள்ளது, ஏனெனில் இந்த வசனங்கள் மிக முக்கியமான கைப்பிரதிகள் பலவற்றில் காணப்படுவதில்லை. பெரும்பாலான பழமைவாத எழுத்தாளர்கள், இவைகள் இவ்விடத்திற்கு உரியவைகளாய் உள்ளன - இவை மூல வசனத்தின் பகுதிகளாக அதாவது மாற்குவினால் பின்னாட்களில் சேர்க்கப்பட்ட குறிப்பாகவோ அல்லது ஏவப்பட்ட இன்னொரு எழுத்தாளரால் சேர்க்கப்பட்ட ஏவுதல் பெற்ற குறிப்பாகவோ உள்ளன என்று நம்புகின்றார்கள். (இதன் உதாரணத்திற்கு. உபா. 34ஐக் காணவும், அங்கு வேறு யாரோ ஒரு எழுத்தாளர், அநேகமாக யோசுவா, மோசே எழுதிய புத்தகத்தில் மோசேயின் மரணம் பற்றிய செய்தியைக் கூடுதலாக எழுதினார்.)*

# 4

# லூக்கா சுவிசேஷம்

## மனிதகுமாரனாகிய

## *கிறிஸ்து*

*அடுத்ததாக, நாம் மூன்றாவது சுவிசேஷ விவரத்திற்கு வருகின்றோம், இது எழுதப்பட்டவற்றிலேயே மிகவும் அழகிய ஆராய்ச்சிப் புத்தகம் என்று அழைக்கப்பட்டுள்ளது.*

## *லூக்கா சுவிசேஷத்திற்கு அறிமுகம்*

**இந்தப் புத்தகத்தை எழுதியவர்**

*லூக்கா சுவிசேஷத்தை எழுதியவரின் பெயர் இதில் தரப்படவில்லை, ஆனால் இதை எழுதியவர் "பிரியமான வைத்தியனாகிய" லூக்கா (கொலோ. 4:14) என்பதைப் பெரும்பான்மையானோர் ஒப்புக்கொள்ளுகின்றார்கள்.*

*லூக்கா சுவிசேஷத்தை எழுதியவர் அப். நடபடிகள் புத்தகத்தையும் எழுதினார் (லூக். 1:1-4ஐயும் அப். 1:1ஐயும் ஒப்பிட்டுக் காணவும்). இவ்விரு புத்தகங்களும் ஒரே புத்தகத்தின் இரு தொகுதிகளாக இருக்கும்படி வடிவமைக்கப்பட்டன என்பது தெளிவு.[1] அப். நடபடிகள் புத்தகமானது, அதன் எழுத்தாளர் அடிக்கடி, அப்போஸ்தலரான பவுலுடன் ஒன்றாகப் பயணம் செய்தார் என்பதை வெளிப்படுத்துகிறது (அப். 16:10; 20:5; 21:1ஐக் காணவும்), லூக்காவைத் தவிர பவுலுடன் பயணம் செய்ததாக அறியப் படுகிற மற்ற துணைவர்கள் யாவரும் நீக்கிப் போடப்பட முடியும்.[2] மருத்துவர் லூக்காதான் லூக்கா சுவிசேஷம் மற்றும் அப். நடபடிகள் ஆகிய புத்தகங்களை எழுதினார் என்ற முடிவானது சபையின் தொடக்க கால (ஏவுதலற்ற) பாரம்பரிய வரலாற்றுக்கு கருத்தொருமித்ததாக உள்ளது.*

*லூக்கா யார்? நாம் இவரை ஒரு கிரேக்கப் பெயரினால் அறிகின்றோம்[3]; இவர் அநேகமாக, பிறப்பினால் ஒரு கிரேக்கராய் இருந்தார் (கொலோ. 4:10, 11, 14ஐக் காணவும்). அது புதிய ஏற்பாட்டில் இவர் ஒருவரை மட்டும் புறஜாதி எழுத்தாளராக்கியிருக்கும். இவர் தொடக்க காலத்தில் அந்தியோகியாவில் மனம் மாறியவர்களில் ஒருவராக இருந்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளது.[4] அவ்வாறிருந்ததென்றால் இது, இவர் சபை நிலை நாட்டப்பட்டுப் பதினைந்து ஆண்டுகளுக்குள்ளாகவே ஒரு கிறிஸ்தவ ரானார் என்று அர்த்தப்படுத்துவதாயிருக்கும்.[5]*

*முன்பே எடுத்துரைக்கப்பட்டபடி, லூக்கா ஒரு மருத்துவராயிருந்தார்*

(கொலோ. 4:14) மற்றும் இவர் பவுலுடன் பயணம் செய்தவர்களில் ஒருவராக இருந்தார். பவுல் துரோவாவை விட்டுப் புறப்பட்டு (கி.பி. சுமார் 51) பிலிப்பி நகருக்குச் செல்லுகையில், அப். நடபடிகள் புத்தகத்தில் உள்ள "நாங்கள்" என்று வரும் வேத வசனப்பகுதிகள், அதிகாரம் 16ல் தொடங்கு கின்றன. பவுல் பிலிப்பி நகரை விட்டுப் புறப்பட்டபோது, லூக்கா அங்கேயே தங்கி விட்டார் என்பது உறுதி, ஏனெனில் "நாங்கள்" வசனப் பகுதிகள் அவ்விடத்தில் ஒழிந்து விடுகின்றன. இவர் பவுல் திரும்பி வரும் வரையிலும் பிலிப்பியில் இருந்த சபையில் ஊழியம் செய்து கொண்டிருந் தார் என்பது தெளிவு. அந்த இடத்தில் "நாம்" என்ற வார்த்தையை உபயோகித்த வேத வசனப்பகுதிகள் மீண்டும் வருகின்றன; அப்போஸ்தல ரான பவுல் பலஸ்தீனத்தின் துறைமுக நகரங்களில் ஒன்றான செசரியாவில் நான்கு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தது வரையிலும் லூக்கா அவருடன் பயணம் செய்தார். அந்த நான்கு ஆண்டுகள் லூக்கா அநேகமாக அருகாமையில் ஏதேனும் ஒரு இடத்தில் தங்கியிருந்திருக்க வேண்டும், ஏனென்றால், பவுல் செசரியாவை விட்டு ரோமாபுரிக்குப் புறப்பட்டுச் செல்லுகையில் "நாங்கள்" என்ற வார்த்தையை உபயோகித்த வேத வசனப் பகுதிகள் மீண்டும் தொடருகின்றன. (பலஸ்தீனத்தில் இருந்த வேளையில் லூக்கா, தமது சுவிசேஷ நூலின் 1:1-4[6] வசனப்பகுதிகளில் குறிப்பிடப்படும் ஆராய்ச்சிப் பணியை அதிகமாகச் செய்திருக்கக்கூடும்.) ரோமாபுரியில் லூக்கா, பவுலின் "உடன் ஊழியர்களில்" ஒருவராக இருந்தார் (பிலே. 24). பிற்பாடு, பவுல் சிறையில் அடைக்கப்பட்டு, தமது மரணத்திற்காகக் காத்திருந்த வேளையில், லூக்கா அவருடன் இருந்தார் (2 தீமோ. 4:11).

லூக்கா குறிப்பிடத்தக்க மனிதராயிருந்தார்: இவர் கல்வியறிவு பெற்ற ஒரு கிரேக்கராக, பவுலுடன் உடன் ஊழியராக, மற்றும் செயல் துடிப்பான பிரசங்கியாராக, ஊழியராக இருந்தார். லூக்கா மற்றும் நடபடிகள் புத்தகங்களின் எழுத்தாளர் என்ற வகையில், இவர் சபையின் முதலாவது மாபெரும் வரலாற்றாளராகவும், கிறிஸ்தவத்திற்காக இலக்கிய ரீதியாக பரிந்து பேசுபவராகவும் இருந்தார்.

### இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலம்

லூக்கா சுவிசேஷம் எழுதப்பட்ட காலம் இரு திசைகளில் வரையறுக்கப் பட்டுள்ளது. ஒரு புறத்தில், இயேசுவின் மரணமும் லூக்காவின் மனமாற்ற மும் நடந்து சில காலங்கள் கடந்திருந்தன - இது இயேசுவின் வாழ்வு பற்றிய பல விவரங்கள் தொகுக்கப்பட்டிருக்கப் போதுமான காலமாக இருந்தது (லூக். 1:1, 2). இன்னொரு புறத்தில், நடபடிகள் (இணைத்தொகுப்பு நூல்) புத்தகம், பவுல் ரோமாபுரியில் முதலில் இரு ஆண்டுகள் இருந்த வேளையில் - கி.பி. சுமார் 62ல் - எழுதப்பட்டது என்பது உறுதி (அப். 28:30). பழைமை வாத எழுத்தாளர்கள் பலர், லூக்கா சுவிசேஷம் கி.பி. 60ம் ஆண்டுவாக்கில் எழுதப்பட்டது என்று கூறுகின்றார்கள்.[7]

### இந்தப் புத்தகத்தின் முன்னுரை

லூக்காவின் புத்தகம் தனிச்சிறந்த ஒரு முன்னுரையைக் கொண்டுள்ளது:

> *மகா கனம்பொருந்திய தேயோப்பிலுவே, நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக். 1:1-4).*[8]

*அந்த அறிமுகவுரையிலிருந்து சில முக்கிய கருத்துக்களை நாம் ஆழ்ந்து சிந்திப்போம்:*

*“மகா கனம்பொருந்திய தேயோப்பிலுவே ...”: “மகா கனம் பொருந்திய” என்பது ஒரு அலுவலருக்கு தரப்பட்ட மரியாதை விளிப்புரை யாக இருந்தது. “தேயோப்பிலு” என்ற கிரேக்கப் பெயரானது, “தேவன் மீது அன்புகூருபவர்” என்று அர்த்தம் தருவதாக உள்ளது. இது தேவனை அன்புகூருகின்ற யாவரையும் குறிக்கக் கூடும், ஆனால் அநேகமாக இது ஒரு குறிப்பிட்ட நபரைக் குறிப்பதாக இருக்கிறது. ஒருவேளை இந்தத் தனிநபர் லூக்காவின் ஆதரவாளராகவும் இந்தப் புத்தக வெளியீட்டிற்கு நிதி உதவி அளித்தவராகவும் இருந்திருக்கலாம்.*[9]

*“நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்ப முதல் கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்த படியே ...”: “கண்ணாரக் கண்டு வசனத்தைப் போதித்தவர்கள்” என்ற வார்த்தைகள் அநேகமாக அப்போஸ்தலர்களை முதன்மையாகக் குறிப்பிடுவதாயிருக்கின்றன, (அப். 1:21, 22ஐக் காணவும்), ஆனாலும் இவைகள் நம்பிக்கைகளின்/விசுவாசங்களின் சரீரத்தினுடைய கட்டுப்பாடு மிகுந்த ஒற்றுமையை சுட்டிக்காண்பிக்கின்றன.*

*“அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம் பேர் ஏற்பட்டபடியினால் ...”; சபையார் யாவருக்கும் பொதுவாக இயேசுவைக் குறித்த விசுவாசங்களின் அடிப்படைக் கருத்தொன்று இருந்தது என்பது தெளிவு.*

*“ஆதிமுதல் ...”: சபையின் வரலாற்றின் தொடக்க காலத்தில் “கண்ணால் கண்ட சாட்சிகளிடத்தில்” லூக்கா தொடர்பு கொண்டிருந்தார் என்பது உறுதி.*

*“எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் ...”: இது, கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய விவரத்தை எழுதிய சிலர் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து அறியவில்லை என்று சுட்டிக்காண்பிக்கிறது.*[10] *ஏவுதல் பெற்றிராத தொடக்க காலக் கையெழுத்துப் பிரதிகள் பல - இவைகள் இயேசுவின் வாழ்வு பற்றிய விவரங்களை அளிப்பதாக நினைக்கப்பட்டன - இன்றைய நாட்களிலும் உள்ளன, ஆனால் அவற்றில் மதியீனமான கருத்துக்களே நிறைந்துள்ளன.*

*“உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று ...”: சிலர், “உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின்” என்ற சொற்றொடரானது முறைப்படியான அறிவுறுத்துதலைக் குறிப்பிடுவதாக நினைக்கின்றார்கள். எந்த வகையில் பார்த்தாலும், இவ்வார்த்தைகள்,*

தொடக்க கால சபையில் விசுவாசத்தின் பொது அமைவு ஒன்று இருந்ததை மீண்டும் வலியுறுத்துகிறது.

"அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று": இது, கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிய நாளாகம வரிசைக் கிரமமான விவரங்களைத் தருவதற்கு மற்ற சுவிசேஷ எழுத்தாளர்களைக் காட்டிலும் லூக்கா அதிக சிறப்பான முயற்சியை மேற்கொண்டார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கலாம். இருப்பினும், நாம் காணப் போகின்ற படி, லூக்கா சுவிசேஷத்தின் விவரமும் கூட முற்றிலுமாக நாளாகம வரிசைக்கிரமப்படி அமைந்திருக்கவில்லை. ஆகையால், "ஒழுங்காய்" என்ற சொற்றொடரானது அநேகமாக ஒரு முறைப்படியான - தர்க்கரீதியான, சிந்தித்து தெளிவாய் வெளியிடப்பட்ட பதிப்பாக - விவரமாக எழுதுதல் என்பதைக் குறிப்பிடலாம்.

லூக்கா, கிறிஸ்தவத்தின் முதல் முறைப்படியான "விமர்சகர்" என்று நினைக்கப்படலாம்: இவர் சுற்றோட்டத்திற்கு விடப்பட்ட பல்வேறு விவரங்களை அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, இவர் உண்மைகளை முற்றிலுமாகப் பரிசோதித்தார். இவ்விதமாக, இவர் எழுதிய யாவும் "மிகச் சரியானதாக" இருந்தது. இவர் தமது விவரங்களைப் பரிசோதித்து அறியும்படிக்கு வாசகர்களை அழைப்பதாகக் காணப்படுகிறது, ஏனெனில் இவர் ஆய்ந்தறியப்படக் கூடிய வரலாற்றுத் தகவல்களைத் தொடர்ந்து கொடுத்து வந்தார் (1:5; 2:1, 2; 3:1; 13:1, 2). புதைபொருள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள், லூக்கா ஒரு மிகச் சரியான வரலாற்றாளர் என்பதையும் கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் தொடக்க காலச் சபையின் தமது விவரம் ஆகியவற்றிற்கு மிகவும் கனம் கொடுத்துள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றன.

**இந்தப் புத்தகத்திற்கான விசேஷித்த ஆதார மூலம்**

லூக்காவினால் பயன்படுத்தப்பட்ட ஆதாரமூலங்களைப் பற்றிக் கவனிக்கையில், இவருக்கு அப்போஸ்தலரான பவுலுடன் இருந்த விசேஷித்த உறவைப்பற்றிச் சிறப்பான கவனம் செலுத்தப்பட வேண்டும். பேதுருவும் பவுலும் தொடக்க கால சபையில் இரு முக்கிய நபர்களாக இருந்தார்கள் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இதன்படியே காணுகையில், இயேசுவின் வாழ்வு மற்றும் போதனை ஆகியவற்றைப் பதிவு செய்யும் பணியானது அந்த முக்கிய பணியில் அவர்களின் செல்வாக்கு இல்லாத நிலையில் நிறைவேறியிருக்காது என்று நாம் யூகிக்க முடியும். (ஏவுதல் பெற்றிராத) பழங்கால பாரம்பரியங்கள் உண்மையானவை என்றால், இவ்விருவருமே ஒரு பங்கை வகிக்கின்றனர்: மாற்கு சுவிசேஷம் பற்றிய பாடத்தில் குறிப்பிடப்பட்டபடியாக, பேதுருவின் கூற்றின்படி யாகவே மாற்கு தமது சுவிசேஷத்தை எழுதினார் என்று நம்பப்படுகிறது. அது போலவே, பவுலின் கூற்றின்படியே லூக்கா தம் சுவிசேஷத்தைப் பதிவு செய்தார் என்று தொடக்க காலப் பாரம்பரியங்கள் கூறுகின்றன.

இயேசு இந்த பூமியில் ஊழியம் செய்துகொண்டிருந்தபோது, பவுல் அவரது சீஷராக இருந்ததில்லை; ஆனால் பவுல், கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய

*அடிப்படைத் தகவல்களை வெளிப்படுத்துதல் மூலமாகப் பெற்றுக் கொண்டார் (1 கொரி. 11:23; 15:3-8; அப். 20:35 ஆகியவற்றைக் காணவும்). இயேசுவைப் பற்றிய மாபெரும் ஆய்வுக் கருத்துக்கள் தொடர்பாக அவர் [பவுல்] பிரசங்கித்ததை லூக்கா பலமுறைகள் கேட்டு இருந்திருப்பார்.*

*இது லூக்கா தகவலுக்காகப் பவுலையே முற்றிலுமாகச் சார்ந்திருந்தார் என்று அர்த்தப்படுத்துவது இல்லை. இவர் தமது சொந்த, விரிவான ஆய்வையும் கூட்டிக் கொண்டார்.[11] இருந்தபோதிலும், பவுலின் சுவிசேஷத்தை லூக்கா எழுதினார் என்பதே ஏவுதல் பெற்றிராத பழங்கால எழுத்தாளர்களின் பொது இசைவான கருத்தாக உள்ளது. இது, லூக்காவின் சுவிசேஷமானது புறஜாதி மக்கள் கூட்டத்திற்கென்று, அதிலும் விசேஷமாய் கிரேக்கர்களுக்கென்று எழுதப்பட்டதைத் தெளிவாக்குகிறது:[12] பவுல், புறஜாதியாருக்கான அப்போஸ்தலராயிருந்தார் (அப். 26:16-18) மற்றும் இவரே அநேகமாக, கிரேக்கர்களுக்குச் சுவிசேஷத்தை முதலில் பிரசங்கித்த வராயிருந்திருப்பார் (அப். 17).*

## இந்தப் புத்தகத்தின் வலியுறுத்தங்கள்

*லூக்கா தமது விவரங்களை ஒரு புறஜாதி மக்கள் கூட்டத்தை நோக்கி எழுதினார்: இவர் மலைப்பிரசங்கத்தை(அல்லது அதைப் போன்ற ஒரு பிரசங்கத்தை)ப் பற்றித் தகவல் அளித்தபோது, இவர் "பிரமாணத்தையும் தீர்க்கதரிசிகளையும்" குறிப்பிடவில்லை. இவர், "ரபீ" மற்றும் "ஓசன்னா" போன்ற யூதத்துவச் சொற்றொடர்களைத் தவிர்த்தார். இவர் தமது வாசகர் களுக்கு பலஸ்தீன நாட்டின் பூகோள அமைப்பை விளக்கப்படுத்துவதற்கு அதிக கவனம் எடுத்துக்கொண்டார். இவரது சுவிசேஷத்தில் மட்டும்தான் "கல்வாரி" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கச் சொற்றொடர் உள்ளது. மற்றும், கிரேக்கர்களே இவரது விசேஷித்த இலக்காக இருந்தார்கள் என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. (அநேகமாக, லூக்கா தாமே ஒரு கிரேக்கராயிருந்தார் மற்றும் இவர் தமது புத்தகத்தை ஒரு கிரேக்க அலுவலருக்கு எழுதினார் என்பது ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டது.)*

*லூக்காவின் நாட்களில் இருந்த கிரேக்கர்கள் கல்வியறிவுள்ள மக்களாக, அழகையும் கலையையும் நேசிப்பவர்களாக இருந்தார்கள். லூக்காவின் சுவிசேஷ விவரமானது தனிச்சிறந்த இலக்கியப் பண்பைப் பெற்றிருப்பதில் வியப்பெதுவும் இல்லை. இது முழுமையானதாக, முறையானதாக, தனிச் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது. மனிதருடைய இரட்சிப்புக்கு அப்பாற்பட்ட வகையிலும்கூட, இது ஒரு சிறப்பு வாய்ந்த தொகுதியாக உள்ளது. ஒரு தொடக்க காலப் பாரம்பரியமானது, லூக்கா ஒரு ஓவியராகவும் இருந்தார் என்று கூறுகிறது. இவர் திரைத் துணிகளில் வரைந்தாரோ இல்லையோ நமக்குத் தெரியவில்லை, ஆனால் இவர் வியப்புக்குரிய வகையில் வார்த்தைகளைக் கொண்டு "வரைபவராக" இருந்தார்: அதிகாரம் 1 மற்றும் 2ல் உள்ள நான்கு அழகுமிக்க கவிதை - பாடல்களை வாசியுங்கள், இவை லூக்காவினால் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிகாரம் 15ல் உள்ள ஊதாரி மகன் போன்ற இருதயத்தை அசைக்கின்ற கதைகளைச் சுவைத்துப் பாருங்கள். லூக்காவின் எடுத்துரைப்புக்கள் எளிமை மற்றும் தனிச்சிறப்பின்*

*எடுத்துக்காட்டுகளாக உள்ளன.*

*கிரேக்கர்கள் பரிபூரணமான மனிதத்துவத்தைப் பாராட்டுபவர்களாக வும் இருந்தார்கள். அவர்களின் கடவுள்களை மனித உருவில் வடிவமைக்கு மளவுக்கு அவர்கள் பரிபூரண மனிதத்துவத்தை விக்கிரக ஆராதனைப் படுத்தியிருந்தார்கள். இவ்விதமான மன அமைவு கொண்டவர்களுக்கு, இயேசுவை மனிதருடைய பரிபூரணத்துவமான குமாரனாக லூக்கா முன்னிறுத்தினார். இயேசுவின் மனிதத்துவம் லூக்கா சுவிசேஷத்தின் அதிக ஆதிக்கம் கொண்ட கருத்தாக இருக்கிறது. இந்த வலியுறுத்தத்திற்கான ஒரு சில விவரிப்புகள் பின்வருமாறு:*

- *லூக்காவின் வரலாற்றுக் குறிப்புகள் இயேசுவை மனித குல வரலாற்றில் ஒரு பங்காளராகக் காண்பிக்கின்றன.*
- *லூக்கா தருகின்ற வம்ச வரலாறு (லூக். 3), மத்தேயு தருகின்ற வம்ச வரலாற்றிலிருந்து (மத். 1) மாறுபடுகிறது: மத்தேயு தருகின்ற வம்ச வரலாறு யோசேப்பின் மூலமாக இயேசுவின் சட்டப்பூர்வமான வம்சவழியை வலியுறுத்துகிறது. இதற்கு நேரெதிரிடையாக, லூக்கா தருகின்ற வம்ச வரலாறு ஆதாம் தொடங்கி - மரியாளின் மூலமாக - இயேசுவின் மாம்சப் பிரகாரமான வம்ச வழியை வலியுறுத்துகிறது. இவ்விதமாக, இயேசு எல்லா மக்களின் மனிதத்துவத்தில் பங்கேற்றார் என்பதை லூக்கா காண்பித்தார்.*
- *இயேசுவின் பிறப்பைப் பற்றி லூக்கா மட்டுமே பதிவு செய்தார் (லூக். 2). இந்த விவரங்கள் அவரது மனிதத்துவத்தை வலியுறுத்து கின்றன. அவரது பெற்றோர்கள் (மற்ற ஒவ்வொருவரைப் போலவே) குடிமதிப்பு எழுதப்படும்படி பெத்லகேமுக்குச் சென்றார்கள். ஒரு தாழ்மையான தொழுவத்தில் இயேசு பிறந்தார். அவரை முதன் முதலாக வந்து கண்டவர்கள் மேய்ப்பர்களே.[13]*
- *இயேசுவின் தொடக்க கால வாழ்வைப் பற்றி லூக்கா மாத்திரமே கூறினார். இயேசுவின் வளர்ச்சியானது மிகத் தனிச்சிறப்பானதாக இருந்தது, ஆனால் அது இயற்கைக்கு மாறானதாக இருந்ததில்லை. மற்றவர்கள் வளருவது போன்றே அவரும் வளர்ந்தார் (2:40, 52).*
- *மற்றவர்கள் ஞானஸ்நானம் செய்விக்கப்படுகையில் இயேசு ஞானஸ்நானம் பெற்றார் என்று லூக்கா வலியுறுத்தினார் (3:21).*
- *இயேசு சோதிக்கப்பட்டபோது (4:1-13), மனிதகுலத்தின் எல்லாச் சோதனைகளின் பிரதிநிதியாக அவர் சோதனைகளைச் சந்தித்தார்.*
- *இயேசுவின் ஊழியம் முழுவதிலும், அவரது மனிதத்துவம் வலியுறுத்தப்பட்டது: அவர் அழுதார் (19:41); அவர் ஜெபித்தார் (3:21; 5:16; 6:12); அவர் இரக்க உணர்வடைந்தார் (7:13; 10:33; 15:20); அவர் மரித்தார் (23:46).*

*இது, இயேசுவை லூக்கா வெறும் மனிதராக மட்டுமே முன்னிறுத் தினார் என்று அர்த்தப்படுத்துவது இல்லை. இயேசு மனிதத்துவத்தின் பரிபூரணராக இருந்தார்; அவர் தேவ-மனிதராக இருந்தார்; அவர் நமது*

*இரட்சகராக இருக்கின்றார். நாம் பிறப்பில் பாவம் ஒன்றும் அறியாதவர் களாகவே இருக்கின்றோம், ஆனால் அவர் பரிசுத்தராக இருந்தார் (லூக். 1:35). லூக்காவின் விவரமானது இயேசுவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின்[14] ஊழியத்தை வலியுறுத்துகிறது. மத்தேயு மற்றும் மாற்கு ஆகிய சுவிசேஷங்கள் இணைந்து தருவதைக் காட்டிலும் அதிகமாக லூக்கா சுவிசேஷத்தில் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.*

**இந்தப் புத்தகத்தின் பண்புகள்**

*இந்தப் புத்தகத்தின் பெரும்பாலான பண்புகள் ஏற்கனவே கலந்துரை யாடிய பண்புகளுடன் தொடர்புடையவைகளாகவே இருக்கின்றன.*

*லூக்கா சுவிசேஷமானது தனிச்சிறந்த மருத்துவ ஒலிக்கூற்றைக் கொண்டுள்ளது. லூக்காவின் சுவிசேஷமானது ஒரு மருத்துவரின் மன அமைவை அடிக்கடி வெளிப்படுத்துகிறது. இவர் சில வேளைகளில் மருத்துவச் சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். (எடுத்துக்காட்டாக, இவர் 18:25ல் மருத்துவர் பயன்படுத்தும் ஊசிக்கான கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்தினார்.) இயேசுவின் "வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையில் விழுந்தது" (லூக். 22:44) என்பதை லூக்கா மட்டுமே பதிவு செய்தார். பன்னிரெண்டு ஆண்டுகளாகப் பெரும்பாடுடன் இருந்த பெண்ணைப் பற்றி லூக்கா கூறியபோது, அவர் மாற்குவை விட அதிகமாக மருத்துவர்கள் மீது பரிதாபத்தைக் காண்பித்தார் (மாற். 5:25, 26ஐ லூக். 8:43உடன் ஒப்பிட்டுக் காணவும்). கன்னிப்பெண்ணிடமிருந்து இயேசுவின் பிறப்பு, குணமாக்குதலின் அற்புதங்கள், இயேசு நிச்சயமாகவே மரித்தார் என்பது உண்மையே, மற்றும் இயேசு சரீரத்தில் உயிர்த்தெழுந்தார் ஆகியவற்றை ஒரு மருத்துவர் உறுதிப்படுத்திய விஷயம் பற்றி நான் தனிப்பட்ட வகையில் அகம் மகிழ்வடைகின்றேன்.*

*கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய பதிவேடு என்ற வகையில் லூக்கா சுவிசேஷ மானது மிகவும் விசாலமானதாக உள்ளது. கூற முடிந்த எல்லாவற்றையும் எந்த சுவிசேஷ விவரமும் கூறுவதில்லை (யோவா. 21:25), ஆனால் லூக்காவின் சுவிசேஷமானது இயேசுவின் வாழ்வில் நடந்த அனைத்திற்கும் மிகவும் பிரதிநிதித்துவமாக உள்ளது. இது சுவிசேஷப் பதிவேடுகளிலேயே மிகவும் பெரியதாக உள்ளது.[15]*

*இந்த சுவிசேஷ விவரமானது மற்ற ஒப்பீட்டு சுவிசேஷங்களை விட அதிகம் தனிச்சிறப்பு வாய்ந்த கருத்துக்களைக் கொண்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, லூக்கா மாத்திரமே இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம் ஆகியவை பற்றிப் பதிவு செய்தார். தனிப்படுத்தப்பட்ட வசனப்பகுதிகளை தவிர்த்து, 9:51 முதல் 18:30 வரையுள்ள பாடக் கருத்துக்கள் லூக்கா சுவிசேஷத்திற்கே உரிய தனிச்சிறப்பானவைகளாக உள்ளன. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு எம்மாவு சீஷர்களுக்குக் காட்சியளித்ததையும் (24:13-35) அவர் பரத்துக்கேறியதையும் (24:50-53; அப். 1:9-11ஐயும் காணவும்) பற்றிய விவரங்களை லூக்கா மாத்திரமே கொடுத்தார்.*

*லூக்காவின் சுவிசேஷ விவரமானது ஜெபத்தின் மீது விசேஷித்த*

*வலியுறுத்தத்தை இடுகிறது. இந்த புத்தகமானது, இயேசுவின் வாழ்வின் முக்கியமான வேளைகளின்போது, அவர் ஜெபித்தார் என்பதைக் காண்பிக்கிறது (3:21; 6:12, 13; 9:18, 28, 29).*

*லூக்கா தமது சுவிசேஷ விவரத்தில், பலவீனர்கள், தேவையில் இருந்தவர்கள், மற்றும் புறம்பே ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோர் மீது விசேஷித்த கவனத்தைச் செலுத்தினார். பல எதிர்கொள்ளுதல்களில் பெண்கள் சித்தரிக்கப்பட்டுள்ளார்கள். (அதி. 1 மற்றும் 2ல் மரியாள் மற்றும் எலிசபெத் ஆகியோரின் மீதான வலியுறுத்தத்தையும், அத்துடன் அதி. 7ல் நாயீன் பட்டணத்து விதவை மற்றும் பாவம் நிறைந்த பெண் ஆகியோரின் மீதான வலியுறுத்தத்தையும் கவனிக்கவும்.) சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் சாதகமான வெளிச்சத்தில் சித்தரிக்கப்படுகின்றார்கள் (நல்ல சமாரியன் [10:30-37], ஊதாரி மகன் [15:11-32], தாழ்மையான ஆயக்காரன் [18:13, 14], சகேயு [19:2-10], மற்றும் சிலுவையில் தொங்கிய கள்ளன் [23:43]). இயேசு "ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதராய்" இருந்தார்! (லூக். 7:34).*

### *இந்தப் புத்தகத்தின் நோக்கம்*

*விளக்கவுரையாளர்கள், லூக்கா சுவிசேஷத்தை "இரட்சிப்பின் சுவிசேஷம்" என்றும் "பாவிகளுக்கான சுவிசேஷம்" என்றும் அழைத்துள்ளார்கள். ஒப்பீட்டு சுவிசேஷங்களில் இது ஒன்றுமட்டுமே இயேசுவை "இரட்சகர்" என்று குறிப்பிடுகிறது (லூக். 2:11). இந்தப் புத்தகத்தின் திறவுகோல் வசனமாக 19:10 உள்ளது: "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்."*

### *இந்தப் புத்தகத்தின் பிரிவுகள்*

*லூக்கா சுவிசேஷமானது இயல்பாகவே பின்வரும் பகுதிகளாகப் பிரிந்துள்ளது: (1) கிறிஸ்துவின் தொடக்க கால வாழ்வு, (2) அவரது ஊழியம், (3) அவரது மரணத்தைச் சுற்றி நடந்த நிகழ்ச்சிகள், மற்றும் (4) அவரது உயிர்த்தெழுதல். இவற்றில் இரண்டாவது பிரிவு - அவரது ஊழியம் - இரண்டு தனிச்சிறப்பு வாய்ந்த பகுதிகளையும் கொண்டுள்ளது. இது பின்வரும் வரைக்குறிப்பிற்கு ஐந்து பிரதானப் பிரிவுகளை அளிக்கிறது.*

*லூக்கா 4:14 முதல் 9:50 வரை கூறிமுடிக்கப்பட்டுள்ள இயேசுவின் ஊழியத்தினுடைய முற்பகுதியில், சில போதனைகள் தரப்பட்டிருப் பினு ம், இப்பகுதியானது, அவரது நடவடிக்கைகள் மற்றும் அற்புதங்கள் ஆகியவற்றை வலியுறுத்துவதாகவே உள்ளது. இந்தப் பகுதி, கலிலேயாவில் அவரது ஊழியம் பற்றிக் கூறுகிறது. இவற்றில் உள்ள பெரும்பாலான விவரங்கள் பிற ஒப்பீட்டு சுவிசேஷங்களில் உள்ளது போன்றே இருக்கின்றன.*

*இரண்டாம் பாகமான, 9:51 முதல் 18:30 வரையுள்ள பகுதியானது லூக்காவுக்கு மட்டுமே உரிய தனிச்சிறப்பான பகுதியாக உள்ளது. (இவற்றில் மிகச் சிறிய அளவே பிற சுவிசேஷ விவரங்களில் காணப்படுகிறது.) இந்தப் பகுதியானது, இயேசு "எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்பி" - குறைந்தபட்சம் அவர் அதைச் சிந்தையில் இருத்தினார் - என்று காண்பிக்*

*கிறது (9:51ஐக் காணவும்). பொதுவாக இது லூக்காவினால் பதிவு செய்யப் பட்டபடி, யூதேயா - பெரேயாவில் ஊழியம் என்று அழைக்கப்படுகின்றது. இந்த அதிகாரங்களில் அற்புதங்களும் செயல்பாடுகளும் விவரிக்கப் படுகின்றன, ஆனால் போதனை மீதே வலியுறுத்தம் உள்ளது. முதலில், இந்தப் பகுதியானது போதனை மற்றும் உவமைகள் ஆகியவற்றின் நோக்கமெதுவுமற்ற தொகுப்பு என்பதுபோல் காணப்படுகிறது, ஆனால் இதில் லூக்கா, தமது புறஜாதி வாசகர்களுக்கு இயேசுவின் ஊழியத்தின் அர்த்தத்தை விளக்குவதற்காகப் புத்தம்புதிய கருத்துக்களைப் பயன் படுத்தினார்.*

---

## லூக்கா சுவிசேஷப் புத்தகத்தின் வரைக்குறிப்பு

I. *மனிதன் குமாரன் ஆயத்தப்படுதல் (1:1-4:13)*
   A. *முன்னுரை (1:1-4).*
   B. *பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம்.*
      1. *யோவான் ஸ்நானனின் பிறப்பு பற்றி சகரியாவுக்கு அறிவிப்பு (1:5-25).*
      2. *இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்கு அறிவிப்பு (1:26-38).*
      3. *மரியாள் எலிசபெத்தைச் சந்தித்தல் (1:39-56).*
      4. *யோவானின் பிறப்பு மற்றும் தொடக்க கால வாழ்வு (1:57-80).*
      5. *இயேசுவின் பிறப்பு (2:1-7).*
      6. *இயேசுவின் பிறப்பு பற்றி மேய்ப்பர்களுக்கு அறிவிப்பு (2:8-20).*
      7. *இயேசுவைத் தேவாலயத்தில் ஒப்புக் கொடுத்தல் (2:21-39அ).*
   C. *நாசரேத்தூருக்குத் திரும்புதலும் இயேசுவின் தொடக்க கால வளர்ச்சியும் (2:39ஆ, 40).*
   D. *இயேசு தமது பன்னிரெண்டு வயதில் தேவாலயத்திற்குச் செல்லுதல் (2:41-50).*
   E. *நாசரேத்தூருக்குத் திரும்புதலும் இயேசுவின் தொடர்ந்த வளர்ச்சியும் (2:51, 52).*
   F. *இயேசு ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானபோது அவரது ஊழியத்தின் தொடக்கம். (லூக்கா மட்டுமே இயேசுவின் வயதை இவ்விடத்தில் கொடுத்துள்ளார் ன்3:23தி.)*
      1. *யோவானின் ஊழியம் (யோவான் கைது செய்யப்படுதல் இங்கு முன் எதிர்பார்ப்பாக*

*குறிப்பிடப்பட்டது) (3:1-20).*

2. *இயேசுவின் ஞானஸ்நானமும் வம்ச வரலாறும் (3:21-38).*
3. *இயேசு சோதிக்கப்படுதல் (4:1-13).*

G. *இந்த முதலாவது காலகட்டத்தை நினைவில் வைத்துக் கொள்ள உதவியாக, 'ய'க்களின் வரிசைத் தொடர் ஒன்று:*

1. *பெத்லகேமில் பிறப்பு* (Birth).
2. *நாசரேத்தூரில் பிள்ளைப் பருவம்* (Boyhood).
3. *யோர்தானில் ஞானஸ்நானம்* (Baptism).
4. *(இயேசுவின் வம்ச) வரலாற்றுப் பின்னணி* (Back ground).
5. *சாத்தானுடன் போராட்டம்* (Battle).

II. *மனித குமாரனின் வல்லமை (4:14-9:50)*

A. *ஊழியம் தொடங்கப்பட்டது.*

1. *கலிலேயாவுக்கு: இயேசுவின் பிரசங்கித்தல் தொடங்குதல் (4:14, 15).*
2. *நாசரேத்தூரில் முதன்முறை புறக்கணிக்கப்படுதல் (4:16-30).*
3. *கப்பர்நகூமில் பிரசங்கித்தல் மற்றும் குணமாக்குதல் (4:31-41).*
4. *தனிமையான ஓரிடத்திற்கும் பின்பு கலிலேயாவில் ஒரு பயணமும் (4:42-44).*
5. *அற்புதமான மீன்பிடிப்பு - மற்றும் மீனவர்களை அழைத்தல் (5:1-11).*
6. *தொழுநோயாளர் ஒருவரைக் குணமாக்குதல்; ஜெபிக்கத் தனியே செல்லுதல் (5:12-16).*

B. *ஊழியம் விமர்சிக்கப்படுதல்.*

1. *[திமிர்வாதமுள்ள] மனிதர் கூரையின் வழியே இறக்கப்படுதல் (5:17-26).*
2. *லேவியை அழைத்தல் மற்றும் பாவிகளுடன் உண்ணுதல் (5:27-32).*
3. *உபவாசித்தல் பற்றிய விமர்சனங்கள் (5:33-39).*
4. *ஓய்வுநாள் பற்றிய விமர்சனங்கள் (6:1-11).*

C. *ஊழியம் (அதிகரிக்கப்பட்ட வேகத்தில்) தொடருதல்.*

1. *ஜெபமும் பின்பு பன்னிருவரைத் தேர்ந்து கொள்ளுதலும் (6:12-16).*
2. *சமவெளியில் பிரசங்கம் (6:17-49).*
3. *கப்பர்நகூமுக்கு; நூற்றுக்கு அதிபதி ஒருவரின் வேலைக் காரரைக் குணமாக்குதல் (7:1-10).*
4. *நாயீனுக்கு; ஒரு விதவையின் மகனை உயிருடன் எழுப்புதல் (7:11-17).*

5. யோவானுக்கும் யோவானைப் பற்றியும் இயேசுவின் சாட்சியம் (7:18-35).
6. பரிசேயனான சீமோனின் வீட்டில் (7:36-50) (வ. 41-43 லூக்காவுக்கே விசேஷமானவை).
7. கலிலேயாவில் இன்னொரு பயணம் (8:1-3).
8. உவமைகள் (விதைப்பவன் மற்றும் விளக்கு) மற்றும் இயேசுவின் உண்மையான உறவினர்கள் (8:4-21).
9. கடலைக் கடந்து செல்லுதல் மற்றும் புயலை அமர்த்துதல் (8:22-25).
10. கதரேனருடைய நாட்டில்; அசுத்த ஆவிபிடித்த ஒரு மனிதர் (8:26-39).
11. கடலின் குறுக்காகப் பின்னிடுதல்; யவீருவின் மகளைக் குணமாக்குதல் மற்றும் இணையாக நடந்த ஒரு அற்புதம் (8:40-56).

D. ஊழியம் உச்சக்கட்டத்தை அடைதல்.
1. பன்னிருவரை ன்ஊழியத்திற்குதி வெளியே அனு ப்புதல் (மற்றும் ஏரோதுவின் கவனத்தைக் கவருதல்) (9:1-10அ).
2. பெத்சாயிதாவுக்கு அண்மையில் தனிமையான ஒரு இடத்திற்கு; மற்றும் ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் (9:10ஆ-17).
3. ஜெபம் - மற்றும் மாபெரும் அறிக்கை (9:18-22). இயேசுவின் சீஷர்கள் தங்களின் சிலுவைகளை எடுத்துக்கொள்ளும்படி அறைகூவல் விடப்படுதல் (9:23-27).
4. மறுரூபமாகுதல் (9:28-36).
5. மலையிலிருந்து கீழே இறங்கி வருதல்; அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு பையனைக் குணமாக்குதல்; இயேசுவின் மரணத்தைப் பற்றி சீஷர்களுக்கு மீண்டும் கூறுதல் (9:37-45).
6. சீஷர்கள் புரிந்துகொள்ளத் தவறுதல்: யார் பெரியவர் என்பது பற்றிய விவாதம் (மற்றும் தங்களைப் பின்பற்றாத ஒருவரைத் தண்டிக்க விருப்பம்) (9:46-50).

III. மனித குமாரனின் பிரசங்கம் (9:51-18:30).

A. இயேசு “எருசலேமுக்குப் போகத் தமது முகத்தைத் திருப்புதல்” (9:51ஐக் காணவும்).
1. சமாரியா வழியாகக் கடந்து செல்லுதல் (“அக்கினி இறங்கி வரும்படி” அழைக்க [லாமா] என்று கேட்ட நிகழ்ச்சி) (9:51-56).
2. சீஷர்களாயிருக்கத் தகுதியானவர்கள் (9:57-62).
3. எழுபது பேர்களை அனுப்புதல் (10:1-24).

4. நியாய சாஸ்திரியினால் சோதிக்கப்படுதலும் நல்ல சமாரியன் உவமையும் (10:25-37).
5. பெத்தானியில்: மரியாளின் தேர்ந்துகொள்ளுதல், "நல்ல பங்கு" (10:38-42).
6. பொதுவான போதனை:
    a. ஜெபம் - மற்றும் ஜெபத்தைப் பற்றிய அறிவுறுத்துதல் (11:1-13).
    b. குற்றஞ்சாட்டுதல் - மற்றும் அசுத்த ஆவிகள், கீழ்ப்படிதல் ஆகியவை பற்றிய போதனை, அடையாளம் தேடுதல் (11:14-36).
    c. பரிசேயருடன் உண்ணுதல்; பரிசேயர்களுக்கும் நியாய சாஸ்திரிகளுக்கும் சாபங்கள் (11:37-54).
    d. திரளான மக்கள் கூட்டமும் பொதுவான போதனையும் (12:1-12).
    e. சொத்துரிமை பற்றிய ஒரு கேள்வியும் செல்வந்தனான ஒரு மதியீனன் பற்றிய கதையும் (12:13-21).
    f. கவலை, பரலோக பொக்கிஷம், விழித்திருத்தல், மற்றும் உக்கிராணத்துவம் பற்றிய உபரிப் போதனை (12:22-59).
    g. ஒரு வரலாற்றுக் குறிப்பு; மனந்திரும்புதல் பற்றிய போதனை (13:1-9).
7. கூனியாய் இருந்த ஒரு பெண்ணைக் குணமாக்குதல்; விமர்சனம் (13:10-17).
8. இராஜ்யமானது கடுகு விதைக்கும் புளித்த மாவுக்கும் ஒப்பிடப்படுதல் (13:18-21).

B. இயேசு "எருசலேமுக்குத் தமது வழியைத்" தொடங்குதல் (13:22).
1. ஒரு சிலர் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்கள் என்று போதித்தல் (13:23-30).
2. கலிலேயாவுக்கு திரும்புதல்;ஏரோதுவைப் பற்றி இயேசு எச்சரிக்கப்படுதல்; இயேசு எருசலேமில் மரிக்க வேண்டும் என்ற அவரது கூற்று ("எருசலேமே எருசலேமே"; வ. 34) (13:31-35).
3. ஓய்வு நாளில் ஒரு பரிசேயருடன் உண்ணுதல் மற்றும் நீர்க்கோவை வியாதியுள்ள ஒரு மனிதரைக் குணமாக்குதல் (14:1-6). பண்டிகைகள் பற்றிய ஒரு போதனை வரிசை:
    a. திருமண இடத்தில் முதலிடத்தை நாடுதல் பற்றிய உவமை (14:7-11).
    b. நண்பர்களை மட்டும் அழைக்கக் கூடாது என்பது பற்றிய பாடம் (14:12-14).

c. *மாபெரும் விருந்து பற்றிய உவமை (14:15-24).*

4. *சீஷத்துவத்தின் விலை (14:25-35).*

5. *பாவிகளுடன் உண்பதற்காக விமர்சிக்கப்படுதல் (15:1, 2). இழந்துபோன ஆத்துமாக்களை விட உலகப் பொருட்களின் மீது அதிக அக்கறை காண்பித்த பரிசேயர்கள், வேதபாரகர்கள் ஆகியோருக்கு எதிரான பாடங்களின் வரிசைத் தொடர்:*

a. *இழந்துபோன பொருட்கள் பற்றிய உவமைகள் (15:3-32).*

b. *அநீதியான உக்கிராணக்காரன் பற்றிய உவமை - அத்துடன் பொதுவான போதனை (16:1-18).*

c. *ஐசுவரியவானும் லாசருவும் பற்றிய கதை (16:19-31).*

d. *குற்றங்கள் பற்றிய பொதுவான போதனை மற்றும் விசுவாசத்திற்கேற்ற கீழ்ப்படிதல் (17:1-10).*

C. *எருசலேமுக்குச் செல்லும் வழியில்; இயேசு சமாரியா, கலிலேயா வழியாகக் கடந்து செல்லுதல் (17:11).*

1. *பத்து தொழுநோயாளிகள் (17:11-19).*

2. *வரவிருந்த ராஜ்யம் மற்றும் அவரது இரண்டாம் வருகை ஆகியவை பற்றிய போதனை (17:20-37).*

3. *ஜெபத்தைப் பற்றிய உவமைகள்:*

a. *விடாமுயற்சியுள்ள ஒரு விதவை (18:1-8).*

b. *பரிசேயனும் ஆயக்காரனும் (18:9-14).*

4. *சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தல் (18:15-17).*

5. *செல்வந்த இளைஞனான அதிகாரியும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் கிடைக்கும் பலன்களும் (18:18-30).*

IV. *மனித குமாரனின் பாடுகள் (18:31-23:56).*

A. *கடைசிப் பயணம் (மற்ற எல்லாப் பயணங்களும் இந்தப் பயணத்தையே சுட்டிக் காண்பித்தன):*

1. *இயேசுவும் அவரது சீஷர்களும் அவரது மரணத்திற்காக எருசலேம் செல்லுவதாக இயேசு அவர்களிடம் கூறுதல் (18:31-34).*

2. *எரிகோவில்: பார்வையற்ற மனிதரைக் குணமாக்குதல் (18:35-43).*

3. *எரிகோவில்: சகேயு (19:1-10).*

4. *எருசலேமுக்கு அண்மையில்: திரவியங்களின் உவமை (19:11-27).*

B. *கடைசி வாரம்:*

1. *ஞாயிற்றுக்கிழமை: வெற்றிப் பிரவேசம் (19:28-40).*

2. *திங்கட்கிழமை:*

a. *எருசலேமுக்காக அழுதல்;*

காசுக்கடைக்காரர்களை வெளியே துரத்துதல் (19:41-46).
    b. இயேசுவின் அன்றாட போதனை; அவரது விரோதிகள் அவரைக் கொலை செய்யத் திட்டமிடுதல் (19:47, 48).
  3. செவ்வாய்க்கிழமை: கேள்விகளின் நாள்.
    a. "எந்த அதிகாரத்தினால்?" (20:1-8).
    b. திராட்சத் தோட்ட உவமை; புறக்கணிக்கப்பட்ட கல்லைப் பற்றிய போதனை (20:9-19).
    c. இராயனுக்கு வரிசெலுத்துதல் பற்றிய ஒரு கேள்வி (20:20-26).
    d. உயிர்த்தெழுதல் பற்றிய ஒரு கேள்வி (20:27-39).
    e. தாவீதின் குமாரன் பற்றிய ஒரு கேள்வி (20:40-44).
    f. "வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (20:45-47).
    g. விதவையின் காணிக்கை (21:1-4).
    h. தேவாலயமும் எதிர்காலம் பற்றிய ஒரு உரையும் (21:5-38).
  4. பஸ்கா அன்று சூழ்ச்சி (22:1-6).
  5. வியாழக்கிழமை:
    a. கடைசி இராப்போஜனம் (22:7-38).
    b. கெத்செமனே தோட்டம் (22:39-46).
C. கடைசி நாள்:
  1. காட்டிக் கொடுக்கப்படுதல் (22:47-53).
  2. பிரதான ஆசாரியருக்கு முன்பாக விசாரிக்கப்படுதல் (மற்றும் பேதுருவினால் மறுதலிக்கப்படுதல்) (22:54-65).
  3. சனதெரீன் சங்கத்தாரால் [இயேசுவுக்கு மரணதண்டனை] உறுதிப்படுதல் (22:66-71).
  4. பிலாத்துவுக்கு முன்பாக இழுத்துச் செல்லப்படுதல் (23:1-6).
  5. ஏரோதுவிடம் இழுத்துச் செல்லப்படுதல் (23:7-12).
  6. மீண்டும் பிலாத்துவிடம் இழுத்துச் செல்லப்படுதல்: "பரபாஸா அல்லது இயேசுவா?" (23:13-25).
  7. கல்வாரி செல்லும் வழியில் (23:26-31).
  8. எனக்காக இயேசு சிலுவையில் அறையப்படுதல் (23:32-49)! (சிலுவையில் மனம் வருந்திய கள்ளன் பற்றிய வரலாறு லூக்காவில் விசேஷமானது).
  9. அரிமத்தியாவூர் யோசேப்பினால் அடக்கம் செய்யப்படுதல் (23:50-56).

V. மனித குமாரனின் பரிபூரணத்துவம் (24:1-53). (இயேசுவின்

உயிர்த்தெழுதலானது, அவர் வெறும் மனிதர் என்பதை விட மேலானவர் என்பதைக் காண்பித்தது; ரோமர் 1:5ஐக் காணவும்).

A. வெறுமையாயிருந்த கல்லறை.
   1. பெண்கள் கல்லறைக்குச் செல்லுதல் (24:1-11).
   2. பேதுரு வெறுமையாயிருந்த கல்லறைக்கு ஓடுதல் (24:12).
B. உயிர்த்தெழுதலுக்குப் பின் தரிசனங்கள்:
   1. எம்மாவு செல்லும் சாலையில் இரு மனிதர்களுக்கு (24:13-35). (அவர்கள் இதற்கு முன் அறிந்திருந்த அன்பார்ந்த நண்பராயிருப்பதாகவே இயேசு காண்பிக்கப்பட்டார்.)
   2. பதினோரு பேருக்கு: பிரதான கட்டளை; எருசலேமில் காத்திருக்கும்படி அறிவுறுத்தல் (24:36-49).
C. பரத்துக்கேறுதல் (24:50, 51).
D. காத்திருப்பதற்காக சீஷர்கள் எருசலேமுக்குத் திரும்புதல் (24:52, 53). (இவ்விடத்தில் லூக்கா தமது எழுதுகோலைக் கீழே வைத்தார் - மீண்டுமாக விரைவிலேயே இந்த வரலாற்றின் தொடர்ச்சியை நடபடிகளின் புத்தகத்தில் எழுதும்படிக்கு அப்படிச் செய்தார்.)

முடிவுரை:

A. இவ்விதமாக லூக்காவின் “அவர் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கினவை” (அப். 1:1) பற்றிய விவரங்கள் முடிவடைகின்றன - இவைகள் ஆறு “T” க்களினால் உச்சகட்டமாக்கப்படுகிறது:
   1. அவரது மேஜை (Table).
   2. அவரது கண்ணீர் (Tears).
   3. அவரது சோதனைகள் (Trials).
   4. அவரது மரம் (Tree).
   5. அவரது கல்லறை (Tomb).
   6. அவரது வெற்றி (Triumph).
B. பரிபூரணமான இந்த மனித குமாரன் இன்னமும் வாழ்கின்றார், அவர் உங்களுக்கு உதவ முடியும் (எபி. 4:15, 16ஐக் காணவும்).

---

குறிப்புகள்

[1]அளவை வைத்துப் பார்க்கும்போது, லூக்கா மற்றும் நடபடிகள் புத்தகங்களை எழுதியவர் புதிய ஏற்பாட்டிற்கு அதிகம் பங்களித்தவராக இருக்கின்றார். [2]நீக்குதலின் இந்தச் செயல்முறையானது மெரில் சி. டென்னீ அவர்களின் *New Testament Survey* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961), 173 என்ற புத்தகத்தில்

*கலந்துரையாடப்பட்டுள்ளது.* [3]*லூக்கா மற்றும் நடபடிகள் புத்தகத்தின் எழுத்தாளர்த்துவம் பற்றிய மிகவும் விவரமான கலந்துரையாடலுக்கு, இன்றைக்கான சத்தியம் வெளியிட்டுள்ள "அப்போஸ்தலருடைய நடபடிகள், பாகம் 1" என்ற புத்தகத்தின் 19-22 பக்கங்களில் காணவும்.* [4]*இவரது பெயரில் இலத்தீன் வடிவமானது "ஒளியைக் கொண்டு வருபவர்" என்று அர்த்தப்படுகிறது. கிரேக்க மொழியில் "லூக்கா" என்பது, தோன்றிய இடம் ஒன்றைக் குறிப்பிடவும் கூடும்:* "from Lucania." (லூக்கேனியாவிலிருந்து.) [5]*பிற்காலத்தியக் கையெழுத்துப் பிரதி ஒன்று, அப். 11:28ல் "நாங்கள்" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது.* (Bruce Metzger, *A Textual Commentary on the Greek New Testament*, 3rd ed. [New York.: United Bible Societies, 1971], 344-45). [6]*லூக்கா 1:1-4ல் லூக்காவின் அறிமுக உரையானது, இவர் இயேசுவைத் தனிப்பட்ட வகையில் சுயமாக அறிந்திருந்தது இல்லை என்று சுட்டிக் காண்பிக்கிறது, ஆனால் ''ஆதிமுதல்'' என்ற வார்த்தைகள் (அவ்வசனப்பகுதியில் இருமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன; 1:2ல் 'ஆரம்ப முதல்' என்றும், 1:3ல் 'ஆதிமுதல்' என்றும் உள்ளது), இவர் சபையின் வரலாற்றுத் தொடக்க காலத்திலேயே கிறிஸ்தவரானார் என்று சுட்டிக்காண்பிக்கின்றன.* [7]*ஏவுதல் பெற்றிராத பாரம்பரியத்தின்படி, இயேசுவின் தொடக்க கால வாழ்வு பற்றி லூக்கா எழுதுவதற்கு இயேசுவின் தாயான மரியாளே ஆதாரமூலமாக இருந்தார்கள்.* [8]*1 தீமோத்தேயு 5:18ல் (இது கி.பி. சுமார் 65ல் எழுதப்பட்டது), பவுல் மத்தேயு 10:10 அல்லது லூக்கா 10:7ல் இருந்து மேற்கோள் காண்பித்திருக்கலாம்.* [9]*இந்த வசனப்பகுதியை அப். 1:1உடன் ஒப்பிடவும்.* [10]*"புத்தக வெளியீடு" என்பது புத்தகத்தின் பிரதிகளை எடுத்து அவற்றை விநியோகித்தலைக் குறிக்கிறது.*

[11]*மத்தேயு, மாற்கு, மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷப் புத்தகங்கள் இந்தக் கூற்றில் இருந்து விலக்கப்படுவதாக இருக்கும்.* [12]*லூக்காவின் ஆராய்ச்சியில் அவரைப் பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தியிருப்பார். ஆராய்ச்சியில் இருந்து பெற்ற கருத்துக்களை லூக்கா பயன்படுத்துதலில் பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாகவே வழிநடத்தியிருப்பார்.* [13]*அடுத்த பாடத்தில் கலந்துரையாடப்பட்டுள்ள புத்தகத்தின் வலியுறுத்தங்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும்.* [14]*ஞானிகள் ஒரு அரசரைக் காணவந்தார்கள் என்று மத்தேயு வலியுறுத்துகையில், மேய்ப்பர்கள் ஒரு குழந்தையைப் பார்க்க வந்தார்கள் என்று லூக்கா வலியுறுத்தினார்.* [15]*ஆவியானவரின் ஊழியத்தின் மீதான இந்த வலியுறுத்தம் நடபடிகளின் புத்தகத்தில் தொடருகிறது.* [16]*மத்தேயு சுவிசேஷத்தில் லூக்கா சுவிசேஷத்தைக் காட்டிலும் அதிகமான அதிகாரங்கள் உள்ளன, ஆனால் லூக்கா சுவிசேஷத்தில் அதிக விஷயங்கள் அடங்கியுள்ளன. நமது தமிழ்ப் புதிய ஏற்பாட்டில், மத்தேயு சுவிசேஷம் நாற்பத்து நான்கரைப் பக்கங்களும் லூக்கா சுவிசேஷம் சுமார் நாற்பத்து எட்டரைப் பக்கங்களும் கொண்டவையாக உள்ளன.*

# 5

# யோவான் சுவிசேஷம்

## தேவகுமாரனாகிய

## *கிறிஸ்து*

*யோவான் சுவிசேஷமானது சொல்லாடலிலும் பாணியிலும், சுவிசேஷ விவரங்களிலேயே மிகவும் எளிமையானதாக உள்ளது. இது, புதிய ஏற்பாட்டுக் கிரேக்க மொழியைக் கற்றுக்கொள்ளத்தொடங்கும் மாணவர்களுக்குப் பயன்படுத்தப்படும் அளவுக்கு மிகவும் எளிமையான தாக உள்ளது. இதற்கு மறுபுறத்தில், யோவான் சுவிசேஷமானது இது கலந்துரையாடுகின்ற தலைப்புக்களின் கருத்தமைவில், நான்கு சுவிசேஷப் புத்தகங்களிலும் இது பல வழிகளில் அதிகம் சிக்கலுள்ளதாக இருக்கிறது.*

*யோவானின் சுவிசேஷ விவரமானது தனித்தன்மையுடன் நிற்கிறது: இது தனக்கு முற்பட்ட மூன்று சுவிசேஷங்களின் விவரங்களில் இருந்து மிகச் சிறிய அளவே நகலெடுக்கிறது; இது ஒரு தனிச்சிறப்பான முன்னுரையைக் கொண்டுள்ளது (1:1-18) மற்றும் இது ஒரு தனிச் சிறப்பான நோக்க வாக்கியத்தைக் கொண்டுள்ளது (20:30, 31). யோவான் புத்தமானது, முதல் மூன்று புத்தகங்களில் இருந்து மாறுபட்டதாக இருப்பது ஏன் என்பதைப் புரிந்துகொள்ளுவதற்கு, நாம் இது எழுதப்பட்ட சூழ்நிலைகளைப் புரிந்து கொள்வது அவசியமானதாக உள்ளது.*

## யோவான் சுவிசேஷத்திற்கு அறிமுகம்

### இந்த புத்தகத்தின் எழுத்தாளர்

*இந்தப் புத்தகமானது, "இயேசுவுக்கு அன்பாயிருந்தவர் ... இவைகளை எழுதினார்" (யோவா. 21:20, 24) என்று அடையாளப்படுத்துகிறது.[1] அப்போஸ்தலரான யோவானே இந்த சீஷர் என்று தொடக்க காலக் கிறிஸ்தவர்கள் நம்பி ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.[2] இரேனியு அவர்கள் முதல் மூன்று சுவிசேஷ விவரங்களைக் குறிப்பிட்டு, "பின்பு கர்த்தரின் மார்பின் மீது சாய்ந்திருந்த அவரது சீஷரும் கூட ஆசியாவில் இருந்த எபேசுவில் தங்கியிருந்தபோது ஒரு சுவிசேஷத்தை வெளியிட்டார்" என்று கூறினார்.[3] இந்தப் புத்தகம் யோவானால் எழுதப்பட்டது என்று குறிப்பிட்டவர்களில் இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அந்தியோகியா வைச் சேர்ந்த தெயோபிலுவும், அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த கிளமென்ட்டும், தெர்த்துலியனும் (c. கி.பி. 155-225), ஓரிகனும் மற்றும்*

*ஹிப்போலிட்டஸ்ஸும் (c. கி.பி. 170-235) இருந்தார்கள்.*

*இந்த முடிவுக்கு, இப்புத்தகத்தின் உள்ளார்ந்த சான்றும் ஒத்துப் போகிறது.[4] இதன் எழுத்தாளர், யூதர்களின் பண்டிகைகள், யூதப்பழக்க வழக்கங்கள், மற்றும் சமாரியர்களுடன் யூதர்களுக்கு இருந்த உறவுமுறைகள் ஆகியவை பற்றிய அறிவுகொண்ட ஒரு யூதராக இருந்தார். மற்றும் இவர் பொதுவாகப் பலஸ்தீனம் மற்றும் குறிப்பாக எருசலேம் பற்றிய உள்ளரங்கமான அறிவுகொண்டிருந்த ஒரு பலஸ்தீனிய யூதராயிருந்தார். இவர் தாம் எழுதிய பல நிகழ்ச்சிகளைக் கண்ணால் கண்ட சாட்சியாக இருந்தார் (1:14; 21:24ஐக் காணவும்). இந்த உண்மைகள் யாவும் அப்போஸ்தலரான யோவானுக்குப் பொருந்துகின்றன.[5]*

*யோவானுடைய வாழ்வின் ஒரு சுருக்கமான குறிப்புரை முறையானதாக உள்ளது: இவரது பெயர், "யெகோவா இரக்கமுள்ளவராயிருந்துள்ளார்" என்று அர்த்தப்படுகிற ஒரு எபிரெய வார்த்தையின் சுருக்கமான வடிவமாக உள்ளது. செபதேயுவும் சலோமியும் இவரது பெற்றோர்களாயிருந்தார்கள் (மாற். 1:19, 20; 16:1 [மாற். 16:1ஐ மத். 27:56உடன் ஒப்பிடவும்]).[6] இவரும் இவரது சகோதரரான யாக்கோபும் மீனவர்களாக இருந்தார்கள் (மாற். 1:19, 20) - இவர்கள் பேதுருவுக்குத் தொழிற் கூட்டாளிகளாக இருந்தார்கள் (லூக். 5:10). யோவானின் குடும்பம் நல்ல வசதிமிக்கதாக இருந்தது. இவர்கள் கூலியாட்களை வைத்து இருந்தார்கள் (மாற். 1:20), மற்றும் இவர்கள் அரசியல் தொடர்பு உடையவர்களாக இருந்தார்கள். (யோவான் பிரதான ஆசாரியரால் அறியப்பட்டிருந்தார் மற்றும் பிரதான ஆசாரியரின் அரண்மனை முற்றத்திற்குள் வருவதற்குப் பேதுருவுக்கு அனுமதி பெற்றுத்தந்தார் [யோவா. 18:15, 16].)*

*ஒருவேளை, யோவான் 1:35-40ல் பெயர் குறிப்பிடப்படாத சீஷரான யோவான், யோவான் ஸ்நானனை பின்பற்றியவராக இருந்திருக்கலாம். எந்த வகையில் பார்த்தாலும், இவரை இயேசு தமது சீஷர்களில் ஒருவராக இருக்கும்படி அழைத்தார் (மத். 4:18-22). பின்னாட்களில் இவர் பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராகத் தேர்ந்து கொள்ளப்பட்டார் (மத். 10:2). இவர் பொதுவாக அப்போஸ்தலர்கள் எல்லாரிலும் இளையவராகக் கருதப்பட்டார்.[7]*

*யோவான் கர்த்தருடன் ஒரு சிறப்பான உறவுமுறையை மகிழ்வுடன் அனுபவித்தார்: இவர் உள்ளான வட்டத்தில் இருந்த மூவரில் ஒருவராக இருந்தார் (மாற். 5:37-40; 9:2; 14:33) மற்றும் கடைசி இராப்போஜனத்தின்போது கனத்திற்குரிய இடமளிக்கப்பட்டிருந்தார் (யோவா. 13:23). இவர் தம்மை இயேசு மிகவும் அன்புகூர்ந்த சீஷன் என்று குறிப்பிட்டுக் கொண்டார் (13:23; 19:26; 20:2; 21:7, 20).*

*பரிவிரக்கமுள்ள மனிதராயிருந்த யோவான், தம்மை இயேசு அழைத்த போது தீவிரமான உணர்ச்சி வசப்பட்டவராயிருந்தார் (லூக். 9:49-56; மாற். 3:17). அவர் கோப உணர்ச்சி வசப்பட்டவராயிருந்தார் (மாற். 10:35-37). கிறிஸ்து இந்த உணர்வைக் கட்டுப்படுத்தி இதை மேன்மையான பயன்பாடுகளுக்குத் திருப்பக் கூடியவராக இருந்தார். இயேசு மரிப்பதற்குச் சற்று முன்னதாக, தமது தாயை யோவானின் பாதுகாப்பில் ஒப்பவித்தார்*

*(யோவா. 19:25-27). கடைசியில் யோவான் அன்பின் அப்போஸ்தலர் என்று அறியப்படலானார். ("அன்பு" என்ற வார்த்தையானது 1 யோவான் நிருபத்தில் ஏறக்குறைய ஐம்பது முறைகள் காணப்படுகிறது.)*

*சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, யோவான் அப்போஸ்தலர்களின் மத்தியில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைத் தொடர்ந்து பெற்றிருந்தார் (அப். 3:1; 4:19; 8:14; கலா. 2:9, 10). ஏவப்பட்டிராத பாரம்பரியத்தின்படி, எபேசுவில் இவர் கடைசியாக ஊழியம் செய்தார். ரோமர்களின் துன்புறுத்துதல் தொடங்கியபோது, யோவான் எபேசுவில் இருந்து ஏஜியன் கடலின் குறுக்காக இருந்த பத்மு தீவுக்கு நாடு கடத்தப்பட்டார் என்று வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இருந்து நாம் அறிகின்றோம் (வெளி. 1:9; 2:1ஐக் காணவும்). தொடக்க காலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களின் கூற்றுப்படி, டொமீஷியனின் மரணத்தின்போது, யோவான் எபேசு நகருக்குத் திரும்பி வர அனுமதிக்கப்பட்டார், அங்கே அவர் தமது மரணம் வரையிலும் ஊழியம் செய்தார்.[8] இவர் அநேகமாக எபேசு நகரில் வாழ்ந்தபோது தமது சுவிசேஷ விவரத்தையும் தமது மூன்று நிருபங்களையும் (1, 2 மற்றும் 3 யோவான்) எழுதியிருப்பார்.*

**இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலம்**

*மற்ற மூன்று சுவிசேஷ விவரங்கள் எழுதப்பட்டதற்குப் பின்பு யோவான் சுவிசேஷம் எழுதப்பட்டதாக தொடக்க காலக் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் சுட்டிக்காண்பித்தார்கள். முன்பே எடுத்துரைக்கப்பட்டபடி, மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷங்கள் எழுதப்பட்ட பின்பு, யோவான் "ஆசியாவில் இருந்த எபேசு நகரில் வாழ்ந்த வேளையில்" இந்தப் புத்தகத்தை எழுதியதாக இரேனியு அவர்கள் கூறினார்.[9]*

*யோவான் ஒரு பின்னாளைய சுவிசேஷ விவரத்தை உண்டுபண்ணியது ஏன்?[10] ஒருவேளை, இவர் மற்ற மூன்று சுவிசேஷப் புத்தகங்களுக்கும் துணைப்புத்தகம் ஒன்றை எழுத விரும்பியிருக்கலாம். இவர், ஏற்கனவே மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷப் புத்தகங்களில் ஏற்கனவே கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் நம்பத் தகுந்த கூடுதலான விவரங்களைக் கொடுக்க விரும்பியிருக்கலாம்.*

*இவர், முதல் விவரங்கள் எழுதப்பட்ட பின்பு வளர்ச்சியடைந்திருந்த தவறான கருத்துக்களுடன் போட்டியிட்டு அவற்றைத் தோல்வியடையச் செய்வதற்காகவும் எழுதினார் என்பது தெளிவு. யோவான் மற்றும் 1 யோவான் புத்தகங்களின் ஒப்பீடு இதைச் சுட்டிக் காண்பிக்கிறது.[11] கள்ளபோதகர்கள் எழும்பி இருந்தார்கள், இவர்கள் இயேசுவே கிறிஸ்து என்பதை மறுதலித்தார்கள் (1 யோவா. 2:22). இவர்கள், கிறிஸ்து மாம்சத்தில் வந்திருந்தது இல்லை (2 யோவா. 7; 1 யோவா. 4:2ஐயும் காணவும்) என்றும் இந்த பூமியின் மீது சஞ்சரித்திருந்த இயேசு, எதிர்பார்க்கப்பட்டிருந்த கிறிஸ்துவாக இருந்தது இல்லை என்றும் போதித்தார்கள்.[12] இவ்விதமாக யோவான், "வார்த்தை [இயேசு[13]] மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (யோவா. 1:14) என்று தைரியமாய் உறுதிப்படுத்துதலைக் கொண்டு தமது சுவிசேஷ விவரத்தைத் தொடங்கினார். "இயேசுவே*

*கிறிஸ்து"வாக இருக்கிறார் என்று எல்லாரையும் நம்பச் செய்தல் என்பதே அறிவிக்கப்பட்ட அவரது நோக்கமாக இருந்தது (20:31).*

*மேற்கண்டவைகளை சிந்திக்கும்போது, மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷப் புத்தகங்கள் எழுதப்பட்டுக் காலம் கடந்திருந்தது - அநேகமாகப் பல பத்தாண்டுகள் கடந்திருந்தன - என்பது தெளிவாகிறது. பழைமைவாத எழுத்தாளர்கள் பலர், யோவான் புத்தகம் 90ஆம் ஆண்டுகளில் எழுதப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.[14]*

**இந்தப் புத்தகத்தின் நோக்கம்**

*நாம் குறிப்பிட்டுள்ளபடி, யோவான் சுவிசேஷப் புத்தகம் தனிச்சிறந்த ஒரு நோக்க வாக்கியத்தைக் கொண்டுள்ளது:*

> *இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும் படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (20:30-31).*

*யோவானின் நோக்கமானது நெருங்கிய உறவுபட்டுள்ள மூன்று பகுதி களாகப் பிரிக்கப்படக் கூடும்:*

*(1) யோவான் இயேசுவின் தெய்வீகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக எழுதினார்: "இயேசுவே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாக இருக்கிறார்." இயேசு, தேவனுடைய "ஒரே பேறான குமாரனாயிருக் கின்றார்" (3:16) என்பதை எல்லாரும் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். இயேசுவின் தெய்வீகத்துவம் ஒவ்வொரு பக்கத்திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (1:1; 8:58; 10:30; 14:9; 20:28 ஆகியவற்றைக் காணவும்). "யோவான் தமது எழுதுகோலை மையில் தோய்த்த ஒவ்வொரு முறையும், பின்வரும் ஜெபத்தை சுவாசித்தார்: 'ஆண்டவரே, நான் எழுதுபவற்றின் மூலமாக மனிதர்களை இயேசுவின் மீது விசுவாசத்திற்குள் கொண்டுவாரும்'[15] என்று கூறப்படுகிறது."*

*இயேசுவின் அற்புதங்கள் என்பது யோவானால் அளிக்கப்பட்ட ஒரு நிரூபணமாக உள்ளது. இந்த அற்புதங்களுக்கு "அடையாளங்கள்" (யோவா. 20:30; மற்றும் 2:11; 4:54; 6:2 ஆகியவற்றையும் காணவும்) என்பது யோவானின் வார்த்தையாக உள்ளது:[16] இயேசுவின் உரிமைகோருதல்கள் உண்மையாயிருந்தன என்பதை நிரூபிக்க அவைகள் தேவனிடமிருந்து வந்த அடையாளங்களாய் இருந்தன (2:23; 3:2; 4:54; 6:14). இயேசுவால் செய்யப்பட்ட எல்லா அற்புதங்களிலும் யோவான் ஏழு அற்புதங்களை [மட்டும்] தேர்ந்து கொண்டார் (2:1-11; 4:46-54; 5:1-9; 6:14 [வ. 26, 30ஐக் காணவும்], 16-21; 9:1-41; 11:1-45). இவற்றில் இரு அற்புதங்கள் ஒப்பீட்டு சுவிசேஷங்களில் காணப்படுகையில், மற்ற ஐந்தும் யோவானின் சுவிசேஷ விவரங்களுக்கு மட்டுமே உரியவைகளாய் இருக்கின்றன. யோவானின் இந்தத் தேர்ந்துகொள்ளுதல் பற்றி, மெரில் டென்னீ அவர்கள், "இந்த ஏழு அற்புதங்களும் மனிதன் தன் வாழ்வில் செயல்தாக்கத்தை ஏற்படுத்தும்*

வகையில் சட்டங்களையோ அல்லது நிலைமைகளையோ செயல்விளை விக்க அல்லது மாற்ற முடியாதவனாக இருக்கும் பகுதிகளில் நுணுக்கமாக இயக்கப்பட்டன. இந்தப் பகுதிகளில் மனிதன் செயலற்றவனாயிருக்கை யில், இயேசு செயல்படுபவராக இருந்ததை அவர் தாமே நிரூபித்தார் ...” என்று கருத்துத் தெரிவித்தார்.[17]

(2) இயேசுவில் விசுவாசத்தை உண்டாக்குவதற்காக யோவான் எழுதினார்: “நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும்.” “விசுவாசித்தல்” என்ற வார்த்தை அதன் பல்வேறு வடிவங்களில், யோவான் சுவிசேஷத்தில் ஏறக்குறைய ஒரு நூறு முறைகள் காணப்படுகிறது. இயேசு தமது உரையைக் கவனித்தவர்களிடம், “நானே அவர் [கிறிஸ்து] என்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்” என்று கூறினார் (யோவா. 8:24ஆ).

“விசுவாசம்” என்ற வார்த்தையினால் யோவான், “மனநிலை இணக்கம்” என்பதை அர்த்தப்படுத்தவில்லை. 1:12ல் இவர், விசுவாசித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல் என்ற கருத்துக்களை ஒன்றிற்குப் பதில் இன்னொன்று என்ற வகையில் பயன்படுத்தினார்: “அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.” இயேசுவை விசுவாசித்தல் என்றால், கேள்வியெது வும் இன்றி அவரை ஏற்றுக்கொள்ளுதல் என்பதாக உள்ளது. யோவான் 3:36ல், விசுவாசித்தல் மற்றும் கீழ்ப்படிதல் என்ற கருத்துக்களை ஒன்றிற்குப் பதில் இன்னொன்று என்ற வகையில் பயன்படுத்தினார்: “குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலைநிற்கும்.” உண்மையான விசுவாசம் என்பது எப்போதுமே கீழ்ப்படிதலில் தன்னை விளக்கப்படுத்துகிறது. 2:24ல் “விசுவாசம்” என்பதற்கான கிரேக்க வார்த்தையானது “நம்பி” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[18] ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டும் என்றால், தமது சுயத்தின்மீது என்பதற்கு பதிலாக அவர் இயேசுவிலும், அவரது தியாகத்தின் மீதும் நம்பிக்கை வைக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

(3) மக்கள் ஜீவனை அடையும்படிக்கு யோவான் எழுதினார்: “விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படி யாகவும்.” யோவான் “ஜீவன்” என்பதை சுவாசித்தல் மற்றும் வாழ்வின் இயல்பான பிற செயல்முறைகள் ஆகியவற்றின் கருத்தில் பயன்படுத்த வில்லை. மாறாக, இவர் “விசுவாசிக்கு அவரது இரட்சிப்பில் தரப்படுகின்ற எல்லாவற்றின் மொத்தத்தையும்” குறிப்பிட்டார்.[19] யோவான் 17ல், இயேசுவின் ஜெபத்தில், அவர் “ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்” என்று கூறினார் (17:3).

யோவானின் சுவிசேஷ விவரம் “உலகளாவிய சுவிசேஷம்” என்று அழைக்கப்பட்டுள்ளது. இவர் யூதப்பழக்க வழக்கங்களைத் தனிச் சிறந்த வகையில் விளக்கப்படுத்தினார் என்ற உண்மையானது (எடுத்துக் காட்டாக,

*2:13; 4:9; 19:31 ஆகியவற்றைக் காணவும்), இவரது இலக்காக இருந்த மக்கள் கூட்டம் இவரது சொந்த இனத்திற்கு அப்பாலும் இருந்தார்கள் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. யோவான் சுவிசேஷத்தின் உலகளாவிய உள்ளத் தூண்டுதலின் காரணமாக, இது அடிக்கடி தனித்த சிறு புத்தகமாக அச்சிடப் பட்டுள்ளது. இந்த வடிவத்தில் இது உலகம் முழுவதிலும் கையளிக்கப் பட்டுள்ளது. இப்போது இருக்கின்ற எல்லா இலக்கியங்களிலும் இதுவே மிகப் பரவலாக விநியோகிக்கப்பட்டதென்று அழைக்கப்படுகிறது.*

***இந்தப் புத்தகத்தின் பண்புகள்***

*யோவான் சுவிசேஷத்தின் தனிச்சிறந்த பல பண்புகள் ஏற்கனவே தரப்பட்டுள்ளன. பெரும்பாலான பிற பண்புகள் யாவும் இதன் நோக்கத் துடன் தொடர்புடையவைகளாக உள்ளன.*

*யோவான் சுவிசேஷத்தில் உள்ள ஏழு "அற்புதங்களுடன்" கூடுதலாக, இயேசுவின் ஏழு "நானே அவர்" என்பவைகள் உள்ளன: இவை தெய்வீகத் துவத்திற்கான ஏழு உரிமைகோருதல்களாகும் (6:35; 8:12, 58; 10:11; 11:25; 14:6; 15:1).*[20]

*ஒப்பீட்டு சுவிசேஷங்களில் செய்யப்படுவதுபோல், இயேசுவின் நடைமுறைச் செய்திகளை வலியுறுத்துவதற்குப் பதிலாக, யோவான் அவரது [இயேசுவின்] இயல்பு மற்றும் ஊழியம் ஆகியவற்றின் மீது மிக ஆழமாக உரைகளைச் சித்தரித்தார்.*

*யோவான் சுவிசேஷத்தில், இயேசுவின் வெளியரங்கமான அறிவித்தல் களின் மீதின்றி, தனிநபர்களுடன் அவரது தனிப்பட்ட, உள்ளரங்கமான கலந்துரையாடல்களின் - நிக்கொதேமுவுடன் (அதி. 3) மற்றும் சமாரியப் பெண்ணுடன் (அதி. 4) போன்றவைகள் - மீதே வலியுறுத்தம் உள்ளது. இருபத்தி ஏழு நேர்முகப் பேட்டிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, அவற்றில் சில விரிவானவைகளாகவும், சில சுருக்கமானவைகளாகவும் உள்ளன.*

*யோவான் சுவிசேஷப் புத்தகம் பல்வகைப்பட்ட தனிநபர்களின் பண்புகளைப் பற்றிய படிப்பை அடக்கியுள்ளது - அவற்றில் பல நிக்கொதேமு (3:1-15; 7:50-52; 19:39), பிலிப்பு (1:43-46; 6:5-7; 14:8-11), தோமா (11:16; 14:5, 6; 20:24-29), மரியாளும் மார்த்தாளும் (11:1-40; 12:2-8) போன்ற மறைவான பாத்திரங்களாகவே உள்ளன. பெரும்பாலான நிகழ்ச்சிகளில், இந்த மக்களைப் பற்றிய குறிப்புகள் விசுவாசத்தின் வளர்ச்சியைக் காண்பிக்கின்றன.*

*சுவிசேஷ விவரங்கள் எல்லாமுமே கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி மாபெரும் வலியுறுத்தம் இடுகின்றன; ஆனால் யோவான் சுவிசேஷம் எஞ்சியுள்ள மற்றவற்றை விட அதிகமாகவும் கூட இவ்வாறு செய்கிறது. இந்த சுவிசேஷ விவரத்தின் முழு அரைப் பகுதியானது சிலுவையில் அறைதல் பற்றிக் கூறுகிறது. இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமும் "வேளை" என்று அழைக்கப்படுகிற முடிவு நிறைந்த காலத்தை நோக்கி (2:4; 4:21, 23; 5:25, 28; 7:30; 8:20; 12:23, 27; 13:1) நகருகிறது.*

*யோவான் சுவிசேஷத்தின் தனிச்சிறந்த பிற அம்சங்கள் குறிப்பிடப்*

*படக் கூடும்: இந்த ஒரு சுவிசேஷ விவரம் மட்டுமே மனம் மாறுதலை புதுப்பிறப்பு என்று குறிப்பிடுகிறது (3:3, 5), இந்தப் பாடக் கருத்தை யோவான் தமது முதல் நிருபத்தில் தொடர்ந்தார் (1 யோவா. 2:29; 3:9; 4:7; 5:1, 4, 18). இவர் அப்போஸ்தலர்களை வழிநடத்துவதற்கு ஆவியானவரின் வருகை பற்றி வலியுறுத்தினார் (14:16, 17, 26; 15:26; 16:13, 14).*

**இந்தப் புத்தகத்தின் பிரிவுகள்**

*இயேசுவின் தொடக்க கால ஊழியத்தின் மீதான வலியுறுத்தம் என்பது யோவான் சுவிசேஷத்தின் இன்னுமொரு தனிச்சிறந்த அம்சமாக உள்ளது. ஒப்பீட்டு சுவிசேஷங்களைப் பொறுத்தமட்டில் "மாபெரும் கலிலேய ஊழியம்" என்று அழைக்கப்படுபவற்றிக்கு விரைவாக நகருகின்றன, ஆனால் யோவான் சுவிசேஷமானது எருசலேமிலும் யூதேயாவிலும் இயேசுவின் தொடக்க கால ஊழியம் பற்றிக் கூறுகிறது. இயேசுவின் கலிலேய ஊழியத்தின்போதும்கூட அவர் எருசலேமுக்கு வந்த பயணங்கள் பற்றியும் யோவான் சுவிசேஷம் பதிவு செய்துள்ளது. இந்த வலியுறுத்தங்களின் விளைவாக, யோவான் சுவிசேஷமானது மூன்று (ஒருவேளை நான்கு) பஸ்கா பண்டிகைகள் பற்றிக் குறிப்பிடுகிறது (2:13; 6:4; 11:55-57; 5:1?).[21] யோவான் சுவிசேஷத்தின் எந்த வரைக்குறிப்பும், எருசலேமில் இயேசுவின் ஊழியம்பற்றிய இவரது [யோவானின்] மன ஈடுபாட்டை பிரதிபலிக்க வேண்டும்.*

*அதிகாரம் 13 முதல் 17 வரையிலும் இயேசுவின் அப்போஸ்தலர் களுக்குத் திருப்பப்பட்ட போதனையின் பெரிய அளவுப் பகுதியின் காரணத்தினால், யோவானின் சுவிசேஷ விவரத்தைப் பல புறக்குறிப்புகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கின்றன: (1) இயேசுவின் பொதுவான ஊழியம் (1:19-12:50); (2) இயேசுவின் தனிப்பட்ட ஊழியம் (13:1-17:26); (3) இயேசுவின் உலகளாவிய ஊழியம் (அவரது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல்) (18:1-21:25). டென்னீ அவர்கள் தமது பிரதான கருத்துக்களுக்கு* "C" *என்பவற்றைப் பயன்படுத்தி, இயேசுவின் பொதுவான ஊழியத்தைப் பிரித்தமைத்தார்.[22] டென்னீயின் இந்தத் திறவுகோல் வார்த்தைகளை ஷேக்கல்ஃபோர்டு அவர்கள் தழுவியமைத்து பின்வரும் வரைக்குறிப்பை ஏற்படுத்தினார்: முன்னுரை (1:1-18); இயேசுவின் உரிமை கோருதல்கள் பற்றிய ஆழ்ந்த சிந்தனை* [Consideration] *(1:19-4:54); யூதர்களுடன் விவாதம்* [Controversy] *(5:1-6:71); யூதர்களுடன் கருத்து மோதல்* [Conflict] *(7:1-11:53); இயேசுவின் உரிமைகோருதல் மீதான இடர்ப்பாடு* [Crisis] *(11:54-12:36); சீஷர்களுடன் மாநாடு* [Conference] *(12:37-17:26); இயேசுவின் ஊழியத்தினுடைய முழுமைப்பாடு* [Consummation] *(18:1-20:31); பின்னுரை (21:1-25).[23]*

*யோவான் சுவிசேஷத்தின் பாதிக்கும் மேற்பட்ட பகுதியானது இயேசுவின் மரணத்தை மையம் கொண்டுள்ளது என்பதை வலியுறுத்து வதற்கு, எனது வரைக்குறிப்பில் நான் இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டுள்ளேன்: (1) இயேசுவின் பொதுவான ஊழியம் மற்றும் (2) அவரது ஊழியத்தின் கடைசி வாரம், இது அவரது மரணத்தைச் சுற்றிச் சுழன்றது.*

*முதல் பிரதானப் பிரிவு, எருசலேம் மற்றும் யூதேயாவுக்கு அவரது பயணத்தைச் சித்தரிக்கிறது. இரண்டாவது பிரதானப் பிரிவு, இரு முக்கியப் பகுதிகளைக் கொண்டுள்ளது: (1) அதிகாரம் 13 முதல் 17 வரையிலுள்ள இயேசுவின் சீஷர்களுக்கு அவரது கடைசி வார்த்தைகள் மற்றும், (2) சிலுவையை நோக்கி வழிநடத்திய மற்ற நிகழ்ச்சிகள்.*

---

## யோவான் சுவிசேஷப் புத்தகத்தின் வரைக்குறிப்பு

*அறிமுகம் (முன்னுரை) (1:1-18).*

A. *இயேசுவின் தனிச்சிறந்த தன்மை (வ. 1-5, 14, 16-18ஐக் காணவும்).*

B. *யோவான் ஸ்நானனின் சாட்சி (வ. 6-8, 15ஐக் காணவும்).*

I. *தேவகுமாரனின் ஊழியம்: தயாரிப்பின் மூன்று ஆண்டுகள் (1:19-11:57).*

- A. *அவரது ஊழியத்தின் தொடக்கம் (1:19-2:12)*
  1. *அவரது முதல் சீஷர்கள் (1:19-51)*
     - a. *சாட்சியம்: “இதோ, ... தேவ ஆட்டுக்குட்டி!” - மற்றும் இயேசுவின் ஞானஸ்நானத்திற்கு ஒரு குறிப்பு.*
     - b. *சீஷர்கள்: அந்திரேயா, பேதுரு, பிலிப்பு, நாத்தான்வேல் (மற்றும் யோவான்?).*
  2. *அவரது முதல் அற்புதம் (2:1-11).*
  3. *கப்பர்நகூமுக்கு அவரது முதல் பயணம் (2:12).*
- B. *அவரது தொடக்க கால யூதேயா ஊழியம் (2:13-3:36).*
  1. *எருசலேமுக்கு: பஸ்கா (அவரது ஊழியத்தின்போது முதல் பஸ்கா) (2:13).*
  2. *எருசலேமில் (2:14-3:21):*
     - a. *காசுக்கடைக்காரர்களைத் துரத்துதல் (2:14-17).*
     - b. *உயிர்த்தெழுதல் பற்றிப் போதித்தல் (2:18-22).*
     - c. *அற்புதங்கள் நிகழ்த்துதல் (2:23-25).*
     - d. *நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (3:1-21) - புதிய பிறப்பு பற்றிய அறைகூவல்.*
  3. *யூதேயாவில் (3:22-36).*
     - a. *இயேசு மற்றும் அவரது சீஷர்களின் வெற்றி (3:22; மற்றும் 4:1ஐயும் காணவும்).*
     - b. *யோவானுடைய சீஷர்களின் பொறாமை (3:23-36).*
- C. *கலிலேயா, யூதேயா மற்றும் வேறு இடத்தில் அவரது ஊழியம் (4:1-11:54).*

1. *கலிலேயா செல்லும் வழியில் (4:1-45).*
    a. *பயணம் தொடங்குதல் (4:1-3).*
    b. *பயணம் தடைப்படுதல்: கிணற்றண்டையில் சமாரியப் பெண் (4:4-42).*
    c. *பயணம் நிறைவடைதல் (4:43-45).*
2. *கலிலேயாவில்: ஒரு அதிகாரியின் மகனைக் குணமாக்குதல் (4:46-54).*
3. *பண்டிகைக்காக (இரண்டாவது பஸ்கா?) எருசலேமுக்குத் திரும்புதல் (5:1-47).*
    a. *ஊனமுற்ற ஒரு மனிதர் இயேசுவால் குணமாக்கப்படுதல் - மற்றும் பகை உணர்வு (5:1-17).*
    b. *தேவனுடன் சமமாயிருப்பதாக இயேசுவால் உரிமைகள் கோரப்படுதல் - மற்றும் சாட்சிகள் (5:18-47).*
        *(1) யோவானின் சாட்சி.*
        *(2) இயேசுவின் அற்புதங்களின் சாட்சி.*
        *(3) தேவனின் சாட்சி.*
        *(4) வேத வசனங்களின் சாட்சி.*
4. *கலிலேயாவுக்குத் திரும்புதல் (6:1-71):*
    a. *ஐயாயிரம் ஆண்களுக்கு உணவளித்தல் - இயேசுவை ராஜாவாக்க மக்கள் விரும்புதல் (6:1-15). (6:4ல் ஒரு பஸ்கா குறிப்பிடப்படுகிறது - மூன்றாவது?)*
    b. *தண்ணீரின் மேல் நடத்தல்; மக்கள் திகைத்தல் (6:16-25).*
    c. *ஜீவ அப்பம் பற்றிய போதனை; மக்கள் இயேசுவை விட்டுச் செல்லுதல் (6:26-71).*
        *(1) பலர் விட்டுச் செல்லுதல் (வ. 66).*
        *(2) ஒரு சிலர் நிலைத்திருத்தல் (வ. 67, 68).*
        *(3) ஒருவர் காட்டிக் கொடுத்தல் (வ. 64, 70, 71).*
5. *கூடாரப் பண்டிகைக்காக எருசலேமுக்கு (7:1-10:21).*
    a. *பண்டிகைக்குச் செல்லுதல்; அவரது சகோதரர்களின் அவிசுவாசம் (7:1-13).*
    b. *பண்டிகையில் போதித்தல், ஜீவ தண்ணீர் உள்ளிட்ட போதனை; அவரைக் கவனித்துக் கேட்டவர்களின் நிச்சயமற்றதன்மை (7:14-53).*
    c. *பண்டிகையில் அறைகூவல் விடப்படுதல் - மற்றும் விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணுடன் அவரது செயல்பாட்டில் காணப்படுகிறபடி அவரது இருதயத்தின் மென்மைத் தன்மை (8:1-11).*
    d. *பண்டிகையில் அதிகமான போதனை - மற்றும்*

*அவரது விரோதிகளின் பகை உணர்வு (8:12-59).*

   e. *பண்டிகையில் குணமாக்குதல் - பிறவியில் இருந்தே பார்வையற்று இருந்த ஒருவரைக் குணமாக்கியது உள்ளிட்ட நிகழ்ச்சிகள் - மற்றும் அவரது விரோதிகளின் இடர்பாடுகள் (9:1-41).*
   f. *நல்ல மேய்ப்பன் பற்றிய போதனை மற்றும் அவரது உரையைக் கேட்டவர்களின் குழப்பம் (10:1-21).*

6. *பிரதிஷ்டைப் பண்டிகைக்காக யூதேயாவில் (10:22-42).*
   a. *எருசலேமில் போதித்தல் - மற்றும் அவிசுவாசம் (10:22-39).*
   b. *யோர்தானுக்கு அப்பால் (பெரேயாவுக்குள்) பின்வாங்குதல் - மற்றும் விசுவாசம் (10:40-42).*
7. *நெருங்கிய நண்பர்களுக்கு உதவுவதற்காக (எருசலேமுக்கு அருகில் இருந்த) பெத்தானிக்கு (11:1-46):*
   a. *வற்புறுத்தும் ஒரு வேண்டுகோள் (11:1-17).*
   b. *தூண்டி இயக்குவிக்கும் ஒரு உயிர்த்தெழுதல் (11:18-45).*
   c. *எதிர்பார்க்கக் கூடிய ஒரு பதில்செயல் (11:46-53).*
8. *யூதேயாவின் வடக்குப் பகுதிக்கு(எப்பிராயீமுக்கு)ப் பின்னிட்டுச் செல்லுதல் (11:54).*

D. *அவரது ஊழியத்தின் முடிவை நெருங்குதல்: கடைசிப் பஸ்கா (நான்காவது?) (11:55-57).*

II. *தேவகுமாரனின் ஊழியம்: பாடுகளின் ஒரு வாரம் (12:1-20:29).*

A. *இயேசு எருசலேமுக்குச் செல்லுதல் (12:1-50).*
1. *பெத்தானியில் அபிஷேகம் செய்விக்கப்படுதல் (12:1-11).*
2. *எருசலேமுக்குள் வெற்றிப் பிரவேசம் (12:12-19).*
3. *எருசலேமில் போதித்தல் (12:20-50).*

B. *இயேசு தமது சீஷர்களுடன் (13:1-17:26).*
1. *கடைசி இராப்போஜனம் (13:1-38).*
   a. *பாதங்கள் கழுவுதல்.*
   b. *காட்டிக் கொடுக்கப்படுதலை முன்னுரைத்தல்.*
2. *மாபெரும் பிரியாவிடை உரை (14:1-16:33): இயேசு பின்வருபவற்றைப் போதித்தார்:*
   a. *அவரது மரணம்.*
   b. *திராட்சச் செடியும் கிளைகளும்.*
   c. *பரிசுத்த ஆவியானவரின் வருகை.*
3. *ஒருமைப்பாட்டிற்காக ஜெபம் (17:1-26).*

C. *சிலுவையில் இயேசு (18:1-19:42).*

1. *அவர் மீதான விசாரணைகள் (18:1-19:15).*
    a. *யூதாஸினால் காட்டிக்கொடுக்கப்படுதல் (18:1-11).*
    b. *அன்னா மற்றும் காய்பா ஆகியோரால் விசாரிக்கப்படுதல் (18:12-24).*
    c. *பேதுருவினால் மறுதலிக்கப்படுதல் (18:25-27).*
    d. *பிலாத்துவினால் விசாரிக்கப்படுதல் (18:28-40).*
    e. *போர்வீரர்களினால் அடிக்கப்படுதல் (19:1-15).*
2. *அவர் சிலுவையில் அறையப்படுதல் (19:16-30).*
3. *அவரது அடக்கம் (19:31-42).*

D. *இயேசு உயிர்த்தெழுந்தார்! (20:1-29).*
1. *உயிர்த்தெழுந்த பின்பு மகதலேனா மரியாளுக்குத் தரிசனம் (20:1-18).*
2. *உயிர்த்தெழுந்த பின்பு தமது சீஷர்களுக்குத் தரிசனங்கள் (20:19-29).*

*முடிவுரை (20:30-21:25).*

A. *நோக்கத்தின் எடுத்துரைப்பு (20:30, 31).*
B. *பேதுருவுக்கு ஒரு விசேஷித்த பாடம் (உயிர்த்தெழுந்த பின்பு கலிலேயாக் கடலோரத்தில் தரிசனம்) (21:1-17).*
C. *எழுத்தாளர் பற்றிய ஒரு எடுத்துரைப்பு (21:18-24).*
D. *கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய ஒரு கடைசி எடுத்துரைப்பு (21:25).*

---

*குறிப்புகள்*

[1]*வசனங்கள் 20 முதல் 23 வரை உள்ள பகுதியானது, "இயேசு மிகவும் அன்பு செய்த சீஷர்" நீண்ட நாட்கள் உயிர் வாழ்வார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. இது, அப்போஸ்தலரான யோவான் இந்தப் புத்தகத்தை எழுதினார் என்பதற்கு மறைமுகமான ஆதாரமாக உள்ளது, ஏனென்றால் ஏவுதல் பெற்றிராத பாரம் பரியத்தின்படி, யோவான் ஒருவர் மட்டுமே இயற்கையான முறையில் மரணம் அடைந்த ஒரே அப்போஸ்தலராக இருந்தார்.* [2]*யோவான் இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்று வழக்கமாகக் குறிப்பிடப் படுவதை மறுத்து அவர் இதை எழுதவில்லை என்று நிரூபிக்க முயற்சி செய்வதற்குச் சிலர் பாப்பியாஸின் எழுத்துக்களில் உள்ள ஒரு மறைவான குறிப்பைப் பயன் படுத்தியிருக்கின்றார்கள். ஆயினும், பாப்பியாஸ் மாறுபட்ட இரண்டு யோவான் களைக் குறிப்பிட்டார் என்பதற்கு வற்புறுத்தும் ஆதாரம் எதுவும் இருப்பதில்லை - அல்லது அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தால், நான்காவது சுவிசேஷத்தை யோவான் எழுதவில்லை என்று அவர் நம்பினார் என்பதற்கு ஆதாரம் இல்லை.* [3]Irenaeus *Against Heresies* 3.1.1. [4]*இதைப் பற்றிய விரிவான கலந்துரையாடல் ஒன்று (இணையாக நிற்கும் வேத வசனங்களுடன்)* Don Shackelford, "John," *New Testament Survey,* ed. Don Shackelford (Searcy, Ark.: Harding University, 1987), 151-53 *என்ற புத்தகத்தில் உள்ளது.* [5]*எழுத்தாளர் பற்றிய இந்த மற்றும் பிற விவரங்கள், சாத்தியக்கூறுள்ள மற்ற*

எழுத்தாளர்களுக்குப் பொருந்துவது இல்லை என்றும் மெரில் டென்னீ அவர்கள் குறிப்பிட்டார் (Merrill C. Tenney, *New Testament Survey* [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1961], 187). [6]சலோமியும் இயேசுவின் தாயாரும் உறவினர்களாய் இருந்ததாகச் சிலர் நினைக்கின்றார்கள் (மாற். 15:40ஐயும் யோவா. 19:25ஐயும் ஒப்பிட்டுக் காணவும்); அப்படியிருந்தால், இயேசுவும் யோவானும் ஒன்றுவிட்ட சகோதரர்களாய் இருந்தார்கள் என்றாகிறது. இது, இயேசு ஏன் தமது தாயாரை யோவானின் கண்காணிப்பில் விட்டார் என்பதை விளக்கப்படுத்த உதவும். [7]இவர் பேதுருவைக் காட்டிலும் வேகமாய் ஓட முடிந்தது என்பது இந்த முடிவுக்கு ஒரு காரணமாக உள்ளது (யோவா. 20:4). கிடைக்கின்ற மிகச் சிறந்த ஆதாரத்தின்படி, இவர் மற்ற எந்தச் சீஷரைக் காட்டிலும் அதிக நாட்கள் உயிர் வாழ்ந்தார் என்பது இன்னொரு காரணமாக உள்ளது. இவர் இயேசுவைப் பின்பற்றும்படி அழைக்கப்பட்டபோது இருபத்து ஐந்து வயதுடையவராயிருந்தார் என்று சிலர் மதிப்பிட்டுள்ளார்கள். [8]ஒரு (ஏவுதல் பெற்றிராத) தொடக்க கால எழுத்தாளரின் கூற்றுப்படி, யோவான் வேத சாட்சியாக மரித்தார்; ஆனால் தொடக்க காலத்தில் இருந்த பெரும்பாலான எழுத்தாளர்கள், இவர் எபேசுவில் வயது முதிர்ந்தவராக மரித்தார் என்று கருத்துத் தெரிவிக்கின்றார்கள். [9]Irenaeus *Against Heresies* 3.1.1. [10]யோவான் தமது சுவிசேஷ விவரத்தை ஏற்படுத்தியது தேவனுடைய சித்தமா யிருந்தது என்பதாலும், இவர் இவ்வாறு செய்யும்படி பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டார் என்பதாலும் இதை எழுதினார் என்றே நிறைவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

[11]யோவான் சுவிசேஷத்திற்கும் 1 யோவான் நிருபத்திற்கும் இடையில் ஒரு நெருங்கிய உறவு உள்ளது. எடுத்துக்காட்டாக, இவற்றின் தொடக்க வார்த்தைகளை ஒப்பிட்டுக் காணவும் (யோவா. 1:1, 2, 14; 1 யோவா. 1:1-3). [12]இன்றைய நாட்களில் பல மதப்பிரிவினர் கிறிஸ்துவைப் பற்றிப் பல தவறான கருத்துக்களை உரிமைகோருகின்றார்கள், எனவே யோவானின் வலியுறுத்தல் இன்னமும் அவசியமாகிறது. [13]சந்தர்ப்பப் பொருளானது, யோவான் இயேசுவைப் பற்றிப் பேசினார் என்று காண்பிக்கிறது. [14]விடுதலையியல் கல்வியாளர்கள் சிலர் இந்தப் புத்தகமானது, இரண்டாம் நூற்றாண்டில், அறியப்படாத ஒரு எழுத்தாளரால் (ஒருவேளை, யோவான் என்று பெயர் கொண்டவரால்) எழுதப்பட்டதாகக் கூற முயற்சி செய்கின்றார்கள். ஆயினும், காலத்தில் மிகவும் முற்பட்ட புதிய ஏற்பாட்டின் சிறுபகுதியொன்றில், ஒரு சிறிய பாப்பிரஸ் துண்டு ஒன்றில் யோவான் 18:31-33, 37, 38 வசனங்கள் அடங்கியுள்ளது. இது இரண்டாம் நூற்றாண்டின் முதல் பாதிப்பகுதியில் எகிப்து நாட்டில் சுற்றோட்டத்திற்கு விடப்பட்டிருந்த கையெழுத்துப் பிரதியின் பாகமாக உள்ளது. இது கி.பி. சுமார் 125ம் ஆண்டைச் சேர்ந்ததாகத் தேதியிடப்பட்டுள்ளது. இது, [யோவான் சுவிசேஷத்தின்] மூலப்பிரதியானது முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்று குறிப்பிடுவதாயிருக்கும். [15]இதை எழுதியது யார் என்று அறியப்படவில்லை. Quoted in Eric W. Hayden, *Preaching Through the Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1964), 193. [16]வேதாகமத்தில் அற்புதங்கள், "அற்புதங்கள்," "பலத்த செய்கைகள்," மற்றும் "அடையாளங்கள்" என்று அழைக்கப்படுகின்றன (மத். 11:20; மாற். 16:20; யோவா. 4:48). "அற்புதம்" என்ற வார்த்தையானது நடந்த நிகழ்ச்சியின் இயற்கைக்கு மாறான இயல்பை வெளிப்படுத்துகிறது; "பலத்த செய்கை" என்ற வார்த்தையானது அந்த அற்புதங்களின் பின்னணியில் இருந்த செயல்விளைவை வலியுறுத்துகிறது, "அடையாளம்" என்ற வார்த்தையானது அந்த அற்புதங்களின் நோக்கத்தைக் குறிப்பிடுகிறது. யூதர்கள் "அடையாளத்தை" விரும்பினார்கள் என்பதைக் கவனிக்க வும் (மத். 12:38; 16:1 ஆகியவற்றைக் காணவும்; மற்றும் 1 கொரி.

*1:22ஐயும் காணவும்).* [17]Tenney, 190. [18]NASB *மற்றும்* NIV *ஆகியவற்றில்* "entrust" *என்ற வார்த்தையின் வடிவங்கள் உள்ளன.* Amplified Bible *என்ற புத்தகத்தில்* "did not trust Himself to them" *என்றுள்ளது.* [19]Tenney, 190-91. [20]*"நானே" என்ற இந்தக் கூற்றுகள் ஒவ்வொன்றின் தனிச் சிறப்பும் இந்தப் பாடத்தொடரின் பின் வரும் புத்தகங்களில் கலந்துரையாடப்படும்.*

[21]*இயேசுவின் ஊழியத்தின் கால அளவு பற்றிய கற்றறிந்த யூகங்கள் இந்த நான்கு குறிப்புகளின் அடிப்படையில் அமைந்துள்ளன. (இந்தப் புத்தகத்தில் "கிறிஸ்துவின் சொந்த ஊழியம் எவ்வளவு நாட்கள் நடைபெற்றது?" என்ற துணைப்பாடத்தில் காணவும்.) இந்தக் குறிப்புகளின் முக்கியத்துவத்தின் காரணமாக, இந்தப் பாடத்தின் பின்பகுதியில் இவை பற்றிய மறைமுகமான கருத்துக்கள் சாய்வெழுத்துக்களில் தரப்பட்டுள்ளன.* [22]Tenney, 192. [23]Shackelford, 153-55.

# 6

# கிறிஸ்து வந்த வேளையில் இருந்த உலகம்

*சுவிசேஷ விவரங்களின் தொடக்க கால வாசகர்கள், இயேசு வந்த வேளையில் இருந்த உலகம் பற்றி நன்கு அறிந்திருந்தார்கள், ஆனால் நம்மில் பெரும்பான்மையானோர் அவ்வாறு இருப்பதில்லை. கிறிஸ்துவின் நாட்களில் இருந்த பலஸ்தீன நாட்டைப் பற்றி, பி.எஸ். டீன் அவர்கள், "அதன் இயற்கைக் காட்சியானது, சீகேமுக்கு அண்மையில் ஆபிரகாம் தமது கூடாரத்தை ஊன்றியபோது இருந்தது போலவே [இயேசு வந்த நாட்களிலும்] இருந்தது, ஆனால் மற்ற யாவும் மாறியிருந்தன" என்று கவனித்து இருந்தார். பழைய ஏற்பாட்டு காலங்களில் இருந்து மாற்றம் அடைந்திருந்தவைகளில் பின்வருபவையும் உள்ளடங்குகின்றன: ஜெப ஆலயமானது மதரீதியான காட்சியில் ஒரு திறவுகோல் அம்சமாகியிருந்தது. பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் என்ற பிரிவினர் மாபெரும் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். நாடு ரோமபுரியார்களால் ஆளப்பட்டுக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட மாற்றங்கள் எவ்வாறு ஏற்பட்டன?*

## உடன்படிக்கைளுக்கு இடைப்பட்ட காலவேளை

*பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் இடைப்பட்ட ஆண்டுகளில்தான் பெரும்பாலான மாற்றங்கள் நடைபெற்றன.*

*பழைய ஏற்பாடு முடிவுற்றபோது, பல யூதர்கள் சமீபத்தில்தான் தாங்கள் இருந்த பாபிலோனின் அடிமைத்தனத்திலும் மற்றும் பெர்சிய அரசாட்சியிலும் இருந்து கானானுக்குத்[1] திரும்பியிருந்தார்கள். நெகேமியாவின் புத்தகம்தான் பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்ட கடைசி வரலாற்றுப் புத்தகமாக இருந்தது; மல்கியாதான் பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கதரிசன புத்தகமாக இருந்தது. யூதர்கள் தேவனுடைய மேசியாவுக்காகவும் அவருக்கு வழியை ஆயத்தம் பண்ணும் செய்தியாளருக்காகவும் காத்திருந்தார்கள். மல்கியா பின்வருமாறு எழுதியிருந்தார்:*

> *"இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன்; அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்;*

*இதோ, வருகிறார்" என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (மல்கியா 3:1; மேலும் 4:5, 6ஐயும் காணவும்).*

***அமைதி***

*மல்கியாவுக்கும், சுவிசேஷ விவரங்களின் நிகழ்ச்சிகளுக்கும் இடையில், சுமார் நானூறு ஆண்டுகள்*[2] *அமைதி நிலவிற்று. "அமைதி" என்பதன் மூலம் நான், தீர்க்கதரிசன அமைதியை அர்த்தப்படுத்துகிறேன். அந்த வேளையின் போது, தேவன் விசேஷித்த ஏவுதல் பெற்ற செய்தியாளர்களை அனுப்பா திருந்தார். இஸ்ரவேலர்கள் எழுதப்பட்ட பிரமாணம் மற்றும் தீர்க்க தரிசனங்கள் மூலமாக வழிநடத்தப்பட்டார்கள் (மத். 11:13; லூக். 16:16; லூக். 24:44ஐயும் காணவும்).*

*தேவன் தமது குமாரனை [இந்த உலகிற்கு] அனுப்பும் முன்பு சில நூற்றாண்டுகள் இடைவெளியை ஏன் அனுமதித்தார்?* F. *லாகார்டு ஸ்மித் அவர்கள் ஒரு சில சாத்தியக்கூறுகளைக் கருத்தாகத் தெரிவித்தார்.*[3] *(1) ஒருவேளை, தேவன் மனிதகுல வரலாற்றின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியை நாடகப்படுத்த விரும்பியிருக்கலாம். கடைசியில் இயேசு வந்த வேளையில் முன் எதிர்பார்த்தல் என்பது மிகவும் உயர்ந்த நிலையில் இருந்தது. (2) ஒருவேளை தேவன் மேசியாத்துவ தீர்க்கதரிசனங் களின் நிறைவேற்றத்தை மிகவும் மனதில் பதியும் வகையில் ஏற்படுத்த விரும்பியிருக்கலாம். நீண்ட இடைவேளை என்பது நிறைவேற்றம் முயன்று கண்டுபிடிக்கக் கூடியதாக இருந்ததில்லை என்பதை உறுதிப்படுத்தியிருக் கும். (3) ஒருவேளை தேவன், மத மற்றும் அரசியல் சூழ்நிலைகள் மேசியாத்துவ ஊழியத்திற்கு மிகச் சரியானதாகும் வரையிலும் காத்து இருந்திருப்பார். பவுல், "காலம் நிறைவேறினபோது ... தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" (கலா. 4:5).* The New Living Translation *என்ற வேதாகம மொழிபெயர்ப்பு நூலில், "ஆனால் சரியான வேளை வந்தபோது, தேவன் தமது குமாரனை அனுப்பினார்" என்றுள்ளது.*

***ஆதாரமூலங்கள்***

*உடன்படிக்கைகளுக்கு இடையில் இருந்த காலமானது தீர்க்கதரிசனத் தின் அமைதிக் காலமாயிருந்தது என்ற உண்மையானது, இயேசு வாழ்ந்த காலத்தில் இருந்த உலகத்தை உருவமைத்த ஆண்டுகளைப் பற்றி நாம் எதுவும் அறிவதில்லை என்று அர்த்தப்படுத்துவதில்லை. நமக்கு அநேக ஆதாரமூலங்கள் உண்டு.*

*(1) தள்ளுபடியாகம எழுத்தாக்கங்கள். "தள்ளுபடியாகமம்"* [apocrypha] *என்பது சில வேதாகமங்களில் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையில் அடங்கியுள்ள பதினான்கு புத்தகங்களுக்குத் தரப்பட்டுள்ள பெயராக உள்ளது.* "Apocrypha" *என்றால் "மறைக்கப்பட்ட" என்று அர்த்தப்படுகிறது. இந்தப் புத்தகங்கள் ஏவுதல் பெற்றவைகளென்று யூதர்களால் கருதப்படவில்லை,*[4] *இவைகள் ஏவுதல் பெற்றவைகளென்று இயேசுவாலும் அவரது அப்போஸ்தலர்களாலும் கூட கருதப்படவில்லை.*[5] *இந்தத் தொகுதிகளில் பல, பெர்சிய மற்றும் பிற புறதெய்வ வணக்கக்கார*

மக்களின் மூட நம்பிக்கைகளைப் பிரதிபலிக்கின்றன. இருந்தபோதிலும், இந்தப் புத்தகங்கள் முழுமையான அளவில், யூதர்களின் வரலாறு மற்றும் பழக்க வழக்கங்கள் பற்றிய சில உட்கண்ணோட்டத்தைத் தருகின்றன. ஒன்று மக்காபேயர் என்ற புத்தகம் சிறப்பான வகையில் உதவி நிறைந்ததாக உள்ளது; இது கி.மு. 175 மற்றும் 132ம் ஆண்டுகளுக்கு இடையில் யூதேயாவில் இருந்த யூதமக்களின் வரலாற்றை அடக்கியுள்ளது.

(2) யோசிப்பஸின் எழுத்துக்கள். யோசிப்பஸ் என்பவர் கி.மு. 37ல் பிறந்த ஒரு யூத வரலாற்றாளராக இருந்தார். இவர் தீத்துவால் எருசலேம் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டபோது உயிர்பிழைத்தவராகவும் இரு முக்கியமான புத்தகங்களை எழுதியவராகவும் இருந்தார்: The Antiquities of the Jews (படைப்பு முதல் அவரது மக்களின் வரலாற்று விவரம்) மற்றும் The Jewish Wars (கி.மு. 170 முதல் இவரது காலம் வரையில் யூதர்களின் வரலாற்று விவரம்)[6] யோசிப்பஸின் சில "உண்மைகள்" கேள்விக்குட்பட்டு இருக்கின்றன, ஆனால் அவரது எழுத்தாக்கங்கள் தகவலின் பிரதான ஆதாரமூலங்களாக நிலைத்துள்ளன.

(3) கிரேக்க மற்றும் ரோம உபரி சாட்சியங்கள். இந்தப் பாடத் தொடரில் இந்த ஆதாரமூலங்கள் பற்றிய சில குறிப்பிடுதல்கள் ஏற்படுத்தப் படும்.

(4) புதைபொருள் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள். பலஸ்தீனத்திலும் மற்ற சில இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட சில விவரங்கள் சில வேளைகளில் யூதர்களின் வரலாறு மற்றும் வாழ்வுப் பாணி ஆகியவற்றின் மீது வெளிச்சத்தை வீசுகின்றன.

(5) வேத வசனங்கள். இந்தக் காலவேளை பற்றிய சில தகவல்கள் சுவிசேஷ விவரங்களில் இருந்தே எடுக்கப்படக் கூடியவைகளாக உள்ளன.

## நான்கு பேரரசுகள்

உடன்படிக்கைகளுக்கு நடுவில் இருந்த நானூறு அல்லது அதற்குச் சற்றே மேற்பட்ட ஆண்டுகளில், தேவன் மனிதர்களின் விஷயங்களில் அசைவாடிக் கொண்டு, தமது நோக்கங்களைச் செயல்படுத்திக் கொண்டு இருந்தார். அந்த ஆண்டுகளின் அரசியல் ரீதியான சட்டக அமைப்பானது தானியேல் 2ம் அதிகாரத்தில், பாபிலோன் அரசரான நேபுகாத்நேச்சாரின் கனவு ஒன்றில் வரைக்குறிப்பிடப்பட்டது:

> ... ஒரு பெரிய சிலை ... அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது ... அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதன் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது (தானி. 2:31-33).

நேபுகாத்நேச்சாரும் (மற்றும் பாபிலோனிய ராஜ்யமும்) பொன்னால் ஆன தலையாகக் குறிக்கப்பட்டதாக தானியேல் கூறினார் (வ. 37, 38). பின்பு

*அந்த தீர்க்கதரிசி பின்வருமாறு கூறினார்:*

> *உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும்; பின்பு பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும். நாலாவது ராஜ்யம் இரும்பைப் போல உரமாயிருக்கும்; இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கிச் சின்னபின்னமாக்குகிறதோ, அப்படியே இது நொறுக்கிப் போடுகிற இரும்பைபோல அவைகளையெல்லாம் நொறுக்கித் தகர்த்துப் போடும் (வ. 39, 40).*

*தானியேல் 2ன் நான்கு ராஜ்யங்கள், (1) பாபிலோனிய பேரரசு, (2) மேதிய பெர்சிய பேரரசு, (3) கிரேக்கப் பேரரசு, மற்றும் (4) ரோமப் பேரரசு என்பவைகளாக இருந்தன என்று நாம் வேத வசனங்களில் இருந்தும் வரலாற்றில் இருந்தும் அறிகின்றோம்.[7]*

*பழைய ஏற்பாடு நிறைவடைவதற்கு முன்பு, இவற்றில் முதல் பேரரசானது (பாபிலோன்) வீழ்ந்து போயிருந்தது, இரண்டாவது பேரரசானது (மேதிய பெர்சியா) அதிகாரத்திற்கு வந்திருந்தது (தானி. 5:28, 30, 31; 6:8, 12, 15, 28; 8:20; 10:1; 11:1; எஸ்றா 1:1-4; எஸ்தர் 1:19 இவற்றைக் காணவும்). இதன் பின்பு, இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ராஜ்யங்களின்போது நடந்த நிகழ்ச்சிகளின் மீது நமது கவனம் செல்லுகிறது.*

### *மேதிய பெர்சிய காலம்[8] (கி.மு. 539-333[9])*

*ஏற்கனவே கவனித்தபடி, பழைய ஏற்பாடு முடிவுக்கு வந்தபோது, பெர்சியர்கள் கானானைத் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்திருந்தார்கள். இது யூதர்களுக்கு அடிப்படையில் ஒரு சகிப்புத் தன்மையின் காலமாக இருந்தது. யூதர்கள் - அண்டையில் இருந்த பெர்சிய ஆளுநருக்குக் கீழ்ப்பட்ட நிலையில் இருந்த - பிரதான ஆசாரியரால் ஆளப்படுவதை பெர்சியர்கள் அனுமதித்தார்கள்.*

*இந்தக் காலகட்டத்தின்போது, திரும்பி வந்த யூதர்களுக்கும் கானான் நாட்டில் இருந்த கலப்பினக் குடிகளுக்கும் இடையில் இறுக்கம் வளர்ந்தது (எஸ்றா 4:4; நெகே. 4:1-8ஐக் காணவும்). இந்தக் குடிகள் யூதேயாவின் வடக்குப் பகுதியில் இருந்த சமாரியா என்று அறியப்பட்ட பகுதியில் ஏராளமாகக் குடியிருந்தார்கள் (எஸ்றா 4:10, 17; நெகே. 4:2ஐக் காணவும்); இவர்கள் "சமாரியர்கள்" என்று அறியப்பட்டார்கள். இரண்டு இராஜாக் கள் 17:24-33 வசனப்பகுதியானது, சமாரியர்கள் யெகோவாவுக்கான ஆராதனையில் புறதெய்வங்களின் ஆராதனையைக் கலந்திருந்தது எப்படி என்று கூறுகிறது. வசனம் 33 "[அவர்கள்] கர்த்தருக்குப் பயந்தும், ... தங்கள் தேவர்களைச் சேவித்தும் வந்தார்கள்." இயேசு வந்தபோது, சமாரியர்கள் நாட்டின் மையப்பகுதியில் குடியிருந்தார்கள் (யோவா. 4:3, 4). யூதர்களுக்கும் சமாரியர்களுக்கும் இடையில் நிலவிய தோழமையற்ற உறவுமுறையானது இயேசுவின் வாழ்வில் ஒரு சில நிழ்ச்சிகளுக்குப் பின்னணியை அளித்தது (லூக். 10:33; 17:16; யோவா. 4:9).*

**கிரேக்கர்களின் காலம்[10] (கி.மு. 333-165)**

*(1) மகா அலெக்சாந்தர் (கி.மு. 333-323).* கி.மு. 336ல், இருபது வயதுடைய மகா அலெக்சாந்தர் என்பவர் கிரேக்கப் படையை வழிநடத்தும் தளபதிப் பொறுப்பேற்றுக்கொண்டார். ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகவே, அவர் இந்த உலகத்தையே வெற்றிகொண்டார். இவரது படையெடுப்புகளின்போது, எசேக்கியல் 26 மற்றும் 28ம் அதிகாரங்களில் தீருநகருக்கெதிராக உரைக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாக இவர் அந்த நகரத்தைத் தீக்கிரையாக்கினார். இவரது செல்வாக்கின் காரணமாக, கிரேக்கக் கலாச்சாரம் உலகெங்கிலும் பரவிற்று. இவர் நைல் நதியின் கரையில் கிரேக்கச் செல்வாக்கின் மையமாக விளங்குவதற்காக அலெக்சந்திரியா என்ற பட்டணத்தைக் கட்டினார். கிரேக்க மொழியானது உலகளாவிய மொழியானதென்பது கிறிஸ்தவர்களுக்கு விசேஷமாகக் குறிப்பிடக் கூடியதாக உள்ளது. புதிய ஏற்பாடு கொய்னீ (பொதுவான) கிரேக்க மொழியில் எழுதப்பட்டுள்ளது.[11]

கி.மு. 333ல் அலெக்சாந்தர் எருசலேமைத் தமது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தார். நகரத்தின் மதில்களுக்கு வெளியில் பிரதான ஆசாரியர் இந்த வெற்றியாளரை எவ்வாறு வரவேற்றார் என்பது பற்றி யோசிப்பஸின் எழுத்துக்கள் கூறுகின்றன. அலெக்சாந்தர் யூதர்களுக்கு விசேஷித்த சலுகைகளைக் கொடுத்தார். அவர்களை இவர் காலனிக் குடிகளாகப் பயன்படுத்தி, தமது பேரரசின் தொலைதூர இடங்களில் குடியமரும்படி இணங்கச் செய்தார்.

இந்தக் காலகட்டத்தின்போது, வேதபாரகர்கள் தங்களை யூதர்களின் மத்தியில் தனிப்பட்ட வகுப்பினராக தோற்றமளிக்கச் செய்தார்கள். பிற்பாடு நாம் வேதபாரகர்களைப் பற்றி அதிகமாய்க் கூறுவோம்.

கி.மு. 323ல் அலெக்சாந்தரின் மரணத்தைத் தொடர்ந்து இருபது ஆண்டுகளாக அதிகாரப் போராட்டம் நடைபெற்றது. கடைசியில் இவரது பேரரசானது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது: கிரேக்கம், ஆசியா, எகிப்து மற்றும் சீரியா.[12] இவற்றில் எகிப்தும் சீரியாவும் நமது ஆர்வத்திற்குரிய பகுதிகளாகும். எகிப்து நாட்டை தாலமிகள்[13] தங்கள் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவந்தார்கள், சீரியாவை செலூக்கியர்கள்[14] ஆண்டார்கள்.

*(2) தாலமிகள் (கி.மு. 323-198).* எகிப்துக்கும் சீரியாவுக்கும் இடையில் இருந்த பலஸ்தீன நாடு, இவ்விரண்டு வல்லரசுகளுக்கும் இடையில் நடந்த போராட்டத்தில் சிக்கிக் கொண்டது.[15] எகிப்தியப் படைகள் சீரியாவை நோக்கி அணிவகுத்துச் செல்லுகையில், அவர்கள் வடக்கு நோக்கிச் செல்லும் தங்கள் வழியில் பலஸ்தீனத்தைப் பிடித்துக் கொள்ளு வார்கள். சீரிய நாட்டினர் எகிப்தை நோக்கித் தெற்கு முகமாய்ச் செல்லுகை யில், அவர்கள் போகும்போதோ அல்லது திரும்பி வரும்போதோ பலஸ்தீனத்தைப் பிடிக்க முயற்சி செய்வார்கள்.

அடுத்த நூறு ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில், யூதர்கள் அவ்வப்போது சீரியாவின் கட்டுப்பாட்டின் கீழிருந்தார்கள், ஆனால் பெரும்பாலான வேளைகளில் அவர்கள் எகிப்துக்குக் கீழ்ப்பட்டு இருந்தார்கள். முதலாம் தாலமி எருசலேமைக் கைப்பற்றி, அலெக்சாந்திரியாவின் காலனி

*யமைப்புக்கு உதவுவதற்காக பல யூதர்களை எடுத்துச் சென்றார். அவர் களுக்கு இவர் முழுக்குடியுரிமை அளித்து யூதக் கல்விப் புலமையை ஊக்கப் படுத்தினார்.*

*தாலமிகளின் ஆட்சிக் காலமானது யூதமக்களுக்கு அடிப்படையாக ஒரு சமாதானம் நிறைந்த காலமாக இருந்தது. எகிப்தில் செப்துவஜிந்த் மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற்றது ஒரு தனிச்சிறந்த சாதனையாக இருந்தது. இரண்டாம் தாலமி, அலெக்சாந்திரியாவில் இருந்த மாபெரும் நூலகத்திற்காக எபிரெய வேத வசனங்களை கிரேக்க மொழியில் மொழிபெயர்க்கும்படி கட்டளையிட்டார். இந்த மொழிபெயர்ப்புப் பணியானது கி.மு. 285 வாக்கில் செய்து முடிக்கப்பட்டது. பாரம்பரியத்தின் படி, இது யூதக் கல்வியாளர்கள் எழுபது பேர்களால் உண்டாக்கப்பட்டது. (ஆகவேதான் "எழுபதின்மர்" என்று அர்த்தப்படும் "செப்துவஜிந்த்" என்ற பெயர் ஏற்பட்டது.) புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்கள் மற்றும் உரையாளர்கள் ஆகியோர்களால் பயன்படுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டின் பல மேற்கோள்கள் செப்துவஜிந்த்தில் இருந்தே எடுத்தாளப் பட்டன.*

*இந்தக் காலகட்டம் முழுவதிலும் எகிப்துக்கும் சீரியாவுக்கும் இடையில் போராட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது. கடைசியில், கி.மு. 198வாக்கில், பலஸ்தீனமானது சீரியாவின் ஆளுகையின் கீழ் வந்தது.*

*(3) செலூரக்கியர்கள் (கி.மு. 198-165). செலூரக்கியர்கள் பலஸ்தீனத்தில் தங்கள் ஆளுகையை இலகுவாக்குவதற்காக, அதை ஐந்து மாநிலங்களாகப் பிரித்தார்கள்: யூதேயா, சமாரியா, கலிலேயா, பெரேயா, மற்றும் திராகொனித்தி (யோர்தானுக்குக் கிழக்கே இருந்த பகுதி; தற்போது இது 'லேஜா' எனப்படுகிறது). இவற்றைப் பற்றியும் பிற பிரிவுகளைப் பற்றியும் நாம் பிற்பாடு அதிகம் கூறுவோம்.*

*சீரியாவின் [ஆளுகைக்] காலமானது யூதத்துவ வரலாற்றில் மிகவும் இருண்ட காலமாக இருந்தது. நான்காம் அந்தியோகஸ் என்பவன் பிரதான வில்லனாக இருந்தான், இவன் அந்தியோகஸ் எபிபெனஸ் என்றும் அழைக்கப்பட்டான். லாகார்டு ஸ்மித் அவர்கள், இவனை "பொதுப் பணியை ஏற்றிருந்தவர்களிலேயே மிகவும் கொடூரமான மனிதன்" என்று பெயரிட்டார்.[16] எபிபெனஸ் (கி.மு. 175-165) யூத மக்களை வெறுத்து, அவர்களைக் கிரேக்கர்களாக்க முயற்சி செய்தான். அவன் எருசலேமில் யூப்பித்தருக்கு ஒரு கோவிலை எழுப்பி, யூதமார்க்கத்தை மிதித்து நசுக்க முயற்சி செய்தான். தேவாலயத்தை மூடச்செய்து, விருத்தசேதனத்தை சட்ட விரோதமான செயல் என்று அறிவித்து, யூதத்துவத்தைச் செயல்படுத்தும் எவருக்கும் மரணத்தை வாக்களித்தான். இவன் ஆயிரக்கணக்கான யூதர்களை அடிமைகளாக விற்று இன்னும் ஆயிரக்கணக்கானவர்களைக் கொல்லுவித்தான். இவன் தேவாலயத்தின் பொக்கிஷங்களைக் கவர்ந்து கொண்டு, அங்கிருந்த பலிபீடத்தில் ஒரு பன்றியைப் பலிசெலுத்தினான்.[17] அந்தச் சாம்பலைத் தண்ணீரில் இட்டு, அந்தப் "பன்றித் தண்ணீரை" தேவாலயம் எங்கும் தெளிக்கச் செய்து, பரிசுத்த இடத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினான்.*

***சுயாதீனத்தின் காலவேளை (கி.மு. 165-63)***

*அந்தியோகஸ் எபிபெனஸின் அக்கிரமச் செயல்கள் மத்தத்தியா என்ற பெயர்கொண்ட வயது முதிர்ந்த ஆசாரியரால் வழிநடத்தப்பட்ட ஒரு யூதத்துவக் கலகத்திற்குக் கிரியாஊக்கியை அளித்தது. மத்தத்தியாஸுக்கு தைரியமும் யுத்த எண்ணமும் கொண்ட ஐந்து மகன்கள் இருந்தார்கள், அவர்களில் ஒருவரான - யூதா என்பவர் - அந்தக் கலகத்திற்குத் தலைவரா னார். இந்த யூதா "சம்மட்டி யூதா" என்று அறியப்பட்டார். "மக்காபே" என்பது "சம்மட்டி" என்பதற்கான கிரேக்க வார்த்தையாகும், எனவே இது யூத வரலாற்றின் மக்காபேயரது காலம் என்று சில வேளைகளில் அழைக்கப்படுகிறது.[18] யூதா மக்காபேயு கி.மு. 165ல் எருசலேமை மீண்டும் கைப்பற்றினார். தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டு யெகோவாவுக்கு மீண்டும் அர்ப்பணிக்கப்பட்டது. இதுதான் பிரதிஷ்டைப் பண்டிகைக்குத் தொடக்கமானது (யோவா. 10:22ஐக் காணவும்).*

*சீரியாவுடனான யுத்தம் கி.மு. 163 முதல் 143 வரை தொடர்ந்தது. கடைசியில், யூதர்கள் தங்களது விடுதலையை வெற்றியாகப் பெற்றார்கள். கி.மு. 135ல் யோவான் ஹிர்க்கேனஸ் என்பவரின் கீழ் ஒரு யூத அரசவம்சம் நிலைநாட்டப்பட்டது.*

*இந்தக் காலகட்டத்தில், பரிசேயர்கள், சதுசேயர்கள் உள்ளிட்ட யூதப்பிரிவுகள் எழும்பின. இந்த மற்றும் பிற பிரிவுகளைப் பற்றி அதிகமான வற்றை நாம் பின்பு கூறுவோம். மேலும், இந்தக் காலகட்டத்தில் பிரதான ஆசாரியரின் பணிப்பொறுப்பானது மதரீதியானதற்கும் மேலாக அரசியல் ரீதியானதாயிற்று. அதிகாரத்தில் இருந்தவர்களினால் பிரதான ஆசாரியர்கள் நியமிக்கப்பட்டார்கள்.[19]*

*இந்தக் காலகட்டத்தின் முடிவு ஆண்டுகள் உள்நாட்டுக் கலகத்தின் ஆண்டுகளாயிருந்தன. யோவான் ஹிர்க்கேனஸின் சந்ததியார்களில் பல்வேறு உறுப்பினர்கள் அரியணைக்குப் போட்டியாளர்கள் ஆயினர். சூழ்ச்சிகளும், எதிர்ச் சூழ்ச்சிகளும், அரசியல் கொலைகளும் நடந்தன. கடைசியில், வழக்காடிக் கொண்டிருந்தவர்களில் ஒரு சாரார் ஆதரவுக்காக, எழும்பிக் கொண்டிருந்த - ரோமாபுரி என்ற - அதிகார வர்க்கத்தினரிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்கள். இந்த யூதத்துவ வழக்கில் ரோமாபுரியின் ஈடுபாட்டை நாடுதல் என்பது, கோழிகள் தங்களுக்குள் உள்ள வேறுபாடான கருத்துக்களைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு நரியை, கோழிப் பண்ணைக்குள் அழைப்பது போலிருந்தது. விரைவிலேயே யூதர்கள் தங்கள் சுயாதீன நிலையை இழந்துபோனார்கள்.*

***ரோமாபுரியாரின் காலம் (கி.மு. 63 - கி.பி. 70[20])***

*கி.மு. 63ல் மகா பாம்ப்பே என்பவனால் எருசலேம் பிடிக்கப்பட்டது.[21] இயேசுவின் [பூமிக்குரிய] வாழ்வுக் காலத்தில், அகுஸ்து இராயன் (ஆக்டேவியஸ்) (கி.மு. 27 - கி.பி. 14) (லூக்கா 2:1) மற்றும் திபேரியு இராயன் (கி.பி. 14-37) (லூக்கா 3:1) ஆகியோர் ரோம அரசர்களாய் இருந்தார்கள்.*

*பலஸ்தீனமானது ரோமாபுரிக்குப் பொறுப்பு ஒப்புவிக்க வேண்டிய ஆளுநர்களின் கீழ் வைக்கப்பட்டது. தொடக்கத்தில், அந்திப்பத்தர் என்பவன்*

யூதேயாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டான். அவனைத் தொடர்ந்து அவனது மகனான மகா ஏரோது கி.மு. 37-3ல் யூதேயாவின் அரசனாயிருந்தான் (லூக். 1:5). ஏரோது ஆட்சி செய்வதில் மேதையாய் இருந்தான், ஆனால் அவனது குற்றங்கள் அவனது ஆட்சித் திறமைகளை விட அதிகமாயிருந்தன. அவன் எருசலேமில் இரதம் ஓட்டப் பந்தயங்கள் மற்றும் பிற கிரேக்கப் பழக்க வழக்கங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் யூதர்களின் வெறுப்பைத் தூண்டி விட்டான். அவர்களின் ஆதரவை மீண்டும் ஆதாயப்படுத்திக் கொள்வதற்காக அவன், எபிபெனஸினால் அழிக்கப் பட்டிருந்த தேவாலயத்தை மீண்டும் கட்டியெழுப்பத் தொடங்கினான் (யோவா. 2:20ஐக் காணவும்). இந்த ஏரோது, இயேசுவை அழிக்கும் முயற்சியில் சிறுபிள்ளைகளைக் கொன்ற புகழற்ற அரசனாக இருந்தான் (மத். 2:1-18).

மகா ஏரோது இறந்தபோது (மத். 2:19), நாடானது காற்பங்கு தேசாதிபதிகளின் ("நால்வரின் ஆட்சி") கரங்களில் ஒப்படைக்கப்பட்டது: (1) தொடக்கத்தில், ஏரோதின் மகன்களில் ஒருவனான அர்க்கெலாயு என்பவன் யூதேயா மற்றும் சமாரியா பகுதிகளுக்கு அரசனானான் (மத். 2:22). இவன் கி.மு. 6ல் பதவியிறக்கப்பட்டு, இவனுக்குப் பதிலாக ஆளுநர்கள் வரிசையாக நியமிக்கப்பட்டார்கள். (இவர்களில் பிலாத்து ஆறாவது ஆளுநனாயிருந்தான் [லூக். 3:1].) (2) இன்னொரு மகனான ஏரோது அந்திப்பா என்பவன் (புதிய ஏற்பாட்டில் சிலவேளைகளில் இவன் "ஏரோது" என்று மட்டும், மற்றும் சிலவேளைகளில் "காற்பங்கு தேசாதிபதியான ஏரோது" என்று தனிப்பட்ட வகையிலும் அழைக்கப்படுகின்றான்), கலிலேயா மற்றும் பெரேயா பகுதிகளுக்குக் கால்பங்கு தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான் (லூக். 3:1; மத். 14:1ஐக் காணவும்). இவன் இயேசுவின் சொந்த ஊழியத்தின் போது ஆட்சி செய்ததால் ஏரோதுகளிலேயே நன்கு அறியப்பட்டவனாயிருக்கின்றான். (3) மூன்றாவது மகனான பிலிப்பு, "இத்துரேயாவுக்கும் திராகொனித்தி நாட்டிற்கும் அதிபதியாய்"[22] இருந்தான் (லூக். 3:1; மத். 14:3ஐக் காணவும்) - இந்தப் பகுதி சில வேளைகளில் பாசான் மாவட்டம் என்று அழைக்கப்பட்டது.[23] (4) அபிலேன்[24] என்று அழைக்கப் பட்ட நான்காவது பகுதி லிசானியா என்பவனுக்குக் கொடுக்கப்பட்டது (லூக். 3:1), இவன் ஏரோது [குடும்பத்தைச் சேர்ந்தவன்] அல்ல. அபிலேன் என்பது மகா ஏரோதினால் ஆளப்பட்டிராத பகுதியாயிருந்தது.

ரோமர்கள் யூதர்களுக்குப் பல சலுகைகளை வழங்கியிருந்தார்கள்: இவர்கள் இராணுவ சேவையில் இருந்து விலக்குப் பெற்றிருந்தார்கள். இவர்களை ஓய்வு நாளன்று நீதிமன்றத்திற்கு அழைப்பிக்க முடியாது. இவர்கள் உருவம் இன்றி எழுத்துக்கள் மட்டும் பொறிக்கப்பட்ட தாமிர நாணயங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.[25] இவர்களின் நாட்டில் ரோமப்போர் வீரர்கள், உருவங்கள் கொண்ட கொடிகளை எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தார்கள்.

ரோமர்களின் காலமானது கிறிஸ்துவுக்கு எவ்வாறு வழியை ஆயத்தம் செய்தது என்பது கிறிஸ்தவர்களுக்கு மாபெரும் தனிச்சிறப்புடைய விஷயமாக உள்ளது. இது செய்திருந்த வழியில், Pax Romana (ரோமச் சமாதானம்) என்பதன் நிலைநாட்டுதல், உலகளாவிய (கிரேக்க) மொழியின்

பரவுதல், மற்றும் பேரரசு அளவிலான போக்குவரத்தையும் தகவல் தொடர்பையும் அனுமதித்த சாலைகளின் பெருவாரியான வலை அமைப்பு ஆகியவை உள்ளடங்கியிருந்தன.

## பலஸ்தீன நாடு

பழைய ஏற்பாட்டில், இயேசு பிற்பாடு பிறந்த நாடு, "கானான்" என்று அழைக்கப்பட்டது (ஆதி. 12:5; யாத். 6:4; யோசு. 14:1). புதிய ஏற்பாட்டின் காலத்தில், இது "பலஸ்தீனம்"[26] - புதிய ஏற்பாட்டில் இந்தப் பெயர் காணப்படாவிட்டாலும் பலஸ்தீனம் - என்று அறியப்பட்டது.[27]

இந்தப் பாடத்தொடர், இயேசுவின் இயக்கங்களை நீங்கள் மனக்கண் களினால் காண உதவியாக வரைபடங்களைச் சித்தரிக்கும். சுவிசேஷ விவரங்கள் கிறிஸ்துவின் வாழ்வில் நடைபெற்றவற்றில் சுமார் 150 நிகழ்ச்சி களைப் பதிவு செய்துள்ளன; இவற்றில் நூறு அல்லது அதற்குச் சற்று அதிகமானவை குறிப்பிட்ட புவியியல் அமைவுகளுடன் பிணைக்கப் பட்டுள்ளன.

"கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம்" என்ற வரைபடத்தை கவனியுங்கள். "தாண் முதல் பெயர்செபா வரையிலும்" (நியா. 20:1; 1 சாமு. 3:20; 1 இரா. 4:25 ஆகியவற்றையும் காணவும்) என்பது இந்த நாட்டின் நீளத்தைக் குறித்துப் பேசுவதற்குப் பிரபலமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு வழி முறையாக இருந்தது. வடக்கில் இருந்த தாண் முதல் தெற்கில் இருந்த பெயர்செபா வரையிலும் ஏறக்குறைய 150 மைல்கள் தூரம் இருந்தது. இந்த நாடு ஏறக்குறைய 10,000 முதல் 12,000 சதுர மைல்கள் பரப்பளவு உடையதாயிருந்தது.[28] ஒப்பீட்டளவுப்படி, அமெரிக்காவில் உள்ள ஐம்பதில் நாற்பது மாநிலங்கள் இதை விடப் பெரியவைகளாய் உள்ளன.[29]

கிறிஸ்துவின் வாழ்வில் மூன்று மாநிலங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை யாயிருந்தன, இம்மூன்றுமே யோர்தான் நதியின் மேற்குப் பகுதியில் இருந்தன. (1) *யூதேயா.* யூதேயா மாநிலமானது யூதர்களின் செல்வாக்கு டையதாக இருந்தது. யூதேயா மாநிலத்தவர்கள் தங்கள் பழைமைவாதம் குறித்துப் பெருமை கொண்டிருந்தார்கள். இயேசு யூதேயாவுக்கு அடிக்கடி - விசேஷமாகப் பண்டிகை நாட்களில் - சென்றார். (2) *சமாரியா.* நாம் கண்டுள்ளபடி, சமாரியா என்பது "சமாரியர்கள்" என்று அறியப்பட்டிருந்த யூதரின் அரை இனத்தவர்கள் குடியிருந்த பகுதியாக இருந்தது. இயேசு, வடக்கு அல்லது தெற்கு நோக்கிய தமது பயணங்கள் சிலவற்றில் சமாரியாவின் வழியாகச் சென்றார். (3) *கலிலேயா.* கலிலேயாவில் யூதர் களும் புறஜாதியார்களும் கலந்து வாழ்ந்திருந்தார்கள் (மத். 4:15ஐக் காணவும்). இது யூதேயா மாநிலத்தவர்களினால் ஒரு பிற்பட்ட பகுதியாகக் கண்ணோக்கப்பட்டது. இயேசு தமது வாழ்வில் பெரும்பகுதியைக் கலிலேயாவில்தான் செலவிட்டிருந்தார்.

வரைபடத்தில் உள்ள மற்ற பகுதிகளும் கிறிஸ்துவின் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக உள்ளன. பல வேளைகளில், இயேசு கலிலேயாக் கடலைக் கடந்து நமது வரைபடத்தில் "பாசான் மாவட்டம்"

*என்று குறிப்பிடப்பட்ட கீழக்குக்கரைப் பகுதிக்குச் சென்றார்.[30] இதை லூக்கா 3:1 வசனம் "இத்துரேயா மற்றும் திராகொனித்தி நாடு" என்று அழைக்கிறது. இந்தப் பகுதியின் தென்பாகமானது "தெக்கப்போலி" என்று அழைக்கப்பட்டது, இது "பத்து நகரங்கள்"[31] என்று நேரடியாக அர்த்தப் பட்டது (மத். 4:25; மாற். 5:20; 7:31).*

*இயேசுவின் ஊழியம் முடியவிருந்த வேளையில், அவர் கலிலேயாவில் இருந்து பல முறை பின்வாங்கிச் சென்றார். இவற்றில் ஒன்றில், அவர் மேற்கில் பெனிக்கியா நாட்டின் தீரு, சீதோன் நகரங்கள் இருந்த பகுதி வரை சென்றார் (மத். 15:21). மேலும் அவர் யோர்தானுக்குக் கிழக்கில் இருந்த பகுதிகளுக்கும் பலமுறை பின்வாங்கிச் சென்றார். யோசிப்பஸின் கூற்றுப்படி, இந்தப் பகுதி "பெரேயா" என்று குறிப்பிடப்பட்டது, ஆனால் சுவிசேஷ விவரங்களில் "யோர்தானுக்கு அப்பால் உள்ள பகுதி" என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டது (மத். 4:25; 19:1; மாற். 10:1; யோவா. 10:40).*

*உங்கள் புவியியல் சார்பறிவுக்கு உதவுவதற்காக ஒரு சில முக்கியமான இடங்கள் இந்த வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றன. ஒவ்வொரு புத்தகத்திலும், அந்தப் புத்தகத்தில் நாம் படிக்கும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய இடங்கள் குறிப்பிடப்பட்ட வரைபடம் ஒன்றை நாம் பெறுவோம்.*

*இந்த வரைபடங்கள் பற்றி ஒரு முன்னெச்சரிக்கை வார்த்தை அவசியமாக உள்ளது: வேதாகம விவரங்கள் மற்றும் உலகப்பிரகாரமான ஆதார மூலங்கள் ஆகியவற்றில் இருந்து நாட்டின் அடிப்படைப் பிரிவு ஏறக்குறைய தெளிவாய் அறியப்படுகையில், மாறுபட்ட மாநிலங்களுக்கு இடையிலான மிகச் சரியான எல்லைகள் தெளிவற்றவைகளாய் உள்ளன. ஆகையால், மாநிலங்களுக்கு இடையிலான எல்லைக்கோடுகள் அந்த எல்லைகளின் தோராயமான அமைவுகளாக உள்ளன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.*

## *பிற மாற்றங்கள்*

*பழைய ஏற்பாட்டின் முடிவு நாட்களும் உடன்படிக்கைகளுக்கு இடையில் உள்ள ஆண்டுகளும் யூதத்துவ உலகத்தைப் பிற வழிகளிலும் பாதித்தன.*

### *பெயரில் மாற்றங்கள்*

*பழைய ஏற்பாட்டின் முடிவில், தேவனுடைய மக்கள் ஏற்கனவே "யூதர்கள்" என்று அறியப்பட்டு இருந்தார்கள் (எஸ்றா 4:12; 5:1). இந்தப் பெயரானது தெற்கு இராஜ்யமான யூதா என்பதில் இருந்து தரவழைக்கப் பட்டதாக இருந்தது: பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்து திரும்பிய பெரும்பான்மையானவர்கள் அந்தப் பகுதியை(மற்றும் யூதா கோத்தி ரத்தை)ச் சேர்ந்தவர்களாய் இருந்தார்கள். புதிய ஏற்பாட்டின் காலங்களில், "யூதர்கள்" என்பது இந்த மக்களுக்கான அடிப்படை பெயராயிருந்தது (மத். 2:2; யோவா. 1:19).*

*இன்னும் அவர்கள் அவ்வப்போது "இஸ்ரவேலர்கள்" என்று அழைக்கப் பட்டார்கள் (யோவா. 1:47; 2 கொரி. 11:22 ஆகியவற்றைக் காணவும்), இது அவர்கள் இஸ்ரவேலின் [யாக்கோபுவின்] சந்ததியினராக இருந்தார்கள் என்பதைச் சுட்டிக்காண்பித்தது. இவர்களின் பாரம்பரிய மொழியின் காரணமாக, இவர்கள் சில வேளைகளில் "எபிரெயர்கள்" (அப். 6:1; 2 கொரி. 11:22) என்றும் பெயர் குறிப்பிடப்பட்டார்கள்.*

**மொழியில் மாற்றம்**

*பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்து திரும்பிய பின்பு, யூதர்களின் பொதுவான மொழியாக இருந்த எபிரெயம் படிப்படியாக மாறி அதன் இடத்தை அரமாயிக் மொழி பிடித்துக்கொண்டது. இத்தாலிய மொழி லத்தீன் மொழியை ஒத்ததாக இருப்பது போல - அரமாயிக் என்பது - எபிரெய மொழியை ஒத்த சீரியா நாட்டு மொழியாக இருந்தது. [ஆயினும்] இத்தாலியப் பையன்கள் லத்தீனைப் படிப்பது போன்றே - யூதப்பையன்கள் பள்ளிகளில் - எபிரெய மொழியைப் படித்துக் கொண்டிருந்தனர்.*

*இயேசுவின் நாட்களில் கிரேக்க மொழி உலகளாவிய மொழியாயிருக்க, ரோம அரசின் அலுவல் சார்ந்த மொழியாக லத்தீன் மொழி விளங்கிற்று. இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, அவர் தலைக்கு மேல் இருந்த பெயர் விலாசமானது மூன்று மொழிகளில் இருந்தது: எபிரெயு, லத்தீன் மற்றும் கிரேக்கம் (யோவா. 19:20).*

**தொழிலில் மாற்றும்**

*அடிமைத்தனத்திற்கு முன்பு, யூதர்கள் அடிப்படையில் விவசாயிகளாக வும் மேய்ப்பர்களாகவும் இருந்தார்கள். அடிமைத்தனத்தின்போது, தங்கள் உடைமைகளில் இருந்து பிரிக்கப்பட்ட நிலையில், அவர்கள், தாங்கள் வர்த்தகத் திறமைகளைக் கொண்டிருந்ததைக் கண்டறிந்தார்கள். இயேசுவின் காலத்தின்போது, யூத வர்த்தகர்கள் உலகெங்கும் சிதறியிருந் தார்கள்.*

**ஆராதனையில் மாற்றம்**

*எருசலேமில் இருந்த தேவாலயம் யூதர்களுக்கு இன்னமும் முக்கியத் துவம் வாய்ந்ததாக இருந்தது. பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த பின்பு செரூபாபேலினால் கட்டப்பட்ட தேவாலயமானது எபிபெனஸினால் பெருமளவுக்கு அழிக்கப்பட்டிருந்தது. இயேசுவின் பிறப்புக்குச் சுமார் பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு, மகா ஏரோது தேவாலயத்தைத் திரும்பக் கட்டும் பணியைத் தொடங்கியிருந்தார் (யோவா. 2:20ஐக் காணவும்); இயேசுவின் ஊழியத்தின் போது, அந்தப் பணித்திட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருந்தது.[32] பலஸ்தீனத்தில் வாழ்ந்த விசுவாசம் நிறைந்தவர்கள், பண்டிகைகளுக்காக ஆண்டில் பலமுறை எருசலேமுக்குப் பயணம் செய்தார்கள்.[33] மற்ற நாடுகளில் இருந்த யூதர்களும் அவ்வப்போது எருசலேமுக்குக் கடினமான பயணத்தை மேற்கொண்டார்கள் (அப். 2:5-11).*

*ஆயினும் கிறிஸ்துவின் காலத்தின்போது, ஜெப ஆலயமானது*

யூதர்களின் மத்தியில் மதவாழ்வின் இருதயம் போன்ற மையப்பகுதியானது. ஜெப ஆலயம் பற்றிப் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடுதல் ஏதும் இல்லை, ஆனால் இது புதிய ஏற்பாட்டில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது (மத். 12:9; 13:54). யூதர்கள் அடிமைத்தனத்தில் இருந்த வேளையில், குறிக்கப் பட்ட பண்டிகை நாட்களில் அவர்களால் எருசலேமுக்குப் போக இயலாத சூழ்நிலையில் ஜெப ஆலயங்கள் உருவாகி இருக்கலாம். ஒரு ஜெப ஆலயத்தை நிர்வகிப்பதற்குப் பத்து யூத ஆண்கள் இருந்தாலே போதுமான தாயிருந்தது.[34] எருசலேமிலும் உலகம் முழுவதிலும் நூற்றுக்கணக்கான ஜெப ஆலயங்கள் இருந்தன. ஜெப ஆலயத்தில் ஓய்வுநாள் ஆராதனை என்பது எளியதாக - பாடல்கள், ஜெபங்கள், மற்றும் வேத வசனங்களிலிருந்து வாசித்து படித்தல் என்ற விஷயங்கள் அடங்கியதாக - இருந்தது.[35] பெரும்பாலான ஜெப ஆலயங்களுடன் இணைந்திருந்த பள்ளிகளுக்கு வருகை தரும்படி யூதப் பையன்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

### மதத் தலைமைத்துவத்தில் மாற்றம்

பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்கள், அங்கீகரிக்கப்பட்ட மதத் தலைவர் களாய் இருந்தனர். அவர்களின் ஊழியமானது, தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியினால் துணை செய்விக்கப்பட்டது. கிறிஸ்துவின் வாழ்வை நாம் படிக்கையில், ஆசாரியர்களையும் அவர்களின் லேவிய உதவியாளர்களை யும் எதிர்கொள்ளுவோம் (லூக். 10:31, 32). இயேசுவின் ஊழியக் காலத்தில், உண்மையில் யூதத்துவமானது இரண்டு பிரதான ஆசாரியர்களைக் கொண்டிருந்தது என்பது விசேஷித்த வகையில் தனிக் கவனத்திற்குரியதாக உள்ளது (லூக். 3:2ஐக் காணவும்). பிரதான ஆசாரியராயிருந்த அன்னா, ரோம ஆளுநரால் பிரதான ஆசாரியத்துவப் பணியிலிருந்து நீக்கப்பட்டிருந் தார், ஆனால் இவர் தமது மருமகனான காய்பா என்பவரை (யோவா. 18:13) அந்தப் பணியில் நியமிக்கும்படி செய்வதற்குப் போதுமான செல்வாக்கைப் பெற்றிருந்தார் (மத். 26:3, 57; யோவா. 11:49; 18:24). பெரும்பாலான யூதர்களின் கண்களுக்கு, அன்னாவே உண்மையான பிரதான ஆசாரியராக நிலைத்திருந்ததாகத் தோன்றியது (அப். 4:6ஐக் காணவும்).

ஆசாரியர்களுடன் கூடுதலாக புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பிற தலைமைத்துவங்களும் எழும்பியிருந்தன. முதலாவது, ரபீக்கள் (மத். 23:7, 8)[36] எனப்படுபவர்கள் இருந்தார்கள், இவர்கள் ஜெப ஆலயங்களிலும் ஜெப ஆலயப் பள்ளிகளிலும் போதகர்களாக இருந்தார்கள். ரபீக்கள் மத அதிகாரிகள் என்ற வகையில் பெருமளவுக்கு ஆசாரியர்களுக்குப் பதிலாக இடம் பெற்றிருந்தார்கள். சிலரைப் பொறுத்தமட்டில், நியாயப்பிரமாணத் தைப் பற்றிய ரபீத்துவ விளக்கமானது நியாயப்பிரமாணத்தைப் போன்றே கனமுள்ளதாக இருந்தது.[37]

அடுத்ததாக, முன்பு குறிப்பிடப்பட்ட வேத பாரகர்கள் இருந்தனர் (மத். 2:4; 5:20; 7:29; 9:3). "வேதபாரகர்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "எழுதுபவர்" என்ற நேரடி அர்த்தம் தருவதாக உள்ளது. தொடக்கத்தில் வேதபாரகர்கள் முக்கியமான நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் பொறுப்புடையவர்களாக இருந்தார்கள்.[38] புதிய

*ஏற்பாட்டுக் காலங்களில், இவர்கள் பழைய ஏற்பாட்டின் பிரதிகளை ஏற்படுத்தும் பொறுப்புடையவர்களாக இருந்தனர். இவர்கள் நியாயப் பிரமாணத்தின் அதிகாரிகள் என்று அறியப்பட்டிருந்தார்கள், மற்றும் சிலவேளைகளில் "நியாயசாஸ்திரிகள்" (லூக். 7:30; 11:45, 46, 52)*[39] *என்றும் அழைக்கப்பட்டார்கள். இவர்கள் குடிமைச் சட்டங்களில் விற்பன்னர்களாயிருந்தது இல்லை, ஆனால் மதரீதியான சட்டங்களில் விற்பன்னர்களாய் இருந்தார்கள். வேதபாரகர்களில் பெரும்பாலானவர்கள் பரிசேயர்களாக இருந்தனர் (அடுத்து வருகின்ற "பரிசேயர்கள்" என்ற கலந்துரையாடலைக் காணவும்).*

*இத்துடன் சனதெரீன் சங்கமும் இருந்தது. சனதெரீன் சங்கம் யூதர்களின் ''உயர்நீதிமன்றமாக'' இருந்தது. ''சனதெரீன்'' என்பது* KJV*யிலும்* NASB*யிலும் "ஆலோசனைச் சங்கம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது (மத். 26:59; மாற். 15:43; லூக். 22:66) ஆனால் இது* NIV*யில் "சனதெரீன்" என்றே தரவழைக்கப் பட்டுள்ளது. சனதெரீன் சங்கமானது யூத நாட்டின் உள் விவகாரங்களை முறைப்படுத்துவதற்கான அமைப்பாக கி.மு. சுமார் 200ம் ஆண்டுவாக்கில் முதன்முறையாகத் தோன்றியது. பாரம்பரியத்தின்படி சனதெரீனில் எழுபது உறுப்பினர்களும் - அத்துடன் தலைவராகச் செயல்பட்ட பிரதான ஆசாரியரும் இருந்தார்கள். இதில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் சதுசேயர்களாய் இருந்தார்கள் ("சதுசேயர்கள்" என்ற கலந்துரையாடலின் கீழ் காணவும்), ஆனால் வல்லமை நிறைந்த பரிசேயச் சிறுபான்மையினரும் அதில் இருந்தார்கள் ("பிற பிரிவுகள்" என்ற கலந்துரையாடலில் காணவும்).*

*மேலே குறிப்பிடப்பட்ட செல்வாக்குடைய எல்லா யூதர்களுக்கும் தங்கள் தகுதி நிலையையும், அதிகாரத்தின் பதவிகளையும் காத்துக் கொள்ளுதல் என்பது முக்கியமானதாக இருந்தது. இவ்விதமாக இவர்கள் இயேசுவின் மாபெரும் பகைஞர்கள் ஆனார்கள்.*

## குழுக்கள் எழும்புதல்

*இயேசுவின் நாட்களில் இருந்த யூதத்துவப் பிரிவுகள் பற்றிய பாடம் ஒரு தனிப்பகுதியாகப் படிப்பதற்குத் தகுதி வாய்ந்ததாக உள்ளது. இந்தப் பிரிவினர்களில் பெரும்பான்மையானோர் மதத்தினால் தூண்டுதல் பெற்றது போலவே அரசியலினாலும் கலாச்சாரத்தினாலும் தூண்டுதல் பெற்றார்கள்.*

***பரிசேயர்கள்***

*"பரிசேயர்" என்பது "தனிப்படுத்த" என்று அர்த்தம் தருகிற எபிரெய வினைச் சொல்லின் வடிவமாகும். இந்தப் பிரிவானது, யூதர்கள் கிரேக்கக் கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ளும்படி செலூக்கியர்களால் வற்புறுத்தப் பட்ட வேளையில் தொடங்கியிருக்கும் என்று சிலர் நினைக்கின்றார்கள். தொடக்கத்தில் பரிசேயர்கள் மத வழிபாட்டுடன் தேசபக்தியையும் ஒன்று கலந்தார்கள். இயேசுவின் நாட்களில், இவர்கள் சுயநீதி மற்றும் மரபு சார்ந்த தன்மை ஆகியவை கொண்ட ஒரு பிரிவாக சீர்கேடு அடைந்தார்கள் (மத்.*

*23:1-36). இவர்கள் எண்ணிக்கையில் கொஞ்சமாக இருந்தார்கள், ஆனால் மக்களிடம் பிரபலமாகி இருந்தார்கள், இவ்விதமாக இவர்கள் கணிசமான செல்வாக்குக் கொண்டிருந்தார்கள். எல்லா நடைமுறை நோக்கங்களுக்கும், இவர்கள் ஏவுதல் பெற்றிராத "முன்னோர்களின் பாரம்பரியம்" (மாற். 7:3) நியாயப்பிரமாணத்தைப் போலவே கட்டுவிப்பதாக ஆழ்ந்து சிந்தித்தார்கள். இந்தப் பாரம்பரியங்களை இயேசு மதிக்காதிருந்தபோது (மத். 15:1-14), பரிசேயர்கள் அவருக்குக் கசப்புமிக்க விரோதிகளானார்கள்.*

***சதுசேயர்கள்***

*"சதுசேயர்" என்ற பெயரானது, சாலொமோனின் கீழ் முதலாவது பிரதான ஆசாரியத்துவ வழியில் வந்த சாதோக் என்ற நபரின் பெயரிலிருந்து தரவழைக்கப்பட்டதாக இருக்கலாம் (1 இரா. 1:32, 34, 38, 45; மேலும் எசே. 40:46; 44:15 ஆகியவற்றைக் காணவும்). மகா ஏரோதின் காலத்திலிருந்தே எருசலேமின் வீழ்ச்சி வரையிலும் பதவிக்கு வந்த ஒவ்வொரு பிரதான ஆசாரியரும் சதுசேயராகவே இருந்தார். இது செல்வம் மிகுந்த. உயர்குடிக் குழுவாக, ஆசாரியர்கள் பலரைக் கொண்ட குழுவாக இருந்தது. பரிசேயர் கள் தோன்றிய காலகட்டத்திலேயே சதுசேயர்களும் தோன்றியதாகச் சிலர் நம்புகின்றார்கள். இவர்கள் கிரேக்க வழிமுறைகளை ஏற்றுக்கொண்டார் கள். அதிகாரத்தில் யார் இருந்தாலும் அவர்களுடன் ஒத்துப் போகும் இவர்களின் மனவிருப்பத்தின் காரணமாக, இவர்கள் ஒரு அரசியல் பலம் வாய்ந்தவர்கள் ஆயினர். கிரேக்கத் தத்துவத்தை இவர்கள் ஏற்றுக் கொண்டதின் நிமித்தமாக, இவர்கள் உயிர்த்தெழுதலையும் மரணத்திற்குப் பின்பு உள்ள வாழ்க்கையையும் பற்றிய கருத்துக்களைப் புறக்கணித்தார்கள் (மாற். 12:18; அப். 23:6-8). இவர்களின் அதிகாரத்தை இயேசு அச்சுறுத்தியதன் காரணமாக இவர்கள் அவரை வெறுத்தார்கள்.*

***பிற பிரிவுகள்***

*சுவிசேஷ விவரங்களில் பிற பிரிவுகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில், ஏரோதியர்கள் என்ற குழு, எல்லா பலஸ்தீனத்தின் மேலாக அரியணையின்மீது ஒரு ஏரோதை வைப்பதற்கு அர்ப்பணம் செய்திருந்த அரசியல் ரீதியான துடிப்புள்ள ஒரு குழுவாக இருந்தது (மத். 22:16; மாற். 3:6; 12:13; மேலும் மாற். 8:15ஐக் காணவும்).*

*செலாத்தே என்பவர்கள், ரோமர்களைப் பட்டயத்தினால் மேற் கொள்ள வேண்டும் என்று ஒப்புக்கொடுத்திருந்த யூதக் கலகக்காரக் குழுவினராக இருந்தார்கள். இந்தக் குழுவில் இருந்து சீமோன் எனப்பட்ட ஒருவர் அப்போஸ்தலரானார் (மத். 10:4; மாற். 3:18; லூக். 6:15).*

*உலகப்பிரகாரமான வரலாறு ஒன்றிலிருந்து நாம், மதரீதியான இன்னொரு குழுவும் இருந்தது என்று அறிகின்றோம்: இவர்கள் எஸ்ஸென்ஸ் என்று அறியப்பட்டார்கள். இது, சமுதாயத்திலிருந்து தங்களைப் பிரித்து வைத்துக் கொண்ட மத தீவிரவாதிகளின் அமைப்பாக இருந்தது. (இவர்கள் பரிசேயர்கள் குழுவிற்குள்ளாக இருந்தே தோன்றி யிருக்கலாம்.) கும்ரான் சமூகமானது (புகழ்பெற்ற "சவக்கடல் சுருள்களின்"*

ஆதார மூலமாக இருந்த) எஸ்ஸென்ஸுகளுடன் இணைவு கொண்டிருந்த தாகச் சிலர் நினைக்கின்றார்கள். ''எஸ்ஸென்ஸ்'' என்ற பெயரானது வேதாகமத்தில் காணப்படுவதில்லை. யோவான் ஸ்நானன் எஸ்ஸென்ஸாக இருந்திருக்கலாம் அல்லது தமது போதனையையும் நடைமுறையையும் எஸ்ஸென்ஸுகளிடமிருந்து பெற்றிருக்கலாம் என்ற அரைகுறையாய்க் கேள்வியுற்ற உரிமைகோருதலை மறுப்பதற்காக மட்டுமே நான் இந்தக் குழுவைப் பற்றிக் குறிப்பிடுகின்றேன். இந்த உரிமைகோருதலை மறுப்பதற்கு உள்ள ஆதாரங்களைப் போல் இதை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரம் எதுவும் இருப்பதில்லை.[40]

## மேசியாத்துவ எதிர்பார்ப்புகள்

இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் நான், யூதர்கள் தேவனுடைய மேசியாவுக்காக எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள் என்று குறிப்பிட்டிருந் தேன். மத்தேயு புத்தகத்தை முன்னிறுத்துதலில், நான் பின்வருமாறு விளக்கப்படுத்தியிருந்தேன்:

> ''மேசியா'' என்பது ''அபிஷேகம் பெற்ற[ஒரு]வர்'' என்று அர்த்தப்படும் ஒரு ஒலிபெயர்க்கப்பட்ட எபிரெய வார்த்தையாக உள்ளது. "கிறிஸ்து" (யோவா. 1:41) என்பது இதற்குச் சமமான கிரேக்க வார்த்தையாக உள்ளது. ஆசாரியர்கள் ... மற்றும் பிறரின் நியமனத்தில் அபிஷேகம் பயன்படுத்தப்பட்டது; ஆனால் ஒரு யூதர் "தேவனால் அபிஷேகம் பெற்றவர்" என்ற சொற்றொடரைக் கேள்விப்படும்போது, அவர் ஒரு ராஜாவையே நினைத்தார் (1 சாமு. 10:1; 24:6; சங். 2:2, 6ஐக் காணவும்).

இந்தப் பாடத்தின் முன்பகுதியில் நான், கடைசியாக இயேசு வந்த வேளையில், மேசியாவின் வருகை பற்றிய எதிர்பார்ப்பு மிகவும் உச்சகட்டத்தில் இருந்தது என்றும் குறிப்பிட்டிருந்தேன். இது தேவாலயத் தில் குழந்தை இயேசுவை வரவேற்ற சிமியோன் மற்றும் அன்னாள் ஆகியோரின் உணர்வெழுச்சியில் காணப்பட முடியும் (லூக். 2:25-38). சிமியோன், ''கர்த்தருடைய கிறிஸ்துவுக்காக'' எதிர்நோக்கிக் காத்து இருந்தார் (லூக். 2:26). அன்னாள், ''எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும்" [அவரைக்] இயேசுவைக் குறித்துப் பேசினாள் (லூக். 2:38). யோவான் ஸ்நானன் தன் ஊழியத்தைத் துவங்கினவுடனே, ''யோவானைக் குறித்து: இவன்தான் கிறிஸ்துவோ என்று ஜனங்க ளெல்லாரும் எண்ணங்கொண்டு, தங்கள் இருதயங்களில் யோசனையாய் இருந்தார்கள்'' (லூக். 3:15). சமாரியர்கள் கூட ''மேசியா (என்று அழைக்கப்படுகின்ற கிறிஸ்து) வருவார்" என்று நம்பியிருந்தார்கள் (யோவா. 4:25). அரிமத்தியாவூர் யோசேப்பு என்பவர், "தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவர்'' என்று விவரிக்கப்பட்டார் (லூக். 23:51). பொதுவாக மக்களின் எதிர்பார்ப்பானது, இயேசுவை ராஜாவாக முடிசூட்ட அவர்கள் செய்த முயற்சியிலும் (யோவா. 6:15), எருசலேமுக்குள் [இயேசுவின்]

*வெற்றிப் பிரவேசத்தின்போது இருந்த உணர்வெழுச்சியிலும் (யோவா. 12:13) காண முடியும்.*

*மேசியாவின் வருகையானது கலந்துரையாடலுக்கு ஒரு பிரபலமான பாடக் கருத்தாக இருந்தது என்பது தெளிவு. அவரது வாழ்வின் விவரங்கள் அறியப்பட்டிருந்தன: அவர் தாவீதின் சந்ததியைச் சேர்ந்தவராக இருப்பார் (மத். 22:42); அவர் பெத்லகேமில் பிறப்பார் (மத். 2:5, 6; யோவா. 7:42). மேசியாவைப் பற்றிய கலந்துரையாடலில் அவரது முன்னோடியைப் பற்றிய யூகமும் பிணைக்கப்பட்டிருந்தது (யோவா. 1:21; மத். 16:14 ஆகியவற்றைக் காணவும்). பொய்யான மேசியாக்கள் எழும்பியிருந்தார்கள் என்பது உறுதி, இவர்கள் மக்களின் நம்பிக்கைகளை விசிறி தூண்டி விட்டிருந்தார்கள்.[41]*

*இந்த எல்லா எதிர்பார்ப்புக்களுடனும், யோவானின் வார்த்தையானது புரிந்துகொள்வதற்கு மிகவும் கடினமானதாக இருந்திருக்கலாம்: "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவா. 1:11). இயேசு யூதர்களால் பொதுவாகவும், யூதத்தலைவர்களால் குறிப்பாகவும் புறக்கணிக்கப்பட்ட விஷயமானது புதிய ஏற்பாட்டின் மிகவும் இன்றியமையாத ஆய்வுக் கருத்தாக உள்ளது (மத். 21:42; மாற். 12:10; லூக். 17:25; அப். 4:11; 1 பேது. 2:4, 7). நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த மேசியா என்று இயேசு ஏன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை?*

*அடிப்படையில், யூதர்கள் மேசியாவைப் பற்றி ஒரு முன் அனுமானக் கருத்தைக் கொண்டிருந்தார்கள், அந்தக் கருத்துக்கு இயேசு பொருந்தி வராதபடியால் அவர் புறக்கணிக்கப்பட்டார். மேசியா என்பவர் தேவனால் அனுப்பப்பட்ட ராஜாவாயிருந்தார் (ஏசா. 9:6, 7) அவர் தாவீதின் ராஜ வம்சத்திலிருந்து தோன்றுவார் (சங். 89:3, 4) என்று பழைய ஏற்பாடு போதித்தது. மேசியா ஒரு பாடுபடும் ஊழியராக இருப்பார் (சங். 22:1-21; ஏசா. 53:1-12) என்றும் பழைய ஏற்பாடு போதித்தது, ஆனால் இந்த இயல்பை உடைய தீர்க்கதரிசனங்கள் பெருமளவுக்குப் புறக்கணிக்கப் பட்டன. ரோமர்களைத் தோற்கடிப்பதற்கும் தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோரின் நாட்களில் இருந்தது போன்று, இஸ்ரவேலின் அரசாட்சியைத் திரும்பக் கட்டி எழுப்புவதற்கும் யூதர்களுக்கு ஒரு பலம் வாய்ந்த அரசியல் மற்றும் இராணுவரீதியான தலைவர் தேவை என்பதே அவர்களின் மனங்களில் இருந்தது என்பது தெளிவு. "என் இராஜ்யம் இவ்வுலகத்திற் குரியதல்ல" (யோவா. 18:36அ) என்று கூறிய ஒரு கிறிஸ்து மேற்சொன்ன எதையும் செய்ய மாட்டாரே. இயேசு, மேசியாவுக்காக ஆயத்தமாகியிருந்த தமது மக்களின் முன் அனுமானம் என்ற "சதுரத் துளையில்" பொருந்த முடியாத "வட்ட முளையாக" இருந்தார்.*

## *முடிவுரை*

*இயேசுவின் நாட்களில் இருந்த - சராசரி யூதக் குடும்பத்தின் அன்றாட வாழ்வு உள்ளிட்ட - மற்ற விவரங்கள் தரப்பட முடியும், ஆனால் அப்படிப் பட்ட விவரங்களுக்கு நாம் சற்றே காத்திருக்க வேண்டும். அவைகள்,*

*சுவிசேஷ விவரங்களின் வேத வசனப்பகுதிகளுக்குத் தொடர்புடைய இடம் வருகையில் அறிமுகப்படுத்தப்படும்.*

*இயேசு வந்த வேளையில் இருந்த உலகம் பற்றிய இந்தப் பாடத்தை, மேசியா என்பவர் "வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போல்" இருப்பார் (ஏசாயா 53:2) என்ற தீர்க்கதரிசனத்தைக் கவனித்தலுடன் நாம் முடிப்போம். அவரது வருகைக்காகத் தேவன் தயாரிப்பைச் செய்திருந்தார் (கலா. 4:5), ஆனால் மக்களின் இருதயங்கள் இன்னமும் வறண்ட விடாய்த்த பூமியைப்போன்றே இருந்தது. இந்த உபசரிப்பற்ற சூழ்நிலையில் கிறிஸ்து வருகிறவராய் இருந்தார். கடைசியில், இயேசுவின் மார்க்கம் வளர்ந்து உலகம் முழுவதிலும் பரவும்.*

---

*குறிப்புகள்*

[1]*மற்ற யூதர்கள் திரும்பி வரவில்லை, ஆனால் அவர்கள் சிதறடிக்கப்பட்ட நாடுகளிலேயே தங்கியிருந்தார்கள். இவர்கள் "சிதறியிருக்கிறவர்கள்" (யோவா. 7:35; மேலும் யாக். 1:1ஐக் காணவும்) என்று அறியப்பட்டார்கள்.* [2]*பழைய ஏற்பாட்டின் கடைசி வேத வசனப்பகுதியானது கி.மு. 430-425வாக்கில் எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டின் முதல் நிகழ்ச்சிகள் - யோவான் ஸ்நானனின் பிறப்புடன் தொடர்புடையவை - கி.மு. 5வாக்கில் நடைபெற்றன. இது, (பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையில்) நானூறுக்கும் சற்று அதிகமான ஆண்டுகள் இடைவெளியை ஏற்படுத்துகிறது.* [3]*ஸ்மித் அவர்களின் மூன்று சாத்தியக்கூறுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தழுவி அமைக்கப்பட்டன* (F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* [Eugene, Oreg.: Harvest House Publishers, 1984], 1338-39). [4]*இவைகள் பழைய ஏற்பாட்டு "மதநூல்களில்" உள்ளடக்கப்படவில்லை (மதநூல் என்பது* [canon] *ஏவுதல் பெற்றது என்று கருதப்படுகின்ற பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களின் தொகுப்பாகும்).* [5]*இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் பழைய ஏற்பாட்டிலிருந்து அடிக்கடி மேற்கோள் காண்பித்தார்கள், ஆனால் அவர்கள் தள்ளுபடி ஆகமங்களிலிருந்து எதையும் மேற்கோள் காண்பித்ததில்லை.* [6]*யோஸிப்பஸ் என்பவர் Against Apion மற்றும் Autobiography என்ற இரு புத்தகங்களையும் எழுதினார், ஆனால் அவை நமக்குக் குறைவான முக்கியத்துவம் உடையவையாக உள்ளன.* [7]*தீர்க்கதரிசனக் கனவுகளில், ரோமப் பேரரசின் உள்ளார்ந்த இயல்பான பலவீனம் போன்ற மற்ற விவரங்களும் அடங்கியிருந்தன. தேவன் தமது இராஜ்யத்தை எழும்பச் செய்வார் (தானி. 2:44) என்ற வாக்குத்தத்தமே நமக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாக உள்ளது - இது சபை ஸ்தாபிக்கப்பட்ட போது நிறைவேற்றப்பட்ட வாக்குத்தத்தமாக உள்ளது. ஆயினும், இந்தப் பாடத்தில் நாம், முன்னுரைக்கப்பட்ட நான்கு இராஜ்யங்கள் மீதும் கவனம் செலுத்த விரும்புகின்றோம்.* [8]*மேதியர் மற்றும் பெர்சியர் என்பவர்கள் உலகத்தை வெற்றிகொள்ள இணைந்து செயல்பட்ட படைகளாயிருந்தனர், எனவே இது மேதிய-பெர்சிய பேரரசு என்று நினைக்கப்படலாம். இதற்கு மறுபுறத்தில், பெர்சியா என்பது மிகவும் ஆதிக்கமுடையதாக இருந்தது, எனவே இது அடிக்கடி, பெர்சியப் பேரரசு என்று குறிப்பிடப்படுகிறது. இவ்விதமாக நான் இதை எளிமையாக பெர்சிய ஆளுகை என்று மட்டுமே சில வேளைகளில் குறிப்பிடுவேன்.* [9]*மாறுபட்ட அதிகாரிகளால் தரப்பட்டுள்ளபடி வெவ்வேறு காலகட்டங்களின் தேதிகள் ஒரு சில ஆண்டுகள் வித்தியாசமானவைகளாக உள்ளன. தரப்படுகின்ற*

*தேதிகளை மிகச் சரியானவை என்று நினைக்காமல், தோராயமானவை என்றே நினையுங்கள். பல்வேறு காலகட்டங்களின் தேதிகள் பலஸ்தீன ஆளுகையுடன் மட்டுமே வரையறுக்கப்படுகின்றன. [10]மகா அலெக்சாந்தர் மெக்கதோனியாவில் இருந்து வந்தவரானதால், இது ''மெக்கதோனியர்களின் காலம்'' என்றும் அறியப்படுகிறது. தானியேல் 8:21 வசனம், ''கிரேக்கு'' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது, எனவே நாமும் இந்த ஆய்வில் அதே வார்த்தையைப் பயன்படுத்துவோம்.*

*[11]கொய்னீ கிரேக்கம் என்பது இலக்கியத் தரம் வாய்ந்த கிரேக்கத்திற்கு எதிரான மொழியாக, சாதாரண மக்கள் பேசும் கிரேக்க மொழியாக இருந்தது. [12]மகா அலெக்சாந்தருடைய இராஜ்யத்தின் நான்கு பாகமான பிரிவினையானது தானியேல் 8:8, 21, 22ல் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. [13]“தாலமிகள்” என்ற பெயர், எகிப்தின் மீது ஆதிக்கம் செலுத்திய தாலமி என்ற படைத் தளபதியின் பெயரில் இருந்து தரவழைக்கப்பட்டது. [14]“செலூக்கியர்கள்” என்ற பெயர் சீரியாவின் மீது ஆதிக்கம் செலுத்திய செலூக்கஸ் என்ற படைத்தளபதியின் பெயரில் இருந்து தரவழைக்கப்பட்டது. [15]''கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம்'' என்ற வரைபடத்தில் காணவும். [16]ஸ்மித், 1346. தானியேலின் புத்தகத்தில் உள்ள பல தீர்க்கதரிசனங்கள் அந்தியோகஸ் எபிபெனஸ் என்ற சர்வாதிகாரியின் ஆளுகையை எடுத்துரைப்பதாகப் பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது (எடுத்துக்காட்டாக, தானி. 8:9-11). [17]பன்றி என்ற விலங்கானது யூதர்களுக்கு அசுத்தமான விலங்காக இருந்தது (லேவி. 11:3, 7). [18]இது அஸ்மோனியர் (அல்லது ஹஸ்மோனியர்) காலம் என்றும் அறியப் படுகிறது. [19]பிரதான ஆசாரியர் ஆரோனின் வம்சவழியில் வந்தவராக, வழக்கமாக[தம் பெற்றோருக்கு மூத்த மகனாக]வே இருக்க வேண்டும் என்று மோசே கட்டளை யிட்டு இருந்தார் (யாத். 29:9; எண். 25:10-13 ஆகியவற்றைக் காணவும்). மோசேயின் அறிவுறுத்தல்கள் மறக்கப்பட்டன அல்லது புறக்கணிக்கப்பட்டன என்பது உறுதி. [20]ஒவ்வொரு தேதியைப்பற்றிய விஷயம் இது போன்றே இருப்பதால், நமது அக்கறை பலஸ்தீன நாட்டைப் பற்றியதாகவே உள்ளது. கி.பி. 70ல் ரோமாபுரியார் எருசலேமை அழித்தார்கள்.*

*[21]அந்த வேளையில், ரோமாபுரியானது பாம்ப்பே மற்றும் யூலியு இராயன் உள்ளிட்ட ஒரு மூவரசர் தொகுதியால் ஆளப்பட்டிருந்தது. கடைசியில் யூலியூ இராயன் கட்டுப்படுத்துதலை எடுத்துக் கொண்டான். [22]''கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம்” என்ற வரைபடத்தை காணவும். [23]“பாசான்” என்பது பழைய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது (யோசு. 22:7; 1 நாளா. 6:71; ஏசா. 33:9), ஆனால் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப் படுவது இல்லை. இத்துரேயா மற்றும் திரேகொனித்தி நாடுகளைச் சுற்றிலுமிருந்த பகுதியானது பாசான் என்ற பழைய நாட்டிற்கு இணையானதாயிருந்தது, எனவே இந்தப் பகுதியானது வரைபடங்களில் அடிக்கடி ''பாசான் மாவட்டம்'' என்று குறிப்பிடப்படுகிறது. [24]“கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம்” என்ற வரைபடத்தில் காணவும். [25]இராயனின் உருவத்துடன் இருந்த நாணயங்கள் சுற்றுக்கு விடப்பட்டிருந்தன (மத். 22:20), ஆனால் யூதர்கள் ரோமாபுரியாருக்குத் தங்கள் வரியைச் செலுத்துவது என்ற செயலைத் தவிர்த்து, மற்ற பரிவர்த்தனைகளுக்கு “சபிக்கப்பட்ட நாணயங் களை” கையாள வேண்டியிருந்தது இல்லை. [26]“பலஸ்தீனம்” என்ற பெயர் பெலிஸ்தர்கள் என்பதிலிருந்து தரவழைக்கப் பட்டது. பெலிஸ்தர்கள் கானான் நாட்டின் தெற்குக் கடற்கரைப் பகுதியில் வாழ்ந்திருந்தார்கள் (செப். 2:5ஐக் காணவும்). மக்காபேயர்கள் பெலிஸ்தர்களுக்கு எதிராக யுத்தம் செய்தார்கள், ஆனால் புதிய ஏற்பாட்டில் பெலிஸ்தர்கள் [தங்கள்] பெயரினால் குறிப்பிடப்படுவதில்லை. அவர்கள் யூத இனத்திற்குள் ஒன்றாக்கப் பட்டதாகச் சிலர் நினைக்கின்றார்கள். [27]“பலஸ்தீனம்”*

என்ற பெயரானது KJV பழைய ஏற்பாட்டில் ஒருமுறை காணப்படுகிறது - யோவேல் 3:4. இந்த வார்த்தை NASB வேதாகமத்தில் ''பிலிஸ்தியா'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [28]John D. Davis, "Palestine," *A Dictionary of the Bible*, 4th ed. (Grand Rapids, Mich.: Baker Book House, 1956), 562. [29]பலஸ்தீனத்தின் அளவை நீங்கள் வாழ்கின்ற பகுதிகளின் அளவுடன் ஒப்பிடவும். இது பலஸ்தீனத்தின் ஒப்பீட்டு அளவான சிறிய அளவை உங்கள் உரையைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ள உதவும். அது ஃபிஜீ, குவைத் அல்லது சுவிட்ஜர்லேன்டு ஆகிய நாடுகளை விடச் சற்றே பெரியதாகவும், பெல்லிசீ, எல் சல்வெடார் அல்லது ஸ்லோவேனியா நாடுகளை விடச் சற்றே சிறியதாகவும் இருந்தது. [30]இந்தப் பாடத்தில் ''பாசாஃனே''ப் பற்றி முன்பு குறிப்பிட்ட குறிப்பு எண்ணை மறுகண்ணோட்டமிடவும்.

[31]இந்தப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட நகரங்கள் இருந்தன, ஆனால் அவற்றில் பத்து மட்டுமே மிகவும் இன்றியமையாதவைகளாகக் கருதப்பட்டன. [32]தேவாலயம் கி.பி. 60களில் வரையிலும், அதாவது கி.பி. 70ல் ரோமர்களால் அழிக்கப்படுவதற்குச் சற்றுக் காலம் முன்பு வரையிலும் பணி முடிக்கப்படாதிருந்தது. அந்தக் காலம் வரையில் கூட கட்டுமானப் பணி முடிவடையவில்லை என்று சிலர் நினைக்கின்றார்கள். [33]இந்தப் புத்தகத்தில் உள்ள "யூதர்களின் பண்டிகைகள்" என்ற வரைவட்ட வணையைக் காணவும். எக்காளங்களின் பண்டிகை மற்றும் பூரிம் பண்டிகை ஆகியவற்றைத் தவிர மற்ற பண்டிகைகள் யாவையும் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பண்டிகைகள் பற்றி பிற்பாடு, இவைகள் வேத வசனங்களில் அறிமுகப்படுத்தப்படும் வேளையில் கலந்துரையாடப்படும். [34]"ஜெப ஆலயம்'' என்ற வார்த்தையானது உண்மையில் மக்கள் கூடிவரும் இடத்திற்கு மாறாக மக்களையே குறிப்பிட்டது. (''ஜெப ஆலயம்'' என்ற வார்த்தை யின் அடிப்படை அர்த்தம் பற்றிய கருத்தை, இந்தப் புத்தகத்தில் உள்ள "மத்தேயு எழுதிய சுவிசேஷம்'' என்ற பாடத்தின் முடிவில் வரும் குறிப்பு எண். 22க் காணவும்.) இருந்தபோதிலும், புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தையானது மக்கள் கூடிவந்த கட்டிடத்தைக் குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டது (லூக். 7:5). [35]ஜெப ஆலயங்கள் பற்றியும் அவற்றின் நிறுவன அமைப்பு மற்றும் ஆராதனைகள் பற்றியும் தொடர்ந்து வரும் புத்தகங்களில் நாம் அதிகமாய்க் கூறுவோம். எடுத்துக்காட்டாக, அவற்றின் தலைவர்கள் "மூப்பர்கள்" என்று அறியப் பட்டனர். சில வேளைகளில் சுவிசேஷ விவரங்களில் "மூப்பர்கள்" என்ற வார்த்தை ஜெப ஆலயத் தலைவர்களைக் குறிப்பிடவும் (லூக். 7:3-5), மற்றும் சில வேளைகளில் மதத்தின் மற்ற அதிகாரிகளைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. [36]''ரபீ'' என்ற எபிரெய வார்த்தை ''எனது எஜமானர்'' என்று அர்த்தப்படுகிறது. இது, "எனது போதகர்" என்றும் அர்த்தப்பட முடியும் (யோவா. 20:16ஐக் காணவும்; ''ரபோனீ'' என்பது ''ரபீ'' என்பதன் மாறுபாடாக உள்ளது). இயேசு, மரியாதையின் அடையாளமாகத் தமது சீஷர்களால் "ரபீ'' என்று அழைக்கப்பட்டார் (மத். 26:25; மாற். 9:5; யோவா. 3:2). [37]இந்த விளக்கங்கள் கடைசியாக "The Talmud" என்று அறியப்பட்ட ஒரு தொகுப்பாகச் சேர்க்கப்பட்டன. [38]2 சாமுவேல் 8:17ஐக் காணவும் (NASBயில் "secretary" [தமிழில் இது "சம்பிரதி" என்றுள்ளது] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, ''வேத பாரகர்'' என்பதற்கான வார்த்தையாக உள்ளது; KJVஐக் காணவும்). [39]நியாயப்பிரமாணப் போதகர்களைக் குறிப்பிடுவதற்கு, KJV அவ்வப்போது "doctor" என்ற வார்த்தையையும் பயன்படுத்துகிறது (லூக். 2:46; 5:17). [40]யோவான் தேவனிடத்திலிருந்து தேவனுடைய செய்தியுடன் அனுப்பப் பட்டார் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (யோவா. 1:6; லூக். 3:2). மற்றும், எஸ்ஸென்ஸுகளின் போதனைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை யோவானின் போதனைகள்

*மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டால் பல வேறுபாடுகள் வெளியாகின்றன.*

*[41]இயேசு தமது சீஷர்களிடத்தில், இவை யாவும் தாம் சென்ற பின்பு நடைபெறும் என்று கூறினார் (மத். 24:5, 23, 24). கல்வியாளர்களில் பலர், இது அவரது பிறப்புக்கு முன்பும் நடைபெற்றிருந்தன என்று நம்புகின்றார்கள். அப். 5:36, 37 வசனங்கள் பொய் நடிப்புக்காரர்கள் இருவரைப் பற்றிக் கூறலாம்.*




*கிறிஸ்துவின் வாழ்வின் போது பலஸ்தீனம்*

## யூதர்களின் பண்டிகைகள்[1]

| பண்டிகையின் பெயர் | இது எவ்விதம் குறிப்பிடப் பட்டது | ஆசரிக்கப் படும் மாதம் | பரிசுத்த ஆண்டின் மாதம் | குடிமை ஆண்டின் மாதம் | தோராயமான ஆங்கில மாதம் | பண்டிகைக் காலம் | எங்கு ஆசரிக்கப் பட்டது | இதன் ஆசரிப்பின் முக்கிய அம்சம் | இது எதனைக் குறித்தது | பிற பெயர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பஸ்கா | பெரும் பண்டிகை | நிசான் அல்லது ஆபீப் | 1 வது | 7 வது | ஏப்ரல் | 1 வாரம் | எருசலேம் | பஸ்கா ஆட்டுக் குட்டியை உண்ணுதல் | மரணம் கடந்து செல்லுதல் மற்றும் எகிப்தில் இருந்து புறப்படுதல் | புளிப்பில்லாத அப்பப் பண்டிகை |
| பெந்தெகொஸ்தே | பெரும் பண்டிகை | சீவான் | 3 வது | 9 வது | ஜுன் | 1 நாள் | எருசலேம் | கோதுமையின் முதற் பலன்களை குறிக்கும் வகையில் இரண்டு அப்பங்களை ஒப்புக் கொடுத்தல் | சீனாய் மலையில் நியாயப் பிரமாணம் தரப்பட்டது | வாரங்கள்: முதற்பலன்கள்; கோதுமை அறுப்பு |
| கூடாரங்கள் | பெரும் பண்டிகை | திஸ்ரி அல்லது எத்தானிம் | 7 வது | 1 வது | அக்டோபர் | 1 வாரம் | எருசலேம் | கூடாரங்களில் வசித்தல் | வனாந்தரத்தில் வாழ்க்கை | ஒன்றுகூடுதல் |
| எக்காளங்கள் | சிறு பண்டிகை | திஸ்ரி அல்லது எத்தானிம் | 7 வது | 1 வது | அக்டோபர் | 1 நாள் | எவ்விடத்திலும் | எக்காளங்கள் ஊதுதல் | புத்தாண்டு நாள் | |
| பிரதிஷ்டை | சிறு பண்டிகை | கிஸ்லேயு | 9 வது | 3 வது | டிசம்பர் | 8 நாட்கள் | எவ்விடத்திலும் | மகிழ்தல், பாடுதல், விளக்குகளையும் பந்தங்களையும் ஏற்றுதல் | புறதெய்வ வணக்கத்தாரிடமிருந்து தேவாலயத்தை மீண்டும் கைப்பற்றிக் கொண்டபின் அதை மீண்டும் பிரதிஷ்டை செய்தல் | விளக்குகள் |
| பூரிம் | சிறு பண்டிகை | ஆதார் | 12 வது | 6 வது | மார்ச்சு | 2 நாட்கள் | எவ்விடத்திலும் | எஸ்தரின் புத்தகத்தை வாசித்தல் | எஸ்தர் இராஜாத்தி யூதர்களைக் காப்பாற்றுதல் | |

[1]Reprinted from *Training for Service* by Orrin Root © 1964. Revised by Eleanor Daniel © 1983, Standard Publishing. Used by permission.

# 7

# கிறிஸ்துவின் வாழ்வின் இசைவைக் கற்றுக்கொள்ளுதல்

*மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோரின் சுவிசேஷ விவகரங்களைப் படிப்பதன்மூலம் நாம் நமது பாடத்தை தொடங்குவோம். நீங்கள் காணப்போகின்றபடி, இந்தப் புத்தகத்தில் படிக்கப்போகின்ற இசைவின் ஒரு பகுதி முதலாவது கொடுக்கப்பட்டிருக்கிறது. புத்தகத்தின் மீதி பகுதியில், படிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட வசனம் சம்பந்தப்பட்ட ஒரு பாடமானது, அதே பாடத்திலிருந்து, வசனப்பகுதிக்கு சம்பந்தப்பட்ட இன்னொரு பாடத்துடன் மாறிமாறிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இசைவின் ஒவ்வொரு பகுதியையும் பிரசங்கரீதியாக வழங்க ஒரு முயற்சி செய்யப்பட்டுள்ளது. நமக்கு இதில் இரண்டு நோக்கங்கள் உள்ளன: (1) ஒவ்வொரு பாடத்தையும் எவ்வளவு ஆர்வமுள்ளதாக்க முடியுமோ அவ்வளவு ஆர்வமுள்ளதாக்க ஒரு முயற்சி செய்தலும் (2) அதிகமான வசனப் பகுதிகள் எவ்வாறு விரைவில் கண்ணோட்டமிடுவது என்பதை விலக்கப்படுத்துலுமே. கிறிஸ்துவின் வாழ்வின் தொடர்பாடங்கள் முழுவதுமே இதே வழிமுறையில் தொடர்கின்றன.*

*மிகவும் ஆர்வமிக்க பாடத்தொடர் வரப்போகின்றன. கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிப் படிக்க நாம் கூடுதலான சமயம் எடுத்துக் கொள்ளப் போகிறோம். நாம் அவருடைய “அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி” நமக்கு அவர் “ஒருமுன்மாதிரியைப்” பின்வைத்துப் போயிருக்கிறார் (1 பேது. 2:21), நாமும் நமது எஜமானின் அடிச்சுவடுகளை அதிகமாகப் பின்பற்றிச் செல்வோம்.*

# ஒப்பீடு

I. *அவரது ஊழியத்திற்கு முன்னதாகக் கிறிஸ்துவின் வாழ்வு.*
   A. *லூரக்காவின் முன்னுரை மற்றும் அர்ப்பணிப்பு (லூரக். 1:1-4).*
   B. *யோவானின் அறிமுகம் (யோவா. 1:1-18).*
   C. *மத்தேயு கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (மத். 1:1-17).*
   D. *லூரக்கா கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (லூரக். 3:23-38).*
   E. *யோவான் ஸ்நானன் பிறப்பு பற்றி சகரியாவுக்கு தூதனின் அறிவிப்பு (லூரக். 1:5-25).*
   F. *இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்குத் தூதனின் அறிவிப்பு (லூரக். 1:26-38).*
   G. *(கர்ப்பவதியாயிருந்த இயேசுவின் தாயார்) மரியாள், (கர்ப்பவதியா யிருந்த யோவான் ஸ்நானனின் தாயார்) எலிசபெத்தைச் சந்தித்தல் (லூரக். 1:39-56).*
   H. *யோவான் ஸ்நானனின் பிறப்பும், அவரது தொடக்க கால வாழ்வும் (லூரக். 1:57-80).*
   I. *இயேசுவின் வருகை பற்றி யோசேப்புக்கு அறிவிப்பு (மத். 1:18-25).*
   J. *இயேசுவின் பிறப்பு (லூரக். 2:1-7).*
   K. *இயேசுவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படுதல் (லூரக். 2:8-20).*
   L. *இயேசுவுக்கு விருத்தசேதனம் மற்றும் பெயரிடுதல்; தேவாலய ஆராதனை (லூரக். 2:21-39).*
   M. *கிழக்கிலிருந்து ஞானிகளால் இயேசு சந்திக்கப்படுதல் (மத். 2:1-12).*
   N. *எகிப்துக்கு ஓடிப்போகுதலும் பெத்லகேமில் ஆண் குழந்தைகள் கொல்லப்படுதலும் (மத். 2:13-18).*
   O. *குழந்தை இயேசு எகிப்தில் இருந்து நாசரேத்தூருக்குக் கொண்டு வரப்படுதல் (மத். 2:19-23; லூரக். 2:39ஆ வைக் காணவும்).*
   P. *இயேசு நாசரேத்தூரில் வாழ்தல்; அவரது பன்னிரெண்டு வயதில் எருசலேமுக்கு ஒரு பயணம் (லூரக். 2:40-52).*

II. *யோவான் ஸ்நானனின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோவானின் ஊழியம் (மத். 3:1-6; மாற். 1:1-6; லூரக். 3:1-6).*
   B. *யோவானின் செய்தி (மத். 3:7-12; மாற். 1:7, 8; லூரக். 3:7-18).*

III. *இயேசுவின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோர்தான் நதியில் யோவானிடம் இயேசு ஞானஸ்நானம்*

*பெறுதல் (மத். 3:13-17; மாற். 1:9-11; லூக். 3:21, 22; யோவா. 1:31-34).*

B. *வனாந்தரத்தில் இயேசு சோதிக்கப் படுதல் (மத். 4:1-11; மாற். 1:12, 13; லூக். 4:1-13).*

C. *இயேசுவைப் பற்றி யோவானின் சாட்சியம் (யோவா. 1:19-34).*

D. *(யூதேயாவில்) இயேசுவின் முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51).*

E. *(கலிலேயாவின் கானாவூரில்) இயேசுவின் முதல் அற்புதம் (யோவா. 2:1-11).*

F. *(கலிலேயாவின்) கப்பர்நகூமில் இயேசு முதலில் தங்குதல் (யோவா. 2:12).*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை.*

A. *இயேசுவின் ஊழிய காலத்தில் வந்த முதல் பஸ்கா.*

1. *தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (யோவா. 2:13-25).*
2. *நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (யோவா. 3:1-21).*

B. *யூதேயாவில் முதல் ஊழியம் (மற்றும் யோவானாலும் மேலும் சாட்சி கொடுக்கப்படுதல்) (யோவா. 3:22-36).*

## 8

# கிறிஸ்து வருகின்றார்!

### *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #1*

I. *அவரது ஊழியத்திற்கு முன்னதாகக் கிறிஸ்துவின் வாழ்வு.*
   A. *லூக்காவின் முன்னுரை மற்றும் அர்ப்பணிப்பு (லூக். 1:1-4).*
   B. *யோவானின் அறிமுகம் (யோவா. 1:1-18).*
   C. *மத்தேயு கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (மத். 1:1-17).*
   D. *லூக்கா கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (லூக். 3:23-38).*
   E. *யோவான் ஸ்நானன் பிறப்பு பற்றி சகரியாவுக்கு தூதனின் அறிவிப்பு (லூக். 1:5-25).*
   F. *இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்குத் தூதனின் அறிவிப்பு (லூக். 1:26-38).*
   G. *(கர்ப்பவதியாயிருந்த இயேசுவின் தாயார்) மரியாள், (கர்ப்பவதியா யிருந்த யோவான் ஸ்நானனின் தாயார்) எலிசபெத்தைச் சந்தித்தல் (லூக். 1:39-56).*
   H. *யோவான் ஸ்நானனின் பிறப்பும், அவரது தொடக்க கால வாழ்வும் (லூக். 1:57-80).*

## *அறிமுகம் (லூக். 1:1-4)*

*லூக்காவின் சுவிசேஷ விவரத்திற்கான அவரது அறிமுகத்தில், அவர் "... நானும் உமக்கு உபதேசிக்கப்பட்டவைகளின் விசேஷங்களின் [கிறிஸ்துவின் வாழ்வின்] நிச்சயத்தை நீர் அறிய வேண்டுமென்று அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று" (வ. 3, 4) என்று எழுதினார்.[2] இயேசுவைப் பற்றிய "மிகச் சரியான சத்தியத்தை" நீங்கள் அறிய உதவுதல் என்பதே நமது தற்போதைய படிப்பின் அடிப்படை நோக்கமாக உள்ளது. நமது முதல் பாடமானது அவரது பிறப்பை எதிர்பார்த்திருந்த சுவிசேஷ விவரங்களில் அறிமுகக் கருத்துக்களாக உள்ளது. "கிறிஸ்து வருகின்றார்!" என்பதே இந்தப் பாடத்தின் முற்றான ஆய்வுப் பொருளாக இருக்கிறது.*

## *முன்பே இருந்தது வலியுறுத்தப்பட்டது (யோவான் 1:1-18)[3]*

*கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றி நாம் நினைக்கும்போது, பொதுவாக*

பெத்லகேமில் அவரது பிறப்பை கொண்டே நாம் தொடங்குகின்றோம். அந்த நிகழ்ச்சிக்கு நீண்ட காலம் முன்பாகவே இயேசு இருந்தார் என்பதைத் தமது வாசகர்கள் அறிய வேண்டும் என்று யோவான் விரும்பினார். அவர் [இயேசு] உலகம் உண்டாவதற்கு முன்னதாகவே கூட இருந்தார் - ஏனென்றால் அவர் உண்மையில் தேவனாகவே இருக்கிறார்:

> ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று;[4] உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை (யோவா. 1:1-3).

இயேசு, "தேவத்துவம்" ("Godhead") என்று KJV அழைக்கின்ற மூன்று தெய்வீக நபர்த்துவத்தில் ஒருவராக இருக்கின்றார் (அப். 17:29; ரோமர் 1:20; கொலோ. 2:9). இம்மூவரும் மத்தேயு 28:19ல் பட்டியலிடப்பட்டுள்ளார்கள்: பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர். இயேசு தேவனாக இருக்கின்றார் என்ற கருத்து புரிந்து ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஒரு சுலபமான கருத்தாக இருப்பதில்லை. "தேவன்" என்ற வார்த்தையை நாம் பயன்படுத்தும்போது, நாம் பொதுவாக பிதாவாகிய தேவனைக் குறிப்பிடுகின்றோம். இந்தக் கணத்திற்கு, இயேசு குமாரனாகிய தேவனாக இருக்கின்றார் என்ற கருத்தை உங்கள் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். நமது இந்த பாடங்கள் தொடருகையில் இயேசுவின் தெய்வீகத்தைக் குறித்து இன்னும் அதிகமானவை கூறப்படும்.

மீண்டும், நாம் இயேசுவைப் பற்றி நினைக்கும்போது, அவர் எப்போதுமே "இயேசு" என்ற பெயர் கொண்டவராயிருந்தார் என்றோ அல்லது "கிறிஸ்து" என்று குறிப்பிடப்பட்டார் என்றோ நாம் வழக்கமாக நினைக்கின்றோம். ஆயினும், மரியாள் ஒரு குழந்தையைக் கர்ப்பந்தரித்திருந்த விஷயம் பற்றித் தூதன் யோசேப்புக்குக் கூறியபோது, "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" (மத். 1:21) என்று கூறினார். "கிறிஸ்து" (''அபிஷேகம் பண்ணப்பட்டவர்'') என்ற இயற்பெயரை/குறிப்புப் பெயரைப் பற்றி, இயேசு தமது ஞானஸ்நானத்தின்போது (மத். 3:13-17), ஆவியானவரைக் கொண்டு தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டார் (லூக். 4:18; அப். 10:38). இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்திற்கு முன்பு அவரது பெயர் என்னவாக இருந்தது?[5]

இயேசு தமது பூமிக்குரிய இருப்பிற்கு முன்பு, வார்த்தையாக [*logos*[6]] இருந்தார் என்று யோவான் கூறினார். கிறிஸ்து, தேவனுடைய வார்த்தையின் நபர்த்துவமாக இந்த பூமிக்கு வந்தார். யோவான் 1:18ல் அவர் "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" என்று எழுதினார். இயேசு தமது போதனை மற்றும் நபர்த்துவம் ஆகியவற்றினால், தேவனை "விளக்கப்படுத்தினார்." அவர் பிலிப்புவிடம், "... என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் ..." என்று கூறினார் (யோவா. 14:9).

வசனம் 14தான் யோவானின் அறிமுகத்தில் சிந்தையை மிகவும்

*தூண்டக் கூடியதாக உள்ளது: "அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம் பண்ணினார்" இதை நாம் "திரு அவதாரம்" "the Incarnation" (இது "மாம்சமாக்குதல்"[7] என்று அர்த்தப்படுகிற ஒரு லத்தீன் சொற்றொடரில் இருந்து வந்ததாக உள்ளது). பிலிப்பியர் 2:5-8 வசனப்பகுதியானது, திரு அவதாரம் பற்றிய வேதாகமத்தின் மிகச் சிறந்த எடுத்துரைப்பாக உள்ளது. திரு அவதாரத்தின் எல்லா இரகசியங்களையும் நாம் ஒருபோதும் புரிந்து கொள்ள இயலாது, ஆனால் "வார்த்தையானவர் மாம்சமானார்" என்ற மாபெரும் சத்தியத்தை நாம் விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளுகின்றோம். எபிரேயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வருமாறு எழுதினார்:*

> *... அவர் ... இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. ஆதலால் அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (எபி. 2:17, 18).*

*யோவான் தமது அறிமுகத்தில் இன்னும் அதிகமாகக் கூறியிருக்கிறார். (1) இயேசு ஒளியாக இருக்கின்றார் (ஒளியூட்டப்படுதலின் ஆதாரமூலம்) (வ. 4, 5, 9; வ. 16-18ஐயும் காணவும்).[8] (2) இயேசுவின் முன்னோடினவர் ஒளிக்குச் சாட்சி அளித்தார் (வ. 6-8, 15). (3) இருளில் இருந்த உலகம் ஒளியைப் புறக்கணித்தது (வ. 5, 10, 11). (4) ஒரு சிலர் - விசுவாசம் மற்றும் ஆவிக்குரிய பிறப்பு[9] ஆகியவற்றின் மூலமாக - ஒளியை ஏற்றுக் கொண்டார்கள் (வ. 12, 13). ஆயினும் இந்தக் கணத்தில் கிறிஸ்துவின், முன்பே இருந்த நிலையின் மீதே நமது கவனம் உள்ளது.*

## தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்பட்டன
## (மத். 1:1-17; லூக். 3:23-38)

***மத்தேயு தந்த வம்ச வரலாறு (மத். 1:1-17)***

*மத்தேயு சுவிசேஷப் புத்தகமானது, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷப் புத்தகங்கள் போல் மரபு ரீதியான முகவுரையைக் கொண்டிருப் பதில்லை. மாறாக, யூதர்கள் எதிர்பார்த்திருந்த மேசியா இயேசுவே என்று மத்தேயு உடனடியாக வலியுறுத்தினார். அவர், "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவினுடைய வம்ச வரலாறு" (வ. 1) என்று தொடங்கினார். கென் கையர் அவர்கள் "மத்தேயு தமது சுவிசேஷத் திற்கு, முகப்புக்கு எதிர்ப்பக்கச் சித்தரிப்பு என்ற வகையில் ஒரு குடும்ப மரத்தை வைக்கின்றார். அந்த மரமானது இஸ்ரவேலின் மாபெரும் முற்பிதாவான ஆபிரகாம் மற்றும் அதன் மாபெரும் ராஜாவான தாவீது ஆகியோருக்குள் வேர் கொண்டுள்ளது" என்று கூறினார்.[10] பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின்படி, மேசியா என்பவர் ஆபிரகாமின் சந்ததியாகவும் (ஆதி. 22:18; கலா. 3:16ஐக் காணவும்) மற்றும் தாவீதின்*

*சந்ததியாகவும் (2 சாமு. 7:16; யோவா. 7:42 ஆகியவற்றைக் காணவும்) இருக்க வேண்டியதாயிற்று.*

*இவ்விதமாக, மத்தேயு இந்தக் குடும்ப மரத்தை, ஆபிரகாமில் தொடங்கி (வ. 2), தாவீதை நோக்கி நகர்ந்து (வ. 6, 7). இயேசு வரை தொடர்ந்தார் (வ. 16). அவரது பட்டியல் மூன்று பாகங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது - (1) ஆபிரகாம் முதல் தாவீது வரை, (2) தாவீது முதல் [பாபி லோனுக்கு] நாடு கடத்தப்பட்டது வரை, மற்றும் (3) [பாபிலோனுக்கு] நாடு கடத்தப்பட்டது முதல் இயேசு வரைக்கும் - இவை ஒவ்வொன்றும் பதினான்கு பெயர்களுடன் உள்ளன (வ. 17).[11] தாவீதின் பெயரானது, முதல் பிரிவில் உள்ள பதினான்கு பெயர்களிலும் மற்றும் இரண்டாவது பிரிவில் உள்ள பதினான்கு பெயர்களில் ஒன்றாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. தாவீதின் பெயரை இவ்வாறு இருமுறை பயன்படுத்துதலானது, தேவனு டைய நோக்கங்கள் நிறைவேறுவதற்கு அவரது கணிசமான பங்களிப்பை ஒப்புக்கொள்வதாக இருக்கலாம்.*

*மத்தேயு 1:1-17 வசனப்பகுதியானது, பழைய ஏற்பாட்டில் பெயர்களைக் காண்பதற்கு நீங்கள் நேரம் எடுத்துக் கொள்ளும் வரையிலும், பெயர்களின் ஒரு மந்தமான அட்டவணையாகவே காணப்படலாம்.* F. *லாகார்டு ஸ்மித் அவர்கள் பின்வருமாறு கூறினார்:*

> *மத்தேயு தந்த வம்சவழி அட்டவணையானது பல மகிழ்வான வியப்புக்களைக் கொண்டுள்ளது. இயேசுவின் தொடக்க கால வேர்களில், ஆபிரகாம் மற்றும் தாவீது போன்ற குறிப்பிடத்தக்க நீதிமான்கள் மட்டுமின்றி, மனாசே ராஜா உட்பட, வரலாற்றில் குறிப்பிடத்தக்க வகையில் அநீதியானவர்களாய் இருந்தவர்கள் பலரும் உள்ளனர். எதிர்பார்க்கப்படுகிறபடி, அங்கு யூதர்கள் இருந்தார்கள், மட்டுமின்றி ஒரு கானானிய மற்றும் ஒரு மோவாபியப் பெண் உட்பட [இவர்களின் தேசங்கள் தேவனுடைய மக்களுக்கு தீவினை விளைவிக் கும் விரோதிகளாய் இருந்தார்கள்] புறஜாதியார்களும் இருந்தார்கள். இந்தக் காலகட்டத்தின் சமூக அந்தஸ்தின் கண்ணோக்கில் காண்கை யில், ஆண்களுடன் பெண்களும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது வியப்பளிப்பதாக உள்ளது. மற்றும், இவர்களில் குறைந்தபட்சம் இரண்டு பெண்கள், தாங்கள் செய்திருந்த பாவங் களைக் கொண்டு நன்கு அறியப்பட்டிருந்தார்கள்.[12]*

*இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளவர்களில் சிலர், மாபெரும் தனிநபர்களாய் இருந்தார்கள், சிலர் அவ்வளவு பெரியவர்களாய் இருந்தது இல்லை, மற்றும் சிலர் (வேதனைமிக்க வகையில் நேர்மையாகக் குறிப்பிடுகையில்) வெறுக்கத்தக்கவர்களாய் இருந்தார்கள். கையர் அவர்கள் கவனித்துள்ளபடி, "இரட்சகரின் [குடும்ப] மரமானது அதன் பங்குக்கு தாவர நோயும், கனி தராத தன்மையும் கொண்டதாக, வளைந்த குச்சிகளும் முறிந்த கிளைகளும் உடையதாக இருந்தது."[13] மனித குலத்தின் பலவீனத்தி லும் (மற்றும் பிடிவாதத்திலும் கூட) தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்ற முடியும் என்பதற்கு நமக்கு எப்போதாவது ஆதாரம் தேவையென்றால், அது*

மத்தேயு தந்த வம்சவழி அட்டவணையில் தாராளமாகத் தரப்படுகிறது!

**லூக்கா தந்த வம்ச வரலாறு (லூக். 3:23-38)**

 லூக்காவும் ஒரு வம்ச வழி அட்டவணையைத் தருகின்றார், ஆனால் இது அவரது சுவிசேஷப் புத்தகத்தின் தொடக்கத்தில் காணப்படுவதில்லை. இது அதிகாரம் 3ல் காணப்படுகிறது, மற்றும் இது மத்தேயு தந்த பட்டியலின் நோக்கத்திலிருந்து மாறுபட்டதாக உள்ளது. மத்தேயு தந்த வம்ச வழி அட்டவணை ஆபிரகாமிலிருந்து தொடங்குகிறது (மத். 1:1, 2) மற்றும் அது யூதர்களுடன் [மாத்திரம்] இயேசுவின் உறவுமுறையைக் காண்பிக்கிறது. லூக்கா தந்த வம்ச வரலாற்றின் பூமிக்குரிய பாகமானது ஆதாமில் சென்று முடிகிறது (லூக். 3:38). இது, எல்லா மக்களுடனும் இயேசுவின் உறவைக் காண்பிக்கிறது.

இயேசுவின் வம்ச வழி பற்றி மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோர் தந்த விவரங்கள் குறிப்பிடத்தக்க வகையில் மாறுபாடு கொண்டுள்ளன. இவ்விரண்டுமே, இயேசு ஆபிரகாம் (மத். 1:2; லூக். 3:34) மற்றும் தாவீதின் (மத். 1:6; லூக். 3:31) சந்ததியில் தோன்றினார் என்று காண்பிக்கின்றன, ஆனால் இவ்விரு பட்டியலிலும் உள்ள மற்ற பெயர்களில் பெரும்பாலான வைகள் மாறுபட்டவைகளாக உள்ளன.[14]

இந்த மாறுபாடுகள் பற்றி பல்வேறு ஆலோசனைகள் தரப்பட்டுள்ளன. மத்தேயு, *யோசேப்பின்*[15] மூலமாக இயேசுவின் *சட்டப்பூர்வமான* வம்ச வழியைத் தருகின்றார், அதே வேளையில் லூக்கா, *மரியாளின்*[16] மூலமாக இயேசுவின் *மாம்சப்பிரகாரமான* வம்ச வழியைத் தருகின்றார் என்பதே மிக எளிமையான - ஒருவேளை மிகச் சிறந்த - கருத்தாக உள்ளது. இந்த முடிவு கிறிஸ்தவ எழுத்துக்களில் பிந்திய காலமாகிய ஈசுபியஸ் (c. கி.பி. 260-340) காலம் வரை காணப்படுகிறது.[17] இந்தக் கண்ணோக்கானது, மத்தேயு சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் பிறப்பை யோசேப்பு பற்றிய கண்ணோக்கக் கருத்திலிருந்தும் (மத். 1:18-25; 2:13-15, 19-23) லூக்கா சுவிசேஷத்தில் இயேசுவின் பிறப்பை மரியாள் பற்றிய கண்ணோக்கக் கருத்திலிருந்தும் (லூக். 1:26-56; 2:1-20 [2:19ஐக் கவனிக்கவும்]) வலியுறுத்தத்துடன் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்துகிறது. இது மத்தேயுவின் யூதத்துவ வலியுறுத்தத்தையும் லூக்காவின் கிரேக்கத்துவ வலியுறுத்தத்தையும் ஒன்றிணைக்கவும் செய்கிறது.[18]

லூக்கா தரும் வம்ச வரலாற்றில் மரியாளின் பெயர் குறிப்பிடப்படுவ தில்லை என்பது இந்தக் கண்ணோக்கின் அடிப்படைச் சிரமமாக உள்ளது.[19] ஆயினும் இயேசு உண்மையில் யோசேப்புக்குப் பிறந்த மகன் அல்ல ("அவர் யோசேப்பின் குமாரனென்றும் எண்ணப்பட்டார்") என்று வேத வசனம் மறைமுகமாகக் குறிப்பிடுவதைக் கவனியுங்கள், இது லூக்கா யோசேப்பின் மூலமாக இயேசுவின் வம்ச வழியைத் தரவில்லை என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. இது யோசேப்பின் மூலம் இல்லையென்றால் பின்பு யார் மூலமாகத் தருகிறது? லூக்கா, மரியாளின் மூலமாக இயேசுவின் வம்ச வழியைத் தந்தார் என்பதே எளிய பதிலாக உள்ளது. "யோசேப்பின் குமாரனென்று எண்ணப்பட்டார்" என்ற சொற்றொடரானது "ஏலியின்

குமாரன்" என்ற சொற்கள் யோசேப்பை அல்ல ஆனால் இயேசுவைக் குறிப்பதாக இணையாக எண்ணப்படலாம். ஏ.டி. இராபர்ட்ஸன் அவர்கள், "இவ்விதமாக, இயேசு ஏலியின்[20] பேரனாக இருப்பார், இது குமாரன் என்பதற்கு அனுமதிக்கப்பட்ட அர்த்தமாக உள்ளது" என்று எழுதினார்.[21]

இவ்விதமாக, இயேசு தாவீதின் சட்டரீதியான சந்ததி என்று மத்தேயு வலியுறுத்தும் வேளையில், இயேசு தாவீதின் மாம்சப் பிரகாரமான சந்ததியாக இருந்தார் என்று லூக்கா வலியுறுத்தினார். இந்த வம்ச வழியை மத்தேயு தாவீதின் குமாரனான சாலொமோன் ராஜாவின் மூலமாகக் கண்டறிகையில், லூக்கா, தாவீதின் மகனான நாத்தானின் வம்ச வழியின் மூலமாகத் தந்தார் (2 சாமு. 5:14). அடுத்த வரும் வரைபடம் இந்த இரு வம்ச வழிகளையும் விவரிக்கிறது. இந்த இருவம்சவழி பட்டியல்களிலும் உள்ள செருபாபேல் என்ற பெயரானது ஒரே மனிதரைக் குறிக்கக்கூடும்.[22]

சுவிசேஷங்களில் தரப்பட்டுள்ள இரண்டு வம்ச வழிகளிலும் 2 சாமுவேல் 7:16ன் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டது என்பதில் ஐயமில்லை.




*தாவீதிலிருந்து இயேசுவின் வம்ச வழி*

## அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் (லூக். 1:5-38)

கிறிஸ்துவின் வருகைக்குச் சற்று முந்திய நிகழ்ச்சிகளின் முழுமையான விவரத்தை லூக்காவின் புத்தகம் கொண்டுள்ளது. லூக்கா தமது அறிமுக உரையைத் தொடர்ந்து, அளிக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின் இரு வரலாறுகளை எடுத்துரைத்தார்.

**சகரியாவுக்கு வாக்குத்தத்தம் (வ. 5-25)**

முதலாவது வாக்குத்தத்தம் எருசலேமில் இருந்த தேவாலயத்தில் - சகரியா என்ற பெயருடைய ஒரு ஆசாரியருக்கு அளிக்கப்பட்டது.

சகரியா எருசலேமுக்குத் தென்மேற்கில் ஒரு மலை நாட்டில் வாழ்ந்து வந்தார். அவரது மனைவியான எலிசபெத்தும் ஆரோனின் வம்சத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தார்.[23] இவ்விருவரும் நீதியும் தேவபக்தியும் உள்ள தனிநபர்களாக இருந்தார்கள். அவர்களின் வாழ்வை ஒரே ஒரு விஷயம் மட்டும் சீரழித்துக் கொண்டிருந்தது: அவர்கள் பிள்ளைகள் பெறாமலேயே முதிர் வயதானவர்களாக இருந்தார்கள் (வ. 7).

ஆசாரியர்கள் இருபத்து நான்கு பிரிவுகளாக அல்லது வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள் (1 நாளா. 24:1-19). சகரியா, அபியாவின் வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தார் (லூக். 1:5; 1 நாளா. 24:10ஐக் காணவும்). இந்த வகுப்பினர் வாராந்திர முறைமையாக தேவாலயத்தில் மாறி மாறி ஊழியம் செய்து கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வாரமும் தேவாலயக் கடமைகள் பற்றிச் சீட்டுப் போடப்பட்டது (லூக். 1:9). மகா பரிசுத்த ஸ்தலத்தை மறைத்து நிற்கும் தொங்குதிரைக்கு முன்பாக இருக்கும் பீடத்தில் தூபவர்க்கம் இடுதல் என்பது மிகவும் விரும்பப்படக்கூடிய பணிப் பொறுப்பாக இருந்தது. இது சாதாரண ஆசாரியர் ஒருவர், பரிசுத்தமான இடத்திற்கு மிக நெருக்கமாக வரக் கூடிய ஒன்றாக இருந்தது. இது ஆசாரியர் ஒருவருக்கு அவரது வாழ்க்கையில் ஒருமுறை கிடைக்கும் கனத்துக்குரிய பணிப்பொறுப்பாக இருந்தது.

இந்த வரலாறு தொடங்குகையில், சகரியா தேவாலயத்திற்குச் செல்ல வேண்டிய வாரமாயிருந்தது - அவர் தூபங்காட்டும் சிலாக்கியத்தையும் பெற்றிருந்தார். அவர் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நடந்து செல்லுகையில், அது என்ன ஒரு விசேஷித்த நாளாயிருந்தது என்று அவர் நினைத்திருக்க வேண்டும். அவர் எதிர்பார்த்ததை விட அது ஒரு அதிக விசேஷித்த நாளாக வும் இருந்தது - ஏனெனில் காபிரியேல்[24] என்னும் பெயர் கொண்ட, கர்த்தருடைய தூதன் ஒருவர் அவருக்குத் தரிசனமானார்.

தேவனுடைய செய்தியாளர்[25] அந்த வயது முதிர்ந்த ஆசாரியரிடத்தில் அவரும் அவரது மனைவியும் பிள்ளை ஒன்றைப் பெறுவார்கள் என்று கூறினார் (வ. 13).[26] யோவான் என்று பெயரிடப்பட வேண்டியிருந்த இந்த மகன், "எலியாவின் ஆவியும் பலமும் உடையவராய்" மேசியாவுக்கு முன்னோடுபவராக இருப்பார் (வ. 17[27]). ஆசாரியரோ தூதனுடைய அந்த வார்த்தைகள் நம்புவதற்குக் கடினமானவைகள் என்று கண்டார் (வ. 18, 20). ஒரு அடையாளமாக - மற்றும் அவரது அவிசுவாசத்திற்குத் தண்டனை யாக - சகரியா பேச முடியாதவராக விடப்பட்டார் (வ. 20).

சகரியா தமது வார முறைமைப்படியான ஊழியத்தை முடித்தபின்பு, இல்லம் திரும்பினார் (வ. 23). தூதன் முன்னுரைத்தபடியே அவரது மனைவி விரைவிலேயே கர்ப்பவதியானார் (வ. 24). நம் எல்லாரையும் போலவே அந்த ஆசாரியரும் கூட, "தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை" (வ. 37) என்று கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாயிருந்தது.

### மரியாளுக்கு வாக்குத்தத்தம் (வ. 26-38)

முதலாவது, வாக்குத்தத்தமானது பலஸ்தீனத்தின் மிகவும் பரிசுத்தமான நகரத்தில் அளிக்கப்பட்டது; இரண்டாவது வாக்குத்தத்தமானது மிகவும்

இழிவாகக் கருதப்பட்ட ஒரு நகரத்தில் அளிக்கப்பட்டது (யோவா. 1:46).

எலிசபெத்து ஏறக்குறைய ஆறு மாத கர்ப்பமாய் இருந்தபோது (வ. 26, 36),[28] கலிலேயாவில் இருந்த நாசரேத் என்ற ஒரு சிறிய, சிறப்பற்ற ஊரில் ஒரு இளம் பெண்ணுக்குக் காபிரியேல் தரிசனமானார்.[29] அந்த இளம் பெண், "யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகை"யாக இருந்தார். "அந்தக் கன்னிகையின் பேர் மரியாள்" (வ. 27).

"நியமிக்கப்பட்டிருந்த" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது நம் எல்லாருக்கும் பழக்கமான "திருமண நிச்சயதார்த்தம்" என்பதை விட அதிகம் கட்டுப்படுத்துகிற ஒரு ஏற்பாட்டைக் குறிப்பிட்டது. யூதத் திருமணங்கள் இரு படிநிலைளைக் கொண்டிருந்தன: முதலாவது, ஒரு உறுதிப்படுத்தும் வைபவம் (இது "நியமிக்கப்படுதல்" என்று அழைக்கப் படுகிறது, இதையே நாம் "திருமண நிச்சயதார்த்தம்" என்கின்றோம் [மத். 1:18].) பின்பு, சற்றுக்காலம் சென்ற பின்பு,[30] உண்மையான திருமணம் நடக்கும். முதல் வைபவமானது, திருமண உறவு பூர்த்தியாகாத நிலையிலும், மணமகனையும் மணமகளையும் சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தியது. மரியாளும், யோசேப்பும் முறைப்படி இன்னும் திருமணம் முடிக்காதவர் களாய் இருந்தபோதிலும், சட்டப்படி மரியாள் யோசேப்புக்குக் கட்டுப்பட்டவராயிருந்தாள்.[31]

மரியாளிடத்தில் தூதன், "இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" (வ. 31) என்று கூறினார். "இயேசு" என்பது, "யோசுவா" என்ற எபிரெயப் பெயருக்கு உரிய கிரேக்கப் பெயராக இருந்தது, இந்த எபிரெயப் பெயரானது, "யெகோவா இரட்சிக்கின்றார்" அல்லது "யெகோவா இரட்சிப்பாக இருக்கின்றார்" என்ற அர்த்தம் கொண்ட பெயரின் சுருக்க வடிவமாயிருக்கிறது. இது அந்த நாட்களில் மிகவும் சாதாரணப் பெயராக இருந்தது,[32] ஆனால் இது மரியாளின் குமாரனுக்கு இதன் ஏற்புடைய தன்மையினால் தேர்ந்து கொள்ளப்பட்டது (மத். 1:21ஐக் காணவும்).

நடக்கவிருந்தது பற்றித் தூதன் வாக்களித்ததை நம்புவதில், சகரியா வைப் போலின்றி, மரியாளுக்குச் சிரமம் எதுவும் இருக்கவில்லை (லூக். 1:45). [ஆயினும்] இது எவ்வாறு நடக்கும் என்பது பற்றி மரியாளுக்கு ஒரு கேள்வி இருந்தது:

> அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: "இது எப்படியாகும்? புருஷனை அறியேனே"[33] என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதி யுத்தரமாக: "பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" (வ. 34, 35).

கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்ற வேதாகம உபதேசமானது முழுமையாகப் புரிந்துகொள்ளுதலுக்கான நமது திறனுக்கு அப்பால் உள்ளது, ஆனாலும் அதை நாம் விசுவாசத்தால் ஏற்றுக்கொள்ளுகின்றோம். கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதை ஒருவர் ஏற்றுக் கொள்கின் றாரா அல்லவா என்பது முக்கியமற்றது என்று சிலர் போதிக்கின்றார்கள்.

*இந்த போதனையானது நமது விசுவாசத்திற்கு இன்றியமையாததாக இருப்பது ஏன் என்பதற்கு, ஜான் பிராங்க்ளின் கார்ட்டெர் அவர்கள் சில காரணங்களைப் பட்டியலிட்டார்:*[34]

*(1) இயேசு கன்னிப் பெண்ணிடமிருந்து பிறந்தார் என்று புதிய ஏற்பாடு போதிப்பதால், கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதை மறுத்த லானது வேத வாக்கியங்களின் ஏவுதலை மறுத்தல் என்பதை உள்ளடக் குகிறது.*

*(2) கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பது "தேவன் மாம்ச மாகுதல்" என்பதில் இன்றியமையாத பாகமாக இருப்பதால், கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதை மறுத்தலானது இயேசுவின் இன்றியமையாத தெய்வீகத்துவத்தை அழித்தல் என்பதாகிறது.*

*(3) கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பது இயேசு[வின்] தேவனாயிருத்தல் என்ற கருத்துடன் பிணைக்கப்பட்டிருப்பதால், கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதை மறுத்தலானது இயேசுவின் மரணத்தினுடைய பலாபலன்களை மறுதலிக்கிறது. அழியக் கூடிய ஒருவரின் மரணம் அழியக் கூடிய மற்ற எல்லாருக்கும் ஒப்புரவாக்குதலை எவ்வாறு அளிக்க முடியும்?*

*(4) கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பது இயேசுவின் வாழ்வில் நடந்த அற்புதங்களில் முதலாவதாக இருந்தது என்பதால், கன்னிப் பெண்ணிடமிருந்து பிறத்தல் என்பதை மறுத்தலானது ஒருவர் - உயிர்த்தெழுதல் உட்பட - மற்ற அற்புதங்களை ஏற்றுக்கொள்ள இயலாத நிலையைத் தரவழைக்கிறது. அவிசுவாசம் என்பது கன்னிப் பெண்ணிட மிருந்து பிறத்தல் என்பதை மறுப்பதன் வேராகவும் கனியாகவும் உள்ளது.*

## *துதி ஏற்கப்பட்டது (லூக். 1:39-56)*[35]

*மரியாளின் உறவினளான எலிசபெத்தையும் தேவன் சந்தித்தார் என்றும் அந்த உறவுப் பெண்ணும் கர்ப்பமாயிருந்தார் என்றும் காபிரியேல் குறிப்பிட்டார். தூதனுடைய தரிசனத்திற்குச் சற்றுப் பின்பு, மரியாள், சகரியாவும் எலிசபெத்தும் வாழ்ந்த நகரத்திற்கு, தெற்கு முகமாக எழுபது அல்லது எண்பது மைல்கள் பயணம் சென்றார் (வ. 39, 40). ஒருவேளை இந்தப் பெண்மணி, தமக்கு நடந்ததைப் புரிந்து கொண்டு தம்மைப் பாராட்டக் கூடிய ஒரே நபர் தமது அவ்வுறவினள்தான் என்று நினைத் திருக்கலாம்.*

### *எலிசபெத்து மரியாளை வாழ்த்தினாள் (வ. 1:41-45)*

*அது என்ன ஒரு இணைவாக இருந்திருக்க வேண்டும் - இரு பெண்கள், ஒருவர் முதிர்வயதுப் பெண் மற்றும் இன்னொருவர் இன்னமும் இளம்பெண், இவ்விருவரும் தேவனுடைய கரத்தினால் தொடப்பட்டிருந் தார்கள்! எலிசபெத்து மரியாளைக் கண்டபோது, அவள் மரியாளை வாழ்த்தும்படியான ஏவுதலினால் நிறைந்தாள்: "உரத்த சத்தமாய்: 'ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது' ... என்றாள்" (வ. 42).*

***மரியாள் தேவனைத் துதித்தாள் (வ. 1:46-56)***

*மரியாள் கர்த்தரைத் துதித்தலுடன் பதில்கொடுத்தாள். இவள் கடந்த காலத்தில் தேவன் செய்திருந்த மாபெரும் செயல்களைப் பற்றிப் பேசி, எதிர்காலத்தில் தேவன் மாபெரும் செயல்களைச் செய்வார் என்று எதிர்பார்ப்பைத் தெரிவித்தாள்.[36]*

*மரியாள் யூதேயாவில் - எலிசபெத்தின் கர்ப்ப காலம் முடிவுபெறும் வரையில் - மூன்று மாதங்களாகத் தங்கியிருந்தாள். பின்பு இவள் நாசரேத் தூரில் இருந்த தமது இல்லத்திற்குத் திரும்பினாள்.[37]*

## *ஒரு தீர்க்கதரிசி அளிக்கப்பட்டார் (லூக். 1:57-80)*

***யோவானின் பிறப்பு (வ. 57-79)***

*சகரியா, எலிசபெத்து ஆகியோரின் மகன் பிறந்தபோது, அவர்களுடன் அகம் மகிழ அயலகத்தாரும் உறவினர்களும் ஒன்றுகூடினார்கள்.*

*யூதப் பிரமாணத்தின்படி, ஆண் குழந்தைகள் பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டியிருந்தது (லேவி. 12:3). [இந்தப்] புதிய குழந்தையின் விருத்தசேதனத்தின்போது, குடும்பத்தார் இந்தப் பையனுக்கு இவனது தந்தையின் பெயரின்படி "சகரியா" என்று பெயர் சூட்டும்படி ஆலோசனை தெரிவித்தார்கள்,[38] ஆனால் எலிசபெத் (இவளுக்கு தூதனு டைய வார்த்தைகள் கூறப்பட்டிருக்கும் என்பது தெளிவு), "அப்படியல்ல, அதற்கு யோவான் என்று பேரிட வேண்டும்" என்று கூறினாள் (வ. 60). அவர்கள் சகரியாவிடம் கேட்டார்கள், ஆனால் அவரும் எலிசபெத்தின் பெயர்த் தேர்வை உறுதிப்படுத்தினார். "உடனே, அவனுடைய வாய் திறக்கப்பட்டு, அவனுடைய நாவும் கட்டவிழ்க்கப்பட்டு, தேவனை ஸ்தோத்திரித்துப் பேசினான்" (வ. 64).*

*வசனம் 68 முதல் 79 முடிய உள்ள பகுதியானது வயது முதிர்ந்த ஆசாரியரின் ஏவுதல் பெற்ற வார்த்தைகளைத் தருகிறது. வசனம் 68 முதல் 75 வரையுள்ள பகுதிகள் தேவன் தமது மக்களுக்குக் கொடுத்த வாக்குத்தத் தத்திற்காக அவரைத் துதித்தலாயிருக்கையில், வசனம் 76 முதல் 79 வரையுள்ள பகுதிகள் அவரது மகனை நோக்கித் திருப்பப்பட்டவைகளாக உள்ளன. அவர் குழந்தையாயிருந்த யோவானிடம், "நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம் பண்ணவும் ... அவருக்கு முன்னாக நடந்துபோவாய்" (வ. 76, 77) என்று கூறினார். தூதனைப் போலவே, சகரியாவும் மேசியாவின் முன்னோடியானவரின் வருகையைப் பற்றி மல்கியாவின் தீர்க்கதரிசனத்தில் இருந்து மேற்கோள் காண்பித்தார்.*

***யோவானின் தொடக்க கால வாழ்வு (வ. 80)***

*யோவானின் வாழ்க்கையினுடைய முதல் முப்பது அல்லது அதற்குச்*

*சற்றேக் குறையச் சரியான ஆண்டுகளில் அவரது வாழ்வு பற்றிய ஒரு சுருக்கமான குறிப்பை வசனம் 80தருகிறது: "அந்தப் பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள் வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தான்." இந்த வனாந்தரப் பகுதியானது சவக்கடலின் மேற்கில் இருந்து மக்கள் பரவலாகக் குடியிருந்த யூதேயாவின் பகுதியாயிருந்தது.*

## *முடிவுரை*

*தூதர்கள் மனிதர்களுக்குத் தரிசனமாயிருந்தார்கள். மக்கள் பேசுவதற்குத் தேவனுடைய ஆவியால் ஏவுதல் பெற்றிருந்தார்கள். நானூறு ஆண்டுகளின் அமைதி[39] முறிக்கப்பட்டிருந்தது! "காலத்தின் நிறைவேற்றம்" (கலா. 4:4) வந்திருந்தது! கிறிஸ்து வந்து கொண்டிருந்தார்!*

*மேசியாவின் பிறப்பை எதிர்நோக்கியிருந்தவர்களின் உணர்வெழுச்சி யைக் கவனியுங்கள். அவர்கள் இயேசு வருகின்றார் என்ற செய்தியினால் அகம் மகிழ்ந்தார்கள். "அவர் வந்துள்ளார் - அவர் வாழ்கின்றார்" என்று நீங்கள் கூறுகையில் அதே மெய்சிலிர்ப்பை நீங்கள் பெறுகின்றீர்களா? இந்த வரலாற்றை நன்கு அறிந்திருத்தல் என்பது உங்கள் சிந்தனையில் இதன் செயல்விளைவை மங்கலாக்க அனுமதிக்காதீர்கள்.*

*நமது அடுத்த பாடமானது இயேசுவின் பிறப்பை மையங் கொண்டதாயிருக்கும்.*

---

குறிப்புகள்

[1]*மரியாள் [எலிசபெத்தைச்] சந்திக்கச் சென்றது மற்றும் யோவானின் பிறப்பு ஆகியவற்றிற்கு இடையில் யோசேப்புக்குத் (மத். 1:18-25) தூதனின் அறிவிப்பு செருகப்பட முடியும். லூக்கா 1ல் தரப்பட்டுள்ளபடி வரலாற்றைத் தொடருவதில் ஒரு சில அனுகூலங்கள் உள்ளன. ஒப்பீட்டின் அடுத்த பகுதியை நாம் மத்தேயு 1:18ஐக் கொண்டு தொடங்குவோம்.* [2]*"இந்த புத்தகத்தின் முன்பகுதியில்" லூக்கா 1:1-4ஐப் பற்றிய சுருக்கமான விளக்கங்கள் காணப்படுகின்றன.* [3]*யோவானுடைய தனிச்சிறப்பான அறிமுகத்திற்கான காரணம், இந்தப் புத்தகத்தின் முன்பகுதியில் கலைந்துரையாடப்பட்டுள்ளது.* [4]*சிருஷ்டிகர் என்ற வகையில் இயேசுவைப் பற்றி யோவான் 1:10; 1 கொரிந்தியர் 8:6; கொலோ. 1:16, 17; எபிரெயர் 1:2 ஆகிய வசனங்களில் காணவும்.* [5]*பழைய ஏற்பாட்டில் அடிக்கடி குறிப்பிடப்படுகின்ற ''கர்த்தருடைய தூதன்'' என்பவரைச் சிலர் இயேசு என்று அடையாளப்படுத்தியுள்ளார்கள் (ஆதி. 16:7). எப்போதும் ஒரே தூதரே வந்தாரா அல்லவா என்பது தெளிவாய்த் தெரிவது இல்லை. அப்படியே ஒரே தூதனே வந்ததாகக் கொண்டாலும், இந்த இயற்கைக்கு மேலான ஜீவி, "தேவத்துவத்தின்" இரண்டாம் நபர் என்பதற்குத் தெளிவான ஆதாரம் எதுவும் இல்லை.* [6]*Logos என்பது யோவான் 1:1, 14ல் ''வார்த்தை'' என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்கச் சொல்லாக உள்ளது. இதில் இருந்துதான் நாம்* "logic" *என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். இது "படித்தல்" என்று அர்த்தப்படுகின்ற* "biology" *(உயிர்களைப் பற்றிய படிப்பு) என்ற கூட்டு வார்த்தையில் உள்ளது போன்றும் பயன்படுத்தப்*

படுகிறது. அப்போஸ்தலரான யோவான் இயேசுவைக் குறிப்பதற்கு *logos* என்ற வார்த்தையைப் பிற எழுத்தாக்கங்களிலும் பயன்படுத்தினார் (1 யோவான் 1:1; வெளி. 1:2; 19:13 ஆகியவற்றில் காணவும்). புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களில் இவர் ஒருவர் மட்டுமே கிறிஸ்துவைக் குறிக்க இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தினார். [7]"மாம்சப் பிரகாரமான" ["fleshly"] என்பதை அர்த்தப்படுத்துவதற்கு KJVயானது அடிக்கடி "carnal" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது (ரோமர் 7:14). [8]யோவான் 3:19-21ஐயும் காணவும். [9]ஆவிக்குரிய பிறப்பு என்பதன் கருத்து யோவான் 3ல் விரிவாக்கப்பட்டுள்ளது. [10]Ken Gire, *Moments with the Savior* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1998), 18.

[11]மத்தேயுவின் பட்டியல் பழைய ஏற்பாட்டின் வம்ச வரலாற்றுடன் ஒப்பிடப் படும்போது, பல பெயர்கள் விட்டுவிடப்பட்டுள்ளதென்று காணப்படும். எடுத்துக் காட்டாக, மத்தேயு 1:8, "யோராம் உசியாவைப் பெற்றான்" என்று கூறுகிறது, ஆனால் உண்மையில் உசியா, யோராமின் கொள்ளுப் பேரனாயிருந்தார் (2 இரா. 8:25; 13:1; 14:1, 21 ஆகியவற்றைக் காணவும்). குறிப்பிட்ட இந்தத் தனிநபர்கள் ஏன் குறிப்பிடப்படாமல் உள்ளார்கள் என்று நாம் அறிவதில்லை. இவர்கள் துன்மார்க்கர் களாய் இருந்தார்கள், ஆனால் பட்டியலிடப்பட்டுள்ளவர்களில் சிலரும் அதே போன்றுதான் இருந்தார்கள். பின்வரும் இரண்டு உண்மைகளை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்: (1) யூதர்கள் ஒரு வம்ச வழியில் வரும் அனைவரையும் பட்டியல் இடுவதில் அல்ல, ஆனால் அந்த வம்ச வழியைக் காண்பித்தல் பற்றியே அக்கறை கொண்டிருந்தார்கள். (2) யூதர்கள் "நேர்த்தியான" பட்டியல்களை விரும்பினார்கள். [12]F. LaGard Smith, *The Narrated Bible in Chronological Order* (Eugene, Oreg.: Harvest House Publishers, 1984), 1353. [13]Gire, 19. [14]இவ்விரு பட்டியல்களிலும் உள்ள செருபாபேல்கள் ஒரே மனிதரல்ல என்று சிலர் நம்பினாலும், இது செருபாபேலாக இருக்கலாம் என்ற ஒரு விதிவிலக்கு உள்ளது (மத். 1:12; லூக். 3:27). [15]இயேசு, யோசேப்பின் சட்டப்பூர்வமான மகனாயிருந்தார், ஆனால் அவருக்கு மாம்சப்படியான மகனாக இருக்கவில்லை. தேவன் மட்டுமே இயேசுவின் ஒரே தந்தையாக இருந்தார். [16]இயேசுவின் வம்ச வழியைக் கண்ணோக்கும் இவ்விரு வழிமுறைகளும் சில வேளைகளில் (யோசேப்பின் மூலமான) சட்டப்பூர்வமான வம்ச வழியென்றும் (மரியாளின் மூலமான) அரசத்துவ (இராஜரீக) வம்ச வழி என்றும் வித்தியாசப் படுத்தப்படுகின்றன. [17]*Ecclesiastical History* 1.7. [18]இதற்கு முன்புள்ள பாடங்களான "மத்தேயு எழுதின சுவிசேஷம்" மற்றும் "மாற்கு எழுதின சுவிசேஷம்'' என்ற பாடங்களில் இவர்களின் புத்தகங்கள் பற்றிய வலியுறுத்தங்களைக் காணவும். [19]யூதர்கள் சட்டப்படி பெண்களை வம்ச வழியில் உள்ளடக்கியதில்லை என்பது இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். பெண்கள் தற்செயலாகவே குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும் (மத்.1:3, 5), ஆனால் சந்ததிகளின் வம்ச வழிகள் ஆண்கள் மூலமானவைகளாகவே இருந்தன. [20]சில மொழிபெயர்ப்புகளில் "ஏலி" (Eli) என்றிருக்கையில், மற்றவற்றில் "ஹேலி" (Heli) என்றுள்ளது. இது ஒரே பெயரை வெவ்வேறு எழுத்துக்களில் உச்சரிக்கும் வழிமுறைகளாக உள்ளன.

[21]A.T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* (New York: Harper & Row, 1950), 261. "குமாரன்" என்பது "[குறிப்பிட்ட அந்த நபரின்] வழித்தோன்றலானவர்" என்று சுட்டிக்காண்பிக்கக் கூடும் (மத். 1:1ஐக் காணவும்). வேதாகமத்தில் "குமாரன்" என்பது "மருமகன்" என்று குறிப்பிடுவதாக இருப்பதும் இன்னொரு சாத்தியக்கூறான அர்த்தமாக உள்ளது. சிலர், ஏலி மகள்களை மட்டுமே பெற்றிருந்தார், எனவே அவரது மருமகன்களில் ஒருவர் மகனுக்குரிய சுதந்தரத்தைப் பெற்றிருப்பார் என்று யூகிக்கின்றார்கள் (எண். 27:1-11; 36:1-13ஐக் காணவும்).

[22]இப்புத்தகத்தின் பின்பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் வம்சவழியை காணவும். முன்பு ஒரு குறிப்பில் சுட்டிக்காட்டியபடி, பட்டியல்களில் பெயரிடப்பட்ட செருபாபேல்கள் அதே மனிதனுயிருந்திருக்கக்கூடும் அல்லது இல்லாதிருக்கக்கூடும். [23]மோசேயின் அறிவுறுத்துதல்களின்படி, ஒருவர் ஆசாரியராக இருப்பதற்கு, அவர் தொடக்கப் பிரதான ஆசாரியரான ஆரோனின் சந்ததியில் வந்தவராக இருக்க வேண்டும் (யாத். 28:1). [24]வேதாகமத்தில் காபிரியேல் (லூக். 1:19, 26; தானி. 8:16; 9:21 ஆகிய வசனங்களைக் காணவும்) மற்றும் மிகாவேல் (யூதா 9; வெளி. 12:7; தானி 10:13, 21; 12:1 ஆகிய வசனங்களைக் காணவும்) என்ற இரண்டு தூதர்கள் மாத்திரமே பெயரினால் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். [25]"Angel" என்பது, "செய்தியாளர்" என்ற நேரடியான அர்த்தத்தைத் தருகிற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது [தமிழில் இது ''தூதன்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது]. [26]காபிரியேல் தமது அறிவிப்பில், யோவான் "திராட்ச ரசமும் மதுவும் குடியான்" (லூக். 1:15) என்று குறிப்பிட்டார். இதை எண். 6:2, 3உடன் ஒப்பிடவும். யோவான் பிறப்பிலிருந்தே நசரேயராக இருந்திருப்பார் என்பது உறுதி. பிறப்பிலிருந்தே நசரேயர்களாக இருந்த மற்றவர்கள் சிம்சோன் (நியா. 13:3-7) மற்றும் சாமுவேல் (1 சாமு. 1:11) ஆகியோராவார்கள். [27]காபிரியேல், முன்னோடுபவர் குறித்த தீர்க்கதரிசனமான மல்கியா 4:5, 6லிருந்து மேற்கோள் காண்பித்தார். [28]காபிரியேல் மரியாளிடம் அறிவித்த சற்றுப் பின்பு அப்பெண்மணி கர்ப்பம் ஆனார் என்று யூகித்துக் கொண்டால், இது யோவான் ஸ்நானனை இயேசுவைவிட ஆறுமாதங்கள் மூத்தவராக்கும். [29]முதல் நூற்றாண்டின் யூத வரலாற்றாளரான யோசிப்பஸ் என்பவர் கலிலேயாவில் இருந்த 204 நகரங்கள் மற்றும் சிறு நகரங்கள் பற்றிக் குறிப்பிட்டார், ஆனால் அவர் அதில் நாசரேத்தூர் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை (J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 14). தல்மூத் என்ற யூதர்களின் புத்தகத்தில் கலிலேயாவில் இருந்த அறுபத்து மூன்று நகரங்கள் பட்டியலிடப்பட்டன, அதில் நாசரேத்தூர் இல்லை. [30]சட்டப்படி, நியமித்தல் [பரிசம்போடுதல்] வைபவம் நடந்து ஒரு ஆண்டு சென்ற பின்புதான் திருமண வைபவம் நடைபெற்றது.

[31]உபாகமம் 22:23, 24ஐ வாசிக்கவும். இது மரியாள் கர்ப்பமாயிருந்ததை யோசேப்பு அறிந்தபோது அவரது இக்கட்டான நிலையை விவரிக்கிறது (மத். 1:18, 19). [32]அப். 13:6ஐ வாசிக்கவும். ("பர்யேசு" என்றால் "இயேசுவின் மகன்" என்று அர்த்தப்படுகிறது.) ''இயேசு'' என்பது சில கலாச்சாரங்களில் இன்னமும் ஒரு பொதுவான பெயராக உள்ளது. (ஹிஸ்பானிக் இனத்தைச் சேர்ந்த "இயேசு" என்ற பெயருடைய ஒருவர் ஒருமுறை என் அயலகத்தாராயிருந்தார்.) (தமிழகத்தில் இயேசு ராஜ், சேசுமேரி, இயேசய்யன் முதலிய பெயர்கள் பொதுவாக வழங்கப்படுகின்றன). [32]"கன்னி" என்பதற்குரிய வழக்கமான கிரேக்கச் சொல் (*parthenos*) என்பது லூக்கா 1:27ல் பயன்படுத்தப்பட்டது. வசனம் 34ல் மரியாள் "நான் புருஷனை அறியேனே" என்றுதான் கூறினாள் [தமிழில் இவ்வாறுதான் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது] (KJVயில் காணவும்). வசனப்பகுதியானது, தூதன் மரியாளுக்குத் தோன்றிய வேளையில் மரியாள் கன்னியாக இருந்ததை ஐயத்திற்கு இடமின்றி எடுத்துரைக்கிறது. [34]பின்தொடரும் காரணங்கள், John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 41-42 என்ற புத்தகத்தில் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளன. [35]இந்த வசனப்பகுதி பற்றிய கூடுதல் உட்கண்ணோட்டத்திற்கு, அடுத்து வரும் பிரசங்கமான, "தேவன் மரியாளைத் தேர்ந்து கொண்டது ஏன்" என்பதில் காணவும். [36]மரியாளின் வார்த்தைகள் சில வேளைகளில், இவளது பாடலில் கர்த்தரை மேன்மைப்படுத்துகிற முதல்

வார்த்தையான Magnificat என்பதைக் கொண்டு லத்தீன் மொழியில் அழைக்கப்படுகின்றன. [37]யோவான் பிறப்பதற்குச் சற்று முன்னதாக இவள் [மரியாள்] அவ்விடம் விட்டுப் புறப்பட்டாள் என்பது உறுதி. அந்தக் குழந்தை பிறந்தால் அதைப் பார்க்க வரும் எலிசபெத்தின் உறவினர்கள், தனது கர்ப்பம் பற்றி கேள்விகள் கேட்டு அதற்கு தான் பதில் அளிக்க இவள் விரும்பாது இருந்திருக்கலாம். (அவர்கள் மரியாளின் உறவினர்களாகவும் இருந்திருக்கலாம்.) [38]அந்த நாட்களில், ஆண் குழந்தைகளுக்கு விருத்தசேதனம் செய்விக்கப்படும் தினத்தில் பெயர் சூட்டுவது வழக்கமாக இருந்தது (லூக். 2:21ஐக் காணவும்). [39]யோவானுடைய தொடக்க கால வாழ்வு பற்றிய ஒரு சில சிந்தனைகளுக்கு "எடுத்துரைப்புப் பிரசங்கித்தல்" என்ற இன்றைக்கான சத்தியத்தின் வெளியீட்டில் "இயேசு ஞானஸ்நானப்படுத்தப்பட்ட நாள்" என்ற பாடத்தில் காணவும்.

*9*

# தேவன் மரியாளைத் தேர்ந்து கொண்டது ஏன்

## லூக்கா 1 & 2, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*"குணசாலியான பெண்" பற்றி வசனப்பகுதியில், "அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்" (நீதி. 31:28அ) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.* KJV *மொழிபெயர்ப்பானது பின்வருமாறு இந்தச் சிந்தனையை வெளிப்படுத்துகிறது: "அவள் பிள்ளைகள் எழும்பினார்கள், பாக்கியவதி என்று அவளை அழையுங்கள்."*

*தாய்மார்கள் விசேஷித்தவர்களாக இருக்கின்றார்கள்.* Peanuts *என்ற கார்ட்டூன் படத்துணுக்கில் சார்லி பிரவுண், "ஒவ்வொருக்கும் அவர்கள்மீது அன்பு காண்பிக்கவும், அவர்களை நம்பவும், அவர்களைக் கவனிக்கவும், அவர்களை ஆதரிக்கவும், அவர்களுடன் சிரிக்கவும் அழவும் யாரேனும் ஒருவர் தேவை" என்று கூறினான். அதற்கு லூசி, "அது அநேகம்பேராய் இருக்குமே" என்று பதிலளித்தாள். பின்பு ஸ்னூப்பி*[1] *"அல்லது அற்புதமான ஒரு தாயாராய் இருக்கும்" என்று கூடுதலாகக் கூறிற்று. என் மீது நம்பிக்கை கொண்டுள்ள மற்றும் என்னை ஆதரித்துள்ள எல்லாருடைய பெயர்களின் பட்டியலின் உச்சத்தில் இரண்டு தாய்மார்கள் இருக்கின்றனர்: எனது சொந்தத் தாயும் எனது மூன்று பெண்குழந்தைகளின் தாயும். நம்மில் பெரும்பான்மையானோர் எழும்பி நமது தாய்களைப் பாக்கியவதி என்று அழைக்க முடியும்.*

*லூக்கா 1ல், நாம் வேறு ஒருவருடைய தாயைப் பாக்கியவதி என்று அழைக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகின்றோம். வசனம் 42ல் எலிசபெத்து, தாயாகவிருந்த இன்னொரு பெண்ணிடம் பின்வருமாறு கூறினாள்: "ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்." அது, "நீ பெண்களுக்குள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்று அர்த்தம்தரும் ஒரு எபிரெயச் சொல்விளக்கமாக இருந்தது. வசனம் 48ல், இந்தப் பெண் "இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்" என்று பதில் உரைத்தார். இவளது பிள்ளைகள் இவளை பாக்கியவதி என்று அழைப்பது மட்டுமின்றி, எல்லா மக்களும் இவளை தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று ஒப்புக்கொள்ளுவார்கள். இந்த வசனப்பகுதியானது இயேசுவின் தாயான மரியாளைப் பற்றிப் பேசுகிறது.*

*எல்லாத் தாய்மார்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவே இருக்கின் றார்கள், ஆனால் மரியாள் விசேஷித்த வகையில் ஆசீர்வதிக்கப்பட்டிருந்*

*தாள். அந்த காலத்தில் வாழ்ந்த எல்லா யூதப்பெண்களிலும் இவளைத் தேவன் தமது குமாரனுக்குத் தாயாக இருக்கும்படித் தேர்ந்து கொண்டார். இந்த உண்மையை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், "ஏன்? மரியாளைப் பற்றிய விசேஷித்த விஷயம் என்ன?" என்று கேட்கின்றோம்.*

*தேவன் இவளைத் தேர்ந்தெடுக்கும்படி கட்டாயப்படுத்தப்பட வில்லை, தேவன் மரியாளைத் தேர்ந்தெடுக்க வற்புறுத்தப்படும் அளவுக்கு, மரியாள் மிகவும் நல்ல மற்றும் முழுநிறைவு வாய்ந்த பெண்மணியாக இருந்தாள் என்று வசனத்தில் எதுவும் சுட்டிக்காண்பிப்பதில்லை. மாறாக, இவளைத் தேவன் தமது கிருபையின் வெளிப்பாடாகத் தேர்ந்துகொண்டார் என்று நமக்குக் கூறப்படுகிறது. தூதன் மரியாளை, "கிருபை பெற்றவளே வாழ்க!" (லூக். 1:28) என்ற வார்த்தைகளுடன் வாழ்த்தினார். "கிருபை பெற்றவளே" என்பது "கிருபை" என்பதற்கான கிரேக்கச் சொல்வடிவம் ஒன்றிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது - மற்றும் "கிருபை" என்ற வார்த்தையானது "தகுதியற்றவருக்குத் தரப்படும் தயவு" என்பதைப் பற்றிப் பேசுகிறது. இருந்தபோதிலும், மரியாள் தேவனால் தேர்ந்துகொள்ளப் படுவதற்குத் தம்மிடத்தில் குறிப்பிட்ட சில விசேஷித்த குணங்களைக் கொண்டிருக்க வேண்டும். ஆகையால், நாம் மீண்டும், "அந்தக் குணங்கள் யாவை?" என்று கேட்கின்றோம். இந்தப் பாடத்தில் நாம், "தேவன் மரியாளைத் தேர்ந்து கொண்டது ஏன்?" என்பதைக் கண்டுபிடிக்க மரியாளின் வாழ்வைப் பற்றி ஆராய்வு மேற்கொள்வோம்.*

*லூக்கா 1:26க்கு முதலில் திரும்புங்கள். இந்த வசனமானது, "ஆறாம் மாதத்தில் ..." என்று தொடங்குகிறது. இது, யோவான் ஸ்நானனின் தாயான எலிசபெத்து கர்ப்பமாகி ஆறாம் மாதமாக இருந்தது. "ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில் ... தேவனாலே அனுப்பப்பட்டான்." நாசரேத் என்பது கலிலேயாக் கடலின் மேற்கு முனையில் இருந்து பதினைந்து மைல்கள் தொலைவிலும், மத்திய தரைக்கடலில் இருந்து இருபத்தி இரண்டு மைல்கள் தொலைவிலும், லீபனோன் மலைப்பகுதிகளின் தென்கோடிச் சரிவுகள் ஒன்றில் அமைந் திருந்த ஒரு சிறு கிராமம் ஆகும்.*

*தூதன், "தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையிடத்திற்கு தேவனால் அனுப்பப்பட்டான்" (1:27அ). யோசேப்பு தாவீது ராஜாவின் சந்ததியாரா யிருந்தார், ஆனால் அந்த இராஜரீக வம்சமானது கடினமான வேளைகளில் வீழ்ந்துபோயிருந்தது. யோசேப்பு ஒரு ஏழை[2] தச்சராக இருந்தார் (மத். 13:55), இவர் நாசரேத்தூரில் வாழ்ந்தார் (லூக். 2:4).*

*மரியாள் என்ற பெயருடைய கன்னிப் பெண்ணிடத்தில் தூதன் அனுப்பப்பட்டார் (மத். 1:27ஆ). "மரியாள்" என்பது "மிரியம்"[3] என்ற எபிரெயப் பெயரின் கிரேக்க வடிவம் ஆகும். இவளும் யோசேப்பைப் போலவே தாவீது ராஜாவின் சந்ததியாளாக இருந்தாள்,[4] இவளும் ஒரு பகட்டு இல்லாத குடும்பத்தில் இருந்து வந்தவள் என்பது உறுதி.[5] மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருந்தாள் - அல்லது திருமணத்திற்கான நிச்சயதார்த்தம் பண்ணப்பட்டிருந்தாள் (மத். 1:18). அந்த நாட்களில், பெரும்பாலான*

*திருமண நிச்சயதார்த்த வைபவங்கள் ஒரு இளம் பெண்ணின் வாழ்வில் மிகவும் முன்னதாகவே நடைபெற்றன, எனவே காபிரியேல் மரியாளுக்குத் தரிசனமானபோது, மரியாள் ஒரு புத்திளம் பெண்ணாகவே இருந்திருக்க வேண்டும்.*[6]

*தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுதல் என்பது வரும்போது, சுற்றியுள்ளவைகள் மற்றும் சூழ்நிலைகள் என்பவை அவ்வளவு முக்கியத் துவம் வாய்ந்தவைகளாவதில்லை. தேவன் எவர் ஒருவரையும் எவ்விடத்தி லும் பயன்படுத்த முடியும். இவ்வசனப்பகுதியானது, நீங்கள் தேவனால் பயன்படுத்தப்படுவதற்கு வயது முதிர்ந்து சுருக்கம் விழும் வரையில் காத்திருக்கத் தேவையில்லை என்பதையும் மறைமுகமாய் உணர்த்துகிறது. தேவதூதன் ஒரு இளம் பெண்ணிடம் (அநேகமாக இவள் தமது முன்னிளமைப்பிராயத்து வயதுகளில் இருந்திருப்பாள்) தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இவளது உதவியை தேடி வந்தார்.*

## இவள் தமது சிந்தையைப் பயன்படுத்த அஞ்சாதிருந்தாள்

*தூதன் மரியாளிடம், "கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னு டனே இருக்கிறார்" (1:28) என்று கூறினார். தூதனுடைய வார்த்தையினால் மரியாள் "கலக்கம் அடைந்தாள்" (1:29அ). வேதாகமத்தில் உள்ள பெரும் பாலான மக்கள், பரலோகத்திலிருந்த வரும் ஒருவரை எதிர்கொண்டபோது தொந்தரவு அடைந்தார்கள். ஆயினும் பயப்படுவதற்குப் பதிலாக இவள், "இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்" (1:29ஆ).*

*மரியாள் தமது சிந்தையைப் பயன்படுத்தும் ஒரு நபராக இருந்தாள். இயேசுவின் பிறப்பைச் சுற்றிலும் நடந்தவற்றை இவள் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தாள் என்று பிற்பாடு நமக்குக் கூறப்படுகிறது (லூக். 2:19). இவள், தேவன் தமக்குத் தந்த சிந்தையைப் பயன்படுத்த அஞ்சாதிருந்தாள்.*

## இவள் ஒரு தேவபக்தியான பெண்மணியாயிருந்தாள்

*"தூதன் மரியாளிடத்தில், 'மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபைபெற்றாய்' என்று கூறினார்" (1:30). அடிப்படையில் நல்லவரா யிராமல், எவரொவரும் தேவனிடம் கிருபை பெற முடியாது. மரியாள் ஒரு நேர்மையான, பக்திமிகுந்த, உயர்வான ஒழுக்கநெறியுள்ள - நேர்மையின் பெண் என்று நாம் நினைக்க முடியும்.*

## இவள் தேவன்மீதும் அவரது வல்லமைமீதும் நம்பிக்கை கொண்டிருந்தாள்

*தூதன் தொடர்ந்து பின்வருமாறு கூறினார்:*

*இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான் (1:31-33).*

*இயேசுவின் இராஜ்யமே சபையாக உள்ளது (மத். 16:18, 19). நமது ஆண்டவர் தேவனுடைய வலது பாரிசத்திற்கு எழுந்தருளிச் சென்றபோது, அவர் தமது இராஜ்யத்தில் ஆளுகையைத் தொடங்குவதற்காகத் தாவீதின் அரியணையில் அமர்ந்தார் (அப். 2:25-36). இவை எல்லாவற்றையும் தூதனுடைய வார்த்தைகள் முன் எதிர்பார்ப்புடன் எடுத்துரைத்தன.*

*இருப்பினும், எதிர்காலத்தில் முப்பதுக்கும் சற்று அதிகமான ஆண்டுகளுக்குப் பின்பு என்ன நடக்கப்போகிறது என்பது இளம் பெண்ணாயிருந்த மரியாளின் அக்கறைக்குரிய விஷயமாயிருக்கவில்லை. "நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய்" என்ற வார்த்தைகளே அவளது காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. தூதனிடத்தில் இவள், "இது எப்படியாகும்? புருஷனை அறியேனே" என்றாள் (1:34).*

*முதல் பார்வையில் இது, ஒன்பது மாதங்கள் பேச முடியாமை என்பதை விளைவித்த சகரியாவின் அவிசுவாசமான பதில்போன்றே ஒலிக்கிறது (1:18, 20) - ஆனால், இது நடக்குமா என்பதல்ல ஆனால், இது எவ்வாறு நடக்கும் என்பதே மரியாளின் கேள்வியாயிருந்தது. இவள் தூதனை விசுவாசித்தாள் என்பது நமது வேத பாடப்பகுதியில் வலியுறுத்தப்பட்டுள்ளது (1:45).*

*"எப்படி" என்ற இவளது கேள்விக்குத் தூதன் பதில் அளித்தார். அவர், "பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" (1:35). "நிழலிடும்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது செப்துவஜிந்த்[7] மொழிபெயர்ப்பில் ஆசரிப்புக் கூடாரத்தை நிரப்பியிருந்த தேவனுடைய பிரசன்னத்தைப் பற்றிப் பேசுவதற்குப் பயன்படுத்தப்பட்டது (யாத். 40:35ஐக் காணவும்).[8]*

*மரியாள் ஒரு அடையாளத்தைக் கேட்கவில்லை, ஆனால் தூதன் இவளுக்கு அடையாளம் ஒன்றைக் கொடுத்தார்: "இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற[9] எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்" (1:36). அவர் அத்துடன், "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை"[10] (1:37) என்பதையும் கூடுதலாகக் கூறினார். இதனை விசுவாசிக்க வேண்டும் என்று மரியாளிடம் கேட்கப்பட்டது - இவளும் அதை விசுவாசித்தாள் (1:45). நாம் வாழ்வின் அறைகூவல்களைச் சந்திக்க வேண்டுமென்றால், நீங்களும் நானும் இதையே விசுவாசிக்க வேண்டும்.*

## இவள் ஒரு தாழ்மையான ஆவியைக் கொண்டிருந்தாள்

*மரியாள், "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" (1:38அ) என்று பதில் அளித்தாள். தேவன் மரியாளைத் தேர்ந்துகொண்டது ஏன் என்பதை விளக்கப்படுத்தும் ஒரே ஒரு வசனம் உள்ளது என்றால் அது இதுவாகவே இருக்கிறது. முதலாவது, "ஆண்டவருக்கு அடிமை" என்ற சொற்றொடரைக் கவனியுங் கள். "அடிமை" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "அடிமை" என்பதற்குரிய பெண்பால் வடிவமாக உள்ளது. பெண் அடிமை கள் என்பவர்கள், அடிமைகளிலேயே மிகவும் தாழ்த்தப்பட்ட, இழிவாகக் கருதப்பட்ட மற்றும் தவறாக நடத்தப்பட்டவர்களாக இருந்தார்கள். "அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்" என்று மரியாள் பின்பு பாடினாள் (1:48).*

## இவள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறவளாக இருந்தாள்

*லூக்கா 1:38ன் இரண்டாவது பகுதியைக் காணவும்: "உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது." இதன் மறைமுகமான கருத்துக் கள் யாவற்றையும் ஆழ்ந்து சிந்தியுங்கள். (மரியாள் ஒரு சிந்திக்கும் நபர் என்பதை நினைவில் வையுங்கள்; இவள் தமது கண்களை அகலத் திறந்த வளாக இதனுள் சென்றாள்.) இவள் ஒரு இளம்பெண்ணாக இருந்தாள், திருமணத்திற்கு நியமிக்கப்பட்டவளாக இருந்தாள், திடீரென்று கர்ப்பமாக வேண்டியவளாயிருந்தாள். இவளுக்குக் கணவராக வேண்டியவர் "இது என்னுடையதல்லவே!" என்று மறுப்பது உறுதி.*

*நாசரேத்தூர் போன்ற சிறிய ஊரில் இவளது சூழ்நிலை எவ்வளவு நிலையற்றதாக இருந்திருக்கும் என்பதை உய்த்துணர்வது நமக்கு மிகவும் கடினமானதாக இருக்கிறது. மற்றவர்களின் பார்வைகள், உறுத்து நோக்குதல் கள், முணுமுணுப்புக்கள், புறங்கூறுதல் மற்றும் தவறான விமர்சனங்கள் ஆகியவற்றைக் கற்பனை செய்து பாருங்கள்.[11] [திருமணம் செய்வதற் கென்று] நியமிக்கப்பட்ட பெண்ணொருத்தி வேசித்தனம் செய்தால் அவள் சாகும்படி கல்லெறியப்பட வேண்டும் என்ற நியாயப்பிரமாணத்தினால் (உபா. 22:23, 24[12]) இவள் தமது வாழ்வையே இழக்கக் கூடிய சூழ்நிலை இருந்தது. பழைய ஏற்பாட்டில் மரணத்தினால் தண்டிக்கப்படக் கூடியதாயிருந்த பாவங்கள் எல்லாவற்றிலும், ஒருத்தியைக் கர்ப்பமுறச் செய்யும் செயலானது அவள் அதை மறுப்பதற்கு மிகவும் கடினமானதாக இருந்தது. அவளுக்கெதிராக இரண்டு அல்லது மூன்று சாட்சிகளைக் கண்டறிதல் என்பது (உபா. 17:6; 19:15) பிரச்சனையாக இருக்காது; மரியாளின் கர்ப்ப காலத்தின் ஆறாம் அல்லது ஏழாம் மாதத்தில் இவளைக் கடந்து செல்லும் முதல் இரண்டு அல்லது மூன்று மனிதர்கள் அந்த நோக்கத்திற்கு ஏற்புடையவர்களாய் இருப்பார்கள்.*

*இந்தக் கடுமையான விளைவுகள் எல்லாவற்றைப் பற்றியும் மரியாள் அறிந்திருந்தாள். இருந்த போதிலும் தூதனிடம் இவள், "உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்று கூறினாள். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், "இது தேவன் விரும்புகின்ற வழிமுறையென்றால், அவ்வாறே ஆகட்டும்" என்று இவள் கூறினாள். இவள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறவளாய் இருந்தாள். அது தாயோ, தந்தையோ, மகனோ அல்லது மகளோ யாராயிருப்பினும் - இவ்வகைப் பட்ட நபர்களையே தேவன் பயன்படுத்த முடியும்.*

*"அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான். அந்நாட்களில் மரியாள் எழுந்து, மலைநாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய்," (1:38ஆ, 39). இவர் தமது உறவுப் பெண்ணான எலிசபெத்தைப் பார்ப்பதற்காக இவ்வாறு சென்றாள். இவளுக்கு என்ன நடந்திருந்தது என்பதை நம்பக் கூடிய ஒரு சில மக்களில் எலிசபெத்தும் ஒருவளாக இருந்திருப்பாள்.*

*மரியாளைக் கண்டபோது எலிசபெத்து "பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டாள்" (1:41ஆ) மற்றும் அவள் "உரத்த சத்தமாய்" (1:42அ) பின்வருமாறு கூறினாள்: "ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது" (1:42ஆ, 43).*

## இவள் வேதவசனங்களை அறிந்திருந்தாள்

*வசனம் 46ல் தொடங்கி வசனம் 55வரை தொடர்ந்து [தேவனை] மேன்மைப்படுத்தும் ஒரு பாடலுடன் மரியாள் பதில் அளித்தாள். எர்னஸ்ட் ஹவுஸர் அவர்கள், இந்தச் சிறிய, உயர்வூட்டும் பாடலானது "புதிய ஏற்பாட்டின் இலக்கிய வைரங்களில் ஒன்று" என்று எழுதினார்.[13] இந்தப் பத்து வசனங்களில், நாம் இயேசுவின் தாயாகிய மரியாளின் அநேகமான வார்த்தைகள் பதிவு செய்யக் கிடைக்கப் பெற்றுள்ளோம்.*

*மரியாளின் வார்த்தைகள், 1 சாமுவேல் 2:1-10ல் உள்ள அன்னாளின் பாடலை நமக்கு நினைவூட்டுகிறது. மரியாளின் பாடல் மூன்று ஆய்வுக் கருத்துக்களைக் கொண்டுள்ளது: (1) இவளுக்குத் தேவன் செய்திருந்தவை (1:46-49), (2) எல்லா மனிதர்களுக்கும் தேவன் செய்திருந்தவை - அவர் உதவியற்றவர்களுக்கு, தாழ்மையானவர்களுக்கு, மற்றும் பசியுற்றவர் களுக்கு உதவியிருந்தார் (1:50-53), மற்றும் (3) இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் செய்திருந்தவை (1:54, 55). இவற்றில் கடைசி ஆய்வுக் கருத்தானது, தேவன் எப்போதும் தமது வார்த்தையைக் காக்கின்றார் என்பதற்கு நிரூபணமாய் இருந்தது!*

*மரியாள் கூறியதை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், இவள் வேத வசனங்களை அறிந்திருந்தாள் என்ற உண்மையினால் நாம் ஈர்க்கப் படுகின்றோம்.[14] இவளது துதியின் வார்த்தைகளில் பழைய ஏற்பாட்டின் பன்னிரெண்டு வசனப்பகுதிகள் பிரதிபலிக்கின்றன. ஜெப ஆலயப் பள்ளிகளில் பையன்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்த அந்த நாட்களில்*

*இந்த உண்மையானது குறிப்பிடத்தக்கதாக இருந்தது.*

*மரியாளின் வாழ்வினூடே நமது [பாடத்தின்] வேகத்தை நாம் விரைவுபடுத்த வேண்டும். லூக்கா 2ம் அதிகாரமானது இயேசுவின் பிறப்பையும் மேய்ப்பர்கள் அவரை வந்து பார்த்ததையும் பற்றிக் கூறுகிறது. வசனம் 19, "மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனை பண்ணினாள்" என்று கூறுகிறது.*

## இவள் வீரமும் தைரியமும் கொண்டவளாய் இருந்தாள்

*இயேசு பிறந்து ஏறக்குறைய நாற்பது நாட்கள் ஆனபோது, மரியாளும் யோசேப்பும் பலி செலுத்துவதற்காக அந்தப் பிள்ளையை எருசலேமுக்கு எடுத்துச் சென்றார்கள் (லேவி. 12:2-4, 6-8). அங்கிருந்த சிமியோன் என்ற ஒரு மனிதர் இயேசுவைத் தமது கைகளில் ஏந்திக்கொண்டு, அந்தப் பிள்ளை நிறைவேற்றவிருந்த எல்லாவற்றையும் கூறினார் (லூக். 2:25-35). ஏவுதல் பெற்ற அவரது வார்த்தைகளில் மரியாளுக்கான பின்வரும் அச்சுறுத்துகிற எச்சரிக்கையும் உள்ளடங்கியிருந்தது: "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்" (2:35).*

*சற்றே நின்று, மரியாளுக்குக் காத்திருந்த இந்தப் பணிப்பொறுப்பைக் குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள். மூன்று மகள்களை வளர்த்தல் என்பது எனக்கும் என் மனைவிக்கும் சுலபமானதாக இருந்ததில்லை. மரியாள் குறைந்தது ஏழு பிள்ளைகளைக் கொண்டிருந்தாள்[15] - அவர்களில் எல்லாருக்கும் மூத்தவர் தேவனுடைய குமாரனாக இருந்தார்! தேவனுடைய சொந்தக் குமாரனை வளர்ப்பதற்குப் பொறுப்பாயிருப்பதில் உள்ள இறுக்கத்தை என்னால் கற்பனை செய்யவும் கூட முடியவில்லை. இப்போது, இவை எல்லாவற்றிற்கும் மேலாக, கடைசியில் மரியாளின் ஆத்துமாவை ஒரு பட்டயம் உருவிப் போகும் என்று இவளிடம் சிமியோன் கூறினார். இருதய வேதனை வரவிருந்தது!*

*அந்த அறைகூவல்களை வீரமுள்ள பெண் மட்டுமே எதிர்கொண்டு - சந்தித்து - இருக்க முடியும். மரியாள், திருமணமாகமலேயே தாயாகுதல் என்பது போன்றவை கேள்விப்பட்டிருக்கப்படாமல் இருந்த அந்த நாட்களில், அவ்வாறு இருத்தலின் விளைவுகளை ஏற்றுக்கொள்ள மனவிருப்பம் கொண்டிருந்ததினால் தமது தைரியத்தைக் காண்பித்திருந்தாள். இவள் நமது ஆண்டவரின் தாயாக இருத்தலின் விளைவை ஏற்றுக்கொண்டதினால் தொடர்ந்து தமது தைரியத்தைக் காண்பித்தாள்.*

*இந்த சத்தியமானது, தேவன், ஒரு அரச அரண்மனையில் ஆடம்பரத்தில் இருந்த ஒரு இனிமையான பெண்ணுக்கு மாறாக, மறைவான, இழித்துரைக்கப்பட்டும் இருந்த ஒரு சிறிய ஊரில் இருந்த ஒரு ஏழையான, அறியப்படாத இளம் பெண்ணைத் தேர்ந்து கொண்டது ஏன்? என்று விளக்கப்படுத்த உதவலாம். தேவனுக்கு பலமும் எதிர்ப்பைத் தாங்கும் சக்தியும் கொண்ட ஒருவர் தேவைப்பட்டார். அமெரிக்க ஐக்கிய நாட்டில் நாங்கள், "தேவனுக்கு வன்மையான ஒருவர் தேவைப்பட்டார்" என்று*

*கூறுவோம்.[16] அதாவது, தேவனுக்கு உறுதி வாய்ந்த ஒருவர் தேவைப் பட்டார்.*

*இயேசுவின் சொந்த ஊழியக் காலத்தின்போது, யோசேப்பைப் பற்றிய விவரம் எதையும் நாம் வேதாகமத்தில் ஒருக்காலும் வாசிப்பதில்லை; மரியாளையும் அவளுடைய பிள்ளைகளைப் பற்றியும் மாத்திரமே வாசிக்கின்றோம். இது, யோசேப்பு மரியாளை விட மிகவும் வயதானவரா யிருந்தார் என்றும், அவர் இயேசு தமது வெளியரங்கமான ஊழியத்தைத் தொடங்குமுன்பு இறந்து போனார் என்றும் சுட்டிக்காண்பிக்கிறது என்று அநேகர் நினைக்கின்றார்கள்.[17] மரியாள், தாம் ஒருவளாகவே தம் ஏழு அல்லது அதற்கு அதிகமான பிள்ளைகளை வளர்ப்பதில் அதிகம் செயல்பட வேண்டியிருந்தது[18] என்பதற்குப் பலமான சாத்தியக் கூறு உள்ளது. உங்களில் சிலர் சாட்சியளிக்கும் வகையில், இது மிகவும் சுலபமானதாக இருந்திராது. தேவனுக்கு உறுதி வாய்ந்த ஒருவர் தேவைப்பட்டார் என்பதையே நான் மீண்டும் கூறுகின்றேன்!*

## *இவள் பொறுப்பை ஏற்பதற்கு மனவிருப்பத்துடன் இருந்தாள்*

*மரியாளின் உறுதித்தன்மையானது, அவளிடம் இருந்த, ஆனால் பலரிடம் குறைவுபட்டுள்ள இன்னொரு பண்புடன் பிணைப்புக் கொண்டுள்ளது: இவள் பொறுப்பை ஏற்பதற்கு மனவிருப்பத்துடன் இருந்தாள். இதை விவரிப்பதற்கு நாம், இயேசுவின் பன்னிரெண்டு வயதில் நடந்த வரலாறு ஒன்றைப் பயன்படுத்த முடியும் (லூக். 2:41-51). இயேசு எங்கிருந்தார் என்பதை யோசேப்பும் மரியாளும் அறியாதிருந்தபோது, அவர்கள் அவரை எருசலேம் முழுவதிலும் ஊக்கத்துடன் தேடினார்கள். அவரைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பைத் தேவன் அவர்களிடத்தில் கொடுத்திருந்தாரே. துரதிர்ஷ்டவசமாக, இன்றைய நாட்களில் சிலர் - தங்கள் தனிப்பட்ட வாழ்வில், தங்கள் திருமணங்களில், மற்றும் தங்கள் குடும்பங்களில் - பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு விருப்பமற்றவர்களாக இருக்கின்றார்கள்.*

## *இவள் தனது மகன்மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தினாள்*

*[இப்போது நாம்] காலவேளையில் நாம் இயேசு தமது ஊழியத்தைத் தொடங்கிய பகுதியான பதினெட்டு ஆண்டுகள் கழிந்து சென்ற ஒரு பகுதிக்குத் தாண்டி வருகின்றோம். அந்த ஊழியத்தின் தொடக்க வேளையில், மரியாளும் இவளது மகனும் கானாவூரில் ஒரு திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள், அங்கு திராட்சரசம் குறைவுபட்டபோது, மரியாள் இயேசுவிடம், "அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை" என்று கூறினாள் (யோவா. 2:3).[19] பின்பு மரியாள், வேலைக்காரரை நோக்கி, "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்" என்று*

*கூறினாள் (யோவா. 2:5). இவள், தமது மகன் அந்த சூழ்நிலைபற்றி அக்கறை செலுத்த முடியும் என்று நம்பினாள்.*

*ஒவ்வொரு பெற்றோருக்கும் அவசியமாகிற ஒரு பண்பை இவள் காட்சிப்படுத்தினாள்: இவள் தமது பிள்ளையின் மீது நம்பிக்கை கொண்டிருந்தாள், மற்றும் அந்த நம்பிக்கையை வெளிப்படுத்தினாள். "உன்னால் இதைச் செய்ய முடியும்" என்ற சிந்தனையின் உறுதிப்பாடானது எனது தாயார் எனக்களித்த மாபெரும் பரிசுகளில் ஒன்றாக இருந்தது.*

## *இவள் பிறரின் நலம்பற்றி அக்கறை கொண்டிருந்தாள்*

*அடுத்து வந்த மூன்று அல்லது அதிகமான ஆண்டுகளில் நடந்தவற்றில், மரியாளைப் பற்றி நாம் வாசிக்கும் ஒரு சில வேளைகளில் ஒன்று, இயேசு உண்பதற்குப் போதிய[காலத்]தைப் பெற்றிருக்கவில்லை என்று மரியாள் கவலைப்பட்ட வேளையாயிருந்தது (மாற். 3:20, 21). இவளும் இவருடைய மற்ற பிள்ளைகளும் இயேசுவை இல்லத்திற்குக் கூட்டிச் செல்வதற்காக வந்திருந்தார்கள் (மாற். 3:31-35).*[20] *இந்த நிகழ்ச்சி மரியாளையும் இவளது குடும்பத்தையும் தாழ்த்துவதில்லை; அவர்கள், இயேசு யார் என்பதையும் அவரது ஊழியம் எப்படிப்பட்டது என்பதையும் முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் இருந்தார்கள். இருந்த போதிலும், மரியாள் தமது குமாரனைப் பற்றி அக்கறையாயிருந்தாள் என்று இது காண்பிக்கிறது. உங்களைப்பற்றி அக்கறை கொள்ளக்கூடிய ஒரு தாய் உங்களுக்கிருந்தால், அக்கறை செலுத்துகின்ற அந்த தாயாருக்காகத் தேவனுக்கு நீங்கள் நன்றி செலுத்துவீர்கள் என்று நான் நம்புகின்றேன்.*

## *இவள் - முடிவு வரையிலும் - தமது பணிப்பொறுப்பில் உண்மையுள்ளவளாய் இருந்தாள்*

*எடுத்துரைப்பின் அந்த இடத்திலிருந்து - சிலுவை வரையிலும் - நாம் மரியாளைப் பற்றிய காட்சியை இழந்தவர்களாய் இருக்கின்றோம். துன்ப உணர்வைத் தூண்டும் பின்வரும் காட்சியை யோவான் பதிவு செய்தார்:*

> *இயேசுவின் சிலுவையினருகே அவருடை தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பான சீஷனையும் [அநேகமாக இவர் யோவானாயிருந்திருக்கலாம்] கண்டு, தம்முடைய தாயை நோக்கி: "ஸ்திரீயே, அதோ, உன் மகன்" என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: "அதோ, உன் தாய்" என்றார் ... (யோவா. 19:25-27).*

*மரியாள், சிலுவையில் தொங்கிய தனது மகனைக் கண்ணோக்கியபடி*

*அங்கு நின்ற காட்சியை உங்களால் காண முடிகிறதா? இவளது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடுவதை உங்களால் காண முடிகிறதா? அவரைச் சிறுவயதில் கரங்களில் தாங்கியதை நினைத்தவளாக, அப்போது தமது கரங்களில் தாங்கியிருந்ததை உங்களால் காண முடிகிறதா? இந்தக் கணத்தைச் சிறைப்பிடித்த ஒரு கவிதையைப் பல ஆண்டுகளுக்கு முன்பாக நான் மனப்பாடம் செய்தேன்:*

> *இரு பெண்கள் மலையிலிருந்து*
> *இறங்குகையில் கதறுவதை நான் கேட்டேன்:*
> *அவர்களில் ஒருவர் முறிபட்ட ரோஜா போலிருந்தார்,*
> *ஒருவர் சுடரைப் போலிருந்தார்.*
> *ஒருவர், "மனிதர்கள் இச்செயலை ஆளுவார்கள்*
> *அவர்களின் தீய கரங்கள் இதைச் செய்தன" என்றார்;*
> *இன்னொருவரோ, தமது கண்ணீரினூடே,*
> *"என் மகனே, என் மகனே, என் மகனே"*
> *என்று மட்டும் கூறினார்.*[21]

*மரியாள் பல ஆண்டுகளுக்கு முன்பு பேசப்பட்ட வார்த்தைகளைக் கொல்கொதா என்று அழைக்கப்பட்ட மலையின் மீது கடைசியாகப் புரிந்து கொண்டாள்: "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்" (லூக். 2:35அ). சலிப்பூட்டுதல் என்பதன் இடர்ப்பாட்டில் நான் மீண்டுமாக, தேவனுக்கு உறுதிமிக்க ஒருவர் தேவைப்பட்டார் என்று கூற வேண்டும்.*

*கடைசியாக ஒரு காட்சி எஞ்சியுள்ளது: இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்பு, ஆவியானவரின் வருகைக்காகவும் இராஜ்யம்/சபையின் தொடங்குதலுக்காகவும் சீஷர்கள் எருசலேமில் காத்திருந்தார்கள். சீஷர்களுடன் மரியாளும் இயேசுவின் சகோதரர்களும் இருந்ததாக லூக்கா பதிவு செய்தார் (அப். 1:14). சகோதரர்கள் விசுவாசத்திற்குள் வந்திருந்தார்கள்; மரியாளின் விசுவாச மானது புரிந்துகொள்ளுதலாக மலர்ந்திருந்தது.*

*அங்கு நாம் மரியாளை விட்டாக வேண்டும். ஏவப்பட்டிராத பாரம் பரியம் ஒன்று, இவள் எருசலேமில் இறந்தாள் என்று கூறுகிறது; இன்னொரு பாரம்பரியமானது, இவள் யோவானுடன் எபேசு நகருக்குச் சென்று, அங்கே இறந்தாள் என்று கூறுகிறது. இவளுக்கு என்ன நடந்தது என்று நாம் அறிவது இல்லை. சபையின் தொடக்க காலமான உணர்வெழுச்சிமிகுந்த வேளையில் இவள் சபையின் அங்கமாயிருந்தாள் என்று அறிய தேவன் நம்மை அனுமதிக்கின்றார், அத்துடன் அவள் நமது ஆண்டவரின் தாயாருடைய வரலாற்றின் திரையை இழுத்து மூடிவிட்டாள்.*

## *முடிவுரை*

*தேவன் மரியாளைத் தேர்ந்துகொண்டது ஏன்? தேவன் மரியாளுக்குத் தந்த, ஏறக்குறைய - சாத்தியம் இல்லாத பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இவளுக்கு நிச்சயமாகவே உதவியிருக்கக் கூடிய பல*

*பண்புகளை நாம் கருத்தாகத் தெரிவித்து இருக்கின்றோம்:*

- *இவள் தமது சிந்தையைப் பயன்படுத்த அஞ்சாதிருந்தாள்.*
- *இவள் ஒரு தேவபக்தியான பெண்மணியாயிருந்தாள்.*
- *இவள் தேவன்மீதும் அவரது வல்லமைமீதும் நம்பிக்கை கொண்டிருந்தாள்.*
- *இவள் ஒரு தாழ்மையான ஆவியைக் கொண்டிருந்தாள்.*
- *இவள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறவளாக இருந்தாள்.*
- *இவள் வேத வசனங்களை அறிந்திருந்தாள்.*
- *இவள் வீரமும் தைரியமும் கொண்டவளாய் இருந்தாள்.*
- *இவள் பொறுப்பை ஏற்பதற்கு மனவிருப்பத்துடன் இருந்தாள்.*
- *இவள் தமது மகன் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தினாள்.*
- *இவள் பிறரின் நலம் பற்றி அக்கறை கொண்டிருந்தாள்.*
- *இவள் - முடிவு வரையிலும் - தமது பணிப்பொறுப்பில் உண்மையுள்ளவராய் இருந்தாள்.*

*இந்தப் பண்புகள் எவரொருவரும் வாழ்வின் பணிப்பொறுப்புகளில் வெற்றியடைய உதவும். மிகவும் முக்கியமாக, இவைகள் எவரொருவரையும் தேவனால் அவரது ஊழியத்தில் பயன்படுத்தப்பட தகுதிப்படுத்தும்.*

*நாம் இந்தப் பாடத்தை முடிக்கையில், மரியாளின் சிறப்பான பண்புகளில் ஒன்றிற்குத் திரும்ப நான் விரும்புகின்றேன்: "இவள் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறவளாக இருந்தாள்." தூதனிடம் இவள் கூறிய வார்த்தைகளை மீண்டும் ஆழ்ந்து சிந்தியுங்கள்: "உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" (லூக். 1:38ஆ). மரியாளின் இந்தப் பதிலைப் பற்றி, கென் கையர் அவர்கள் பின்வரும் விளக்கங்களைக் கூறினார்:*

> *... இவளது முடிவு விரைவானதாயிருந்தது, இவளது கீழ்ப்படிதல் முழுமையானதாயிருந்தது. இவள் தேவனுக்குக் கீழ்ப்படிவாள். எழக்கூடிய கேள்விகள் எதுவாயிருப்பினும், அல்லது புருவச் சுழிப்புகளின் மத்தியிலும், அல்லது செலுத்த வேண்டிய விலை எதுவாயிருப்பினும், அல்லது விளைவுகள் எதுவாக இருப்பினும், இது இவளது நற்பெயரை அல்லது இவள் நேசித்த மனிதரை இழக்கச் செய்வதாயிருப்பினும் இவள் தேவனுக்குக் கீழ்ப்படிவாள்.*
>
> *இது இவளது வாழ்வாக இருந்தாலும் கூட.*
>
> *... இந்த இளம் பெண் கொண்டிருந்த சாதகமான எல்லா பண்புகளிலும், "எதுவாயிருந்தாலும்" என்ற பண்பு, [இயேசுவை] வளர்க்கும் பணிப்பொறுப்பிற்கு இவளை மிகவும் ஏற்புடையவளாக்கிற்று ...*[22]

*செலுத்த வேண்டிய விலை, விளைவுகள் ஆகியவை எதுவாயிருந்தாலும் - நீங்கள் உங்கள் ஆண்டவருக்குக் கீழ்ப்படிய விரும்புகின்றீர்களா?*[23] *அப்படியென்றால், நீங்களும்கூட தேவன் தமது நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் நபரின் வகையினராய் இருப்பீர்கள்.*

குறிப்புகள்

[1]ஸ்னூப்பி என்பது சார்லீ பிரவுனின் நாய் ஆகும். நகைச்சுவைத் துணுக்குப் படங்களில், சிலவேளைகளில் கேலிச்சித்திர விலங்குகள் வார்த்தைகளில் சிந்தனையை வெளிப்படுத்துகின்றன. [2]ஏழைகள் கொடுக்க அனுமதிக்கப்பட்ட பலியை யோசேப்பும் மரியாளும் செலுத்தினார்கள் என்பது, இவர்கள் ஏழைகளாக இருந்தார்கள் என்பதை நாம் அறியும் ஒரு வழிமுறையாக உள்ளது (லூக். 2:24ஐ லேவி. 12:6-8 உடன் ஒப்பிடவும்). J.W. மெக்கார்வி அவர்கள் "பிள்ளையின் மாபெரும் தன்மையை அறிந்த யோசேப்பும் மரியாளும் வழக்கமான மற்றும் சற்று விலை உயர்ந்த பலியை அளிக்க முடிந்திருந்ததென்றால் விலை குறைவான பலிப்பொருளைப் பயன்படுத்தி இருக்க மாட்டார்கள்" என்று எழுதும்போது நிச்சயமாக சரியானவராகவே இருந்தார் (J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 34). இயேசுவின் வாழ்வு பாணியும் (மத். 8:20) ஒரு தாழ்மையான தொடக்கத்தையே கருத்தாகத் தெரிவிக்கிறது. [3]"மிரியம்" என்றால் "கசப்பு" என்று அர்த்தமாகிறது. ரூத் 1:20 இவ்வார்த்தையின் ஒரு வடிவத்தைப் பயன்படுத்துகிறது. நாம் பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு மிரியத்தையே காண்கின்றோம் (மோசேயின் சகோதரி) ஆனால் புதிய ஏற்பாட்டில் நாம் பல மரியாள்களைக் காண்கின்றோம். [4]கிறிஸ்து தாவீதின் வம்சத்தவராக இருந்தார் என்பதை நமது வேத வசனப்பகுதி வலியுறுத்துகிறது (1:32, 69). மேசியா தாவீதின் "கர்ப்பத்திலிருந்து உதிப்பார்" (2 சாமு. 7:12) என்று தேவன் அவரிடம் கூறியிருந்தார். சொல்லர்த்தமாக, மேசியா "[தாவீதின்] வயிற்றிலிருந்து புறப்படுவார்" என்று தேவன் கூறினார் (KJVயில் காணவும்). NIVயில், "உன் சுய உடலில் இருந்து வருவார்" என்றுள்ளது. இயேசு, மாம்சப்பிரகாரமாக யோசேப்பின் மூலமாக வந்த தாவீதின் சந்ததியாக இராதபடியால், இவர் இந்த வாக்குத்தத்தை நிறைவேற்றுவதற்கு மரியாளின் மூலமாக வந்த மாம்சத்திற்குரிய சந்ததியாக இருக்க வேண்டியிருந்தது. [5]குறிப்பு எண் 2ஐ மறுகண்ணோட்டமிடவும். [6]இளம்பெண்கள் பெரும்பாலும் தங்கள் முன் இளம் வயதுகளில் இருந்தார்கள். இதற்கு மறுபுறத்தில், யோசேப்பு ஒரு வயது வந்த மனிதராக இருந்திருக்கலாம். இயேசுவின் சொந்த ஊழியத்தின்போது, யோசேப்பு ஒருமுறை கூடக் குறிப்பிடப்படுவது இல்லை, இது இவர் இயேசுவுக்கு முப்பது வயதாவதற்கு முன்பே மரித்து விட்டார் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. [7]செப்துவஜிந்த் என்பது பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பாக உள்ளது. செப்துவஜிந்த் பற்றிய ஒரு சுருக்கமான கலந்துரையாடல், இப்புத்தகத்தில் உள்ள "இயேசு வந்த வேளையில் இருந்த உலகம்" என்ற பாடத்தில், "நான்கு பேரரசுகள்" என்ற உட்தலைப்பில், "கிரேக்கர்களின் காலம்" என்ற குறுந்தலைப்பில், தாலமிகள் என்ற உட்பிரிவின் கீழ் உள்ளது. [8]ஒருவேளையில், கிரேக்கப் புராணக்கதையையும், இயேசு கன்னிப் பெண்ணிட மிருந்து பிறந்ததையும் இணையாகக் கூற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கிரேக்கத் தெய்வங்கள் மனிதப் பிறவிகளுடன் மாம்சப்பிரகாரமாக உறவுகொள்ளும் விவரங்கள் பற்றிய பண்பற்ற தன்மை, மற்றும் தூதனுடைய மென்மையான வார்த்தைகளின் அழகு ஆகியவற்றிற்கு இடையில் ஒப்பீடு எதுவும் இருப்பதில்லை. [9]KJVயில் "cousin" என்றுள்ளது, இது ஏற்றுக்கொள்ளக் கூடிய மொழிபெயர்ப் பாக உள்ளது; ஆனால் அந்த நாட்களில் "cousin" என்ற வார்த்தையானது, உறவு எவ்வளவு நெருக்கமானதாக இருந்தது என்று சுட்டிக்காண்பிப்பதில்லை. மரியாளும் எலிசபெத்தும், இன்றைய நாட்களில் "second cousins" அல்லது "third cousins" அல்லது "fourth cousins" என்று அழைக்கப்படக்கூடிய உறவுமுறை கொண்டிருந்து இருக்கலாம். [10]கிரேக்க வசனப்பகுதியில் நேர்ப்பொருளில், "எந்த ஒரு வார்த்தையும் தேவனால் கூடாததாக

*இருப்பதில்லை'' என்று உள்ளது.* ASV*யானது, இவ்விதமாக இவ்வசனத்தை, "ஏனெனில் தேவனிடமிருந்து வரும் எந்த வார்த்தையும் வல்லமை யில் வீணாகாது" என்று தரவழைக்கிறது.*

*[11]யோவான் 8:41 வசனமானது, "நாங்கள் வேசித்தனத்தில் பிறந்தவர்கள் அல்ல - ஆனால் நீ அப்படிப் பிறந்துள்ளாய்" என்று மறைவான கருத்துக் கொண்டுள்ளதாகச் சிலர் நினைக்கின்றார்கள். [12]லேவியராகமம் 20:10; எசேக்கியேல் 16:38; யோவான் 8:5 ஆகிய வசனங்களையும் காணவும். [13]*Ernest O. Hauser, "Mary, Mother of Christ," *Reader's Digest* (December 1971): 170. *[14]எலிசபெத்தைப் போல (1:41), பிற்பாடு சகரியாவைப் போல (1:67) மரியாளும் "பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்த" சாத்தியக் கூற்றினை நான் தள்ளி விடுவதில்லை. இருந்தபோதிலும், மரியாளின் வார்த்தைகள் வசனத்தைப் பற்றிய சொந்த அறிவைச் சுட்டிக்காண்பிக்கின்றன. [15]மரியாள், (யோசேப்பின் மூலமாக) இன்னும் நான்கு மகன்களும் குறைந்த பட்சம் இரண்டு மகள்களும் கொண்டு இருந்தாள் (மாற். 6:3). இவள் மகன்களின் எண்ணிக்கையைப் போன்றே மகள்களையும் கொண்டிருந்தாள் என்றால், இவள் பத்துப் பிள்ளைகளைப் பெற்றவளாய் இருந்தாள் என்றாகிறது. [16]நீங்கள் வாழும் பகுதியில் பலம் மற்றும் வலிவு ஆகியவற்றின் கருத்தைக் குறிப்பிடும் ஒரு சொல் விளக்கத்தைப் பயன்படுத்துங்கள். [17]இயேசு தமது தாயைக் கவனிக்கும் பொறுப்பை யோவானிடத்தில் விட்டார் என்ற உண்மையானது (யோவா. 19:26, 27), யோசேப்பு அப்பொழுது உயிருடன் இல்லை என்பதையும் சுட்டிக்காண்பிக்கிறது. [18]''எல்லாவற்றையும்'' என்று கூறாமல் ''வளர்ப்பதில் அதிகம் செயல்பட வேண்டியிருந்தது'' என்று மட்டுமே நான் கூறுகின்றேன், ஏனென்றால், முதற்பிறந்தவர் என்ற வகையில் இயேசு, தமது [வளர்ப்பு தந்தை] இறந்தபோது, குடும்பப் பொறுப்பில் சிலவற்றைத் தாம் ஏற்றிருந்திருக்கக் கூடும். இருந்தபோதிலும், உயிருடன் உள்ள பெற்றோர் என்ற முறையில் மரியாள் கொண்டிருந்த பொறுப்பு அதிகமானதாக இருந்திருக்க வேண்டும். [19]மரியாளுக்கும் இயேசுவுக்கும் இடையில் நடைபெற்ற எஞ்சிய [வார்த்தைப்] பரிமாற்றத்தின் சில அம்சங்கள் "ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல் வேளை" என்ற பாடத்தில், முதலாவது அற்புதம் என்ற உட்தலைப்பில் உள்ளன. [20]வசனம் 31 வசனம் 20க்குத் தொடர்புடையதா என்று நாம் நிச்சயமாகக் கூற இயலவில்லை, ஆனால் அவ்வாறு இருப்பதற்குப் பலத்த சாத்தியக் கூறு உள்ளது.*

*[21]பெயர் அறியப்படாத எழுத்தாளர். [22]*Ken Gire, *Moments with the Savior* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1998), 26-27. *[23]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் கூற விரும்பலாம்: அவர்கள் இன்னமும் கிறிஸ்தவர்களாய் ஆகாதிருந்தால். அவர்கள் மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலமாக (அப். 2:37, 38; 8:35-39; 22:16) தாங்கள் இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும். அவர்கள் விசுவாசமற்ற கிறிஸ்தவர்களாய் இருந்தால், அவர்கள் மனந்திரும்புதல், தவறை அறிக்கையிடுதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றின் மூலமாக கர்த்தரிடமாகவும் அவரது சபையினிடமாக வும் திரும்ப வேண்டியது அவசியமாகும் (அப். 8:22; 1 யோவா. 1:9; யாக். 5:16).*

# 10

# "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்"

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #2*

I. *அவரது ஊழியத்திற்கு முன்னதாகக் கிறிஸ்துவின் வாழ்வு (தொடர்கிறது).*
   I. *இயேசுவின் வருகை பற்றி யோசேப்புக்கு அறிவிப்பு (மத். 1:18-25).*
   J. *இயேசுவின் பிறப்பு (லூக். 2:1-7).*
   K. *இயேசுவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படுதல் (லூக். 2:8-20).*
   L. *இயேசுவுக்கு விருத்தசேதனம் மற்றும் பெயரிடுதல்; தேவாலய ஆராதனை (லூக். 2:21-39).*
   M. *கிழக்கிலிருந்து ஞானிகளால் இயேசு சந்திக்கப்படுதல் (மத். 2:1-12).*
   N. *எகிப்துக்கு ஓடிப்போகுதலும் பெத்லகேமில் ஆண் குழந்தைகள் கொல்லப்படுதலும் (மத். 2:13-18).*
   O. *குழந்தை இயேசு எகிப்தில் இருந்து நாசரேத்தூருக்குக் கொண்டு வரப்படுதல் (மத். 2:19-23; லூக். 2:39ஆ வைக் காணவும்).*
   P. *இயேசு நாசரேத்தூரில் வாழ்தல்; அவரது பன்னிரெண்டு வயதில் எருசலேமுக்கு ஒரு பயணம் (லூக். 2:40-52).*

## அறிமுகம்

மேசியாவின் வருகையை ஏசாயா பின்வரும் வார்த்தைகளினால் தீர்க்கதரிசனமாக உரைத்தார்: "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" (ஏசா. 9:6). KJVயில் இவ்வசனம், "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் ..." என்று தொடங்குகிறது.

யூதர்கள் தங்களை வெற்றிக்கு வழிநடத்த யுத்தத்தின் மனிதர் ஒருவரை எதிர்பார்த்திருந்தார்கள்; தேவன் அவர்களைத் தம்மிடத்தில் திருப்பிக் கொள்வதற்கு, உதவியற்ற பாலகன் ஒருவரை அனுப்புவார். மனிதர்கள் பூமிக்குரிய அரியணையில் இருந்து ஆட்சி செய்வதற்கு ஒரு அதிபதியை

*விரும்பினார்கள்; தேவன் அவர்களுக்கு முன்னணையில் ஒரு பாலகனைத் தருவார். இது மனிதனின் வழியாக இருந்ததில்லை, இது தேவனின் வழியாக இருந்தது.*

## ஒரு பாலகன் வாக்களிக்கப்பட்டார்
## *(மத். 1:18-25)*

*"கிறிஸ்து வருகின்றார்!" என்ற பாடமானது யோவான் ஸ்நானனின் தொடக்க கால வாழ்வு பற்றிய ஒரு சுருக்கமான விவரத்துடன் முடிக்கப் பட்டது. நாம் இந்தப் பாடத்தைத் தொடங்குகையில், மரியாள் எலிசபெத்திடம் மூன்று மாதங்கள் தங்கியிருந்த பின்பு திரும்பிய வேளையில் இருந்து தொடங்குவோம். மரியாள் நாசரேத்தூருக்குள் நடந்து வந்தபோது, இவர் கர்ப்பமாய் இருந்தது அங்குள்ள ஒவ்வொருவருக்கும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். அப்போது பரவத் தொடங்கிய கிசுகிசுப்பை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.*

***யோசேப்பின் பிரச்சனை (வ. 18, 19)***

*யோசேப்பு சீரழிவுக்குள்ளாகியிருக்க வேண்டும். தாம் என்ன நடவடிக்கையை மேற்கொள்வது என்று அவர் போராடிக் கொண்டிருந்தார். திருமண வைபவம் நடந்திராவிட்டாலும் மற்றும் திருமணமானது [குடும்ப உறவினால்] பூர்த்தியடையாதிருந்தாலும், நியமித்தல் என்பது பரிசுத்தமான தாகவும் சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்துவதாகவும் இருந்தது. யோசேப்புக்கு மூன்று விருப்பத் தேர்வுகள் இருந்தன:*

*(1) அவர் மரியாளின் நிலைமையைக் கண்டுகொள்ளாமல், திருமணம் செய்து கொள்ள முடியும். இந்தச் சாத்தியக் கூற்றை அவர் யோசிக்கவில்லை என்பது உறுதி. நீதிமான் என்ற வகையில் (வ. 19), அவர், ஒழுக்கவீனம் என்று தெளிவாகக் காணப்படுவதை மன்னித்து விட்டுவிடுதல் என்பது அவருக்குத் தவறானதாக இருந்திருக்கும்.[1]*

*(2) அவர், மரியாள் தமது நியமித்தலின் வாக்குறுதிகளுக்கு (உபா. 22:23, 24) உண்மையற்ற வகையில் நடந்து கொண்டால், மரியாளை சாகும்வரை கல்லால் எறியச் செய்திருக்க முடியும். இந்த விருப்பத் தேர்வை யோசேப்பு புறக்கணித்தார். இவர் நீதிமானாக இருந்தார், அதே வேளையில் பரிவிரக்கம் உள்ளவராகவும் இருந்தார். மரியாள்மீதான இவரது அன்பு அநேகமாக இவரது இருதயத்தில் இன்னும் எரிந்துகொண்டிருந்திருக்கும்.*

*(3) இவர் மரியாளை விவாகரத்துச் செய்ய முடியும்.[2] நியாயப் பிரமாணமானது, ஒருவர் "தமது மனைவியினிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டால், அவளுக்குத் தள்ளுதற் சீட்டை எழுதிக் கொடுத்து" விடலாம் என்ற வாய்ப்பை அளித்திருந்தது (உபா. 24:1). மூன்று தீமைகளிலும் குறைந்தபட்சமான இந்த நடவடிக்கையை மேற்கொள்ள யோசேப்பு முடிவு செய்தார். மேலும் சங்கடங்களைத் தவிர்ப்பதற்காக இவர், மரியாளை விரைவாகவும் அமைதியான முறையிலும்[3] தள்ளி வைப்பார். இவரது முடிவு இவரைக் கவலையில் ஆழ்த்தியது என்பதில் சந்தேகம் இல்லை.[4]*

***தேவனுடைய தீர்வு (வ. 20-25)***

*பாலகனைப் பற்றிய ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறைவேற்றப் படுவதற்கு, தேவன் எவ்வாறு விஷயங்களை ஒழுங்குபடுத்தினார் என்பதே இந்தப் பாடத்திற்கான வேத வசனங்களின் வலியுறுத்தமாக உள்ளது. வரலாற்றின் இந்தப் பாகத்தில், தேவன் ஒரு தூதனை அனுப்பியதன் மூலம் யோசேப்பின் இக்கட்டான நிலையில் இருந்து இவரை விடுவித்தார். இந்தத் தச்சரிடத்தில் அந்தத் தூதன் பின்வருமாறு கூறினார்:*

> *... தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் (வ. 20, 21).*

*யோசேப்பு கலவையான உணர்வுகளைக் கொண்டிருந்திருக்க வேண்டும்: இவர் தமது அன்புக்கு உரிய மரியாள் உண்மையற்றுப் போயிருக்கவில்லை என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்திருப்பார், மற்றும் மேசியாவைப் பற்றிய அறிவிப்பினால் மெய்சிலிர்த்து இருப்பார். ஆயினும் மரியாளும் தாமும், பண்பும் உணர்வும் அற்றவர்களின் ஏளனச் சிரிப்புகளுக்கும் இழிவுபடுத்தும் விமர்சனங்களுக்கும் இலக்காவோம் என்பதை இப்போது இவர் உணர்ந்தறிந்தார். இருந்தபோதிலும், அவர் தயங்கவில்லை. இவர், "நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே, தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு, அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும்[5] அவளை அறியாதிருந்தார்,[6] ..." (வ. 24, 25அ).*

*இயேசு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாக இருந்தார் என்பதை நிலைநாட்ட விரும்பிய மத்தேயு, ஏவுதல் பெற்ற உற்றுநோக்குதல் ஒன்றை இவ்விடத்தில் இடைச் செருகினார்:*

> *தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி[7] இதெல்லாம் நடந்தது; அவன்: "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல்[8] என்று பேரிடுவார்கள்" என்று சொன்னான். இம்மானு வேல் என்பதற்கு "தேவன் நம்மோடிருக்கிறார்"[9] என்று அர்த்தமாம் (வ. 22, 23).*

*"இம்மானுவேல்" என்பது பற்றி, J.W. மெக்கார்வியின் விளக்கவுரை யானது திரும்பவும் உரைக்கப்படத் தகுதியானதாக உள்ளது: "இயற்கை யானது, தேவன் நமக்கு மேல் இருக்கின்றார் என்று காண்பிக்கிறது; நியாயப்பிராணமானது, தேவன் நமக்கு எதிராக இருக்கின்றார் என்று காண்பிக்கிறது; ஆனால் சுவிசேஷமானது, தேவன் நம்மோடு, நமக்காக இருக்கின்றார் என்று காண்பிக்கிறது."[10]*

# *ஒரு பாலகன் அறிவிக்கப்பட்டார் (லூக். 2:1-20)*

***இயேசுவின் பிறப்பு (வ. 1-7)***

*யோசேப்பும் மரியாளும் ஒருவர் மற்றவரை நேசித்தார்கள், அத்துடன் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையானது அவர்களின் வழியில் வந்த எந்த மறைமுகக் குத்தல் பேச்சுக்களையும் அவமானங்களையும் தாங்கி அவர்களை உயிர்வாழக் கூடியவர்கள் ஆக்கிற்று. மரியாள் தமது [கர்ப்பத்தின்] ஒன்பதாம் மாதத்தை அடைந்தவேளையில், அவர்களின் எதிர்பார்ப்பு அன்றாடம் வளர்ந்திருக்க வேண்டும். ஆயினும் ஒரு பிரச்சனை - அவர்கள் அறிந்திராத ஒரு பிரச்சனை - நிலவிற்று: மேசியா பெத்லகேமில் பிறக்க வேண்டியிருந்தது (மீகா. 5:2), மற்றும் அவர்கள் நாசரேத்தூரில் வசித்து வந்தார்கள்.*

*தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்ற, முன்னதாகவே ஒரு தூதனைப் பயன்படுத்தியிருந்தார். இந்த சூழ்நிலையில், அவர் முற்றிலும் ஏற்புடையதல்லாத ஒரு வாய்ப்பு நிலையைப் பயன்படுத்தினார்: ரோமப் பேரரசர். "அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு[11] எழுதப்படவேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது" (லூக். 2:1).[12] இந்தக் குடிமதிப்பு அநேகமாக ரோமர்களின் வரிவிதிப்பு அடிப்படைகளை விரிவாக்குதல் என்ற நோக்கம் கொண்டிருந்தது.*

*ரோமப் பேரரசில் இருந்த ஒவ்வொருவரும் தங்கள் முன்னோர்களின் நகரத்திற்குத் திரும்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். தாவீது ராஜாவின் சந்ததியாராயிருந்த யோசேப்பு, தாவீது பிறந்த இடமான பெத்லகேமுக்குப் பயணப்பட வேண்டியிருந்தது, இது எருசலேமில் இருந்து தெற்கே ஐந்து மைல்கள் தொலைவில் இருந்த ஒரு கிராமமாகும்.[13] மரியாளும் அங்கு செல்ல வேண்டும் என்று சட்டம் கேட்டுக் கொண்டிராதிருக்கலாம், ஆனால் இவர் [மரியாள்] தமது குழந்தை பிறக்கும்போது யோசேப்பை விட்டுத் தாம் பிரிந்து இருப்பதை விரும்பவில்லை.[14]*

> *அப்பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக்[15] கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப் படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான் (வ. 4, 5).*

*நாசரேத்தூரில் இருந்து பெத்லகேமுக்குச் செல்லும் கடினமான பயணமும், அத்துடன் அங்கு "சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினாலே" (வ. 7) அந்தத் தம்பதிகளுக்கு ஏற்பட்ட ஏமாற்றமும் நமது கற்பனைக்கு விடப்படுகிறது. அவர்கள் கால்நடைகளுடன் உறங்க நேர்ந்தது எப்படி என்று கூட நமக்குக் கூறப்படுவதில்லை.[16] பாலகனின் பிறப்பு பற்றி மட்டும் நமக்குக் கூறப்படுகிறது. வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம்*

வாயந்த நிகழ்ச்சியானது[17] வார்த்தைகளின் சிக்கனமான பயன்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது.

> அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவ காலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான[18] குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள் (வ. 6, 7).

**மேய்ப்பர்களின் வரலாறு (வ. 8-20)**

புதிதாய்ப் பிறந்த ஒரு பாலகனின் அழுகை ஒலியானது, பார்வையாளர்கள் பெருகி வழிந்தோடிய இரைச்சலான நகரத்தில் பெருமளவு கவனிக்கப்படாமல் போயிருக்கலாம், ஆனால் தேவன் அந்த கணத்தை வெளியிடப்படாததாயிருக்க அனுமதிக்கவில்லை. ஆயினும் தெய்வீக அறிவிப்பு அந்த நகரத்தின் தலைவர்களுக்கோ அல்லது ஜெப ஆலய அதிகாரிகளுக்கோ கூட ஏற்படுத்தப்படவில்லை. அது "இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்த" (வ. 8) மேய்ப்பர்களின் குழு ஒன்றுக்கு ஏற்படுத்தப்பட்டது.

மேய்ப்பர்களுக்குத் தூதன் தரிசனமான வரலாறு உலகத்தில் மிகவும் நன்கு அறியப்பட்ட ஒன்றாக உள்ளது. தூதனுடைய [பின்வரும்] வார்த்தைகள் மீண்டும் மீண்டும் திரும்பக் கூறப்பட்டுள்ளன:

> பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் (வ. 10-12).[19]

பாலகன் இருந்த உணவுத் தொட்டியைக் கண்டறிவதற்கு முன்பு அந்த மேய்ப்பர்கள் எத்தனை உணவுத் தொட்டிகளைப் பரிசோதிக்க வேண்டியிருந்தது? நாம் அதை அறிவதில்லை, ஆனால் அவர்கள் நகருக்குள்ளாக விரைந்து சென்று, ஒவ்வொரு தொழுவத்தையும் உணவுத் தொட்டியையும் ஆய்வுசெய்த நிகழ்ச்சியை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. பாலகனை அவர்கள் கண்டவுடன், தாங்கள் சந்தித்த ஒவ்வொருவருக்கும் அதைப் பற்றிக் கூறினார்கள் (வ. 17, 18). அவர்கள் நற்செய்தியை முதன் முதலாகப் பகிர்ந்துகொண்ட "முதல் சுவிசேஷ ஊழியர்கள்" என்று அழைக்கப்பட்டுள்ளார்கள்.[20]

# *ஒரு பாலகன் துதிக்கப்பட்டார்*
# *(லூக். 2:21-39)*

***விருத்தசேதனமும் பெயரிடுதலும் (வ. 21)***

*இயேசுவின் பிறப்பு பழைய ஏற்பாட்டு யுகத்தின் முடிவைக் குறித்தது என்று சிலர் நினைக்கின்றார்கள், ஆனால் கிறிஸ்து "நியாயப்பிரமாணத்தின் கீழ் பிறந்தார்" என்றே வேதாகமம் போதிக்கிறது (கலா. 4:5).[21] அவர் ஒரு யூதத் தாய்க்குப் பிறந்த யூதக் குழந்தையாக, யூத ஒழுங்கு முறைகளுக்குக் கீழ்ப்பட்டவராக இருந்தார். கிறிஸ்து பிறந்த எட்டாம் நாளில், நியாயப் பிரமாணத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டபடியாக அவருக்கு விருத்த சேதனம் செய்விக்கப்பட்டது (லேவி. 12:3). அந்த வேளையில் அவருக்கு தூதன் முன்பே அறிவுறுத்தியிருந்தபடியாக "இயேசு" என்று பெயரிடப் பட்டது (லூக். 1:31; மத். 1:21).*

***தேவாலயத்திற்கு ஒரு பயணம் (வ. 22-38)***

*நியாயப்பிரமாணம் யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிற பொறுப்புக் களையும் கொடுத்தது: எகிப்தில் பத்தாவது வாதையின் போது இஸ்ரவேலர் களின் முதற்பேறான பிள்ளைகள் காப்பாற்றப்பட்டதை நினைவுகூர்ந்து ஏற்றுக்கொள்ளுதலுக்காக, முதற்பேறான மகன் பணத்தைக் கொண்டு மீட்டுக் கொள்ளப்பட வேண்டியிருந்தது (யாத். 13:2, 10-14; 34:19, 20; எண். 3:40-51; 18:15, 16). மேலும் ஒரு மகன் பிறந்து நாற்பது நாட்கள் ஆனபின்பு, ஒரு யூதத்தாய் சுத்திகரிப்புச் சடங்கிற்காகத் தேவாலயம் செல்ல வேண்டும், இதில் ஒரு பலிசெலுத்துதல் உள்ளடங்கியிருந்தது (லேவி. 12:2-8).[22] தேவாலயத்தில் இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல் மற்றும் மரியாள் சுத்திகரிப்படுதல் ஆகியவை ஒரே வேளையில் நடைபெற்றன என்பது தெளிவு.*

*தேவாலயத்தில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள், யோசேப்பை யும் அவரது சிறு குடும்பத்தையும் கவனித்திருக்கவே மாட்டார்கள், ஆனால் இவர்களைக் காண்பதில் இரு தனிநபர்கள் மன எழுச்சி அடைந்தார்கள். முதலாவது, சிமியோன் என்ற மனிதராவார், இவர் தேவபயமும் பக்தியும் கொண்ட முதிர்வயதான மனிதராயிருந்தார், இவர் மேசியாவைக் காணும் வரையிலும் மரிக்கமாட்டார் என்று தேவனால் இவருக்குக் கூறப்பட்டிருந் தது. இயேசுவைக் கண்ணோக்கியபோது இவர் கூறிய உணர்வெழுச்சி மிகுந்த வார்த்தைகள், புறஜாதியாருக்கும் யூதர்களுக்கும் இயேசு இரட்சிப்பைக் கொண்டு வருவார் என்ற உண்மையை வெளிப்படுத்தின (லூக். 2:31, 32). சிமியோனின் வார்த்தைகளில், மரியாளின் ஆத்துமாவை உருவிப்போகும் பட்டயம் பற்றிய எடுத்துரைப்பும் உள்ளடங்கியிருந்தது (வ. 35).*

*இரண்டாவது, எண்பத்து நான்கு வயதான அன்னாள் என்ற தீர்க்கதரிசினி[23] ஆவார். இந்தப் பெண்மணி இயேசுவைப் பார்த்தபோது, ''கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் பேசினாள்" (வ. 38).*

*பெத்லகேமுக்குத் திரும்புதல் (வ. 39அ)*

*"கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்தபின்பு" (வ. 39அ) அவர்கள் பெத்லகேமுக்குத் திரும்பினார்கள் (மத். 2:8, 9ஐக் காணவும்).[24] தாவீதின் குமாரனை வளர்ப்பதற்குத் தாவீதின் நகரமே (லூக். 2:4, 11) சரியான இடம் என்று யோசேப்பும் மரியாளும் முடிவு செய்திருந்தார்கள் என்பது தெளிவு (மத். 1:1; லூக். 1:32). அவர்கள் வாழ்வதற்கு ஒரு வீட்டைக் கண்டறிந்தார்கள் (மத். 2:11) மற்றும் யோசேப்பு ஒரு தச்சர் என்ற வகையில் தமது தொழிலை அநேகமாகத் தொடங்கியிருப்பார்.*

## *பாலகன் பாதுகாக்கப்பட்டார்*
## *(மத். 2:1-23; லூக். 2:39ஆ)*

***"ஞானிகளின்" வருகை (மத். 2:1-12)[25]***

*இயேசு யூதர்களுக்கு மட்டுமின்றி புறஜாதியாருக்கும் மேசியாவாக இருப்பார் என்று சிமியோன் சுட்டிக்காண்பித்திருந்தார். இதற்கான நிரூபணமானது மிக விரைவிலேயே - கிழக்கிலிருந்து மதிப்புமிக்க நபர்கள் என்ற வகையில் - வந்தது: "... யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள்[26] எருசலேமுக்கு வந்து ..." (வ. 1). "சாஸ்திரிகள்" என்பது ஆங்கிலத்தில் "Magi" என்றுள்ளது, இது கிரேக்க வசனத்தில் உள்ள வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது; இதிலிருந்துதான் நாம் "magicians"[27] என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். Magi என்பவர்களின் அறிவானது அறிவியல் மற்றும் மூடநம்பிக்கைகள் ஆகியவற்றின் கலவையாக இருந்தாலும் அறிவைத் தேடுபவர்களாக இருந்தார்கள்.[28] அவர்கள் அரசர்கள்[29] அல்ல, ஆனால் அவர்கள் அரசர்களுக்கு ஆலோசகர்களாகப் பணியாற்றினார்கள்.[30] அவர்கள் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தைப் பின்பற்றினால் மேசியாவைக் காணலாம் என்று சில வழியில், தேவன் அவர்களை நம்பச் செய்திருந்தார்.*

*அந்த நட்சத்திரம் அவர்களை முதலாவது எருசலேமுக்கு வழி நடத்திற்று. அந்த நகரம் ராஜாவின் பிறப்பு பற்றிய செய்தியினால் பரபரப்பு அடைந்திருக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கலாம். [ஆனால்] அதற்குப் பதிலாக, அவர்கள் அங்கு ஒரு பிரதான வர்த்தக மையத்திற்குரிய அன்றாட சம்பாஷணைகளை மட்டுமே கேட்டார்கள்.*

*அவர்கள், "யூதருக்கு ராஜாவாகப்[31] பிறந்திருக்கிறவர் எங்கே?" (வ. 2அ) என்று கேட்கத் தொடங்கினார்கள். அவர்களின் விசாரணையானது ஏரோது ராஜாவின் செவிகளுக்கு எட்டியது. அந்த ராஜா, மேசியா எங்கே பிறப்பார் என்று யூதமார்க்கத் தலைவர்களிடம் கேட்டார். அவர்கள் தயக்கமின்றி, "பெத்லகேமிலே" (வ. 5, 6) என்று கூறினார்கள். அந்தத் தகவலை ஞானிகளிடத்தில் பகிர்ந்துகொண்ட ஏரோது அவர்கள் அந்தக் குழந்தையைக் கண்டறியும்போது, தம்மிடம் வந்து அதைப்பற்றிக் கூறும்படி உறுதியளிக்கச் செய்தான். "நானும் வந்து அதைப் பணிந்து கொள்ளும்படி"*

*என்று அவன் பொய் கூறினான் (வ. 8).*

*சாஸ்திரிகள் எருசலேமில் இருந்து தெற்கே பயணப்படுகையில் நட்சத்திரமானது மீண்டும் தோன்றி "பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு மேல் வந்து நிற்கும் வரைக்கும்" அவர்களை வழிநடத்திற்று (வ. 9ஆ). அவர்கள் மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்து "அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்" (வ. 10, 11). பொன் என்பது உங்களுக்கு நன்கு அறியப்பட்டதாக உள்ளது. தூபவர்க்கம் என்பது ஒரு குறிப்பிட்ட மரத்திலிருந்து எடுக்கப்படும் விலையுர்ந்த வெள்ளைப் பிசின் அல்லது பசை என்பதாக இருந்தது. இது செல்வந்தர்கள் தங்கள் இல்லங்களை நறுமணத் தினால் நிறைப்பதற்கு எரிக்கப்பட்டது. வெள்ளைப்போளம் என்பது தூபவர்க்கம் போலவே உண்டாக்கப்படுவதாக இருந்தது; இதுவும் சுகந்த வாசனையைக் கொண்டிருந்தது, ஆனால் அடிப்படையில் இது இறந்தவர் களின் உடல்களைப் பதப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது.*

*அவர்களின் பணி நிறைவேறியது, அந்த சாஸ்திரிகள் தங்கள் இல்லம் திரும்பத் தொடங்கினார்கள். "அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போக வேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த் திரும்பிப் போனார்கள்" (வ. 12).*

***எகிப்திற்குத் தப்பியோடுதல் (மத். 2:13-15)***

*ஏரோதின் மறுசெயலை எதிர்நோக்கிய கர்த்தர், யோசேப்பு தமது குடும்பத்தை அழைத்துக் கொண்டு எகிப்திற்குச் செல்ல வேண்டும்[32] என்று கூறுவதற்கு அவரிடத்திற்கு ஒரு தூதனை அனுப்பினார். மீண்டும் ஒருமுறை யோசேப்பு தயங்காதிருந்தார். ஒரு நூறு மைல்கள் பயணமானது அந்தக் குடும்பத்தை எகிப்து நாட்டின் எல்லைக்குக் கொண்டு சேர்க்கும். கரடு முரடான வனாந்தரத்தில் சீனாயின் வழியாக இன்னொரு நூறு மைல்கள் பயணமானது அவர்களை நைல் நதியின் அருகில் கொண்டு வந்து சேர்க்கும். அவர்கள் தங்கள் சக நாட்டவர்களை அங்கு கண்டிருப்பார்கள், ஏனெனில் பல யூதர்கள் அலெக்சந்திரியாவிலோ[33] அல்லது எகிப்தின் வேறிடங்களிலோ குடியமர்ந்திருந்தார்கள்.*

*யோசேப்பும் மரியாளும் இயேசுவும் எகிப்தில் எவ்வளவு நாட்கள் தங்கியிருந்தார்கள் என்று நாம் அறிவதில்லை. அது ஒரு சில மாதங்களாய் இருக்கக் கூடும். அவர்கள் அங்கிருந்தபோது, வாழ்வதற்கு என்ன செய்திருப்பார்கள்? ஒருவேளை யோசேப்பு அங்கு ஒரு தச்சராக வேலை செய்திருப்பார் - ஆனால் பொன், தூபம் மற்றும் வெள்ளைப்போளம் என்ற பரிசுகளை மறவாதீர்கள். இந்த வேளையில் தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அயல்நாட்டுத் தூதுவர்களைப் பயன்படுத்தியிருந்தார்.*

***அறியாக் குழந்தைகள் கொல்லப்படுதல் (மத். 2:16-18)***

*ஏரோது, சாஸ்திரிகள் தன்னிடத்தில் தான் விரும்பிய தகவல்களைக்*

*கொண்டு வரத் திரும்பாதபோது உக்கிரகோபம் அடைந்தான். அவன் தனது அரியணைக்கு ஏற்படக் கூடிய சாத்தியமான போட்டியாளர்கள் யாவரையும் நீக்கிப்போடும் பித்தம் பிடித்த முயற்சியில், பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இருந்த "இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான்" (வ. 16).[34] "அவன் கூட்டினுள் தனது பட்டயத்தைச் செருகினான், ஆனால் பறவை பறந்து சென்றிருந்தது" என்று கூறப்படுகிறது.[35]*

*பெத்லகேம் ஒரு பெரிய நகரம் அல்ல, எனவே கொல்லப்பட்ட குழந்தைகள் சிறிய எண்ணிக்கையில் தான் இருந்திருக்கும் (பன்னிரெண்டு முதல் ஐம்பது வரை எண்ணிக்கை இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது). இருந்தபோதிலும், ஏரோதின் இதயமற்ற செயலானது நூற்றுக்கணக்கான இருதயங்களை உடைந்துபோகச் செய்தது. இந்தத் துன்பத்தை மத்தேயு எருசலேமின் வீழ்ச்சிக்காக ஏற்பட்ட புலம்பலுடன் ஒப்பிட்டார் (வ. 17, 18[36]).*

*சிலர் "தேவன் இயேசுவைக் காப்பாற்றியது போல் அந்தப் பிள்ளைகளையும் ஏன் காப்பாற்றவில்லை?" என்று கேட்கின்றார்கள். தேவன் மனிதர்களைச் சுயாதீனமாக ஒழுக்கத்தைத் தேர்ந்துகொள்ளும் முகவர்களாக ஏற்படுத்தியுள்ளார் என்பதை நினைவில் வையுங்கள். இவ்விதமாக அவர் ஏரோதை ஏரோதாக இருக்க அனுமதித்தார். ஆயினும், மனிதர்களின் செயல்கள் கடைசியில் தேவனுடைய நோக்கங்களைத் தோற்கச் செய்யும் என்னும்போது, அவர் அந்தச் செயல்பாடுகளை ஒன்றுமற்றதாக்குவார் என்பது பற்றி நாம் நிச்சயமாய் இருக்க முடியும். பெத்லகேமின் குழந்தைகள் மரணம் அடைந்தனர் என்பது உலகத்தின் இரட்சிப்புக்காக[37] இயேசுவின் மரணம்[38] என்ற அவரது திட்டத்தை ஒன்றுமற்றதாக்குவதில்லை. நாம் ஒன்றுமறியாத அந்தப் பிள்ளைகளின் மரணம் குறித்து துக்கப்படுவது போலவே, இம்மானுவேலின் தப்புவித்தலைக் கொண்டாடுவோமாக!*

### *நாசரேத்தூருக்குத் திரும்புதல் (மத். 2:19-23; லூக். 2:39ஆ)*

*ஏரோது மரித்த பின்பு, யோசேப்பினிடத்தில் ஒரு தூதன் வந்து, "நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்துக்குப் போ; பிள்ளையின் பிராணனை வாங்கத் தேடினவர்கள் இறந்துபோனார்கள்" (மத். 2:20) என்று கூறினார். யூதேயாவில் ஏரோதுவின் மகன் அர்க்கெலாயு என்பவன் ஆண்டுகொண்டிருந்ததைக் கேள்விப்படும் முன்பு, யோசேப்பு பெத்லகேம் ஊருக்குத் திரும்பிச் செல்லவே நோக்கம் கொண்டிருந்தார் (2:22). அர்க்கெலாயு தன் தகப்பனைப் போலவே கொடுமைக்காரனாக இருந்தவன் என்று பெயர் பெற்றிருந்தான்.[39]*

*ஆகையால் அவர்கள் யூதேயாவைத் தவிர்த்து (வ. 22) கலிலேயாவில் இருந்த தங்கள் சொந்த ஊரான நாசரேத்தூருக்குப் பயணப்பட்டார்கள். பெத்லகேமுக்குச் செல்ல எகிப்தில் இருந்து புறப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேல் ஆகியிருந்தது; இப்போது அவர்கள் மறுபடி திரும்பி வந்திருந்தார்கள் (மத். 2:23; லூக். 2:39ஆ). நாசரேத்தூருக்குத் திரும்பி வருதல் என்பதும் தேவனுடைய திட்டத்தின் பகுதியாகவே இருந்தது (மத். 2:23[40]).*

# ஒரு பாலகன் ஆயத்தமானார்
# (லூக். 2:40-52)

*இயேசுவின் வரலாற்றின் இந்த இடத்தில், கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்தல் என்பது சுவிசேஷ எழுத்தாளர்களின் நோக்கமல்ல என்பது தெளிவாகிறது. இயேசுவின் வாழ்வின் அடுத்த இருபத்தியெட்டு அல்லது அதற்குச் சற்றேக் குறையச் சமமான ஆண்டுகள் பற்றி எதை யேனும் பதிவு செய்தவர் லூக்கா மட்டுமே, அவர் ஒரே ஒரு நிகழ்ச்சியின் மூலம் மட்டுமே இத்தகவலைப் பகிர்ந்து கொள்ளுகின்றார்.*[41]

### இயேசுவின் முதல் பன்னிரெண்டு ஆண்டுகள் (வ. 40)

*இயேசு முற்றிலும் தேவனாக இருந்தார், ஆனால் அவர் முற்றிலும் மனிதராகவும் இருந்தார். இவ்விதமாக அவர் எல்லாப் பையன்களும் வளருவது போன்றே - அல்லது, குறைந்தபட்சம் எல்லாப் பையன்களும் வளர வேண்டியது போன்றே வளர்ந்தார்: "பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது, தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது'' (வ. 40; லூக். 1:80ஐயும் 1 சாமு. 2:26ஐயும் ஒப்பிடவும்).*

*பிள்ளைப் பிராயத்திலிருந்து வயது வந்த பருவத்திற்கு நாம் வளருகையில், நாம் யாவரும் அனுபவிப்பவற்றை இயேசுவும் அனுபவிக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாயிருந்தது என்பது தெளிவு (எபி. 4:15). இயேசு தமது அவசியமான தெய்வீகத்துவத்தை "தம்மையே வெறுமையாக்கி''க் கொண்டதுமல்லாமல் (பிலி. 2:6, 7), அவர் எல்லாம் அறிந்த தன்மை போன்ற தமது தெய்வீகத் தனிச்சிறப்புகளிலிருந்தும் தம்மை வெறுமையாக்கினார் (மாற். 13:32ஐக் காணவும்).*

*இயேசுவின் முதல் வார்த்தைகள், அவரது முதல் அடிவைப்புகள், நாசரேத்தூரில் இருந்த ஒரு தாழ்மையான இல்லத்தில் அவரது தொடக்க நாட்கள், அந்த வீட்டில் மற்ற குழந்தைகள் பிறந்தபோது அவரது பதில் செயல் ஆகியவை பற்றி அறிய நான் விரும்புகின்றேன். ஆயினும், நீங்களும் நானும் வளர வேண்டிய வகையிலேயே இயேசுவும் வளர்ந்தார் என்று நாம் அறிதலே போதுமானதென்று தேவன் நினைத்தார்.*

### இயேசுவுக்குப் பன்னிரெண்டு வயதானபோது (வ. 41-50)

*இயேசு வடிவமைக்கப்பட்டிருந்த ஆண்டுகளின் மீதுள்ள திரையை - அவருக்குப் பன்னிரெண்டு வயதானபோது நடந்த ஒரு நிகழ்ச்சியின்போது மாத்திரம் - லூக்கா ஒரே ஒரு தரம் இழுத்து விட்டார். யூதப் பையன்களின் வாழ்வில் பன்னிரெண்டு வயது என்பது தனிச்சிறப்பான மைல்கல்லாக உள்ளது: அந்த வயதில் அவன் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ள தொடங்குவான்; அவன் "நியாயப்பிரமாணத்தின் மகன்'' என்று அழைக்கப்படுவான்; அவன் ஜெப ஆலயத்தில் பெரியவர்களுடன் அமரத் தொடங்குவான். இயேசுவுக்குப் பன்னிரெண்டு வயதானபோது, யோசேப்பும் மரியாளும் அவரை, பிரதானமான மூன்று பண்டிகைகளில் மிகவும் பரிசுத்தமான*

*பஸ்கா என்ற பண்டிகைக்கு அழைத்துச் சென்றார்கள்.*

*யோசேப்பும் மரியாளும் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், அவர்கள் இயேசுவைத் தவற விட்டுவிட்டார்கள். பெரும் கலக்கம் தாக்கப்பட்டவர்களாய், அவர்கள் எருசலேமுக்குத் திரும்பி வந்து அவரை தேடத் தொடங்கினார்கள்.*

> *மூன்று நாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர் பேசக்கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள் (வ. 46, 47).*

*இந்தக் காட்சியைத் தவறாக விளக்கப்படுத்தாதீர்கள். இயேசு அங்கு வகுப்பு நடத்திக் கொண்டிருக்கவில்லை; அவர் போதகர்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கவில்லை. போதகர்களும் மாணவர்களும் கேள்விகளைக் கேட்டு அவற்றிற்குப் பதில் அளித்தல் என்பது அன்றைய நாட்களின் தனி வகையான மத வகுப்பாக இருந்தது. (இன்றைய நாட்களில் நாம் அதை கலந்துரையாடல் வகுப்பு என்று அழைக்கின்றோம்.) பன்னிரெண்டு வயதே உடைய ஒரு பையன் ஆவிக்குரிய உண்மை நிலைகளில் அவ்வளவு அதிக ஆர்வம் கொண்டிருந்ததும் ஆவிக்குரிய கொள்கைகளை அவ்வளவு சரியாகப் புரிந்துகொண்டிருந்ததுமான உண்மையில் [அவர்களின்] திகைப்பு மையங்கொண்டிருந்தது.*

*அவர்கள் இயேசுவைக் கண்டுபிடித்தபோது, மரியாளின் உணர்வு வெளிப்பாடானது எந்த ஒரு தாயினுடைய பதில்செயல் போன்றும் தனிச் சிறந்ததாகவே இருந்தது - நிம்மதியடைந்த அதே வேளையில் உணர்வுக் கிளர்ச்சியும் அடைந்தார். "... அவருடைய தாயார் அவரை நோக்கி: 'மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே' என்றாள்" (வ. 48). இயேசு உண்மையிலேயே புதிர் போடுகிறவராகக் காணப்படுகின்றார்: "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார்" (வ. 49).*

*இவைகள்தான் இயேசு கூறியதாகப் பதிவுசெய்யப்பட்ட முதல் வார்த்தைகளாக உள்ளன. மூலவசனத்தில் இந்த வார்த்தைகள், "நான் என் பிதாவின் விஷயங்களில் இருக்க வேண்டும்"[42] என்ற நேரடியான அர்த்தம் தருகிறது, ஆனால் அவை என்ன "விஷயங்கள்" என்று குறிப்பிடப்படவில்லை. KJV யில் "என் பிதாவின் பணிகள்" என்றுள்ளது [தமிழில் இது "என் பிதாவுக்கடுத்தவைகள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது]. ஹியூகோ மெக்கார்டு அவர்களின் மொழிபெயர்ப்பில், "என் பிதாவின் நடவடிக்கைகள்" [my father's affairs][43] என்றுள்ளது. மொழிபெயர்ப்பு எதுவாயிருப் பினும், இயேசு தமது பன்னிரெண்டு வயதிலேயே தமது தெய்வீக ஊழியம் பற்றிய கருத்துணர்வு கொண்டிருந்தார் என்பது தெளிவு.*

*இந்த உட்கண்ணோட்டமானது இயேசுவுக்குள் ஒரு மின்னல் கீற்றுப் போல திடீரென்று வந்ததா? அல்லது இது ஒரு புதிய நாளின் உதயம் போலப்*

படிப்படியாக வந்ததா? இயேசு தமது பன்னிரெண்டு வயதில் தமது ஊழியம் பற்றிய முழுமையான புரிந்துகொள்ளுதலைக் கொண்டிருந்தாரா அல்லது ஒரு பகுதியை மட்டும் புரிந்துகொண்டிருந்தாரா? இந்தக் கேள்விகளுக்கு நாம் நிச்சயத்தன்மையுடன் பதில் அளிக்க இயலாது, ஆனால் இயேசு தமது பன்னிரெண்டு வயதில், தாம் இருக்க வேண்டிய முறைப்படியான மனிதராகும் வழியில் இருந்தார் என்று நாம் கூற முடியும்.

***அடுத்த பதினெட்டு ஆண்டுகள் (வ. 51, 52)***

இயேசுவின் தெய்வீக அந்தஸ்தைப் பற்றிய அவரது புரிந்துகொள்ளுதலின் வெளிச்சத்தில், அடுத்த வசனமானது திகைக்கச் செய்வதாக உள்ளது: "பின்பு அவர் அவர்களுடன் போய், [இவ்விடத்தில் ஆங்கில வேதாகமத்தில் went down[44] என்றுள்ளது] நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் ..." (வ. 51). எந்த குழந்தையாவது எப்போதாவது தன் பெற்றோருக்குக் கீழ்ப்படியாமலிருப்பதில் நியாயப்படுத்தப்பட்டிருக்க முடியுமென்றால் அது இயேசுவாகவே இருந்திருக்க வேண்டும் - ஆனால் அவர், பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் என்பது விருப்பத் தேர்வாக இருந்ததில்லை என்பதை அறிந்தார் (யாத். 20:12; எபே. 6:1-3ஐக் காணவும்).

இயேசுவின் வாழ்வில் அடுத்து வந்த பதினெட்டு ஆண்டுகளை மறைக்கும் வகையில் திரை மீண்டும் இழுக்கப்படுகிறது. வேத வசனங்கள், அந்த ஆண்டுகளைப் பற்றிய ஒரு சில குறிப்புகளை மாத்திரம் நமக்குத் தருகின்றன. இயேசு ஒரு பெரிய குடும்பத்தில் வளர்ந்து வந்தார்: அவர் குறைந்தது இரண்டு சகோதரிகளையும் நான்கு சகோதரர்களையும் கொண்டிருந்தார் (மத். 13:55, 56; மாற். 6:3).[45] அவர் யோசேப்பிடமிருந்து தச்சுத் தொழிலைக் கற்றுக் கொண்டார் (மத். 13:55; மாற். 6:3). இயேசு "அப்பா" (மாற். 14:36) என்ற வார்த்தையை - "தந்தை" என்று அர்த்தப்படுகிற பாசம்மிகுந்த சொற்றொடரை - பயன்படுத்தியதென்பது அவர் யோசேப்புடன் ஒரு உள்ளன்பான உறவு கொண்டிருந்தார் என்பதை சுட்டிக் காட்டலாம். யோசேப்பு மரித்தபோது,[46] இயேசு குடும்பத்தின் மூத்தமகன் என்ற வகையில் குடும்பத்தின் அடிப்படை ஆதரவு தரும் பொறுப்பை மேற்கொண்டிருந்திருப்பார். இயேசு வேத வசனங்களை[47] ஒருவேளை ஒரு ஜெப ஆலய பள்ளியிலும் நிச்சயமாகவே ஜெப ஆலய ஊழியங்களில் கற்றறிந்தார்:[48] அவர் ஜெப ஆலயத்திற்குத் தவறாமல் சென்றார் (லூக். 4:16). கவனித்தல்கள் மற்றும் யூகங்கள் பற்றிய இந்தப் பட்டியலுடன் நாம் இயேசுவின் இளம் பிராயம்[49] பற்றியும் செய்திகளைக் கூட்ட இயலும், ஆனால் அந்த ஆண்டுகளைப்பற்றி வேத வசனங்கள் கூறுகின்ற யாவும் லூக்கா 2:52ல் காணப்படுகிறது: "இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்."

இயேசுவின் வளர்ச்சியானது (நம்முடைய வளர்ச்சி இருக்க வேண்டிய பிரகாரமாக) நான்கு மடங்கு கொண்டிருந்தது: அவர் மனரீதியாகவும் ("ஞானத்தில்"), உடல்ரீதியாகவும் ("வளர்த்தியிலும்"), சமூகரீதியாகவும் ("மனுஷர் தயவில்"), மற்றும் ஆவிக்குரிய வகையிலும் ("தேவ கிருபையில்")

வளர்ந்தார். அவரது வளர்ச்சியானது (நம்முடையது போன்றே) சுலபமான தாக இருந்ததில்லை: "அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கக் கூட்டுவார்த்தையானது "நோக்கி" என்று அர்த்தப்படும் முன்னிடைச் சொல்லுடன் "வெட்டுதல்" என்று அர்த்தப் படும் சொல் இணைந்து வரும் கூட்டுச் சொல்லாக உள்ளது. இது "ஒரு வழிமுறை நோக்கி வெட்டப்படுதல்"[50] என்ற நேரடியான அர்த்தமுள்ள தாகும். ஒரு கண்டுபிடிப்பாளர் முன்னேறிச் செல்வதற்காக கனத்த ஒரு புதரினூடே தமது வழியை வெட்டிச் சுத்தப்படுத்திச் செல்லுதல் என்பது இவ்விடத்தில் மனதிற்கு வரும் ஒரு விவரிப்பாக உள்ளது. இயேசு அந்த வழியை எவ்வளவு வெற்றிகரமாக வெட்டி முடித்தார் என்பது, அவரது வெளிப்படையான ஊழியம் பற்றிய நமது ஆய்வைத் தொடங்குகையில் நமது அடுத்த பாடத்தில் தெளிவாகும்.

## முடிவுரை

ஒரு பாலகன் பிறப்பார் என்று ஏசாயா வாக்குறுதியளித்திருந்தார் (ஏசா. 9:6). பாலகன் பிறந்து பின்பு தேவனால் பாதுகாக்கப்பட்டு ஆயத்தம் செய்யப்பட்டதில், அந்த வாக்குறுதி நிறைவேறிற்று என்று நாம் கண்டோம். வரலாற்றின் ஒவ்வொரு சந்திப்பிலும் தேவன் உறுதியாகக் கட்டுப் படுத்தியிருந்தார் என்பதை நாம் வலியுறுத்த முயற்சி செய்தோம்.

இயேசுவின் வாழ்வில் முதல் முப்பது ஆண்டுகளை நாம் விரைவாக மறுகண்ணோட்டம் இட்டுள்ளோம். இயேசுவைத் தயார்ப்படுத்தத் தேவன் ஏன் முப்பது ஆண்டுகளை எடுத்துக் கொண்டார் - இயேசு ஏன் தமது ஊழியத்தை முன்னதாகவே தொடங்காதிருந்தார் - என்று சிலர் வியப்படைகின்றார்கள். B.S. டீன் அவர்கள், "பண்பு என்பது உலகின் மிக இன்றியமையாத தேவையாக உள்ளது; தயாரிப்பின் எந்த ஒரு ஆண்டும் நாசரேத்தூரின் மறைவிலிருந்து வந்த இப்படிப்பட்ட மனிதத்துவத்தை உருவாக்குவதில் வீணாக்கப்படவில்லை" என்று கூறினார்.[51] இயேசு தமது பிந்திய ஆண்டுகளில் வெளிப்படையான ஊழியத்தின் மும்முரத்தில் தீவிரமாய் இருந்தது போலவே, தயாரிப்பின் அமைதியான ஆண்டுகளிலும் அவர் "தமது பிதாவுக்கு அடுத்தவைகளில்" தீவிரமாய் இருந்தார். எந்த ஒரு மாபெரும் பணிப்பொறுப்புக்கும் தயாரிப்பு என்பது அவசியமானதாக உள்ளது. அதை இகழாதீர்கள்; அதைப் புறக்கணிக்காதீர்கள்.

## குறிப்புகள்

மீண்டுமாக, ஒவ்வொரு தனித்தனி வேத பாடப் பகுதியும் தன்னை பிரசங்கத்துவ நடத்துதலுக்கு ஒப்புவித்துள்ளது. இந்தப் பாடத்தின் குறிப்புகளில் பல கருத்துக்களும் ஆதார மூலங்களும் கண்டறியப்பட முடியும். இங்கு கூடுதலான சில கருத்துக்கள் தரப்படுகின்றன.

யோசேப்பு மற்றும் மரியாளின் பண்புகளைப் பற்றிய படித்தல் ஒன்றை நீங்கள் மேற்கொள்ள முடியும். இந்தத் தனிநபர்கள் இருவர் மீதுமான

*பிரசங்கத் தொடக்கங்கள் சிலவற்றை நீங்கள் இதற்கு முந்திய பாடங்களான மரியாளைப் பற்றிப் பிரசங்கித்தல் மற்றும் யோசேப்பைப் பற்றிப் பிரசங்கித்தல் என்ற பாடங்களில் காண முடியும்.*

*இயேசுவின் பிறப்பைப் பற்றி பல பிரசங்கங்கள் பிரசங்கிக்கப் பட்டுள்ளன. கிறிஸ்துவின் இடர்ப்பாடுகள் என்ற புத்தகத்தில் கிறிஸ்து பிறப்பின் அர்த்தம் மற்றும் தனிச்சிறப்புகள் பற்றிய மூன்று அத்தியாயங்கள் அடங்கியுள்ளன.*[52]

*சத்திரத்தில் கிறிஸ்துவுக்கு இடமில்லாதிருந்தது (லூக். 2:7) என்ற சிந்தனையுடன் தொடங்கும் ஒரு பிரசங்கமாக "கிறிஸ்துவுக்கு இடமில்லை" என்ற ஒரு பிரசங்கம் கடந்த காலத்தில் ஒரு பிரபலமான பிரசங்கக் கருத்தாக இருந்தது. அது அப்பொழுது, இன்றைய நாட்களில் கிறிஸ்துவுக்கு சிறிய இடம் உள்ளது அல்லது இடமே இருப்பதில்லை என்று வலியுறுத்திற்று: பொதுவாக, உலகத்தில், பல இல்லங்கள் மற்றும் திருமணங்களில், பொழுதுபோக்கு வட்டாரங்களில், அரசியல், வர்த்தகம் மற்றும் தனிநபர் களின் இருதயங்கள் ஆகியவற்றில் அவருக்கு இடமில்லாதிருப்பதை அது வலியுறுத்திற்று. கென் கையர் அவர்களால் உரைக்கப்பட்ட ஒரு ஜெபம் இந்த எடுத்துரைப்பை முடிப்பதற்கு நல்லதொரு வழிமுறையாயிருக்கக் கூடும்: "அன்பான இயேசுவே, சத்திரத்தில் உமக்கு இடம் இல்லாதிருந்த போதும், இன்று நான் எனது இருதயத்தில் உமக்கு தாராளமாய் இடம் அளிக்க அருள் தாரும்."*[53]

*மேய்ப்பர்களுக்குத் தூதன் கூறிய இருதயத்தை அசைக்கும் வார்த்தைகள் பல பிரசங்கங்களுக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.*

*இயேசு தமது பன்னிரெண்டு வயதில் தேவாலயத்திற்குச் சென்றது பற்றிப் பல பிரசங்கங்கள் பிரசங்கிக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளுக்கு முன்பு அடிக்கடி பயன்படுத்தப்பட்ட ஒரு கருத்தான "காணாமற்போன கிறிஸ்து" என்பதில் பின்வரும் மூன்று கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன: (1) மரியாளும் யோசேப்பும் இயேசுவைத் தவற விட்டார்கள் - மற்றும் இன்றைய நாட்களில் பலர் இயேசுவைத் தவற விடுகின்றார்கள். (ஒன்று அவர்கள் அவரை எங்கு காண்பது என்று அறியாதிருக்கின்றார்கள் அல்லது அவர்கள் அவரைப்பற்றி அக்கறைப்படுவதில்லை.) (2) யோசேப்பும் மரியாளும் அவரைக் கண்டறிவதற்காகத் தவறான இடங்களில் (உதாரண மாக தங்கள் உறவினர்கள் மத்தியில்) தேடினார்கள் - இன்றைய நாட்களி லும் மக்கள் அவரைத் தவறான இடங்களில் தேடுகின்றார்கள். (3) கடைசி யில் அவர்கள் அவரைத் தேவனுடைய வீட்டில் (இங்குதான் அவர்கள் முதலாவது சென்று பார்த்திருக்க வேண்டும்) கண்டுபிடித்தார்கள் - மற்றும் இன்றைய நாட்களில் சபையே தேவனுடைய வீடாக உள்ளது (1 தீமோ. 3:15).*

*இயேசு எவ்வாறு வளர்ந்தார் என்ற விவரிப்பு (லூக். 2:52), நாம் ஒவ்வொருவரும் எப்படி வளருதல் அவசியம் என்பதற்கு நான்கு கருத்துக்கள் கொண்ட வேத வசனப் பிரசங்கத்திற்கு ஒரு அடிப்படையைத் தர முடியும். நீங்கள் இளைஞர்களிடத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்*

தால், லூக்கா 2:52ன் அடிப்படையில் அமைந்த வில்லியம் டேன்ஃபோர்த் அவர்களின் *I Dare You!* என்ற புத்தகத்தின் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்ள விரும்பலாம்.[54] இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்கென்று வடிவமைக்கப்பட்ட "மிகச் சிறந்தவர்களாயிருங்கள்!" என்ற ஒரு பிரசங்கத்தில் நான் அந்தப் புத்தகத்திலிருந்து பின்வரும் கருத்துக்களைப் பயன்படுத்தியுள்ளேன்: (1) உடல் ரீதியாக உங்களால் முடிந்த அளவுக்கு மிகச் சிறந்தவர்களாயிருங்கள்; (2) மனரீதியாக உங்களால் முடிந்த அளவுக்கு மிகச் சிறந்தவர்களாயிருங்கள்; (3) சமூக ரீதியாக உங்களால் முடிந்த அளவுக்கு மிகச் சிறந்தவர்களாயிருங்கள்; (4) ஆவிக்குரிய வகையில் உங்களால் முடிந்த அளவுக்கு மிகச் சிறந்தவர்களாயிருங்கள்.

இயேசு தமது வெளிப்படையான ஊழியத்தைத் தொடங்குமுன்பு அவர் ஆயத்தப்படுத்தப்பட்ட முப்பது அல்லது அதற்குச் சற்றேக் குறைய இருந்த ஆண்டுகள், "மறைவாக ஊழியம் செய்தல்" என்ற பிரசங்கத்திற்கு ஒரு அடிப்படையாக உதவ முடியும். இயேசு பின்தொடர்ந்த ஆண்டுகளில் செய்தது போலவே, அந்த ஆண்டுகளிலும் தேவனுக்கும் மனிதருக்கும் ஊழியம் செய்தார் என்பது நிச்சயம். நம்மில் ஒவ்வொருவரும், நம்மை எவரும் கவனிக்காதபோதும், நம்மை எவரும் பாராட்டாதபோதும் ஊழியம் செய்யக் கற்றுக்கொள்வது அவசியமாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]மரியாள் பரலோகத்திலிருந்து தம்மைப் பார்க்க வந்தவர் பற்றிய செய்தியை இவருடன் [யோசேப்புடன்] பகிர்ந்து கொண்டாரா இல்லையா என்பது பற்றி நாம் அறிவதில்லை; ஆனால் இவர் அவ்வாறு பகிர்ந்து கொண்டிருப்பினும் அது நம்புவதற்குக் கடினமானதாகவே காணப்பட்டிருக்கும். [2]NASB வேதாகமத்தின் எனது பிரதியில் "அவளைத் தள்ளிவிட": "அவளை விவாக ரத்துச் செய்ய" என்ற இந்த பக்க ஓரக்குறிப்பு உள்ளது. [3]சட்டப்படி, தள்ளுதற் சீட்டை எழுதிக் கொடுத்தல் என்பது இரண்டு அல்லது அதற்கும் அதிகமான சாட்சிகளின் முன்னிலையில் செய்யப்பட வேண்டியதாக இருந்தது. கணவர் விரும்பினால், அந்தச் சடங்கானது மிகவும் வெளியரங்கமாய் செய்யப்பட்டு மனைவிக்கு சிறுமையை அளிப்பதாக இருக்க முடியும். யோசேப்பு இதைத் தவிர்க்க விரும்பினார்: "... அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், [அவன்] இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்" (மத். 1:19). [4]பிற ஆழ்ந்த சிந்தனைகளுக்கு மத்தியில், ஒருமுறை இவர் மரியாளுக்குத் தள்ளுதற் சீட்டைக் கொடுத்துவிட்டால், மரியாள் இவருக்கு என்றென்றைக்கும் இழந்துபோகப்பட்டவராக இருப்பார் (உபா. 24:2-4). [5]மரியாள் "ஒரு மகனைப் பெற்ற" பின்பு யோசேப்பும் மரியாளும் திருமணமான தம்பதிகள் என்ற வகையில் பாலுறவு கொண்டார்கள் என்பதே இதற்கு முன்வரும் வார்த்தைகளை விளக்கப்படுத்துவதற்கு இயற்கையான மற்றும் சாதாரணமான வழிமுறையாக உள்ளது. [6]இயேசு பிறந்தபோது மரியாள் கன்னியாக இருந்தார் என்ற உண்மைக்கு ஆதாரமான இன்னொரு வசனப்பகுதியாக இது உள்ளது. கன்னியிடமிருந்து பிறத்தல் என்பது பற்றி "கிறிஸ்து வருகின்றார்!" என்ற பாடத்தில், ''மரியாளுக்கு வாக்குத்தத்தம்'' என்ற உட்தலைப்பில் காணவும். [7]''பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் எவ்வாறு நிறைவேறின" என்ற பாடத்தில் காணவும்.

[8]KJVயில் "Emmanuel" என்றுள்ளது, இது "Immanuel" என்பதை உச்சரிக்கும் இன்னொரு வழிமுறையாகும். [9]இது திரு அவதாரம் பற்றிய இன்னொரு உறுதிப்பாடாக உள்ளது. "கிறிஸ்து வருகின்றார்!" என்ற பாடத்தில் திரு அவதாரம் பற்றிய குறிப்புகளைக் காணவும். [10]J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 26.

[11]KJVயில் "taxed" என்றுள்ளது, ஆனால் கிரேக்க வசனப்பகுதியானது ஒரு கணக்கெடுத்தலைச் சுட்டிக் காண்பிக்கிறது. NKJVயில் "registered" என்றுள்ளது. [12]வசனம் 2ஐக் குறித்தும் மற்றும் இந்தக் கணக்கெடுப்புக் குறித்தும் "கிறிஸ்து எப்போது பிறந்தார்?" என்ற பாடத்தில் காணவும். [13]பழைய ஏற்பாட்டில் பெத்லகேம் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி. 48:7; ரூத் 1:22), ஆனால் இது அடிப்படையில் தாவீதின் இல்லம் இருந்த ஊர் என்று அறியப்படுகிறது (1 சாமு. 16:1; 17:12; 20:6). [14]ரோமாபுரி வலியுறுத்தியிராவிட்டால், யோசேப்பு இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்க மாட்டார் என்றும் மற்றும் இயேசு பெத்லகேமில் பிறப்பது அவசியம் என்று தேவன் யோசேப்புக்கும் மரியாளுக்கும் கூறவில்லை என்றும் இந்த வேத வசனப்பகுதி மறைமுகமாக உணர்த்துகிறது. ஆகையால் இந்தப் பயணத்தை மேற்கொள்வதில் மரியாள் வேறு சில நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். [15]யோசேப்பு ஏற்கனவே மரியாளைத் தமது "மனைவியாகக் கொண்டிருந்தார்" என்று மத்தேயு சுவிசேஷ விவரம் நமக்குக் கூறுகிறது (மத். 1:24) - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் திருமணம் வைபவத்தை முடித்திருந் தார்கள். ஆயினும், திருமண உறவு பூர்த்தியாகாத வரையிலும் திருமணம் உண்மை யில் "முறைப்படியானதாக" ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இவ்விதமாக லூக்கா சுவிசேஷ விவரமானது, யோசேப்பும் மரியாளும் இன்னமும் நியமிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தார்கள் என்று ஒரு கருத்தமைவில் சுட்டிக் காண்பிக்கிறது (லூக். 2:5). [16]பெத்லகேமுக்குச் செல்லும் பயணிகளிடத்தில், இயேசு பிறந்த இடம் என்று தரைக்குக் கீழே உள்ள குகையொன்று சுட்டிக் காண்பிக்கப்படுகிறது. பிள்ளை ஒரு முன்னணையில் கிடத்தப்பட்டது என்று மட்டும் நம் எல்லாருக்கும் கூறப்பட்டுள்ளது. இந்த உணவுத்தொட்டியானது நகரத்தின் எந்த இடத்திலும், திறந்த வெளியில் கூட இருந்திருக்கலாம். [17]இயேசுவின் பிறப்பானது அவரது மரணம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை விட அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தது என்று நான் கருத்துத் தெரிவிப்பதில்லை. "முக்கியத்துவம் வாய்ந்த கணம்" என்பதின் மூலம் நான், எனவே நமது பாவங்களுக்கு விலை செலுத்துவதற்காகத் தேவன் மாம்சத்தில் வந்த நிகழ்வையே குறிப்பிடு கின்றேன். [18]"முதற்பேறான" என்ற சொற்றொடரானது பல்வேறு வழிமுறைகளில் பயன்படுத்தப்பட முடியும் (எபி. 1:6); ஆனால் லூக்கா 2ன் சந்தர்ப்பப் பொருளில், வசனம் 7ல் உள்ள "முதற்பேறான" என்பது சாதாரண, வழக்கமான அர்த்தத்தின்படி மரியாள் மற்ற பிள்ளைகளையும் பெற்றெடுத்தார் என்று சுட்டிக்காண்பிக்கிறது. [19]பரலோக சேனையின் பின்தொடரும் வார்த்தைகளும் கூட பரவலாக அறியப்பட்டும் நேசிக்கப்பட்டும் உள்ளன (வ. 14). "சமாதானம்" என்பது (KJV சுட்டிக்காட்டுவதாகக் காணப்படும்) எல்லா மனிதர்களுக்கும் குறிப்பிடப்படாமல், "தேவன் பிரியப்படுகின்ற மனிதர்களுக்கு" மட்டும் குறிப்பிடப்படுகிறது. [20]வசனம் 19ஐக் கவனிக்கவும்: "மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனை பண்ணினாள்." இந்த வசனமும் 2:51ன் நிறைவுப் பகுதியும் சேர்ந்து, மரியாள் தமது சிந்தனையைப் பின்னாட்களில் லூக்காவுடன் பகிர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்று பலரை நினைக்கச் செய்துள்ளது.

[21]சிலுவையில் இயேசுவின் மரணமே பழைய ஏற்பாட்டுக் காலத்தின்

முடிவையும் (கொலோ. 2:14) புதிய ஏற்பாட்டுக் காலத்தின் தொடக்கத்தையும் (எபி. 9:16, 17) அடையாளப்படுத்திற்று என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. [22]யோசேப்பும் மரியாளும், ஏழைகள் கொடுக்கும்படி அனுமதிக்கப்பட்டிருந்த பலியைச் செலுத்தினார்கள். "தேவன் மரியாளைத் தேர்ந்தெடுத்தது ஏன்?" என்ற பிரசங்கத்தின் அடிக்குறிப்பு எண் 2ஐக் காணவும். [23]தீர்க்கதரிசி என்பவர் கர்த்தருக்காக ஏவுதலுடன் பேசுபவராயிருந்தார். தீர்க்கதரிசினி என்பவர் ஒரு பெண் தீர்க்கதரிசியாயிருந்தார். ஏவுதலின் நாட்களில் கூட தீர்க்கதரிசினிகள் என்பவர்கள் அசாதாரணமானவர்களாகவே இருந்தார்கள். பழைய ஏற்பாட்டில் தெபொராள் ஒரு தீர்க்கதரிசினியாக இருந்தாள் (நியா. 4:4). [24]லூக்கா 2:39ன் நிறைவுப் பகுதியானது, "அவர்கள் ... கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள்" என்று கூறுகிறது. இது, இவர்கள் தங்கள் உடமைகளையும் யோசேப்பின் கருவிகளையும் எடுத்து வருவதற்காக நாசரேத் தூருக்குத் திரும்பிச் சென்ற ஒரு பயணத்தைக் குறிப்பதாயிருக்க முடியும், இதற்குப் பின்பு இவர்கள் பெத்லகேமுக்குத் திரும்பி வந்தார்கள். இப்படிப்பட்ட பயணம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கலாம், ஆனால் 2:39ல் லூக்காவின் வார்த்தைகள், இவர்கள் நாசரேத்தூருக்கு வந்து அங்கேயே தங்கியிருந்தார்கள் என்று குறிப்பிடு வதாகவே காணப்படுகிறது. இந்த இடத்தில் லூக்கா தாம் கூறும் வரலாற்றைச் சுருக்கி உரைத்து, சாஸ்திரிகள் வந்ததையும் எகிப்துக்குப் பயணமானதையும் விட்டுவிட்டார் என்பதாகவே காணப்படுகிறது. பின்னாட்களில் லூக்கா, சவுலின் மனமாற்றத்திற்கு வரிசைத் தொடர் ஒன்றைக் கொடுத்தபோது (அப். 9:19-26), அவர் சவுல் அரபு நாட்டில் சற்றுக் காலம் செலவிட்டார் என்ற உண்மையை (கலா. 1:17) தராது விட்டார். ஒவ்வொரு விவரத்தையும் தருதல் என்பது எழுத்தாளரின் நோக்கமாக இருந்ததில்லை. [25]சாஸ்திரிகளின் வருகை பற்றிய கூடுதல் தகவலுக்கு "இரட்சகரைத் தேடுதல்" என்ற அடுத்த பாடத்தின் பிரசங்கத்தில் காணவும். [26]"Magi" என்பது "May-ji" என்று உச்சரிக்கப்படுகிறது. [27]இந்த ஞானிகள் சத்தியத்தை நேர்மையுடன் தேடியவர்களாய் இருந்தார்கள். துரதிர்ஷ்டவசமாக, சில ஞானிகள் அதிகம் தெரிந்துபோல் நடிப்பவர்களாகவும் சத்தியத்தை எதிர்த்து நிற்பவர்களாகவும் ஆகிவிட்டார்கள். (இதே அடிப்படை கிரேக்க வார்த்தையானது அப். 8:9 மற்றும் 13:6, 8 ஆகிய வசனங்களில் காணப் படுகிறது.) [28]எனது NASB வேதாகமப் பிரதியில் உள்ள பக்க ஓரக்குறிப்பு ஒன்றில், "ஜோஸியம், மருத்துவம் மற்றும் இயற்கை விஞ்ஞானம் ஆகியவற்றில் சிறப்பாய் விளங்கும் ஞானிகளான மனிதர்களின் ஒரு இனம்" என்றுள்ளது. [29]சாஸ்திரிகளைப் பற்றிய புகழ் பெற்ற பாடல் ஒன்று, "We three kings of Orient are ..." என்று தொடங்குகிறது. ஆயினும் அதில் உள்ள "kings" என்ற சொற்றொடர் சரியற்றதாக உள்ளது. மேசியாவைப் பற்றிய சில தீர்க்கதரிசனங்கள், அரசர்கள் அவருக்கு முன்பாகப் பணிந்துகொள்ளுவார்கள் என்று கூறின (சங். 72:10, 11; ஏசாயா 49:7; 60:3). ஒருவேளை இவ்விடத்திலிருந்தே, ஞானிகள் அரசர்களாய் இருந்தார்கள் என்ற கருத்து எழுந்திருக்கலாம். [30]எஸ்தர் 1:13 [தமிழில் இவ்விடத்தில் பிரபுகள் என்றுள்ளது] மற்றும் தானியேல் 2:12 ஆகிய வசனங்களில் உள்ள "ஞானிகள்" என்பது மத்தேயு 2ல் உள்ளவர்களின் வகையைச் சேர்ந்தவர்களாகவே இருந்திருப்பார்கள்.

[31]பின்னாட்களில் இயேசு ஒரு ராஜாவாயிருக்கவில்லை; அவர் ஒரு ராஜாவா கவே *பிறந்தார்*. இந்தச் சொற்றொடரானது ஏரோதின் இருதயத்தில் பயத்தை நிறைத்திருக்கும். இவன் ஒரு அரசனாகப் பிறந்ததில்லை; இவன் ரோமர்களால் அரசனாக நியமிக்கப்பட்டவனாகவே இருந்தான். மற்றும், இவன் பலஸ்தீனத்தின் மீது வசன ரீதியாக அரியணை உரிமை கொண்டிருந்ததில்லை, இவன் தாவீதின் வம்ச வழியில் தோன்றாதவனாயிருந்தான். "யூதருக்கு ராஜாவாகப் *பிறந்திருக்கும்*" எவர்

ஒருவரையும் இவன் தனது ஆளுகைக்குப் பயமுறுத்தலாகக் கருதியிருப்பான். [32]இந்தப் பயணமானது பழைய ஏற்பாட்டு வேத வசனத்தின் நிறைவேற்ற மாயிருந்ததாக மத்தேயு வலியுறுத்திரா் (2:15). இப்புத்தகத்தில் "பழைய ஏற்பாட்டு வேதவசனங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன" என்ற பாடத்தில் காணவும். [33]அலெக்சந்திரியா மற்றும் யூதர்கள் பற்றி முந்திய பாடங்களில் ஒன்றான "கிறிஸ்து வந்து வேளையில் இருந்த உலகம்" என்ற பாடத்தில் "கிரேக்கர்களின் காலம்" என்ற உட்தலைப்பில் காணவும். அலெக்சந்திரியாவின் மொத்த ஜனத் தொகையில் ஐந்தில் ஒன்று முதல் இரண்டு பங்கு வரையிலும் யூதர்கள் இருந்தார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. [34]அமெரிக்க ஐக்கிய நாட்டில், நாங்கள் ஒரு பிள்ளை இருபத்து நான்கு மாதங்கள் வாழ்ந்திருந்த பின்பு அவனை "இரண்டு வயதுள்ளவன்" என்று கருதுகின்றோம் [நமது நாட்டிலும் இதேபோன்றுதான் கணக்கிடுகின்றோம்]. யூதர்களோ, ஒரு பிள்ளை பன்னிரெண்டு மாதங்கள் வாழ்ந்தபின்பு, அதை "இரண்டு வயதுடைய பிள்ளை" என்று கருதினார்கள். இதே வகையிலான கணக்கு முறை இன்றைய நாட்களில் உலகின் பல நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது. (புதிதாய்ப் பிறந்த பிள்ளை தனது வாழ்வின் முதல் ஆண்டில் உள்ளது; அவன் தனது பிறந்த நாளின் முதல் ஆண்டு நிறைவைக் கொண்டாடும்போது, தனது இரண்டாம் ஆண்டில் பிரவேசிக்கின்றான்; மற்றும் இது போன்றே கணக்கிடப்படுகிறது.) வசனம் 16ல் பின்வரும் கருத்து மறைமுகமாக உணர்த்தப்படுகின்றது: நட்சத்திரம் பன்னிரெண்டு மாதங்களுக்கு முன்பு முதன் முதலாகத் தோன்றியிருந்தது. சிலர் இந்த நட்சத்திரம் ஆறு மாதங்களுக்கு முன்பு முதல் முறையாகத் தோன்றியிருந்தது, ஏரோது "பாதுகாப்பான பக்கத்தில் இருப்பதற்காக" அந்த எண்ணிக்கையை இரு மடங்காக்கிக் கொண்டான் என்று நம்புகின்றனர். சாஸ்திரிகள் பலஸ்தீனம் வந்து சேர்ந்தபோது அநேகமாக இயேசு ஆறு மாத முதல் பன்னிரெண்டு மாதம் வரையிலான வயதுடையவராய் இருந்திருப்பார். [35]பெயர் அறியப்படாத எழுத்தாளர் குறிப்பிட்டது. [36]பிள்ளைகள் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியானது எவ்வாறு பழைய ஏற்பாட்டு வேத வசனங்களின் நிறைவேற்றமாயிருந்தது என்பது பற்றி "பழைய ஏற்பாட்டு வேத வசனங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன" என்ற பாடத்தில் காணவும். [37]பிள்ளைகளின் மரணங்கள் அவர்களின் குடும்பத்தை நிச்சயமாகவே சீரழித் திருப்பினும், அந்தப் பிள்ளைகள் நிறைவாகப் பரலோகம் செல்பவைகளாயிருக்கும் (மத். 19:14). [38]இது தேவனுடைய நோக்கங்களை தோல்வியடையச் செய்வதற்குச் சாத்தானின் பல முயற்சிகளில் ஒன்றாக இருந்தது. [39]அர்க்கெலாயுவைப் பற்றிய அதிகமான விவரங்களுக்கு "கிறிஸ்து வந்த வேளையில் இருந்த உலகம்" என்ற பாடத்தில், "நான்கு பேரரசுகள்" என்ற உட்தலைப்பில் ''ரோமர்களின் காலம்'' என்ற உட்பிரிவில் காணவும். [40]மத்தேயு 2:23ல் குறிப்பிடப்படும் வேத வசனங்களின் நிறைவேற்றம் பற்றி "பழைய ஏற்பாட்டு வேத வசனங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன" என்ற பாடத்தில் காணவும். சிலர், "நசரேயன்" என்ற வார்த்தையை "நசரேய விரதம் இருப்பவர்" என்ற வார்த்தையுடன் குழப்பிக் கொள்ளுகின்றார்கள். ''நசரேயன்'' என்றால் இயேசு நாசரேத்தூரில் வளர்ந்தவர் என்று மட்டுமே அர்த்தப்படுகிறது. "நசரேய விரதம் இருப்பவர்" என்பது நசரேய விரதம் இருப்பவரைக் குறிக்கிறது (எண். 6:1-8ஐக் காணவும்). யோவான் ஸ்நானன் பிறந்தது முதல் நசரேய விரதம் பூண்டவராயிருந்தார் (லூக். 1:15ஐ எண். 6:3, 4உடன் ஒப்பிடவும்), ஆனால் இயேசு அவ்விதமான விரதம் பூண்டதில்லை (மத். 11:18, 19).

[41]''இயற்கையானது வெற்றிடத்தைத் தாங்கி நிற்க இயலாது'' என்று கூறப்பட்டுள்ளது. அதுபோலவே, மனிதர்கள் அறியாதிருத்தலைச் சகித்திருக்க இயலாது. இதன் விளைவாக, ஏவுதல் பெற்றிராத மனிதர்கள் இயேசுவின் தொடக்க

*கால வாழ்வு பற்றி மனம் கவரும் கதைகளைக் கண்டுபிடித்தார்கள் - அவற்றில் சில பண்படாதவைகளாகவும் சில தேவதூஷணமாகவும் கூட இருக்கின்றன. ஏவுதல் பெற்றிராத இந்த ''தள்ளுபடியான'' விவரங்கள், ஏவுதல் பெற்ற சுவிசேஷ விவரங்களின் கட்டுப்படுத்தப்பட்ட தன்மைக்கு முரணாக உள்ளன.* [42]*எனது* NASB *வேதாகமப்பிரதியில் பக்கக் குறிப்பில், "அல்லது விஷயங்கள்; நேரடிப் பொருளில், எனது பிதாவின் விஷயங்களில்" என்றுள்ளது.* [43]Hugo McCord, *McCord's New Testament Translation of the Everlasting Gospel* (Henderson, Tenn.: Freed-Hardeman University, 1988). [44]*மக்கள் எருசலேமுக்குப் பயணம் செய்யும்போது, மக்கள் எருசலேமை நோக்கி "ஏறிச் சென்றார்கள்" என்றே எப்பொழுதும் எடுத்துரைக்கப்பட்டது. அவர்கள் [அங்கிருந்து] தங்கள் இல்லம் திரும்பும்போது அவர்கள் ''இறங்கிச் சென்றார்கள்'' என்று எப்போதும் எடுத்துரைக்கப்பட்டது. இது, எருசலேம் நகரமானது, நாட்டின் மிகவுயர்ந்த பகுதியில் அமைந்து இருந்ததால் இவ்வாறு கூறப்பட்டது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தாவீது எருசலேமைத் தமது தலைநகராக தேர்வு செய்து கொண்டதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.* [45]*அவரது இளைய சகோதரர்கள் அவரை எதிர்த்து நின்றிருக்கலாம்; குறைந்தது, அவரது ஊழியத்தின் தொடக்கத்தில், அவர்கள் அவரது தெய்வீகத் தொடக்கத்தை விசுவாசிக்கவில்லை (யோவா. 7:5).* [46]*''தேவன் மரியாளைத் தேர்ந்துகொண்டது ஏன்?'' என்ற பாடத்தில் இது தொடர்பான குறிப்புகளை மறுகண்ணோட்டமிடவும்.* [47]*இயேசு பழைய ஏற்பாட்டிலிருந்து அதிகமான சதவிகிதம் மேற்கோள் காண்பித்தார். இயேசுவின் வளர்ச்சி பற்றிய வலியுறுத்தலானது, நீங்களும் நானும் வேத வசனங்களைக் கற்றுக்கொள்வது போன்ற வழிமுறையிலேயே அவரும் கற்றிருப்பார் என்று கருத்துத் தெரிவிக்கிறது: வாசித்தல், மனப்பாடம் செய்தல் மற்றும் புரிந்துகொள்ளுதல் மூலமாக.* [48]*இயேசுவின் கல்விக் குறைவு பற்றிப் பிற்பாடு கூறப்படும் கூற்றானது (யோவா. 7:15) அவர் ரபீத்துவப் பள்ளிகளில் பயின்றிருந்ததில்லை என்று மட்டும் குறிப் பிட்டது. இன்றைய நாட்களில் நாம் இதை, "அவர் கல்லூரிப்பட்டம் எதுவும் பெற்றதில்லை" என்று கூறுவோம்.* [49]*எடுத்துக்காட்டாக, இயேசுவின் உவமைகளில் இருந்து, அவர் மக்களையும் இயற்கையையும் உற்றுநோக்கினார் என்பது தெளிவாகிறது. மீண்டுமாக, அவர் தாம் வடிவமைக்கப்பட்ட காலங்களில், ஜெபிப்பதற்கு அதிகாலையில் விழித்தெழுவது ஒரு பழக்கமாக வளர்த்திருக்க வேண்டும் (மாற். 1:35). மிக முக்கியமாக, அவர் தேவனுடைய ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படிந்தார் (யோவா. 4:34ஐக் காணவும்); அவர் ஒருவர் மட்டுமே பழைய பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடித்தவராக இருந்தார்.* [50]W.E. Vine, *The Expanded Vine's Expository Dictionary of New Testament Words*, ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis: Bethany House Publishers, 1984), 25.

[51]B. S. *டினின் "தயாரிப்பின் கால கட்டம்" என்ற பாடத்தை "வேதாகம வரலாற்றின் வரைக்குறிப்பு" என்ற புத்தகத்தில் காணவும்.* [52]G. Campbell Morgan, *The Crises of the Christ* (New York: Fleming H. Revell Co., 1936), 67-101. [53]Ken Gire, *Moments with the Savior* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1998), 32. [54]William H. Danforth, *I Dare You!* 24th ed. (St. Louis: By the author, 1972).

## 11

# இரட்சகரைத் தேடுதல்

## மத்தேயு 2:1-13, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*மக்கள் [தங்கள்] வாழ்வில் பல விஷயங்களைத் தேடுகின்றார்கள்: புகழ்ச்சி, செல்வம், மகிழ்ச்சி. ஆயினும், இயேசுவின் வார்த்தைகளைக் கடன் வாங்க வேண்டுமென்றால், "தேவையானது ஒன்றே" (லூக். 10:42அ): கர்த்தரைத் தேடுதல். மார்ஸ் மேடையில் பவுல் தமது உரையைக் கேட்டவர்களுக்கு, கர்த்தர் "எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற[வர்] ... கர்த்தராகிய ... தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார் ..." (அப். 17:25-27அ) என்று கூறினார். தாவீது, "தேவனே நீர் என்னுடைய தேவன்; ... உம்மைத் தேடுகிறேன்" (சங். 63:1) என்று ஜெபித்தார். இஸ்ரவேல் மக்களை "உன் தேவனாகிய கர்த்தரைத் தேடுவாய்" என்று ஊக்கப்படுத்திய மோசே, அவர்களுக்கு "உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய்" என்றும் உறுதியளித்தார் (உபா. 4:29).[1]*

*இந்த பிரசங்கத்தில் நாம் கர்த்தரை "தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமாவோடும்" (2 நாளா. 15:12) தேடிய மனிதர்களின் குழு ஒன்றை எதிர்கொள்ளுவோம். நான் ஏறக்குறைய "மூன்று மனிதர்கள் கர்த்தரைத் தேடினார்கள்" என்று கூறினேன், ஏனென்றால் இவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம் "மூன்று" என்ற எண்ணிக்கையானது எவ்வித மாற்றமும் இன்றிப் பயன்படுத்தப்படுகிறது. பெத்லகேமில் இயேசு பிறந்தபோது, அந்தக் குழந்தை இயேசுவை ஆராதிக்க வந்த சாஸ்திரிகளை நான் குறிப்பிடுவதை, நீங்கள் அநேகமாக யூகித்திருப்பீர்கள்.*

*இந்தப் பிரசங்கம் மிகவும் எளிமையானதாக உள்ளது: சாஸ்திரிகள் இயேசுவைத் தேடினார்கள், அவர்கள் இயேசுவைக் கண்டார்கள், அவர்கள் இயேசுவை ஆராதித்தார்கள், மற்றும் இதன் விளைவாக அவர்களின் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட்டது என்பவற்றை நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.[2] நீங்களும் நானும் அவர்களின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்க நான் விரும்புகின்றேன். இது நன்கு அறியப்பட்ட ஒரு வரலாறாக இருப்பதால், நன்கு அறிந்த விவரங்களைப் பற்றி நான் அதிக நேரம் செலவிட மாட்டேன்[3] ஆனால் பின்வரும் கேள்வியை நான் கேட்பேன்: "நாம் அவர்களைப் போல ஞானமுள்ளவர்களாய் இருக்கின்றோமா?"[4]*

# *அவர்கள் இயேசுவைத் தேடினார்கள்*
# *(வ. 1-9, 11, 13)*

***சாஸ்திரிகள்***

> *ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்" என்றார்கள் (வ. 1, 2).*

*இயேசுவைத் தேடியவர்களைப் பற்றிக் கலந்துரையாட நாம் ஒரு சில கணங்களை எடுத்துக் கொள்வது அவசியமாக உள்ளது. மத்தேயு 2ன் உண்மையான பார்வையாளர்கள் மறைக்கப்படுமளவுக்கு இந்த ஞானி களைச் சுற்றிலும் மிக அதிகமான பாரம்பரியக் கதைகள் போர்த்தப் பட்டுள்ளன.*[5]

*இந்த மனிதர்கள் சாஸ்திரிகள்* [Magi[6]] *என்று அழைக்கப்படுகின்றார்கள்.* "Magi" *என்ற வார்த்தையில் இருந்துதான் நாம்* "Magic" *மற்றும்* "Magician" *என்ற வார்த்தைகளைப் பெறுகின்றோம். அந்த நாட்களில், சாஸ்திரிகள்* [Magi] *என்னப்பட்டவர்கள் தங்கள் அறிவு மற்றும் உணர்ந்தறிதல் ஆகியவற்றிற்காகப் பெயர் பெற்றவர்களாக இருந்தார்கள் - இவ்விதமாக நாம் அடிக்கடி "ஞானிகள்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின் றோம். இன்றைய நாட்களின் தராதரத்தின்படியாக, அவர்களின் அறிவானது குறைபாடுள்ளதாக, அறிவியலும் மூட நம்பிக்கையும் கலந்ததாக இருந்தது. இருந்தபோதிலும், அவர்கள் ஞானத்திற்காகப் பெயர்பெற்றவர்களாக இருந்தார்கள் மற்றும் பெரும்பாலும் அவர்கள் அரசர்களுக்கு ஆலோசகர்களாகப் பணியாற்றினார்கள்.*

*இந்த சாஸ்திரிகள் மூன்றுபேர் இருந்ததாகப் பிரபலமாக நினைக்கப் படுகிறது - இது அநேகமாக, பிற்பாடு, மூன்று காணிக்கைகள் குறிப்பிடப் பட்டதால் ஏற்பட்டிருக்கும் (வ. 11) - ஆனால், மூன்று காணிக்கைகள் ஒரு சிலராலோ அல்லது அதிகமானவர்களாலோ தரப்பட்டிருக்கக் கூடும்.* "Magi" *என்பது பன்மைச் சொல்லாகும், எனவே அவர்கள் குறைந்தது இருவர் இருந்தனர் என்று நாம் அறிகின்றோம், ஆனால் பன்னிரெண்டு பேர்களோ அல்லது அதற்கும் அதிகமானவர்களோ கூட இருந்திருக்கக் கூடும்.*[7]

*சாஸ்திரிகள் "கிழக்கில்" இருந்து வந்தார்கள், ஆனால் அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று நமக்குக் கூறப்படுவதில்லை. அவர்கள் கொண்டு வந்த காணிக்கைகளின் காரணமாகக் கல்வியாளர்களில் சிலர், அவர்கள் அரபு நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று நம்புகின்றார்கள். பெர்சியா நாடு என்பது மிகச் சிறந்த யூகமாய் உள்ளது, ஏனென்றால் சாஸ்திரிகள் அங்கு தான் தோன்றி மலர்ந்தார்கள். உண்மையில், அவர்கள் தங்கள் பயணத்தை எங்கு தொடங்கினார்கள் என்று நாம் அறிவதில்லை. பலஸ்தீனத்திற்குக் கிழக்கில் அரபு, பெர்சியா, பாபிலோன்,*

*மெசப்பொத்தாமியாவின் முழுப்பகுதி, இந்தியா மற்றும் பிற நாடுகள் இருந்தன.*

*அந்த மனிதர்களைப் பற்றிய ஒரு விவரம் தெளிவானதாக உள்ளது: அவர்கள் புற இனத்தாராக (புறஜாதியாராக) இருந்தார்கள். அவர்கள், "எங்கள் ராஜா" என்று கூறாமல், "யூதருக்கு ராஜா" என்று கூறினார்கள். குழந்தை இயேசு தேவாயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, அவர் "புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாக" (லூக். 2:30) இருப்பார் என்று, முதியவரான சிமியோன் கூறினார்.[8] சாஸ்திரிகள் பற்றிய வரலாறானது, கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்ச்சியின் உலகளாவிய மறைகருத்துக்களை முக்கியத்துவப்படுத்துகிறது. இயேசு இஸ்ரவேல் மக்களுக்கு மாத்திரம் இரட்சகராயிராமல், அவர் ''உலகத்தின் இரட்சகராக'' இருக்க வேண்டியிருந்தது (யோவா. 4:42).*

*இந்த மனிதர்களைப் பற்றி நாம் அறியாதவை அதிகமாக உள்ளன, ஆனால் இவர்களின் தனிச்சிறப்பான பண்பைப் பற்றி நாம் அறிகின்றோம்: இவர்கள் ''யூதர்களின் ராஜாவை'' விடாப்பிடியாகத் தேடுபவர்களாக இருந்தார்கள். இவர்களின் உண்மையான ஞானம் இவர்களுடைய பல பத்தாண்டுகளான படிப்பு அல்லது இயல்பான உலகைப் பற்றிய இவர்களின் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றில் இராமல், உண்மையில் மிகவும் முக்கியமானது எது என்பதை அவர்கள் புரிந்துகொண்டதிலேயே இருந்தது. நீங்கள் உயர்ந்த மதிநுட்பம் அல்லது நல்ல கல்வியறிவு கொண்டவர்களாய் இருந்தாலும், இல்லாவிட்டாலும், நீங்கள் உண்மையாகவே ''ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமான" (வெளி. 19:16) அவரைத் தேடுவீர்கள் என்றால், ஞானவான்களாய் இருப்பீர்கள்.*

**நோக்கம்**

*சாஸ்திரிகள் பலஸ்தீனத்திற்கு நீண்ட மற்றும் கடினமான பயணத்தை மேற்கொண்டது எதற்காக? அவர்கள் தங்கள் பொருட்களை விற்கும் வர்த்தகர்களாக வந்தார்களா? இல்லை. இவர்கள் மத்திய தரைக் கடலில் நீந்தவோ அல்லது சவக்கடலில் மிதக்கவோ விருப்பம் கொண்டவர்களாகச் சுற்றுலாப் பயணிகளாக வந்தார்களா? இல்லை. இவர்கள் ஏரோது அரசருடன் சாதகமான உறவுமுறையை நிலைநாட்டுவதற்காகத் தூதர்களாக வந்தார்களா? இல்லை. இவர்கள் எருசலேமை அடைந்தபோது, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" (மத். 2:2அ) என்று கேட்டார்கள். இவர்கள் ஒரே ஒரு நோக்கத்திற்காகவே பாலஸ்தீனத்திற்கு வந்தார்கள். மேசியாவைக் காண்பதற்காக.*

*தெளிவாக, அவர்கள் அவரைக் காணும்படி விரும்பியது ஏன்? அவர்கள், "நாங்கள் ... அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்" (வ. 2ஆ) என்றார்கள். அவர் "யூதர்களுக்கு ராஜாவாக இருந்தார்" என்று மட்டும் இருக்கவில்லை; அவர்களுக்கும் அவர் ராஜாவாக இருந்தார். அவர்கள் அவர் முன்னால் விழுந்து வணங்குவதற்காக நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்து வந்திருந்தார்கள்.*

*இந்த மனிதர்களைப் போல நாம் ஞானமுள்ளவர்களாக இருந்தால்,*

இயேசுவை நாம் தேடுதலில் எந்தத் தியாகமும் பெரியதாக இருப்பதில்லை என்பது நாம் கற்பது அவசியமாக உள்ளது. தேவன் "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித் திருக்கிறார்" (எபே. 1:3). அந்த ஆசீர்வாதங்கள் வேறெங்கும் காணப் படுவதில்லை. கர்த்தரைத் தேடுவதை தங்கள் வாழ்வைச்செலுத்தத் தூண்டுதலாய் ஏற்படுத்தும் நேர்மையான ஆத்துமாக்களுக்காகத் தேவன் இன்னமும் கண்ணோக்கிக்கொண்டு இருக்கின்றார். அவர் "தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவராக" (எபி. 11:6) இருப்பதை இன்னமும் தொடர்ந்து செய்கின்றார்.

**செய்முறை**

சாஸ்திரிகளைப்பற்றியும் அவர்களின் நோக்கத்தைப்பற்றியும் சிலவற்றை நாம் புரிந்துகொள்ளும்போது, அவர்கள் எவ்வாறு அந்த நோக்கத்தைச் சாத்தியமான வகையில் நிறைவேற்ற முடிந்தது என்று நாம் ஆச்சரியப்படலாம். அவர்கள் புறஜாதியாராக இருந்தார்கள். அவர்கள் யூதர்களின் ராஜாவைப் பற்றி அறிதல் என்பதுகூட எவ்வாறு முடிந்தது? அவரைப்பற்றி அவர்கள் அறிந்தவுடனே, அவரைக் காண்பது எப்படி என்பதை அவர்கள் எவ்வாறு அறிய முடிந்தது?

அவர்கள் கிறிஸ்துவைப்பற்றித் தங்கள் அயலகத்து யூதர்கள் மூலமாக அறிந்தார்கள் என்று சிலர் யூகிக்கின்றார்கள். இது சாத்தியமானதாகவே உள்ளது. அந்தக் காலத்தில், யூதர்கள் உலகம் முழுவதிலும் சிதறியிருந்தார் கள்.[9] அயல்நாடுகளில் அவர்கள் தங்கள் வர்த்தகங்களைச் செய்துகொண்டு இருந்ததுடன், தங்கள் விசுவாசத்தையும் பகிர்ந்துகொண்டு இருந்தார்கள்.[10]

சாஸ்திரிகள் எவ்வாறு இயேசுவைப் பற்றி அறிந்தார்கள் என்பது பற்றி "கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு" என்ற வார்த்தைகளில் ஒரே ஒரு துப்பு மாத்திரம் காணப்படுகிறது. நட்சத்திரம் என்பது ஒரு இயற்கையான கட்புலனாகும் நிகழ்வு என்று சிலர் நம்புகின்றார்கள். ஜோஸியம் என்பது இந்த சாஸ்திரிகளால் நாடப்பட்ட போலி விஞ்ஞானங் களில் ஒன்றாக இருந்தது. பழைய ஏற்பாடானது ஜோஸியத்தை ஏளனம் செய்கிறது (ஏசா. 47:13-15; தானி. 1:20; 2:27; 4:7; 5:7, 8), மற்றும் அது தேவனு டைய மக்கள் ஜோஸியத்தில் ஈடுபாடு கொள்வதைத் தடை செய்கிறது (எரே. 10:1, 2). இருந்தபோதிலும், ஞானிகள் ஜோஸியத்தில் கொண்டிருந்த ஆர்வம்தான் அவர்களை எருசலேமுக்குக் கொண்டுவந்தது என்று பலர் இணங்கி ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். சாஸ்திரிகள் மேற்கு முகமாய்ப் பயணப்படும்படியாக அவர்களைத் தூண்டிய வானத்திற்குரிய உருவரை பற்றிய யூகங்களினால் பல பக்கங்கள் நிரப்பப்பட்டுள்ளன.[11]

இந்த ஞானிகள் மேசியாவைப் பற்றி எவ்வாறு அறிந்தார்கள் என்பது பற்றியும் இவர்கள் ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தைப் பின்பற்ற வேண்டும் என்று எவ்வாறு முடிவு செய்தார்கள் என்பது பற்றியும் தீர்க்கமாய் ஆராய்ந்த பின்பு, J.W. மெக்கார்வி அவர்களால் பல ஆண்டுகளுக்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட அதே முடிவையே நானும் மேற்கொண்டேன். மெக்கார்வி அவர்கள், ஞானிகள் மீதான சாத்தியமான எல்லா ஆதிக்கங்

களையும் பட்டியலிட்டு அதன் பின்பு, "ஆனால் இவை யாவற்றையும் ஒன்றுகூட்டி எடுத்துக்கொண்டாலும் அது சாஸ்திரிகளின் வருகைக்கு பொறுப்பாயிராது. அவர்கள் நேரடியாக தேவனால் வழிநடத்தப்பட்டார்கள், வேறு எதுவும் அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்தியிருக்க முடியாது."[12]

பழைய ஏற்பாடானது யூதர்களுடன் தேவனின் செயல்பாடுகள் பற்றி கவனம் செலுத்துகிறது என்றாலும், தேவன் யூதத்துவமற்ற உலகத்தை முற்றிலுமாகப் புறக்கணித்து விடவில்லை. நாம், தேவன் புறஜாதியாருடன் செயல்பட்டது பற்றிச் சிறிதளவே அறிகின்றோம், ஏனென்றால் தேவன் தமது குமாரன் வருவதற்காக ஒரு இனத்தை (இஸ்ரவேல் இனத்தை) எவ்வாறு தயார் செய்தார் என்பதைக் கூறுவதே பழைய ஏற்பாட்டின் நோக்கமாக உள்ளது. இருந்தபோதிலும், பழைய ஏற்பாடானது அவ்வப்போது யூதர்களின் புறஜாதி அயலகத்தவர்களின்மீது கர்த்தருடைய அக்கறை பற்றிய குறிப்புகளைக் கொடுக்கிறது. எடுத்துக்காட்டாக, தேவன் யோனாவை, புறஜாதியாரின் நகரமான நினிவேக்கு அனுப்பினார் (யோனா. 1:1, 2). விரிவான ஒரு மேசியாத்துவ எடுத்துரைப்பைக் கூறுவதற்குத் தேவன் பாலாம் என்ற பெயர்கொண்ட ஒரு யூதரல்லாதவரைக் கூடப் பயன்படுத்தினார்: "ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்" (எண். 24:17). ஞானிகளின் வரலாறானது புறஜாதிகளின் மீது தேவன் கொண்டிருந்த ஆர்வத்திற்கான இன்னுமொரு உதாரணமாகக் காணப்படுகிறது.

தேவன் ஏதோ ஒரு வழியில் அந்த சாஸ்திரிகள் இயேசுவின் பிறப்பை அறியும்படி செய்தார் மற்றும் அவர் ஏதோ ஒரு வழியில் அவர்கள் மேசியாவை எவ்வாறு காண முடியும் என்பதைத் தெரிவித்தார் என்பது மட்டுமே நாம் உறுதியுடன் கூறக் கூடியதாக உள்ளது. பிற்பாடு, தேவன் அந்த ஞானிகளிடத்தில் ஒரு கனவில் பேசினார் (மத். 2:12). ஒருவேளை கர்த்தர், யூதர்களின் ராஜாவைப் பற்றிய தொடக்கத் தகவலுக்கு இதேபோன்ற ஒரு செயல்முறையைப் பயன்படுத்தியிருக்கலாம்.

கீழ்த்திசையிலிருந்து வந்த ஞானிகளைத் தேவன் வழிநடத்தினார் என்பதற்காக ஆதாரம் தேவைப்படுகிறது என்றால், அந்த நட்சத்திரமே அந்த ஆதாரத்தை தருகிறதாக உள்ளது. சாஸ்திரிகளுக்குக் காணப்பட்ட அந்த நட்சத்திரம் போன்ற வான்பொருட்கள் வேறு எதுவும் நகருவது இல்லை; எந்த நட்சத்திரமும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகருவதில்லை, எந்த நட்சத்திரமும் நிற்பதோ அல்லது ஒரு பூமிக்குரிய இடத்தின் "மீது [நிலையாக] நிற்பதோ" இல்லை (மத். 2:9).

இன்றைய நாட்களில் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு நாம் இதை நடைமுறைப்படுத்த இயலும். முதலாவதாக நான், சிறு ராஜாவை ஞானிகள் காணுதலில் தேவன் ஆர்வம் கொண்டிருந்தது போலவே நீங்கள் இரட்சகரைக் காணுதலிலும் அவர் ஆர்வமுள்ளவராக இருக்கின்றார் என்று நான் கருத்துத் தெரிவிப்பேன். மேலும், நீங்கள் இரட்சகரைத் தேடுவதற்கு மனவிருப்பமாயிருந்தால், அவரைக் கண்டறிவதில் அவர் [தேவன்] உங்களுக்கு (அற்புதவிதமாக அல்ல ஆனால் அருளிரக்கத்தில்) உதவுவார் என்றும் நான் கருத்துத் தெரிவிக்கின்றேன்.

ஆயினும் நீங்கள் இயேசுவைக் காண வேண்டுமென்றால், நீங்கள் தேவனுடைய வழிநடத்துதலை ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாய் இருக்க வேண்டும். "மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் ..." (எரே. 10:23) அறிகிறோம்: வழக்காடுதல் என்பது முக்கியமானதாகவே உள்ளது (ஏசா. 1:18) ஆனால் அது வெளிப்படுத்துதலின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது. " 'என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று' கர்த்தர் சொல்லுகிறார். 'பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது' " (ஏசா. 55:8, 9).

நீங்கள் தேவனுடைய வழிநடத்துதலை ஏற்றுக்கொண்டவுடனே, அதை நீங்கள் உடனடியாகப் பின்பற்றத் தயாராயிருக்க வேண்டும். சாஸ்திரிகளுக்குத் தேவன் தமது செய்தியை அறிவித்த பின்பு (இதை அவர் எப்படிச் செய்திருப்பினும்), அவர்கள் தயங்கிக் கொண்டிருக்கவில்லை. உடனே அவர்கள் நூற்றுக் கணக்கான மைல்கள் தூரமும், பல ஆண்டுகள் களைப்புமிக்க பயணமும் கொண்ட தொலைப்பயணம் ஒன்றை மேற்கொண்டார்கள்.

தேவைப்படும் இன்னொரு தகுதி குறிப்பிடப்பட வேண்டும்: தேவனுடைய வழிநடத்துதலைப் பின்பற்றுவதற்கு நீங்கள் தாழ்மையுடன் நிலைநிற்க வேண்டும். ஞானிகள் தங்கள் வீடுகளில் இருந்து புறப்பட்ட போது, அவர்கள் கடைசியில் சென்று சேரும் இடம் எது என்று அறிந்திருக்கவில்லை; அவர்கள் நட்சத்திரத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதை மட்டும் அறிந்திருந்தார்கள். அவர்கள் எருசலேம் வந்து சேர்ந்த போது, அடுத்து எங்கு செல்வது என்று அறியாமல் இருந்தார்கள். அதிர்ஷ்டவசமாக அவர்கள் வழியை கேட்பதில் மிகவும் கர்வமுடையவர்களாக இருக்கவில்லை. (நம்மில் சில மனிதர்கள், பழக்கமில்லாத இடமொன்றில் பயணப்படும்போது வழி கேட்பதில் மனவிருப்பமற்றவர்கள் என்று பெயர் பெற்றுள்ளோம்.) கர்த்தரைத் தேடுவதற்குத் தாழ்மை என்பது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.[13]

நாம் படிக்கும் வரலாற்றிற்குத் திரும்புவதில் நான், தேவன் தமது வேத வசனங்களின் மூலமாக, அவர்களின் பயணத்தில் மிகவும் முக்கியமான அறிவுறுத்துதலை வெளிப்படுத்தினார் என்பதை நான் தனிச்சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாகக் காண்கின்றேன். நட்சத்திரமானது அவர்களை எருசலேம் வரை மட்டுமே வழிநடத்திற்று. அவர்களுக்கு இன்னமும் வசனத்திலிருந்து தகவல் தேவைப்பட்டது. என்ன நடந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்: சாஸ்திரிகளின் விசாரித்தலை ஏரோது அரசன் கேட்டபோது, அவன் யூதத்தலைவர்களை வரவழைத்து, "கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்" (மத். 2:4). அவர்கள் பின்வருமாறு பதில் அளித்தார்கள்:

யூதேயாவிலுள்ள[14] பெத்லகேமிலே பிறப்பார்; அதேனென்றால்:

"யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல, என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்தி லிருந்து புறப்படுவார்'' என்று தீர்க்கதரிசியினால் எழுதப் பட்டிருக்கிறது (வ. 5, 6).[15]

ராஜாவின் கேள்விகளுக்குப் பதில் அளிக்க அவர்கள் வேத வசனத்திடம் - மீகா 5:2 வசனத்திடம் செல்ல வேண்டியதாயிருந்தது.[16]

வேதாகமத்திற்கு வெளியே[யும்] நீங்கள் தேவனைப் பற்றிச் சிலவற்றைக் கற்றுக்கொள்ள இயலும். அவர் இந்த உலகத்தில் செயல் படுவராக இருக்கின்றார். அவர் சூரிய ஒளியையும் மழையையும் அனுப்பு கின்றார் (மத். 5:45). "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப் படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது'' (சங். 19:1). ஓரளவுக்கு, ''காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள்" அவருடைய படைப்பின் மூலம் புரிந்துகொள்ளப்பட முடியும் (ரோமர் 1:20). இருந்தபோதிலும், நாம் அவரைத் தேடி கண்டோமென்றால், நிறைவில் நாம் வசனத்திடத்தில் வரவேண்டும் ("வேண்டும்" என்ற வார்த்தையை உங்கள் சிந்தையில் அடிக்கோடிடுங்கள்). வேத வசனங்களைப் பற்றிப் பேசும்போது இயேசு, ''அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே; என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" என்று கூறினார் (யோவா. 5:39).

யாக்கோபு, ''உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று எழுதினார் (யாக். 1:21). "கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்கள்'' என்று பவுல் கூறினார் (2 தீமோ. 3:15). உங்களை வழிநடத்துவதற்குத் தேவன் வானத்தில் ஒரு நட்சத்திரத்தைக் கொடுக்க மாட்டார், ஆனால் உங்களை வழிநடத்து வதற்கு அவர் பரலோக ஒளியூட்டுதலை - தமது புத்தகத்தில் - கொடுத்துள் ளார். சங்கீதக்காரர், வசனத்தை "என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது என்று விவரித்தார் (சங். 119:105).

சாஸ்திரிகளைப்போலவே நாம் ஞானமுள்ளவர்களாக இருந்தால், நாம் தேவனுடைய வசனத்தைப் படிக்கவும் அது கூறுகிறபடி செய்யவும் மனவிருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். புதிய ஏற்பாடானது கர்த்தரிடத்தில் செல்லும் நமது வழியில் நாம் பின்பற்ற வேண்டிய பாதையை வெளிப்படுத்துகிறது: நாம் இயேசுவில் விசுவாசம் கொள்ள வேண்டும் (யோவா. 3:16); நாம் நமது பாவங்களில் இருந்து மனந்திரும்ப வேண்டும் (லூக். 13:3); நாம் இயேசுவின் மீது கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும் (மத். 10:32); நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும் (தண்ணீருக்குள் முழுக்காட்டப்பட வேண்டும்) (மாற். 16:16; அப். 2:38). நாம் பெறும் ஞானஸ்நானம் நம்மை "கிறிஸ்துவுக்குள்ளாக்குகிறது" என்று வேதாகமம் கூறுகிறது (ரோமர் 6:3; கலா. 3:27) - மற்றும் கிறிஸ்துவுடன்

*இருத்தல் என்பதே நமது இலக்காக உள்ளது! அவருடனான நமது இல்லம் என்பதே நமது விருப்பத்திற்குரிய அடைவிடமாக உள்ளது!*

## *அவர்கள் இயேசுவைக் கண்டார்கள் (வ. 7-11)*

*சாஸ்திரிகள் இயேசுவைக் கண்டார்கள். நீங்கள் தேடுவது ஒரு அறியப்படாத அடைவிடமோ அல்லது நீங்கள் இடம் மாற்றி வைத்து விட்ட சில சாவிகளோ, எதுவாயிருப்பினும், அதைக் கண்டறிதல் என்பது மெய்சிலிர்க்கும் செயலாக உள்ளது.*[17] *ஆயினும் இரட்சகரைக் கண்டறிவதில் உள்ள மெய்சிலிர்ப்புக்கு ஒப்பானது ஒன்றும் இல்லை!*

*கிறிஸ்து பிறப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே, தாவீது தமது மகனான சாலொமோனிடம், "நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்" (1 நாளா. 28:9) என்று கூறியிருந்தார். சாஸ்திரிகள் இயேசுவைச் சரியான வழியில், சரியான எண்ணப்போக்குடன் தேடியதால், அவர்கள் அவரைக் கண்டு அறிதலைத் தேவன் நிச்சயப்படுத்தினார்.*

*மேசியா எங்கு பிறக்க வேண்டியதாயிருந்தது என்று ஞானிகளுக்குக் கூறப்பட்ட உடனேயே, அவர்கள் எருசலேமில் இருந்து தெற்கு நோக்கிப் பயணப்பட்டார்கள் (வ. 7-9அ). அவர்கள் பெத்லகேம் நோக்கிய ஐந்து மைல்கள் பயணத்தைத் தொடங்கியபோது, நட்சத்திரம் மீண்டும் தோன்றியது.*[18] *"அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்" (வ. 10). அவர்கள் தாங்கள் சரியான பாதையில் இருப்பதை அறிந்தார்கள். நட்சத்திரம் "பிள்ளை இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்களுக்கு முன்சென்றது" (வ. 9). கடைசியில், "அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டார்கள்" (வ. 11அ).*

*அவர்கள் அவ்வளவு நீண்ட நாட்களாகத் தேடியிருந்த ஒருவரை அவர்கள் கண்டபோது, அனுபவித்திருக்கக் கூடிய மகிழ்ச்சியைக் கற்பனை செய்ய முயற்சி செய்யுங்கள். பல ஆண்டுகளுக்கு முன்பாக, மக்கள் ஒரு கண்டுபிடிப்பை முடித்தபோது, "Eureka!" என்று சத்தமிட்டார்கள். (Eureka என்பது, "நான் அதைக் கண்டுபிடித்து விட்டேன்!" என்று அர்த்தம் தருகிற கிரேக்க வார்த்தையாக உள்ளது) மரியாளுடைய கரங்களில் பிள்ளை இருந்ததை சாஸ்திரிகள் கண்ணோக்கியபோது, அவர்கள் சத்தமிட்டது என்ன என்றோ - அல்லது அவர்கள் ஏதாவது கூறினார்களா என்றோ - நான் அறியவில்லை. ஆயினும், அவர்களின் சிந்தனைகள், அவர்களின் பயணத்தில் இருந்த கடினமான சூழ்நிலைகளின் மீதோ அல்லது அவர்கள் ஏற்படுத்தியிருந்த எந்த தியாகத்தின் மீதோ இருந்ததில்லை என்பதில் நான் உறுதியாய் இருக்கின்றேன். மாறாக அவர்களின் சிந்தைகள் அவர்களின் தேடுதல் வெற்றிகரமாக முடிவு பெற்றதால் விளைந்த மகிழ்ச்சியால் நிறைந்திருந்தன என்பது உறுதி.*

*கர்த்தரை நீங்கள் சரியான வழியில் சரியான எண்ணப்போக்குடன் தேடினால், நீங்கள் அவரைக் கண்டறிவதற்குத் தேவனும் உதவுவார். பின்பு நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகிறபோது, பிலிப்புவைப்*

*போலவே, ''நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே" (யோவா. 1:45) என்று உங்களால் கூற முடியும். ஞானிகளைப் போல, நீங்கள் "சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்'' (1 பேது. 1:8) மகிழ்வடைய முடியும்!*

## *அவர்கள் இயேசுவைப் பணிந்துகொண்டார்கள் (வ. 2, 11)*

*சாஸ்திரிகள் இயேசுவைக் கண்டபோது, அவரைப் பணிந்து கொண்டார்கள். அவர்கள் ஒரு தெய்வீக புதிரைத் தீர்த்து வைத்ததாக மேன்மை பாராட்டிக் கொள்ளக்கூடும்படிக்கு யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருந்தவரைத் தேடவில்லை. அவர்கள், "அவரைப் பணிந்துகொள்ளுவதற்காக" (வ. 2) பலஸ்தீனம் வந்திருந்ததாய் அறிவித்திருந்தார்கள். மேலும், அவர்கள் அவரைக் கண்டபோது, ''சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்து கொண்டார்கள்'' (வ. 11ஆ). ராஜாதி ராஜாவாக அவர் பெறத் தகுதியான வணக்கத்தை அவர்கள் அவருக்குச் செலுத்தினார்கள் (வெளி. 19:16).[19]*

*ஆயினும் அவர்கள் அவரைப் பணிந்துகொண்டதற்கும் அதிகமானவற்றைச் செய்தார்கள். "தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்" (மத். 2:11இ).[20] இந்தக் காணிக்கைப் பொருட்களில் சிலர் அடையாளத்துவமான தனிச்சிறப்புக்களைக் காண்கின்றார்கள்: பொன் என்பது ராஜாவுக்கு உரிய பரிசாக இருந்தது. தூபவர்க்கம் என்பது அப்பெயர் குறிப்பிடுவதுபோலவே, நறுமணப் பொருளாக இருந்தது[21]; அது ஆசாரியருக்கான பரிசாக இருந்தது. வெள்ளைப்போளம் என்பது ஒரு உடலை அடக்கம் செய்யத் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்டது (யோவா. 19:39); அது இரட்சகருக்கு, நமது பாவங்களுக்காக மரிக்கவிருந்த இரட்சகருக்கு உரிய பரிசாக இருந்தது. இயேசு இந்த எல்லாமுமாக - ராஜா, ஆசாரியர் மற்றும் இரட்சகர் என்பதாக - இருந்தார், ஆனால் அநேகமாக இந்தப் பரிசுப் பொருட்கள், மதிப்புமிக்கவைகளாய் இருந்தாலும் இவை நீண்ட பயணத்தின்போது கொண்டு செல்லக் கூடியதாகவும் சிறிய இடங்கொள்ளும் வகையில் இருந்த காரணத்தினாலும் தேர்ந்துகொள்ளப்பட்டிருக்கலாம்.[22]*

*இந்த காணிக்கைப் பொருட்களின் உண்மையான தனிச்சிறப்பானது இவைகள் என்னவாக இருந்தன என்பதில் இல்லாமல், இவைகள் எதைப் பிரதிநிதித்துவப்படுத்தின என்பதிலேயே இருந்தது: இவைகள், ஞானிகள் தங்கள் ராஜாவுக்கு வணக்கத்தைச் செலுத்துவதற்கான விருப்பத்தின் வெளிப்பாடாக இருந்தன. உண்மையான ஆராதனையும் கொடுத்தலும் பிரிக்கப்பட முடியாதவைகளாக உள்ளன.[23] பழைய ஏற்பாடானது தனது பலிகளைக் கொண்டிருந்தது, புதிய ஏற்பாடானது ஒவ்வொரு வாரத்தின்*

முதல் நாளிலும் அவரவர் மனவிருப்பத்தின்படியாகக் கொடுத்தலைக் கொண்டுள்ளது (1 கொரி. 16:1, 2; 2 கொரி. 9:7). ஆராதனையின் இந்தப் பாகத்தின்போது, சிலவேளைகளில் அதிகரிக்கும் ஒலி அளவானது, சிலர் கொடுத்தல் என்பதை ஆராதனையின் தனிச்சிறப்பான/குறிப்பிடத்தக்க பாகமாக நினைப்பதில்லை என்பதை சுட்டிக்காண்பிக்கிறது - ஆனால் அது தனிச்சிறப்பான பாகமாகவே உள்ளது.

கர்த்தருக்கு முன்பாக வைப்பதற்கு உங்களிடத்தில் பொன், தூபவர்க்கம் அல்லது வெள்ளைப்போளம் ஆகியவை இல்லையா? அப்படி யென்றால் உங்களிடத்தில் உள்ளவற்றில் மிகச் சிறந்ததை அவருக்குக் கொடுங்கள். முதலாவது, உங்களையே கொடுங்கள் (2 கொரி. 8:5; ரோமர் 12:1, 2ஐக் காணவும்); பின்பு உங்களுடையதைக் கொடுங்கள்; மற்றும், எப்போதும் உங்களின் மிகச் சிறந்தவற்றை கொடுங்கள். தாவீது தாம் விலைகொடுத்து வாங்காத எதையும் கர்த்தருக்கு அளிக்காதிருந்தார் (2 சாமு. 24:24).

சாஸ்திரிகள் இயேசுவைக் கண்டபோது, அவர்கள் அவரைப் பணிந்து கொண்டார்கள் மற்றும் அவருக்கு காணிக்கைகளைக் கொடுத்தார்கள். நாம் அவர்களைப் போல ஞானமுள்ளவர்களாக இருக்கிறோமா?[24]

## முடிவுரை (வ. 10, 12)

சாஸ்திரிகளைப் பற்றி நாம் அறியாதவை அதிகமாக உள்ளன. அவர்கள் எருசலேமுக்கு வந்து சேருவதற்கு முன்பு நாம் அவர்களைப் பற்றிச் சிறிதளவே அறிகின்றோம். அவர்கள் தங்கள் சொந்த நாடுகளுக்கு சென்ற பின்பு அவர்களைப்பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை. வேதாகமத்தில் அவர்கள் நினைவுகூரத்தக்க ஒரு காட்சியில் தோன்றி விட்டுப் பின் மறைந்து போகின்றார்கள். ஆயினும் பின்வரும் ஒரு உண்மையை நாம் அறிகின்றோம்: கர்த்தரைத் தேடியதன் விளைவாக அவர்களின் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட்டது. வசனம் 10ஐ நினைவுகூருங்கள்: "அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்." நேர்ப்பொருளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மூலபாஷையானது, "அவர்கள் ஆனந்த சந்தோஷம் அடைந்தார்கள்" என்று கூறுகிறது. அவர்கள் சந்தோஷத்தினால் *நிறைந்தார்கள்* என்று சுட்டிக் காண்பிக்கும் எபிரெய விளக்கத் தொடர்ச் சொல் ஒன்றை எழுத்தாளர் பயன்படுத்தினார். ஞானிகள் எவ்வளவு சந்தோஷம் அடைந்தார்கள் என்பதை நாம் அறியச் செய்வதற்கு அது ஒன்று மட்டுமே போதுமானதாக இருக்கும், ஆனால் அதன் பின்பு வசனமானது "மிகுந்த" மற்றும் "அதிகமான" என்ற வார்த்தைகளைக் கூட்டுகிறது. சாஸ்திரிகள் கர்த்தரைக் கண்டதினால், கட்டுக்கு அடங்கா சந்தோஷம் கொண்டார்கள்! அவர்கள் தங்களுக்கு முன்பு வந்திருந்த மேய்ப்பர்கள் போலவே (லூக். 2:17, 18), பெத்லகேமில் இருந்த அந்த எளிமையான வீட்டை விட்டுச் செல்லுகையில், அவர்கள் சந்தித்த எல்லாரிடத்திலும், தாங்கள் கண்டிருந்த சிறு ராஜாவைப் பற்றிக் கூறியிருக்க வேண்டும்.

நீங்கள் இரட்சகரைத் தேடி, அவரைக் கண்டறிந்தால், உங்கள்

வாழ்வும்கூட - நீங்கள் கற்பனை செய்யும் எவ்விஷயத்திற்கும் அப்பாலும் அதிகமாக - ஆசீர்வதிக்கப்படும். பவுல், "... எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள்" (ரோமர் 4:7) என்று எழுதினார். மீண்டுமாக அவர், "எழுதியிருக்கிறபடி 'தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தபண்ணினவைகளைக் கண் காணவு மில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவும் இல்லை' " (1 கொரி. 2:9) என்றும் கூறினார்.

நாம் படித்துக் கொண்டிருந்த பாடங்கள் இயேசுவைக் குறித்து மூன்று குழுவினரான மக்களின் எண்ணப்போக்குகளை நேரெதிர்ப்படுத்திக் காண்பிக்கிறது: அங்கு கிறிஸ்துவைப் பணிந்துகொள்வதற்காக அவரைத் தேடிய ஞானிகள் இருந்தார்கள். அங்கு கிறிஸ்துவைக் கொல்வதற்காக அவரைத் தேடிய ஏரோது இருந்தான். அங்கு, இயேசு ஒரு சில மைல்கள் மட்டும் தள்ளியிருந்தாலும், அவரைக் கண்டறிவதற்கு முயற்சி எதையும் செய்யாத மதத் தலைவர்கள் இருந்தார்கள். மக்களின் இந்த மூன்று வகையினர் இன்றும் நம்மிடையே இருக்கின்றார்கள்: இயேசுவைத் தங்கள் சுயமையம்கொண்ட வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கண்டதி னால் மக்கள் சிலர் அவரை வெறுத்து, எதிர்த்து நிற்கின்றார்கள். இயேசு வையும் அவர் எப்படி தங்கள் வாழ்வை ஆசீர்வதிக்க முடியும் என்பதையும் மறந்துபோன திரளான மக்கள் இருக்கின்றார்கள். தேவனுக்கு நன்றி, ஆயினு ம், அவரைத் தேடுகின்ற ஒரு சிலர் மட்டுமே இன்னமும் இருக்கின்றார்கள். அவர்களில் நீங்களும் ஒருவராக இருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்.[25]

குறிப்புகள்

[1]கர்த்தரைத் தேடுதல் பற்றிய பல வசனப்பகுதிகள் உள்ளன. இங்கு குறிப்பிடப்பட்டவைகள் தவிர, என் கவனத்தை ஈர்த்த சில வசனப்பகுதிகள் பின்வருமாறு: எஸ்றா 8:22; சங். 10:4; 14:2. [2]நான் இதைப் பிரசங்கித்தபோது, "மிகப் பெரும்பான்மையான நேரம் முதல் கருத்துக்குச் செலவிடப்படும், எனவே எனது இரண்டாவது கருத்திற்குச் செல்வதற்கு முன்பு பதினைந்து அல்லது இருபது நிமிடங்கள் ஆகிவிட்டால் அதற்காகப் பதட்டம் அடையாதீர்கள்" என்று கூடுதலாகக் கூறினேன். [3]உங்கள் உரையைக்க கேட்பவர்களுக்கு இந்த வரலாறு நன்கு பழக்கப்பட்ட தாக இராவிட்டால், இதைக் கூறுவதற்கு நீங்கள் நேரம் எடுத்துக்கொள்ள விரும்பலாம். [4]ஜீன் குளோர் அவர்கள் "அரசரை வரவேற்றல்" என்ற தமது பிரசங்கத்தில், இந்த சாஸ்திரிகள் என்ன செய்தார்கள் என்று கூறினார். பின்பு, ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் அவர், "நாம் அவர்களைப் போல் ஞானமுள்ளவர்களாக இருக்கின் றோமா?" என்று கேட்டார் ("Matthew: Introducing the King," *Truth for Today* [July 1989]: 6-8). [5]ஏழாம் நூற்றாண்டின் புராணக்கதையொன்று மூன்று சாஸ்திரிகளின் பெயர்களைக் கூறி, அவர்கள் எந்தெந்த நாடுகளில் இருந்து வந்தார்கள் என்றும், யார் எந்தப் பரிசைக் கொண்டுவந்தார் என்றும் கூடக் குறிப்பிடுகிறது. முந்திய பாடத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டதுபோல, இயற்கையானது பௌதீக வெற்றிடத்தை வெறுத்து ஒதுக்கி, அதை நிரப்ப அவசரப்படுகிறது. மனிதர்கள் தகவலில் உள்ள வெற்றிடத்தை

வெறுத்து ஒதுக்குகின்றார்கள். அதை அவர்கள் அறிவைக் கொண்டு நிரப்ப இயலாவிட்டால், யூகங்களைக் கொண்டு நிரப்பு வார்கள். [6]Magi பற்றிய அதிகமான விவரங்களுக்கு இதற்கு முந்திய பாடத்தில் "பாலகன் பாதுகாக்கப்பட்டார்" என்ற உட்பிரிவில் காணவும். [7]பழங்காலத்திய பாதாளக் கல்லறை வரைபடம் ஒன்று இரண்டு சாஸ்திரிகளைக் காண்பிக்கும் அதே வேளையில், பழங்காலத்திய சபையின் (ஏவுதல் பெற்றிராத) பாரம்பரியம் ஒன்று பன்னிரெண்டு சாஸ்திரிகள் வந்ததாகக் கருத்துத் தெரிவிக்கிறது. [8]மேசியா எல்லா மக்களையும் ஆசீர்வதிப்பவராயிருப்பார் என்ற உண்மையைப் பற்றி ஏசாயா 42:1, 6; 49:6, 22; மத். 12:18-21 ஆகிய வசனங்களைக் காணவும். [9]பலஸ்தீனத்திற்குக் கிழக்கே இருந்த சில யூதர்களைப் பற்றி அப். 2:9 வசனம் குறிப்பிடுகிறது. [10]மத்தேயு 23:15 ஒரு எதிர்மறை வசனப்பகுதியாக உள்ளது, ஆனால் இது யூதர்கள் [பிறமக்களை] யூதமார்க்கத்தே அமையும்படி மேற்கொள்ளும் நடவடிக்கை யைப் பற்றிப் பேசுகிறது. யோசிப்பஸின் கூற்றுப்படியாக, உலகத்தை ஆளும் அரசர் யூதேயாவிலிருந்து வருவார் என்ற கருத்து (ஒரளவுக்கு) நாடுகளில் பரவியிருந்தது.

[11]கோள்களின் சந்திப்புகள், நோவா நட்சத்திரங்கள் மற்றும் வால் நட்சத்திரங் கள் உட்பட பல்வேறு யூகங்கள் உள்ளடங்குகின்றன. இவற்றில் எதுவும், இந்த நட்சத்திரம் அல்லது இதன் செயல்பாடு பற்றிய வேத வசன விவரிப்புக்கு பொருந்தி வருவதில்லை. [12]J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 42. [13]தேவனுக்குப் பிரியமாயிருப்பதற்குத் தாழ்மையாயிருப்பதின் அவசியம் பற்றிய பல வேத வசனப்பகுதிகளில் யாக்கோபு 4:6 மற்றும் 1 பேதுரு 5:5 ஆகியவை உள்ளன. [14]"யூதேயாவிலுள்ள" என்று கூடுதலாகக் கூறப்பட்ட சொற்றொடரானது இந்த நகரை, பாலஸ்தீனத்தின் இன்னொரு பெத்லகேமில் இருந்து (யோசு. 19:15, 16; நியா. 12:8, 10) பிரித்துக் காண்பிக்கிறது. [15]"பெத்லகேம்" என்ற பெயரானது "அப்பத்தின் வீடு" என்று அர்த்தப்படுகிறது. இது "ஜீவ அப்பத்தின்" (யோவா. 6:48) பிறப்பிடமாய் இருந்தது பொருத்தமான தாகவே காணப்படுகிறது. [16]வேதபாரகரும் ஆசாரியரும் 2 சாமுவேல் 5:2ல் இருந்தும் ஒரு சொற்றொடரைக் கூடுதலாகக் கூறினார்கள். [17]நீங்கள் தேடிக் கண்டுபிடித்த சிலவற்றின் சொந்த உதாரணத்தை நீங்கள் இவ்விடத்தில் கொடுக்க விரும்பலாம். லூக்கா 15, இழந்து போனதைத் தேடி, அதைக் கண்டு பிடித்ததினால், ஒரு மேய்ப்பரால் அனுபவிக்கப்பட்ட சந்தோஷத்தைப் பற்றியும் ஒரு பெண்ணினால் அனுபவிக்கப்பட்ட மகிழ்ச்சியைப் பற்றியும் கூறுகிறது. [18]இது வேத வசனத்தினால் மறைமுகமாகக் குறிப்பிடப்படுகிறது. நட்சத்திரத் தைப் பற்றி நாம் அறியாதவைகள் பல உள்ளன - அது உண்மையிலேயே ஒவ்வொரு இரவிலும் காணப்பட்டதா அல்லது அவ்வப்போது மட்டும் காணப்பட்டதா என்பவை போன்ற விஷயங்கள் நம்மால் அறியப்பட்டிருப்பதில்லை. [19]"பணிந்துகொள்ள" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது தேவனுக்கு அல்லது மனிதருக்குச் செலுத்தப்படும் மரியாதைமிக்க வணக்கத்தைக் குறிப்பிடக் கூடும். ஆகவே, சாஸ்திரிகள் இயேசுவை தேவன் என்ற வகையில் பணிந்து கொண்டார்களா அல்லது அவரது அரசத்துவத்தை மட்டும் ஏற்றுக் கொண்டார்களா என்பது பற்றிச் சிலர் கேள்வி எழுப்புகின்றார்கள். மத்தேயு, ''பணிந்துகொள்ளுதல்'' என்ற வார்த்தையை ''தேவனுக்கு வணக்கம்'' என்ற சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படும் அர்த்தத்திலேயே பயன்படுத்துகின்றார் - இவ்விடத்திலும் அந்த வார்த்தை அதுபோன்றே பயன்படுத்தப்பட்டிருப்பதாகவே காணப்படுகிறது. [20]மூன்று பரிசுகள் பற்றிய அதிகமான விவரங்களை நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் என்ற முந்திய பாடத்தில் காணவும்.

[21]தூபவர்க்கம் என்பது ஆசரிப்புக் கூடாரத்தில் பயன்படுத்தப்பட்ட

நறுமணப்பொருளின் கூட்டுப்பொருளாக இருந்தது (யாத். 30:34-38). [22]தேவனுடைய அருளிரக்கத்தினால், இந்தப் பரிசுப்பொருட்கள் யோசேப்பினால் எகிப்து நாட்டிற்குள் சுலபமாகக்கொண்டு போகப்படவும் முடிந்திருக்கும். [23]நீங்கள் ஆராதிக்காமலேயே கொடுக்க முடியும் ஆனால் நீங்கள் கொடுக்காமல் ஆராதிக்க முடியாது என்று யாரோ ஒருவர் கூறினார்; ஏனெனில் நீங்கள் துதியில் தேவனுக்கு உங்கள் ஆத்துமா, இருதயம் மற்றும் ஆவி ஆகியவற்றை முன்வைக்க வேண்டும். [24]இந்த வரிசைத் தொடரைக் குறிப்பிட நேரம் எடுத்துக்கொள்வதற்கு நீங்கள் விரும்பலாம்: தேவன் ஞானிகளை எவ்வாறு எச்சரித்தார் மற்றும் அவர்கள் எவ்வாறு வேறொரு வழியாகத் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பினார்கள் (மத். 2:12). சில பிரசங்கியார்கள் இவ்விடத்தில் கூடுதலாக ஒரு நடைமுறைப் பயன்பாட்டைக் குறிப்பிடுகின்றார்கள்: சாஸ்திரிகள் “வேறு வழியாய்த் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போனது” (மத். 2:12) போலவே, நாம் கிறிஸ்தவர்களானதற்குப் பின்பு நாமும் வேறு வழியாகப் பயணிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், நாம் மாறுபட்ட வகையிலான வாழ்வை வாழவேண்டியது அவசியமாக உள்ளது. [25]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, ஒருவர் கிறிஸ்தவராக வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் என்பதை மறுபடியும் பரிசீலிக்க நீங்கள் விரும்பலாம். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய தனிநபர்களை உற்சாகப்படுத்துங்கள். இந்த வகையான வழங்குதலின் காரணத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்களிடம் வேதாகமம் சம்பந்தமாக கேள்விகள் ஏதேனும் இருக்குமானால், அந்தக் கேள்விகளை உங்களிடம் தெரியப்படுத்தும்படி அவர்களை உற்சாகப்படுத்துவதும் இவ்விடத்தில் சரியானதாக இருக்கும். அப்படியானால் இரட்சகரை அவர்கள் தேடுவதில் உங்களால் அவர்களுக்கு உதவ முடியும்.




**தேவாலயம்**

## 12

# “சமீபித்து இருக்கிறது!”

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #3*

II. *யோவான் ஸ்நானனின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோவானின் ஊழியம் (மத். 3:1-6; மாற். 1:1-6; லூக். 3:1-6).*
   B. *யோவானின் செய்தி (மத். 3:7-12; மாற். 1:7, 8; லூக். 3:7-18).*

III. *இயேசுவின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோர்தான் நதியில் யோவானிடம் இயேசு ஞானஸ்நானம் பெறுதல் (மத். 3:13-17; மாற். 1:9-11; லூக். 3:21, 22; யோவா. 1:31-34).*
   B. *வனாந்தரத்தில் இயேசு சோதிக்கப் படுதல் (மத். 4:1-11; மாற். 1:12, 13; லூக். 4:1-13).*
   C. *இயேசுவைப் பற்றி யோவானின் சாட்சியம் (யோவா. 1:19-34).*

### அறிமுகம்

*யோவான் ஸ்நானன் “யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து பிரசங்கித்த” போது, “மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம்[1] சமீபித்திருக்கிறது” என்பதே அவரது செய்தியின் மையக் கருத்தாக இருந்தது (மத். 3:1, 2). அவரது உரையைக் கேட்டவர்களுக்கு இந்த வார்த்தைகள் எவ்வளவு உணர்வெழுச்சியூட்டக் கூடியவைகளாய் இருந்தன என்று புரிந்துணர்வது நமக்குக் கடினமானதாக உள்ளது. மேசியாத்துவ யுகமானது “சமீபித்திருந்தது!” மிக விரைவிலேயே மேசியாவே தோன்றவிருந்தார்!*

*“நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்” என்ற பாடமானது இயேசுவின் முதல் முப்பது ஆண்டுகளை - ஆயத்தப்படுத்துதலின் ஆண்டுகளை மையங் கொண்டதாக இருந்தது. அடுத்த பாடமானது இயேசு தாமே கிறிஸ்து என்று செயல்விளக்கப்படுத்திய வகையில், அவரது ஊழியத்தின் தொடக்க நாட்களை நாள் வரிசையின்படி அமைக்கிறது. இவ்விரண்டிற்கும் இடையில் கடைசி நிமிட ஆயத்தப்படுத்துதல் அவசியமானதாக இருந்தது. இந்தப் படிப்பானது, இயேசுவின் வெளியரங்கமான ஊழியத்திற்கு அடித்தளமிட்ட நிகழ்ச்சிகளைப் பற்றியதாக உள்ளது.*

### மேசியா எதிர்பார்க்கப்பட்டார்
### *(மத். 3:1-12; மாற். 1:1-8; லூக். 3:1-18)*

*மேசியாவுக்கு வழியை ஆயத்தப்படுத்துவதற்காக அவருக்கு முன்னால்*

*ஒருவர் வருவார் என்று தீர்க்கதரிசிகள் முன்னுரைத்திருந்தார்கள் (ஏசா. 40:3-5; மல். 3:1; 4:5, 6). ஆசாரியரான சகரியாவுக்கு, அவரது மகனான யோவானே அந்த முன்னோடியாக இருப்பார் என்று கூறப்பட்டிருந்தது (லூக். 1:17).*

*ஏசாயா தீர்க்கதரிசி, யோவான் செய்ய வேண்டிய பணியை, சாலைக் கட்டுமானம் செய்பவரின் பணியுடன் ஒப்பிட்டு இருந்தார்:*

> *கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்துங்கள்,*
> *அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்றும்,*
> *பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும்,*
> *சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும்,*
> *கோணலானவைகள் செவ்வையாகும்,*
> *கரடானவைகள் சமமாகும்*
> *(லூக். 3:3, 4; ஏசா. 40:3, 4ஐக் காணவும்).*

*அந்த நாட்களில் ஒரு ராஜா, கரடு முரடான பகுதிகளில் பயணம் செய்ய வேண்டியிருக்கும்போது, சாலைப் பணியாளர் குழு ஒன்று அவருக்கு முன் சென்று, சாலையைப் பயணத்திற்கு இலகுவாக்குவது வழக்கமாக இருந்தது. அந்தக் கற்பனைப் பொருளானது தீர்க்கதரிசியால் உபயோகப்படுத்தப்பட்டது. யோவானின் பணிப்பொறுப்பின் விஷயத்தில், பூமியில் உள்ள பள்ளங்கள் அல்ல ஆனால் அறியாமை என்ற பள்ளத் தாக்குகளே நிரப்பப்பட வேண்டியதாயிருந்தன. பாறையால் ஆன குன்று அல்லது ஆனால் பெருமை என்ற மலைகளே தாழ்த்தப்பட வேண்டியவை களாயிருந்தன. மேசியாவைப் பற்றிய கோணலான எண்ணங்கள் யாவும், சத்தியத்தைப் போதிப்பதினால் நேராக்கப்படுவது அவசியமாயிருந்தது.*

*முழுமையாகக் காணுகையில், யூதமக்கள் மேசியாவைப் பற்றியும் அவரது ஊழியத்தைப் பற்றியும் தவறான புரிந்துகொள்ளுதலைப் பெற்றிருந்தார்கள். அவர் ஒரு பூமிக்குரிய ராஜாவாயிருந்து, அவர்களின் விரோதிகளை வெற்றிகொண்டு அவர்களின் நாட்டை அதன் கடந்த கால மகிமையில் மீளக்கட்டி எழுப்புவார் என்று அவர்கள் நினைத்தார்கள். யோவான், மேசியாவின் ராஜ்யமானது ஆவிக்குரிய வட்டாரமாக ஆவிக்குரிய வேண்டுகோள்களைக் கொண்டிருக்கும் என்ற கருத்தை அறிமுகப்படுத்தும் அறைகூவலைக் கொண்டிருந்தார்.*

***யோவானின் பிரசங்கம்[2]***

*நாம் யோவானை இதற்குமுன் கடைசியாகப் பார்த்தபோது, அவர் "வனாந்தரங்களிலே" (லூக். 1:80) இருந்தார்.[3] வெறுமையான அந்தப் பகுதியில் அவர், தன்னொழுக்கமிக்க எளிய வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் முரடான உடை உடுத்தியிருந்தார் (மத். 3:4; 2 இரா. 1:8ஐக் காணவும்); அவர் வெட்டுக்கிளிகளையும் காட்டுத் தேனையும் உண்டார் (மத். 3:4).*

*கடைசியில், "தேவனுடைய வார்த்தை அவரிடத்திற்கு வந்தது" (லூக். 3:2) - அவர் தமது பிரசங்கித்தலைத் தொடங்குவதற்கான சைகை அவருக்குக்*

கிடைத்தது. யோவானின் ஊழியத்தினுடைய தொடக்கத்தின் காலத்தை குறிப்பிடுவதற்கு லூக்கா, அரசியல் தலைவர்கள் ஐவர்[4] மற்றும் மார்க்கத் தலைவர்கள் இருவர்[5] ஆகியோரது பெயர்களைப் பயன்படுத்தியதன் மூலம் இதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காண்பித்தார் (லூக். 3:1, 3).

யோவானின் பிரசங்கித்தலில், "மனந்திரும்புங்கள்" (மத். 3:2) என்பது ஒரு திறவுகோல் வார்த்தையாயிருந்தது. "மனந்திரும்புதல்" என்ற வார்த்தை யானது "வாழ்வில் ஒரு மாற்றத்தை விளைவிக்கும் வகையில் மனதில் ஏற்படும் ஒரு மாற்றம்" என்று அர்த்தப்படுகிறது. மனந்திரும்ப மனவிருப்ப மற்றவர்கள் தேவகோபத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் (மத். 3:7, 10; லூக். 3:9). இராஜ்யம் என்பது ஒரு குறிப்பிட்ட வம்ச வழியில் வந்த இரத்த சம்பந்தமான உறவுகொண்டவர்களுக்கு உரியதாக இராமல், ஒரு குறிப்பிட்ட ஒழுக்கப் பண்புகளை உடையவர்களுக்கு உரியதாக இருந்தது (மத். 3:8, 9; லூக். 3:8).

மாற்றத்திற்கான அவசியம் குறித்து, யோவான் பொதுமைப் பண்பு களை அல்ல, ஆனால் குறிப்பிட்ட வகையிலேயே செயல்புரிந்தார். மனிதர் களிடத்தில் அவர், "மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்" (மத். 3:8; லூக். 3:8ஐக் காணவும்) என்று கூறினார். அவர் வெகுதெளிவான உதாரணங்களைக் கொடுத்தார். அவர், சுயநலம் கொண்ட மக்களைப் பகிர்ந்து கொள்ளும்படி கூறினார் (லூக். 3:11),[6] பொது ஊழியர்களை நேர்மையுடன் இருக்கும்படி கூறினார் (லூக். 3:13), மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்களை அவர்களின் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்த வேண்டாம் என்று கூறினார் (லூக். 3:14). எல்லா மனிதர்களும் தங்கள் பாவங்களை அறிக்கையிட வேண்டும் என்று அவர் அழைத்தார் (மாற். 1:5). இவ்வாறு செய்ய மனவிருப்பமற்றவர்களை அவர் "விரியன் பாம்புக்குட்டி கள்" (மத். 3:7) என்று அழைத்தார். இன்றைய நாட்களில் சிலர் "புல் வெளியில் பாம்பு"[7] என்ற சொல்விளக்கத்தைப் பயன்படுத்துகின்றார்கள்.

இவருக்கு வரம்பு மீறிய துணிச்சல் இருந்தபோதிலும் - அல்லது ஒருவேளை அதன் காரணமாக - இவர் தம்மைப் பின்பற்றுவதற்குப் பல மக்களைக் கொண்டிருந்தார். "அப்பொழுது யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார்[8] யாவரும், அவனிடத்திற்குப்போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்"[9] (மாற். 1:5).

**யோவானின் செயல்முறை**

ஞானஸ்நானம் என்பது யோவானுடைய ஊழியத்தில் இன்றியமை யாத ஒரு பாகமாக இருந்தது. சிலர் யோவானுடைய ஞானஸ்நானத்தின் முன்னுதாரணத்தை யூதர்களின் சடங்காச்சாரமான கழுவுதல்களில் கண்டறிய முயற்சி செய்கின்றார்கள், ஆனால் யோவானுடைய ஞானஸ்நானம் என்பது தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருந்தது.[10] யோவான், "ஸ்நானன்" (மத். 3:1) என்றே அறியப்படலானார், ஏனெனில் அது அவரது தனிச்சிறப்பு வாய்ந்த பணியாக இருந்தது.[11]

"Baptist" என்பது ஒலிபெயர்க்கப்பட்ட ஒரு கிரேக்க வார்த்தையாக

*உள்ளது [இது தமிழில் "ஸ்நானன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது]. "Baptize" என்ற கிரேக்க வார்த்தைக்கு வித்தியாசப்பட்ட பண்பைச் சுட்டிக் காண்பிக்கும் ஒரு முடிவுக் குறிச்சொல் (-tes) கூட்டப்பட்டது. இந்த முடிவுக் குறிச் சொல்லானது, "actor" மற்றும் "doctor" என்பவற்றில் உள்ள "tor" என்பதுடன் தோராயமாக ஒப்பிடப்படக் கூடியதாக உள்ளது. "Baptist" என்றால், "ஞானஸ்நானம் கொடுப்பவர்" என்றே நேரடியாக அர்த்தப் படுகிறது. "Baptizer" என்பது இந்தக் கருத்தை வெளிப்படுத்தும் ஒரு வார்த்தையாக உள்ளது. இந்தப் பாடத்தொடரில் யோவானைக் குறிப்பதற்கு நான் இந்தச் சொற்றொடரையே பயன்படுத்துகின்றேன்.*

*யோவான் யோர்தான் நதியில் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். அவர் தமது செய்தியை ஒவ்வொருவருக்கும் கிடைக்கச் செய்வதற் காக நதியின் கரையில் மேலும் கீழுமாகச் சென்று இருப்பார் என்பது உறுதி. லூக்கா 3:6, "அவன் யோர்தான் நதிக்கு அருகான தேசமெங்கும் போய்" என்று கூறுகிறது.* The Living Bible *என்ற வேதாகமமானது "பின்பு யோவான் யோர்தான் நதியின் இருபுறங்களிலும் ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் சென்றான்" என்று பொழிப்புரை தருகிறது. இவர் ஞானஸ் நானம் கொடுத்து வந்த பல பகுதிகளைப் பற்றி நமக்கு [வேதாகமத்தில்] கூறப்படுகிறது (யோவா. 1:28; 3:23).*

*யோவான் ஞானஸ்நானம் முழுக்காட்டுதலாக இருந்தது. "Baptize" என்பது ''அமிழ்த்த, முழுக்காட்ட'' என்று அர்த்தம் தரும் கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது.[12] இந்த கிரேக்க வார்த்தையின் அர்த்தத்தை நாம் அறியாவிட்டாலும், யோவான் கொடுத்த ஞானஸ்நானம் முழுக்காட்டுதலாகவே இருந்தது என்று நாம் அறிந்திருக்க முடியும். யோவான் 3:23 வசனமானது, "... அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால், யோவானும் அங்கே ஞானஸ்நானம் கொடுத்து வந்தான் ..." என்று வலியுறுத்துகிறது. தெளித்தல் அல்லது ஊற்றுதலுக்கு "மிகுதியான தண்ணீர்" தேவை இல்லை, ஆனால் முழுக்காட்டுதலுக்கு மிகுதியான தண்ணீர் தேவைப்படுகிறது. யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த பிற்பாடு, கிறிஸ்து ''ஜலத்திலிருந்து கரையேறி[னார்]" (மாற். 1:10; மத். 3:16ஐக் காணவும்). இன்றைய நாட்களில் தெளித்தல் அல்லது ஊற்றுதலை நடைமுறைப்படுத்துபவர்களைத் தண்ணீரில் இருந்து வெளியே வைத்துள்ள விஷயமானது, யோவான் மக்களுக்குத் தெளித்தல் அல்லது ஊற்றுதலைச் செய்திருந்தால், அவரையும் நதியை விட்டு வெளியே வைத்திருக்குமே.*

*யோவான் கொடுத்த ஞானஸ்நானமானது, "பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நான[மாக]'' (மாற். 1:4; லூக். 3:3) இருந்தது. அது மனந்திரும்புதலை வெளிப்படுத்துகிறதாக இருந்த காரணத்தினால், ''மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம்'' என்று அழைக்கப்பட்டது.[13] அது ''பாவ மன்னிப்புக்கானதாக'' இருந்தது: யோவான், மனிதர்களின் பாவங்களை உணர்த்தியது மட்டுமின்றி, அந்தப் பாவங்கள் மன்னிக்கப்படுவது பற்றிய நம்பிக்கையையும் அவர்களுக்கு அளித்தார். அவர் கொடுத்த ஞானஸ்நானம், மனித குலத்தின் பாவங்களுக்*

காகக் கிறிஸ்துவின் மரணத்தை எதிர்நோக்கியதாக இருந்தது.

**யோவானின் நோக்கம்**

மேசியாவுக்காக மக்களின் இருதயங்களையும் வாழ்க்கையையும் ஆயத்தப்படுத்துதல் என்பதே யோவானுடைய அடிப்படை நோக்கமாக இருந்தது (யோவா. 3:28ஐக் காணவும்). அவர் கூட்டத்தாரை நோக்கி, ''எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல'' என்று கூறினார் (மத். 3:11; யோவா. 1:27, 30ஐக் காணவும்). பாதரட்சைகளைச் சுமத்தல் என்பது [ஆங்கில வேதாகமத்தில் "remove His sandals" அதாவது, ''பாதரட்சைகளைக் கழற்றுதல்'' என்பது] வேலைக்காரரின் பணியாக இருந்தது. உண்மையில் யோவான், "நான் அவருடைய அடிமையாய் இருப்பதற்கு[ம்] பாத்திரன் அல்ல" என்றே கூறினார்.

அவர் தமது ஊழியத்திற்கும் கிறிஸ்துவின் ஊழியத்திற்கும் இடையில் இருந்த ஒரு வித்தியாசத்தைச் சுட்டிக்காண்பித்தார்: "மனந்திரும்புதலுக் கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், ... அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத். 3:11). இவ்விடத்தின் சந்தர்ப்பப்பொருளானது, பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் என்பதும் அக்கினியினால் ஞானஸ்நானம் என்பதும் ஒரே ஞானஸ்நானம் அல்ல என்று காண்பிக்கிறது. யோவான் - ஏற்றுக்கொள்பவர்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளாதவர்கள் (மத். 3:5-7) அடங்கிய - ஒரு கலவையான மக்கள் குழுவிடம் பேசிக் கொண்டிருந்தார்.[14] பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின்வந்த முதல் பெந்தெகொஸ்தே அன்று அப்போஸ்தலர்களுக்கு அருளப்பட்டது (அப். 1:5, 8; 2:1-4). அவர்கள் ஆவியானவரின் வல்லமைக்குள் முழுக்காட்டப் பட்டார்கள். இதற்கு மறுபுறத்தில், அக்கினி ஸ்நானம் என்பது நியாயத் தீர்ப்பின் நாளில் தேவபக்தியற்றவர்கள் அக்கினியில் பெற்றுக் கொள்ளவிருக்கும் முழுக்காட்டுதலைக் குறிக்கிறது (மத். 3:12).

## மேசியா ஞானஸ்நானம் பெற்றார் (மத். 3:13-17; மாற். 1:9-11; லூக். 3:21, 22; யோவா. 1:31-34)

யோவானுடைய பிரபலமான தன்மையின் உச்சத்தில் - மற்றும் மேசியாவைப் பற்றிய எதிர்பார்ப்பினுடைய உச்சத்தில் - அவரிடத்தில் ஞானஸ்நானம் பெறுவதற்காக இயேசு வந்தார். அப்பொழுது இயேசு "ஏறக்குறைய முப்பது வயதுள்ளவரானார்" (லூக். 3:23).

யோவான் இதற்கு முன்பு இயேசுவைப் பார்த்திருந்தாரா என்று நாம் அறிவதில்லை. முன்பே குறிப்பிட்டபடி, அவர்களின் தாயார்கள் உறவினர் களாகவும் தோழிகளாகவும் இருந்தார்கள்.[15] ஒருவேளை யோவானும்

இயேசுவும் இதற்கு முன் எருசலேமில் பண்டிகை நாட்களின்போது சந்தித்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது மற்றும் அது நடந்த நிகழ்ச்சியாகவும் இருந்திருக்கும். அவர்கள் இதற்கு முன்பு சந்தித்து இருந்தாலும் இல்லை யென்றாலும், ஞானஸ்நானம் பெறக் காத்திருந்தவர்களைப் போல் இயேசு இல்லை என்பதை ஏதோ ஒரு வழிமுறையில் யோவான் அறிந்தார். யோவான் கொடுத்த ஞானஸ்நானம் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நான மாக இருந்தது, இயேசு மனந்திரும்புவதற்கான பாவங்கள் எதுவும் இல்லாத வராக இருந்தார். அவரது [யோவானின்] ஞானஸ்நானம் பாவமன்னிப்புக் கென்று [மனந்திரும்புதலுக்கேற்ற] ஞானஸ்நானமாக இருந்தது, மன்னிப் பதற்கு இயேசு ஒன்றையும் கொண்டிருந்ததில்லை. முதலில் யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்க மறுத்துவிட்டார்: “நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?” (மத். 3:14).

இயேசு நம்மைப் போல் பாவங்கள் எதுவும் கொண்டிருந்தது இல்லை யென்றால், அவர் ஏன் ஞானஸ்நானம் பெற்றார்? கிறிஸ்துவே இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார். அவர் யோவானிடத்தில், “இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது”[16] (மத். 3:15) என்று கூறினார். யோவான் கொடுத்த ஞானஸ்நானம் “பரலோகத்திலிருந்து வந்தது” (மத். 21:25ஐ காணவும்) [தமிழில் இது “தேவனிடத்திலிருந்து உண்டாயிற்று” என்றுள்ளது], மற்றும் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் புறக்கணித்தவர்கள் “தேவனு டைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள்” (லூக். 7:30). இயேசு தேவனு டைய சித்தத்தின் மையத்தில் நிலைத்திருக்க [தம்மை] ஒப்புக் கொடுத்திருந்தார்[17] - மற்றும் அவர், யோவான் ஞானஸ்நானம் அந்த சித்தத்தின் ஒரு பாகம் என்பதைப் புரிந்து கொண்டிருந்தார். ஆகையால், அவர் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி அவரது சிந்தையில் கேள்வி எதுவும் இருந்ததில்லை: அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் - அவ்வாறே அவர் பெற்றுக்கொண்டார். இன்றைய நாட்களில் ஞானஸ் நானத்தைக் குறித்து ஒவ்வொருவரும் இதே விதமான நேர்மறைச் சிந்தனை கொண்டிருத்தல் என்பது ஆச்சரியகரமானதாக இருக்காதா?

கடைசியில் யோவான் இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கச் சம்மதித்தார். கிறிஸ்து ஞானஸ்நானம் பெறுகையில், அவர் ஜெபித்தார் (லூக். 3:21).[18] பின்பு யோவான் ஆச்சரியமான சிலவற்றைக் கண்டார் கேட்டார்:

> இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப் போல[19] இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: “இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்” என்று உரைத்தது (மத். 3:16, 17).[20]

இவ்விதமாகத் தேவன், இயேசுவின் முப்பது அல்லது அதற்கு சற்றேக்

*குறைய உள்ள ஆண்டுகளின் ஆயத்தத்தின்மீது தமது அங்கீகாரத்தின் முத்திரையை இட்டார், மற்றும் இவ்விதமாக தேவன் இயேசுவை தமது ஊழியத்தைச் செய்வதற்குத் தேவையானதை அளித்தார் (லூக். 4:18; அப். 10:38 ஆகியவற்றைக் காணவும்).*

*இந்த நிகழ்ச்சிக்கு முன்னதாக, இயேசு மேசியாவாக இருந்தார் என்பது பற்றி யோவான் சந்தேகம் அடைந்திருக்கலாம், ஆனால் அதை அறியாதிருந்தார். மேசியாவை எவ்வாறு அடையாளம் கண்டு கொள்ள முடியும் என்பதைப் பற்றிக் கர்த்தர் உரைத்திருந்தார்: "பரிசுத்த ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர்" (யோவா. 1:33). வானத்தில் இருந்து ஆவியானவர் இறங்கியதை யோவான் கண்டபோது, அவர் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்திருப்பார். தேவன் தமது வார்த்தையில் உண்மையுள்ளவராக இருந்தார்! கிறிஸ்து வந்திருந்தார்!*

## மேசியா சோதிக்கப்பட்டார்
## *(மத். 4:1-11; மாற். 1:12, 13; லூக். 4:1-13)*

*இயேசுவின் ஞானஸ்நானம் பற்றிய விவரிப்பைத் தொடர்ந்து உடனடியாக, அவர் சோதிக்கப்படுதல் பற்றிய விவரத்தை நாம் பெறுகின்றோம். ஞானஸ்நானம் என்பது சோதிக்கப்படுதல் ஒழிந்துபோகுதல் என்று அர்த்தப்படுத்துவதில்லை. நாம் ஞானஸ்நானம் பெறுகின்றபோது, சாத்தான் தனது தாக்குதல்களைக் குறைப்பதில்லை, மாறாக அவன் அவற்றைத் தீவிரமாக்குகின்றான். நாம் ஞானஸ்நானம் பெற்று இருக்கின்றோம் என்ற உண்மையானது, அந்த சோதனைகளைச் சந்திப்பதில் இப்பொழுது நாம் தேவனுடைய உதவியைக் கொண்டுள்ளோம் என்று அர்த்தப்படுத்துகிறது (1 கொரி. 10:13; எபி. 13:5).*

*"அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார்" (மத். 4:1; லூக். 4:1ஐக் காணவும்) என்ற வார்த்தைகளில், சோதிக்கப்படுதலினுடைய மிகவும் அதிகமாக மனதில் நிற்கும் அம்சங்களில் ஒன்று காணப்படுகிறது. தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இயேசு சோதிக்கப்படுவது அவசியமானதாக இருந்தது.*

*தேவனுடைய சித்தத்தை நாம் ஒருக்காலும் முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாது, ஆனால் "சோதிக்கப்படுதல்" என்ற வார்த்தையானது நமக்குத் துப்பு ஒன்றைத் தரலாம். "சோதிக்க" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "பரீட்சிக்க" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். சாத்தானுடைய கண்ணோக்கில் இருந்து, வனாந்தரத்தில் இயேசு சஞ்சரித்த வேளையானது சோதிக்கப்படுதலுக்கு ஏற்ற காலமாய் இருந்தது - பிசாசானவன் கிறிஸ்துவைப் பாவம் செய்யத் தூண்டிவிட முயன்றான். (அவரது ஊழியத்தை அழிக்க வேண்டுமென்றால், அவன் அவரை ஒருமுறை பாவம் செய்யச் செய்ய வேண்டியதாக மட்டுமே இருந்தது.) ஆயினும் தேவனுடைய நிலைப்பாட்டிலிருந்து, இந்த நாற்பது*

*நாட்கள் என்பவை பரீட்சிக்கப்படுதலின் காலமாக இருந்தது - இது இயேசுவின் உண்மையான தகுதி மற்றும் பண்பு ஆகியவற்றை நிரூபிப்பதாக இருந்தது.*[21]

*மூன்று சோதிக்கப்படுதல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*[22] *இவை அடிப்படையில், 1 யோவான் 2:16ல் பட்டியலிடப்பட்டுள்ள, சோதிக்கப் படுதலுக்கான மூன்று வழி வாய்ப்புக்களுக்கு இணையானவைகளாக உள்ளன: "மாம்சத்தின் இச்சையும் [பசியைத் திருப்தி செய்வதற்காக கற்களை அப்பங்களாக மாற்றுதல்], கண்களின் இச்சையும் [உலகத்தின் சகல இராஜ்யங்களின் மகிமையையும் கண்ணோக்குதல்], ஜீவனத்தின் பெருமையும் [தேவாலயத்திலிருந்து பாதுகாப்பாகக் குதிப்பதின் மூலம் கூட்டத்தாரைத் திகைக்கச் செய்தல்]."*

*எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இயேசு "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டு" இருந்தார் (எபி. 4:15ஆ) என்று கூறினார். நாம் கீழ்ப்பட்டுள்ள குறிப்பான ஆயிரக்கணக்கான சோதனைகளை இயேசு சகித்திருந்தார் என்று கூறுவதற்கில்லை. ஆனால் நம்மைப் போலவே ஒவ்வொரு விதமான சோதனையையும் அவர் சந்தித்தார். மத்தேயு 4 மற்றும் லூக்கா 4 ஆகியவற்றில் உள்ள சோதனைகள், நாம் சந்திக்க வேண்டியிருக் கின்ற எல்லா மனத்தூண்டுதல்களின் பிரதிநிதித்துவமாக உள்ளன.*

*இயேசு சோதிக்கப்பட முடிந்தது என்ற கருத்து சிலரைக் கவலை கொள்ளச் செய்கிறது. இது ஒரு சிலரைத் தொந்தரவு செய்கிறது, ஏனென்றால், அவர்களைப் பொறுத்தமட்டில் சோதிக்கப்படுதல் என்றால் பாவம் செய்தல் என்றே குறிப்பதாக இருக்கிறது. அவர்கள், "ஒரு மனிதர் தவறு செய்ய விரும்புகின்ற வரைக்கும் உண்மையான சோதனை என்று ஒன்று இருப்பதில்லை. தவறு செய்ய விரும்புதலே பாவமாக உள்ளது" என்று அவர்கள் தர்க்கம் செய்கின்றார்கள். இது மற்றவர்களை கலவரப்படுத்து கிறது, ஏனென்றால் அவர்களைப் பொறுத்தமட்டில், இயேசு பாவம் செய்யக்கூடும் என்ற சாத்தியக் கூறு கூட எச்சரிக்கையளிப்பதாக உள்ளது.*

*சோதிக்கப்படுதல் பற்றி நீங்களும் நானும் ஒருக்காலும் புரிந்துகொள்ள முடியாத விஷயங்கள் அதிகமாக உள்ளன; இது, இயேசு எவ்வாறு முழுமை யான மனிதராகவும் அதே வேளையில் முழுமையான தேவனாகவும் இருக்க முடிந்தது என்ற வட்டாரத்திற்குள் விழுகிறது.*[23] *இருந்தபோதிலும், பின்வரும் மூன்று முடிவுகளில் நாம் தைரியமாய் இருக்க முடியும்: (1) இயேசு சோதிக்கப்பட முடிந்தது, இல்லையென்றால் சோதிக்கப் படுதலின் வரலாற்றுக்கு நோக்கம் எதுவும் இருக்க முடியாது. இப்படிப் பட்டது எவ்வாறு சாத்தியமாகக்கூடும் என்பதை நான் புரிந்து கொண்டாலும் இல்லையென்றாலும், இயேசு சோதிக்கப்பட்டார் என்றே வேத வசனப்பகுதி கூறுகிறது. (2) சோதிக்கப்படுதல் என்பது தன்னிலேயே பாவம் அல்ல. இந்த சத்தியமானது பிரிக்க முடியாதபடி கணக்கில் உள்ளது. பாவம் என்பது சோதனையில் இருப்பதில்லை, ஆனால் சோதனைக்கு உட்படுவதுதான் பாவமாக உள்ளது. (3) இயேசு சோதனைக்கு உட்படா திருந்தார். அவர் "எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராய்" (எபி. 4:15) இருந்தார்.*[24] *இதற்காகத் தேவனுக்கு நன்றி!*

*கிறிஸ்து பாவம் செய்திருந்தார் என்றால், சிலுவையில் அவர் ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி. 5:21) என்பது நடைபெற்றிருக்க முடியாது!*

*கிறிஸ்து சோதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, "தேவதூதர்கள் வந்து, அவருக்குப் பணிவிடை செய்தார்கள்" (மத். 4:11). நமது வாழ்வில் சோதனை கள் வருகின்றன என்ற காரணத்தினால் மட்டும் தேவன் நம்மைக் கைவிட்டு விடுவதில்லை.*

## மேசியா அறிவிக்கப்பட்டார்
## (யோவா. 1:19-34)

சோதிக்கப்பட்ட பின்பு இயேசு, யோவான் பிரசங்கித்துக் கொண்டிருந்த பகுதிக்குத் திரும்பி வந்தார் (வ. 26, 29).

**மறுக்கப்படுதல்**

யோவானின் பிரபலமான தன்மையானது எருசலேமின் மதத் தலைவர்களை உறுதியாகவே கலவரப்படுத்தியிருக்கும். இவ்விதமாக, இந்தத் தீர்க்கதரிசியைக் கேள்வி கேட்பதற்காகப் பரிசேயர்கள் (யோவா. 1:24), ஆசாரியர்களையும் லேவியர்களையும் அனுப்பினார்கள். அவர்கள், இவர் மேசியாவா (கிறிஸ்து),[25] எலியாவா அல்லது "தீர்க்கதரிசியானவரா" என்று அறிய விரும்பினார்கள். அதற்கு யோவான் வலிவார்ந்த வகையில் "இல்லை" என்று பதில் அளித்தார் (யோவா. 1:19-21).

"கிறிஸ்து" என்ற சொற்றொடருடன் கூடுதலாக, "தீர்க்கதரிசி" என்ற சொற்றொடரின் பயன்பாடானது, யூதத்துவ மதத்தலைவர்களின் குழப்பத்தை விவரிக்கிறது. மேசியாத்துவத் தீர்க்கதரிசனங்களில் சில, அவர்களின் முன் அனுமானமான கருத்துக்களுக்குப் பொருந்தி வரவில்லை, எனவே அவர்கள் அந்த வேத வசனப் பகுதிகளை, மோசே தம்மைப்போன்ற ஒருவர் வருவார் என்று கூறியிருந்தது தீர்க்கதரிசியைக் குறிப்பதாக முடிவு செய்தார்கள் (உபா. 18:15). மோசேயின் வார்த்தைகள் வரவிருந்த மேசியாவைக் குறித்தன,[26] ஆனால் யூதப் போதகர்கள், "தீர்க்கதரிசியானவர்" என்று அறியப்பட்ட ஒரு தனித்த நிழலான உருவகத்தைக் கண்டு பிடித்திருந்தார்கள்.

யோவான் தாம் எலியா அல்ல என்று வலிவார்ந்த வகையில் கூறியதைப் பற்றி நீங்கள் வியப்படையலாம் (யோவா. 1:21). அவர் தாமே தம்மைக் கேள்வி கேட்டவர்களிடத்தில், தாம் மேசியாவின் முன்னோடி என்று கூறி, ஏசாயா 40:3ஐ மேற்கோள் காண்பித்தவர். ஏசாயா 40:3ன் தீர்க்கதரிசனம் மல்கியா 3:1 (மாற். 1:2, 3[27]) உடன் பிணைக்கப்பட்டுள்ளது, இது மேசியா வுக்கு முன் வரவிருந்த ஒருவரைப் பற்றிக் கூறுகிறது, இவரை மல்கியா, ''எலியா தீர்க்கதரிசி'' என்று அழைத்தார் (மல். 4:5). யோவானே மல்கியாவினால் முன்னுரைக்கப்பட்ட "எலியாவாக" இருந்தார். இதுவே விஷயமாயிருந்ததென்று இயேசு தாமே பிற்பாடு உறுதிப்படுத்தினார். அவர்,

*யோவானைக் குறித்து "வருகிறவனாகிய எலியா இவன்தான்" என்றார் (மத். 11:14; 17:10-13ஐக் காணவும்).*

*பிறகு ஏன் யோவான் தாம் எலியா அல்ல என்று மறுத்தார்? உண்மை யான எலியாவே திரும்பவும் வருவார் என்று யூதர்கள் நினைத்தார்கள்.[28] யோவான் தாம் மாம்சத்தில் வந்த எலியா அல்ல என்று மறுத்தார். அவர் "எலியாவின் ஆவியும் பலமும் உடையவராக" வந்தார் (லூக். 1:17) ஆனால் அவர் நேரடியாக எலியாவாக இருந்ததில்லை.*

***அறிவித்தல்***

*எருசலேமில் இருந்து வந்திருந்த குழுவினரை யோவான் எதிர்கொண்ட நாளுக்குப் பின்பு, அவர் இயேசுவே மேசியா என்று பொதுமக்கள் கவனிக்கும்படி அழைப்பதற்கான தமது முதல் வாய்ப்பைப் பெற்றார். "மறுநாளிலே யோவான், இயேசுவைத் தன்னிடத்திலே வரக்கண்டு: 'இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!' என்றார்" (யோவா. 1:29).*

*யோவான் இயேசுவை, "இவரே நம் விரோதிகளை தோல்வியடையச் செய்யவிருக்கும் இராணுவ வெற்றியாளர்" என்று அறிமுகப்படுத்தவில்லை, ஆனால் "உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!" என்று அறிமுகப்படுத்தினார். இயேசு ஒரு மேன்மையான வாழ்வு முறையைப் பற்றிப் போதிக்க வந்தார்; அவர், நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்று நமக்கு ஒரு உதாரணத்தைக் கொடுக்க வந்தார்; ஆனால், அவர் நமது பாவங்களுக்காக மரிக்க வந்தார் என்பது முதலாவதும் முக்கிய மானதுமாகும் (லூக். 19:10ஐக் காணவும்). ஆட்டுக்குட்டிகள் போதித்தலுக் காக குறிப்பிடப்படுவதில்லை. அவைகளின் ஜீவன் பலபீடத்தின் மீது ஒப்புக் கொடுக்கப்படுதல் என்பதே அவைகளுக்கும் பாவத்திற்குமான உறவுமுறை யாக இருந்தது. இயேசு நமது பஸ்கா ஆட்டுக்குட்டியாக இருக்கின்றார் (1 கொரி. 5:7), இவர் "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாக" (1 பேது. 1:19) இருக்கின்றார்.*

*பின்பு யோவான், தாம் இயேசுவே மேசியா என்று அறிந்தது எவ்வாறு என்று விளக்கப்படுத்தினார் (யோவா. 1:31-33). அவர், "நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன்" (யோவா. 1:34) என்றான்.*

*யோவான் இன்னும் ஒரு சில மாதங்களுக்குத் தொடர்ந்து போதித்து ஞானஸ்நானப்படுத்திக் கொண்டிருப்பார் என்றாலும், நடைமுறை நோக்கங்கள் யாவற்றுக்கும், யோவானின் ஊழியம் செய்து முடிக்கப் பட்டது.[29] அவர் தமக்கென்று தேவன் நியமித்த ஊழியத்தை உண்மையுடன் நிறைவேற்றினார். எந்த ஒரு மனிதரும் இதைவிட அதிகம் செய்ய இயலாது.*

## *முடிவுரை*

*இயேசுவின் ஊழியத்திற்கு ஒவ்வொன்றும் இப்போது தயாராக இருந்தது. இயேசுவின் வெளியரங்கமான ஊழியத்தின் தொடக்கம் பற்றி*

“ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல்வேளை” என்ற பாடத்தில் நாம் காண்போம்.

இயேசுவின் ஞானஸ்நானம் என்பது அவரது ஆயத்தத்திற்கான அத்தியாவசியமான பாகமாயிருந்தது. நீங்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்வீர்களென்றால், முதலில் நீங்கள் விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தினால் அவருடைய பிள்ளையாவது அவசியமானதாக உள்ளது (கலா. 3:26, 27). இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்காக எழுபது அல்லது எண்பது மைல்கள் தொலைவு நடந்து சென்றார்.[30] நீங்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு உடனே நடக்க, ஓட அல்லது சவாரி செய்ய மனவிருப்பமாக இருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன்![31]

---

குறிப்புகள்

[1]இந்தச் சொற்றொடரின் அர்த்தம் பற்றிய ஒரு கலந்துரையாடலுக்கு, இப்புத்தகத்தின் கடைசிப் பகுதியில் உள்ள “பரலோக ராஜ்யம்” என்ற துணைப் பாடத்தில் காணவும். [2]யோவானுடைய ஊழியத்தின் முக்கியத்துவத்தை மட்டுமீறி வலியுறுத்த இயலாது. இதனை மாற்கு, ‘‘சுவிசேஷத்தின் ஆரம்பம்’’ என்று அழைத்தார் (மாற். 1:1). நடபடிகளின் புத்தகத்தில், இயேசு யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெற்ற நாள் தான் அவரது [இயேசுவின்] ஊழியத்தினுடைய தொடக்கம் என்று கூறப் படுகிறது (அப். 1:21, 22; 10:37, 38ஐயும் காணவும்). [3]யோவான் ஸ்நானனைக் குறித்து, ‘‘கிறிஸ்து வருகின்றார்!’’ என்ற பாடத்தின் முடிவுரைக்கு முந்திய கலந்துரை யாடலைக் காணவும். [4]இந்த ஐந்து அரசியல் தலைவர்களின் பின்னணித் தகவல்களுக்கு “இயேசு வந்த வேளையில் இருந்த உலகம்” என்ற முன்புள்ள பாடத்தில் காணவும். [5]இந்த இரண்டு மதத் தலைவர்கள் பற்றிய பின்னணித் தகவல்களுக்கு ‘‘இயேசு வந்த வேளையில் இருந்த உலகம்’’ என்ற பாடத்தில் காணவும். [6]இது ஒரு நடைமுறைப் பகுதியாக உள்ளது. இவ்விடத்தில் நீங்கள் எல்லாச் சிந்தனைகளையும் விரித்துரைக்க விரும்பலாம். [7]இது ஒரு அமெரிக்கக் கூற்றாக உள்ளது. இதற்கு இணையாக நம் நாட்டில் ஏதேனும் கூற்றுக்கள் இருப்பின் அதை இவ்விடத்தில் பயன்படுத்தலாம் (‘மணல் வெளிப் பாம்புகள்’ அல்லது ‘பச்சைப் பாம்புகள்’ என்பது ஒருவேளை சரியானதாக இருக்கலாம்). [8]எல்லாரும் என்று அர்த்தப்படும் இரு வார்த்தைகள் இந்த வாக்கியத்தில் தலா ஒருமுறை பயன்படுத்தப்படுதல் என்பது மாபெரும் எண்ணிக்கையின் உருவகப் பேச்சைச் சுட்டிக் காண்பிக்கிறது. [9]யோவான் கொடுத்த ஞானஸ்நானம் மற்றும் பிரதான கட்டளையின் ஞானஸ்நானம் (அது பிரதான கட்டளையில் [மத். 28:18-20; மாற். 16:15, 16] இயேசுவால் கட்டளையிடப்பட்டது) ஆகியவற்றிற்கு இடையில் பல நேர்மாறுகள் ஏற்படுத்தப்பட முடியும். யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டார்கள், பிரதான கட்டளையின் ஞானஸ்நானத் திற்குக் கீழ்ப்படிபவர்கள் இயேசுவில் உள்ள விசுவாசத்தை அறிக்கையிடுகின்றார்கள் (அப். 8:35-38; ரோமர் 10:9, 10) என்பது அவற்றில் ஒன்றாக உள்ளது. [10]நோக்கத்தில் வேறுபாடு மற்றும் செயல்படுத்தும் முறையில் வேறுபாடு உட்பட, யோவான் கொடுத்த ஞானஸ்நானத்திற்கும் சடங்காச்சாரமான கழுவுதல் களுக்கும் இடையில் பல வேறுபாடுகள் உள்ளன.

[11]சில வேளைகளில் உரிமைகோரப்படுகிறபடி, ஒரே வகையான ஞானஸ் நானத்தை மற்றவர்களும் செயல்படுத்தியிருந்தால், யோவானுக்கு [யோவான்

*ஸ்நானன்] என்ற இவ்விதமான அடையாளப்படுத்தும் பட்டப்பெயர் தரப் பட்டிராது.* [12]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons Ltd., 1971), 65. [13]*பிரதான கட்டளைப்படியான ஞானஸ்நானம் நமது விசுவாசத்தின் வெளிப்பாடாக இருக்கிற காரணத்தினால், "விசுவாசத்தின் ஞானஸ்நானம்" என்று அழைக்கப்பட முடியும்.* [14]*ஏற்றுக்கொள்ளாதவர்களைக் குறிப்பிடாத மாற்கு, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பற்றி மட்டுமே பேசினார் (மாற். 1:8). யோவானும் கூடப் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பற்றி மட்டுமே பேசினார் (யோவா. 1:33). இதற்கு மறுபுறத்தில், மத்தேயுவைப் போல் பலதரப்பட்ட மக்கள் கலந்துள்ளவர்களை லூக்கா சித்தரித்தார். (லூக். 3:7) இவ்விதமாக அவர், பரிசுத்த ஆவியினால் தரப்படும் ஞானஸ்நானத்தையும் அக்கினியினால் தரப்படும் ஸ்நானத்தையும் பற்றிப் பேசினார் (லூக். 3:16).* [15]*"தேவன் மரியாளைத் தேர்ந்துகொண்டது ஏன்?" என்ற பாடத்தின் தொடக்கத்தில் மரியாள் மற்றும் எலிசபெத் ஆகியோர் பற்றிய கலந்துரையாடலைக் காணவும்.* [16]*தேவனுடைய கட்டளைகள் யாவும் நீதியுள்ளவைகள் என்று சங்கீதக்காரர் கூறினார் (சங். 119:172).* [17]*இந்த சத்தியம், "இயேசு சோதிக்கப்படுதல்" என்ற அடுத்த பாடத்தில் வலியுறுத்தப்படுகிறது.* [18]*இயேசு தமது வாழ்வின் இன்றியமையாத கணங்களில் ஜெபித்தார் என்று லூக்கா சுவிசேஷம் நமக்குத் தகவல் அறிவிக்கிறது (6:12, 13; 9:28, 29; 22:44, 45; 23:33, 34, 46 ஆகிய வசனங்களைக் காணவும்).* [19]*ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள், பரிசுத்த ஆவியானவர் ஒரு புறாவாயிருந்தார் என்று கூறவில்லை, மாறாக அவர் ஒரு புறா இறங்கி வருவது போன்று இறங்கி வந்தார் என்று மட்டுமே கூறினார்கள்.* [20]*இது, தேவத்துவத்தில் உள்ள மூன்று நபர்களைப் பற்றிக் கலந்துரையாடுவதில் பயன்படுத்த ஒரு நல்ல வசனப் பகுதியாக உள்ளது, ஏனெனில் அந்தக் கணத்தில், மூன்று இடங்களில் மூன்று நபர்கள் இருந்தார்கள், ஒவ்வொருவரும் மாறுபட்ட ஒரு செயலைச் செய்துகொண்டு இருந்தார்கள். தேவனுடைய மூன்றில் ஒன்றான தன்மையில், நாம் புரிந்து கொள்ளாத பல அம்சங்கள் உள்ளன, ஆனால் இதை வேதாகமம் போதிப்பதினால், நாம் விசுவாசத்தினாலே இதை ஏற்றுக் கொள்ளுகின்றோம்.*

[21]*பரீட்சித்தல்/நிரூபித்தல் என்பது தேவனுடைய அனுகூலத்திற்காக அல்ல, ஆனால் நமது அனுகூலத்திற்காகவே என்பது வலியுறுத்தப்பட வேண்டும். தேவனுக்கு நிரூபணம் தேவையில்லை ஆனால் நமக்குத் தேவைப்படுகிறது. இவ்விதமாக இந்த நிகழ்ச்சி பற்றிய விவரங்கள் நமக்காகப் பதிவு செய்யப்பட்டன.* [22]*லூக்கா 4:2ன் சொற்றொடர் அமைப்பானது, இயேசு நாற்பது நாட்களுமே சோதிக்கப்பட்டார் என்று கருத்துத் தெரிவிக்கிறது. பதிவு செய்யப்பட்டுள்ள மூன்று சோதிக்கப்படுதல்கள், அவர் சகித்திருந்த எல்லாச் சோதனைகளுக்கும் உச்ச கட்டமாக இருக்கின்றன. இந்தச் சோதனைகளை மத்தேயு ஒரு வரிசை முறையிலும் லூக்கா இன்னொரு வரிசை முறையிலும் தருகின்றார்கள். மத்தேயு தரும் வரிசைமுறை நாள் கணக்கின்படியான வரிசை முறை என்று விளக்கவுரையாளர்கள் பலர் நினைக்கின்றார்கள், அந்த வரிசை முறையே "இயேசு சோதிக்கப்படுதல்" என்ற அடுத்த பாடத்தில் பயன்படுத்தப்படுகிறது. மிகச் சரியான வரிசைமுறைமை எது என்பது பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல.* [23]*இயேசு எவ்வாறு சோதிக்கப்பட முடிந்தது என்பதன் மீதான பல கலந்துரையாடல்கள் நமது எல்லைக்குட்பட்ட சிந்தைகள் ஆழ்ந்தறிய முடியாத விஷயங்களில் இடையிடுகின்றன.* [24]*இயேசுவின் பாவமற்ற தன்மை பற்றி, யோவான் 8:46; எபி. 7:26; 1 பேது. 1:19; 1 யோவா. 3:5 ஆகியவற்றில் காணவும்.* [25]*இந்தக் குழுவினர், "நீர் கிறிஸ்துவா?" என்று கேட்டார்களா அல்லவா என்று நாம் அறிவதில்லை, ஆனால் அவர்கள் இதை அறியவே விரும்பினார்கள் என்று யோவான் புரிந்துகொண்டார்.* [26]*இந்தத்*

*தீர்க்கதரிசனம் இயேசுவில் நிறைவேறிற்று (அப். 3:20, 22).* [27]NASB *மொழிபெயர்ப்பானது, மாற். 1:2, 3ல் ஏசாயா தீர்க்கதரிசனத்தை மட்டுமே குறிப்பிடுகிறது என்றாலும், இந்தத் தீர்க்கதரிசனங்கள் மல்கியா மற்றும் ஏசாயா ஆகிய இருவரின் கூற்றிலும் இருந்து வந்துள்ளன. சில மொழிபெயர்ப்புகளில் [உதாரணமாக நமது தமிழ் வேதாகமத்தில்] "தீர்க்கதரிசன ஆகமங்களில் எழுதியிருக்கிற பிரகாரம் ..'' என்று மிகவும் பொதுப்படையான எடுத்துரைப்பு இவ்விடத்தில் உள்ளது.* [28]*இன்றைய நாட்களில்[கூட] பல யூதர்கள், உண்மையான எலியாவின் மறுவருகையை இன்னமும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.* [29]*இவருடைய ஊழியமும் இயேசுவின் ஊழியமும் ஒரு சில மாதங்கள் ஒன்றின் மீதொன்று கவிந்திருந்தன. அந்தக் காலகட்டத்தின்போது, யோவானின் ஊழியம் சிறுகவும், இயேசுவின் ஊழியம் பெருகவுமாயிற்று. யோவான் 3:22-4:2ஐக் காணவும்.* [30]*இயேசு எவ்வளவு தூரம் நடந்து வந்தார் என்பது, அவர் ஞானஸ்நானம் பெற வந்தபோது, யோவான் எந்த இடத்தில் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தார் என்பதைச் சார்ந்ததாக இருந்தது.*

[31]*இவ்விடத்தில் இன்னொரு பயன்பாட்டை ஏற்படுத்த முடியும்: "செய்யப்படவிருந்த முக்கியமான ஊழியத்தின் எதிர்பார்ப்பில் அவசியமான ஆயத்தத்தை நிறைவேற்றுவதில் இது ஒரு பாடமாக இருந்துள்ளது. நீங்கள் ஒரு பணிப் பொறுப்பை ஊக்கத்துடன் தொடங்கி, சில வேளைகளில் அதை முழுவதுமாக நிறைவேற்றத் தவறியவர்களாய் இருந்தால், நீங்கள் அந்தப் பணிப்பொறுப்பை நிறைவேற்ற இந்தப் பாடம் உங்களை உற்சாகப்படுத்தியிருக்கும் என்று நான் நம்புகின்றேன்!"*

## 13

# இயேசு சோதிக்கப்படுதல்

## மத்தேயு 4:1-11, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

கிறிஸ்து தமது வெளியரங்கமான ஊழியத்தைத் தொடங்குவதற்குச் சற்றே முன்னதாக, அவர் தமக்கு நேரிட்ட பரீட்சையின் மிக உயர்ந்த போராட்டத்தில் தமது விரோதியைச் சந்தித்தார்.[1] தீமையானது தனது மாபெரும் பலத்துடனும், நிர்வாணமான பயங்கரத்துடனும் அவருக்கு முன்பாகத் தோன்றியது. இதற்கு முன்பு ஒருக்காலும் இப்படிப்பட்ட தாக்குதல் நடந்ததில்லை, இனி ஒருக்காலும் இப்படிப்பட்ட தாக்குதல் இருக்கப் போவதில்லை. இந்தப் பாடமானது இயேசு சோதிக்கப்பட்டதைப் பற்றியதாக உள்ளது.[2]

பின்னணி என்ற வழிமுறையில், சோதிக்கப்பட்டதின் மூன்று அம்சங்களை நாம் முக்கியத்துவப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது. நாம் பின்வருபவற்றை ஆழ்ந்து சிந்திப்போம் ...

*(1) இடம்:* வனாந்தரப்பகுதியே இந்தக் காட்சி அமைவுப் பகுதியாக இருந்தது. மனிதப் பரிவிரக்கத்தில் இருந்து துண்டிக்கப்பட்ட தனிமையான இடமானது[3] யுத்தகளமாகத் தேர்ந்து கொள்ளப்பட்டது. இங்கு மேலெழுந்த வாரியான வலைகள் யாவும் உரிந்து புறம்பே போடப்பட்டிருந்தன மற்றும் சோதிக்கப்படுதலின் சாராம்சம் எஞ்சியிருந்தது. பாவம் செய்ததினால் ஆதாம் ஒரு தோட்டத்தை வனாந்தரமாக்கினார் மற்றும் பாவத்தை எதிர்த்து நின்றதினால் இயேசு ஒரு வனாந்தரத்தைத் தோட்டமாக்கினார் என்று கூறுப்படுவதுண்டு.

*(2) எதிராளிகள்:* முதலாவது, இயேசு அப்போதுதான் ஞானஸ்நானம் பெற்றவராக, தேவன் அவரைத் தமது குமாரன் என்று அறிவித்த அந்த நிகழ்விலிருந்து புத்தம் புதியவராக வந்தவராக இருந்தார். அவர் தமது சொந்த ஊழியத்தைத் தொடங்கத் தயாராகத் தண்ணீரிலிருந்து வந்தவராக இருந்தார். பின்பு, அங்கு பிசாசானவன் இருந்தான். வனாந்தர அனுபவத்தில் இயேசு, ஆகாயத்து அதிகாரப் பிரபுவும், இப்பிரபஞ்சத்தின் தேவனும், அந்தகார சேனைகளின் தலைவனுமானவனை முகமுகமாக சந்தித்தார் (2 கொரி. 4:4; எபே. 2:2; 6:12).

*(3) தனிச்சிறப்பு:* இந்த எதிர்கொள்ளுதலானது தற்செயலானதாக இருந்ததில்லை; இது "தற்செயலாக நடைபெறவில்லை." மத்தேயு 4:1, "அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்" என்று கூறுகிறது. ஒரு தெய்வீகத் திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. ஒருவேளை இந்தப் போட்டிக்குப் பிசாசானவன் வெளிப்படையாக வரவேண்டியதாயிருந்த

*தென்பதைக் காட்டிலும் வேறெதுவும் இதை அதிகத் தெளிவாகக் காண்பிப்பதில்லை. இது சாத்தான் போரிட விரும்புகின்ற வழியாக இருப்பதில்லை. அவன் திரைகளுக்குப் பின்னால் சில முகவர்களைக் கொண்டு செயல்படவே விரும்புகின்றான். ஆயினும், தேவனுடைய நோக்கங்கள் நிறைவேற்றப்படும்படிக்கு இவன் இயேசுவை முகமுகமாய்ச் சந்திக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டான்.*

*பிசாசானவன் வெளியரங்கமாய் வரும்படி கட்டாயப்படுத்தப் பட்டான் என்பது [இயேசு] சோதிக்கப்பட்டதைப் படிப்பதில் உள்ள மதிப்புகளில் ஒன்றாக உள்ளது. இவ்விதமாக அவன் செயல்முறைகள் மற்றும் இலக்குகள் ஆகியவை வெளியாக்கப்பட்டன. இயேசுவுக்கு ஏற்பட்ட மூன்று சோதனைகளை நாம் படிக்கையில், சாத்தானின் நுட்ப நுணக்கத்திற்கு விசேஷித்த கவனம் செலுத்துங்கள். அவன் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக மனிதர்களை வஞ்சித்துக் கொண்டிருந்தான். ஆயிரமாண்டு அனுபவத்தில் ஆதாயப்படுத்தப்பட்டிருந்த நிபுணத்துவம் கிறிஸ்துவின் மீது கவனமாய்க் குவிக்கப்பட்டது.*

## *முதல் சோதனை (4:1-4)*

*சாத்தான் கிறிஸ்துவுக்கு முன்பாக வைத்த முதல் சோதனை உடல்ரீதியான ஒரு பரீட்சையாயிருந்தது.*

***சாத்தான் (வ. 1-3)***

> *... இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக்[4] கொண்டுபோகப்பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பதுநாள்[5] உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து ... (வ. 1-3அ).*

*தேவனுக்குக் கிறிஸ்துவின் உண்மையான பற்றுறுதியைப் பரீட்சித்தல் என்பதே இந்த முதல் சோதனையில் சாத்தானின் குறிக்கோளாக இருந்தது. அவன் இயேசுவிடம் பின்வருமாறு அறைகூவல் விடுத்தான்: "நீர் தேவனு டைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்" (வ. 3ஆ). நாற்பது நாட்களுக்கு முன்பு, வானத்திலிருந்து ஒரு சத்தமுண்டாகி, "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்" என்று கூறியிருந்தது (மத். 3:17). இப்போது பிசாசு உண்மையில், "அந்தக் குரல் உண்மையைப் பேசியது என்றால் - நீர் உண்மையிலேயே தேவனுடைய குமாரன் என்றால் - நீர் ஏன் பசியுடன் இருக்கின்றீர்? சலுகையற்ற பதவியினால் பயன் என்ன?" என்றே கூறினான். பாலைவனக் கற்களை அப்பங்களாக மாற்றுவதினால் இயேசு இரண்டு நோக்கங்களை நிறைவேற்ற முடியும் என்று அவன் மறைமுகமாய்க் குறிப்பிட்டான்: அவர் ஒரு சட்டப்பூர்வமான தேவையை (பசியை) நிறைவுபடுத்திக் கொள்ள முடியும், மற்றும் அதே வேளையில் அவர் தம் குமாரத்துவ உரிமையை நிரூபித்துக் காட்ட முடியும்.*

இயேசு இருந்த இடத்தில் நான் இருந்திருந்தால், “பிசாசே, நான் யாரென்று உனக்குக் காண்பிப்பேன்!” என்பதே எனது பதில்செயலாக இருந்திருக்கலாம். நான் உடனடியான பாறை அப்பமாக மாறும் செயல் மாற்றத்தை நிகழ்த்தியிருப்பேன். நான் ஒரு அறைகூவலில் இருந்து பின்வாங்குவதை விரும்புவது இல்லை. நீங்களும் ஒருவேளை இதேபோல் இருக்கலாம்.

**கிறிஸ்து (வ. 4)**

கிறிஸ்து சாத்தானுடைய வியூகத்தை முற்றிலுமாகக் கண்டார்.[6] “ஆனால் அவர், ‘... என்று எழுதியிருக்கிறதே’ என்று கூறினார்” (வ. 4அ). தேவனுடைய வசனமே, சோதனைக்கு எதிராக இயேசுவின் ஆயுதமாக இருந்தது. சங்கீதக்காரர், “நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாத படிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்” என்ற கூறியிருந்தார் (சங். 119:11). தேவனுடைய வசனத்தினால் உங்கள் இருதயத்தை நிறைத்துக்கொள்ளுதல் என்பதே சோதனைக்கு அடிபணிந்து போவதற்கு எதிரான மிகச் சிறந்த பாதுகாப்புக் கவசங்களில் ஒன்றாக உள்ளது!

இந்த சோதனையை எதிர்த்து நிற்க ஏற்புடைய வேத வசனமானது உபாகமம் 8:3ல் இருந்து வந்தது. இயேசு, “மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” என்று மேற்கோள் காண்பித்தார் (வ. 4ஆ). முதலாவது, “மனுஷன்” என்ற வார்த்தையைக் குறித்துக் கொள்ளுங்கள்: “மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல ... .” வனாந்தரத்தில் நாற்பது நாட்கள் என்பது ஆரம்பமாக இயேசுவின் தெய்வீகத்துவத்திற்கு ஒரு பரீட்சை அல்ல ஆனால் அவரது மனிதத்துவத்திற்கு ஒரு பரீட்சையாக இருந்தது. அவர் தாம் தேவனாக இருந்தார் என்பதை நிரூபித்தல் என்பது அவரது நோக்கமாக இராமல், தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தின்படியாக பரிபூரணமாக வாழ்ந்த பரிபூரணமான மனிதர் என்பதை செயல்விளக்கப்படுத்துவதே அவரது நோக்கமாயிருந்தது.

அடுத்ததாக, “அப்பம்” மற்றும் “தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும்” என்பவற்றிற்கு இடையில் உள்ள நேர்மாறான கருத்தைக் கவனியுங்கள். இயேசு, அப்பத்தை அல்லது தேவனுடைய சித்தத்தைத் தேர்ந்துகொள்ள முடிந்திருந்தது. அவர் இந்த வேளையில் பசியுடன் இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருந்தது என்பது தெளிவு - எனவே அவர் அந்த சித்தத்தின் வட்டத்திற்குள் முழுமையாய் நிலைத்திருப்பார்.

இயேசு முதல் சோதனையைச் சந்தித்தார்.

## இரண்டாம் சோதனை (4:5-7)

இரண்டாவது சோதனை ஒரு ஆவிக்குரிய பரீட்சையாக இருந்தது.

*சாத்தான் (வ. 5, 6)*

*சாத்தான் அவ்வளவு சுலபத்தில் விட்டுவிடுவதில்லை. அவனது அடுத்த சோதனைக்கு, அவன் இட அமைவை கவனத்துடன் தேர்ந்தெடுத்தான். அவன் கிறிஸ்துவை "பரிசுத்த நகரமான" எருசலேமுக்கு கூட்டிச் சென்றான் (வ. 5அ), இது யூதர்களுக்கு - மற்றும் கிறிஸ்துவுக்கு - மிக மதிப்புள்ள இடமாக இருந்தது (சங். 48:2; 137:5; மத். 23:37). பின்பு அவன் அவரை அந்த நகரத்தின் மிகவும் பயபக்திக்கு உரிய இடமான தேவாலயத்திற்குக் கூட்டிச் சென்றான். கடைசியில், அவன் அவரை அந்தக் கட்டிடத்தின் மிக உயர்வான இடத்திற்குக் கூட்டிச் சென்றான். வேத பாடப் பகுதியானது, "தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி" என்று கூறுகிறது (வ. 5ஆ). தேவாலயத்தில், நாம் ஒரு கோபுரம் என்று அழைக்கக் கூடிய கட்டிடக் கலை அமைப்பு இருந்ததில்லை, எனவே இது அநேகமாக, அவன் இயேசுவைத் தேவாலயத்தின் மிக உயர்ந்த பகுதிக்கு, அதாவது தெற்குப் புறப் பகுதிக்குக் கூட்டிச் சென்றிருக்க வேண்டும் என்றே அர்த்தப்படுகிறது. இங்கிருந்து ஒருவர் தேவாலய வளாகம் முழுவதையும் கண்ணோக்கவும் மற்றும் தூரத்தில் பரவியிருந்த நகரத்தை ஆய்வு செய்யவும் முடியும். இது ஒரு மிகவும் அழகான மற்றும் மாபெரும் வியூகத்துவம் வாய்ந்த நிலையாக இருந்தது.*

*அந்த உயர்ந்த இடத்தில் இயேசுவுக்கு அருகில் இருந்த சாத்தான், "நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; 'ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்' என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்" (வ. 6).*

*பிசாசானவன், தேவன்மீது கிறிஸ்து கொண்டிருந்த நம்பிக்கையைப் பரீட்சித்தான். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் அவன், "நீர் தேவனை நம்புகின்றீர் அல்லவா? நீர் எவ்வளவாய்த் தேவனை நம்புகின்றீர் என்று நாம் பார்ப்போமே. நீர் இந்த உப்பரிகையிலிருந்து குதிக்குமளவுக்குத் தேவன் மீது நம்பிக்கையாக இருக்கின்றீரா?" என்று கேட்டான். அவன் இயேசுவிடம் உண்மையில், "நீர் ஒரு வேத வசனத்தை மேற்கோள் காண்பித்தீர். நானும் சில வேத வசனங்களை அறிவேன். கவனியும் ... ." என்றே கூறினான். அவன் சங்கீதம் 91:11, 12ஐ மேற்கோள் காண்பித்தான். சங்கீதம் 91, கர்த்தர்மீது உள்ளடக்கமான நம்பிக்கையின் சங்கீதமாக இருக்கிறது. இதில் முதல் வசனம், "உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்" என்று கூறுகிறது.*

*இது என்ன ஒரு சூட்சுமமான சோதனையாக இருந்தது மற்றும் இருக்கிறது! இது, நம்பிக்கையானது வழக்கத்திற்கு மாறானதை முயற்சிப்பதிலேயே - வீரத்துவம், துணிச்சல் அல்லது அபாயமானதைக் கூட முயற்சிப்பதிலேயே - மிகவும் முழுமையாக தன்னை வெளிப்படுத்துகிறது என்று கருத்துத் தெரிவிக்கிறது.*

*கிறிஸ்து (வ. 7)*

*பிசாசானவன் "ஆவியின் பட்டயத்தை" (எபே. 6:17) கையாள முயற்சி*

*செய்திருந்தான், ஆனால் இயேசுவோ தாம் ஒரு மிகச் சிறந்த பட்டய வீச்சாளர் என்பதைக் காண்பித்தார். "அதற்கு இயேசு: ... 'என்றும் எழுதி யிருக்கிறதே' என்றார்" (வ. 7ஆ). வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், "சாத்தானே, நீ ஒரு வேத வசனத்தை மேற்கோள் காண்பித்தாய், ஆனால் எந்த ஒரு தனி வேத வசனமும், தரப்பட்ட ஒரு பாடப்பொருளைப் பற்றி வேத வசனம் கூறுவதை முற்றிலுமாக எடுத்துரைத்துவிடுவதில்லை. அந்தப் பாடப் பொருளைப் பற்றி வேதாகமம் கூறுகிற எல்லாவற்றையும் கவனிப்பது அவசியமாக உள்ளது" என்று கூறினார். வேத வசனங்களைத் தனிமைப்படுத்துவதினாலும் அதே பாடப் பொருளைப் பற்றிக் கூறும் பிற வேத வசனங்களைக் கவனிக்கத் தவறுவதினாலும் அதிகமான தவறுகள் விளைகின்றன.*[7]

*பின்பு இயேசு உபாகமம் 6:16ஐ மேற்கோள் காண்பித்தார்: "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக" (வ. 7அ). கிறிஸ்துவின் பதிலைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். அவர் தம்மைத் தேவன் என்று குறிப்பிடும் வகையில், "என்னைப் பரீட்சிப்பது தவறானது" என்று கூறவில்லை. (அவர் இந்த சோதனைகளைத் தமது தேவத்துவத்தில் அல்ல, ஆனால் தமது முழுமையான மனிதத்துவத்தில் சந்தித்தார் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.) மாறாக, அவர் தேவனைப் பரீட்சித்து பார்ப்பது தமக்குத் தவறானதாக இருக்கும் என்று கூறினார்.*

தேவாலயத்திலிருந்து குதித்தல் என்பது இயேசு தேவனை *நம்பினார்* என்று காட்டுவதாக இருக்கும் என்று சாத்தான் கூறினான்; மாறாக அது, தேவனைப் *பரீட்சித்துப் பார்ப்பதைச்* சுட்டிக்காண்பிப்பதாயிருக்கும் என்று இயேசு கூறினார். உண்மையில், அது அவர் தேவனை *நம்பவில்லை* என்று காண்பிப்பதாயிருக்கும். ஒரு தனிநபரின் மீது நாம் முழுமையான நம்பிக்கை கொண்டிருந்தால் அவரை அல்லது அவளைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டிய அவசியம் எதையும் நாம் காண்பதில்லை. ஒரு நபரின் மீதான நமது நம்பிக்கை அலைபாயும்போதுதான் பரீட்சிப்பதற்கான அவசியம் நமது சிந்தைக்கு வருகிறது.

தேவன் மீதான நம்பிக்கையானது, வாழ்வு எதைக் கொண்டு வந்தாலும் அதை எதிர்கொள்வதில் நமக்கு உதவுவதற்கு அவர் மீதான நமது நம்பிக்கை யில் வெளிப்படுத்தப்படுகிறது. இது அவர் சந்திக்கும்படி நாம் அமைக்கின்ற செயற்கையான பரீட்சைகளில் வெளிப்படுத்தப்படுவதில்லை.[8]

மீண்டும் ஒருமுறை இயேசு, ஒரு கொள்கையினால் இயக்கப்படும் மனிதராகத் தம்மைக் காண்பித்தார்: அவர் தேவனுடைய சித்தத்தில் நிலைத்திருக்கத் தீர்மானித்தார். அவர் இரண்டாவது சோதனையைச் சந்தித்திருந்தார்.

## மூன்றாவது சோதனை (4:8-10)

மூன்றாவது சோதனை மிகவும் இடர்ப்பாடுள்ளதாக இருந்தது, ஏனெனில் இது இயேசுவின் ஊழியத்திற்கு ஒரு பரீட்சையாக இருந்தது - அல்லது, மிகச் சரியாகச் சொல்வதென்றால், இது கிரயத்தைப் பொருட்

*படுத்தாமல் இயேசு தமது ஊழியத்தை நிறைவேற்ற அவர் செய்திருந்த தீர்மானத்திற்கான ஒரு சோதனையாக இருந்தது. ஊழியரை அழிப்பதில் தோல்வியடைந்திருந்த சாத்தான், அவரது ஊழியத்தை அழிக்க முயற்சி செய்வான்.*

***சாத்தான் (வ. 8, 9)***

*இந்த சோதனையானது மிகவும் தைரியமானதாகவும் எல்லாவற்றிலும் மிகவும் துணிச்சல் வாய்ந்ததாகவும் இருந்தது. இயேசு முதல் இரண்டு சோதனைகளில், சாத்தானின் சூழ்ச்சியான வேஷத்தின் முகமூடிகளை உரிந்து போட்டு தீமையின் உண்மையான நோக்கங்களை வெளிப்படுத்தினார். மூன்றாவது சோதனையில், சாத்தான் தானே, எல்லாப் பாசாங்குகளையும் கைவிட்டு, துணைச் சூழ்ச்சிகளைப் பயன்படுத்துதல் எல்லாவற்றையும் விட்டொழித்திருந்தான். அவன் துணிவாக, நேரடியாக, எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கிறிஸ்துவின் வழிபாட்டைக் கேட்டான்.*

*“மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல்[9] கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து” (வ. 8). உலகத்தின் எல்லா ராஜ்யங்களைப் பற்றியும், நிகழ்காலத்திலும் கடந்த காலத்திலும் உள்ள எல்லாப் பேரரசுகளைப் பற்றியும் கற்பனை செய்ய முயற்சித்துப் பாருங்கள்: மாபெரும் ரோமப் பேரரசு, கிரேக்கம், பெர்சியா, பாபிலோன், அசீரியா, எகிப்து, தாவீது மற்றும் சாலொமோன் ஆகியோரின் ராஜ்யம் - பித்தினியா மற்றும் சீரியா ஆகியவற்றின் அரசுகள் போன்றவற்றைக் குறிப்பிடுவதில்லை என்றாலும் அவையும் இருந்தன, அத்துடன் கண்டறியப்படாத நாடுகளில் இருந்த ராஜ்யங்கள்! இவை யாவும் இயேசுவின் கண்கள் முன்பாகப் பளிச்சிட்டன.*

*பின்பு சாத்தான், “நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்” என்றான் (வ. 9). இவை யாவையும் எடுத்துக்கொடுக்கும்படி, சாத்தானுக்கு உரியவைகளாய் இருந்தன (லூக். 4:6ஐக் காணவும்) - மற்றும் இயேசு அதை மறுக்கவில்லை. இந்த அளிப்பு என்பது உண்மையானதாக இருந்திராவிட்டால்,[10] சோதனையென்பதே இருந்திராது. இன்றைய நாட்களில் உள்ளது போலவே இயேசுவின் நாட்களிலும் இருந்தது: சாத்தான் இந்த உலகத்தின் ராஜ்யங்களின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருந்தான். அவைகள் அவனது வற்புறுத்துதல்களுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தன; அவைகள் அவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலுடன் இருந்தன; அவைகள் அவனுடைய சித்தத்தினால் அடிமைத்தனத்தில் வழிநடத்தப்பட்டிருந்தன. அவனை இயேசு பிற்பாடு, “உலகத்தின் அதிபதி” (யோவா. 12:31) என்று அழைத்தார்.[11]*

*இந்தச் சோதனை இயேசுவின் ஊழியத்தின் மீதான பரீட்சையாயிருந்தது என்று நான் ஏற்கனவே கருத்துத் தெரிவித்திருந்தேன். கிறிஸ்து, துன்புறுதல் மற்றும் மரணம் ஆகியவை இல்லாமலேயே ஏறக்குறைய அதே முடிவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கருத்து தெரிவித்தான்.[12] அவன்*

*தெய்வீக அடைவிடத்திற்கு ஒரு குறுக்குவழியைக் காண்பித்தான். மரணம் அடைவதை விட விழுந்து வணங்குதல் என்பது எவ்வளவு சுலபமானதாக இருந்திருக்கும்!*

*சோதிக்கப்படுதலானது சாத்தானை விட அதிகமாக இயேசுவுக்கு அவனது தந்திரத்தைச் சாத்தியமான வகையில் புரிந்துகொள்ள மிக ஆழமான அடைவுகளாக அர்த்தமாகியிருந்திருக்கலாம். கிறிஸ்துவுக்குக் காத்திருந்த நிகழ்ச்சியின் பயங்கரத்தைப் புரிந்துகொள்வதற்கு, அவரை கெத்சமெனே தோட்டத்தில், முகத்தில் [இரத்த] வியர்வை வழிந்தோடும் நிலையில், தமது இருதயத்தைத் தமது பிதாவினிடத்தில் ஊற்றி ஜெபித்த நிலையில் சித்தரிக்கப்பாருங்கள்: "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்" (மத். 26:39). அவர் சிலுவையில் "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" (27:46) என்று கதறியதை மனக்கண் கொண்டு காணுங்கள். இது உண்மையில் ஒரு நேர்த்தியான சோதனை என்பதை சந்தேகப்படாதீர்கள்.*

*கடந்து போவதில், கிறிஸ்துவைப் பற்றிய சாத்தானின் மதிப்பீட்டை உற்றுக் கவனியுங்கள். அவன் தான் ஆதாயப்படுத்தியிருந்த எல்லா ராஜ்யங்களையும் விட கிறிஸ்து அதிகம் மதிப்பு வாய்ந்தவர் என்று நினைத்தான். இயேசுவின் மரணம் எல்லாருக்கும் போதுமானது என்று சிலர் நம்புவதில்லை, ஆனால் அவரது உண்மையான மதிப்பைப் பிசாசானவன் புரிந்துகொண்டிருந்தான்.*

***கிறிஸ்து (வ. 10)***

*பிசாசுக்கு இயேசுவின் பதிலில், முதன் முறையாக அவர் தமது சொந்த அதிகாரத்தின் மொழிநடையில் பேசினார். இந்த அதிகாரமானது முந்திய தாக்குதல்களில் ஜெயிக்கப்பட்ட வெற்றிகளினால் உருவாக்கப் பட்டிருந்தது.*

*சோதனைக்காரனுக்கு முதலில் கிறிஸ்து ஒரு கூர்மையான கட்டளை கொடுத்தார்: "அப்பாலே போ சாத்தானே!" (வ. 10அ). பின்பு இயேசு உபாகமம் 6:13ல் இருந்து மேற்கோள் காண்பித்து, ஆவியின் பட்டயத்தை மீண்டும் சுழற்றினார்: " 'உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக' என்று எழுதியிருக்கிறதே" (வ. 10ஆ). கிறிஸ்துவின் வார்த்தைகள் இந்தச் சோதனையின் தந்திரமான இயல்பை வெறுமையாக்கிக் கிடத்தின. பிசாசானவன் உண்மையில், "என்னை ஆராதியும், அப்போது உம்மை ராஜ்யங்களுக்கு எஜமானராக்கு வேன்" என்று சொன்னான். கிறிஸ்துவோ, ஆராதனையும் சேவித்தலும் பிரிக்கப்பட முடியாதவைகளாக உள்ளன என்று சுட்டிக் காண்பித்தார். அவர் சாத்தானுடைய ஊழியக்காரராகாது அவனை ஆராதிக்கக் கூடாதிருந்தது. சாத்தான் அவரை, உலகத்தின் ராஜ்யங்களின் மீது ஒரு பொம்மை ஆட்சியாளராக ஏற்படுத்தியிருப்பான், ஆனால் உண்மையில் அவர் ஒன்றையும் ஆதாயப்படுத்தி இருக்க மாட்டார். சாத்தான் இன்னும் கட்டுப்பாட்டைத் தக்க வைத்திருந்திருப்பான்.*

*மீண்டும் இயேசு தமது பிதாவினுடைய சித்தத்திற்குள் உறுதியாக*

நிலைத்து நின்றார். அவர் தமது ராஜ்யத்தை நிலைநாட்டுவதற்கு, சிலுவையி னிடத்தில் செல்லத் தயாராக இருந்தார்.

தேவனுடைய வெகுமதிகள் சாத்தானுடைய வெகுமதிகளை விட எல்லையற்ற வகையில் மேன்மையானவைகளாயிருக்கின்றன என்பதைக் கிறிஸ்துவின் பதில்கள் காண்பித்தன. சாத்தான் அந்த வெகுமதிகளை நல்லவை போன்று தோற்றமளிக்கச் செய்ய முடியும் - இது உலகத்தின் ராஜ்யங்களின் மகிமையைக் காணக்கூடிய வகையில் காட்சிப்படுத்தியது போன்றவற்றினால் ஆதாரப்படுகிறது. சோதிக்கப்படுதல் பற்றிய லூக்காவின் சுவிசேஷ விவரமானது ஒரு வெளிப்படையான விவரத்தைக் கொண்டுள்ளது: பிசாசானவன் அந்த ராஜ்யங்களை இயேசுவுக்கு "ஒரு நிமிஷத்திலே" காண்பித்தான் (லூக். 4:5). அதை விட அதிக நேரம் எடுத்துக் கொள்ளுதல் என்பது சிறிதளவே மதிப்புடையதாக அல்லது மதிப்பே இல்லாததாக இருந்திருக்கும். அவற்றின் மகிமையானது பகட்டின் [Tinsel][13] மகிமையாக இருந்ததே தவிர, பொன்னின் மகிமையாக இருந்ததில்லை. யோவான் கூறியபடி, ''உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்'' (1 யோவா. 2:17அ).

## முடிவுரை (4:11)

இயேசுவின் கடிந்துகொள்ளுதல் மற்றும் பதில் ஆகியவற்றிற்குப் பின்பு, சாத்தான் அமைதியானான் - இது அவனது தோல்விக்கு நிரூபணமாயிற்று. வசனம் 11, "அப்பொழுது, பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான் ..." என்று கூறுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு, T.B. லேரிமோர் அவர்கள், [இயேசு] சோதிக்கப்பட்டது பற்றிப் பிரசங்கித்தார். அவர், "பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான்'' என்று கூறியபோது, கூட்டத்தார் ஒட்டுமொத்தமாக ஒரு நிம்மதிப் பெருமூச்சு விடுமளவுக்கு அவரது எடுத்துரைப்பானது மிகவும் விரிவானதாக இருந்தது.

ஆயினும் லூக்காவின் சுவிசேஷ விவரமானது, ''பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்த பின்பு, ஏற்ற வாய்ப்பு வரும் வரையிலும் (ஏற்ற வாய்ப்பு வரும்வரையிலும் என்று ஆங்கிலத்தில் உள்ளது, ஆனால் தமிழ் வேதாகமத்தில் இல்லை) சில காலம் அவரை விட்டு விலகிப்போனான்" என்று கூடுதலாகக் கூறுகிறது (லூக். 4:13). நமது பாடம் தொடருகையில், சாத்தான் எப்படியெல்லாம் கிறிஸ்துவைச் சோதிக்க முயற்சி செய்தான் என்று நாம் காண்போம்: கூட்டத்தார் அவரைப் பூமிக்குரிய ராஜாவாக முடிசூட்ட முயற்சி செய்தார்கள் (யோவா. 6:15); மக்கள் அவரிடத்தில் அடையாளங்களைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள் (லூக். 11:29); அவரது சொந்த சீஷர்களில் ஒருவரே, அவர் சிலுவைக்குச் செல்லுவதி லிருந்து அவரை உற்சாகமிழக்கச் செய்ய முயற்சித்தார் (மத். 16:21-23). இருந்தபோதிலும், இந்தக் காலவேளையில் இருந்து, இயேசு பிசாசிடத்தி லும் அவனது முகவர்களிடத்திலும், எஜமான் வேலைக்காரர்களிடம் பேசுவது போல் பேசத் தொடங்கினார். அவர் வெற்றியை ஜெயித்திருந்தார்.

கிறிஸ்து தமது ஊழியத்திற்குத் தயாரானவராக வனாந்தரத்திலிருந்து

வெளியில் வந்தார். லூக்கா 4:14அ "இயேசு ஆவியானவருடைய பலத்தி னாலே கலிலேயாவுக்குத் திரும்பிப்போனார்" என்று நமக்குக் கூறுகிறது. அவர் தமது சோதனைகளில் இருந்து, தமது சிலுவை மரணத்திற்கு தயாரான வராகவும் வெளிவந்தார். அவர் தேவனுடைய, பாவமற்ற குமாரனாக, "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாக" (1 பேது. 1:19) நிலைத்திருந்தார்.

சோதிக்கப்பட்டதன் வரலாறானது நமக்கு நடைமுறைப் பாடங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. இவ்வரலாறானது, சோதனைக்குத் தயாராக இருப்பதற்கு, நாம் தேவனுடைய வசனங்களைக் கற்பதும் அவற்றை மனப் பாடம் செய்வதும்கூட அவசியமானது என்று வலியுறுத்துகிறது. இது யாக்கோபு 4:7ஆ-வின் சத்தியத்தையும் செயல்விளக்கப்படுத்துகிறது: "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்." நாம் சோதிக்கப்படும்போது, இயேசு அதைப் புரிந்து கொண்டு நமக்காகப் பரிதபிக்கின்றார் என்பது இதன் மிகவும் மதிப்புள்ள பாடங்களில் ஒன்றாக உள்ளது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வருமாறு கூறினார்:

> நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (எபி. 4:15, 16).

தேவனுடைய கிருபையுடன் நாமும்கூட சாத்தானை வெற்றி கொள்பவர் கள் ஆக முடியும்![14]

---

## குறிப்புகள்

இயேசு சோதிக்கப்படுதலின் வரைப்படத்தை, காட்சி உதவிப் பொரு ளாக உபயோகிக்க நீங்கள் விரும்பலாம். வனாந்தரத்தில் சாத்தானுடன் நமது கர்த்தர் எதிர்த்து நிற்பதைச் சித்தரிக்க, ஒரு கரும்பலகையை உபயோகிப்பதனுல் இதைச் செய்ய முடியும்.

இடது புறம் உள்ள பத்தியானது சாத்தானால் ஏற்படுத்தப்பட்ட சோதனைகளைக் குறிக்கிறது. வலது புறப் பத்தியானது இயேசுவின் பதில்செயலைக் குறிக்கிறது. பாடத்தின் முடிவில், பலகையின் மேல்புறத்தில் உள்ள படத்துண்டுகளை நான், ''வெற்றியாளர்!'' என்ற வார்த்தை இயேசுவைச் சுட்டிக் காண்பிப்பது போலிருக்கும்படி மாற்றிவிடுவேன். இந்தக் காட்சி எடுத்துரைப்பானது ஒரு ஒளிப்படக் கருவியுடன் பயன் படுத்தப்பட முடியும். இது ஒரு கரும்பலகை அல்லது ஒரு பெரிய வரை படத்தாள் அல்லது அட்டை ஆகியவற்றிலும் வரையப்பட்டுப் பயன் படுத்தப்பட முடியும்.

மாணவர்கள், அதிலும் சிறப்பாக சிறுவர்கள், பிசாசின் கொம்புகள் மற்றும் வால் ஆகியவற்றினால் கேளிக்கையூட்டப்படுவார்கள். எனது flannal

board *(ஒட்டும் துணி) பலகையானது வளைக்கக்கூடிய உருவங்களைக் கொண்டதாக (*brads *என்ற பொருளைப் பயன்படுத்தி) செய்யப்பட்டது, எனவே முடிவில் பிசாசானவன் அடுத்த பக்கத்தில் உள்ள படத்தின் கீழ்ப்பகுதியில் உள்ளதுபோல், தோல்வியுற்றவனாகக் காணப்படும் வகையில் வைக்கப்பட முடியும். சாத்தான் நமக்கு முன்பாகக் கொம்புகளுடனும் கூர்மையான நீண்ட வாலுடனும் தோன்றுவதில்லை. சாத்தானைச் சித்தரிக்க இப்படிப்பட்ட உருவச் சித்தரிப்பைப் பயன்படுத்த நீங்கள் விரும்பவில்லையென்றால், அவனது இருப்பை நீங்கள் ஒரு இருண்ட தெளிவற்ற வகையிலான மொத்தையான உருவத்தினால் குறிக்கலாம்.*

*நீங்கள் இருக்கும் இடத்திற்கு ஏற்புடையதென்றால், நீங்கள் இந்தப் பாடத்தை, "கிறிஸ்து *vs *பிசாசு" என்று அழைக்கலாம், மற்றும் இதில் நீங்கள் ஒரு குத்துச் சண்டையின் ஒப்புவமையையும் பயன்படுத்தி, பின்வருவது போன்ற ஒரு அறிமுக உரையுடன் தொடங்கலாம்: ''என்னைப் பொறுத்தமட்டில் இது எப்போதுமே ஒரு குத்துச்சண்டைப் போட்டியைப்போன்றதாகவே இருந்துள்ளது: 'கிறிஸ்து *vs *பிசாசு.' பிசாசானவன் ஒரு குத்து விடுகிறான், கிறிஸ்துவோ அதைத் தடுத்து நிறுத்தி எதிர்க் குத்து ஒன்றை விடுகின்றார். பின்பு பிசாசனவன் ஒரு இரண்டாவது குத்து விடுகிறான், இது போல் தொடர்கிறது. குத்துச் சண்டைக்காரர்களால் பாரம்பரியமாக அணியப்படும் கறுப்பு மற்றும் வெள்ளை நிற உடைகளும் கூட, 'நன்மை *vs *தீமை' என்பதைக் குறிக்கும் வகையில் ஏற்புடையவைகளாகவே காணப்படுகின்றன. இதன் ஆவிக்குரிய தனிச்சிறப்பிலிருந்து தனித்த வகையில், இந்தச் சந்திப்பானது வெற்றியாளரை நிர்ணயிக்கும் யுத்தத்தின் மெய்சிலிரிப்பை ஏற்படுத்துகிறது, உண்மையிலேயே இது இவ்வாறானதாகவே உள்ளது."*

---

*குறிப்புகள்*

[1]*இந்தப் பிரசங்கத்திற்கான அதிகமான கருத்துக்கள்* G. Campbell Morgan, *எழுதிய The Crises of the Christ* (New York: Fleming H. Revell Co., 1936), 162-99 *என்ற புத்தகத்தின் சோதிக்கப்படுதல் பற்றிய மூன்று அத்தியாயங்களிலிருந்து வருகின்றன.* [2]*சோதனை பற்றி அதிகமான கருத்துக்களை "சமீபித்து இருக்கிறது" என்ற இதற்கு முந்திய பாடத்தில் காணவும்.* [3]*''காட்டு மிருகங்கள்'' மட்டுமே இயேசுவின் துணையாளிகளாக இருந்தன என்று மாற்கு 1:13 நமக்குக் கூறுகிறது.* [4]*இந்த வனாந்தரப் பகுதி எங்கிருந்தது என்று நமக்குக் கூறப்படவில்லை. இது யோவான் ஆயத்தப்படுத்தப்பட்டதும் அவர் தமது ஊழியத்தில் அதிகமான பணியை நிறைவேற்றியிருந்ததுமான யூதேயாவின் வனாந்தரமாக இருந்திருக்கலாம் (மத். 3:1, 3; 11:7; லூக். 1:80; 3:1, 2).* [5]*நவீன காலத்தில் சில தனிநபர்கள் தண்ணீர் மட்டும் குடித்துக்கொண்டு உணவருந்தாமலேயே நாற்பது நாட்கள் வரை இருக்க முடியும் என்று செயல் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.* [6]*சோதனையைப் பற்றிப் படிப்பதில், ஒவ்வொரு சோதனையையும் ஆராய்ச்சி செய்ய முயற்சித்தல் என்பது மாபெரும் பயன்களில் ஒன்றாக உள்ளது: அது ஏன் தவறாக இருந்தது மற்றும் அதைக் கிறிஸ்து எவ்வாறு எதிர்கொண்டார்? சாத்தானுடைய ஆலோசனைகள் அவற்றின் ஆதாரமூலத்தினாலேயே தவறானவைகளா யிருந்தன என்று சிலர்*

நினைக்கின்றார்கள், எனவே அவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க அவர்கள் நேரம் செலவிடுவதில்லை. பிசாசானவன் ஒரு சிகப்பு உடையில், கொம்புகளுடனும் நீட்டுக் கொண்டிருக்கும் வாலுடனும் நம்மிடத்தில் வந்திருந் தான் என்றால், ஏராளமான சிந்தனை நமக்கு மிச்சமாகி இருக்கும். அப்போது நாம் அவனது சோதித்தலுக்கு, "அது சாத்தானிடமிருந்து வருகிறது, எனவே அது தவறானதாக உள்ளது" என்ற பதில் அளிக்க முடிந்திருக்கும். துரதிர்ஷ்டவசமாக, அவன் நம்மிடத்தில் "ஒளியின் தூதனு டைய வேஷத்தில்'' (2 கொரி. 11:14) வர முடியுமே. ஒரு குறிப்பிட்ட சோதனையானது ஏன் தவறானதாக உள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ளவில்லை என்றால் அவன் நம்மை சுலபமாக வஞ்சிக்க முடியும். [7]வசனத்தைத் தவறாகப் பயன்படுத்தும் இவ்வகையான சில உதாரணங்களைத் தர நீங்கள் விரும்பலாம். [8]The Living Bible என்ற வேதாகமத்தின் பொழிப்புரையில், "உன் தேவனாகிய கர்த்தரை மதியீனமாகப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே!'' என்றுள்ளது. [9]தாபோர் மலையிலேயே இந்த சோதனை நடைபெற்றது என்று பாரம்பரியம் கூறுகிறது (கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம் என்ற வரைபடத்தில் காணவும்), ஆனால் அது எந்த மலை என்று வேத வசனம் கூறுவதில்லை. [10]இங்கு சோதனையில் ஒரு பொய் உள்ளடங்கியிருக்கிறது என்று சிலர் நம்புகின்றார்கள்: "சாத்தான் தன்னால் தர முடியாததை வாக்களித்தான்" [என்கின்றார்கள்]. இப்படிப்பட்ட சோதனையானது உங்களிடம் அல்லது என்னிடம் செயல்பட முடியும் ஆனால் இயேசுவிடம் நிச்சயமாகச் செயல்படாது, அவர் ஆவி உலகம் பற்றிய நெருக்கமான அறிவு உடையவராயிருந்தார்.

[11]இதே போன்றதொரு சொல்விளக்கத்தைப் பவுல் 2 கொரிந்தியர் 4:4ல் பயன்படுத்தினார். தேவனே *நிறைவான கட்டுப்பாட்டைக்* கொண்டுள்ளார் என்றும் அவர் சாத்தான் கொண்டுள்ள எந்த அதிகாரத்தையும் *அனுமதித்துள்ளார்* என்றும் புரிந்துகொள்ளப்பட வேண்டும். பிசாசின் நடவடிக்கைகளைத் தேவன் எல்லைக்கு உட்படுத்துகின்றார் ஆனால் இதைப் பற்றிய ஒரு கலந்துரையாடலானது இந்தப் பாடத்தின் கண்ணோக்கிற்கு அப்பாற்பட்டதாக உள்ளது. (அந்த தலைப்பின் மீதான அதிகமான உட்கண்ணோட்டத்திற்கு, யோபு புத்தகத்தின் முதல் இரண்டு அத்தியாயங்களை வாசிக்கவும்.) இந்தக் கணத்தில், மூன்றாவது சோதனையானது உண்மையான சோதனையாக இருந்தது என்று புரிந்துகொள்ளுதலே வாசகர் களுக்குப் போதுமானதாக இருக்கிறது. [12]இயேசு மரித்திராதிருந்தால் நீங்களும் நானு ம் இரட்சிக்கப்பட முடியாது என்பதை நாம் புரிந்துகொண்டுள்ளோம் (எபி. 9:22; எபே. 1:7) - ஆனால் உண்மை யில் பிசாசானவன், இயேசுவிடத்தில் (சாத்தானாகிய அவன் செய்தது போலவே) அவரும் பிறரை மறந்து விட வேண்டும் என்றும் தம்மைப் பற்றி மட்டும் அவர் நினைத்துப் பார்க்க வேண்டும் என்றும் கூறினான். கிறிஸ்து ராஜாவாகவே பிறந்திருந்தார், பிசாசானவன் அவருக்கு கிரீடம் சூட்டுவதாகவும் எல்லா மனித குலத்தின் பற்றுறுதியைத் தருவதாகவும் வாக்களித்தான். [13]Tinsel என்பது, விசேஷ நிகழ்ச்சிகளுக்கு அலங்காரம் செய்யப் பயன்படும் விலைமலிவான பளபளக்கும் பொருளாகும். அந்த நிகழ்ச்சி முடிந்தபின்பு, அந்தப் பொருள் எறியப்பட்டு விடும். [14]இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும் போது, தேவனுடைய உதவியை விரும்பும் ஒருவர், அவருடன் சரியான வகையில் உறவுபட்டிருக்க வேண்டும் என்று நீங்கள் விளக்கப்படுத்த வேண்டும். முதலாவது, ஒருவர் நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல் மூலமாக தேவனு டைய பிள்ளையாக வேண்டும் (மாற். 16:16; அப். 2:38). பின்பு ஒருவர் அவருடன் சரியான உறவில் *நிலைத்திருப்பது* அவசியமாகிறது. யாக்கோபு 4:7, "நாம் பிசாசுக்கு எதிர்த்து நிற்பதற்கு'' முன்பு, முதலில் நாம் ''தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க'' வேண்டும் என்று குறிப்பாக உணர்த்துகிறது.

# இயேசு சோதிக்கப்படுதல்

## மத்தேயு 4:1-11







“நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்” (வ. 3).



“ ‘மனுஷன் அப்பத்தினாலேமாத்திர மல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப் படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்’ என்று எழுதியிருக்கிறதே” (வ. 4).




“நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில் … என்பதாய் எழுதியிருக்கிறது” (வ. 6).

**நம்பிக்கை** **எதிர்** **சோதித்தல்**

“ ‘உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக’ என்றும் எழுதியிருக்கிறதே” (வ. 7).




“நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளை யெல்லாம் உமக்குத் தருவேன்” (வ. 9).




“அப்பாலே போ சாத்தானே! ‘உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக’ என்று எழுதியிருக்கிறதே” (வ. 10).

(மேல்பகுதியில் உள்ள படத்தைப் பிரசங்க முடிவில் பின்வருமாறு அமைக்கவும்)



## 14

# ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல்வேளை

### *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #4*

III. *இயேசுவின் ஊழியம் ஆரம்பித்தல் (தொடர்கிறது).*
   D. *(யூதேயாவில்) இயேசுவின் முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51).*
   E. *(கலிலேயாவின் கானாவூரில்) இயேசுவின் முதல் அற்புதம் (யோவா. 2:1-11).*
   F. *(கலிலேயாவின்) கப்பர்நகூமில் இயேசு முதலில் தங்குதல் (யோவா. 2:12).*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை.*
   A. *இயேசுவின் ஊழிய காலத்தில் வந்த முதல் பஸ்கா.*
      1. *தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (யோவா. 2:13-25).*
      2. *நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (யோவா. 3:1-21).*
   B. *யூதேயாவில் முதல் ஊழியம் (மற்றும் யோவானாலும் மேலும் சாட்சி கொடுக்கப்படுதல்) (யோவா. 3:22-36).*

## அறிமுகம்

ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல்வேளை உண்டு என்று கூறப்படுகிறது. முந்திய பாடங்களில், இயேசுவின் வெளியரங்கமான ஊழியத்தில் நாம் பல "முதலாவது" நிகழ்ச்சிகளைக் கண்டுள்ளோம், ஆனால் இந்தப் பாடமானது அவற்றினால் நிறையப்பட்டதாக உள்ளது.

கிறிஸ்துவின் ஊழியத்தின் தொடக்க நாட்கள் "மறைவாயிருந்த காலம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. ஒப்பீட்டு எழுத்தாளர்கள் இயேசுவின் வெளியரங்கமான ஊழியம் பற்றிய தங்களின் அறிக்கைகளை, கலிலேயா வில் பின்னாட்களில் அவர் பெற்ற வெற்றியின்மீது கவனம் செலுத்தித் தொடங்கினார்கள். முந்திய, குறைவாகக் காட்சிக்குட்படும் நாட்கள் பற்றி நாம் அறிய வேண்டும் என்று யோவான் விரும்பினார்.

## முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51)

*"சமீபித்திருக்கிறது!"* என்ற பாடமானது இயேசுவைப் பற்றி

*யோவானின் முதல் சாட்சியத்துடன் முடிவு பெற்றது: "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி!" (வ. 29). அடுத்த நாளில், யோவான் தமது இரு சீஷர்களுடன் இருந்தார். அவர்களில் ஒருவர், சீமோன் பேதுருவின் சகோதரரான அந்திரேயா (வ. 40) என்பவராயிருந்தார். இன்னொருவர், அநேகமாக நான்காம் சுவிசேஷ விவரத்தை எழுதிய யோவானாக இருந்திருப்பார்.[2] ஏதோ சில காரணங்களினால் யோவான் தமது பெயரை குறிப்பிடத் தயங்கினார்.[3]*

*இயேசு நடந்து செல்லுகையில் பிரசங்கியார் மறுபடியும், "இதோ, தேவ ஆட்டுக்குட்டி!" (வ. 36) என்று கூறினார். அவரது இரண்டு சீஷர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றிச் சென்று அந்த நாளை அவருடன் செலவிட்டார்கள் (வ. 37-39). வேத வசனப் பகுதியானது பின்வருமாறு காலவேளையைத் தருகிறது: "பத்து மணி வேளை" (வ. 39). யோவான் யூதர்களின் காலக் கணக்கு முறையைப் பயன்படுத்தினார் என்றால், இது மாலை சுமார் நான்கு மணியாக இருந்திருக்கும்.[4] அவர் ரோமர்களின் காலக் கணக்கு முறையைப் பயன்படுத்தினார் என்றால், இது காலை 10.00 மணியாக இருந்திருக்கும்.[5] பெயர் குறிப்பிடப்படாத சீஷர் யோவான்தான் என்று யூகித்தால், அவர் மிகச் சரியான நேரத்தை நினைவில் வைக்கும் அளவுக்கு இந்த நிகழ்ச்சி மிகவும் நினைவுக்கூரத்தக்கதாக இருந்தது.*

*இயேசுவுடன் பல மணி நேரங்கள் இருந்த பிற்பாடு, அந்திரேயா தமது சகோதரரான சீமோனைக் கண்டு, அவரைக் கிறிஸ்துவிடம் அழைத்து வந்தார் (வ. 40-42). மற்றவர்களை இயேசுவிடம் அழைத்து வருதல் என்பது அந்திரேயாவின் திறமைகளில் ஒன்றாக இருந்தது (யோவா. 6:8, 9; 12:20-22ஐக் காணவும்). சீமோனிடத்தில் அந்திரேயாவின் வார்த்தைகள் குறிப்பிடத்தக்கவைகளாய் இருந்தன: "மேசியா(இதை மொழிபெயர்க்கையில் கிறிஸ்து என்று அர்த்தப்படுகிறது)வைக் கண்டோம்" (1:41). இயேசுவின் முதல் சீஷர்கள் அவர் யார் என்பதைப் புரிந்துணர்ந்து கொண்டார்கள் (வ. 45, 49 ஆகியவற்றையும் காணவும்).[6]*

*இயேசு சீமோனைச் சந்தித்தபோது, அவர் இனி "கேபா" அல்லது "பேதுரு" என்று அழைக்கப்படுவார் என்று கூறினார். இவற்றில் முதல் பெயர் அரமாயிக் மொழியிலானதாகும், இரண்டாவது பெயர் கிரேக்க மொழியிலானதாகும்; இரண்டுமே "கல்" என்று அர்த்தப்படுகின்றன. இயேசு நம் எல்லாரிலும் உள்ள சாத்தியக்கூறுகளைக் காண்கிறது போலவே, இந்த மனிதரில் இருந்த சாத்தியக்கூறுகளையும் கண்டார்.*

*அடுத்த நாளில், இயேசு கலிலேயாவுக்குத் திரும்புவதற்கு ஆயத்தமான வேளையில், அவர் யோவான் ஸ்நானனுடைய இன்னொரு சீஷராக இருந்திருக்கக் கூடிய பிலிப்புவைக் கண்டார். அப்போதும் இப்போதும் சீஷத்துவத்திற்கான இயேசுவின் அழைப்பானது "என்னைப் பின்பற்றுங்கள்" (வ. 43) என்பதாகவே உள்ளது. பிலிப்பு உடனடியாக நாத்தான்வேல் என்ற பெயர் கொண்ட ஒரு நண்பரைக் கண்டு, அவரை இயேசுவிடம் அழைத்து வந்தார் (வ. 45, 46).*

*கிறிஸ்து, நாத்தான்வேலின் பண்பு மற்றும் அவரின் வாழ்வு பற்றிய விவரங்களை வெளிப்படுத்தியதின் மூலம் அவரைத் திகைப்படையச்*

செய்தார் (வ. 47-49). இயேசு அவரிடம், "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்" என்று கூறினார் (வ. 50).[7] நாத்தான்வேல் யார் என்று நிச்சயமாக நமக்குத் தெரியவில்லை, ஆனால் இவர் இயேசுவின் பன்னிரு அப்போஸ் தலர்களில் ஒருவரான பர்த்தொலொமேயு என்பவர்தான் என்று நினைக்கப் படுகிறது.[8]

இவ்விதமாக இயேசு தமது முதல் சிறு குழுவினரான சீஷர்களை ஆதாயப்படுத்தினார் (2:2ஐக் காணவும்).[9] "சீஷன்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ''கற்றுக் கொள்பவர்'' என்ற அடிப்படை அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இது ஒருவரிடத்திலிருந்து கற்றுக்கொள்வதற்காக அவரைப் பின்பற்றும் இன்னொருவரைக் குறித்தது. இயேசு நம் எல்லாரையும் அவரது சீஷர்களாகக் கொண்டிருப்பார்.[10]

## முதல் அற்புதம் (யோவா. 2:1-11)

இயேசுவும் அவரது சீஷர்களும் வடக்குமுகமாய்க் கலிலேயாவை நோக்கிப் பயணமானார்கள். மூன்றாவது நாளில், அவர்கள் கலிலேயாவின் கானாவூருக்குச் சென்று சேர்ந்தார்கள், இது நாசரேத்தூரின்[11] அண்மையில் இருந்ததும், நாத்தான்வேலின் சொந்த ஊருமாகிய (யோவா. 21:2) ஒரு கிராமம் ஆகும். அவர்கள் அங்கு ஒரு திருமண வைபவத்தில் கலந்துகொள்ள வந்திருந்தார்கள் (2:1, 2). இயேசு, தாம் இரட்சிக்க வந்திருந்த மக்களின் வாழ்வில் தம்மையே ஈடுபடுத்திக் கொண்டவராக இருந்தார்.

இயேசுவின் தாயாகிய மரியாளும் அங்கிருந்தார் (வ. 1). தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள், மரியாள் திருமணப் பந்தியில் பணிவிடை செய்ய உதவியதைச் சுட்டிக்காண்பிக்கின்றன (வ. 3, 5 ஆகியவற்றைக் காணவும்). ஒருவேளை, ஒரு உறவினர் அல்லது ஒரு நண்பரின் திருமணமாய் இருந்திருக்கும்.

வைபவத்தின் மத்தியில், விருந்துணவுப் பொருள் தீர்ந்து போயிற்று. எதிர்பார்த்ததற்கும் மேலாக மக்கள் வந்து இருக்கலாம். எவ்வகையிலும், அது மிகவும் சங்கடப்படுத்தக் கூடிய சூழ்நிலையாக இருந்தது. மரியாள் தம் மகனிடம் வந்து, "அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை" (வ. 3) என்று கூறினார். அவர் என்ன செய்யும்படியாக மரியாள் எதிர்பார்த்தார் என்று நாம் அறிவதில்லை; ஏனெனில், அவர் இதற்கு முன்பு அற்புதம் எதுவும் செய்தது இல்லை (வ. 11). ஆயினும், மரியாள் பல ஆண்டுகளாக அவரைச் சார்ந்திருந்தார் மற்றும் அவரால் ஏதாவது செய்ய முடியும் என்று மரியாள் நினைத்தார்.

இயேசுவின் பதில் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது: "ஸ்திரீயே எனக்கும் உனக்கும் என்ன? என்வேளை இன்னும் வரவில்லை"[12] (வ. 4). அந்த சமுதாயத்தில் ஒருவர் தம் தாயை "ஸ்திரீயே" [பெண்ணே] என்று அழைத்தல் என்பது அவமானப்படுத்துவதாக இருந்தது இல்லை.[13] (இதே சொற்றொடரானது பிற்பாடு மென்மையுடன் பயன்படுத்தப்படும் [யோவா. 19:26].) இருந்த போதிலும், கிறிஸ்துவின் வார்த்தைகள் ஒரு மென்மையான கண்டனமாக இருந்தன. எர்னஸ்ட் ஹவுஸர் அவர்கள், இது "இயேசு

மரியாளின் மகனாயிருந்தபோதிலும், மரியாளை 'சார்ந்தவராக' இருப்ப தில்லை என்ற புரிந்துணருதலுக்காக மரியாளைக் கடினமாக்குவதை" அர்த்தப்படுத்தும் மூன்று கடிந்துரைகளில் ஒன்றாக இருந்தது என்று எழுதினார். ஹவுஸர் அவர்கள், இவ்விடத்தில் கிறிஸ்துவின் கூற்றானது "இனி முதற்கொண்டு அவரது பூமிக்குரிய பிணைப்பானது தளர்த்தப்பட வேண்டியதாயிருக்கிறது என்பதைக் கவனிக்கப் பயன்படுகிறது" என்றும் கூடுதலாகக் கூறினார்.[14]

இயேசுவின் பதிலுரையால் மரியாள் தடைசெய்யப்படாதிருந்தார். அவர் அங்கிருந்த வேலைக்காரர்களிடத்தில், "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்" என்று கூறினார் (வ. 5) - இது எவர் ஒருவருக்கும் நல்ல அறிவுரையாக உள்ளது! இயேசு தமது அற்புத வல்லமையின் இந்தப் பயன்பாடானது, வேலைக்காரர்கள் மட்டுமே அதை அறிந்திருக்கும் வரையிலும், (நன்மை செய்தல் என்ற) அவற்றின் நோக்கங்களுக்குச் சீர்பொருந்தாததாக இராது என்றும் தமது (அவரது மரண காலமாகிய) "வேளையைத்" துரிதப்படுத்தாது என்றும் தீர்மானித்தார் என்பது உறுதி. அப்போது அவர், தண்ணீரை திராட்ச ரசமாக்கிய நன்கு அறியப்பட்ட அற்புதத்தைச் செய்தார் (வ. 6-10).

இந்த நிகழ்ச்சியானது, மதுபான வகைகளைப் பயன்படுத்துவதற்கு இயேசு சம்மதம் தெரிவித்து ஆதரித்தார் என்று நிரூபிக்கிறதா அல்லவா என்பது பற்றி விவாதங்கள் மிகவும் எழும்பியிருக்கின்றன. ஒரு சாரார், "திராட்சரசம்" என்ற வார்த்தையையும் வசனம் 10ல் பதிவு செய்யப் பட்டுள்ள குறிப்புரையையும் வலியுறுத்துகின்றார்கள். இன்னொரு சாரார், இயேசு, 540 லிட்டர் முதல் 810 லிட்டர் வரையிலான மதுபானத்தை உண்டாக்கினார் என்று குறிப்பிட்டுள்ளார்கள்;[15] அந்தத் திராட்ச ரசமானது போதை தரக்கூடிய பொருளைக் கொண்டிருந்தது என்றால்,[16] அவர் மதுபானம் அருந்தும் பழக்கத்தை உற்சாகப்படுத்துபவராக இருந்திருக்க வேண்டும் - இந்தப் பழக்கம் வேதாகமம் முழுவதிலும் கண்டனம் பண்ணப் பட்டுள்ளது (நீதி. 20:1; கலா. 5:21). ஆயினும் இது இந்தக் கேள்விக்குத் தீர்வளிக்க பயன்படுத்தும் வசனப்பகுதியாக இருப்பதில்லை.[17] "திராட்சரசம்" (oinos) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது திராட்சரசத்திற்கான பொதுவான வார்த்தையாக உள்ளது, இது திராட்சப் பழத்திலேயே இருக்கும் சாற்றினைக் குறிக்கக் கூடப் பழைய ஏற்பாட்டில்[18] பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏசா. 65:8).

இப்படிப்பட்ட வழக்காடுதல்கள் இவ்வசனத்தின் கருத்தைத் தவற விடுகின்றன: அமைதியாக, ஏறக்குறையக் கவனிக்கப்படாத நிலையில், மறைவான ஒரு சிறிய கிராமத்தில், இயேசு தமது ஆவிக்குரிய தசைகளைத் தளர்த்தத் தொடங்கினார். அவர் தமது முதல் அற்புதத்தை நிகழ்த்தி யிருந்தார்!

இன்றைய நாட்களில் நாம் "அற்புதம்" என்ற வார்த்தையை குறிப்பிடத் தக்க ஏதாவதொன்றைக் குறிப்பிடுவதற்காக முன் முயற்சியற்ற வகையில் பயன்படுத்துகின்றோம். வேதாகமம் இந்த வார்த்தையை இயற்கைக்கு மேலான செயல் ஒன்றைக் குறிப்பதற்காக விசேஷித்த வகையில் பயன்படுத்

*துகிறது. இயேசு தமது வாழ்வின் முதல் முப்பது ஆண்டுகளில் குறிப்பிடத் தக்கவற்றை மிக அதிகமாய்ச் செய்திருப்பார் என்பது உறுதி, ஆனால் இதுதான் அவர் தமது இயற்கைக்கு மேலான வல்லமைகளைப் பயன் படுத்திய முதல் வேளையாக இருந்தது. நாம் இயல்பான ஒரு உலகத்தில் வாழ்வதால், இயற்கைக்கு மேலானவற்றை விளக்கியுரைத்தல் என்பது நமது திறமைக்கு அப்பால் உள்ள விஷயமாக இருக்கிறது. விசுவாசத்தினால் நாம் இந்தப் பாடக்கருத்து பற்றி வேதாகமம் கூறுவதை ஏற்றுக் கொள்ளுகின்றோம்.*

*இந்த நிகழ்ச்சியின் தனிச்சிறப்பை யோவான் தவறவிடாதிருந்தார். அவர் அற்புதத்திற்கான தமது பிரியமிகுந்த "sign"[19] [தமிழ் வேதாகமத்தில் இது "அற்புதம்" என்றே உள்ளது] என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் (வ. 11அ). இயேசு செய்தது, அவர் உண்மையிலேயே தேவனிடத்திலிருந்து வந்தார் என்பதற்கு ஒரு அடையாளமாய் இருந்தது! கிறிஸ்து "தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்" என்பதாக யோவான் குறிப்பிடுகிறார் (வ. 11அ)! இது அவர் செய்யவிருந்த பலத்த செய்கைகளில் முன் சுவையாக இருந்தது. மற்றும் இந்த முதல் "அற்புதத்தின்" விளைவாக, "அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" (வ. 11ஆ). மேசியா என்ற வகையில் இயேசுவின்மீது அவர்கள் கொண்ட விசுவாசமானது ஆழப்படுத்தப்பட்டது!*

## *கப்பர்நகூமில் முதலாவது தங்கியிருத்தல் (யோவா. 2:12)*

*கானாவூரில் இருந்து இயேசு வடக்கு மற்றும் கிழக்கு திசைகளில் பயணம் செய்தார்.[20] "அதன்பின்பு அவரும் அவருடைய தாயாரும் அவருடைய சகோதரரும் அவருடைய சீஷர்களும் கப்பர்நகூமுக்குப் போய் அங்கே சிலநாள் தங்கினார்கள்" (வ. 12). கப்பர்நகூம் ஒரு சுறுசுறுப்பான வியாபார நகரமாக இருந்தது, இது பேதுரு மற்றும் அந்திரேயாவின் சொந்த ஊரான பெத்சாயிதாவுக்கு அண்மையில் கலிலேயாக் கடலோரத்தில் இருந்த ஒரு நகரம் ஆகும் (யோவா. 1:44).[21] அந்த நகரம், பலஸ்தீனத்தைக் கடந்துசென்ற பிரதானமான கிழக்கு - மேற்கு சாலைக்கு அருகாமையில் இருந்தது. பிற்பாடு இது இயேசுவின் இயக்கங்களுக்கு மையப்பகுதியாக விளங்கவிருந்தது (மத். 4:13).*

## *முதல் பஸ்கா (யோவா. 2:13-25)*

*இயேசு, கப்பர்நகூமில் தமது பயணத்தை குறுகலாக முடித்துக் கொண்டு, பஸ்கா பண்டிகையில் கலந்து கொள்ளச் சென்றார்.[22] இயேசு தமது பன்னிரெண்டு வயது முதல் இந்தப் பண்டிகையில் தவறாது கலந்து கொண்டார் என்று நாம் தைரியமாய்க் கூறலாம் (லூக். 2:41, 42), ஆனால் இது அவரது வெளிப்படையான ஊழியத்தில் முதலாவது பஸ்காவாக இருந்தது.[23] இது அவரது ஊழியம் தொடங்கியதிலிருந்து அவர்*

வெளிப்படையாகத் தோற்றமளித்த முதலாவது நிகழ்ச்சியாகவும் இருந்தது. இது அவர் தேவாலயத்தை முதன் முறை சுத்திகரித்தல் என்ற நிகழ்ச்சியுடன் நாடக பாணியில் தொடங்கிற்று![24]

உலகம் முழுவதிலும் இருந்து யூதர்கள், பிரதானமான யூதத்துவப் பண்டிகைகளுக்காக எருசலேம் நகருக்கு வந்ததின் விளைவாக, தேவாலய மானது வர்த்தக மையமாகியிருந்தது (அப். 2:5, 9-11அ ஆகியவற்றைக் காணவும்). ஒவ்வொரு யூதரும் தேவாலய வரியாக ஆண்டுதோறும் அரைசேக்கல் மதிப்புள்ள நாணயத்தைச் செலுத்தும்படிக்கு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.[25] இந்த வரியை அந்நிய நாட்டுப் பணமதிப்பில் செலுத்துவதை தேவாலய அதிகாரிகள் அனுமதிப்பதில்லை, எனவே பணம் மாற்றுபவர்கள் தேவைப்பட்டனர். ஒவ்வொரு யூதரும் பண்டிகை நாட்களின்போது, குறிப்பிட்ட மிருகபலியை செலுத்த வேண்டியிருந்தது.[26] மற்ற நாடுகளில் இருந்து வந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களுடன் மிருகங்களைக் கொண்டு வர முடியாது இருந்தது, எனவே அவர்கள் அங்கு வந்து சேர்ந்தபின்பு அவற்றை வாங்க வேண்டியிருந்தது. இவ்விதமாக, தேவாலயத்தில் மிருகங்களை விற்கும் பழக்கம் தொடங்கிற்று. இத்தொழில்கள் யாவையும் புறஜாதியாரின் மண்டபத்தில் நடைபெற்றன என்பது தெளிவு.[27] இவைகள் உலகெங்கிலும் இருந்து அங்கு பயணமாகி வந்தவர்களுக்குச் சேவை செய்தல் என்ற நோக்கத்துடன் தொடங்கியிருக்க லாம், ஆனால் அவை ஆசாரியர்களால் கட்டுப்படுத்தப்பட்டு, பணம் சம்பாதிக்கும் திட்டமாகச் சீரழிக்கப்பட்டிருந்தன.

இயேசுவின் முதல் வெளியரங்கமான நடவடிக்கையானது தேவனு டைய வீடு மற்றும் தேவனுடைய சித்தம் ஆகியவற்றின் மீது அவரது வைராக்கியம் பற்றிய எடுத்துரைப்பாக உள்ளது. அவர் அந்த வியாபாரி களை விரட்டியபோது, "என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்கா திருங்கள்" (வ. 16ஆ) என்று கூறினார். பிற்பாடு இதே போன்ற ஒரு நிகழ்ச்சியில், அவர் " 'என்னுடைய வீடு ஜெபவீடு' என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் 'கள்ளர்' குகையாக்கினீர்கள்" (மத். 21:13) என்று கூறவிருந்தார்.

இயேசுவின் முதல் வெளியரங்கமான நடவடிக்கையானது, தேவனால் அங்கீகரிக்கப்பட்ட அவரது அதிகாரத்துவத்தைப் பற்றிய ஒரு எடுத்துரைப் பையும் ஏற்படுத்திற்று (மத். 3:17; மத். 7:29ஐக் காணவும்). கலவரம் அடைந்த தேவாலய அதிகாரிகள் அவரது அந்த அதிகாரத்துவத்திற்கு அறைகூவல் விடுத்தனர். The New Living Translation என்ற வேதாகமத்தில், யோவான் 2:18 வசனமானது, "இவைகளைச் செய்வதற்கு உமக்கு என்ன உரிமை உள்ளது?" என்று தரவழைத்துள்ளது. "யூதத்தலைவர்கள், 'இந்த அதிகாரம் உமக்குத் தேவனிடத்திலிருந்து வந்தது என்றால், அதை நிரூபிப்பதற்கு எங்களுக்கு ஒரு அற்புத அடையாளத்தைக் காண்பியும்' என்று வற்புறுத்தி னார்கள்."

இயேசுவைக் கண்டு அவரை விசுவாசிக்க விருப்பம் உள்ளவர்களுக்கு, அவர் தமது ஊழியத்தின் போது பல அடையாளங்களைத் தரவிருந்தார் (வ. 23ஐக் காணவும்), ஆனால் உயிர்த்தெழுதல் என்பதுதான் மிகவும்

தனிச்சிறப்பு வாய்ந்த அற்புதமாக இருக்கும் (ரோமர் 1:4). இவ்விதமாக அவர், "இந்த ஆலயத்தை[28] இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" (யோவா. 2:19) என்று கூறினார். "அவரோ தம்முடைய சரீரமான ஆலயத்தைக் குறித்துப் பேசினார்" (வ. 21), ஆனால் அவரது விரோதிகள் அவரைத் தவறாகப் புரிந்துகொண்டார்கள் (வ. 20[29]), அவர்கள் தங்களைச் சுற்றிச் சூழ்ந்திருந்த சலவைக்கல் மற்றும் பொன் ஆகியவற்றினால் ஆன உயர்ந்து நின்ற கட்டிடத்தையே அவர் குறிப்பிட்டதாக நினைத்தார்கள்.[30]

இயேசு எருசலேமில் இருந்தபோது, அவர் வெளியரங்கமான தமது முதல் அற்புதத்தைச் செய்தார் (வ. 23). அந்த அற்புதங்களின் இயல்பு பற்றி நமக்குக் கூறப்படுவதில்லை, ஆனால் அவற்றில் நோயாளிகளைக் குணமாக்குதலும் உள்ளடங்கியிருந்திருக்கும் (மத். 4:23).[31] விசுவாசிகளின் குழு வளரத் தொடங்கிற்று (யோவா. 2:23), ஆனால் அவர்களின் விசுவாசம் மெல்லியது/இளைப்புள்ளது என்பதை இயேசு அறிந்தார் (வ. 24, 25). The Living Bible என்ற வேதாகமம், வசனம் 25ஐ, "மனித இயல்பு எவ்வளவாக மாறக்கூடியதாக இருக்கிறது என்பதை எவரொருவரும் அவருக்குக் கூறவேண்டியிருந்ததில்லை!" என்று பொழிப்புரைப்படுத்துகிறது.

## முதல் விரிவான உரை (யோவா. 3:1-21)

இயேசு எருசலேமில் இருந்தபோது, "யூதருக்குள்ளே அதிகாரியான"[32] நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ... இராக்காலத்திலே இயேசு வினிடத்தில் வந்து ... (வ. 1, 2). நிக்கொதேமு "இராக்காலத்திலே" இயேசு வினிடத்தில் வந்து என்பது சில தனிச்சிறப்புடையதாக இருந்திருக்கலாம் (யோவா. 19:39); ஒருவேளை இது, அவரது பகுதியில் சில பதட்ட உணர்வைச் சுட்டிக்காண்பிக்கலாம்.[33] அவர் இயேசுவின் அற்புதங்களினால் மனங்கவரப்பட்டவர்களில் ஒருவராக இருந்தார் (2:23). அவர், "ரபீ,[34] நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்" (3:2) என்று கூறினார்.

மனிதருடைய சிந்தனைகளை அறியக்கூடியவராக இருந்த இயேசு (2:24, 25), நிக்கொதேமு எதற்காக வந்தார் என்பதை அறிந்திருந்தார். அந்த யூதத்தலைவர், மேசியாத்துவ இராஜ்யத்தைப் பற்றிக் கேள்விகளைக் கொண்டிருந்தார் என்பது தெளிவு. அவர் இராஜ்யத்தைப் பற்றிய யூதர் களின் பொதுவான தவறான கருத்துக்களையும் கொண்டிருந்தார். இவ்வித மாக, கிறிஸ்து "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே[35] உனக்குச் சொல்லுகிறேன்" (3:3) என்று கூறினார்.

மறுபடியும் பிறத்தல் என்ற உருவகம் மனதில் ஆழமாகப் பதியக் கூடியதாக உள்ளது மற்றும் இது இயேசுவின் சீஷராகும் எவரொருவரையும் பண்புபடுத்த வேண்டிய மாபெரும் மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. ஆயினும், சீஷத்துவத்தின் நிபந்தனைகளை வரைக்குறிப்பிடுதல் என்பது

[இவ்விடத்தில்] இயேசுவின் நோக்கமாக இருக்கவில்லை.[36] சபை நிலை நாட்டப்பட்ட பின்பு, கிறிஸ்தவராவதற்கு ஒருவர் "மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று ஒருவருக்கும் ஒருக்காலும் கூறப்படவில்லை. அதற்குப் பதிலாக, நேர்மையுடன் விசாரித்தவர்கள், விசுவாசித்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறப்பட்டார்கள் (அப். 2:37, 38; 22:16).[37]

மாறாக, மேசியாத்துவ இராஜ்யத்தின் இயல்பை வலியுறுத்துதல் என்பதே இயேசுவின் நோக்கமாக இருந்தது: அது (இஸ்ரவேல் இராஜ்யம் இருந்தது போல) பூமிக்குரிய பிறப்பினால் பிரவேசிக்கக் கூடிய பூமிக்குரிய இராஜ்யம் அல்ல. மாறாக, அது பரலோகத்திற்குரிய ஒரு மறுபிறப்பினால் (அல்லது பண்பின் மாற்றத்தினால்) பிரவேசிக்கக்கூடிய ஒரு பரலோக இராஜ்யமாக இருந்தது. அது மனித சேனைகளின் அணிவகுப்பினால் அடையாளப்படுத்தப்பட்ட ஒரு ராஜ்யமாக இருந்ததில்லை, ஆனால் தேவனுடைய ஆவியானவரின் செயல்பாட்டினால் பண்புபடுத்தப்பட்ட ஒன்றாக இருந்தது (வ. 6-8[38]). நிக்கொதேமுவுக்கு இவைகள் புதிய கருத்துக்களாய் இருந்தன, அவற்றைப் புரிந்துகொள்ள அவர் சிரமப்பட்டார் (வ. 4, 10).

இயேசுவின் அடிப்படைச் செய்தியானது யோவான் சுவிசேஷ விவரத்திற்கே உரிய தனிப்பட்ட விரிவாக்கப் பகுதி ஒன்றினால் பின்தொடரப்படுகிறது. யோவான் சுவிசேஷப் புத்தகமானது அதன் ஆழ்ந்த சிந்தனைக்குரிய பகுதிகளுக்காகக் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. இந்த வார்த்தைகள் நிக்கொதேமுவுடன் இயேசுவின் கலந்துரையாடலினுடைய தொடர்ச்சியா அல்லது இவைகள் யோவானின் ஏவுதல் பெற்ற விளக்கவுரை களா என்பதை நாம் அறியோம்.[39] எவ்வகையில் இருந்தாலும் இவைகள், சிந்தனையைத் தூண்டும் சத்தியங்களின் பெருக்கத்தைக் கொண்டுள்ளன - இவற்றில் இயேசு (சிலுவையில்) "உயர்த்தப்படுவார்" (வ. 14, 15) மற்றும் இயேசுவே கிறிஸ்து (மேசியா) என்று விசுவாசிக்க வேண்டியதன் அவசியம் (வ. 15, 16, 18) ஆகியவை உள்ளடங்கியிருக்கின்றன.

இந்த உரையாடலில் வேத வசனத்தில் நன்கு அறியப்பட்ட வசனப் பகுதியொன்றும் உள்ளடங்கியிருக்கிறது: யோவான் 3:16, இது "வேதாகமத்தின் தங்க வாக்கியம்" என்று அழைக்கப்படுகிறது. இது (சிலர் உரிமைகோருகிறபடியாக) இரட்சிப்பைப் பற்றி நாம் அறிய அவசியமான எல்லாவற்றையும் கொண்டிருப்பதில்லை, ஆனால் இது தேவன் நம்மீது கொண்டுள்ள அன்பு பற்றிய ஒரு அழகும் வல்லமையும் நிறைந்த கூற்றாக உள்ளது.

## யூதேயாவில் முதல் ஊழியம்[40]
## (யோவா. 3:22-36)

எருசலேமில் பண்டிகைக்குப் பின்பு, இயேசுவும் அவரது சீஷர்களும் பிரசங்கிப்பதற்கும் போதிப்பதற்கும் யூதேயாவின் நாட்டுப்புறங்களுக்குச் சென்றார்கள். இந்த ஊழியத்தின் கால அளவானது மூன்று முதல் எட்டு

*மாதங்கள் வரையிலுமாக மதிப்பிடப்படுகிறது. இந்தக் காலகட்டத்தைப் பற்றி இரண்டு தகவல் துணுக்குகள் நமக்குத் தரப்பட்டுள்ளன. முதலாவது, கிறிஸ்து தமது சீஷர்களுடன் "நேரம் செலவிட்டுக் கொண்டிருந்தார்"; அவர்களுக்கு அவர் போதித்துக் கொண்டும், அவர்கள் அவரை அறிவதற்கு அனுமதித்துக் கொண்டும் இருந்தார். இரண்டாவது, அவர் தமது முன்னோடியானவர் செய்தது போலவே, "ஞானஸ்நானம்" கொடுத்துக் கொண்டிருந்தார் (வ. 22).[41]*

*யூதேயாவில் இயேசுவின் ஊழியமானது வெற்றிகரமாயிற்று என்பது தெளிவு, ஏனெனில் யோவானின் சீஷர்கள், "இதோ, அவர் ஞானஸ்நானங் கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள்" (வ. 26) என்று முறையிட்டார்கள். அடுத்த அத்தியாயமானது, "யோவானைப்பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்கிறார். (இயேசு தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை, அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்") (யோவா. 4:1, 2) என்று எடுத்துரைக்கிறது.*

*இயேசுவின் வெற்றி [யோவான்] ஸ்நானனால் வரவேற்கப்பட்டது, ஆனால் அவருடன் [யோவானோடு] எஞ்சி நின்ற சீஷர்களினால் வரவேற்கப்படவில்லை. அவர்கள் பொறாமையினால் நிறைந்தார்கள் (வ. 26). தளபதிகளுக்கிடையில் நிலவிய பொறாமையினால் யுத்தங்கள் இழந்து போகப்பட்டுள்ளன. பொறாமை என்பது கர்த்தருடைய ஊழியத்தில் இசைவுக்கு ஒரு தொடர்ந்த அச்சுறுத்தலாக இருந்து வருகிறது.*

*யோவானுடைய சீஷர்களின் முறையிடுதல்கள் அவரை, இயேசு யார் என்று மீண்டும் சாட்சி கொடுக்கும்படித் தூண்டின (வ. 27-35). [யோவான்] ஸ்நானன், இயேசுவை மேசியா என்று விசுவாசிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்:[42] "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக் கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசி யாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (வ. 36). விசுவாசித்தல் மற்றும் கீழ்ப்படிதல் என்ற கருத்துக்கள் ஒன்றுக்குப் பதில் மற்றொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனியுங் கள்.[43] இரட்சிக்கின்ற விசுவாசம் என்பது கீழ்ப்படிதலுள்ள விசுவாசமாக இருக்கிறது (யாக். 2:20; ரோமர் 1:5; 16:26 ஆகியவற்றைக் காணவும்).*

*யோவான் தமது சொந்தப் பணிப் பொறுப்பை மீண்டும் ஒருமுறை விவரிக்கையில் (வ. 28, 29), அவர் வேத வசனங்களில் மிகவும் மாண்புக்குரிய உணர்வுப்பூர்வமான கருத்துக்களைக் கூறினார்: "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" (வ. 30). நீங்கள் யாராயிருப்பினும் அது ஒரு பொருட்டல்ல, நீங்கள் படியிறங்கி இன்னொருவர் உங்கள் இடத்தை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டிய காலம் ஒன்று வரும். "அவர் (அல்லது அவள்) பெருகவும், நான் சிறுகவும் வேண்டும்" என்று எவ்வித விரோதமும் இன்றி நாம் ஒவ்வொருவரும் கூற முடியுமென்றால், எவ்வளவு கடின உணர்வுகள் தவிர்க்கப்படும்!*

## முடிவுரை

''ஆனால் நான் ஒருக்காலும் இதைச் செய்ததில்லையே'' என்று கூறுவதன் மூலம் சிலர் புதிய விஷயங்களை முயற்சி செய்ய மறுத்து விடுகின்றார்கள். இப்படிப்பட்ட தர்க்கம் மதிப்புள்ளதென்றால், ஏதொன்றும் ஒருக்காலும் முயற்சிக்கப்பட்டிராது. ஒரு குழந்தையானது ஒருக்காலும் தனது முதல் அடிவைப்பை எடுத்து வைக்காது அல்லது தனது முதல் வார்த்தையைப் பேசாது. ஒரு பிள்ளையானது ஒருக்காலும் வாசிக்கக் கற்றுக்கொள்ளாது. ஆண்களும் பெண்களும் ஒருக்காலும் புதிய திறன்களைக் கற்றுக்கொள்ள மாட்டார்கள். பெற்றோர்கள் ஒருக்காலும் பிள்ளைகளைக் கொண்டிருக்க மாட்டார்கள். பின்வருவதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: ஒவ்வொன்றிற்கும் ஒரு முதல் வேளை இருந்திருக்க வேண்டியுள்ளது. ஒரு புதிய பணிப்பொறுப்பானது நல்லதாகவும் அவசியமானதாகவும் உள்ளதென்றால், அதைச் செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளுங்கள். நீங்கள் உங்களையே வியப்பில் ஆழ்த்தலாம்!

## குறிப்புகள்

இந்தப் பாடமானது மாபெரும் பிரசங்கங்களை ஏற்படுத்தும் வசனப்பகுதிகளினால் நிறைந்துள்ளது. இங்கு பல கருத்துக்கள் உள்ளன.

நமது குடும்பங்களையும் நண்பர்களையும் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருவதன் மீதான ஒரு பிரசங்கத்திற்கு, அந்திரேயாவும் பிலிப்பும் எவ்வாறு மற்றவர்களை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள் என்ற கலந்துரையாடுதலானது ஒரு தொடக்க இடமாக இருக்க முடியும்.

''தேவ தூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும்'' (யோவா. 1:51) பற்றி நாத்தான்வேலிடம் இயேசுவின் வார்த்தைகள், ''யாக்கோபுவின் ஏணி'' என்ற பிரசங்கத்தின் அடிப்படையாகப் பயன்படுத்தப்பட முடியும், இதில் ஆதியாகமம் 28:10-17ன் தொடக்க கால ''ஏணி''யை சிலுவையுடன் ஒப்பிட முடியும்.

''அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்'' (2:5) என்ற மரியாளின் வார்த்தைகள், கர்த்தர் நம்மை என்ன செய்யும்படி கூறுகின்றாரோ, அதின்படியெல்லாம் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டியதன் முக்கியத்துவத்தின் மீதான ஒரு பிரசங்கத்திற்குத் தொடக்கக் கருத்தாக இருக்க முடியும்.

நிக்கொதேமுவின் பண்பு பற்றிப் படிக்கும் பிரசங்கம் ஒன்றைப் பிரசங்கிக்க முடியும். யோவான் 7:50-52 மற்றும் 19:39 ஆகிய வசனங்களில் அவர் பிற்பாடு தோன்றுகின்றார். அவரது வளர்ந்த விசுவாசம் மற்றும் பெருகிய தைரியம் ஆகியவற்றை வலியுறுத்த நீங்கள் விரும்பலாம்.

பெரும்பாலான பிரசங்கியார்கள் ''புதிய பிறப்பு'' என்பது பற்றி, குறைந்தது ஒரு பிரசங்கமாவது கொண்டுள்ளார்கள். அடுத்து வரும் துணைப்பாடத்தில் உள்ள சிந்தனைகளை விரிவாக்குவதன் மூலம் நீங்கள் ஒரு பிரசங்கத்தை ஏற்படுத்த விரும்பலாம்.

3:14ன் அடிப்படையில் ஒரு பிரசங்கம் அமைய முடியும். வெண்கல

*சர்ப்பத்திற்கும் சிலுவையில் கிறிஸ்துவுக்கும் இடையில் இணைவுகள் தரவழைக்கப்பட முடியும்.*

---

*குறிப்புகள்*

*[1]இந்த வரைக்குறிப்பானது, யோவான் 5:1ல் குறிப்பிடப்பட்ட "பண்டிகை" என்பது பஸ்காவாயிருந்தது என்று யூகிக்கிறது. [2]இது யோவானாக இருக்க வேண்டும் என்று நம்புவதற்குப் பல்வேறு காரணங் கள் உள்ளன: (1) பின்தொடரும் விவரங்கள் கண்ணால் கண்ட சாட்சியினால் கொடுக்கப்படுபவைகளாக உள்ளன; (2) யோவான் தமது பெயரைக் கூறாமல் இருந்து விடுவது என்பது அவருக்கு வழக்கமான நடைமுறையாக இருந்தது (அடுத்த குறிப்பைக் காணவும்); (3) இது யோவான் அல்லவென்றால், அவர் சீஷத்துவத் திற்கான தமது அழைப்பு பற்றி விவரம் எதையும் தரவில்லை என்றாகிறது. [3]பிற ஏழு சந்தர்ப்பங்களில், இவர் தமது பெயரைக் கூறாதிருந்தார் (யோவா. 13:23; 19:26, 35; 20:2-8; 21:7, 20, 24). [4]யூதர்கள் சூரியன் மறைவிலிருந்து உதயம் வரையிலும், சூரிய உதயத்திலிருந்து மறைவு வரையிலும் காலத்தைக் கணக்கிட்டார்கள். [5]இது எருசலேமின் அழிவிற்குப் பின்பு நீண்ட காலம் கழித்து எழுதப்பட்டதால், பிற்பாடு யோவான் ரோமர்களின் காலக் கணக்கைப் பயன்படுத்தியதால் (யோவா. 20:19ஐப் பற்றிய விளக்கங்களை பின்வரும் புத்தகம் ஒன்றில் காணவும்), காலை 10.00 மணி என்பதே இங்கு கூறப்பட்ட காலம் என்று பெரும்பாலான எழுத்தாளர்கள் நினைக்கின்றார்கள். [6]நாம் காணப் போகிறபடி, அவர்கள் தாங்கள் பயன்படுத்திய சொற்றொடர் களின் மறைவான குறிப்பிடுதல்கள் யாவற்றையும் புரிந்திருந்தது இல்லை ஆனால், குறைந்தபட்சம், அவர்கள் மேசியாவைப் பற்றிய பழைய ஏற்பாட்டுத் தீர்க்கத் தரிசனங்களின் நிறைவேற்றமாக வந்தவர் இயேசுவே என்பதைப் புரிந்து கொண்டிருந்தார்கள். [7]"தேவதூதர்கள் மனு ஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதை யும்'' (வ. 51) என்ற இயேசுவின் இரகசியமான கூற்றானது அநேகமாகப் பழைய ஏற்பாட்டில் யாக்கோபின் ஏணி பற்றிய வரலாற்றின் அடிப்படையில் அமைந்து இருக்கலாம் (ஆதி. 28:12). இயேசு தமது மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக மனிதர்கள் பரலோகத்தை அடைவதற்கு தேவனுடைய "ஏணியாக" ஆவார். [8]இந்த முடிவிற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றில், இயேசுவின் முதல் சீஷர்களில் எஞ்சியவர்கள் பிற்பாடு அப்போஸ்தலர்களாகத் தேர்ந்து கொள்ளப்பட்டார்கள் என்ற உண்மையுடன் உள்ளது.* J.W. *மெக்கார்வீ அவர்கள் சுட்டிக்காண்பித்தபடி, "நாத்தான்வேலைப் போல் உயர்வாகப் பாராட்டப் பட்டவர் வேறு யாரும் இல்லை"* (J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* [Cincinnati: Standard Publishing Co., 1914], 111). *[9]யோவான் 1:35-51ல் ஐந்து சீஷர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படுகின் றார்கள்: நான்கு பேர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன, ஒருவர் பெயர் குறிப்பிடப்படுவதில்லை, அவர் அநேகமாக இந்த சுவிசேஷப் புத்தகத்தின் எழுத்தாளராக இருக்க வேண்டும். யோவானும் தமது சகோதரரான யாக்கோபுவைக் கண்டார் என்று சந்தர்ப்பப் பொருள் இவ்விடத்தில் உணர்த்துகிறது என்று சிலர் நினைக்கின்றார்கள். அப்படியென்றால், இயேசு வடக்கு நோக்கிப் பயணமாகுகை யில், சீஷர்களின் எண்ணிக்கை குறைந்தது ஆறு என்பதாக இருந்திருக்கும். [10]இயேசு, சீஷத்துவத்தின் அறைகூவல் பற்றி அடிக்கடி பேசினார் (லூக். 14:26, 27, 33; யோவா. 15:8). சபை ஸ்தாபனமான பிறகு, சபையின் உறுப்பினர் களைக் குறிப்பதற்கு "சீஷர்கள்" என்ற சொற்றொடர்தான் மிகவும் பொதுவானதாக இருந்தது (அப். 6:1, 2, 7; 9:1).*

[11]*கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம் வரைபடமானது கானாவூர் நாசரேத்தின் வடக்குப் பகுதியில் சுமார் நான்கு மைல்கள் தொலைவில் அமைந்திருந்தது என்ற பாரம்பரியமான இட அமைவைச் சுட்டிக்காண்பிக்கிறது. இது நாசரேத்தூரின் வடக்கே பத்து அல்லது பன்னிரெண்டு மைல்கள் தொலைவில் இருந்தது என்று சில கல்வியாளர்கள் நினைக்கின்றார்கள். [12]''வேளை'' என்ற வார்த்தை யோவான் சுவிசேஷத்தில் அடிக்கடி வருகிறது, இது சிலுவையில் இயேசுவின் மரணத்திற்கான வேளையைக் குறிப்பதாக உள்ளது. (2:4; 4:21, 23; 5:25, 28; 7:30; 8:20; 12:23, 27; 13:1 ஆகியவற்றைக் காணவும்.) இயேசு, தமது அற்புதங்கள் தமது விரோதிகளின் கவனத்தை ஈர்க்கும் என்பதையும் [அதனால்] அவர்கள் தமது மரணத்தை விரைவுபடுத்தக் கூடும் என்பதையும் அறிந்தார். [13]நான் வாழ்கின்ற இடத்தில், ஒருவரின் தாயை "ஸ்திரீயே" என்று கூறுவது மரியாதையற்றதாகக் கருதப்படும். [14]*Ernest O. Hauser, "Mary, Mother of Christ," *Reader's Digest* (December 1971): 171. [15]*சடங்காச்சாரமான கழுவுதல்களுக்கென்று கல்லினால் ஆன ஆறு தண்ணீர் ஜாடிகள் இருந்தன (மாற். 7:3ஐக் காணவும்). கிரேக்க வசனம், இவைகள் ஒவ்வொன்றும் இரண்டு அல்லது மூன்று குடம் (metretai) பிடிக்கும் அளவுக்கு இருந்தன என்றும் இவை முழுவதும் நிரப்பப்பட்டன என்றும் குறிப்பிடுகிறது (யோவா. 2:7). இன்றைய நாட்களின் சொற்றொடர்களில், இந்த ஒவ்வொரு கற்சாடியும், சுமார் இருபது அல்லது முப்பது குடங்கள் (அல்லது 75 முதல் 115 லிட்டர்கள்) கொண்டதாக இருக்கும். [16]ஒரு பங்கு திராட்சரசமும்/மதுபானமும் ஆறு பங்கு தண்ணீரும் கலந்த பானம் அந்த நாட்டில் சாதாரணமாகக் குடிக்கும் பானமாக இருந்தது என்று சில வேளைகளில் குறிப்பிடப்படுகிறது. [17]வசனம் பத்தின் பாதி மேற்கோள் தரும் வார்த்தைகள் இந்தத் திராட்ச ரசம் மதுபானம் கொண்டிருந்ததா அல்லவா என்பதைப் பொறுத்தமட்டில் உண்மை யாயிருக்கும். [18]அதாவது, இவ்வார்த்தையானது பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பில் (செப்துவஜிந்த்தில்) உள்ளது. [19]அற்புதங்கள் மற்றும் அடையாளங்கள் பற்றிய கூடுதலான விவரங்களுக்கு, இப்புத்தகத்தில் முன்புள்ள "யோவான் சிவிசேஷம்: தேவகுமாரனாகிய கிறிஸ்து'' என்ற பாடத்தில் காணவும். [20]கிறிஸ்துவின் வாழ்வின்போது பலஸ்தீனம் என்ற வரைபடத்தில் காணவும்.*

*[21]பேதுருவும் அந்திரேயாவும் பிற்பாடு கப்பர்நகூமுக்குச் சென்றார்கள் என்பது உறுதி (மாற். 1:21, 29). [22]பஸ்கா பண்டிகையானது எகிப்தில் தங்கள் வீட்டுக் கதவுகளில் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைத் தெளித்து இருந்த இஸ்ரவேலர்களின் வீடுகளைத் தேவன் ''கடந்து சென்றதன்'' [pass over] நினைவாகக் கொண்டாடப்பட்டது (யாத். 12:1-28). இந்தப் புத்தகத்தில் உள்ள "யூதர்களின் பண்டிகைகள்'' என்ற அட்டவணையில் காணவும். [23]யோவான் சுவிசேஷத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பஸ்கா பண்டிகையின் தனிச் சிறப்புக்களுக்கு, "கிறிஸ்துவின் சொந்த ஊழியம் எவ்வளவு நாட்கள் நடைபெற்றது" என்ற துணைப்பாடத்தில் காணவும். [24]இது இயேசுவின் ஊழியத்தின் கடைசி வாரத்தில் தேவாலயம் சுத்திகரிக்கப் பட்ட நிகழ்ச்சியுடன் குழப்பிக் கொள்ளப்படக் கூடாது (மத். 21:12, 13). [25]இது ஒரு நிரந்தரமான நிபந்தனையாக இருக்க வேண்டும் என்ற சுட்டிக் காண்பித்தல் இல்லையென்றாலும் கூட, யூத அதிகாரிகள் இதை யாத்திரகமம் 30:13ன் அடிப்படையில் அமைத்துள்ளார்கள். மத்தேயு 17:24-27ன் நிகழ்ச்சியானது இந்த வரி செலுத்துதல் பற்றியதாக உள்ளது. [26]இந்தப் புத்தகத்தில் உள்ள "யூதர்களின் பண்டிகைகள்" என்ற அட்டவணை யில் காணவும். [27]"ஆலயம்" என்பதற்கு கிரேக்க மொழியில் இரண்டு வார்த்தைகள் உள்ளன. அவற்றில் ஒன்று (naos) தேவாலயத்தின் பரிசுத்த இடத்தைக் குறிப்பிட்டது. இன்னொன்று (hieron) புறஜாதியாரின் மண்டபம் உட்படத் தேவாலய வளாகம் முழுமையையும் குறிப்பிட்டது. இவற்றில்*

*பிந்தியதே இவ்விடத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. புறஜாதியாரின் மண்டபம் [தேவாலயத்தில்] அமைந்துள்ள இடத்தை, தேவாலயத்தின் வரைபடத்தில் காணவும். [28]இவ்விடத்தில் "தேவாலயம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை naos என்பதாகும். [29]நாற்பத்தி ஆறு வருடங்கள் என்ற குறிப்பானது இயேசு எப்போது பிறந்தார் என்பதைக் கணக்கிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. "கிறிஸ்து எப்போது பிறந்தார்?" என்ற பாடத்தில் காணவும். [30]இயேசுவின் இந்தக் கூற்றானது அவர்களிடம் ஒரு மனப்பதிவை ஏற்படுத்திற்று. இந்த முன்னுரைத்தல் பற்றிய அவர்களின் தவறான புரிந்து கொள்ளுதலானது கிறிஸ்துவின் மீது விசாரணையைக் கொண்டு வந்தது (மாற். 14:58).*

*[31]இந்த வேளையில் இயேசு அசுத்த ஆவிகளைத் துரத்தினார் என்பதற்கான சுட்டிக் காண்பித்தல் எதுவும் இல்லை. இதைப் பற்றிப் பதிவு செய்யப்பட்ட முதலாவது விவரமானது மாற்கு 1:23-28லும் லூக்கா 4:33-37லும் காணப்படுகிறது. ஆவிகளைத் துரத்துதல் என்பது இயேசுவின் வல்லமையினுடைய ஒரு புதிய வெளிப்பாடாக இருந்தது என்பதை, அந்த வேளையில் ஏற்பட்ட திகைப்பு சுட்டிக் காண்பிக்கலாம். [32]நிக்கொதேமு ஆலோசனை சங்கத்தின் உறுப்பினராக இருந்தார் என்பது தெளிவு (யோவா. 7:45-52ஐக் காணவும்). ஆலோசனை சங்கம் பற்றிய தகவலுக்கு, "கிறிஸ்து வந்த வேளையில் இருந்த உலகம்" என்ற பாடத்தில் காணவும். [33]இதற்கு மறுபுறத்தில், இது இயேசுவும் நிக்கொதேமுவும் ஒன்றுகூட இயன்ற ஒரே ஒரு வேளையாக மட்டும் இருந்திருக்க முடியும். [34]"ரபீ" என்பது மரியாதைக்குரிய ஒரு கனப்படுத்தும் பட்டப் பெயராக இருந்தது, நிக்கொதேமு அதை இயேசுவுக்கு உபயோகித்தார். [35]KJVயில் "verily, verily" என்றுள்ளது. "Truly" மற்றும் "verily" ஆகியவை கிரேக்க வார்த்தையாகிய "ஆமென்" என்பதன் மொழிபெயர்ப்பாக இருக்கின்றன, இது "அவ்வாறே ஆகட்டும்" என்று அர்த்தப்பட முடியும். இந்த வார்த்தையானது மீண்டும் திரும்பக் கூறப்படுதல் என்பது "நான் கூறுவது உண்மை!" என்று உறுதிபட வலியுறுத்துவதாக இருக்கிறது. [36]புதிய பிறப்பு பற்றிய இயேசுவின் வார்த்தைகளில், கிறிஸ்தவராவதற்குரிய நிபந்தனைகள் மறைமுகமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன: விசுவாசம் என்பது பல வேளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது (வ. 15, 16). ஆண்டுகளினூடே பெரும் பாலானவர்கள் "ஜலத்தினால் பிறத்தல்" (வ. 5) என்பது ஞானஸ்நானத்தைக் குறிப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். இருந்தபோதிலும், இயேசு இந்த நிபந்தனைகளையல்ல ஆனால் இராஜ்யத்தின் இயல்பையே இவ்விடத்தில் வலியுறுத்தினார். [37]இந்தக் கட்டளைகளுக்குக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிந்தபோது அவர்கள் "மீண்டும் ஜெநிப்பிக்கப்பட்டதாகப்" பிற்பாடு பேதுரு கூறினார் (1 பேது. 1:22, 23). [38]காற்றைப் பற்றிய இயேசுவின் விவரிப்பானது வார்த்தைகளின் விளையாட்டு ஒன்றைப் பயன்படுத்துகிறது: "காற்று" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது "ஆவி" என்பதற்கான கிரேக்க வார்த்தையைப் போன்றதாகவே உள்ளது. நாம் காற்றைக் காண முடியாது, ஆனால் அதன் பிரசன்னத்தினுடைய விளைவை நாம் காண முடியும். ஆவியின் செயலும் இது போன்றதாகவே உள்ளது. [39]இவற்றை இயேசுவின் வார்த்தைகளாக எடுத்துக் கொள்ளுவதே மிக எளிய அணுகுமுறையாக உள்ளது, NASB இதை இவ்வாறே எடுத்துக் கொண்டுள்ளது. [40]இயேசு தமது ஊழியத்தில் பிற்பாடு, மூன்று மாதமளவாக யூதேயாவில் போதிப்பார்.*

*[41]இந்த ஞானஸ்நானம், யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தின் தொடர்ச்சியாக இருந்தது என்பது உறுதி, ஆகையால் இது ஒரு ஆயத்த ஞானஸ்நானமாகவே இருந்தது. [42]நிக்கொதேமுவுடனான இயேசுவின் உரையாடலில் உள்ளது போலவே, இவ்வசனப்பகுதியிலும், பேசுகிறவரின் வார்த்தை எவ்விடத்தில் முடிகிறது மற்றும் சுவிசேஷ எழுத்தாளரின் வார்த்தை எவ்விடத்தில் தொடங்குகிறது என்று அறிவது*

*மிகவும் கடினமானதாக உள்ளது. இவ்வார்த்தைகள் யாவும் யோவான் ஸ்நானனால் கூறப்பட்டதாக NASB உரித்தாக்குகிறது. [43]இவ்வசனத்தில், KJV மொழிபெயர்ப்பானது ''விசுவாசிக்கிற'' என்ற வார்த்தையை இருமுறை கொண்டுள்ளது, தமிழிலும் இவ்வாறே உள்ளது. ஆனால் மிகச் சிறந்த கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் மாறுபட்ட இரு வார்த்தைகள் பயன்படுத்தப்படுகின்றன.*

# படிப்பு உதவிகள்

# பழைய ஏற்பாட்டு வேத வசனங்கள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டன

*தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தைப் பற்றி நினைக்கும்போது, நம்மில் பெரும்பான்மையானோர், பழைய ஏற்பாட்டில் வாக்களிக்கப்பட்டபடி, புதிய ஏற்பாட்டில் மிகச் சரியாக நிறைவேற்றம் அடைந்த தெளிவான ஒரு முன்னுரைத்தலைப் பற்றி நினைக்கின்றோம். ஆயினும், "நிறைவேற்றப் பட்டது" என்ற வார்த்தையை வேதாகமம் பரந்த ஒரு கருத்தமைவில் அடிக்கடி பயன்படுத்துகிறது. The Fourfold Gospel என்ற புத்தகத்தில் J.W. மெக்கார்வி அவர்கள், பழைய ஏற்பாட்டு வேத வசனங்கள் குறைந்தது நான்கு வழிமுறைகளில் புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றப்பட்டன என்று வலியுறுத்தினார். அவர் அந்த ஒவ்வொரு வழிமுறையையும் மத்தேயு புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படும் வேத வசனப்பகுதியொன்றினால் விவரித்தார்.[1]*

*நாம் மேலே குறிப்பிட்டது இதில் முதலாவது வழிமுறையாக உள்ளது. இது - பழைய ஏற்பாட்டில் தெளிவாக முன்னுரைக்கப்பட்ட சில விஷயங் கள் புதிய ஏற்பாட்டில் (ஒரே வேளையில் நிறைவேற்றம் அடைந்தது என்ற வகையில்) - ஒரு "நேரடியான" நிறைவேற்றம் என்று நினைக்கப்படலாம். மத்தேயு 2:5, 6 இவ்வகையான தீர்க்கதரிசனம், அதன் நிறைவேற்றம் ஆகியவற்றிற்கு ஒரு உதாரணமாக உள்ளது. மேசியா எங்கு பிறப்பார் என்று எருசலேமில் இருந்த மதத்தலைவர்களிடம் கேட்கப்பட்டபோது, அவர்கள் தங்கள் பதிலில் மீகா 5:2ஐ மேற்கோள் காண்பித்தார்கள்:*

> *"யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத் திலிருந்து புறப்படுவார்" என்று தீர்க்கதரிசியினால் எழுதப் பட்டிருக்கிறது என்றார்கள்.*

*இயேசு பெத்லகேமில் பிறந்தபோது, இந்தத் தீர்க்கதரிசனம் முதலாவதாக வும் மற்றும் கடைசி முறையாகவும் நிறைவேற்றப்பட்டது.*

*பழைய ஏற்பாட்டில் முன் உருவகப்படுத்தப்பட்டிருந்த வார்த்தைகள் மற்றும் நிகழ்ச்சிகள் புதிய ஏற்பாட்டில் தனிச்சிறப்பான வார்த்தைகள் மற்றும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றினால் நிறைவேற்றப்பட்டன என்பது பழைய ஏற்பாட்டு வேத வசனங்கள் நிறைவேற்றத்தின் இன்னொரு*

*வழிமுறையாக உள்ளது. மத்தேயு 2:15 வசனமானது இவ்வகையான நிறைவேற்றத்தை விவரிக்கிறது. ஏரோதின் மரணம் வரைக்கும் யோசேப்பு எகிப்தில் இருந்தார். நாம், "... எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப் பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" என்று வாசிக்கின்றோம். இங்கு ஓசியா 11:1 வசனமானது மேற்கோள் காண்பிக்கப்படுகிறது, இது இஸ்ரவேல் மக்கள் எகிப்திய அடிமைத்தனத்தினின்று வெளிவருதலைப் பற்றிப் பேசுகிறது: "இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்." குழந்தையாயிருந்த இயேசுவை தேவன் பாதுகாக்கும் நிகழ்ச்சியானது இஸ்ரவேலே மக்களைத்தேவன் விடுதலையாக்கிய நிகழ்ச்சியினால் முன்னு ருவகப் படுத்தப்பட்டது.*

*மத்தேயு 2:18 வசனமானது எரேமியா 31:15லிருந்து மேற்கோள் காண்பிக்கிறது, இது இந்த இரண்டாம் வகை நிறைவேற்றத்திற்கு இன்னொரு விவரிப்பாக உள்ளது. பழைய ஏற்பாட்டு வசனப் பகுதியானது பாபிலோனிய அடிமைத்தனத்தினால் ஏற்பட்ட துன்பத்தினிமித்தம் புலம்புதலைச் சித்தரித்தது. தீர்க்கதரிசியின் இந்த வார்த்தைகள், புதிதாய்ப் பிறந்திருந்த ராஜாவைக் கொல்லும் முயற்சியில் ஏரோதினால் குழந்தைகள் கொலை செய்விக்கப்பட்டபோது, பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறங் களிலும் ஏற்பட்ட துன்பத்தினால் உண்டான புலம்பலுக்கும் சம அளவில் ஏற்புடையவைகளாக இருந்தன.*

*மூன்றாவது வழிமுறையானது, பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சியொன்று அதன் தகுதிக்கும் சற்றே அதிகமாக உயர்த்தப்பட்டு விரிவாக்கப்பட்ட ஒரு மொழிநடையில் விவரிக்கப்பட்டதை உள்ளடக்குகிறது. புதிய ஏற்பாட்டில் ஒரு நிகழ்ச்சிக்கு மிகவும் தகுதியாயிருக்கும் வண்ணமாக மிக மேன்மையான மொழிநடையொன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது. மத்தேயு 1:22, 23 இந்த வகைக்குப் பொருந்துகிறது:*

> *தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்" என்று சொன்னான். இம்மானு வேல் என்பதற்குத் "தேவன் நம்மோடிருக்கிறார்" என்று அர்த்தமாம்.*

*ஏசாயா 7:1-16ஐ ஆய்வு செய்யுங்கள், அப்போது நீங்கள் இது, விடுதலை யைப் பற்றி ஆகாஸ் அரசனுக்கு வாக்களிக்கப்பட்ட ஒரு அடையாளத்தின் பாகமாய்த் தோற்றம் பெற்றது என்று காண்பீர்கள். இந்த வாக்குத் தத்தமானது ஆகாசின் நாட்களில் ஒரு பகுதி நிறைவேற்றமாக இருந்தது; ஆனால் இது இயேசுவில் தனது நிறைவான நிறைவேற்றத்தைக் கண்ட தென்று மத்தேயு ஏவுதலினால் கூறினார்.*

*கடைசியாக, சிலவேளைகளில் ஒரு குறிப்பிட்ட வேத வசனப் பகுதியில் இன்றி, பழைய ஏற்பாட்டில் பொதுவான போதனையில் காணப்படுகிற "தீர்க்கதரிசனமானது" புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சியொன்றில் நிறைவேற்றத்*

தைக் காண்கிறது. மத்தேயு 2:23 இவ்வகைப்பட்டதாக உள்ளது. "நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும் படி" இயேசுவை யோசேப்பு நாசரேத்தூருக்கு திரும்ப அழைத்துச் சென்றார். நீங்கள் பழைய ஏற்பாடு முழுவதிலும் தேடினாலும், "அவர் நசரேயன் என்னப்படுவார்'' என்று கூறுகிற வேத வசனப்பகுதியொன்றைக் காண மாட்டீர்கள். "தீர்க்கதரிசிகளால்'' (பன்மை) என்ற வார்த்தையில்தான் திறவுகோல் உள்ளது. இது யாரோ ஒரு தீர்க்கதரிசியால் திட்டவட்டமாகப் போதிக்கப்பட்டதல்ல, ஆனால் பல தீர்க்கதரிசிகளின் போதனையில் பிரதிபலிக்கப்பட்டதாக இருந்தது. இயேசு, "நசரேயன்" என்று அழைக்கப் படுவதற்கும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் பொதுவான போக்கிற்கும் இடையில் நாம் காணக்கூடிய தொடர்பு என்ன? நாசரேத் என்பது புதிய ஏற்பாட்டு காலத்தில் *நிந்திக்கப்பட்ட* ஒரு நகரமாக இருந்தது (யோவா. 1:46), மற்றும் கிறிஸ்து *நிந்திக்கப்படவும்* புறக்கணிக்கப்படவும் வேண்டியிருந்தது (சங். 22:6-8; 69:8, 20, 21; ஏசா. 49:7; 53:2, 5, 8; தானி. 9:26[2]). வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், மத்தேயு 2:23ல் "நசரேயன்" என்பதை "நிந்திக்கப்பட்டவர்" என்று நீங்கள் வாசிக்க முடியும்.

இந்த நான்கு வழிகளில் சில, "நிறைவேற்றம்" என்பதற்கான நமக்கு நன்கு பழக்கப்பட்ட விளக்கத்திற்குப் பொருந்தாதவையாக இருக்கலாம். இருந்தபோதிலும், மத்தேயு அடைய முயற்சி செய்தவைகள் யாவும், யூதர்களால் சட்டபூர்வமான நிறைவேற்றங்களாகவே கருதப்பட்டன.

"நிறைவேற்றம்" என்பதற்கான ஆங்கில வார்த்தையான "fulfillment"[3] என்பதை வைத்து நிகழ்த்தும் ஒரு வார்த்தை விளையாட்டானது ஒரு சிறந்த விவரிப்பை ஏற்படுத்துகிறது. புதிய ஏற்பாட்டு நிறைவேற்றமானது (fulfillment) பழைய ஏற்பாட்டு தோற்ற வசனக் குறிப்பை முழுவதுமாக நிறைக்கிறது (filled full) மற்றும் அது எதையெல்லாம் அர்த்தப்படுத்த முடியவும் அர்த்தப்படுத்தவும் வேண்டுமோ, அதையே அர்த்தப் படுத்துகிறது.

## குறிப்புகள்

புதிய ஏற்பாட்டின் ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள், பழைய ஏற்பாட்டின் குறிப்பிட்ட வேத வசனப்பகுதிகள் நிறைவேற்றப்பட்டிருந் ததை எவ்வாறு வெளிப்படுத்தினார்கள் என்பதையே நாம் கலந்துரையாடு கின்றோம் என்பதை நினைவில் வையுங்கள். நீங்களும் நானும் ஏவுதல் பெற்ற போதகர்களாய் இராததினால், ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக் காண்பித்து, "இது இந்த அல்லது அந்த வேத வசனத்தின் நிறைவேற்றம்" என்று கூறும் உரிமையை நாம் பெற்றிருப்பதில்லை. *வேதாகமம் கூறும்போது* மட்டுமே ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியானது, பழைய ஏற்பாட்டு வேத வசனப்பகுதியின் நிறைவேற்றமாக உள்ளது என்று *அறிய முடியும்.*

இந்தப் பாடத்தில் உள்ள தகவலை உங்கள் மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதா வேண்டாமா என்று நீங்களே சொந்தமாக முடிவு செய்து கொள்ளுங்கள். இது சிலரைக் குழப்பப்படுத்தலாம்; அவர்கள், பழைய

*ஏற்பாட்டு வேத வசனம் நிறைவேற்றப்பட்டது என்று ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள் கூறியதில் நிறைவடைபவர்களாய் இருக்கலாம். நமது பாடம் தொடருகையில், போதகர் என்ற வகையில் உங்களுக்குத் தேவைப் படும் என்பதற்காகவே நான் இந்தத் துணைப்பாடத்தை உள்ளடக்கினேன். ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியானது பழைய ஏற்பாட்டு வேத வசனப் பகுதியை எவ்வாறு நிறைவேற்றியது என்று விளக்குவதற்காக நான் எப்போதுமே நிறுத்துவதில்லை, ஆனால் நீங்கள் ஒவ்வொரு நிறைவேற்றத்தையும் இந்தத் துணைப் பாடத்தில் தரப்பட்டுள்ள வகைகளுடன் ஒப்பிட்டு நோக்கலாம். மேலும் உங்களிடத்தில், புதிய ஏற்பாட்டின் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி யானது பழைய ஏற்பாட்டு வேத வசனத்தை எவ்வாறு நிறைவேற்றியது என்று கேட்கப்படும்போது, உங்களுக்கு இந்தத் தகவல்கள் தேவைப் படலாம்.*

---

*குறிப்புகள்*

[1]J.W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 25, 51-55. [2]*ஏசாயா 11:1 வசனம் சிலவேளைகளில் இந்தப் பட்டியலுடன் கூட்டப் படுகிறது. ஏசாயா 11:1ல் "கிளை" என்பதற்கான எபிரெய வார்த்தையானது "நசரேயன்" என்ற வார்த்தைக்குப் பயன்படுத்தப்படும் அதே மெய்யெழுத்துக்களைச் சுற்றிக் கட்டியெழுப்பப்படுகிறது.* [3]*இந்த வார்த்தை விளையாட்டானது, ஆங்கிலச் சொற்றொடரைப் பயன்படுத்தினாலும் இது "நிறைவேற்றம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தைக்கு அநீதி எதையும் செய்வதில்லை. அந்த வார்த்தையின் வேரானது "நிரப்ப" என்ற வார்த்தைக்கானதாகவே உள்ளது.*

# நாம் ஆய்வு செய்யக் கூடிய புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள்

| *தீர்க்கதரிசனம்* | *உரைக்கப்பட்ட வசனம்* | *நிறைவேற்றப்பட்ட விதம்* |
|---|---|---|
| *இயேசு பெரியவராயிருப்பாரென்றும் அவர் தேவனுடைய குமாரன் என்னப் படுவார் என்றும் ஒரு தேவதூதன் கூறினார்.* | *லூக்கா 1:32-35* | *இயேசு, தொலைதூரக் கிராமத்தில் இருந்த ஒரு ஏழைப் பெண்ணுக்குப் பிறந்தபோதிலும், அவர் தேவனுடைய மாபெரும் மகன் என்று பலரால் அறியப்பட்டுள்ளார்* |
| *எல்லாத் தலைமுறைகளும் மரியாளைப் பாக்கியவதி என்று அழைக்கும்.* | *லூக்கா 1:48* | *மரியாள் இன்னமும் பாக்கியவதி என்று அழைக்கப்படுகின்றாள்* |
| *ஜீவனுக்குப் போகிற வாசல் வழியாக ஒரு சிலர் மாத்திரமே பிரவேசிப்பார்கள் என்று இயேசு தீர்க்கதரிசனம் உரைத்தார்.* | *மத்தேயு 7:13, 14* | *உண்மையாக விசுவாசிப்பவர்கள் தொடர்ந்து ஒரு சிலராகவே இருக்கின்றார்கள்* |
| *இயேசு, சாலொமோனை விடத் தாம் பெரியவர் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்.* | *மத்தேயு 12:42* | *இது உண்மை என்று வரலாறு நிரூபித்துள்ளது.* |
| *பாதாளத்தின் வாசல்கள் சபையை மேற்கொள்ள மாட்டாது என்று இயேசு தீர்க்கதரிசனம் உரைத்தார்.* | *மத்தேயு 16:18* | *அவரது சபையானது இன்னமும் நிலவுகிறது.* |
| *சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் எல்லா இடங்களிலும், இயேசுவை அபிஷேகம் செய்த பெண்மணி குறிப்பிடப்படுவார் என்று இயேசு கூறினார்.* | *மத்தேயு 26:13* | *சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் இடங்களில் எல்லாம் அந்தப் பெண்மணி இன்னமும் குறிப்பிடப்படுகின்றாள்.* |
| *இயேசுவின் வார்த்தைகள் ஒருக்காலும் ஒழிந்துபோகாதென்று அவரே கூறினார்.* | *மத்தேயு 24:35* | *அவரது வார்த்தையானது காலங்கள் தோறும் தொடர்ந்து நிலைத்துள்ளது.* |
| *எல்லா இனங்களுக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் என்று இயேசு கூறினார்.* | *மாற்கு 13:10; லூக்கா 24:47* | *இது எல்லா இனங்களுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது.* |
| *எல்லா மனிதர்களையும் அதாவது எல்லா இனங்களையும் தம்மிடத்தில் இழுத்துக் கொள்வதாக இயேசு கூறினார்.* | *யோவான் 12:32* | *எல்லா இனங்களிலும் இருந்து மக்கள் இயேசுவை நோக்கி ஈர்க்கப்பட்டுள்ளார்கள்.* |

*ஓவன் ஆல்பிரிக்ட் அவர்களால் தொகுக்கப்பட்டது*

# மரியாளைப் பற்றிப் பிரசங்கித்தல்

## அறிமுகக் கருத்து

*கத்தோலிக்க சபை மரியாளின் மீது மிக அதிகமான கவனக்குவிப்பை இடுகிறது. ஒரு சட்டமாகவே, புரொட்டஸ்டன்டு பெயர்க்குழுக்கள் மரியாள் மீது போதுமானதாயிராத வலியுறுத்தத்தைச் செலுத்துகின்றன. மரியாள் ஆராதிக்கப்பட வேண்டும் என்று வேத வசனங்கள் போதிப்ப தில்லை, ஆனால் அந்தப் பெண்மணி நிச்சயமாகவே நமது மரியாதைக்கு உரியவராய் இருக்கின்றார். இதுவரை வாழ்ந்த பெண்களிலேயே, நமது ஆண்டவருக்குத் தாயாயிருக்கும்படி தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட வராக அவர் இருந்தார் அல்லவா! கிறிஸ்துவின் சபையானது மரியாளைப் பற்றி நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் அதிகமாய்ப் போதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது.*

*இந்தப் பாடத் தொடருக்கான நான் ஆராய்ச்சி செய்ததற்கு முன்பு, மரியாளைப் பற்றி வேதாகமத்தில் எவ்வளவு கொஞ்சமான தகவலைப் பெற்றுள்ளோம் என்பதைப் பற்றி நான் நினைத்ததே இல்லை. இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவம் தவிர, மரியாளைப் பற்றி சுவிசேஷ விவரங்களில் மரியாள் ஒரு சில இடங்களில் மட்டுமே குறிப்பிடப் படுகின்றார் (யோவா. 2:1-12; மத். 12:46-50 [மேலும் மாற். 3:21, 31-35; லூக். 8:20, 21 ஆகியவற்றையும் காணவும்]; மத். 13:55 [மேலும் மாற். 6:3; யோவா. 6:42 ஆகியவற்றையும் காணவும்]; யோவா. 19:25-27), அப். நடபடிகளின் தொடக்கத்தில் ஒருமுறை (அப். 1:14), மற்றும் நிருபங்களில் ஒருமுறை கூட இல்லவே இல்லை.[1] இவரைப் பற்றி நாம் அறிகின்றவற்றில் பெரும்பான்மை யானவைகளை நாம் லூக்கா 1ல் இருந்துதான் அறிகின்றோம். இருந்த போதிலும், பல பாடங்கள் மற்றும் பிரசங்கங்களுக்குப் போதுமான அளவுக்கும் மேலாக நமக்குக் கருத்துக்கள் உள்ளன. பின்வரும் குறிப்புக்களும் பிரசங்கமும் பல்வேறு வகையான கருத்துக்களையும் அணுகுமுறைகளையும் ஆலோசனையாக அளிக்கின்றன.*

***"என் ஆண்டவருடைய தாயார்"***

*மரியாளைப் பற்றிய பிரசங்கம் ஒன்று பின்வரும் பாடங்களில் ஒன்றாக இருக்கும். மரியாளுக்குப் பயன்படுத்துவதற்கு எந்த அணுகுமுறை சரியா யிருக்கும் என்று நான் போராடிக் கொண்டிருக்கையில், கடைசியாக நான் அந்த பெண்மணியின் முழு வாழ்வையும் ஆராய்ச்சி செய்தல் என்பதையே தேர்ந்து கொண்டேன். ஒரொலிப் பயன்பாட்டை நீங்கள் விரும்பினீர்*

களென்றால், இந்தப் பெண்மணியின் வாழ்வை நீங்கள் "S" என்பவற்றின் வரிசைத் தொடர் ஒன்றினால் ஆய்வு செய்ய முடியும்: *(1) மரியாள், தேர்ந்துகொள்ளப்பட்டவர்* (Mary, the Selected) *(எனது ஆண்டவரின் தாயாயிருக்கும்படி தேர்ந்துகொள்ளப்பட்டவர்); (2) மரியாள், வளர்ப்பவர்* (Mary, the Succorer) *(இயேசுவை வளர்க்கும் பொறுப்புடையவர்); (3) மரியாள், நாடுபவர்* (Mary, the Seeker) *(தமது மகனைப் பற்றியே எப்போதும் அக்கறையாய் இருந்தவர்); (4) மரியாள், துக்கம் நிறைந்தவர்* (Mary, the Sorrowful) *(5) மரியாள், இரட்சிக்கப்பட்டவர்* (Mary, the Saved) *(எருசலேமில் இருந்த சீஷர்களுடன் இரட்சிக்கப்பட்டவர்).*

**இவரை "ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்று அழையுங்கள்**

*பின்வரும் பாடம் ஒன்றில் நீங்கள், மரியாள் ஏன் "ஆசீர்வதிக்கப் பட்டவள்" என்று அழைக்கப்பட வேண்டும் என்பதை மையமாக வைத்து பிரசங்கத்தில் அறிமுகக் கருத்து ஒன்றைக் கட்டியெழுப்ப விரும்பலாம். இது, இவரைப் பற்றி லூக்கா 1ல் என்ன கூறப்பட்டுள்ளது என்பதன் மீது கவனம் செலுத்துவதாயிருக்கக் கூடும். கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றி நீங்கள் இந்தப் பாடங்களைத் தொடருகையில் மரியாளைப் பற்றிக் கூறப்பட்டுள்ள மற்றவற்றையும் எடுத்துரைத்து விளக்க முடியும்.*

*மரியாளைப் பற்றி வேத வசனங்கள் என்ன கூறுகின்றன என்பதைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு முன்பு, மரியாளைப் பற்றிய தவறான கருத்துக்களைக் களைந்தெறிவது அவசியம் என்பதை நீங்கள் காணலாம். அப்படியென்றால், இது செய்யப்படுவதற்குப் பின்வரும் அணுகுமுறை யானது அதற்கான ஒரு வழிமுறையாக இருக்கிறது.*

# *உண்மையான மரியாள்*

*வாழ்ந்திருந்தவர்களிலேயே உண்மையில் விசேஷித்த மக்களில் ஒருவராக இயேசுவின் தாயாகிய மரியாள் விளங்குகின்றார். லூக்கா 1:48ன்படி, எல்லாச் சந்ததிகளும் இவரைத் தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டவர் என்று ஒப்புக்கொண்டாக வேண்டும். அது எப்போதுமே செய்யப்பட்டிருப்பதில்லை, ஆனால் ஒருவேளை, இவரைப் பற்றிய நமது படிப்புகள் அந்தக் குறைபாட்டை நிவிர்த்தி செய்ய உதவும். இருப்பினும், தேவன் மரியாளைத் தேர்ந்துகொண்டது ஏன் என்பதை நாம் புரிந்து கொள்ளக் கூடுவதற்கு முன்பு நாம், "நாம் எந்த மரியாளைப் பற்றி பேசுகின்றோம்?" என்று கேட்க வேண்டும்.*

*பல ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்காவில் "உண்மையைக் கூறுவதற்கு" என்று அழைக்கப்பட்ட ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி நடை பெற்றது. இதன் ஒவ்வொரு நிகழ்விலும், தாங்கள் ஒரே நபராக இருப்பதாக மூன்று மனிதர்கள் உரிமைகோருவார்கள் - இவர்கள் கவனிக்கத்தக்க ஏதோ ஒன்றைத் தாங்கள் செய்துள்ளதாக உரிமைகோருவார்கள். பேட்டி காண்பவர்கள்* (Panelists) *இந்த மூன்று தனிநபர்களையும் கேள்விகள் கேட்டு உண்மையைக் கூறுவது யார் என்பதை யூகிப்பார்கள். நிகழ்ச்சியின் முடிவில்,*

*“உண்மையான[நபரின் பெயருடைய]வர் எழுந்து நிற்பாரா?” என்று அறிவிப்பாளர் கேட்பார்.*

*அந்த காட்சியின் உருவகத்தைப் பயன்படுத்துவதற்கு, பேட்டியாளரின் முன் மூன்று பெண்கள் தோன்றுவதாகவும், அம்மூவருமே தாங்களே மரியாள் என்று உரிமைகோருவதாகவும் சித்தரித்துக் கொள்ளுங்கள். முதல் பெண்மணி எழுந்து நிற்கின்றார். தந்த நிறமேனியும் வனப்புமிக்க சுருள் சுருளான கேசமும், ஆடம்பரமான உடையும் அணிந்த அந்தஸ்துமிக்க பெண்மணியாக அவர் இருக்கின்றார். அவரது தலையைச் சுற்றிலும் ஒரு ஒளிவட்டம் உள்ளது, அவர் தமது வலது கரத்தை உயர்த்தி ஆசீர்வதிக் கின்றார். அவர், “நானே மரியாள்” என்றும் “நானே இயேசுவின் தாய்” என்றும் தன்னம்பிக்கையுடன் கூறுகின்றார். பெரும்பாலான மத ஓவியங் களில் மரியாள் இவ்விதமாகவே சித்தரிக்கப்பட்டுள்ளார், பலர் தரிசனங் களில் இந்த மரியாளைக் காண்பதாக உரிமைகோருகின்றார்கள். பார்வை யாளர்களில் பெரும்பான்மையானோர் - மத உலகின் கணிசமான பிரிவினர் - “இவர்கள்தான்! இவர்கள்தான் மரியாள்!” என்று சத்தமிடுகின்றார்கள்.*

*பின்பு, இரண்டாவது பெண்மணி எழுந்து நிற்கின்றார், இவர் முக்காடுகளினால் மூடப்பட்ட நிழலான சிறு உருவம் கொண்டுள்ளார். இவர் பேசும்போது, இவரது குரலானது நாம் கேட்பதற்கு கடினமுயற்சி செய்யுமளவுக்கு மிகவும் மென்மையானதாக உள்ளது: “நானே மரியாள், நானே இயேசுவின் தாய்.” சிலர், “இவர்கள்தாம் வேதாகமத்தின் மரியாள்” என்று வலியுறுத்துவார்கள். குறைந்தபட்சம், நம்மில் சிலர் அறிந்துள்ள மரியாள் இவராகத்தான் இருக்கின்றார்.*

*கடைசியாக, மூன்றாவது பெண்மணி எழுந்து நிற்கின்றார். இந்தப் பெண்மணி இருண்ட மேனியும், கருமையான கூந்தலும், பலஸ்தீனிய யூதருக்கே உரிய கருமையான கண்களும் கொண்டுள்ளார். இவர் ஒரு குடியானவப் பெண்ணுக்குரிய எளிய உடை உடுத்தியிருக்கின்றார், ஆனால் இவர் ஒரு அமைதியான கண்ணியச் சூழல் கொண்டுள்ளார். இவர் மாபெரும் வேதனை மற்றும் மாபெரும் மகிழ்ச்சி ஆகியவற்றை அறிந்துள்ளார் என்பது உறுதி. இவர் தாழ்மையுடன், “நானே மரியாள், நானே இயேசுவின் தாய்” என்று உறுதிப்படுத்துகின்றார்.*

*“உண்மையான மரியாள் தயவுசெய்து எழுந்து நிற்பீர்களா?”*

*இவரை நாம் “ஆசீர்வதிக்கப்பட்டவள்” என்று அழைக்கக் கூடுவதற்கு முன்பு, உண்மையான மரியாள் யார் என்று நாம் முதலில் முடிவு செய்ய வேண்டும். அதை நாம் செய்தவுடன், இவரை விசேஷித்தவராகச் செய்த இவரது பண்புகளை நாம் தேட முடியும். மரியாளைப் பற்றிய இந்த மற்றும் இதற்கு அடுத்த பிரசங்கங்களுக்குப் பின்பு, இவர் யாராயிருந்தார் என்று மனிதர்கள் போதித்துள்ளவற்றிற்காக அல்ல, ஆனால் இவர் உண்மை யிலேயே யாராயிருந்தார் என்பதற்காக - நாம் யாவரும் மரியாளை - அதிகமாய்ப் பாராட்டுவோம் என்று நான் நம்புகின்றேன்.*

*இந்த முதல் பாடத்தில், நான் “உண்மையான மரியாளை வெளியாக்க” முயற்சி செய்வேன். உலகின் பல பகுதிகளில், பரிசுப் பொருட்கள் வர்ணம் மிக்க தாள்கள் மற்றும் பட்டு ரிப்பன்களினால் மூடப்பட்டு கையளிக்கப்*

*படுகின்றன. பரிசைக் காண்பதற்கு, அந்த மூடல்கள் யாவும் நீக்கப்பட வேண்டும். (எனது சிந்தையில், எனது பேரப்பிள்ளைகள் தங்கள் பரிசுப் பொருட்களை அடைவதற்கு அவற்றின் மீதுள்ள தாள்களை மகிழ்ச்சி பொங்க நீக்குவதை என்னால் சித்தரிக்க முடிகிறது.) அதன் பிறகு, அந்த மூடல்கள் யாவும் வழக்கமாக வீசியெறிப்பட்டு விடுகின்றன.*

*ஆண்டுகளினூடே, மக்கள் மரியாளை வேத வசனங்களில் காணப் படாத உபதேசங்களின் பெருக்கம் கொண்டு மூடிவைத்து இருக்கின் றார்கள். அவர்கள் இவரைக் கனப்படுத்துவதற்காக இதைச் செய்தார்கள், ஆனால் உண்மையான மரியாளை மறைப்பது என்பதே முடிவான விளை வாயிற்று. நான் இந்த மூடல்கள் எல்லாவற்றையும் ஒவ்வொரு முறையும் ஒன்றொன்றாக எடுத்துக் களைய விரும்புகின்றேன். மரியாளைக் கனப்படுத்த வேண்டும் என்று நீங்கள் போதிக்கப்பட்டிருந்தால், நான் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட மூடல்கள் எல்லாவற்றையும் மாத்திரம் களைந்து போடுவேன் என்பதை உங்கள் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள். நான் சொல்வது எதுவுமே மரியாளின் மீது தவறாகப் பிரதிபலிக்காது. மூடல்களைக் களைவது என்பது அவற்றினுள் இருக்கும் பரிசுப்பொருளின் மதிப்பைக் குறைத்து விடாது. உண்மையில், மூடல்கள் இன்றி ஒரு பரிசுப் பொருளைக் காணுதல் என்பதே அதை முழுமையாக மதிக்கக் கூடிய ஒரே வழிமுறையாக உள்ளது.*

## சரீரத்துடன் பரலோகம் சென்றார் என்ற போதனைக் கருத்து

*சரீரத்துடன் பரலோகம் சென்றார் என்பது மரியாள் மீது மூடப் பட்டுள்ள சமீபத்திய மூடலாக உள்ளது.*[2] *இந்த போதனைக் கருத்தானது, 1950ம் ஆண்டில் [கத்தோலிக்க மதத் தலைவராயிருந்த] போப்பின் பிரகடனத்தில் [bull*[3]*] அறிவிக்கப்பட்டது, இது மரியாள் பூமியின் மீது தமது வாழ்வின் முடிவில், ஆத்துமா மற்றும் சரீரத்துடன் பரலோகத்திற்கு எழுந்தருளினார் என்ற உறுதிப்படுத்துகிறது. இந்த போதனையில் இரண்டு தவறுகள் உள்ளன: முதலாவது, வேதாகமம் இவ்வாறு போதிப்பதில்லை.*[4] *இரண்டாவது, வேதாகமம் உண்மையில் இதற்கு எதிரான கருத்தையே போதிக்கிறது. இயேசு, "பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்தி லிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவா. 3:13) என்று உறுதிப்படுத்தினார்.*[5] *இந்த முதல் மூடல் நீக்கப்பட வேண்டியதாக உள்ளது.*

## அமல உற்பவம் என்ற போதனைக் கருத்து

*அமல உற்பவம் (பாவமின்றி உற்பவித்தல்) என்பது நாம் எதிர்கொள்ளு கின்ற இரண்டாவது மூடலாயிருக்கிறது. இந்த உபதேசக் கருத்து நான்காம் - மற்றும் ஐந்தாம் - நூற்றாண்டுகளின் எழுத்துக்களில் தெளிவற்ற வகையில் காணப்பட்ட, ஆனால் 1854 வரை விளக்கியுரைக்கப்படாத, நியாயமான*

வகையில் சமீபத்திய கருத்தாக உள்ளது. இது, மக்கள் யாவரும் ஆதாமின் பாவத்தின் குற்றத்தைச் சுதந்தரித்தவர்களாக, "முற்றிலும் நிர்மூலமாகும்" வகையில் பிறக்கின்றார்கள் என்று போதிக்கும் "நிர்மூலத்தை முற்றிலும் சுதந்தரித்தல்" என்ற உபதேசத்திலிருந்து விளைந்தது. விசுவாச விலக்கம் பெற்ற சபையானது நிர்மூலமாவதைச் சுதந்தரித்தல் என்பது பற்றிப் போதித்தது, ஆனால் சபையின் உயரதிகாரவர்க்கம் மரியாள் நிர்மூலமாகும் வகையில் பிறந்தார் என்று கூறும் கருத்தை விரும்பவில்லை. இவ்விதமாக அவர்கள், மரியாள் [தமது தாயின்] கர்ப்பத்தில் உதித்த வேளையில் ஒரு அற்புதம் நடைபெற்றதாக அறிவித்தார்கள்: அதாவது, மரியாள் "அமல உற்பவமாக"[6] [பாவமே இல்லாதவராக] கருவில் உதித்தார் ஆகையால் அவர் "பாவத்தில்" பிறக்கவில்லை.

மரியாள் பாவம் இல்லாமல் பிறந்தார் என்ற கருத்தைக் குறித்து எனக்குப் பிரச்சனை எதுவும் இருப்பதில்லை, ஏனெனில் ஒவ்வொரு குழந்தையுமே பாவமின்றிப் பிறக்கின்றது என்று வேதாகமம் போதிக்கிறது. இயேசு, "பரலோக இராஜ்யம்" சிறு பிள்ளைகளைப் போன்றவர்களுடைய தாக உள்ளது என்று கூறினார் (மத். 19:14; 18:3ஐயும் காணவும்). நம்மில் ஒவ்வொருவரும் தத்தமது சொந்தப் பாவங்களுக்குப் பொறுப்புடையவர் களாக இருக்கின்றோம், நாம் - நமது "பிதாவாகிய" ஆதாம் உட்பட - நமது தந்தையர்களின் பாவங்களுக்குக் கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லை என்று தீர்க்கதரிசியான எசேக்கியேல் வலியுறுத்தினார் (எசே. 18:20).

ஆயினும் விசுவாசத்திலிருந்து விலகிச் சென்ற சபையானது பாவமற்ற தன்மையின் கருத்தை இன்னும் ஒரு அடிவைப்பு அதிகமாக எடுத்துக் கொண்டது. பதினாறாம் நூற்றாண்டில், திரெந்து நகரில் கூடிய வத்திகான் சங்கம் மரியாள் எல்லா விதமான உண்மையான மற்றும் தனிப்பட்ட பாவங்களிலுமிருந்து விடுதலையாயிருக்கின்றார், அதாவது இவர் தமது வாழ்வில் ஒருமுறை கூட பாவமே செய்தது இல்லை என்று அலுவலக ரீதியாக அறிவித்தது. இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இயேசு கிறிஸ்து ஒருவர் தாம் பாவமின்றி இவ்வுலகில் வாழ்ந்த ஒரே நபர் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது (1 பேது. 2:22; எபி. 4:15); எஞ்சியுள்ள நாம் யாவருமே பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானோம் (ரோமர் 3:10, 23; 1 யோவா. 1:10). லூக்கா 1ல், மரியாள் தமது துதியின் பாடலைத் தொடங்கியபோது இவர், "என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது" என்று கூறினார் (வ. 47). இழந்துபோகப்பட்டவர்களுக்கு மாத்திரமே இரட்சகர் ஒருவர் தேவை; நாம் யாவரும் உணர்வது போலவே, மரியாளும் தமக்கு இரட்சிப்பு தேவை என்பதை உணர்ந்தார். பாவமற்ற பரிபூரணத் தன்மை என்ற இந்த மூடலும் நீக்கப்பட வேண்டியதாக உள்ளது.

## மரியாளை ஆராதித்தலும் வணங்குதலும்

நாம் எதிர்கொள்ளுகின்ற மூன்றாவது மூடலானது எல்லாவற்றிலும் விரிவானதாக உள்ளது: மரியாளை[7] ஆராதித்தலும் வணங்குதலும்.[8] இது

மரியாளின் சிலைகளுக்கு முன்பாக ஜெபித்தலையும், வேத வசனங்களில் அறியப்பட்டிராத "தேவ தாய்"[9] போன்ற பட்டப் பெயர்களை மரியாளுக்குக் கொடுத்தலையும் உள்ளடக்குகிறது. நமக்கு உதவும்படியும், நமக்காகத் தேவனிடம் மன்றாடும்படியும் மரியாளிடம் வேண்டுகோள் விடுத்தலின் நடைமுறையானது விசேஷித்த கவனத்திற்குரியதாக உள்ளது. ஆவே மரியாள் ஜெபத்துடன் [இது தமிழகக் கத்தோலிக்க சபையில் மங்கள வார்த்தை ஜெபம் என்று கூறப்படுகிறது] பதினைந்தாம் நூற்றாண்டில், "அர்ச்சிஷ்ட மரியாயே, சர்வேசுரனுடைய மாதாவே, ... எங்களுக்காக ... வேண்டிக் கொள்ளும்'' என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டன. இது மரியாளைப் பற்றித் தவறான சில விஷயங்களைக் கூறுவதால் என்னைக் கவலைப்படுத்துகிறது. நமக்கும் தேவனுக்கும் இடையில் மரியாள் ஒரு மத்தியஸ்தராகச்[10] செயல்படுவதாக வேத வசனத்தில் எவ்விடத்திலும் போதிக்கப்படுவது இல்லை. உண்மையில் பவுல், "... தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே, எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே" (1 தீமோ. 2:5, 6; 1 யோவா. 2:1; அப். 4:12ஐயும் காணவும்) என்று எழுதினார்.

இதுவும் என்னைக் கவலைப்படுத்துகிறது, ஏனென்றால் இது தேவனைப் பற்றிய தவறான சில விஷயங்களைக் கூறுகிறது. ஒரு பெண்மணியிடம், அவர் ஏன் மரியாளிடம் ஜெபித்தார் என்று கேட்டபோது, அப்பெண்மணி, ''இயேசு யாரையாவது கவனிப்பார் என்றால் அது மரியாளாகத்தான் இருக்கும்'' என்று பதில் அளித்தார். இது தேவனைப் பற்றியும் இயேசுவைப் பற்றியும் கூறுவது என்ன? இது, அவர்கள் நம்மைக் கவனிக்க விரும்புவதில்லை - எனவே நாம் அவர்களிடத்தில் செல்வாக்குப் பெற்ற யாரேனும் ஒருவரைக் கண்டறிய வேண்டும் என்று கூறுகிறது.[11] ஆயினும் வேதாகமமானது, தேவன் நம்மீது அன்புகூர்ந்து நம்மீது அக்கறையுள்ளவராக இருக்கின்றார் என்றே போதிக்கிறது. ''தேவன் அன்பாகவே இருக்கிறார்'' (1 யோவா. 4:8, 16), மற்றும் "அவர் உங்களை விசாரிக்கிறார்" (1 பேது. 5:7). எபிரெய நிருபத்தின் எழுத்தாளர், இயேசு "நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதவிக்க முடியும்'' என்று வலியுறுத்தினார்; இவ்விதமாக நாம் "தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேர" முடியும் (எபி. 4:14-16).[12]

அப். 1ல் மரியாளைப் பற்றிய ஒரு குறிப்பிடுதலைத் தொடர்ந்து, சபைகளுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் எழுதப்பட்ட இருபத்தியோரு நிருபங்கள் உட்படப் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியில் இவரது பெயர் மீண்டும் ஒருமுறை கூட காணப்படுவதில்லை. மரியாளைப் பற்றி இன்றைய நாட்களில் மேலோங்கியுள்ள வலியுறுத்தம் எதையும் இந்த எழுத்தாளர்கள் அறிந்திருக்கவில்லை. வேத வசனரீதியில் இல்லாத உயர்த்தப்படுதல் என்ற இந்த மூடலும் நீக்கப்பட வேண்டியதாக உள்ளது.[13]

# எப்பொழுதும் கன்னித்தன்மை உடையவர் என்ற போதனைக் கருத்து

*இப்பொழுது நாம் ஒரு கடைசி மூடலுக்கு வந்துள்ளோம். இந்த மூடலை நான் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் அணுகுமளவுக்கு இது அதிகம் பயபக்திக்கு உரியதாக உள்ளது. இதுவே மரியாளை விவரிக்கும் பண்பாகப் பலருடைய சிந்தைகளில் உள்ளது. இவர்களைப் பொறுத்த மட்டில், இந்த உபதேசத்திற்கு அறைகூவல் விடுத்தல் என்பது மரியாளையே தாக்குவதற்கு ஒப்பானதாக உள்ளது. நான் மரியாள் எப்பொழுதும் கன்னித்தன்மை உடையவர் என்ற போதனைக் கருத்தைக் குறிப்பிடுகின்றேன். இந்த மூடல் எல்லாவற்றிலும் மிகவும் பழையதாக உள்ளது, ஆனால் இது தனது தோற்றத்தில் அப்போஸ்தலிக்கமாயிருப்பதற்கு இன்னமும் பல நூறு ஆண்டுகள் பிந்தியதாக/சமீபத்திய கருத்தாக உள்ளது. எப்பொழுதும் கன்னித்தன்மை என்ற இந்தக் கருத்து ஐந்தாம் நூற்றாண்டில் மிக மங்கலாகக் குறிப்பிடப்பட்டது மற்றும் ஏழாம் நூற்றாண்டில் இது அலுவலக முறைப்படி போதிக்கப்பட்டது.*

*மேம்போக்காகக் காணும்போது, இந்தப் போதனை போதுமான அளவு ஒன்றுமறியாததாகக்/எதார்த்தமானதாகக் காணப்படுகிறது. மரியாள் கன்னியாக இருந்தார் அல்லது இல்லை என்பது என்ன வேறுபாட்டை ஏற்படுத்தப்போகிறது? முதலாவதாக, இது வேத வசனங்களில் போதிக்கப் படாதபடியால், இது வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. மரியாள் தாம் கர்ப்பந்தரித்த வேளையிலும் இயேசு பிறந்தபொழுதும் கன்னிப் பெண்ணாகவே இருந்தார் (மத். 1:23, 25), ஆனால் இது தொடர்ந்து இருந்தது என்று சுட்டிக்காண்பித்தல் எதுவும் இருப்பதில்லை. மாறாக, யோசேப்பும் மரியாளும் தங்கள் திருமண உறவை நிறைவு செய்தார்கள் என்றும் மரியாள் யோசேப்புக்கு ஒரு உண்மையான மனைவியாக இருந்தார் என்றும் வேத வசனங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன.[14] மத்தேயு 1:25, யோசேப்பு “அவள் ஒரு குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்தார்'' என்று கூறுகிறது (மத். 1:18ஐயும் காணவும்). மத்தேயு 13:55, 56 வசனங்கள், இயேசு குறைந்தது நான்கு சகோதரர்களையும் இரண்டு சகோதரிகளையும் கொண்டிருந்தார் என்று நமக்குக் கூறுகிறது.[15] யோசேப்பும் மரியாளும் கடைசியில் கணவன் மனைவியாக வாழ்ந்து ஒன்றுகூடி, இந்த மற்ற பிள்ளைகளைப் பெற்றார்கள் என்பதே இந்த வசனப்பகுதியைப் புரிந்துகொள்வதற்கான மிகவும் இயல்பான வழிமுறையாக உள்ளது.[16]*

*மரியாள் எப்பொழுதும் கன்னித் தன்மை உடையவர் என்ற போதனைக் கருத்தும் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது, ஏனென்றால் இது திருமணம் மற்றும் இல்லம் என்ற நிறுவனத்தை அவமானப்படுத்துவதாகவும், திருமணம் முடிக்காத நிலையானது திருமணம் முடித்த நிலையை விடப் பரிசுத்தமானது என்று சில வழிமுறைகளில் கூறுவதாகவும் உள்ளது. பரிசுத்தமான வாழ்வை வாழ விரும்புகிறவர்கள் திருமணம் செய்து கொள்வதை தவிர்க்கும்படி போதித்தல் என்பது விசுவாசத்தை விட்டு*

*விலகும் பண்புகளில் ஒன்றாக இருக்கும் என்று பவுல் முன்னுரைத்திருந்தார்:*

> *... பிற்காலங்களில் மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும் ... போஜன பதார்த்தங் களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளை யிடுவார்கள் (1 தீமோ. 4:1-3).*

*ஆயினும் வேத வசனங்கள், திருமணம் "யாவருக்குள்ளும் கனமுள்ளது" (எபி. 13:4) என்று போதிக்கிறது. மற்றும் தமிழ் வேதாகமத்தில், "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயு மிருப்பதாக" என்று எளிமையாகக் கூறுகிறது. மரியாள் தமது திருமண உறவைப் பூர்த்தி செய்யாதிருந்தார் என்று போதித்தலானது இவரைப் பற்றிய நமது கருத்தை மேம்படச் செய்வது இல்லை, ஆனால் அதைக் குறைத்து மதிப்பிடுகிறது. என்றென்றும் கன்னித்தன்மையுடன் இருந்தார் என்ற மூடல் எவ்வளவு வளமுடையதாக இருந்தாலும் அதுவும்கூட நீக்கப்பட வேண்டியதாகவே உள்ளது.*

---

*குறிப்புகள்*

*[1]இயேசு ''ஸ்திரீயினிடத்திற் பிறந்தவர்'' என்பதற்கான மறைமுகமான குறிப்பொன்று கலாத்தியர் 4:5ல் உள்ளது. [2]மரியாள் இயேசுவுடன் இணை மீட்பராக இருக்கின்றார் என்பது போன்ற பிற உபதேசக் கருத்துக்கள் வளர்செயல் முறையில் உள்ளன. [3]ஒரு "bull" என்பது போப் [கத்தோலிக்க மதத்தலைவர்] என்பவரால் வெளியிடப்பட்டு bulla என்பதால் முத்திரையிடப்பட்ட ஒரு பிரகடனம் ஆகும். (bulla என்பது ''முத்திரை'' என்பதற்கான லத்தீன் வார்த்தையாக உள்ளது.) [4]ஒவ்வொரு புதிய போதனைக் கருத்தைப் பற்றியும், ''இதை சபையானது எப்போதுமே விசுவாசித்துப் போதித்துள்ளது" என்ற உரிமைகோருதல் ஏற்படுத்தப் படுகிறது. அது உண்மையாக இருந்தது என்றால், நாம் வேத வசனங்களில் அதைப் பற்றிய தெளிவான போதனையைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் அது இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளின் எழுத்துக்களில் இருக்க வேண்டும் - ஆனால் இவ்வாறு நாம் பெற்றிருப்பதில்லை. ஒவ்வொரு விஷயத்திலும் அந்தப் போதனை ஏவுதல்பெற்ற வேத வசனங்களில் காணப்படுவதில்லை என்பதை நான் வலியுறுத்துவேன் (2 தீமோ. 3:16, 17). எழுதப்பட்ட வசனங்கள் நமக்கு "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும்" (2 பேது. 1:3) தந்தருளி இருக்கின்றன. [5]இயேசு தமது வாழ்நாளின்போது இந்த வார்த்தைகளைப் பேசினார் என்றும் இதன் பின்பு மரியாள் பரத்துக்கு எழுந்தருளினார் என்றும் யாரேனும் ஒருவர் உரிமைகோருவார் என்றால், அவருக்கு பின்வரும் உண்மைகளைச் சுட்டிக் காண்பியுங்கள்: (1) இயேசுவின் வார்த்தைகள் தீர்க்கதரிசனமாக இருந்தன. அவர் எதிர்காலத்தைக் குறிப்பிடும் வகையில் தீர்க்கதரிசனமான கடந்த கால வினைச் சொல்லைப் பயன்படுத்தினார். (2) யோவான் கி.பி. 90ல் - மரியாள் இறந்து பல ஆண்டுகள் சென்ற பின்பு - இயேசுவின் [இந்த] வார்த்தைகளைப் பதிவு செய்தார். [6]"அமல உற்பவம்" என்பது "மாசற்ற வகையில் சுத்தமான; கறையற்ற; கறை அல்லது*

திறை ஆகியவற்றிலிருந்து விடுதலையாக உள்ள; சுத்தமான" என்று அர்த்தப்படுகிறது. [7]இது சில வேளைகளில் "மரியாள் வணக்கம்" என்று அழைக்கப்படுகிறது. 1955ல் ஏற்படுத்தப்பட்ட, மரியாள் விண்ணக அரசியாக முடிசூட்டப்பட்ட பண்டிகை [இது தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகஸ்ட் 15ம் தேதி கொண்டாடப் படுகிறது] என்பது இதன் வெளிப்பாடுகளில் ஒன்றாக உள்ளது. [8]உண்மையில் மரியாள் ஆராதிக்கப்படுவதோ அல்லது வணங்கப்படுவதோ இல்லை என்று உரிமைகோரப்படுகிறது. தேவனுக்கு முன்பாக வணங்குதல் மற்றும் மரியாளின் உருவத்திற்கு முன்பாக வணங்குதல் ஆகியவற்றை வித்தியாசப்படுத்து வதற்கு வார்த்தைகள் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டுள்ளன. ஆயினும், கத்தோலிக்க அதிகாரத்துவம் வாய்ந்தவர்களின் எழுத்துக்களும், கத்தோலிக்க விசுவாசிகளின் நடைமுறையும் ஆகிய இரண்டுமே, இது என்னவென்று அழைக்கப்பட்டாலும், மரியாள் ஆராதித்து வணங்கப்படுகின்றார் என்று அறிவிக்கின்றன. [9]மரியாள் "என் ஆண்டவருடைய தாயார்" (லூக். 1:43) என்றும் "இயேசுவின் தாயார்" (யோவா. 2:1) என்றும் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகின்றார், ஆனால் இவர் ஒருக்காலும் தேவனுடைய தாயார் என்று குறிப்பிடப்படுவதில்லை. இயேசுவின் தெய்வீகத்துவமானது இயல்பிலேயே நித்தியமானதாக இருந்தது (யோவா. 1:1-3; எபி. 1:10-12) மற்றும் இது எவ்வகையிலும் மரியாளைச் சார்ந்ததாக இருந்ததில்லை. கர்த்தருடைய மாம்சப் பிரகாரமான உடல் மட்டுமே மரியாளிடம் இருந்து வந்ததாக இருந்தது (ரோமர் 1:3; யோவா. 3:6ஐக் காணவும்). [10]அல்லது "மத்தியஸ்தி" ("மத்தியஸ்தர்" என்பதற்குரிய பெண்பால் சொல்).

[11]இந்தக் கருத்து, ஒரு விட்டுக்கொடுக்கும் குணமற்ற, கடுமையான, தேவனைப் பற்றிய கருத்தினால் தோற்றம் பெற்றிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. [12]மரியாள் ஒரு பெண்ணாக இருப்பதால், இவர் பரிவிரக்கம் உள்ளவராயிருக்க அதிகம் வாய்ப்புள்ளது என்ற உரிமைகோருதலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேவன் எப்போதுமே ஒரு ஆண்பால் பெயர்ச் சொல்லிலேயே பேசப்பட்டுள்ளார் என்பது உண்மையாக உள்ளது, ஆனால் அவர் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் மிகச் சிறந்த பண்புகளின் உருவகமாக இருக்கின்றார் என்றும் வேத வசனங்கள் போதிக்கின்றன. உண்மையில் அவர் இவ்விரு பண்புகளையும் விஞ்சி நிற்கின்றார். ஏசாயா 49:15ஐ வாசிக்கவும். [13]இயேசு தமது வாழ்வுக் காலத்தின்போது, ஆவிக்குரிய பிணைப்புகள் உடல் ரீதியான பிணைப்புக்களை விட மேலானவை, அவருடைய தாயின் விஷயத்திலும் கூட இது உண்மையே என்று வலியுறுத்தினார் (மத். 12:47-50; லூக். 11:27, 28). [14]யூதப்பிரமாணத்தின்படி, ஒரு திருமணமானது [குடும்ப உறவினால்] பூர்த்தியடையாத வரையிலும் அது திருமணமாக இருந்ததில்லை. திருமணத்தில் ஒரு துணை இன்னொரு துணைக்குப் பாலியல் உறவை மறுக்கக் கூடாது என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (1 கொரி. 7:3-5). [15]இவர்கள் ஒரே தாயை(மரியாளை)க் கொண்டிருந்ததாலும், ஆனால் ஒரே தந்தையைக் கொண்டிராததாலும் (தேவனே இயேசுவின் தந்தையாக இருந்தார்; இவர்களுக்கு யோசேப்பு தந்தையாயிருந்தார்) உண்மையில் அரை சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். [16]இவர்கள் யோசேப்பு செய்திருந்த முன் திருமணம் ஒன்றில் பிறந்த பிள்ளைகள் என்றோ அல்லது இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரர்கள் என்றோ உரிமை கோரப்படுகிறது. இவ்விரு மாற்றுக்கருத்துக்களில் எதையும் இவ்வசனத்தின் சந்தர்ப்பப்பொருள் கருத்தாகத் தெரிவிப்பதில்லை. இதை நினைத்துப் பாருங்கள்: இயேசுவின் "சகோதரர்கள்" முன் திருமணம் ஒன்றில் யோசேப்பின் மகன்களா யிருந்தால், இவர்களில் ஒருவர் - இயேசு அல்ல - தாவீதின் அரியணைக்கு சட்டபூர்வமான வாரிசாக இருந்திருப்பார்களே.

# யோசேப்பைப் பற்றிப் பிரசங்கித்தல்

*நமது பிரசங்கத்தில் மற்றும் போதித்தலில் மரியாள் புறக்கணிக்கப் பட்டுள்ளார்கள் என்றால், யோசேப்பு அதை விட இருமடங்காகப் புறக்கணிக்கப்பட்டுள்ளார். இங்கு யோசேப்பைப் பற்றிய பிரசங்கத்தின் இரு தொடக்கங்கள் உள்ளன.*

### *பிரசங்கத் தொடக்கம் # 1:*
## *தேவன் தமது குமாரனை வளர்க்கத் தேர்ந்துகொண்ட மனிதர்*

*எனது வாழ்வில் பலமுறைகள், எதிர்காலம் நிச்சயமற்றதாக இருந்த போது, எங்களுக்கு ஏதேனும் நேரிட்டதென்றால், எங்களுடைய மகள்களை வளர்ப்பதற்கு ஒருவரை நானும் என் மனைவியும் ஏற்பாடு செய்திருந்தோம். நீங்கள் கற்பனை செய்து பார்க்கக் கூடிய வகையில், இந்த விஷயத்தைப் பற்றி நாங்கள் தீவிரமாகச் சிந்தித்தோம்; யாராகிலும் ஒருவர் இதைச் செய்யும்படி நாங்கள் விரும்பவில்லை. உங்கள் பிள்ளைகளை யார் வளர்க்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள்? அப்படிப்பட்ட நபருக்குள் என்ன குணங்கள் இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள்?*

*சிந்தனையின் இந்த வரிசையை யோசேப்புக்கு நடைமுறைப் படுத்துங்கள் - மற்றும் நமக்கு அவசியமானவைகளாக யோசேப்பிடம் இருந்த குணங்கள் எல்லாவற்றையும் பட்டியலிடுங்கள். நீங்கள் இதைத் தொடங்குவதற்கு இங்கு சில சிந்தனைகள் தரப்படுகின்றன: இவர் தேவனுடைய பிள்ளையாக (யூதராக) இருந்தார்; இவர் நீதிமானாக இருந்தார் (மத். 1:19; துரதிர்ஷ்டவசமாக, தேவனுடைய எல்லாப் பிள்ளைகளும் நீதிமான்களாக இருப்பதில்லை); இவர் பிறர் மனதைப் புண்படுத்த விரும்பாதிருந்தார் (1:19); இவர் தேவனை விசுவாசித்தார் (மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டது); மற்றும் இவர் தைரியம் மிகுந்தவராக இருந்தார் (இவர் அஞ்சாதிருந்தார்; 1:20ஐக் காணவும்). எல்லாவற்றிற்கும் மேலாக, இவர் கீழ்ப்படிதல் உள்ளவராக இருந்தார்; தேவன் இவரிடம் பேசிய ஒவ்வொரு முறையும் இவர் உடனடியாகக் கீழ்ப்படிந்தார்.*

*யோசேப்பின் வாழ்வை நீங்கள் ஆய்வு செய்து இயேசுவுடன் இவருக்கு இருந்த உறவுமுறை பற்றி நினைத்துப் பார்க்கும்போது, பெற்றோர்த் துவத்திற்கான பழைய ஏற்பாட்டு வழிகாட்டுதல் நெறிகளைப் பற்றி நினைத்துப் பாருங்கள். உபாகமம் 6:6, 7, 20, 21 ஆகியவற்றின் மறைவான*

*குறிப்பு, பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதற்கான அடிப்படைப் பொறுப்பானது தந்தையின் மீது வைக்கப்பட்டு மகன்களுக்கு அது வழிவழியாக உபதேசிக்கப்பட்டது.*

### *பிரசங்கத் தொடக்கம் # 2:*

## *மாற்றப்பட்ட வாழ்வைக் கொண்ட ஒரு மனிதர்*

*"யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே ..." (மத். 1:24). தேவன் தமக்குக் கூறியதைச் செய்வதற்கு ஒருபோதும் தயங்கியிராத இந்த மனிதரைப் பற்றிச் சிந்திக்க ஒரு கணம் எடுத்துக்கொள்ளுங்கள். "இந்த மனிதர் யார்?" என்று கேட்க நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.*

*பலருடைய சிந்தைகளில் யோசேப்பு, இயேசுவின் தொடக்க கால வாழ்வில் ஒரு சிறு கதாபாத்திரமாக இருந்தார் - ஒரு விடுதிக்காப்பாளர், மேய்ப்பர்கள் மற்றும் ஞானிகள் ஆகியோரின் மட்டத்திலேயே இருந்தார் - எனப்படுமளவுக்கு மரியாளால் மிகவும் மறைக்கப்பட்டிருக்கின்றார். ஆயினும், இவர் ஒரு வழக்கத்திற்கு மாறான தனிநபராக இருந்திருக்க வேண்டும் இல்லையென்றால், தேவன் தமது குமாரனுக்குப் பொறுப்பாளராக இருக்கும்படி இவரைத் தேர்ந்து கொண்டிருக்க மாட்டார்.[1] யோசேப்பின் விசேஷித்த பண்புகளில் இவர் தாவீது ராஜாவின் நேரடியான வாரிசாக இருந்தார். யூதர்களுக்கு, சட்டப்பூர்வமான வழியில் தோன்றுதல் என்பது மாம்சப்பிரகாரமான வழியில் தோன்றுதல் என்பதை விட (அல்லது இதை விட அதிகமான) முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இவ்விதமாக, யோசேப்பு இயேசுவின் உண்மையான தந்தையாக இல்லாதிருந்த போதிலும் (லூக். 3:23), ஒரு எழுத்தாளரால் இவர் மூலமாகவே இயேசுவின் வம்சா வழி கண்டறியப்படுகிறது (மத். 1:16).*

*''மாற்றப்பட்ட வாழ்வைக் கொண்ட ஒரு மனிதர்'' என்ற வகையிலேயே நான் யோசேப்பைப் பற்றி நினைக்கின்றேன்: இவர் மரியாளைத் திருமணம் செய்துகொண்டதால் இவரது வாழ்வு மாற்றப்பட்டது, இவர் வாழ்வில் இயேசு என்ற ஒரு குழந்தை வந்ததால் இவரது வாழ்வு மாற்றப்பட்டது.*

## யோசேப்பின் வாழ்வில் மாற்றங்கள்

*(1) இடத்தில் மாற்றங்கள். யோசேப்பு நாசரேத்தில் ஒரு தாழ்மையான தச்சராக இருந்தார் (மத். 2:23; 13:55; லூக். 2:4, 39). மரியாளை இவர் தமது மனைவியாக ஏற்றுக்கொள்வதற்கு முன்பு, ஒருக்காலும் இவர் எருசலேமை விட்டு தொலைவில் பயணம் செய்திருக்க மாட்டார் (லூக். 2:41). இவர்களின் திருமணம் முடிந்தவுடனே, ரோமப் பேரரசரால் விதிக்கப்பட்ட கட்டளையொன்று இவரையும் இவரது புதிய மனைவியையும் எருசலேமுக்குத் தெற்கில் இருந்ததும் இயேசு பிறந்த இடமுமான, பெத்லகேமுக்கு அனுப்பி வைத்தது (லூக். 2:1-7).*

ஒரு சில நாட்களுக்குப் பின்பு, இவர்கள் தங்கள் புதிய குழந்தையை எடுத்துக்கொண்டு அவரைக் "கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுப்பதற்காக" (லூக் 2:21, 22) எருசலேமுக்குச் சென்றார்கள். பின்பு இவர்கள் பெத்லகேமுக்குத் திரும்பி வந்து சில காலம் அங்கேயே வாழ்ந்தார்கள், அங்கு யோசேப்பு தமது தொழிலைச் செய்திருப்பார் என்பது உறுதி. இவர்கள் அங்கிருக்கையில், கிழக்கிலிருந்து ஞானிகள் "அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும்" கண்டார்கள் (மத். 2:11).

மிக விரைவிலேயே யோசேப்பும் இவரது குடும்பமும் அரசனின் கோபத்திலிருந்து தப்பிப்பதற்காக எகிப்துக்கு ஓடுகையில், இவர் தமது வாழ்வில் மிகவும் நீண்ட பயணத்தை மேற்கொண்டார் (மத். 2:1-18). அங்கு இவரும் மரியாளும் மற்றும் இயேசுவும், ஏரோது மரிக்கும் வரையிலும் பிரமிடுகளின் பூமியில் தங்கினார்கள். பின்பு இவர்களைத் தேவன் திரும்பவும் பலஸ்தீனத்திற்கு அழைத்துக்கொண்டார் (மத். 2:19-21). பெத்லகேமுக்குத் திரும்பிச் செல்வதற்குப் பதிலாக இவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு தங்களின் பயணம் தொடங்கியிருந்த இடமான நாசரேத்தூருக்குச் சென்றார்கள்.

(2) பொறுப்பில் மாற்றம். எல்லைப் பகுதியில் யோசேப்பின் மாற்றங்கள் எவ்வளவு நாடக பாணியில் இருந்ததோ, அவ்வளவாக அவரது பொறுப்புக் களில் மாற்றமும் குறிப்பிடத் தக்கதாக இருந்தது. இவரும் மரியாளும் திருமணத்தில் இணைக்கப்படும் வரையிலும் இவருக்கு, ஒரு குறிப்பிட்ட பணிக்குச் சரியான மரத்தையும் சரியான கருவியையும் தேர்ந்து எடுத்தல் மட்டுமே தீவிரமாக முடிவெடுக்க வேண்டிய விஷயங்களாக இருந்தன. இவர் நாசரேத்தில் மரியாளின் கணவரானபோது, இவர் வீட்டைக் கவனிக்க வேண்டிய பொறுப்பைத் திடீரென்று பெற்றார். இவர் பெத்லகேமுக்குச் சென்றபோது, மன உணர்வு கொண்ட ஒவ்வொரு தந்தையும் புதிதாகப் பிறந்த ஒரு குழந்தையின் முகத்தை முதன் முதலாகக் கண்ணோக்குகையில் பெறும் கனத்த உணர்வையே உணர்ந்திருக்க வேண்டும். யோசேப்பை எகிப்துக்கு ஓடிப்போகும்படி தூதன் கூறியபோது, விலைமதிப்பற்ற இந்தக் குழந்தையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பானது இவரது மனதில் ஆழப்பதியப்பட்டது. இவர் நாசரேத்தூருக்குத் திரும்பி வந்தபோது, பின்பு இவர் தமது புதிய பொறுப்பின் மிகக் கடினமான பகுதியைத் தொடங்கினார்: தமது பாதுகாப்பில் விடப்பட்ட தனிச் சிறந்த ஒருவரை [இயேசுவை] ஒவ்வொரு நாளும் உருப்படுத்துதல்.

"தனது மகனுக்கு ஒரு தொழிலைக் கற்றுத் தராதவன் அவனுக்குத் திருடக் கற்றுத் தருகின்றான்" என்று யூதர்கள் நம்பினார்கள். இயேசு ஒரு சிறு சுத்தியலைக் கையினால் பிடிக்க முடிந்தவுடனே, அவர் தமக்கருகில் அமர்ந்து வேலை செய்வதற்குச் சிறு பெஞ்ச்சு ஒன்றை யோசேப்பு செய்து வைத்திருப்பார் (மாற். 6:3). ஆயினும் ஆவிக்குரிய விஷயமே முக்கியமான பயிற்சியாக இருந்தது. யோசேப்பு இயேசுவுக்குப் பழைய ஏற்பாட்டின் மாபெரும் வரலாறுகளைக் கூறியதுடன், கூடுதலாக அவரை ஜெப ஆலயத்தின் பள்ளிக்கு அழைத்துச் சென்றிருப்பார் (லூக். 4:16).

*யோசேப்பின் முயற்சிகள் மரியாளின் முயற்சிகளுடன் ஒன்று கலந்திருந்தன, இவைகள் கடைசியில் வெற்றிகரமாகவே முடிந்தன; ஏனெனில், "பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன்கொண்டு, ஞானத்தினால் நிறைந்தது, தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது" (லூக். 2:40).*[2]

## உங்கள் வாழ்வில் மாற்றங்கள்

*யோசேப்பு அனுபவித்ததுபோல, நீங்கள் உங்கள் இடத்தில் மாற்றத்தை அனுபவித்திருக்கலாம் அல்லது அனுபவியாதிருக்கலாம்,*[3] *ஆனால் நீங்கள் உங்கள் வாழ்வில் மாற்றங்களைத் திட்டவட்டமாகக் கொண்டிருப்பீர்கள்.*[4] *மாற்றங்கள் என்பவை எப்போதுமே மகிழ்ச்சி நிறைந்தவையாக இருப்பதில்லை, ஆனால் நாம் அவற்றை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவை வந்து சேருகின்றன.*

*துரதிர்ஷ்டவசமாக, சிலர் தங்கள் வாழ்வில் சில மாற்றங்கள் தேவை என்பதை உணர்ந்து அறிவது இல்லை: அவர்கள் பிள்ளைத்தனமான பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளாமலேயே வயது வந்தவர்களாக விரும்புகின்றார்கள். அவர்கள் தங்கள் சுயத்தை மையம் கொண்ட தன்மையை மாற்றிக் கொள்ளாமலேயே திருமணம் செய்துகொள்ள விரும்புகின்றார்கள். அவர்கள் தங்கள் பணி முறைமைகளை மாற்றிக் கொள்ளாமலேயே பெற்றோர்களாக விரும்புகின்றார்கள்.*[5] *சிலர் தங்கள் இருதயங்களையும் வாழ்வையும் மாற்றிக் கொள்ளாமலேயேகூடப் பரலோகம் செல்ல விரும்புகின்றார்கள்.*[6]

*மாற்றங்கள் என்பவை ஒவ்வொரு தனிநபரின் வாழ்விலும் அவசியமானவைகளாக உள்ளன - கர்த்தரைப் போல மறுரூபம் அடைதல் என்பது மிகவும் முக்கியமான மாற்றமாக உள்ளது (2 கொரி. 3:18). நாம் கிறிஸ்தவர்களாகும்போது, "புதிய ஜீவனுள்ளவர்களாய்" (ரோமர் 6:4) ஞானஸ்நானத் தண்ணீர்க் கல்லறையில் இருந்து எழுகின்றோம். பின்பு நாம் ''புது சிருஷ்டிகளாய்'' வாழ வேண்டியவர்களாய் இருக்கின்றோம் (2 கொரி. 5:17ஐக் காணவும்).*[7]

## முடிவுரை

*யோசேப்பை நான் வாழ்க்கையில் மாற்றம் பெற்ற ஒரு மனிதர் என்று அழைத்திருக்கின்றேன். நாம் யாவரும் கூட, கர்த்தருடைய வல்லமையினால் வாழ்க்கையில் மாற்றம் பெற்ற மனிதர்களாய் இருக்க வேண்டும்.*

*யோசேப்பு தமது வாழ்வில் வந்த மாற்றத்தை ஏற்றுக் கொண்டார், மற்றும் இவர் அந்த மாற்றங்கள் கொண்டு வந்த பொறுப்பை நிறைவேற்ற தம்மால் இயன்ற அளவு மிகச் சிறப்பாகச் செயல்பட்டார். தேவன் தம்மிடத்தில் செய்யச் சொன்னவற்றை - தயக்கமின்றி - செய்த யோசேப்பைப் போல் நாம் யாவரும் இருக்கத் தேவன் நமக்கு உதவுவாராக!*[8]

குறிப்புகள்

[1]தேவன் குடும்பத்தில் ஆணுக்கு, பிள்ளைகளைச் சரியான வழியில் வளர்க்க வேண்டிய பொறுப்பைக் கொடுத்துள்ளார் (எபே. 6:4ஐக் காணவும்). [2]பாடத்தின் இந்தப் பகுதியில், நீங்கள் இயேசு பன்னிரெண்டு வயதில் தேவாலயத்தில் விடப்பட்ட நிகழ்ச்சியைப் பற்றிச் சுருக்கமான வரலாற்று மறுகண்ணோட்டத்தைத் தரவிரும்பலாம். ஏதோ ஒரு வழியில் நீங்கள் யோசேப்பின் வாழ்வைப் பற்றிக் கூறி முடிக்க வேண்டியது அவசியமாகும். இயேசு தமது சொந்த ஊழியத்தைத் தொடங்கும் முன்பு ஏதோ ஒரு வேளையில் யோசேப்பு மரித்தார் என்பது உறுதி என்பதை நீங்கள் சுருக்கமாக விளக்கியுரைக்க விரும்பலாம். ஆயினும் இவர் மரிக்கும் முன்பு இயேசுவுக்குத் தேவபக்தியின் பயிற்சியளிக்கும்படி தேவன் தமக்குத்தந்த அறைகூவலை நிறைவேற்றினார். [3]அமெரிக்கர்களில் பலர் தங்கள் வாழ்வில் பலமுறை இடம் பெயருகின்றார்கள். [4]பல மக்கள் முதிர்வயதை அடையும்போது, அவர்கள் வயது வந்தவர்களாகும் போது, அவர்கள் புதிய பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும்போது நடக்கின்ற பொதுவான மாற்றங்களைப் பட்டியலிடுங்கள். [5]அறிமுகப் பகுதியானது, யோசேப்பு மரியாளைத் திருமணம் செய்து கொண்டதால், இயேசு என்னும் பெயர் கொண்ட குழந்தை அவரது வாழ்வில் வந்ததால் யோசேப்பின் வாழ்வு மாற்றப்பட்டது என்று எடுத்துரைக்கிறது. நாம் திருமணம் முடிக்கும்போது, மற்றும் பிள்ளைகள் பெற்றுக் கொள்ளும்போது ஏற்படுகின்ற மாற்றங்கள் இங்கு இணையாக எடுத்து உரைக்கப்பட முடியும் - நாம் தேவனால் தரப்படுகின்ற பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டால் அவைகளும் இவற்றுடன் வருகின்றன. [6]மனந்திரும்புதலின் அவசியமானது (லூக். 13:3; அப். 2:38; 17:30) நாம் நமது இருதயங்களையும் வாழ்வையும் மாற்றிக் கொண்டு நாம் இரட்சிக்கப்படுவதைக் கட்டளையிடுகிறது. [7]இந்தச் சிந்தனை விரிவாக்கப்படலாம். [8]இது சுவிசேஷத்திற்கு உடனடியாக கீழ்ப்படியும்படி அழைப்பதற்குத் தர்க்கரீதியான ஒரு இடமாக இருக்கும் (அப். 2:37, 38, 41).

# கிறிஸ்து எப்போது பிறந்தார்?

**ஆண்டு**

*டியோனிஸியுஸ் எக்ஸீஜஸ் என்ற ஆறாம் நூற்றாண்டுத் துறவியொருவர், கிறிஸ்தவ உலகம் என்று அழைக்கப்படுகின்ற உலகிற்கு கிறிஸ்து பிறப்பிலிருந்து நடந்த எல்லா நிகழ்வுகளையும் தேதியிட்டவரா யிருந்தார். அவர் கிறிஸ்து பிறந்த மிகச் சரியான ஆண்டைத் தீர்மானிக்க செயல்பட்டார். (கணக்கீட்டுக் காலம் என்று நாம் இப்போது அறிகின்ற வகையில்) கி.பி. 525ல் இவர் ரோமானிய வரலாற்றின் 753ம் ஆண்டில் கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்ந்தது என்று அறிவித்தார். பல ஆண்டுகளுக்குப் பின்பு, இவர் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளை விட்டுவிட்ட தவறைச் செய்தார் என்பது கண்டறியப்பட்டது - ஆனால் உலகப் பதிவுகளை அப்படியே விட்டுவிடலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இவ்விதமாக நாம் கிறிஸ்து சில ஆண்டுகள் முன்பாக "கி.மு."வில் (கிறிஸ்துவுக்கு முன்பு) பிறந்தார் என்ற முரண்பாட்டைப் பெறுகின்றோம்.*

*இயேசு பிறந்த மிகச் சரியான காலத்தை வேதாகமம் தருவதில்லை, ஆனால் வேத வசனங்களில் அடங்கியுள்ள தகவல்கள் இந்த ஆண்டைப் பற்றிக் கற்றறிந்த யூகம் செய்ய நம்மை அனுமதிக்கின்றன:[1]*

*(1) வரலாற்றுப் பதிவேடுகள், மகா ஏரோது 750ன் (ரோம நாட்காட்டிப் படியானது) முன் வசந்த காலத்தில் இறந்ததாகச் சுட்டிக்காண்பிக்கின்றன. இயேசு இதற்கு, ஆறு மாதங்கள் முதல் ஒரு ஆண்டு வரையில் முற்பட்ட காலத்தில் பிறந்தார்[2] - இவ்விதமாக அவர் 749ல் பிறந்தார் (இது டியோனிஸியுஸ் எக்ஸீஜஸ் கணக்கிட்ட காலத்திற்கு நான்கு ஆண்டுகள் முந்திய கால வேளையாக உள்ளது).*

*(2) லூக்கா, "திபேரியுராயன் ராஜ்யபாரம் பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே" (லூக். 3:1) யோவான் ஸ்நானன் தமது வெளியரங்கமான ஊழியத்தைத் தொடங்கினார் என்று எழுதினார். 765ஐ திபேரியுராயனின் ஆளுகைத் தொடக்கமாக லூக்கா பயன்படுத்தினார் என்றும்,[3] யோவான் தமது ஊழியத்தைத் தொடங்குகையில் முப்பது வயதுடையவராயிருந்தார் என்றும்[4] யூகித்துக் கொண்டால், இது யோவானின் பிறப்பு 750லும் இயேசுவின் பிறப்பு அதற்கு ஆறு மாதங்களுக்குப் பிறகு நடந்தது என்றும் காலத்தைத் தருவதாக உள்ளது.*

*(3) இயேசுவின் வெளியரங்கமான ஊழியத்தின் போது வந்த முதல் பஸ்காவின்போது, மனிதர்கள் ஏரோதின் ஆலயத்தை நாற்பத்தி ஆறு ஆண்டுகள் முன்னதாகக் கட்டத்தொடங்கியிருந்தார்கள் என்று எடுத்துரைக்*

*கப்பட்டது (யோவா. 2:20ஐக் காணவும்). இந்தக் கட்டுமானத் திட்டத்தை ஏரோது 735ல் தொடங்கியதாக, கிடைக்கின்ற பதிவேடுகள் சுட்டிக் காண்பிக்கின்றன, இது யோவான் 2ன் நிகழ்வுகள் 781ல் நடைபெற்றன என்று காலத்தைத் தருவதாயிருக்கிறது. முதல் பஸ்காவானது இயேசுவின் முப்பத்தியோராம் வயதில் வந்தது என்று யூகித்தால், இது அவரது பிறப்பு 750ல் நடைபெற்றதாகக்கூறும்.*

*இவை எல்லாவற்றையும் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, இயேசு ரோம நாள்காட்டியின் 750ம் அல்லது 749ம் ஆண்டில் - வேறு வார்த்தை களில் சொல்லுவதென்றால், கி.மு. 4 அல்லது 5ல் - பிறந்தார் என்று கூறுவதே நியாயமானதாக இருக்கும்.*

### *ஆண்டின் காலவேளை*

*கிறிஸ்தவம் நிலைநாட்டப்பட்டதைத் தொடர்ந்து வந்த நூற்றாண்டு களில், மனிதர்கள் இயேசுவின் பிறப்பை, ஜனவரி 5, ஏப்ரல் 20, மே 20 மற்றும் டிசம்பர் 25 உட்பட பல தேதிகளில் நடைபெற்றதாகப் பல தேதிகளை வடிவமைத்துள்ளனர். டி. ஜார்ஜ் வான்டர்லிப் அவர்கள் பின்வருமாறு கூறினார்:*

> *இயேசு பிறந்த மாதம் அறியப்படாததாக உள்ளது. நான்காம் நூற்றாண்டின் தொடக்கம் வரை எந்த ஒரு சபையும் இயேசுவின் பிறப்பை ஆசரிக்கும் பண்டிகை எதையும் கொண்டாடவில்லை. டிசம்பர் 25 என்ற தேதியானது, ரோமக் கடவுளான சனி*(Saturn)*யைக் கனப்படுத்துவதற்காகக் கொண்டாடப்பட்ட சாட்டர்னேலியா என்ற ரோமப் பண்டிகைக்கு மாற்றாக ஒரு பண்டிகையை கிறிஸ்தவர்கள் ஆசரிப்பதற்காகத் தேர்ந்து கொள்ளப்பட்டது.*[5]

*ஆண்டின் எந்தக் காலவேளையில் இயேசு பிறந்தார் என்பதைப் பற்றி, இது அநேகமாகக் குளிர் காலமாய் இருந்திராது என்பதே கல்வியாளர்கள் ஒப்புக்கொள்ளுகின்ற ஒரே விஷயமாக உள்ளது. ஏ.டி. இராபர்ட்ஸன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> [*இயேசு பிறந்த காலம்*] *டிசம்பர் 25 அல்ல என்பது நிரூபிக்கப்பட்ட வைகளில் முக்கியமான விஷயமாகத் தோன்றுகிறது, ஏனெனில் அந்த வேளையில் மேய்ப்பர்கள் மந்தைகளுடன் இரவு வேளையில் வயல் வெளிகளில் இருப்பது மிகவும் கடினமானது, இவர்கள் பொதுவாக மந்தைகளை நவம்பர் மாதத்திலேயே கிடைகளுக்குக் கொண்டுபோய், மார்ச்சு மாதம் வரை அவற்றை அங்கேயே வைத்திருப்பார்கள். டிசம்பர் மாதத்தின் இரவுகள் பெத்லகேமின் தென்பகுதியில் தொலை விலும் கூட மலை வயல்வெளிகளில் ஆடுகளை மேய்த்துக் கவனித்தலை மிக அரிதாகவே அனுமதிக்கும். அத்துடன், நாசரேத்தில் இருந்து பெத்லகேம் வரையிலான நீண்ட பயணம் யோசேப்பினாலும் மரியாளினாலும் குளிர் காலத்தில், மழைபெய்யும் பருவத்தில் மேற்கொள்ளப்பட்டிருத்தல் என்பது மிகவும் கடினமாகும்.*[6]

ஹெச்.ஐ. ஹெஸ்டர் அவர்கள், இயேசுவின் பிறப்பு, "குளிர் கால மத்தியில் மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளை மலைக் குன்றுகளில் வைத்திருக்க மாட்டார்கள் என்பதால், மத்திய குளிர் காலத்தில் நடைபெற்றிருப்பது என்பது மிகவும் கடினமாகும். கோடை காலத்தின் பிற்பகுதி அல்லது பனி விழும் காலத்திற்கு முந்திய வேளை என்பது ஏற்ற வேளையாகக் காணப்படும்"[7] என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

வேதாகமம், இயேசுவின் பிறப்பைப் பற்றிய மிகச் சரியான காலவேளையைத் தருவதில்லை என்ற உண்மையானது, இந்த விவரங்கள் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையல்ல என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. அவர் எப்போது பிறந்தார் என்பதைக் காட்டிலும் அவர் பிறந்தார் என்பதே மிகவும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

---

குறிப்புகள்

[1]"சீரியா நாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று" என்ற லூக்காவின் எடுத்துரைப்பு (லூக். 2:2) இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை. இந்த நிகழ்ச்சியானது முதல் நூற்றாண்டு வாசகர்களுக்கு காலத்தை மிகச் சரியாகச் சுட்டிக் காண்பித்தது; ஆனால் நமக்கு இது அவ்வாறு செய்வதில்லை, ஏனென்றால் இந்தக் கணக்கெடுப்புப் பற்றிய வரலாற்று ரீதியான விவரங்கள் தெளிவற்றவைகளாக உள்ளன. அப்படிப்பட்ட ஒரு கணக்கெடுப்பு நடைபெற்றது என்பதைக் கல்வியாளர்கள் பொதுவாக ஒப்புக் கொள்ளுகின்றார்கள், ஆனால் அது நடைபெற்ற மிகச் சரியான காலவேளை பற்றி அவர்கள் ஒத்த கருத்துடையவர்களாய் இருப்பதில்லை. [2]பின்வரும் பாடங்களில் ஒன்றாகிய "இரட்சகரைத் தேடுதல்" என்ற பிரசங்கத்தில் காணவும். [3]765ல் திபேரியு இரண்டு ஆண்டுகள் ஆட்சியொன்றை அகுஸ்து இராயனுடன் தொடங்கினார். [4]யோவான் ஆசாரியக் குடும்பத்திலிருந்து வந்தவர் (லூக். 1:5), ஆசாரியர்கள் தங்கள் ஊழியங்களை முப்பது வயதில் தொடங்கினார்கள் (எண். 4:3). இது, இயேசு தமது ஊழியத்தை அவர் "ஏறக்குறைய முப்பது வயதுடையவராய் இருந்தபோது" (லூக். 3:23) தொடங்கினார், அவர் தொடங்குவதற்கு சற்று காலம் முன்னதாக யோவான் தமது ஊழியத்தைத் தொடங்கினார் என்ற உண்மையுடன் ஒத்துப் போகிறது. [5]D. George Vanderlip, *Jesus of Nazareth, Teacher and Lord* (Valley Forge, Pa.: Judson Press, 1994), 67. [6]A.T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* (New York: Harper & Row, 1950), 267. [7]H.I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 99.

# எல்லாவற்றிற்கும் போதுமான கிறிஸ்து

*கிறிஸ்து பின்வருபவர்களுக்கு எல்லாம் போதுமானவராக இருக்கின்றார் ...*

**ஓவியக் கலைஞருக்கு** - *அவர் முற்றிலும் அழகுள்ளவர் (உன்னதப்பாட்டு 5:16).*

**கட்டிடக் கலைஞருக்கு** - *அவர் பிரதான மூலைக்கல்லாக இருக்கின்றார் (1 பேது. 2:7).*

**சுயம்பாகிகளுக்கு** - *அவர் ஜீவ அப்பமாக இருக்கின்றார் (யோவா. 6:51).*

**கட்டிடம் கட்டுபவருக்கு** - *அவர் திட அஸ்திபாரமாக இருக்கின்றார் (ஏசா. 28:16; 1 கொரி. 3:11).*

**தச்சருக்கு** - *அவர் வாசலாக இருக்கின்றார் (யோவா. 10:9).*

**மருத்துவருக்கு** - *அவர் மாபெரும் வைத்தியராக இருக்கின்றார் (மாற். 2:17).*

**மின்சார வேலையாளருக்கு** - *அவர் உலகத்திற்கு ஒளியாக இருக்கின்றார் (யோவா. 8:12).*

**விவசாயிக்கு** - *அவர் விதைப்பவராகவும் அறுப்புக்கு எஜமானாகவும் இருக்கின்றார் (மத். 13:37; லூக். 10:2).*

**முதலீட்டாளருக்கு** - *அவர் அளவற்ற ஐசுவரியம் உடையவரா யிருக்கின்றார் (எபே. 3:8).*

**ஆபரணம் செய்பவருக்கு** - *அவர் விலையேறப் பெற்ற ஜீவனுள்ள கல்லாயிருக்கின்றார் (1 பேது. 2:4).*

**வழக்கறிஞருக்கு** - *அவர் ஆலோசனை கர்த்தாவாக, நியாயப் பிரமாணிக்கராக, பரிந்து பேசுபவராக இருக்கின்றார் (ஏசா. 9:6; 1 யோவா. 2:1).*

**செய்தித்தாள் விநியோகிப்பவருக்கு** - *அவர் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாக இருக்கின்றார் (லூக். 2:10).*

**பிரசங்கியாருக்கு** - *அவர் தேவனுடைய வார்த்தையாக இருக்கின்றார் (யோவா. 1:1).*

**வேலைக்காரருக்கு** - *அவர் நல்ல எஜமானராக இருக்கின்றார் (மத். 25:21, 23).*

**உழைப்பவருக்கு** - *அவர் இளைப்பாறுதல் அளிப்பவராக இருக்கின்றார் (மத். 11:28).*

**அலைந்து திரிபவருக்கு** - *அவர் வழியாக இருக்கின்றார் (யோவா. 14:6).*

Adapted from Leonard V. Buschman

# கிறிஸ்துவின் சொந்த ஊழியம் எவ்வளவு நாட்கள் நடைபெற்றது?

*இயேசுவின் சொந்த ஊழியம் மூன்றரை ஆண்டுகள் நடைபெற்றது என்று அடிக்கடி எடுத்துரைக்கப்படுகிறது. இது, யோவான் சுவிசேஷம் நான்கு பாஸ்கா பண்டிகைகளைக் குறிப்பிடுகிறது என்று பலரும் நம்புகின்ற உண்மையின் அடிப்படையில் ஏற்பட்ட கற்றறிந்த ஒரு யூகமாக உள்ளது. யோவான் மூன்று பஸ்கா பண்டிகைகளைத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்: 2:13; 6:4; 13:1. நான்காவது குறிப்பானது, "யூதருடைய பண்டிகை ஒன்று வந்தது" (5:1) என்பதாக உள்ளது, இது ஒரு பஸ்காவாக இருந்திருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். இது பஸ்கா பண்டிகையாக இருக்கலாம் என்பதற்கு,[1] இயேசுவின் ஊழியம் மூன்று ஆண்டுகளுக்குக் குறைவான காலத்தைக் கொண்டிருந்தது என்றால், அவரது [ஊழிய] வாழ்வில் நடைபெற்ற[தாக வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள] எல்லா நிகழ்ச்சிகளையும் அந்தக் காலகட்டத்திற்குள் அடக்குதல் என்பது கடினமாயிருக்கும் என்பது உட்படப் பல்வேறு விளக்கங்கள் தரப் பட்டுள்ளன. யோவானால் குறிப்பிடப்படாத கூடுதலான சில பஸ்கா பண்டிகைகள் இயேசுவின் ஊழியத்தின்போது நடைபெற்றிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது - மற்றும் அவரது ஊழியம் நான்கு அல்லது அதற்கு அதிகமான ஆண்டுகள் நடைபெற்றிருக்கவும் கூடும்.*

*இயேசுவின் சொந்த ஊழியம் எவ்வளவு காலம் நடைபெற்றது என்பது முக்கியமானதாக இருப்பது இல்லை; அவ்வாறு இருந்திருந்தால், தேவன் அதை வெளிப்படுத்தியிருப்பார். வேத வசனங்கள் கூறாத ஒன்றான, "இயேசுவின் ஊழியம் மூன்றரை ஆண்டுகள் காலம் நடைபெற்றது" என்று வகைப்படுத்தி எடுத்துரைப்பதால் உங்களுக்கு ஏற்படும் சங்கடத்தைத் தவிர்க்க உதவுவதற்காகவே இது இவ்விடத்தில் குறிப்பிடப்படுகிறது. ஏ.டி. இராபர்ட்ஸன் அவர்கள், ''இயேசுவின் ஊழியம் குறைந்தபட்சம் இரண்டரை ஆண்டுகள் மற்றும் மூன்றரை ஆண்டுகள் அளவுக்கு நடந்திருக் கக் கூடிய நிகழ்தகவு உள்ளது" என்று எழுதினார்.[2]*

---

*குறிப்புகள்*

[1]A.T. Robertson, *A Harmony of the Gospels for Students of the Life of Christ* (New York: Harper & Row, 1950), 269-70. [2]Ibid., 270.

# "பரலோக இராஜ்யம்"

*யோவான் ஸ்நானன் மற்றும் இயேசு ஆகிய இருவருமே "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத். 3:2; 4:17; 10:7) என்றே பிரசங்கித்து வந்தார்கள். "இராஜ்யம்" என்ற வார்த்தையானது மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய சுவிசேஷங்களில் நூறு முறைகளுக்கும் மேல் காணப்படுகிறது.*[1] *இது இந்த நான்கு புத்தகங்களிலும் பிரதானமான ஆய்வுப் பொருளாக உள்ளது.*

*"இராஜ்யம்" என்ற மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை யானது "இராஜரீகம் மற்றும் ஆட்சி" என்று கருத்துத் தெரிவிக்கிறது. சுவிசேஷ விவரங்களில், இது கர்த்தர் ஆளுகின்ற வட்டாரத்தைக் குறிக்கிறது.*

*"இராஜ்யம்" என்ற வார்த்தையானது புதிய ஏற்பாடு முழுவதிலும் காணப்படுகிறது (ரோமர் 14:17; 1 கொரி. 4:20), ஆனால் இது கிறிஸ்துவின் தனிப்பட்ட ஊழியத்தின்போது அடிப்படையாகப் பயன்படுத்தப்பட்டது. பல நூற்றாண்டுகளாக, யூதர்கள் ஒரு ராஜாவை (மேசியாவை) எதிர்பார்த்திருந்தார்கள், அவர் வந்து தமது இராஜ்யத்தை நிலைநாட்டுவார் என்று அவர்கள் ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தார்கள்.*

*ஆயினும், மேசியாத்துவ ராஜ்யத்தைப் பற்றி யூதர்கள் தவறான கருத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் சிந்தையில் பூமிக்குரிய அரசியல் பேரரசு பற்றியே நினைவு கொண்டிருந்தார்கள். இயேசு, தமது இராஜ்யம் "இவ்வுலகத்திற்குரியதல்ல" (யோவா. 18:36) என்று கூறினார். அவருடைய உவமைகளில்*[2] *பெரும்பான்மையானவை இராஜ்யத்தைப் பற்றியவை களாகவே இருந்தன, அவைகள் இராஜ்யத்தின் ஆவிக்குரிய இயல்பைப் போதிக்கும்படி வடிவமைக்கப்பட்டிருந்தன.*

*இராஜ்யத்தைக் குறிப்பதற்கு சுவிசேஷ விவரங்களில் பல்வேறு சொற்றொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. "தேவனுடைய இராஜ்யம்" (மத். 19:24; மாற். 4:26) என்பது மிகவும் பொதுவான சொற்றொடரா யுள்ளது, இது ஐம்பதுக்கும் அதிகமான முறைகள் காணப்படுகிறது. "பரலோக இராஜ்யம்" என்பது (மத். 5:3, 10, 19) மத்தேயுவுக்குப் பிரியமான சொற்றொடராக இருந்தது. இந்தச் சொற்றொடரை இவர் மட்டும் முப்பதுக்கும் அதிகமான முறைகள் பயன்படுத்தியுள்ளார். இயேசு, "என் இராஜ்யம்" (லூக். 22:30; யோவா. 18:36). "என் பிதாவின் இராஜ்யம்" (மத். 26:29) போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். சில வேளைகளில் "இராஜ்யம்" என்ற எளிய வார்த்தை பயன்படுத்தப்பட்டது (மத். 4:23; 13:19).*

*சிலர், "தேவனுடைய இராஜ்யம்" என்பதற்கும் "பரலோக இராஜ்யம்" என்பதற்கும் வித்தியாசத்தை ஏற்படுத்த முயற்சி செய்கின்றார்கள், ஆனால் அவர்களின் முயற்சிகள் இணங்கச் செய்வதில் குறைவுபடுகின்றவை*

களாகவே உள்ளன. ஜான் கார்ட்டர் அவர்கள், "என்னைப் பொறுத்த மட்டில், இவற்றின் அர்த்தத்தில் வேறுபாட்டைச் சுட்டிக் காண்பிக்க மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளும் வலுக்கட்டாயமானவை களாகவே உள்ளன, மற்றும் உரிமைகோரப்பட்ட வேறுபாடு செயற்கை யானதாகவே காணப்படுகிறது" என்று கூறினார்.[3] மத்தேயு 19:23, 24ல், இவ்விரு சொற்றொடர்களும் ஒன்றுக்குப்பதில் ஒன்றாக மாற்றக்கூடிய வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன:

> அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: "ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

ஒப்பீட்டு சுவிசேஷங்களின் எட்டு இணை வசனப்பகுதிகளில் மத்தேயு, "பரலோக இராஜ்யம்" என்பதைக் கொண்டுள்ளார், மற்ற ஒப்பீட்டு சுவிசேஷங்களில் "தேவனுடைய இராஜ்யம்" என்றுள்ளது. (எடுத்துக் காட்டாக, மத். 4:17ஐ மாற். 1:14, 15உடன் ஒப்பிட்டுப் பாருங்கள்).

புதிய ஏற்பாட்டில், "இராஜ்யம்" என்ற சொற்றொடரானது பல்வேறு வழிமுறைகளில் பயன்படுத்தப்படுகிறது.[4] அவ்வப்போது இது பரலோகத் தைக் குறிப்பிடுகிறது (அப். 14:22; 2 பேது. 1:11 ஆகியவற்றைக் காணவும்). பெரும்பாலான வேளைகளில் இது இராஜாதி இராஜாவின் சட்டத்திற்கு மனப்பூர்வமாய்த் தங்களை கீழ்ப்படுத்தி, தங்கள் இருதயங்களில் கர்த்தருடைய ஆளுகையை அனுமதித்துள்ள தனிநபர்களைக் குறிக்கிறது.[5]

நிருபங்களில், இராஜ்யத்தின் குடிமக்கள் "சபையார்" என்று அழைக்கப் படுகின்றார்கள். "இராஜ்யம்" என்பது சுவிசேஷ விவரங்களில் விரும்பித் தேர்ந்துகொள்ளப்பட்ட சொற்றொடராக இருக்கலாம், ஆனால் "சபை" என்பதே நிருபங்களில் விரும்பித் தேர்ந்துகொள்ளப்பட்ட சொற்றொடராக உள்ளது. "இராஜ்யம்" மற்றும் "சபை" என்பவை ஆவிக்குரிய தனிப்பட்ட இரு வகையான நிறுவனங்களைக் குறிப்பதில்லை, ஆனால் இவை இரண்டும் ஒன்றே. மத்தேயு 16:18, 19ல் இயேசு தமது இராஜ்யத்தைப் பற்றிப் பேசுகையில், அதை அவர் "என் சபை" என்று அழைத்தார்.

கிறிஸ்துவின் இராஜ்யம்/சபை என்பது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்குப் பின் வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் தனது தொடக்கத்தைக் கொண்டிருந்தது (மாற். 9:1; அப். 1:6-8; 2:1-4 ஆகியவற்றைக் காணவும்).[6] அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து, இராஜ்யம்/சபையானது நிலவுகின்ற ஒன்றாகவே பேசப்படுகிறது (அப். 5:11; 8:1, 3; கொலோ. 1:13; எபி. 12:28; வெளி. 1:6).

இராஜ்யம் இன்னும் நிலைநாட்டப்படவில்லை என்று சிலர் போதிக் கின்றார்கள். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே, யோவானும் இயேசுவும், இராஜ்யம் "சமீபித்து இருக்கிறது" (அதாவது, "ஏறக்குறைய இங்கிருக்கிறது") என்று போதித்தார்கள். மேலும் இயேசு,

தமது உரையைக் கேட்பவர்களில் சிலரது வாழ்வுக் காலத்திற்குள்ளேயே இராஜ்யம் வரும் என்று போதித்தார் (மாற். 9:1). இராஜ்யம் இனிவருவது/ எதிர்காலத்திற்குரியது என்று வேதவசனங்கள் போதிப்பதில்லை, ஆனால் கிறிஸ்து தேவனிடத்திற்கு ஏறிச் சென்றபோதே ஆளுகை செய்யத் தொடங்கிவிட்டார் என்றே போதிக்கின்றன (அப். 2:29-36). கிறிஸ்து இப்போது தமது இராஜ்யத்தின்மீது பரலோகத்தில் இருந்து ஆளுகை செய்கின்றார், மற்றும் அவர் காலத்தின் முடிவில் திரும்பி வந்து (1 கொரி. 15:24-27ஐக் காணவும்) தம்மீது விசுவாசம் கொண்டுள்ளவர்களை (யோவா. 14:1-3) பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வரையிலும் தொடர்ந்து ஆளுகை செய்வார்.

அப். 2ல் சபையின்/இராஜ்யத்தின் நிலைநாட்டுதலுக்குப் பின்பு, "இராஜ்யம்" என்ற வார்த்தையைக் காட்டிலும் "சபை" என்ற வார்த்தை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதால், கர்த்தருடைய சபையே ஒரு இராஜ்யமாக உள்ளது என்ற உண்மையைப் பற்றிய கண்ணோட்டத்தை இழந்து போய்விடாதீர்கள். கிறிஸ்துவின் வாழ்வு பற்றிய நமது பாடங்கள் தொடருகையில், "இராஜ்யம்" என்ற வார்த்தையைக் கண்ணோக்குங்கள். இவ்வார்த்தையைப் பயன்படுத்தும் வேத வசனப் பகுதிகள், நீங்கள் பரிசுத்த நடக்கையிலும் தேவபக்தியிலும் எப்படிப்பட்ட நபராக இருக்க வேண்டும் என்று உங்களுக்குக் கூறும்.[7]

---

குறிப்புகள்

[1]ஆதாரமூலத்திற்கு ஆதாரமூலம், மிகச் சரியான எண்ணிக்கையானது வேறுபடுகிறது. [2]இயேசுவின் உவமைகளில் பல, "பரலோக இராஜ்யம் ... ஒப்பாயிருக்கிறது" என்றே தொடங்குகின்றன (எடுத்துக்காட்டாக, மத். 13:31, 33, 44, 45, 47, 52 ஆகியவற்றைக் காணவும்). [3]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 55. [4]எடுத்துக்காட்டாக, "இராஜ்யம்" என்ற சொற்றொடரானது எந்த ஒரு இராஜ்யத்தையும் (மத். 12:25), சாத்தானின் இராஜ்யத்தையும் (மத். 12:26), இஸ்ரவேல் இராஜ்யத்தையும் (மத். 8:12; பழைய ஏற்பாட்டின் காலங்களில், இஸ்ரவேல் நாடு தேவனுடைய விசேஷித்த இராஜ்யமாக இருந்தது) குறிக்கவும் மற்றும் பொதுவாக தேவனுடைய ஆளுகையைக் குறிக்கவும் (மத். 6:13) பயன் படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு விஷயத்திலும், "இராஜ்யம்" என்பது "ஆட்சி செய்தல்" அல்லது "ஆளுகை செய்தல்" என்பதையே அடிப்படை அர்த்தமாகக் கொண்டுள்ளது. [5]"இராஜ்யம்" என்ற வார்த்தை பல வழிமுறைகளில் பயன்படுத்தப்படுவதால், கொடுக்கப்படுகிற ஒரு வசனப்பகுதியில் அதன் அர்த்தத்தை எவ்வாறு ஒருவர் அறிய இயலும்? சந்தர்ப்பப் பொருளைக் கண்ணோக்கவும். [6]கூடுதல் தகவல்களுக்கு, இன்றைக்கான சத்தியத்தின் வெளியீடான "அப். நடபடிகள் 1" என்ற புத்தகத்தில் பக்கம் 339ல் உள்ள "இராஜ்யம்/சபை நிலை நாட்டப்படுதல்" என்ற பாடத்தில் காணவும். [7]இந்தச் சொல்லமைப்பு 2 பேதுரு 3:11ல் இருந்து கடன் பெறப்பட்டுள்ளது. இராஜ்யம் பற்றிய கூடுதலான தகவல்களுக்கு, இன்றைக்கான சத்தியத்தின் வெளியீடான "அப். நடபடிகள் 1" என்ற புத்தகத்தில் பக்கம் 339, 340 மற்றும் 345 ஆகியவற்றில் காணவும்.

# தேவனுடைய இராஜ்யத்தில் ஒரு குடிமகனாக இருப்பது எப்படி

*"இராஜ்யம்" என்ற வார்த்தையின் தீர்க்கதரிசனப் பயன்பாடானது, இந்த உலகத்திற்கான தேவனுடைய சித்தத்திற்குத் தங்களைக் கீழ்ப்படுத்தியுள்ள மக்களின்மீதான தேவனுடைய ஆவிக்குரிய ஆளுகையைக் குறிக்கிறது. இது ஒரு ஆளுகையையும் ஒரு ஆளுகை வட்டாரத்தையும் குறிக்கிறது - ஆளுகை என்பது வாழ்வின்மீது தேவனுடைய ஆவிக்குரிய ஆளுகையையும், ஆளுகை வட்டாரம் என்பது தேவனுடைய ஆளுகை தெளிவாய்க் காணப்படக் கூடிய ஆவிக்குரிய வட்டாரத்தையும் குறிக்கிறது. "சபை" என்ற வார்த்தையில், கிறிஸ்துவின் இராஜரீக ஆளுகை உட்படுத்தப் பட்டுள்ளது. ஒருவர் கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படியும்போது, அவர் சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்திற்குள் கொண்டு வரப்படுகின்றார். அவர் சபையின் தலையாகிய கிறிஸ்து இயேசுவுக்குக் கீழ்ப்படிதலுடன் வாழ்க்கையில், அவர் தேவனுடைய பூமிக்குரிய இராஜ்யத்தின் ஒரு அங்கமாக வாழ்கின்றார். இவ்விதமாக, மத்தேயு 16:18, 19ல் இயேசு வெளிப்படுத்திய படி, "தேவனுடைய இராஜ்யம்" என்பதும் "கிறிஸ்துவின் சபை" என்பதும் ஒன்றுக்குப் பதில் ஒன்றாக பயன்படுத்தக்கூடிய விளக்கங்களாக உள்ளன.*

*நீங்கள் உங்கள் சித்தத்தை ராஜாவுடைய சித்தத்திற்கு ஒப்புவித்தலின் மூலம் தேவனுடைய இராஜ்யத்தின் குடிமகனாக/குடிமகளாக முடியும். கிறிஸ்து, ''பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: 'கர்த்தாவே! கர்த்தாவே!' என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7:21) என்று கூறினார். குடியுரிமைக்கான நிபந்தனையைக் கட்டளையிடுவதற்கு எந்த ஒரு மனிதருக்கும் உரிமையில்லை. மீண்டுமாக இயேசு, "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 3:3) என்று கூறினார். அப்போஸ்தலரான பேதுரு, நாம் தேவனுடைய வசனத்தின் மூலமாக நாம் அந்த வசனத்தின் சத்தியத்திற்குக் கீழ்ப்படியும்போது, ''மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகின்றோம்'' என்று கூறினார் (1 பேது. 1:22, 23).*

*ஆவியானவரால் ஏவப்பட்ட வசனமானது (2 பேது. 1:21) நாம் இயேசுவை விசுவாசித்து, நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பி, நமது*

*விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் (தண்ணீரில் முழுக்காட்டப் படுதல்) பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நமக்குப் போதிக்கிறது (யோவா. 3:16; லூக். 13:3; மத். 10:32; மாற். 16:16). நாம் ராஜாவின் கட்டளைகளைப் பின்பற்றுகையில், நாம் "ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கின்றோம்'' (யோவா. 3:5) மற்றும் இருளில் அதிகாரத்தினின்று விடுவிக்கப்பட்டு அவரது குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தப் படுகின்றோம் (கொலோ. 1:13).*

*தேவனுடைய ராஜ்யத்தின் குடிமக்கள் என்ற வகையில், நமது மதிப்பீடுகள் மாறுகின்றன. இனியும் நாம் இந்த உலகத்தை, இவ்வுலகத்தின் மக்களைப் போல் கண்ணோக்குவதில்லை. நாம் ''இவ்வுலகத்தில்'' இருக்கின்றோம், ஆனால் "இவ்வுலகத்திற்குரியவர்களாய்" இருப்பதில்லை (யோவா. 17:11, 14). இந்த உலகத்திற்கு மட்டுமே உரியவர்கள் தங்கள் உடைமைகள், தங்கள் நிகழ்காலம், தங்கள் எதிர்காலம் மற்றும் உலக விஷயங்கள் ஆகியவை பற்றி கவலைப்படுகின்றார்கள். கிறிஸ்தவர்கள் இந்த உலகத்திற்கு உரியவர்களாய் இருப்பதில்லை; நாம் ஒரு ஆவிக்குரிய ராஜ்யத்திற்கு உரியவர்களாய் இருக்கின்றோம், இந்த இயல்பு உலக இராஜ்யத்திற்கு உரியவர்களாய் இருப்பதில்லை. நமது தியானம் என்பது உலகிற்கு உரியதாயிராமல் ஆவிக்குரியதாக உள்ளது. நாம் நோயாளிகளுக்கு உதவுகையில், பசித்திருப்போருக்கு உணவளிக்கையில், இந்த உலகத்தை வாழ்வதற்கு ஒரு மேன்மையான இடமாக்குகையில், நித்தியமானைகளே நமது இருதயத்தின் உண்மையான அக்கறையாக இருக்கின்றன. நாம் சந்திக்கின்ற ஒவ்வொரு மனிதரின்மீதான மற்ற எல்லா ஆர்வங்களைவிட அதிகமாக நாம் அவர்களின் ஆவிக்குரிய இரட்சிப்பை நாடுகின்றோம். நாம் உலகப்பிரகாரமான இலக்குகளுக்காக இன்றி, ஆவிக்குரிய இலக்குகளுக்காக வாழ்கின்றோம். இந்த உலகத்தின் மக்கள் புதிய உடைமைகளை வாங்கி விற்கின்றார்கள்; கிறிஸ்தவர்கள் புதிய ஆத்துமாக்களைத் தேடுகின்றார்கள். நித்தியத்தின் உருப்பெருக்கி வழியாக உற்றுநோக்கும்போது, நாம் இந்த வாழ்வின் [அல்லது] உலகப்பொருட்களின் மதிப்பற்ற தன்மையைக் காண்கின்றோம்.*

*நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தின் குடிமகனாக/குடிமகளாக இருக்கின்றீர்களா? நீங்கள் அந்த ராஜ்யத்தின் குடிமகனாக/குடிமகளாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர்களா?*

# புதிய பிறப்பு

*"மக்களில் சிலர் ஒருமுறை பிறந்து இருமுறை இறப்பார்கள். மற்றவர் களோ இருமுறை பிறந்து ஒருமுறை இறப்பார்கள்." இந்தப் புதிருக்கான விடையானது யோவான் 3:1-9ல் நிக்கொதேமுவுடனான இயேசுவின் உரையாடலில் தெளிவாக்கப்படுகிறது, அவ்விடத்தில் கர்த்தர் "புதிய பிறப்பு" பற்றிப் பேசினார்.*

*நாம் "மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று இயேசு கூறியபோது, அவர் ஒரு உருவகமான மொழிநடையைப் பயன்படுத்தினார். பிற்பாடு அவர் தம் சீஷர்களிடத்தில், "இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசு கிறேன்; காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக் குறித்து வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன்" (யோவா. 16:25) என்று கூறினார். இரட்சிப்புக்கான நிபந்தனைகளைப் பிரதான கட்டளையில் இயேசு உள்ளடக்கியபோது. அவர் "மறுபடியும் பிறத்தல்" என்பது பற்றிப் பேசவில்லை, ஆனால் அவர் "வெளிப்படை யாகப்" பேசினார்: "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற். 16:16அ; மத். 28:19ஐக் காணவும்). முதல் முதல் சுவிசேஷ செய்தியைப் பிரசங்கிக்கும்படி பேதுருவைக் கர்த்தர் ஏவியபோது, அந்த அப்போஸ்தலர் மக்களிடத்தில், "மறுபடியும் பிறத்தல்" பற்றிப் பேசவில்லை. அவரும்கூட "வெளிப்படையாகவே" பேசினார்: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்து வின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" (அப். 2:38). பேதுருவின் வார்த்தைகளை மக்கள் கேட்டுக் கீழ்ப்படிந்தபோது (அப். 2:41), அவர்கள் "மறுபடியும் பிறந்தார்களா?" ஆம். பிற்பாடு இதே அப்போஸ்தலர், "ஆகையால் நீங்கள் ... சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக் களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால் ... அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறீர்களே" (1 பேது. 1:22, 23) என்று எழுதினார். "மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுதல்" என்ற சொற்றொடரானது விசுவாசம் மற்றும் கீழ்ப் படிதல் ஆகியவற்றின் மூலமாக கிறிஸ்தவராகுதல் பற்றிப் பேசும் இன்னொரு வழிமுறையாக உள்ளது.*

*ஆயினும் நாம், "மறுபடியும் பிறத்தல்" என்ற இயேசுவின் கட்டளையை, "அது கிறிஸ்தவராகுதலைப் பற்றிப் பேசும் இன்னொரு வழிமுறையாகும்" என்று மட்டும் கூறி முடித்துவிட முடியாது. புதிய பிறப்பின் விவரிப்பானது, தேவனுடைய பிள்ளையாகின்ற ஒருவருடைய வாழ்வில் நடைபெற வேண்டிய பெரிய அளவிலான மாற்றத்தை வலியுறுத்துகிறது. இந்த மாற்றமானது யோவான் எழுதிய முதல் நிருபத்தில்*

*வலியுறுத்தப்படுகிறது. தேவனால் "பிறந்த" ஒருவர் நீதியை நடப்பிக்கின்றார் (1 யோவா. 2:29), பாவம் நிறைந்த வாழ்வுப் பாணியைத் தவிர்க்கின்றார் (3:9, 10), பிறர் மீது அன்புகூருகின்றார் (4:7), இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தில் நிலைத்திருக்கின்றார் (5:1-5) என்று யோவான் எழுதினார். இந்தப் பண்புகளை உற்றுநோக்கி, "நான் உண்மையாகவே மறுபடியும் பிறந்திருக்கின்றேனா?" என்று கேட்பதில் மதிப்பு இருக்கலாம்.*

*இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் முன்மொழியப்பட்ட புதிருக்கு நாம் திரும்புவோம்: "மக்களில் சிலர் ஒருமுறை பிறந்து இருமுறை இறப்பார்கள்." இவர்கள் உடல்ரீதியாகப் பிறந்திருக்கின்றார்கள், ஒருக்காலும் ஆவிக்குரிய வகையில் பிறக்கவில்லை. இவ்விதமாக, இவர்கள் தங்கள் உடல்ரீதியான இறப்பிற்குப் பின்பு, நரகத்தில் "இரண்டாம் மரணத்தை" துன்பத்துடன் அனுபவிப்பார்கள் என்பது கவலைக்கு உரியதாகும் (வெளி. 20:14; 21:8). மற்றவர்களோ இருமுறை பிறந்து ஒருமுறை இறப்பார்கள்." இவர்கள் கிறிஸ்தவர்கள் ஆகும்போது, ''மறுபடியும் பிறக்கின்றவர்களாய்'' இருக்கின்றார்கள். இவர்கள் மரணபரியந்தம் உண்மையாயிருந்தால் (வெளி. 2:10), இவர்கள் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை (வ. 11). "நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கின்றீர்களா?"*

*இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியானது, கிறிஸ்தவர்களின் உதாரத்துவத்தின் மூலமாக வேதாகமப் பாடங்களை இலவசமாக வழங்க முடிகிறது. இன்று வரையிலான முகவரிப் பட்டியலை நாங்கள் வைத்துக் கொள்வதற்காக, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்களை நீங்கள் கொடுக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.*

*வருடத்திற்கு ஒருமுறையாவது தயவுசெய்து எங்களுக்கு எழுதி, உங்களுடைய விபரம் இன்னும் சரியாயிருக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும், நீங்கள் படிப்பதற்கு இந்த வேத பாடங்களை உதவியாகக் காண்கிறீர்களா என்பதையும் தெரியப்படுத்துங்கள். கர்த்தருக்கான உங்கள் ஊழியத்தில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.*

*ஒன்றைக் குறிப்பிடவும்:* ❐ *ஆண்* ❐ *பெண்*

*பெயர்:* ________________________________________

*முழு முகவரி: (முகவரியை பெரிய ஆங்கில எழுத்தில் எழுதவும்.)*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*புதிய முகவரி பழைய முகவரி (முகவரியில் மாற்றம் இருக்குமானால்) தெரியப்படுத்தவும்:*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

Email *விலாசம்:* ________________________________

*எந்த சபையில் நீங்கள் கலந்துகொள்கிறீர்கள்?* ____________________

*அது எங்கிருக்கிறது?* ________________________________

*பிரசங்கிப்பவரின் பெயர்:* ______________________________

*நீங்கள் கலந்துகொள்ளும் உள்ளூர் சபையில் உங்கள் பொறுப்பு என்ன? (சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் குறிப்பிடவும்).*

❐ *பிரசங்கிப்பவர்* ❐ *அங்கத்தினர்*

❐ *வேதபாட வகுப்பு ஆசிரியர்* ❐ *அங்கத்தினரல்லாதவர்.*

*இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியின் வெளியீடு களை தற்போது நீங்கள் தவறாமல் பெற்றுக் கொண்டு வருகிறீர்களா? (ஒன்றைக் குறிப்பிடவும்):*

❐ *இல்லை.*

❐ *ஆம், நேரடியாக எனக்கு அனுப்பப்படுகின்றன.*

❐ *ஆம், விநியோகிக்கப்பவரின் பெயர்* __________________.

*(அடுத்த பக்கம் பார்க்கவும்)*

*எந்த மொழியில் வெளியீடுகளைப் பெற நீங்கள் விரும்புகிறீர்கள்? (ஒன்றை மாத்திரம் குறிப்பிடவும்).*

❐ *ஆங்கிலம்* ❐ *தமிழ்* ❐ *ஹிந்தி* ❐ *தெலுங்கு*

*நீங்கள் பெற்றுக் கொள்ளும் வெளியீடுகளை எவ்விதம் உபயோகிக்கிறீர்கள்/உபயோகிப்பீர்கள்?*

________________________________________________

________________________________________________

*இப்பாடங்களை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாராவது உங்களுக்குத் தெரியுமானால், தயவு செய்து அவர்களுக்காக இன்னுமொரு படிவத்தைப் பூர்த்தி செய்து, கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்.*


Truth for Today
P.O. Box: 5311
Shivajinagar, Bangalore - 560 001